உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

வென்றிமாலைக்கவிராயர்

செய்தருளிய

# திருச்செந்தூர்ப் புராணம்.

இது

யாழ்ப்பாணத்து நீர்வேலி

ஸ்ரீமத். ச. சிவப்பிரகாச பண்டிதர்

அவர்கள்

இயற்றிய உரையுடன்

யாழ்ப்பாணம்

சைவபரிபாலன சபையாரால்

தமது

சைவப்பிரகாசயந்திரசாலையில்

அச்சிடப்பட்டது.

பிலவங்க௵ ஐப்பசி௴

1907.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
MADRAS

குகமயம்.

# திருச்செந்தூர்ப் புராணம்.

## காப்பு.

ஊற்றெடுத்துவண் டோலிடு மும்மதக்
காற்றெழு முக்கி னருவியஞ் சாரல்வா
யேற்று கைக்கு மிறைவற்கு முந்திய
மாற்றி லாக்களி யானையை வாழ்த்துவாம்.

இதன்பொருள். ஆற்றெழுமுக்கின் அருவி அஞ் சாரல் வாய் ஏற்று உகைக்கும் இறைவற்கு முந்திய - யாறுகளின்றெழுமுக்கங்களுக்குக் காரணமான அருவிகளையுடைய அழகிய மலைகளை(த்தமது திருவிளையாட்டுக்கு) இடங்களாகக் கொண்டு உலாவுங் குமாரசுவாமிக்கு மூத்தவராகிய,—வண்டு ஊற்றெடுத்து ஒலிடும் மும்மதத்து - வண்டுகள் ஊறு நீரையுட்கொண்டு ஒலித்தற்கேதுவாய மும்மதங்களையுடைய,—மாற்றிலாக களி யானையை வாழ்த்துவாம் - ஒப்பில்லாத களிப்புப்பொருந்திய யானைமுகக் கடவுளை (யாம்) துதிப்பாம். என்றவாறு.

சாரல் ஆகுபெயர். சாரல்போல என்பது பாடமாயின் மும்மத வாற்றெழுமுக்கருவியையுடைய மலைபோன்ற, இடபாரூடருக்கு முற்புதல்வரான ஆனைமுகக்கடவுளை என உரைக்க.

## கடவுள் வாழ்த்து.

### சிவபெருமான்.

இருப்பதப் பிரணவத் தியல்பென் றாலமே
சருப்பதச் செய்கைய தாக்கித் தங்கவான்
பருப்பதச் சிலைகொணற் பரமன் றாமரைத்
திருப்பதத் துணைமலர் சென்னி சேர்த்துவாம்.

இ-ள். இருப்பதப் பிரணவத்து இயல்பு என்று - இருக்குவேத முதன் மொழியாகிய பிரணவத்தின் சுவரூபத்தைப் பொருந்தி,—ஆலமே சருப் பதச் செய்கையதாக்கி-நஞ்சையே அவியுணவுச் செயலினதாகக்கொண்டு,- [உவந்து புசித்து என்றபடி] வான் தங்கப்பருப்பதஞ் சிலைகொள்-பெருமை யாகிய பொன்மலையை வில்லாகக்கொண்ட,—நற்பரமன் தாமரைமலர்த் துணைத்திருப்பதஞ் சென்னி சேர்த்துவாம் - சிவபெருமானுடைய தாமரை மலர்போன்ற இரண்டு ஸ்ரீபாதங்களையும் (யாம்) சிரமேற்கொண்டுவணங்கு வாம். எ-று.

இருக்பதம் என்னும் ஆரியமொழி இருப்பதம் எனத்தற்பவமாயிற்று. (௧)

### உமாதேவியார்.

வேறு.

ஊடலி னுடைந்த சங்க மொளிர்சடைப் பிறைவெண் கீற்றின்
மாடுறப் பொருத்தும் போழ்து மகிழ்நருட் குறித்து நோக்க
ஏடுறு தளவப் போதி னிளநகை நிலவு பூத்துப்
பீடுறு மதியிற் செய்த பெண்ணடி வணக்கஞ் செய்வாம்.

இ-ள். ஊடலின் உடைந்த சங்கம் ஒளிர்சடை வெண் பிறைக்கீற்றின் மாடு உறப் பொருத்தும் போழ்து - புலவியினாலே தகர்ந்த (தமது) சங்கு வளையிற்கண்டத்தை விளங்காநின்ற (நாயகரது) சடையிலுள்ள வெண்மையாகிய சந்திரகண்டத்தின் பக்கத்தில் இசையச் சேர்க்கும்பொழுது,—மகிழ்நர் உட்குறித்து நோக்க - (அந்) நாயகர் (அச்செய்கையைத்) திருவுளத்துணர்ந்து (நெற்றித்) திருக்கண்சாத்தியருள,—ஏடுறு தளவப் போதின் இளநகை நிலவு பூத்து - இதழ்பொருந்திய முல்லைமுகை போலும் புன்முறுவலினாலே சந்திரிகையை விளைவித்து,—பீடு உறு மதியின் செய்த பெண் அடி வணக்கஞ் செய்வாம் - (இவ்வாறு வட்டவடிவும் நிலவும் அமைதலாலே, அப்பாலசந்திரனும் வளையிற்கண்டமும் இயைந்தாய பிண்டத்தைப் பூரணத்தன்மையேயாகிய) பெருமைபொருந்திய சந்திரனாகச்செய்த உமையம்மையாருடைய திருவடிகளை வணங்குவாம். எ-று.

சில புத்தகங்களில் "இளநிலா முறுவல் பூத்து" என்னும் பாடமுங் காணப்படுகின்றது. "சிரித்து" என்னும் அதனையேயன்றி "நிலவை விளைவித்து" என்னுஞ் சிறந்த பொருள் அப்பாடத்துச் செவ்வே பெறப்படாமையானும், வலிந்து பெறப்படினும் இளமை நிலவுக்கடையாதல் பூரணசந்திரத்துவத்துக்கு முரணுதலின் அதனையும் முறுவலுக்கே அடையாக்கல் வேண்டு மாதலானும் இதுவே சிறப்புடைத்தென்க. (௨)

### விநாயகக்கடவுள்.

வேறு

எழுத்துஞ் சொல்லும் பொருளு மிணங்குற
வழுத்துஞ் சீர்ச்செயந் திப்பதி மான்மியம்
விழுத்த குந்தமி ழாற்சொல வேதமே
பழுத்த குஞ்சரன் பாதங்கள் போற்றுவாம்.

இ-ள். வழுத்துஞ் சீர் செயந்திப்பதி மான்மியம் - (ஆன்றோரால்) போற்றிக்கொள்ளப்படுஞ் சீர்த்தியினையுடைய (ஆரியத்துப்புராணமாகிய) ஜயந்திபுர மாகாத்மியத்தை,—விழுத்தகுந் தமிழால் எழுத்துஞ் சொல்லும் பொருளும் இணங்குறச்சொல - மாட்சிமைதக்க தமிழால் எழுத்துக்களுஞ் சொற்களும் பொருள்களும் (கற்றவர்களுக்கு) ஏற்புடையனவாமாறு (யாமின்று) பாட (அருள்பெறவேண்டி),—வேதம் பழுத்த குஞ்சரன் பாதங்கள் போற்றுவாம் - வேத (மென்னும் விருக்ஷ)த்திற் பழுத்த (ஒரு பழமான) யானைமுகக்கடவுளினுடைய திருவடிகளைத் துதிப்பாம். எ-று.

வேதசாரமாக விளங்கு [illegible] (௩)

### வைரவக்கடவுள்.

கிஞ்சுகந் தருவாய்க் கலைக்கிள்ளையா
னஞ்சுகமதி லொன்றற்றிடக் கிள்ளிய
மிஞ்சுகந் தொறு மிக்குறுங் கார்நிறக்
கஞ்சுகன் பொற் கழலிணை போற்றுவாம்.

இ-ள். கிஞ்சுகந் தரு வாய்க் கலைக்கிள்ளையான் அஞ்சுகம் அதில் ஒன்று அற்றிடக்கிள்ளி-(முன்னொருயுகத்திலே) முருக்கமலரை நிகர்த்த வாயினைத் தாங்கிய கலைமகளையுடையபிரமதேவனது ஐந்து தலைகளிலொன்றை இல்லையாமாறு கிள்ளி,—மிஞ்சு உகந்தொறும் மிக்குறுங் கார்நிறக்கஞ்சுகனை பொன் கழலிணை போற்றுவாம் - எஞ்சிய யுகாந்தோறும் (துட்டநிக்கிரகத்தின்) மேற்பட்டிருக்கின்ற வைரவக்கடவுளுடைய பொன்போலுந் திருவடிகளிரண்டையுந் துதிப்பாம். எ-று.

கார்நிறக்கஞ்சுகன் என்பது கருநிறம் பொருந்திய சட்டையையுடையர் என்னும் பொருட்டாய் வைரவக்கடவுளுக்குப் பெயராயிற்று. (௪)

### வீரபத்திரக்கடவுள்.

ஆளுடைத்தனி யாதியை நீத்தொரு
வேள்வி முற்ற விரும்பிய தக்கனார்
நீள்சிரத்தை நிலத்திடை வீட்டிய
வாள்படைத்த மதலையைப் போற்றுவாம்.

இ-ள். ஆள் உடைத் தனி ஆதியை நீத்து ஒருவேள்வி முற்றவிரும்பிய-(அன்போடு தம்மை அடையும் அடியவரை) ஆளுந்தலையுடைய ஒப்பில்லாத முதற்கடவுளை(அகங்கையினாலே)தள்ளி ஒருயாகத்தை(ச்செய்து) முடிக்கவிரும்பிய,—தக்கனார் நீள் சிரத்தை நிலத்திடை வீட்டிய - தக்கனுடைய நீண்ட தலையை(அறுத்து)நிலத்தில் விழுத்திய,—வாள்படைத்த மதலையைப் போற்றுவாம் - வாட்படையைத்தாங்கிய(வீரபத்திரக்கடவுளாகியசிவ) குமாரனைத் துதிப்பாம். எ-று. (௫)

### சுப்பிரமணியசுவாமி.

வேறு.

வண்டடை கிடந்தின் னிசைமுரன் றெழுதேன் வாய்மடுத்
துண்டுகா லுழக்க, விண்டுடைந் தலருங் கடம்பணி தடந்தோள்
வெற்பெலாம் பொற்புலாஞ் சுடர்வேற், கெண்டையங் தடங்கட்
குறக்கொடி களபக் கிளரொளி முலைவனப் பெழுதக், கண்டுகண்
டுள்ளங் களிப்புறுஞ் செந்தூர்க் கந்தனை வந்தனை புரிவாம்.

இ-ள். வண்டு அடைகிடந்து இன்னிசை முரன்று எழுதேன் வாய் மடுத்து உண்டு கால் உழக்க விண்டு உடைந்து அலருங் கடம்பு- வண்டுகள் அடைந்துகிடந்து மதுரகீதங்களைப் பாடி ஊறுகின்றதேனை வாய்களிற் பெய்து உட்கொண்டு கால்களால் உழக்குமாறு வாயுவினுடன் மொத்துண்டு அலர்ந்த கடப்பமலர்களை,—அணி தடந் தோள் வெற்பெலாம் - அணிந்த

பெருமையாகிய திருப்பாற் கடலைப்போல,—பொம்புலாஞ் சடாமௌலிக் கண்ணுடை அந் தடங் கடற்பரப்பு மொய்த்த நீர்ப்படிந்த சிறாமுனி முலை வளைப பெழுத—பொலிவு பொருந்திய செஞ்சடையையுடைய வேலைப்புகழ் கண்ணுடை மீனையும் ஒத்த அழகிய பெருமையான கண்களையுடைய வள்ளியம்மையார் கலவைச்சேற்றை யணிந்த மிக்க ஒளியினையுடைய தனங்களினுமேலே கோலங்களை எழுத,—தனிக்கண்டு உள்ளக்களிப்புற்ச பெருந்தாகக் கந்தனை வந்தனை புரிவாம்—பார்த்துப் பார்த்து மனமகிழ்ச்சியொழியாத திருச்செந் தூரிற் சுப்பிரமணியப்பெருமானை வழிபாடு செய்வாம். எ-று. (௬)

வேறு.

அராவடங்கவுந் தழைபூசெல மூலமே லாயுத்
தரப்படங்கலும் பொருவுசூர் மாமுதல் தடிந்த
நரமடங்கலுந் துதிப்பருங் குமரனுட் கமலக்
கரமடங்கலங் கலஞ்செய்வே லெனக்கவின் கருத்தது.

இ-ள். தழை அராவடங்கவுஞ் செல, மூலம் மேலாய, உத்தரப்படங்கலும் பொருவு சூர் முதல் மாத் தடிந்து—கொம்புகள் பாதாளங்கள் எங்கும் பரவ, அடி மேலாகி, கடைநாளின் ஊழித்தீயையும் நிகர்த்த சூரபன்மனாகிய மாமரத்தைச் சங்கரித்து,—நரமடங்கலுந் துதிப்ப—நரசிங்கமாகிய விட்டுணுவும் (ஆண்மையிற் சிறந்தவனென்று பெரும்பெயர்பெற்ற எனக்கு வெல்லவும் முடியாத இச்சூரசங்காரத்தைச் செய்து நம்மையெல்லாங் காத்தருளிய ஞானசத்தியே என்று) துதிக்க,—அருங்குமரன் நாட்கமலக் கரம் அடங்கு—அருமையான குமாரசுவாமியினது புதுமலர்போலுந் திருக்கையினகண் அடங்கியிருக்கின்ற,—அலங்கல் அஞ் செவ்வேல் என் கவிக் கருத்து—மாலையை அணிந்த அழகிய செம்மையான ஞானசத்தி என்னுடைய தோத்திரஞ்செய்யுநருக்குக் கருத்தாக. எ-று.

கரமடங்கலுங் கலஞ்செய்வேல் என்றும், காமடங்கலுங் கவின்செய் வேல் என்றுங் காணப்பட்ட பாடங்களினும் ஒரோவிடத்துக் காணப்பட்ட இப்பாடஞ் சிறப்புடைத்தாதலின் இங்ஙனங் கொள்ளப்பட்டது. (௭)

அரிகரபுத்திரப்பிள்ளையார்.

வேறு.

அரிய பூரணை புட்கலை யாமிரு
தெரிவை மார்முலைச் செங்களபத் தொளி
விரவு சுந்தர மேருவொப் பாம்புயக்
குரிசி றண்டை குரைகழல் போற்றுவாம்.

இ-ள். அரிய பூரணை புட்கலை ஆம் இரு தெரிவைமார்—அழகிய பூரணை புட்கலை என்னும் இரண்டு அம்மைமாருடைய,—முலைச் செங்களபத்து ஒளி விரவு சுந்தர மேரு ஒப்பாம் புயக் குரிசில்—தனங்களிற் செஞ்சாந்தின் ஒளி கலந்த அழகிய மேருமலைக்கு நிகரான புயங்களையுடைய சாஸ்தாவினது,—தண்டை குரை கழல் போற்றுவாம்—தண்டைகள் ஒலிக்கின்ற திருவடிகளைப் போற்றுவாம். எ-று. (௮)

## வீரவாகுதேவர்.

வே று.

அடுத்தமா விருபிள வாகச் சோதிவேல்
விடுத்தவா னவனடி விடாது போற்றியே
அடுத்தவா னவர்சிறை யகற்றச் செம்மணி
கொடுத்தவாள் வீரவா குவைவ ழுத்துவாம்.

இ-ள். அடுத்த மா இருபிளவாகச் சோதிவேல் விடுத்த வானவன் அடி விடாது போற்றியே - (சூரன்)கொண்ட மாமரவடிவம் இரண்டு கண்டமாக ஒளிபொருந்திய வேலாயுதத்தைச் செலுத்திய சுவாமியாருடைய பாதங்களை விடாது துதித்து,—அடுத்த வானவர் சிறை அகற்ற-(அவரைச்) சார்ந்த தேவர்களைச் (சூரனிடுவித்த)சிறையினின்று நீக்க,—செம்மணி கொடுத்த வாள் வீரவாகுவை வழுத்துவாம - மாணிக்கசத்தி யமைந்த வாட்படையினையுடைய வீரவாகுதேவரைத் துதிப்பாம். எ-று. (௯)

## திருஞானசம்பந்தசுவாமிகள்.

வே று.

அறுகா லுழக்கச் சிறுமுகைத்தே றுறு பாயுஞ் சோணாட்டி, லுறுகா ழியில்வந் தவதரித்தென் னுள்ளத் திருந்து சமணரெனுங், குறுகார் தமைக்கட் டழித்துமையாள் கோமான் சரணந் தனைப்போற் றுஞ், சிறுகான் முளையி னிருசரணச் செந்தா மரைவந் தனைபுரிவாம்.

இ-ள். அறுகால் உழக்கச் சிறுமுகைத் தேறுறு பாயுஞ் சோணாட்டில்-வண்டுகள் உழக்கச் சிறியமுகைகளினின்று தேனூறு பாய்தற்கிடமான சோழமண்டலத்தில்,—உறுகாழியில் வந்து அவதரித்து - பொருந்திய சீர்காழியின்கண் வந்து திருவவதாரஞ்செய்து,—என் உள்ளத்து இருந்து-(மூன்றும்வயதிலே சிவபெருமானோடு உமாதேவியார் வந்து வெளிப்பட்டுச் சிவஞானப்பால் கொடுத்து அருளப்பெற்றமையினாலே அப்பெருமையை இடையறாது தியானிக்கின்ற) தமியேனுடைய மனத்திலே குடிகொண்டு.-சமணரெனுங் குறுகார்தமைக் கட்டழித்து - சமணரென்னும் பகைவர்களை மதங்கெடுத்து,—உமையாள் கோமான் சரணந்தனைப் போற்றுஞ் சிறுகான் முளையின் இருசரணச் செந்தாமரை வந்தனை புரிவாம்-உமாபதியினுடைய திருவடிகளை(அருட்பாக்களினாலே)துதித்த திருஞானசம்பந்தப்பிள்ளையாருடைய உபய பாதாரவிந்தங்களையும் வழிபாடு செய்வாம். எ-று. (௧௦)

## திருநாவுக்கரசுசுவாமிகள்.

கலக மிடுபொய்ச் சமணர்குழாங் கட்டிக் கடலி னிடைப்புகுத்த, வுலகம் பரவ விடுத்தகல்மே லுயரும் புணையாக் கரையேறி, யிலகு விதமோர் பங்கமைத்த வெம்மான் கமலத் தாள்பழிச்சுஞ், சொலவின் புணையாப் பவக்கடலுங் கடந்தான் சரணந் துணைதுதிப்பாம்.

இ-ள். கலகமிடு பொய்ச் சமணர்குழாம் - கலகஞ்செய்த பொய்யறிவினையுடைய சமணர்கூட்டம்,—கடலினிடைப் புகுத்தக் கட்டிவிடுத்த கல்லே-சமுத்திரத்தினுள்ளே அமிழ்த்துமாறு(தம்மைச்சேர்த்துக்) கட்டிவிட்ட கல்லுருதானே,—உயரும் புணையா உலகம் பரவக் கரையேறி-(தம்மைக்கொண்டு) மிதக்குந் தெப்பமாக உலகம் புகழக் கரையின்கண்ணேறி,—இலவவிதழ் ஓர்பங்கு அமைத்த எம்மான் கமலத்தாள் பழிச்சுஞ்சொல அவ் - (அங்ஙனம் கரையேறுதற்பொருட்டு) அம்மையாரை இடப்பாகத்தில் அமைத்த எம்பெருமானுடைய கமலபாதங்களைத் துதித்த திருவருட்பாக்களாகிய அவைகடாமே,—இன் புணையாப் பவக்கடலுங் கடந்தான் சரணத் துணை துதிப்பாம் - இனிய தெப்பமாகப் பிறவிக்கடலையுங் கடந்த திருநாவுக்கரசுநாயனாருடைய பாதங்களிரண்டையுந் துதிப்பாம். எ-று. (கக)

### சுந்தரமூர்த்திசுவாமிகள்.

அரவக் கடலி னிடைப்பாம்பி னமளி படுத்த துழாய்முகிலும்
விரைகொப் பளிக்குஞ் செழுங்கமல வீட்டுக் கிறையு மினுங்காணு
விருபொற் சரணஞ் சிவப்பூர விரவிற் பரவைக் கிருந்தூது
பரவப் பணித்த கவிராசன பாத மெமது தலைக்கொள்வாம்.

இ-ள். அரவக் கடலினிடைப் பாம்பினமளி படுத்த துழாய் முகிலும்-ஒலியினையுடைய பாற்கடலிற் சருப்பசயனத்தில் உறங்கிய துளசியையணிந்த கொண்டல்வண்ணனும்,—விரை கொப்பளிக்குஞ் செழுங் கமல வீட்டுக்கு இறையும் - நறுமணங் காலுகின்ற மாட்சிமையான தாமரையாசனத்தின் தலைவனான பிரமதேவனும்,—இனுங் காணு இருபொற்சரணஞ் சிவப்பூர இரவிற் பரவைக்கு இருந் தூதுபரவப் பணித்த கவிராசன் பாதம எமது தலைக்கொள்வாம் - இன்னும் அறியாத இரண்டு திருவடிகளும் (தரையிற்படுதலாற்) செந்நிறம்பொருந்தும்வண்ணம் இராக்காலத்திலே பரவையம்மையாரிடத்துப் பெரிய தூதாய்ச் செல்லுமாறு (எம்பெருமானைக்)கற்பித்த கவிச்சிரேட்டராகிய சுந்தரமூர்த்திநாயனாருடைய பாதங்களை எமது சிரமேற் கொள்வாம் எ-று. (கஉ)

### மாணிக்கவாசகசுவாமிகள்.

வேறு.

கொள்ளைவண் டிருந்து விருந்துணச் செழுந்தேன் கொப்பளித்
தலர்ந்தபூங் கொன்றை, துள்ளுதெண் டிரைநீர் முடித்தசெஞ்
சடிலச் சோதிசெங் கரம்பிடித் தெழுதத், தெள்ளுசெந் தமிழிற்
கோவைநா னூறுஞ் செப்பிய நற்கவிராசப், பிள்ளைசெஞ் சரணக்
கிரணவா ரிசப் பிரசநாண் மலரிணை துதிப்பாம்.

இ-ள் கொள்ளை வண்டு விருந்து இருந்து உணச் செழுந்தேன் கொப்பளித்து அலர்ந்த பூங்கொன்றை துள்ளு தெண்டிரைநீர் முடித்த செஞ்சடிலச் சோதி - கூட்டங்களையுடைய வண்டுகள் விருந்துகளாய் இருந்து உட்கொள்ளச் செழுமையான தேனைக் கான்று அலர்ந்த பொலிவாகிய கொன்றைமலரையுந் துள்ளுகின்ற தெளிவாகிய திரைகளையுடைய கங்கையைப் [illegible] சிவபெருமான்,—செங்கம்

பிடித்து எழுத - திருக்கரங்களினாலே (திருமெழுத்தாணியைப்) பிடித்து எழுத,— தெள்ளு செந்தமிழிற் கோவை நானூறுஞ் செப்பிய நற் கவிராசப் பிள்ளை— தெளிவாகிய செந்தமிழிற் கோவைக்கவிகள் நானூற்றையும் (அவ்வப்பொழுதிற் பாடிச்) சொல்லிய நல்ல கவிராசராகிய திருவாதவூரடிகளுடைய,— செங்கிரண வாரிசப் பிரச நாண்மலர்ச் சரண இணை துதிப்பாம்-செஞ்சோதி பொருந்திய தாமரையினது தேனூர்ந்த புதுமலர்கள் போலுந் திருவடிகள் இரண்டையுந் துதிப்பாம். எ-று. (கரு)

**சரசுவதி.**

ஒருதனித் திகிரிக் கதிர்நிறங் கவின வொளிசெய்பொன் னுடை மருங் கிலங்கக், குருமணி மௌலி யிலகிவில் லிமைப்பக் குறு நகை முறுவன்முத் தரும்ப, மருமலர்க் கழுநீர் புத்தகம் வரத மணிவட மலர்க்கரம் வயங்கத், திருவரு ணிறைந்தென் னுளங் குடி புகுந்த செல்விபொற் சேவடி பணிவாம்.

**இ-ள்.** ஒரு தனித் திகிரிக் கதிர் நிறங் கவின,ஒளிசெய் பொன்னுடை மருங்கு இலங்க - ஒரு ஒப்பில்லாத சில்லுப்பொருந்தியதேரையுடைய சூரியனது நிறம்போலும்நிறம் விளங்க, ஒளியைச்செய்கின்ற பொன் வஸ்திரம் இடையிலே பிரகாசிக்க,—குரு மணி மௌலி இலகி வில் இமைப்ப - நிறம்பொருந்திய இரத்தினங்களாலாய முடி விளங்கி ஒளியைக் கால,—குறுநகை முறுவல் முத்து அரும்ப - புன்னகையையுடைய பற்கள் முத்துக்கள்போலத் தோன்ற,—மரு கழுநீர்மலர் புத்தகம் வரதம் மணிவடம் மலர்க்கரம் வயங்க - சுகந்தமான செங்கழுநீர்ப்பூவும் புத்தகமும் வரதமும் இரத்தினவடமும் மலர்கள்போன்றகைகளில் விளங்க,—திருவருள் நிறைந்து என்னுளங் குடிபுகுந்த செல்வி பொன் சேவடி பணிவாம - கருணை நிரம்பி என்மனத்தில் வாசஞ்செய்த நாமகளினுடைய பொன்போலுஞ் செம்மையாகியபாதங்களை வணங்குவாம். எ-று. (கசு)

**கடவுள் வாழ்த்து முற்றிற்று.**

ஆக திருவிருத்தம் கசு.

## பதிகம்.

நயிமிசா ரணியவனஞ் சூதமுனி சென்றதுவு நவையில் சூத
னியல்பினான் முனிவர்முகம் பார்த்துயர்வி யாசமுனி யினிமை
சார்ந்த, வுயர்வினா லருஞ்சுகற்குள் ளன்பொழுகக் கங்கைநதி
யோங்குமூலத், தயர்வுறா திருந்தருள்செய் சிந்துபுர வளமனைத்து
மடைவிற் சூழா.

இ-ள். நயிமிசாரணியவனஞ் சூதமுனி சென்றதுவும் - நைமிசாரணியம் என்னுந் தபோவனத்தின்கண்ணே சூதமுனிவன் சென்றமையையும்,- நவையில் சூதன் இயல்பினால் முனிவர் முகம் பார்த்து - குற்றமற்ற அச்சூதமுனிவன்(தன்னை அன்போடு உபசரித்து வழிபட்டு வேண்டிக்கொண்ட)இயல்பு நிறைந்த அம்முனிவர்களுடைய முகங்களைப் பார்த்து,— வியாசமுனி இனிமைசார்ந்த உயர்வினால் அருஞ் சுகற்கு உள்ளன்பொழுக ஓங்கு கங்கைநதி மூலத்து அயர்வுறாதிருந்து அருள்செய் சிந்துபுரவளமனைத்தும் அடைவிற் சூழா - (முற்காலத்து) வியாசமுனிவன்(தனக்கு) இனியவழிபாடுசெய்தலைப்பொருந்திய உயர்வுடைய அருமையான சுகமுனிவனுக்கு மனத்தில் அன்புபெருக உயர்ந்த கங்கையாற்றின் அடியிலே தளராமலிருந்து போதித்தருளிய செயந்திபுரத்தின் சிறப்புக்களையெல்லாங் இரமமாக ஆலோசித்து. எ-று.

ஆல் இரண்டனுள் முன்னையது வினைத்தொகை. பின்னையது சாரியை. ஆலுதல்-நிறைதல். இங்கே ஐயுருபு தொகநின்ற "சென்றதுவும்" என்பதும் பின் கரு-ஞ்செய்யுளீற்றில் அவ்வாறு நின்ற "விளம்புமாறும்" என்பதும் கசு-ஞ்செய்யுளில் "ஆராய்ந்துசொல" என்பதனை முடிக்குஞ் சொல்லாகக் கொள்ளுதலும், இங்கே சூதன் பார்த்து சூழா என்பனவும் உ-ஞ்செய்யுள் முதலிய கஉ-செய்யுட்களிலும் ஐயுருபு தொக உம்மை பெற்று "மொழிந்தவாறும்" என்பது முதல் "செய்திட்டமையும்" என்பது வரையாய் வருவன பலவும் ஷை "விளம்புமாறும்" என்பதனையே முடிக்குஞ் சொல்லாகக் கொள்ளுதலும் நுண்ணுணர்வாற் கண்டுகொள்க. (க)

முறையினாற் சுகமுனிக்கு வியாசமுனி யுபதேச மொழிந்த
வாறும், மறையுலாஞ் செயந்திபுர வைபவமுன் சொற்றதுவும்
வைவேற் கந்தன், பிறையுலாஞ் சடைக்கடவுள் கவுரியுடன்
றோய்ந்தபெரும் போகந் தன்னி, னிறைவினா லவதரித்துக் கட
வுளர்தம் முகநோக்கி நிகரி லாத.

இ-ள். வியாசமுனி சுகமுனிக்கு முறையினால் உபதேசம் மொழிந்தவாறும் - வியாசமுனிவன் சுகமுனிவனுக்கு(த் தான் பின் சொல்லுங் கதை முதலியனவற்றையெல்லாந் தொகுத்துணர்த்து)முறைமையினால் உபதேசங் கூறியவாற்றையும்,- மறையுலாஞ் செயந்திபுர வைபவம் முன் சொற்றதுவும் - சுருதிகளிற்பரந்த செயந்திபுரத்தின் மாகான்மியத்தை முன்பு கூறியதனையும்,—பிறை உலாஞ் சடைக்கடவுள் கவுரியுடன் தோய்ந்த பெரும்போகந்தன்னில் வைவேற்கந்தன் நிறைவினால் அவதரித்து - இளம்பிறை தவழ்ந்த சடையினையுடையசிவபெருமான் உமாதேவியாரோடு சேர்ந்து நிகழ்த்திய பேரின்பத்திருவிளையாடலின்கண்

கூரிய வேலையுடைய முருகபிரான் (சுத்தசாட்குண்ணிய) நிறைவினோடு வெளிப்பட்டு,—கடவுளர்தம் முகம் நோக்கி - (வள்ளியம்மைதிருமணமுஞ் சூரசங்காரமுந் தெய்வயானை திருமணமுஞ் செய்தபின்னர்த் தம்மை வழிபட்டு நின்ற) தேவர்களுடைய முகங்களைப்பார்த்து. எ-று.

நிகரிலாத என்பது வருஞ்செய்யுளிற் சேர்த்துரைக்கப்படும். (௨)

பாரதகண் டத்தினிடை மலைவளனு நதிச்சிறப்பும் பரம்புந்
தெண்ணீர், வாரிதியின் பெருவளனும் பெற்றநக ரொன்றுநம்
முன் வகுப்பீ ரென்ன, வாரருளி னிறைகேட்ட வந்நகர முன்ன
ரெமக் கலக்க ணீந்த, சூரனுயிர் குடித்தருளா லிருந்தசிந்து புர
மெனமுன் சொற்ற வாறும்.

இ-ள். நிகரிலாத பாரதகண்டத்தினிடை மலைவளனும் நதிச்சிறப்பும் பரம்புந் தெண்ணீர் வாரிதியின் பெருவளனும் பெற்ற நகர் ஒன்று நம்முன் வகுப்பீர் என்ன - ஒப்பில்லாத பாரதகண்டத்தின்கண்ணே மலைச்சிறப்பும் யாற்றுச்சிறப்பும் பரந்த தெளிந்தநீரையுடைய கடலின் பெருஞ்சிறப்பும் ஒருங்கமையப்பெற்ற நகரம் ஒன்றை (நாமவசித்தற்பொருட்டு) நங்கருத்துக்கியையச் சொல்லுங்கள் என்று கேட்ப,—ஆர் அருளின் இறை கேட்ட அந்நகரம் - (அதுகேட்ட தேவர்கள் அவரைநோக்கி) நிறைந்த கருணையினாலே எம்பெருமானே நீர்கேட்ட அவ்வியல்புடைய நகரமாவது,—முன்னர் எமக்கு அலக்கண் ஈந்த சூரன் உயிர்குடித்து அருளால் இருந்த சிந்துபுரம் என முன்சொற்றவாறும் - முன்னாளில எங்களுக்குத் துன்பந் தந்த சூரனைச் சங்கரித்து அருளோடு வீற்றிருந்த செயந்திபுரமே என்று (அவர்) கருத்தின்படி கூறியவாற்றினையும். எ-று.

முன்-முதனிலைத்தொழிற்பெயர். (௩)

தண்ணளியிற் குமரேசன் செயந்திபுரம் போந்துலகந் தழைக்க
மாயோன், கண்ணிடத்துத் தோன்றுமிரு கன்னியர்பா லினிதி
ருக்குங் காலை யானைப், பெண்ணமுதை *மானளிக்கும் பேதை
யிகழ்ந் திருந்ததனைப் பிரானுள் ளோர்ந்து, மண்ணளந்துண்
டுடன்காத்த மாதவன்றன் வலக்கணவ தரித்து வந்தாள்.

தன்னையெதி ருறவழைத்து நீயிடப்பா லிருக்குமருந் தாரமான,
மின்னையவ மதித்திருந்த செய்கையினாற் கொடுஞ்சாப மேற்
கொண்டோர்மான், மன்னுதரத் துற்பவித்து வேடரிடத் திருத்தி
யவண் மறையின் வாய்ப்ப, வுன்னையழல் சான்றாக யாம்வதுவை
யாற்றுவமென் றுரைத்த வாறும்.

இ-ள். குமரேசன் தண்ணளியிற். செயந்திபுரம் போந்து - குமாரசுவாமியார் கருணையினாலே செயந்திபுரத்தின்கட் சென்று,—உலகந் தழைக்க மாயோன் கண்ணிடத்துத் தோன்றும் இரு கன்னியர் பால் இனிதிருக்குங்காலை - உலகம் இல்லறத்தினின்றுய்யும்பொருட்டு விட்டுணுவினுடைய கண்களிலே தோன்றிய இரண்டு தேவிமாரது உரிமையோடு இனிதுவாழுங்காலத்திலே,—யானைப்பெண்ணமுதை மான் அளிக்கும்

பேதை இகழ்ந்து இருந்ததனைப் பிரான் உள் ஓர்ந்து - (குணத்தால்) அமிர்தம் போன்ற தெய்வயானையம்மையாரை (ப் பின்) மாறுற் பெறப்படும் பெண்ணாகிய வள்ளியம்மையார் அவமதித்திருந்தமையை முருகபிரான் திருவுளத்தில் அறிந்து,—மண்ணளந்து உண்டு உடன் கரந்த மாதவன்றன் வலக்கண் அவதரித்து வந்தாள் தன்னை எதிருற அழைத்து - பூமியையளந்தும் உண்டும் அவ்வப்பொழுதே (நீங்குவாராவண்ணம்) காத்துக்கொண்ட விட்டுணுவினது வலக்கண்ணிற் றோன்றிய வள்ளியம்மையாரைத் தம் மெதிரே வருவித்து,—நீ இடப்பாலிருக்கும் அருந் தாரமான மின்னை அவமதித்திருந்த செய்கையினால் - பெண்ணே நீ நமது இடப்பக்கத்தே இரமத்தோடிருக்கும் அரிய மனைவியாகிய பெண்ணை இகழ்ந்திருந்த செய்கையினாலே,—கொடுஞ் சாபம் மேற்கொண்டு ஓர்மான் மன் உதரத்து உற்பவித்து வேடரிடத்து இருக்தி - (நாமிடுகின்ற) கொடிய சாபத்தைப் பெற்றுக் கொண்டு ஒரு மானினது பெருமையாகிய வயிற்றின்கட் பிறந்து வேடரிடத்து வளர்ந்திருப்பாய்,—அவண் மறையின் வாய்ப்ப உன்னை அழல் சான்றாக யாம் வதுவை ஆற்றுவமென்று உரைத்தவாறும் - அங்கே வேத விதிப்படி சிறப்ப உன்னை அக்கினி சாட்சியாக யாம் விவாகஞ்செய்வோம் என்று கூறியவாற்றையும். எ-று. (௪-ரு)

உரைத்தகொடு மொழிதாங்கி மானிடத்திற் பிறந்தெயினரொருவா விந்தை, வரைப்புனத்தி லிருந்துதினை காத்ததுவு மம்மலையில் வயங்குங் கூர்வேற், கரத்திறைவன் கண்டதுவுமவேடன் முனம் போயுனது கன்னி தன்பால், விரைத்தொடையல் யான் சூட்ட வேண்டுமெனக் கருணையுடன் விளம்பு மாறும்.

இ-ள். உரைத்த கொடுமொழி தாங்கி மானிடத்திற் பிறந்து எயினர் ஒருவா விந்தைவரைப்புனத்தில் இருந்து தினை காத்ததுவும் - (அங்ஙனங்) கூறிய சாபத்தை ஏற்று (வள்ளியம்மையார்) மானவயிற்றிற பிறந்து வேடர் நீங்காத விந்தைமலையிற் புனத்தின்கண் இருந்து தினைகாத்தமையையும்,—அம்மலையில் வயங்குங் கூர் வேற் கரத்து இறைவன் கண்டதுவும்- அவ்விந்தைமலையிலே விளங்குகின்ற கூரிய வேலாயுதத்தைத்தரித்த திருக்கரத்தையுடைய முருகக்கடவுள்(சென்று அவ்வள்ளியம்மையாரைக்) கண்டமையையும்,—வேடன்முனம் போய் யான் உனது கன்னிதன்பால் விரைத்தொடையல் சூட்ட வேண்டுமெனக் கருணையுடன் விளம்புமாறும்- (அங்ஙனங் கண்டபின அவரைவளர்த்த) வேடராசன் முனனே போய் யாம் உன்மகளிடத்தே நறுமணம் பொருந்திய மணமாலையைச் சூட்ட வேண்டும் என்று அருளோடு கூறியவாற்றையும். எ-று. (௪௬)

கானவருக் கரசனவ னுடன்படா திருந்ததுவுங் கன்னி முன்போய், வானளவுந் தருவாகி நின்றதுவுங் கானவர்கோன் மலைப்பாலன்பிற், போனதுவு மித்தருநம் புனத்தினிடை வரலாறு புதுமைத் தாகு, மானதருக் குறைமினெனச் சொற்றதுவுஞ் சொற்றது கேட்டையனுங்கே.

இ-ள். கானவருக்கரசன் அவன் உடன்படாதிருந்ததுவும் - வேடர்க்கரசனாகிய அவன் (அதற்குச்) சம்மதியாதிருந்தமையையும்,—கன்னி முன் போய் வான் அளவுந் தருவாகி நின்றதுவும் - (அதுகண்டகடவுள்) வள்ளி

யம்மையாரின் எதிரே சென்று ஆகாயத்தை அளவுகின்ற மரவடிவுமாய் நின்றமையையும்,—கானவர்கோன் மலைப்பால் அன்பிற் போனதுவும் - (பின்பு) வேடராசன் அம்மலையின்கண் (மகளைக்காணும்) அன்பினாற் சென்றமையையும்,—இத்தரு நம்புனத்தினிடை வரலாறு புதுமைத்தாகும் ஆன தருக்குறைமின் எனச் சொற்றதுவும் - (அங்ஙனம் மரத்தைக்கண்ட அரசன்) "இம்மரம் நமது புனத்தின்கண் வந்தவகை அதிசயத்ததாகும் இங்ஙனமாய மரத்தைத் தறிமின்" என்று (தன்கீழ்வேடருக்குக்) கூறினமையையும்,—சொற்றது கேட்டு ஐயன் ஆங்கே - (அவன் அவ்வாறு) கூறியதனைக் கேட்டுக் கடவுள் அவ்விடத்திலே. எ-று. (எ)

தாருவுருக் கரந்து துணைக் குஞ்சரத்தி னிருசரணந் தாழ நோக்கி, வாரணத்தி னுருவாகி மாதினிடஞ் சென்றதுவு மாது சேர்ந்து, வேரிமலர்க் கடம்பணியு மார்பிறுகப் புல்லியதும் விருப்பாய் வேடன், சீரருளிற் கன்னிகையை யுனக்களிப்ப னென்றுரைத்துச் சென்ற வாறும்.

இ-ள். தாருவுருக் கரந்து துணைக் குஞ்சரத்தின் இருசரணந் தாழ - மரவடிவம் மறைந்து (அகன்று பின்னொருநாளிலே தம்மூத்த) சகோதரராகிய யானைமுகக்கடவுளினுடைய உபயபாதங்களையும் பணிய,—நோக்கி வாரணத்தினுருவாகி மாதினிடஞ் சென்றதுவும்-(அக்கடவுள் இக்கடவுளினது குறிப்பை) உணர்ந்து யானைவடிவமாய் வள்ளியம்மையாரிடஞ் சென்றமையையும்,—மாது சேர்ந்து வேரிக் கடம்புமலர் அணியும் மார்பு இறுகப் புல்லியதும் - (யானையைக் கண்டு அஞ்சிய) அம்மையார் மனந்தளர்ந்து நறுமணமுடைய கடப்பம்பூமாலையை அணிந்த (கடவுளினது) திருமார்பை இறுகத் தழுவினமையையும்,—வேடன் சீரருளின் விருப்பாய்க் கன்னிகையை உனக்கு அளிப்பன் என்றுரைத்துச் சென்றவாறும் - (அங்ஙனம் நிகழ்ந்ததையுணர்ந்து வந்த) வேடன் திருவருளினாலே (கடவுளையுணர்ந்து வணங்கி) விருப்பமுடையனாய் "மகளை உமக்குத் தருவேன்" என்றுகூறி (அவர்களைத் தன்வீட்டுக்கு அழைத்துக்கொண்டு) சென்றபடியினையும். எ-று. (அ)

குறவரிறை யவன்மனைபோய்க் குமரேசன் சுரர்முனிவர் குழுமிப் போற்றப், பிறைநுதலை மறைமுறையிற் பேரருளி னொடு வேட்டுப் பெட்பி னாலே, நறவமலர்த் தேரேறி யுயர்செயந்தி நகரடைந்து நவையி லாத, பொறைபடைத்த யானைமக ளெதிர் போந்து பொருந்தவவ ணிருந்தவாறும்.

இ-ள். குமரேசன் குறவரிறையவன் மனை போய் - குமாரசுவாமியார் வேடராசனது வீட்டிற் சென்று,—சுரர் முனிவர் குழுமிப் போற்ற - தேவரும் முனிவருங் கூடித் துதிக்க,—பிறைநுதலை மறைமுறையிற் பேரருளினொடு வேட்டு - வள்ளியம்மையாரை வேதவிதியாற் பெருங்கருணையினோடு வரைந்து,—பெட்பினாலே நறவ மலர்த் தேரேறி உயர் செயந்திநகர் அடைந்து - அன்பினோடு தேன்பொருந்திய புஷ்பங்களாலாய விமானத்தில் ஏறி உயர்ந்த செயந்திநகரத்தைச் சேர்ந்து,—நவையிலாத பொறை படைத்த யானைமகள் எதிர்போந்து பொருந்த அவண் இருந்தவாறும் - குற்றமற்ற பொறுமையைப் பெற்ற தெய்வயானையார் எதிர்கொண்டு வந்து கூட அங்ஙனம் இருந்தபடியினையும். எ-று. (௯)

பொருந்தியவர்க் குமரேச னிருந்துழிநான் முகம்படைத்த புத்தேள் போற்றி, வரந்தனைப்பெற் றிட்டமையுந் திரிசுதந்தி ரத்தரெனு மறைவல் லோரா, மருந்தவத்தர் வரலாறும் பன்னிருமா தப்பூசை விதிவ ழாது, திருந்துறச்செய் பயனினொடு குமரவிபூ திச்செயலைத் தெரித்த வாறும்.

இ-ள். குமரேசன் அவர்ப் பொருந்தி இருந்துழி - குமாரபெருமான் (வள்ளியம்மையுந் தெய்வயானையுமாகிய) அவர்களோடு புணர்ந்து அமர்ந்த பொழுது,—நான்முகம் படைத்த புத்தேள் போற்றி வரந்தனைப் பெற்றிட்டமையும் - நான்குமுகங்களைக் கொண்ட பிரமன் (அவரை) வழிபட்டு வரத்தைப் பெற்றுக்கொண்ட பெற்றியையும்,—திரிசுதந்திரத்தர் எனும் மறைவல்லோராம் அருந்தவத்தர் வரலாறும் - திரிசுவதந்திரர் என்று சொல்லப்படும் வேதங்களின்வல்லவராகிய அரியதவத்தர்களது வரலாற்றினையும்,—பன்னிருமாதப் பூசை விதிவழாது திருந்துறச்செய் பயனினொடு குமரவிபூதிச்செயலைத் தெரித்தவாறும் - (குமாரசுவாமியாருக்குப்) பன்னிரண்டுமாதங்களினும் (சுட்டப்படுங் காலங்களில் விசேஷ)பூசையை விதிதவறுவண்ணந் திருத்தமாகச் செய்தலால் வரும்பயனையுங் குமார விபூதியின் வரலாற்றையும் உணர்த்தியபடியினையும். எ-று. விபூதி - திவ்விய ஐசுவரியம். (கo)

வயம்புனையும் வேள்வீர வாகுவுக்குத் திருக்கோல வாய்ப்புக் காட்டி, நயம்பெறவாங் குதித்ததுவு மச்செயலை நாரதன்போய் நறைத்து ழாய்சூழ், புயஞ்சிறந்தாற் குரைத்ததுவு முரைத்தமுனி புலந்தேறப் புயல்போன் மேனி, சுயம்பிரகா சக்கடவுள் குமரேசன் சீரனைத்துஞ் சொற்ற வாறும்.

இ-ள். ஆங்கு வயம் புனையும் வேள் வீரவாகுவுக்குத் திருக்கோல வாய்ப்பு நயம்பெறக் காட்டி உதித்ததுவும் - அச்செயந்திபுரத்திலே வெற்றி சிறந்த சுப்பிரமணியபெருமான் வீரவாகுவுக்கு விசுவரூபச் சிறப்பை நன்மைபொருந்தக் காட்டி வெளிப்பட்டமையையும்,—அச்செயலை நாரதன் போய் நறைத்துழாய் சூழ் புயஞ்சிறந்தாற்கு உரைத்ததுவும் - அச்செய்கையை நாரதமுனிவன் (கண்டு வைகுண்டத்துச்) சென்று நறுமணமுடைய துளசிமாலையைஅணிந்த புருடோத்தம(னாகிய நாராயண)னுக்குச் சொன்ன தன்மையையும்,—உரைத்தமுனி புலந்தேறப் புயல் போன் மேனி - (அங்ஙனம் பேரதிசயத்தோடு) சொன்ன முனிவன் (இனிதுணர்ந்து) மனந்தெளியும்வண்ணம் முகில்போலும் மேனியையுடைய (அந்நாராயண)ன்,—சுயம்பிரகாசக்கடவுள் குமரேசன் சீரனைத்துஞ் சொற்றவாறும் - (பிறருதவிவேண்டாது) தாமே பிரகாசிக்குமியல்புள்ள கடவுளாகிய குமாரசுவாமியினுடைய பெருந்தகைமைகளையெல்லாங் கூறிய படியினையும். எ-று. (கக)

இந்திரனோ டன்னவனைத் தாங்கயிரா வதயானை யெய்து சாப, மந்தமுறச் செய்தமையே யாதிபல சரிதங்க ளறைந்த வாறுஞ், சிந்துபுரச் சிறப்பதனை விதிமுறையா ராய்ந்தயிற்கைச் செவ்வேளன்பாய், வந்தநா னுளந்தேறக் கருணையுட னுங்கவற்கு வகுத்த வாறும்,

இ-ள். இந்திரனேடு அன்னவனைத்தாங்கு அயிராவதயானை எய்து சாபம் - இந்திரனும் அவனைத் தாங்கிய ஐராவதயானையும் (துருவாசமுனி வனற்) பெற்ற சாபத்தை,—அந்தமுறைச்செய்தமையே ஆதி பல சரிதங்கள் அறைந்தவாறும் - அழியச்செய்தமை முதலிய பல கதைகளைக் கூறியவாற்றினையும்,—அயிற்கைச் செவ்வேள் - வேலாயுதத்தைக் கையிற் கொண்ட முருகபிரான்,—அன்பாய் வந்த நமன் சிந்துபுரச் சிறப்பதனை விதிமுறை ஆராய்ந்து உளந்தேற - (தம்பாற்) பத்தியோடு வந்த இயமன் செயந்திபுரத்தின் விசேஷத்தை விதிப்படி ஆராய்ந்து மனந்தெளியுமாறு,—கருணையுடன் ஆக்கவற்கு வகுத்தவாறும் - பேரருளோடு அவனுக்குத் திருவாய் மலர்ந்தருளிய திறத்தினையும். எ-று. (௧௨)

கடவுளர்கள் யாவருக்கு மெண்ணிறந்த முனிவரர்க்குங் கமலப் புத்தேள், ளுடனிருந்து செயந்திபுரச் செய்கைதனை யுரைத்ததுவு முடற்று மாயைத், தொடரகற்றுஞ் சுகமுனிவன் சிந்துபுரந் தனிற்போந்து சுடர்வேற் செங்கை, விடலைதுணைத் தாள்போற்றி யருச்சனைசெய் திட்டமையும் விளம்பு மாறும்.

இ-ள். கமலப் புத்தேள் கடவுளர்கள் யாவருக்கும் எண்ணிறந்த முனிவரர்க்கும் - தாமரைமலரில் இருக்கும் பிரமதேவன் (இந்திராதி) தேவர் யாவருக்கும் அளவிறந்த முனிச்சிரேட்டர்கட்கும்,—செயந்திபுரச் செய்கைதனை உரைத்ததுவும் - செயந்திபுரத்தின் (மான்மியச்) செயல்களைக் கூறினமையையும்,—உடனிருந்து உடற்றும் மாயைத்தொடர் அகற்றுஞ் சுகமுனிவன் - கூடியிருந்து கேடுசெய்கின்ற மாயாமலங்களைக் களையவேண்டிய சுகமுனிவன்,—சிந்துபுரந்தனிற்போந்து - (மேற்காட்டியபடி வியாதமுனி உபதேசித்தவற்றையெல்லாங்கேட்ட அக்கணத்திற்றனே பெருங்காதலோடு புறப்பட்டுச்) செயந்திபுரத்திற்சென்று,—சுடர்வேற் செங்கை விடலை துணைத்தாள் போற்றி அருச்சனை செய்திட்டமையும் - ஒளியார்ந்த வேலைச்சேர்ந்த செம்மையாகிய திருக்கரத்தையுடைய கடவுளினது உபயபாதங்களையுந் துதித்துப் பூசைசெய்தமையையும்,—விளம்புமாறும் - (நைமிசாரணியவாசிகளாய முனிவர்களுக்குச்) சொல்லிமுடித்தமையையும். எ-று. (௧௩)

விரிதருசீர்ப் புகழ்ச்செவ்வற் கிருஷ்ணசாத் திரியெனுநால் வேதன் வேதங், கருதரிய வடகடலை யாராய்ந்து சொலவதனைக் கருதிச் செவ்வேள், சரிதையென வுணர்ந்துணராப் புல்லறிவி ஞனினிய தமிழே போலத், தெரிதரத்தென் செயந்திபுர மான்மியமா மெனவுலகிற் செப்பி னேனால்.

இ-ள். விரிதரு சீர்ப் புகழ்ச் செவ்வற் கிருஷ்ணசாத்திரி எனும் நால்வேதன் - பரந்த வளங்களாற்பொருந்திய புகழையுடைய திருச்செவ்வலூரில் உள்ள கிருஷ்ணசாஸ்திரி என்னும் பெயரிய சதுர்வேதபாரக(ரா)கிய பூசுரபண்டித)ன்,—வேதங் கருது அரிய வடகடலை ஆராய்ந்துசொல - வேதப்பொருளை (உபவிருங்கணமாய்நின்று) கருதுவிக்கின்ற அரிய கடல் போலுஞ் சம்ஸ்கிருத செயந்திமான்மியத்தை ஆராய்ந்து (இனிதுவிளங்கத் தமிழின் மொழிபெயர்த்துச்)சொல்ல,—அதனைக் கருதி - அ(ங்ஙனங் கூறிய)தனை உளத்தில் அமைத்து,—உணராப் புல்லறிவின் நான் - (பிர

தவ ஒழுக்கத்தின்பொருட்டுச் சிறந்ததுங் குற்றமற்றதுமாகிய நைமிசாரணியத்தின்கட் (காலக்கிரமத்திற்) போ(ய்க்கூடி)னார்கள். எ-று. (௩)

அரிய மாதவத்து முனிவரர் வரலு மவர்தமைக் காண்டலு மன்பு, பெருகி மாதவத்துச் சத்திர யாகம் பேணிய சவுனக னென்பான், வரிசையான் முகம னெடுத்தெடுத் துரைத்து வாலிய தருப்பையா சனத்தி, லிருமென விருத்தி யருக்கிய முதல வினிதளித் தமருமேல் வையினில்.

இ-ள். சத்திர யாகம் பேணிய மாதவத்துச் சவுனகன் என்பான் - (அந் நைமிசவனத்திலே) சத்திரம் என்னும் யாகத்தை இனிதுசெய்து கொண்டிருந்த பெரியதவத்தினையுடைய சவுனகன் என்னும் முனிவன்,—அரிய மாதவத்து முனிவரர் வரலும் - (மேலேகாட்டிய கோதமன் முதலிய) அரிய பெரிய தவங்களையுடைய முனிச்சிரேட்டர்கள் (காலந்தோறும்) வர,—அவர்தமைக் காண்டலும் - அவர்களைக் கண்டகண்டபொழுதே,—அன்புபெருகி வரிசையான் முகமன் எடுத்தெடுத் துரைத்து - பரிவுகூர்ந்து கிரமப்படி உபசாரவார்த்தைகளை எடுத்தெடுத்துச்சொல்லி,—வாலிய தருப்பையாசனத்தில் இரும் என இருத்தி - சுத்தமாகிய தருப்பைகளால் இயன்ற ஆசனங்களில் இரும் என்று சொல்லி இருத்தி,—அருக்கியம் முதல இனிதளித்து அமரும் எல்லையினில் - அருக்கியம் முதலியவற்றை இனிதுகொடுத்து (அவரோடு) இருக்குங் காலத்தில். எ-று. (௪)

கண்டிகை நீறு மெய்யிடைக் கவினக் கட்டுசெஞ் சடையொளி வாய்ப்பப், பண்டருஞ் சுருதிக் கடலெலாங் கடந்த பராசரன் மதலைதாட் கமலத், தொண்டரிற் றலைமைச் சூதனுங் கெய்தித் தோமறு புராணவா லயமாய், விண்டுவின் வடிவாய் வந்தவற் பழிச்சி மெய்ம்மயிர் புளகுற நின்றான்.

இ-ள். பண் தருஞ் சுருதிக் கடலெலாங் கடந்த பராசரன்மதலை - சுரத்தோடு உபதேசிக்கப்படுகின்ற வேதங்களாகிய கடல்களையெல்லாங் கடந்த பராசர குமார(னாகிய வியாச முனிவ)னுடைய,—தாட்கமலத் தொண்டரில் தலைமைச் சூதன் - பாதாரவிந்தங்களின் அடியவர்க(ளாகிய மாணாக்கர்க)ளுள்ளே தலைமையையுடைய சூத முனிவன்,—கண்டிகை நீறு மெய்யிடைக் கவின - உருத்திராக்ஷமும் விபூதியும் உடம்பில்(அணியப்பட்டுப்)பிரகாசிக்க,—கட்டு செஞ்சடை ஒளி வாய்ப்ப - கட்டப்பட்ட செம்மையாகிய சடை ஒளியினோடு சிறப்ப,—ஆங்கு எய்தி - அவ்விடத்தில் வந்து,—தோமறு புராண ஆலயமாய் விண்டுவின் வடிவாய் வந்தவன் பழிச்சி - குற்றமற்ற புராணங்களின் கோயிலாய் விட்டுணுவின் அவதாரமாய் உள்ள(தன்குருவாகிய வியாசமுனி)வனைத் துதித்து,—மெய் மயிர் புளகுற நின்றான்-உடம்பின் உரோமங்கள் சிலிர்க்க நின்றான். எ-று. (௫)

வேறு.

நின்ற சூதமா முனிவனைக் காண்டலு நெஞ்சி
லொன்று மன்பினா லருக்கிய முதலன வுதவித்
துன்று காதலின் முனிவரர் யாவருந் தொடர்பா
லின்று நீவரப் பெற்றன மினிதென விசைத்தார்.

இ-ள். நின்ற சூதமாமுனிவனை முனிவரர் யாவருங் கண்டதும் - (அங்ஙனம்)நின்ற சூதமஹா முனிவனை (அங்கிருந்த)முனிச்சிரேட்டர்கள் அனைவருங் கண்டு,—நெஞ்சில் ஒன்றும் அன்பினால் அருக்கியம் முதலன உதவி - (தங்கள்)மனங்களிற் பொருந்திய அன்போடு அருக்கியம் முதலிய வற்றை வழங்கி,—துன்று காதலின் தொடர்பால் - மேன்மேலெழுகின்ற பத்தியினது தொடர்பினால் (ஏவப்பட்டு அவனைநோக்கி),—இன்று நீ வர இனிது பெற்றனம் என இசைத்தார்-(சுவாமீ)இன்றைக்கு நீர்(இங்ஙனம்) வருதலால் நற்(றவப்)பயனைப் பெற்றேம் என்று கூறினார்கள். எ-று. (சு)

உரைத்த பின்னரு மூவறு புராணத்தி னூடு
பரித்த மான்மியத் தலங்களு மவணுறு பலனும்
விரித்த தீர்த்தத்தி னுண்மையு மேன்மையும் விளம்பத்
தரித்து ளோமின்னும் வேண்டுவ துளதுசாற் றுதுமால்.

இ-ள். உரைத்தபின்னரும் - (அவ்வாறு)கூறிய பின்னரும்(அவர்கள் வியாசமுனிவனைநோக்கி),—மான்மியம் பரித்த தலங்களும் அவண் உறு பலனும் - (இவ்வுலகத்திலுள்ள)மகிமைபடைத்த(புண்ணியத்)தலங்களையும், அவற்றில்(அன்பர்கள்)பெறும் பயன்களையும்,—விரித்த தீர்த்தத்தின் உண்மையும் மேன்மையும் - (தங்கண்மூழ்கினோர்க்கு உறுதியைப்)பெருகுவித்த புண்ணியதீர்த்தங்களின் மெய்ம்மைகளையும் (அவற்றின்) மேம்பாடுகளையும்,—மூவறு புராணத்தினூடு விளம்பத் தரித்துளோம் - (முன்னரே நீர்) பதினெண் புராணங்களினுங் கூற(க்கேட்டு உளத்தில்)அமைத்துக்கொண்டோம்; இன்னும் வேண்டுவது உளது சாற்றுதும் - இன்னும்(யாம் அறிய) வேண்டுவது உண்டு(அதனைச்)சொல்லுவேம். எ-று.

ஆல்-அசை. மேலும் ஆல், அரோ, ஏ முதலிய அசைகள் எடுத்துக் காட்டப்படா. அங்கங்கே கண்டுகொள்க. இங்கே "உரைத்தபின்னரும்" என்பதின் பின்னுள்ளதனோடு அடுத்தபாட்டு முழுதும் முனிவர்கூற்று. "உரைத்தபின்னரும்" என்பது பின்வரும் கூ-ஞ செய்யுண் முதலில் "என்ன" என்பதனோடு இயையும். (எ)

சொற்ற காதையிற் றாரக னோடெழுஞ் சூரைச்
செற்ற தன்மையுஞ் செயந்திநன் னகரிடைச் சேயோ
னுற்ற செய்கையுங் கந்தமா தனப்பெய ருடைய
பொற்றை யவ்விடைப் போந்ததுந் தொகைப்படப் புகன்றாய்.

இ-ள். சொற்ற காதையில் - (நீர் முன்பு நமக்குச்)சொல்லிய புராணத்தில்,—சேயோன் தாரகனோடு எழுஞ் சூரைச் செற்ற தன்மையும் - முருகபிரான் தாரகனையுங் கிளர்ந்த சூரனையுங் கொன்ற வரலாற்றினையும்,—செயந்தி நன்னகரிடை உற்ற செய்கையும் - (அக்கடவுள்) செயந்தியாகிய நல்ல நகரத்தின்கண் வீற்றிருந்த வரலாற்றினையும்,—அவ்விடைக் கந்தமாதனப் பெயருடைய பொற்றை போந்ததும் - ஆண்டுள்ள கந்தமாதனம் என்னும் பெயருடைய மலையினது வரலாற்றினையும்,—தொகைப் படப் புகன்றாய் - சுருக்கமாகக்கூறினீர். (அவ்வளவின் உள்ளமமையாமையால் விரித்துக்கூறக் கேட்டலே எமக்கு வேண்டுவதாகும்.) எ-று. (அ)

என்ன மும்மலக் குறும்பெறி சூதனங் கெழுந்து
பன்னி ரண்டுகைக் குருபரன் றுணைப்பதம் பழிச்சித்
தன்னி ரண்டுகண் ணூடுமா னந்தநீர் ததும்பச்
சென்னி மேற்கரங் குவித்தன னன்றெனத் தெளிந்தான்.

இ-ள். என்ன - என்று (இவ்வாறு அம்முனிவர்கள்) சொல்ல,—மும்மலக் குறும்பு எறி சூதன் ஆங்கு எழுந்து - மும்மலங்களின் தீமையை அகற்றுஞ் சூதமுனிவன் அங்ஙனம் எழுந்து(நின்று),—சென்னிமேற் கரம் குவித்தனன் - சிரசின்மேலே கைகளைக் குவித்துக்கொண்டு,—தன் இரண்டு கண்ணூடும் ஆனந்தநீர் ததும்ப - தன்னுடைய இரண்டு கண்களினும் ஆனந்த பாஷ்பம் நிறைய,—பன்னிரண்டு கைக் குருபரன் துணைப் பதம் பழிச்சி - பன்னிரண்டு திருக்கரங்களையுடைய பரமாசாரியரின் உபயபாதங்களையுந் துதித்து,—நன்று எனத் தெளிந்தான் - நல்லது என்று சொல்லி (அம்முனிவர் வேண்டியதை உபதேசிக்குமாறு) துணிந்தான். எ-று. (கூ)

பொலன்மலைத் தலைநீ டருவிநீர் படிந்து புழைக்கையான் பசித் தழு மென்றே, யுலகளித் தவள்போங் காலையி லிறைவ னுவந்து முற் புணர்ந்துறு நீற்று, நிலவுறு கபோல வாடியிற் றிகழு நிழ லினைக் கண்டுளஞ் சீறி, முலைசுவைத் துயிர்ப்பு வீங்குமும் மதத்து மூரிமால் யானைதா டுதித்தே.

இ-ள். உலகு அளித்தவள் பொலன்மலைத்தலை நீடு அருவிநீர் படிந்து புழைக்கையான் பசித்து அழும் என்றே போங்காலையில் - உலகங்களைப் படைத்தவ(ராகிய உமையம்மையா)ர் இமயமலையின்கண் உயர்ந்த அருவியாலாகிய கங்கையிலே ஸ்நானஞ்செய்து (தாழ்க்கின்) தும்பிக்கைப்பிள்ளையார் பசித்து அழுவார் என்று (விரைந்து) படர்ந்(து திருக்கோயிலைச் சேர்ந்)தபொழுது,—முலைசுவைத்து - (ஆதரத்தோடும் அவருடைய) திருமுலைப்பாலைப் பருகாநின்று,—முன் இறைவன் உவந்து புணர்ந்து உறு நீற்று நிலவு அறு கபோல ஆடியில் திகழும் நிழலினைக் கண்டு,—முன்னரே சிவபெருமான் மகிழ்ந்து புணர்தலால் (அப்பெருமானது திருமேனியினின்று) உற்ற திருவெண்ணீற்றின் ஒளி (ஸ்நானஞ்செய்தவழி) அற்றதாகப்பெற்ற (அவ்வம்மையாரது) கதுப்பாகிய கண்ணாடியினுள்ளே தோன்றுகின்ற(தமது)சாயையைக்கண்டு,—உளஞ் சீறி உயிர்ப்பு வீங்கும்-(அம்மையார் மற்றுமொரு பிள்ளையாரைப் பற்றினரோ என்னுங் கருத்தால்) உள்ளே சினந்து பெருமூச்செறிந்த,—மும்மதத்து மூரி மால் யானை தாள் துதித்து - மும்மதங்களையுடைய வலிமைபொருந்திய பெருமையாகிய யானைமுகக்கடவுளின் திருவடிகளைத் துதித்து. எ-று. (௰)

வேறு.

தோகைநிழற் குடைக் கவிப்பும் பசுஞ்சூட்டின் மணிக்கொடி யுந் துண்டத் தேந்து, நாகமணிச சுடர்விளக்கு முடன்விளக்கு மரகதப்பொன் னுகமானுங், கேகயத்திற் கதிர்விரிக்கு மிளம் பரிதி போற்குலவுங் கிரணவேல்வி, சாகனகத நியற்குரைக்கு மொருகுமர னிருசரணந் தலைக்கொண் டேத்தி.

இ-ள். தோகை விழற் குடைக் கவிப்பும்-பீலியாகிய விழலைச்செய்யுங் குடையினது கவிப்பையும்,—பசுஞ்சுட்டின் மணிக்கொடியும்-பசியசூடாகிய இரத்தினக்கொடியையும்,—துண்டத்து ஏந்தும் நாகமணிச் சுடர் விளக்கும்-(தன்)முகத்திற் கொண்ட நாகரத்தினமாகிய ஒளிபொருந்திய தீபத்தையும்,—உடன்விளக்கும் மரகதப் பொன் நாகம் மானுங் கேகயத்தில்-(தன்மாட்டு) ஒருங்குகாட்டுகின்ற (ஒரு) மரகதமணியாளியன்ற அழகான மலையேபோன்ற மயிலின்மேலே,—கதிர் விரிக்கும் இளம் பரிதி போற் குலவுங் கிரண வேல் விசாகன்-ஒளியை வீசுகின்ற இளையசூரியன் போல விளங்காநின்ற காந்திபொருந்திய வேலாயுதத்தைத் தரித்த விசாகர் என்னுந் திருநாமமுமுடையராய,—அகத்தியற்கு உரைக்கும் ஒரு குமரன் இரு சரணந் தலைக்கொண்டு ஏத்தி-அகத்தியமுனிவனுக்கு (உண்மைநூற் பொருளை) உணர்த்தியருளிய ஒப்பில்லாத குமாரசுவாமியாருடைய இரண்டு திருவடிகளையும் உச்சிமேற்கொண்டு துதித்து. எ-று. (கக)

சூதமா முனிவ னைமிசா ரணியத் தொன்முனி வரர்முக நோக்கி, யாதரம் பெருக விருகையுங் குவித்துள் ளன்பொடு செயந்திநன் னகர, மேதகுங் காதை சுகமுனி வினவ வியாசன்முன் புகன்றது நுங்கட், கோதுவன் கவற்சி வேறிலா துணரு மென்றுளம் புலப் பட வுரைப்பான்.

இ-ள். சூதமாமுனிவன் நைமிசாரணியத் தொல் முனிவரர் முகம் நோக்கி-சூதமஹாமுனிவன் நைமிசாரணியத்துள்ள பழமையாகிய முனிச்சிரேட்டர்களுடைய முகங்களைப்பார்த்து,—முன் சுகமுனி உள் அன்பொடு ஆதரம் பெருக இருகையுங் குவித்து வினவ வியாசன் புகன்றது நல் செயந்திநகர மேதகுங் காதை-முற்காலத்திலே சுகமுனிவன் மனத்தில் அன்போடு விருப்பம்பெருக இரண்டுகைகளையுங் குவித்துக் கேட்ப வியாசமுனிவன் (அவனுக்குச்)சொல்லிய நல்லசெயந்திநகரத்தின் மேன்மைபொருந்திய கதையை,—நுங்கட்கு ஓதுவன் கவற்சி வேறு இலாது உணரும்-(யான் இப்பொழுது) உங்களுக்குச் சொல்வேன்; (நீங்கள் கவலையும் மற்றும்(மனவிகாரங்களும்)இன்றி(ச் சித்தசமாதானத்தோடு கேட்டு) அறியுங்கள்,—என்று உளம் புலப்பட உரைப்பான்-என்று சொல்லி (அவா) மனந்தெளியக் கூறுவான்.

சூதமாமுனிவன் யானைதாடுதித்து, தலைக்கொண்டேத்தி, நோக்கி, என்று உரைப்பான் என வினைமுடிவாக மூன்று செய்யுட்களும் ஒரு தொடராய் வந்தமை காண்க.

## நைமிசாரணியத்திற் சூதமுனிசென்ற அத்தியாயம்

## முற்றிற்று.

ஆக திருவிருத்தம் கக.

# உ-வது. வியாதர் சுகருக்கு உபதேசித்த அத்தியாயம்.

மரக தத்தனித் தாவர நீற்றொளி வயங்கப்
புரிச டைக்குலம் விழுதென வெரிநிடைப் பொலிய
விருவி னைத்தொடர் பகற்றிய வியாதனென் றிசைக்கு
மொருவன் மெய்க்கதிக் கங்கைமூ லத்துவந் துற்றான்.

இ-ள். இருவினைத் தொடர்பு அகற்றிய வியாதனென்று இசைக்கும் ஒருவன் - இருவினைகளின் சம்பந்தத்தை நீக்கிய வியாதனென்று சொல்லப்படும் ஒப்பில்லாத(முனி)வன்,—மரகதத் தனித் தாவரம் நீற்றொளி வயங்க - மரகதம்போலும் ஒப்பற்றமேனியிலே விபூதியினொளிவிளங்க,—புரி சடைக்குலம் விழுதென வெரிநிடைப் பொலிய - முறுக்கான சடைக் கூட்டம் விழுதுபோல முதுகினிடத்துத் தொங்க,—மெய்க்கதிக் கங்கை மூலத்து வந்துற்றான் - (தன்னை அன்போடு சேர்ந்தார்க்கு) உறுதிப்பயனை உறுவிக்குங் கங்காநதியின் அடிக்கரையில் வந்திருந்தான். எ-று. (க)

தலைம யங்கிய வேதங்க டம்மைநான் காக
நிலைவ குத்திடாப் பத்தொ டெண் புராணநூ னெறியா
யுலக மேழினு நிறுத்தியே யுமாபதி யருள்சேர்
கலையின் வன்மையான் யாவையு மகத்திடைக் காண்பான்.

இ-ள். உமாபதி அருள் சேர் கலையின் வன்மையான் - சிவபெருமானது திருவருளினால் (ஓதாதுணரப்) பெற்றுக்கொண்ட மெய்ந்நூலறிவின் வலிமையினாலே,—தலைமயங்கிய வேதங்கடம்மை நான்காக நிலை வகுத்திடா - (ஒருகாலத்திலே) தலைதடுமாறிய வேதங்களை நான்குவகையாக (முன்னைய)நிலைபோல் (முறைதெரிந்துவிளங்க)வகுத்து,—பத்தொடெண் புராண நூல் நெறி ஆய் உலகமேழினும் நிறுத்தி - பதினெண்புராண நூல்களை முறையானே ஆக்கி ஏழுலகங்களிலும் நிறுத்தி,—யாவையும் அகத்திடைக் காண்பான் - எவற்றையும் (தன்) மனத்தின்கட் காண்பவன் (அவ் வியாதமுனிவன்.) எ-று.

ஆய் என்பது பிறவினை விகுதி தொகநின்றது. பெயர்ப்பயனிலை வருவிக்கப்பட்டது. (உ)

அன்ன வன்சர ணத்தினை யஞ்சலி செலுத்தித்
துன்னு நான்மறைச் சுகனெனுந் தவமுனி தொழுது
சென்னி மேற்கரங் குவித்துமுன் பொருனையின் றென்பான்
மன்னு கின்றதோர் செயந்திநன் னகரென வகுத்தாய்.

இ-ள். நான்மறை துன்னுஞ் சுகனெனுந் தவ முனி - நான்கு வேதங்களையும் அறிந்த சுகன் என்னுந் தவத்திற் சிறந்த முனிவன்,—அன்னவன் சரணத்தினைத் தொழுது - (அங்ஙனமிருந்த வியாசமுனிவனைக் கண்டு) அவனுடைய பாதங்களை நமஸ்கரித்து,—கரம் அஞ்சலிசெலுத்திச் சென்னி மேற் குவித்து - கைகளை அஞ்சலியாக்கிச் சிரசின்மேற்குவித்துக்கொண்டு

(அவனை நோக்கி),—முன் பொருநையின் தென்பால் ஓர் செயந்திநன்னகர் மன்னுகின்றது என வகுத்தாய் - (சுவாமீ!) முன்னாளிலே பொருநையாற்றின் தெற்குப்பக்கத்திலே ஒப்பில்லாத செயந்தியென்னும் நல்ல நகரம் நிலைபெறுகின்றது என்று கூறியருளினீர். எ-று.

இங்கே "குவித்து" என்பது வருஞ்செய்யுளில் "என" என்னும் வினையைக் கொண்டு முடியும். இடையிலுள்ளன அநுவாதம். (௯)

செந்தி நன்னக ரத்துள சீர்மையுஞ் செவ்வேள்
வந்த தன்மையுந் தொகைப்பட வுணர்த்தினை மதலைக்
கெந்தை நின்சொலி னாரமு தத்தினை யினிதா
யுய்ந்தி டும்படி செப்புதி யாலென வுரைப்பான்.

இ-ள். செந்தி நன்னகரத்து உள சீர்மையுஞ் செவ்வேள் வந்த தன்மையுந் தொகைப்பட உணர்த்தினை - செயந்தியாகிய நல்லநகரத்தின் உள்ள சிறப்பையும் (அங்கே)முருகக்கடவுள் வந்தருளிய படியையும்(அந்நாளிலே) சுருக்கமாக உணர்த்தினீர்,—எந்தை மதலைக்கு - என்பெருமானே (நும்) புதல்வ(னாகிய தமியே)னுக்கு,—நின் சொலின் ஆரமுதத்தினை இனிதாய் உய்ந்திடும்படி செப்புதி - நுமது திருவாக்காகிய அரிய அமிழ்தை(த் தமியேன் உட்கொண்டு) இனிதாக உய்யும்வண்ணம் (விரித்துக்) கூறியருளுக,—என - என்று விண்ணப்பஞ்செய்ய,—உரைப்பான் - (வியாசமுனிவன்) அவனுக்குச் சொல்வானாய். எ-று.

"உரைப்பான்" என்னும் வினையெச்சமுற்று வருஞ்செய்யுளில் "நோக்கி" என்பதனையும் அது அடுத்துநின்ற "என" என்பதனையுங் கொண்டு முடியும். (௭)

குற்ற மூன்றகற் றியசுக முனிவனைக் குறிப்பா
லுற்று நோக்கிநின் னெண்ணநன் றாலென வொளிகூர்
கற்றை யஞ்சுடர் வேலவன் காதைக ளனைத்து
முற்ற வோதுவன் சோர்வற வுணர்குதி முறையால்.

இ-ள். குற்றம் மூன்று அகற்றிய சுகமுனிவனைக் குறிப்பால் உற்று நோக்கி - (காமம் வெகுளி மயக்கம் என்னுங்) குற்றங்கண் மூன்றையும் ஒழித்த சுகமுனிவனை (மகிழ்ச்சிக்)குறிப்போடு உற்றுப்பார்த்து,—[இன்னும் ஒருரை:—(தான் சொல்வனவற்றைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிதற்குத் தடையாய் வரும் ஐயம் திரிபு அறியாமை என்னுங்) குற்றங்கண் மூன்றையும் அகற்றும்பொருட்டுச் சுகமுனிவனை (அருட்) குறிப்போடு உற்றுப்பார்த்து],—நின் எண்ணம் நன்று என - உனது கருத்து நன்றாயிற்று என்று சொல்லி,—(மேலும் அவனை நோக்கி),—ஒளி கூர் கற்றை அஞ் சுடர் வேலவன் காதைகள் அனைத்தும் - புகழ் மிகுந்த திரளான அழகிய சோதிபொருந்திய வேலையுடையகடவுளின் கதைகளையெல்லாம்,—முற்ற ஓதுவன் - முடியக் கூறுவேன்,—சோர்வற முறையால் உணர்குதி - தளர்வறக் கிரமமாக அறிகுதி. எ-று.

இங்கே "என" என்பது என்று என்பதன்திரிபு "என்றுசொல்லி" என்பது பொருள். இது இவ்வத்தியாயமுடிவுச் செய்யுளில் "விண்டான்" என்னும் முற்றைக் கொண்டு முடிவது. இடையன அநுவாதம். (௫)

ஞான வீட்டுறு திறவுகோல் கடாவுடை நடுவன்
மான சோத்திரக் கதவெட்டி யோகத்தின் மதிப்பா
ரான நெஞ்சகத் திருஞ்சுடர் விளக்கதா மமரர்
சேனை காவலற் குரியதாஞ் செயந்திநன் னகரம்.

இ-ள். அமரர் சேனை காவலற்கு உரியதாஞ் செயந்தி நன்னகரம் - தேவச்சேனாபதிக்கு உரியதான செயந்திமாபுரமானது,—ஞான வீட்டு உறு திறவு கோல் - ஞானத்தாற் பெறப்படும் முத்திவீட்டின் உள்ளுறுவிக்குந் திறவுகோலாம்,—கடாவுடை நடுவன் மானசோத்திரக்கதவு - எருமையை யுடைய மறலியினது மானசோத்திர(ம் என்னும் நகர)த்தின் (உள்ளுற விடாது தடுக்குங்) கதவுமாம்,—எட்டு யோகத்தின் மதிப்பார் நெஞ்சகத்து ஆன இருஞ்சுடர் விளக்கதாம் - எண்வகை யோக(சாதன)த்தால் (இறைவனைத்) தியானிப்பவர்களது மனங்களினுள்ளே உள்ள பேரொளியை யுடைய தீபமுமாகும். எ-று.

யோகிகள் அகத்தே பத்தியோடு செயந்தியைத் தியானித்தலினுற் கடவுளைச் சாக்ஷாற்கரிக்கும் பெருமை பெறுவர் என்றபடி. அமரர்சேனை என்பது தெய்வயானையம்மையார் எனவும் தேவர்களாகிய சேனை எனவும் இருபொருள் தருவது. (சு)

உடைந்த தெண்டிரை முகாரம்ப தீர்த்தத்தோர் பொழுது
படிந்து மும்முறை குமரநா யகன்பதம் பணிவார்
மிடைந்த தேவரு முனிவரர் யாவரும் விரைவி
லடைந்தன் ஞர்பதம் பரவவீற் றிருந்தருள் புரிவார்.

இ-ள். உடைந்த தெண்டிரை முகாரம்ப தீர்த்தத்து ஓர் பொழுது படிந்து - (கரையை)உடைத்த தெளிவாகிய திரைகளையுடைய வதனாரம்ப தீர்த்தத்தில் ஒருநாள் முழுகி,—மும்முறை குமரநாயகன் பதம் பணிவார்- மூன்றுகாலங்களிற் குமாரசுவாமியினுடைய ஸ்ரீபாதங்களை வழிபடுபவர்,—மிடைந்த தேவரும் முனிவரர் யாவரும் விரைவில் அடைந்து பதம் பரவ- நெருங்கிய தேவர்களும் முனிச்சிரேட்டர் யாவரும் விரைவுடனே வந்து சேர்ந்து (தம்) பாதங்களைத் துதிக்க,—வீற்றிருந்து - (தாம்) மேம்பாடுடையராயிருந்து,—அன்னோர் அருள்புரிவார் - அவர்களுக்கு (வேண்டியவற்றை) அருளுதல் செய்வார்கள். எ-று.

உடைத்த-உடைந்த. விகாரம். (எ)

மூன்று வைகலிம் முகாரம்ப மூழ்கிவேன் முருகற்
கான்ற சோடச விதியினு லருச்சிக்கு மவர்கள்
கான்ற மும்மத வெண்களிற் றிந்திரக் கடவு
ளென்று வந்தனை புரிந்திட வினிதுவீற் றிருப்பார்.

இ-ள். மூன்றுவைகல் இம் முகாரம்பம் மூழ்கி - மூன்று நாள் இந்த வதனாரம்பதீர்த்தத்து மூழ்கி - வேன்முருகற்கு ஆன்ற சோடச விதியினுல் அருச்சிக்குமவர்கள் - வேற்படையையுடைய சுவாமிக்கு நிறைந்த பதினாறு (உபசாரச்) செய்கைகளினுற் பூசிப்பவர்கள்,—மும்மதங் கான்ற வெண்களிற்று இந்திரக் கடவுள் - மும்மதங்களைக் கான்ற வெள்ளை

யானையையுடைய இந்திரதேவனும்,—என்று வந்தனைபுரிந்திட இனிது வீற்றிருப்பார் - (தம்மைப்) பொருந்தி வழிபாடுசெய்ய இன்பமாய் வீற்றிருப்பார்கள். எ-று. (அ)

பரியின் வேள்வியி லாயிர கோடியிற் பலமு
முரிய நான்முறை யுளூற்றுமெய்க் கதிகளு முலவா
வரிய மாதவப் பயன்களும் வேதவா கமத்துச்
சுருதி யாய்ந்திடு கடவுளர் தருங்கதித் தொகையும்.

இ-ள். பரியின் வேள்வியில் ஆயிரகோடியிற் பலமும் - அசுவமேத யாகங்களில் ஆயிரகோடி (களைச்செய்கையினால் வரும்பயனும்,—உரிய நான் முறை உளூற்றும் மெய்க்கதிகளும்,—(தத்தமக்கு) ஏற்ற நூல்களின் முறைமையால் (விரதம் ஆசாரம் முதலியவற்றை) அனுட்டிக்(கையினால் ஆ)கும் மெய்யான பயன்களும்,—உலவா அரிய மா தவப் பயன்களும் - ஒழியா(துசெய்)த அரிய பெரிய தவங்களின் பயன்களும்,—வேத ஆகமத்துச் சுருதி ஆய்ந்திடு கடவுளர் தருங் கதித்தொகையும் - வேதாகமங்களாகிய ஆதிச்சுருதிகளை (ஐயந்திரிபற உணருமாற்றலின்றித் தாமே) ஆராய்கின்ற பிரமாதிதேவர்களால் உதவப்படும் பதவிக்கூட்டங்களும். எ-று. (கூ)

கங்கை யேமுத லாகிய நதிகளின் கதியுந்
திங்க ளஞ்சடை யரன்கயி லாயத்தின் சிறப்பும்
பொங்கு மந்திர நிலைதருங் கதிகளும் போர்வே
லங்கை யானெழுத் தாறினொன் றேத்திட வமையும்.

இ-ள். கங்கை முதலாகிய நதிகளின் கதியும் - கங்கை முதலிய யாறுகளின்(மூழ்கலால்) ஆகும்பயனும்,—திங்கள் அஞ் சடை அரன் கயிலாயத்தின் சிறப்பும் - பிறையை அணிந்த அழகிய சடையையுடைய சிவபிரானது கயிலாசமலையின் (வாழ்தலாகிய) சிறப்பும்,—பொங்கு மந்திர நிலை தருங் கதிகளும் - பொலிந்த மந்திரசெப நிலைமையினாற் பெறப்படும் பயன்களும்,—போர் வேல் அங்கையான் எழுத்தாறின் ஒன்று ஏத்திட அமையும்- (அச்செயந்தியில் வீற்றிருக்கின்ற) போரில் வலிய வேலை அகங்கையினுடைய (சரவணப)வரை (அவருடைய) சடக்ஷர(செப)த்தினோடு (மனம்) ஒருப்பட்டுத் துதித்தலால் அமைவனவாம். எ-று.

ஒன்று என்பது வினையெச்சவிகுதிகெடநின்ற முதனிலை. (க0)

மறை கொழிக்குஞ் செயந்திபுரத் தெல்லையைநீங் காதிருந்து
வாழு மாந்தர், குறைவிறவச் செயலாள ரவர்புரியுந் தருமமொன்று
கோடி யாமா, லறுமுகனைச் சேவைசெயுங் கண்ணுடையார் கண்
ணுடையா ரன்னோன் சீர்த்தி, முறையுரைக்கு நன்றேவ நன்றே
வென் றேசுருதி மொழியு மாதோ.

இ-ள். மறை கொழிக்குஞ் செயந்திபுரத்து எல்லையை நீங்காது இருந்து வாழும் மாந்தர் குறைவு இல் தவச்செயலாளர் - வேதங்களைத் தெரி(த்துவிள)க்குஞ் செயந்திநகரத்தின் எல்லையை விடாது இருந்து வாழும் மனிதர் குறைவற்ற தவச்செய்கையை உடையவராம்;—அவர் புரியுந் தருமம் ஒன்று கோடியாம் - அவர் செய்யும் நல்வினை ஒவ்வொன்று

கோடி கோடியாம்,—அறுமுகனைச் சேவைசெயுங் கண்ணுடையார் கண்ணுடையார் - ஆறுமுகசுவாமியைத் தரிசிக்குங் கண்களையுடையவர்களே கண்களையுடையராவர்;—அன்னான் சீர்த்தி முறை உரைக்கும் நன்னாவே நன்னா - அவருடைய புகழைக் கிரமமாக எடுத்துரைக்கும் நல்லநாவே நன்னாவாம்,—என்று சுருதி மொழியும் - என்று மெய்ந்நூல்கள் கூறும். எ-று.

சேவை என்பது மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றானுஞ் செய்யும் வழிபாடெனப் பொருள்பட்டுப் பொதுமையினிற்பதாயினும் ஈண்டுக் கண்ணுக்கடையாய் சிறப்பின் தரிசித்தல் எனப் பொருள் கொள்ளப்பட்டது. (௧௧)

வேறு.

வேதாவுமவ் வேதாவினை வியனாபியி னமைத்த
தாதார்பசுந் துளவத்தனுந் தவத்தோர்களுஞ் சுரருங்
காதார்விழி யுமையாடரு கந்தன்புரம் வந்தோ
ரோதார்நமை யென்றேவியந் துரைப்பாரிவை யுணர்நீ.

இ-ள். வேதாவும் - பிரமதேவனும்,—அவ்வேதாவினை வியன் நாபியின் அமைத்த தாது ஆர் பசுந் துளவத்தனும் - அப்பிரமதேவனைப் பெருமையான (தனது) கொப்பூழின்கட் பெற்ற தாதுக்கள் பொருந்திய பசுமையாகிய துளசிமாலையையணிந்த திருமாலும்,—தவத்தோர்களுஞ் சுரரும் - முனிவர்களுந் தேவர்களும் (ஆகிய இவர்கள் ஒவ்வொருவரும்),—காது ஆர்விழி உமையாள் தரு கந்தன் புரம் வந்தோர் நமை ஓதார் என்று - "செவிகளில் ஆர்ந்த விழிகளையுடைய பார்ப்பதியார் பெற்ற கார்த்திகேய பெருமானது சிந்துபுரத்தின்கண் வந்தவர் நம்மை (ஒருபொருட்படுத்துக்) கூறார்" என்று,—வியந்து உரைப்பார் - (சிந்துபுரத்தின் விசேடத்தை) வியந்து கூறுவார்,—இவை நீ உணர் - இவற்றை (ச்சுகனே) நீ அறிந்துகொள். எ-று. (௧௨)

எவராகிலுஞ் சனனம்முதலீறுமளவும்மா
தவமாற்றினுஞ் சருகாரினுந் தானம்பல செயினு
முவமானமில் செயந்திப்பதி யொருநாளுப வசியார்க்
கவமாமவர் சனனம்பசு வாமாமிவை யறிநீ.

இ-ள். எவராகிலும் உவமானமில் செயந்திப்பதி ஒருநாள் உபவசியார்க்கு - யாவராயினும் ஒப்பற்ற சிந்துபுரத்தில் ஒரு நாள் (ஆவது) உபவாசஞ் செய்யாதவருக்கு,—சனனம்முதல் ஈறுமளவும் - (அவர்) பிறப்பு முதல் இறப்பாகும் வரையும்,—மாதவம் ஆற்றினுஞ் சருகு ஆரினுந் தானம் பல செயினும் - பெருந்தவஞ் செய்யினும், (ஆண்டுமற்றுணவின்றிச்) சருகுகளையே உண்ணினும், (அத்தவத்தோடு) கொடைகள் பலவற்றைச் செய்யினும்,—அவமாம் - (அச்செய்கைகளெல்லாம்) பயனிலவாம்;—அவர் சனனம் பசு ஆம் - அவர்களுடைய பிறப்பு விலங்குப் பிறப்(போடு ஒப்)பாம்,—ஆம் இவை நீ அறி - (இங்ஙனம்) ஆகிய இவற்றை நீ அறிந்துகொள். எ-று.

உரைச்சிந்துநற் புரமேசுரருலகம்மவ னுறுவோர், பரிக்குஞ்
சுர ரவரன்பொடு பகர்வார்த்தைக ளனைத்து, மிருக்கின்பெரு மிதமந்திர மவரோடினி திருத்தல், பெருக்குங்கதி பெறுகின்றதிற் பெரிதாமிவை யுணர் நீ.

இ-ள். உரை நற் சிந்துபுரமே சுரருலகம் - கீர்த்தியையுடைய நல்ல செயந்திபுரமே தேவலோகமாம்,—அவண் உறுவோர் பரிக்குஞ் சுரர் - அப்புரத்தில் இருப்பவர்களே காக்குந் தேவர்கள்,—அவர் அன்பொடு பகர் வார்த்தைகளனைத்தும் பெருமித இருக்கின் மந்திரம் - அவர்கள் அன்போடு பேசும் வசனங்களெல்லாம் பெருமையையுடைய இருக்குவேத மந்திரங்களாம். [அவர் அன்போடு பேசும் மொழிகள் கேட்போர்க்கு மந்திரங்கள் போலப் பயன்றரும் என்றபடி.] அவரோடு இனிது இருத்தல் பெருக்குங் கதி பெறுகின்றதிற் பெரிதாம் - அவர்களோடு (கூடி) நன்றாக வாழுதல் பேரின்பவீட்டைப் பெறுதல் போலப் பெருமையுடைத்தாம்,—இவை நீ உணர் - இவற்றை நீ அறிக. எ-று. (௧௪)

நாராயணன் முனமேசொல நவைதீர்சனற் குமர, னாராவமு தெனவேசிந்து புரமான்மிய மனைத்தும், பேராதர வுடன்பேசிய பெருங்காதையி னுட்பஞ், சோராதுனக் குரைக்கேனிது துணிவாகவுந் துணிநீ.

இ-ள். நாராயணன் முனமே சொல நவைதீர் சனற்குமரன் - திருமால் முன்னரே கூறக் (கேட்ட) குற்றமற்ற சனற்குமார முனிவர்,—ஆரா அமுதென - தெவிட்டாத அமுதமென்று (யான் இன்பமிகுதியால்) எண்ண,—பேராதரவுடன் பேசிய பெருங்காதை சிந்துபுரமான்மியம் அனைத்தும் - பெரிய காதலோடு (எனக்குக்) கூறிய பெருங்கதையாகிய செயந்திபுரத்தின் மகிமை முழுதையும்,—இன் நுட்பஞ் சோராத உனக்கு உரைக்கேன் - இனிய (மதி) நுட்பங் குறையாத உனக்குக் கூறுகேன்,—நீ இது துணிவாகத் துணி நீ இதனை நிச்சயமாகத் துணிந்துகொள். எ-று.

சோராத என்பது ஈறு குறைந்து நின்றது. உம் என்பது அசையாகக் கொள்ளற்பாலது. (௧௫)

இருமூவகைக் களைவேரறுத் தின்பம்பெற வேண்டி
னொருமூவைகன் முருகேசனை யுள்ளன்பொடு பரவித்
திரையார்வத ஞரம்பமெ னுந்தீர்த்தமும் படிந்து
கரையேறுதி பெருநான்மறை கரைகண்டுயர் கருத்தாய்.

இ-ள். பெரு நான்மறை கரை கண்டு உயர் கருத்தாய் - பெரிய சதுர்வேதக் (கடலின்) கரையைக் கண்டு உயர்ந்த கருத்தினையுடையாய்,—இருமூவகைக் களை வேர் அறுத்து இன்பம் பெற வேண்டின் - பெருமையாகிய மும்மலங்களை மூலத்தோடு களைந்து ஆனந்தத்தை அடைய விரும்பினால்,—ஒருமூவைகல் முருகேசனை உள்ளன்பொடு பரவி - (அச்செயந்தியை அடைந்து) மூன்றுநாள் முருகக்கடவுளை மனக்காதலோடு துதித்து,—திரை ஆர் வதஞரம்பம் எனுந் தீர்த்தமும் படிந்து - திரைகள் நிறைந்த வதஞரம்பம் என்னுந் தீர்த்தத்திலும் (மற்றைத்தீர்த்தங்களிலும்) முழுகி,—கரை ஏறுதி - கரையின்கண் ஏறுவாய். எ-று. (௧௬)

உனக்கேசொலும் பொருளாமிந்த வுண்மைச்சரித் திரத்தை
நினைத்தேட்டினி லெழுதித்தினம் படிப்போர்நிக ரில்லா
மனத்தேசர வணத்தெம்பிறை வாழ்வானெனச் சுகற்குக்
கனைத்தோலிடு மறைநான்கெனக் கண்டான்முனம் விண்டான்.

இ-ள். உனக்குச் சொலும் உண்மைப் பொருளாம் இந்தச் சரித்திரத்தை - உனக்கு (யான்) கூறும் மெய்ப்பொருளையுடையதான இந்தக் கதையை,—நினைத்து ஏட்டினில் எழுதித் தினம் படிப்போர் நிகரில்லா மனத்தே - (இதன் விசேடத்தை) நினைந்து ஏட்டின்கண் எழுதி நாடோறுங் கற்பவர்களுடைய ஒப்பில்லாத உள்ளங்களிலே,—சரவணத்தெதம்மிறை வாழ்வான் - சரவணபவராகிய எம்பெருமான் அமர்ந்தருளுவார்,—என - என்(றிவ்வா)று,—முனங் கனைத்து ஒலிமெறை நான்கெனக் கண்டான் சுகற்கு விண்டான் - முன்னே முழங்கி (சிவபெருமானை இலக்காக்கி) அபயமிடுகின்ற வேதங்களை நான்காக வகுத்த (வியாசமுனி)வன் சுகமுனிவனுக்குக் கூறினான். எ-று. (௧௭)

வியாதர் சுகருக்குபதேசித்த வத்தியாயம் முற்றிற்று.

ஆகூ திருவிருத்தம் ௫௮.

## ௩-வது. செந்தூர்வைபவமுரைத்த அத்தியாயம்.

ஆங்காரக் குறும்பகற்றி யாதிவே தாகமத்திற் காதியான,
வோங்காரத் திருவடிவாங் குமரேசன் செயந்திபுரத் துற்ற
காதை, நீங்காதைம் புலனுமொன்றாய்ப் பரபோகத் துண்மை
யென நினைத்து நீயென், பாங்காக வுணர்தியென வியாசமுனி
சுகன்கேட்கப் பகர்ந்தான் மாதோ.

இ-ள். ஆதி வேதாகமத்திற்கு ஆதியான - சிவபெருமானால் அருளிச்செய்யப்பட்ட வேதாகமங்களின் முதற்கண்ணதாகிய,—ஓங்காரத் திருவடிவாங் குமரேசன் செயந்திபுரத்து உற்ற காதை - பிரணவமே திருமேனியாகவுடைய குமாரசுவாமியினது செயந்திபுரத்தைப்பற்றிய கதையை,—பரபோகத்து உண்மையென நினைத்து - பரமானந்தத்தைப்பயக்கும் மெய்க்கதையென்று நினைத்து,—ஆங்காரக் குறும்பு அகற்றி - அகங்காரத் தீமையை நீக்கி,—ஐம்புலனும் நீங்காது ஒன்றாய் - ஐந்து இந்திரியங்களும் பிரியாது ஒருவழிப்பட்டு,—நீ என்பாங்கு ஆக உணர்தி என - (சுகனே) நீ என்மாட்டு முற்றாக அறிந்துகொள் என்று தொடங்கி,—வியாசமுனி சுகன் கேட்கப் பகர்ந்தான் - வியாசமுனிவன் சுகமுனிவன் கேட்(டுக்கொண்டிருக்)க மேலுங் கூறினான். எ-று. (௧)

சிந்துபுர மெப்புரத்துஞ் சிரபுரமா மப்புரத்திற் சிறந்த தீர்த்த,
முந்துநதி பலகோடி யவற்றினுக்கு மேலாகு முதியோர் வைகு,
மந்தநகரிடையிருந்து தனித்தொருமந் திரஞ்செபிக்கி னலகிலாத,
மந்திரத்தின் கதியுதவு மனைத்துயிர்க்கும் போகமுத்தி வழங்கு
மாதோ.

இ-ள். சிந்துபுரம் எப்புரத்துஞ் சிரபுரமாம் - செயந்திநகரம் எல்லா நகரங்களினுந் தலைமையான நகரமாம்;—அப்புரத்திற் சிறந்த தீர்த்தம் முந்து நதி பலகோடி யவற்றினுக்கும் மேலாகும் - அந்நகரத்திலுள்ள சிற

ந்த தீர்த்தங்கள் மூற்பட்ட யாறுகள் பற்பலவற்றினும் மேன்மையுடையன வாம்,—மூதியோர் வைகும் அந்தநகர் - ஆன்றோர்வாழுகின்ற அந்தநகரமான து,—இடையிருந்து தனித்து ஒரு மந்திரஞ் செபிக்கின் அலகிலாத மந் திரத்தின் கதி உதவும் - தன்னிடத்தில் இருந்து தனியே ஒருமந்திரத் தைச் செபித்தால் அளவிறந்த மந்திர(செப)ங்களாலாகும் பயனை அரு ளும்,—அனைத்துயிர்க்கும் போகமுத்தி வழங்கும் - எல்லா ஆன்மாக்களுக் கும் (அவ்வவர் வழிபாட்டுக்கேற்றபடி) போகமோக்ஷங்களைக் கொடுக்கும். எ-று. (உ)

காசியினிற் புனன்மூழ்கிக் களித்தகொல்லா புரியிருந்து
கரநியாச, மாசில்செபஞ் செபித்துணவு மாகுதியி லாக்கிமற்றவ்
வானோர் வைகுந், தேசமுழு வதுங்குலவிச் சையத்தி னுற்றதெத்
தாத் திரேயன் றன்பா, னேசமுடன் றினந்தோறு மிவ்வாறு
விடாதொழுகு நிகரின் மேலோர்.

இ-ள். காசியினிற் புனன்மூழ்கி - காசியிற் கங்கையிலே ஸ்நானஞ் செய்து,—களித்த கொல்லாபுரி இருந்து - (தன்கண்வாழ்வார்க்குக்) களிப் பைச் செய்யுங் கொல்லாபுரியின்கண்ணே இருந்து,—கரநியாசம் மாசில் செபஞ் செபித்து - (கைவிரல்களை விதிப்படி குறித்த குறித்த இடங்களில் மந்திரோச்சாரணத்தோடு வைத்துச் சுத்தப்படுத்தித் தன்னுடம்பைச் சிவ தேகமாகப் பாவித்தலிற்செய்யுங் கிரியையாகிய) சகளீகரணத்தோடு குற்ற மற்ற மந்திரங்களைச் செபித்து,—அவ்வானோர் உணவும் ஆகுதியில் ஆக்கி - அத்தேவர்கட்குப் போசனத்தையும் வேட்டலினால் அமைத்து,—வைகுந் தேச முழுவதுங் குலவி - (அத்தேவர்) இருக்கும் உலகங்களெல்லாவற்றி னும் (புகழினால்) விளங்கி,—சையத்தின் உற்ற தெத்தாத்திரேயன் - (ஸ்ரீ சைலம் என்னும்) மலையில் வாழ்ந்த தெத்தாத்திரேயனும்,—தன்பால் நேச முடன் - அத்தெத்தாத்திரேயனிடத்துக்கொண்ட (குரு) பத்தியோடு,— தினந்தோறும் விடாது இவ்வாறு ஒழுகும் நிகரின் மேலோர் - நாடோறும் விடாமல் (மேலே சுட்டிய) இந்தப்பிரகாரமாகவே (அவனை அனுசரித்துக் கங்காஸ்நானம் முதலியவற்றை) அனுட்டிக்கின்ற ஒப்பற்ற மேலோர்களும். எ-று. (௩)

கருதுகந்த ளேந்திரர்கோ ரக்கர்கொங்க ணேந்திரர்வெங்
காமந் தீர்ந்த, பெருமையினா கார்ச்சுனர்மச் சேந்திரர்மா தவநிலை
மைப் பீமநாத, ரருணகிரி நாதரரும் புசங்ககுரு நாயகர்பே ராதி
நாத, ருரிமைநவ நாதசித்தர் வானவர்கண் முனிவரர்க ளொழுக்க
மிக்கார்.

இ-ள். கருது ... ... ... நவநாதசித்தர் - மதிக்கப்படுகின்ற கந்தளேந் திரர், கோரக்கர், கொங்கணேந்திரர், கொடிய காமத்தினீங்கிய பெரு மையினையுடைய நாகார்ச்சுனர், மச்சேந்திரர், பெருந்தவ நிலையையுடைய பீமநாதர், அருணகிரிநாதர், அருமையாகிய புசங்ககுருநாயகர், பெருமை யாகிய ஆதிநாதர் என்னும் (ஒன்பதின்மராகிய சிவபெருமானில்) உரிமை யையுடைய நவநாதசித்தர்களும்,—வானவர்கள் ஒழுக்கம் மிக்கார் முனி வரர்கள் - தேவர்களும் ஒழுக்கத்திற்சிறந்த முனிச்சிரேட்டர்களும். எ-று.

வேறு.

அருத்திதரும் யமநியமம் பிராணா யாம மாஞ்சிரவ ணம்மனன மளக்கொணாத, நிருத்தியா சனந்தியா னஞ்சமாதி நெறியுணர்ந்து சிவன்பாத நேசித் தேத்திப், பொருத்துமணி மாமகிமா லகிமா ஞானம் பூத்தகரி மாவீசத் துவமே பூண்டு, திருத்துவசித் துவம் பிராத்தி பிராகாம் யம்மாத் தேர்ந்தவட்ட சித்தியெனுந் திறத்து வாய்ந்த.

சாற்றரிய சனகர்சனந் தனர்மெய்ஞ் ஞானந் தழுவுசனா தனர் முதிய சனற்கு மாரர், போற்றுசனர் சுசாதரிவர் முதலா யுள்ள பொருவரிய முனிவரர்கள் புணரி சூழ்ந்த, நாற்றிசையா மெண் டிசையின் வைகி வேத நான்கினெறி யுளஞ்சேர்த்தி நவையி லாது, கூற்றுயிருண் டருள்பரமற் பணிந்து நித்தங் கூறரிதாஞ் செயந்திபுரத் தென்றும் வாழ்வார்.

இ-ள். புணரி சூழ்ந்த நாற்றிசையாம் எண்டிசையின் வைகி - கடல்களாற் சூழப்பட்ட நான்கு பெருந்திசைகளும் நான்கு கோணத்திசைகளும் ஆகிய எண்டிசைகளி(லுள்ள பலவிலங்களி)லும் வாழ்ந்து,—வேதம் நான்கு இன் நெறி உளஞ்சேர்த்தி நவையிலாது - வேதங்கள் நான்கையும் (அவற்றின் விதித்த) இனிய (வைதிக)மார்க்கத்தையும் மனங்கொண்டு (ஒழுகிக்) குற்றமற்றவர்களாய்,—கூற்றுயிர் உண்டு அருள் பரமன் நித்தம் பணிந்து - இயமனுடைய உயிரை உண்டு அருள்செய்த சிவபெருமானை நாடோறும் வணங்கி,—அருத்தி தரும் யமம் - (சரீரத்தையே சாதனமாகக்கொண்டு) ஆதரத்தோடு ஆசரிக்கின்ற (மெய்மை கொல்லாமை முதலியதேயாகிய) இயமமும்,—நியமம் - (ஜலம் முதலியவற்றைச் சாதனமாகக் கொண்டு செய்யுஞ் சௌசஞ் சந்தியாவந்தனம் முதலியதாகிய) நியமமும்,—பிராணாயாமம் - (மந்திரஞ் செபிக்கும்வழிக் குறித்த காலவெல்லைவரையும் மூச்சை அடக்குதலாகிய) பிராணாயாமமும்,—ஆஞ் சிரவணம் - (திருவருளால்) ஆகின்ற (சற்குருமுகத்தான் மெய்ப்பொருள் கேட்டலாகிய) சிரவணமும்,—மனனம் - (அங்ஙனங் கேட்டபொருளை மீண்டு மனத்தில் அமைத்தலாகிய) மனனமும்,—அளக்கொணாத நிருத்தியாசனம்-அளவிடப்படாத (அங்ஙனம் அமைத்த பொருளை இடையறாது ஆராய்ச்சிசெய்தலாகிய) நிதித்தியாசனமும்,—தியானம் - (அவ்வாராய்ச்சியாற்போந்த மெய்ஞ்ஞானத்தோடு கடவுளை நினைத்தலாகிய) தியானமும்,—சமாதி - (அத்தியானமுதிர்ச்சியினாற் கடவுளின் மனத்தைப் பூரணமாகப் பதித்தலாகிய) சமாதியும் (ஆகிய இவற்றை),—நெறி உணர்ந்து - கிரமமாக அறிந்(தனுட்டித்)து,—சிவன் பாதம் நேசித்து ஏத்தி - சிவபெருமானுடைய திருவடிகளை அன்புகூர்ந்து துதித்து,—பொருத்தும் - (தவவலியால்) அமைக்கற்பாலனவாய,—அணிமா - மிகச்சிறுத்தலும்,—மகிமா - மிகப்பெருத்தலும்,—லகிமா - மிக நொய்ம்மையாதலும்,—ஞானம்பூத்த கரிமா - அறிவோடுபொலிந்த மிகத்திண்மையாதலும்,—ஈசத்துவம் - பலவற்றையும் ஆளும் வன்மையும்,—பூண்டு திருத்துவசித்துவம் - பொருந்த அமைக்கின்ற தன்வயமுடைமையும்,—பிராத்தி - வேண்டியவற்றை அடைதலும்,—பிராகாம்யம் - வேண்டியவிடங்களிலெல்லாந் தடையின்றிச் செல்லும் வன்மையும்,—ஆத் தேர்ந்த - என்பனவாக (ஆன்றோர்களால்)உணரப்பட்ட,—அட்டசித்தி எனுந் திறத்து வாய்ந்த-

எண்வகைச் சித்திகள் என்னும் பகுதிகளிற் (பயின்று) சிறந்த,—சாற்றரிய ... ... முனிவரர்கள்-சொல்லுதற்கரிய சனகர், சனந்தனர், மெய்ஞ்ஞானம் பொருந்திய சனாதனர், பழைய சனற்குமாரர், புகழ்ப்படும் உசனர், சுசாதர் என்னும் இவர்முதலாகிய ஒப்பற்ற முனிச்சிரேட்டர்களும்,—கூறரிதாஞ் செயந்திபுரத்து என்றும் வாழ்வார் - சொல்லுதற்கரிய செயந்திநகரத்தில் எப்போதும் வாழ்வார்கள். எ-று.

விதித்தியாசனம் என்பது எதுகை நோக்கிப்போலும் விருத்தியாசனம் என இங்கே வழங்கப்பட்டிருக்கின்றது.

"காசியினிற்புனன்மூழ்கி" என்பது முதலிய இந்நான்குசெய்யுட்களும் ஒருதொடர். நாற்றிசையாம் என்பது நான்கு நான்கு திசையாம் என இரட்டித்துப் பொருள்கொள்ளப்பட்டது. (கூ-சு)

வேறு.

சொல்லு தற்கரி தாகிய ஞானவேர் சூழ்ந்து
கல்லு மட்டறு காமமுன் னுறொன்றாய்க் கலந்து
மல்ல லஞ்சிந்து புரத்துளோர் தம்மொடு மாறாய்ச்
செல்ல வெண்ணினும் பரிதிமுன் பனியெனச் சிதையும்.

இ-ள். சொல்லுதற்கரிதாகிய ஞானவேர் சூழ்ந்து கல்லும் - (இவ்வியல்பினதென்று யாருங்) கூறுதற்கரியதான ஞானத்(தைக் கெடுக்கும் பொருட்டு அ)தின் வேரைச் சூழ்ந்து கிண்டுகிற,—மட்டறு காமமுன் ஆறு ஒன்றாய்க் கலந்து - அளவற்ற காமம் முதலிய ஆறும் ஒன்றாய்க் கூடி,—மல்லற் சிந்து புரத்துளோர் தம்மொடு மாறாய்ச் செல்ல எண்ணினும் - மாட்சிமையான செயந்திபுரத்துள்ளவர்களோடு மாறாய் (அவரது ஞானத்தை வேரறுக்குமாறு)போகநினைப்பினும்,—பரிதி முன் பனியெனச் சிதையும்-சூரியனுக்கு முற்பட்ட பனிபோல(த் தாமே)அழியும். எ-று. (எ)

தாக்கு மோகவா காமியஞ் சஞ்சிதக் கட்டு
நீக்கு நீக்கமில் லாவுயிர்த் தொகை தொறு நிறைந்து
தேக்கு மானந்தச் செயந்திநன் னகரெனச் சிறந்தார்க்
காக்க மேல்வருஞ் சனனமு மில்லையா மளக்கின்.

இ-ள். நீக்கமில்லா உயிர்த்தொகை தொறும் நிறைந்து - தன்னைப் பிரிதலில்லா(து சார்ந்)த ஆன்மவர்க்கங்கடோறும் (விசேடமாகக்) கலந்து நின்று,—ஆனந்தந் தேக்குஞ் செயந்தி நன்னகர் - (அவ்வான்மவர்க்கங்களுக்கு) ஆனந்தத்தை நிரப்புகின்ற செயந்தியாகிய நல்ல நகரமானது,—அளக்கின் - (தன்பெருமையை ஆதரத்தோடு) ஆராயின் (அங்ஙனம் ஆராய்வார்க்கு),—மோக ஆகாமியந் தாக்கும் - மயக்கத்தால் வரும் ஆகாமிய வினையைக் கெடுக்கும்,—சஞ்சிதக்கட்டு நீக்கும - சஞ்சிதவினையையும் அகற்றும்;—என - என்றுதுணிந்து,—சிறந்தார்க்கு - (அதன்கட் பத்தி) சிறந்தவர்களுக்கு,—ஆக்கம் மேல் வரும் - (அருட்செல்வம் ஞானச்செல்வம் என்னுஞ்) செல்வங்கள் மேன்மேல் வரும்;—சனனமும் இல்லையாம் - (பின்னர்ப்) பிறப்பும் இல்லையாம். எ-று.

செயந்திபுரத்தீசரது செய்கையைச் செயந்திபுரத்தின் செய்கையாகக் கூறியதென்க. (அ)

தழைத்த கங்கையில் வாழ்திரி வேணிசங் கமத்தி
னுழைத்த நல்வினை செயந்திநன் னகரென வொருகாற்
குழைத்த வன்பினிற் கூறுமக் கதிக்கெதிர் கூறி
யழைக்க வேபதி னாறிலொன் றில்லைகா ணன்றே.

இ-ள். தழைத்த கங்கையில் வாழ் திரி வேணி சங்கமத்தின் உழைத்த நல்வினை - (தன்கட்படிந்தாரை) உய்வித்த கங்காநதியிலும் வாழ்விக்குங் கங்கையமுனைப்பொருத்திலும் (ஸ்நானஞ்செய்தலாற்) பெற்றுக்கொண்ட புண்ணியத்தை,—செயந்தி நன்னகர் என ஒருகாற் குழைத்த அன்பினிற் கூறும் அக்கதிக்கு எதிர்கூறி அழைக்க - செயந்திபுரம் (இருமையின்பத்தையும் எளிதிற் பயக்கும்) நல்ல நகரமாம் என்று ஒருதரம் (உள்ளத்துக்) கலந்த அன்போடு சொல்லு(தலாலாகு)ம் அப்பயனுக்கு ஒப்பாகச் சொல்லி வருவிக்க,—பதினாறிலொன்று இல்லை காண் - (அப்புண்ணியம் இப்பயனின்) பதினாறிலொருபங்கு(வரையினதாய்ச்சிற்றலு)ம் இல்லையாம்; கண்டுகொள். எ-று. (௯.)

வாச பேயமோ ராயிரம் வாம்பரி மகநூ
றூசி லாதுசெய் குநர்பெறு மருங்கதி யவைதாம்
வீசு தெண்டிரைச் செயந்திநன் னகர்வயின் மேவ
நேசம் வைத்தவர் தங்கள்பா னித்தமுந் தருமால்.

இ-ள். வாசபேயம் ஓராயிரம் - வாசபேயவேள்விகள் ஆயிரத்தையும்,—வாம்பரி மகம் நூறு - வாவுகின்ற குதிரை(கொண்டு செய்யும் அஸ்வமேத) வேள்விகள் நூற்றையும்,—ஆசு இலாது செய்குநர் பெறும் அருங்கதியவை - குற்றமில்லாது செய்பவர் அடையும் அருமையான பயன்களை,—வீசு தெண்டிரைச் செயந்தி நன்னகர் - (கடலால்) வீசப்படுந் தெளிவாகிய திரைகளையுடைய செயந்திமாநகரமானது,—வயின் மேவ நேசம் வைத்தவர் தங்கள்பால் நித்தமுந் தரும் - (தன் எல்லையாகிய) இடத்தில் வாழ அன்புவைத்தவர்களிடத்தில் (அங்ஙனம் வாழும்) நாடோறுந் தந்தருளும். எ-று. (௧0)

செயந்தி நன்னக ரிருந்தறந் தினைத்துணை செய்யின்
வியந்த முன்னுவா மதியென நாடொறும் விளங்கும்
பயந்த தீவினை பின்னுவா மதியெனப் பாரிற்
கயந்த ருங்கொலாம் யாதெனப் புகலுவன் கருத்தால்.

இ-ள். செயந்திநன்னகர் இருந்து தினைத்துணை அறஞ்செய்யின் - செயந்திமாபுரத்தில் வாழ்ந்துகொண்டு தினையளவு தருமத்தைச் செய்தாலும்,—வியந்த முன்னுவா மதியென நாடொறும் விளங்கும் - (அத்தருமம்) புகழப்பட்ட பூருவபக்கத்துச் சந்திரன்போல நாடோறும் (வளர்ந்து) விளங்கும்,—பயந்த தீவினை - (அங்கு வாழ்ந்து) ஈட்டிக்கொண்ட பாவம் (பனையளவேயாயினும்),—பின்னுவா மதியெனப் பாரிற் கயந்தரும் - அபரபக்கத்துச் சந்திரன்போல முறையானே அழிவை அடையும்,—யாது எனக் கருத்தாற் புகலுவன் - (இங்ஙனமாதற்குக் காரணம்) யாது என்று கருத்தினாற் சொல்வேன். எ-று.

முன்னுவா=உவாவின்முன். பின்னுவா=உவாவின்பின். உவா-பூரணை. பார்=முறை. கயம்=அழிவு. க்ஷய. (௧௪)

ருமமோமமா தானநற் றமஞ்சமம் வேள்விக்
ருமமந்திர மிவைதருங் கதிகளுஞ் செயந்தி
ரமி ருந்துளார் பெறுங்கதி யதற்கிணை புகலி
னுரிய கோடியி னொன்றிலை யெனமறை யுரைக்கும்.

இ-ள். தருமம் - தருமங்களாகிய,—ஓமம் மாதானம் நல் தமஞ் சமம் வேள்விக்கருமம் மந்திரம் இவை தருங் கதிகளும் - தேவயஞ்ஞமும் பெரிய கொடையும் நல்ல புறவிந்திரிய அடக்கமும் அகவிந்திரிய அடக்கமும் (ஐவகை) வேள்விச்செய்கையும் மந்திரசெபமும் ஆகிய இவைகள் தரும் பயன்களையும்,—செயந்திபுரம் இருந்துளார் பெறுங் கதியதற்கு இணை புகலின் - செயந்திபுரத்தின்கண்ணே வசித்தவர்கள் பெறும் பயனுக்கு ஒப்புக் கூறு(மாறு பு)கின்,—கோடியின் ஒன்று உரிய இலை-(இப்பயனின்) கோடியின் ஒருபாகத்துக்கும் (அப்பயன்கள் ஒப்பாதற்கு) உரியனவல்ல,—என மறை உரைக்கும் - என்று சுருதிகள் கூறும். எ-று. (௧௫)

ஆய நல்குர வாலத்தி யாசன மருந்தன்
மேய வன்பினாற் போயதி பானமே விரும்ப
றாய தாங்குர வன்மனை யார்பவஞ் சுருதி
மாயு மென்றிடுஞ் செயந்திநன் னகர்வதிந் தவர்க்கே.

இ-ள். சுருதி - உண்மை நூலானது,—செயந்திநன்னகர் வதிந்தவர்க்கு - செயந்திமாபுரத்தில் வாசஞ்செய்தவர்களுக்கு,—ஆய நல்குரவால் அத்தியாசனம் அருந்தல் - உண்டாகிய விருப்பத்தினால் (அளவின்) மிக்க போசனத்தைப் புசித்தல் (என்னும்பாவமும்),—மேய அன்பினாற் போய் அதி பானமே விரும்பல்-பொருந்திய அன்பினாற் (பானீயம் உள்ளவிடத்து அடிக்கடி) போய் மிகக் குடித்தலையே விரும்புதல் (என்னும் பாவமும்),—தூயதாங் குரவன் மனை ஆர் பவம் - சுத்தமாகிய குருவின் பன்னியைக் கலந்த பாவ(மு)ம் ஆகிய இவையெல்லாம்,—மாயும் என்றிடும் - (அச்செயந்தித்தலவாச விசேஷத்தால்) அழிந்துவிடும் என்று சொல்லும். எ-று. (௧௬)

ஈரு வாவினு மேவத ஞரம்பத் தெறிநீர்
வாரி யிற்படிந் தாறெழுத் தையுமன மதித்து
வீர வேற்றடக் கரத்தனைத் தரிசிக்கின் வெற்பி
னாரி பாகனுக் குரியவான் கயிலைநண் ணுவரால்.

இ-ள். ஈர் உவாவினும் - (அமாவாசை பூரணை என்னும்) இரண்டு உவாக்களிலும்,—வதனாரம்பத்து எறி நீர் வாரியிற் படிந்து - வதனாரம்பமென்னும் (திரை) வீசுகின்ற நீரையுடைய தீர்த்தத்திலே மூழ்கி,—ஆறெழுத்தையும் மனம் மதித்து - சடக்ஷரங்களையும் மனத்தினாலே தியானித்து,—வீர வேல் தடக் கரத்தனைத் தரிசிக்கின் - வீரம்பொருந்திய வேலைத்தாங்கிய பெருமையான திருக்கரத்தினையுடைய(குமாரபெருமா)னைத் தரிசனஞ்செய்தால் (அங்ஙனஞ் செய்தவர்),—வெற்பில் நாரி பாகனுக்கு உரிய வான் கயிலை நண்ணுவர் - (இமய)மலையில் வளர்ந்த (உமா) தேவியின் பாகத்தையுடைய(சிவபெருமா)னுக்கு உரிய பெருமையாகிய கயிலாசத்தை அடைவார். எ-று. (௧௭)

விலங்க தாயினு மாக்களே யெண்ணினும் விரிநீ
ரலங்கு சிந்துநன் னகர்வயி னுடலம்விட் டகன்றோர்
மலங்கு பாவவெங் குறும்பற மாய்த்துவாட் டிறலான்
குலங்க ளோடினி திருந்துவே ளன்பரிற் குழைவார்.

இ-ள். விலங்கது ஆயினும் மாக்களே என்னினும் விரி நீர் அலங்கு சிந்து நன்னகர் வயின் உடலம் விட்டு அகன்றோர் - மிருகசாதியேயாயினும் மனுடரேயாயினும் விரிந்த தீர்த்தங்கள் விளங்குகின்ற செயந்தியம்பதியில் உடம்பைவிட்டு நீங்கினவர்,—மலங்கு பாவ வெங் குறும்பு அற மாய்த்து - மயங்குகின்ற பாவமாகிய கொடுந்தீமையை இலதாக அழித்து,—வாட்டிறலான் குலங்களோடு இனிது இருந்து - வாளினைக்கொண்ட வீரவாகுவின் கூட்டத்தாரோடு இன்பமாக இருந்து,—வேளன்பரிற் குழைவார் - குகதாசர்களோடு கலப்பார் எ-று. (௧அ)

செல்லு மார்க்கங்க டவறுறச் செயந்திநன் னகரத்
தெல்லை சென்றுளார் யாவருங் குமரவே ளிருதாண்
மல்ல லஞ்சிறப் பெய்துவ ரெய்துவர் வாய்மைச்
சொல்லி தென்றனன் சுகனுக்கு வியாசனுந் தொல்லோன்.

இ-ள். செல்லும் மார்க்கங்கள் தவறுறச் செயந்தி நன்னகரத்து எல்லை சென்றுளார் யாவரும் - (மற்றும் ஒவ்வோரிடத்தைச் சுட்டித் தாம்) சென்ற வழிகள் தவறிவிடலும் (தெய்வவசத்தாற்) செயந்தியம்பதியின் எல்லையிற் சேர்ந்தவராகிய எவர்தாமும்,—குமரவேள் இரு தாள் மல்லற் சிறப்பு எய்துவர் எய்துவர் - குமாரசுவாமியினுடைய உபயபாதங்களையும் மாட்சிமையான சிறப்போடு சேருவர் சேருவர்,—இது வாய்மைச் சொல் - இது உண்மைச்சொல்லே,—என்றனன் சுகனுக்கு வியாசனுந் தொல்லோன் - என்று கூறியவன் சுகமுனிவனுக்கு வியாசமுனிவனாகிய முன்னோன் எ-று. (௧௯)

காசி காஞ்சிபொன் னம்பலங் காளத்தி கமலை
தேசு லாவன லக்கிரி செயந்திநன் னகர
மாசி லானைக்கா வண்புரு டோத்தமா நகர
மோசை மாக்கட லுடுத்தபா ரிடத்தினொன் பதினும்.

இ-ள். ஓசை மாக் கடல் உடுத்த பாரிடத்தின் - ஒலிபொருந்திய பெருமையாகிய சமுத்திரத்தாற் சூழப்பட்ட நிலவுலகத்தில் உள்ள,—காசி காஞ்சி... ... ...புருடோத்தமாநகரம்-காசி, காஞ்சி, சிதம்பரம், திருக்காளத்தி, திருவாரூர், ஒளிபொருந்திய அருணாசலம், செயந்திமாநகரம், குற்றமற்ற திருவானைக்கா, மாட்சிமையான புருடோத்தமாநகரம் என்கின்ற,—ஒன்பதினும் - (புண்ணியஸ்தலங்கள்) ஒன்பதினுள்ளும். எ-று.

ஒன்பதுள்ளும் (ஒன்றாகிய) அவ்வயின் பரம்பும் என அடுத்த செய்யுளில் இயைதல் காண்க. (௨௦)

அருங்கு ரோசமோ ரைந்துள வவ்வயி னடைந்து
சுருங்கு கூபமும் வாவியுங் குளனும்வான் சுருங்கா
திரங்கும் யாறுமாம் புண்ணிய தீர்த்தத்தி னிறையிற்
பரம்பு மந்நகர் தருங்கதி யாவரே பகர்வார்.

இ-ள். அரும் ஒரைந்து குரோசம் உள அவ்வயின் - அருமையான ஐந்து குரோசம்(என்னும் அளவினை)உடைய (செயந்தி என்னும்) அத்தலமானது,—அடைந்து சுருங்கு கூபமும் வாவியுங் குளனும் - (தலாந்தரங்களினின்றுவந்து தன்கட்)சார்ந்து (உருவஞ்) சுருங்கிய கிணறுகளும் வாவிகளுங் குளங்களும்,—வாள் சுருங்காது இரங்கும் யாறும் - பெருமையோடு சுருங்காது முழங்குகின்ற நதியும்,—ஆம் புண்ணிய தீர்த்தத்தின் இறையின் பரம்பும்-ஆகிய (சிறந்த) புண்ணியதீர்த்தத்தினாலும் (சிறந்த) மூர்த்தியினாலும் பிரசித்தியுடையதாம்;—அந்நகர் தருங்கதி பகர்வார் யாவர் - அச்செயந்திநகரம் அருளும்பயனைச் சொல்லவல்லவர் யாவர். எ-று. (உக)

அவையின் மிக்குறுஞ் செயந்திநன் னகரிடத் தடைந்த
புவனம் யாவையுங் கூப்பிடு மெல்லையிற் புகுந்து
தவவு டம்புவிட் டொழிகுநர் குமரசா ரூப
முவமை யின்றெனப் பெறுகுவ ரெனமறை யுரைக்கும்.

இ-ள். அவையின் மிக்குறுஞ் செயந்தி நன்னகர் இடத்து-அ(த்தலங்களெல்லா)வற்றினும் மேம்பட்டுள்ள செயந்தியம்பதியின்கண்ணே,—புவனம் யாவையும் புகுந்து கூப்பிடு மெல்லையில் அடைந்த-(அத்)தலங்களெல்லாம் வந்து (சுருங்கி) ஒருகுரோசவளவில் அடைந்துள்ளன,—தவ உடம்பு விட்டு ஒழிகுநர் - (அச்செயந்தியின்கண்ணே) தவத்தினையுடைய உடம்பினை விட்டு இறப்பவர்கள்,—குமரசாரூபம் உவமையின்றெனப் பெறுகுவர் - முருகபிரானது சாரூப்பியத்தை ஒப்பில்லாதபடி அடைவார்கள்,—என மறை உரைக்கும் - என்று சுருதி கூறும். எ-று. (உஉ)

அன்பு தித்திடச் செயந்திநன் னகர்வயி னடைந்து
தென்பு லத்திரோர்க் கருத்தியோ டூட்டிய சிராத்த
முன்பு ணர்த்திய கயைச்சிராத் தத்துமுக் கியத்தி
னின்பு டைச்சத மடங்கென வேதநின் றிசைக்கும்.

இ-ள். அன்பு உதித்திடச் செயந்திநன் னகர்வயின் அடைந்து - அன்பு தோன்றச் செயந்தியம்பதியில் அடைந்து,—தென்புலத்திரோர்க்கு அருத்தியோடு ஊட்டிய சிராத்தம்,—பிதிர்களுக்கு ஆதரத்தோடு அயிலுவித்(துச் செய்)த சிராத்தமானது,—முன் புணர்த்திய கயைச்சிராத்தத்து முக்கியத்தின் - (ஆன்றோர்களால்) முதன்மை புணர்த்தப்பட்ட கயாதீர்த்தத்திற் செய்யுஞ் சிராத்தத்தின் விசேடத்தினும்,—இன்புடைச் சதமடங்கு - இன்பத்தினையுடைய நூறுமடங்கு(விசேடமாம்),—என வேதம் நின்றிசைக்கும் - என்று சுருதிகள் நிலைபடக்கூறும். எ-று. (உ௩)

கடவு ளர்க்கரி தாகிய கந்தபுட் கரிணித்
தடம லம்புதெண் ணீர்படிந் தவ்விடைத் தயையி
னுடனி ருந்துதென் புலத்திரோர்க் கூட்டுக வுறதே
விடிகொண் மாவினாற் பிண்டமே யாயினு மிடுக.

இ-ள். கடவுளர்க்கு அரிதாகிய கந்தபுட்கரிணித் தடம் அலம்பு தெண்ணீர் படிந்து-தேவர்கட்கு அரியதான கந்தபுட்கரிணிவாவியின் ஒலிக்கின்ற தெளிவாகிய ஜலத்திலே முழுகி,—அவ்விடைத் தயையினுடன் இருந்து தென்புலத்திரோர்க்கு ஊட்டுக - அவ்விடத்திலே ஆதரத்துடனே இருந்து

பிதிரருக்கு (ச்சிராத்த உணவை) உண்பிக்க,—உறுதேல் இடிகொள் மாவினுற் பிண்டமேயாயினும் இடுக - அது கூடாதாயின் இடித்துக்கொள்ளப்பட்ட மாவினுற் பிண்டத்தையாவது இடுக. எ-று. (உச)

இல்லை யென்றிடி லெள்ளுடன் புனல்கையா லிறைக்க
வல்ல வம்பெறு தாயினு மாவின மருந்தப்
புல்ல தாயினும் போடுக விவ்வகைப் புணர்ப்பா
லல்லல் பெற்றிடு பிதிர்கள்வே தாவுல கடைவார்.

இ-ள். இல்லையென்றிடில் எள்ளுடன் புனல் கையால் இறைக்க - (பிண்டமிடுதற்கும் இயையு) இல்லையானல் எள்ளோடு ஜலத்தைக் கைகளால் இறைத்(தலாகிய தருப்பணத்தைச் செய்)துவிடுக,—வல்லவம் பெறுதாயினும் ஆவினம் அருந்தப் புல்லதாயினும் போடுக - (தருப்பணத்தின்) வலிமையும் பெறப்படாதாயின் பசுக்கூட்டங்கள் தின்னப் புல்லையாவது கொடுக்க,—இவ்வகைப் புணர்ப்பால் அல்லல் பெற்றிடு பிதிர்கள் வேதாவுலகு அடைவார் - (கந்தபுட்கரிணியின்மூழ்கிக்கரையிலிருந்து மேற்கூறியவற்றுளொன்றை இயன்றபடிசெய்தல் என்னும்) இப்படியான செய்கையினுல் (முன்னரே நரகத்தூத்)துன்பம்பெற்றிருந்தபிதிரர் பிரமலோகத்தை அடைவார். எ-று.

ஆயினும் என்பதன் உம்மை பிரித்து வல்லவம் என்பதனேடு கூட்டப்பட்டது. (உரு)

பிரம லோகத்து முன்புள பிதிர்களாம் பெரியோ
ருரிய முத்திபெற் றிருப்பரால் வரகுலத் துற்ரே
ரரிய புத்திர ரில்லரே யாயினு மநாத
மரண முற்றன லின்றியே கிடந்துமா யினுமே.

இ-ள். முன்பு பிரமலோகத்து உள பிதிர்களாம் பெரியோர் - (புண்ணியாந்தர வயத்தால்) முன்னமே பிரமலோகத்திலுள்ள பிதிர்களாகிய பெரியோர்கள்,—உரிய முத்திபெற்றிருப்பர் - (இங்ஙனந் தஞ்சந்ததியார் கந்தபுட்கரிணியில் ஆதரத்தோடு செய்த கிரியாவிசேடத்தினுலே தம்மைப் பந்தித்தமலங்)கழல முத்தியை அடைந்திருப்பார்,—வரகுலத்து உற்ரோர் - (தமது)மேன்மையானகுலத்தைச்சார்ந்தவ(ராகிய முன்னே)ர்,—அரிய புத்திரர் இல்லரே ஆயினும் - அருமையான புதல்வர்இல்லா(திறந்)தவரேயானுலும்,—அநாதமரணம் உற்று அனலின்றிக் கிடந்து மாயினும் - துணையிலிகளாய் இறத்தலையடைய (அவருடல்) சிவாக்கினியின்றிக் கிடந்து கெடினும். எ-று.

இவ்வெச்சங்கட்கு முடிக்குஞ் சொல்வருஞ் செய்யுளிற் பெறப்படும் ()

சிந்து தீர்த்தத்துக் கந்தபுட் கரிணியாந் தீர்த்தத்
துந்து மன்பொடு படிந்தெண்ணீ ரிறைத்துப வசிக்கி
லந்த முற்றவர் யாவரு மடற்களி றுகைக்கு
மிந்தி ரப்பதம் பெறுகுவ ரெனமறை யிசைக்கும்.

இ-ள். சிந்துதீர்த்தத்துக் கந்தபுட்கரிணியாந் தீர்த்தத்து - வதனரம்ப தீர்த்தத்திலாயினுங் கந்தபுட்கரிணியாகிய தீர்த்தத்திலாயினும்,—உந்தும் அன்பொடு படிந்து எண்ணீரிறைத்து உபவசிக்கில் - செலுத்துகின்ற அன்

போடு முழுகித் தருப்பித்து உபவாசஞ்செய்யின்,—அந்தமுற்றவர் யாவரும்- (மேற் சுட்டியபடி) இறந்தவரெல்லாரும்,—அடற் களிறு உகைக்கும் இந்திரப்பதம் பெறுகுவர்-வலிமையையுடைய (வெள்ளை)யானையில் (ஊர்ந்து) உலாவும் இந்திரனது பதத்தை அடைவார்,—என மறை இசைக்கும் - என்று சுருதிகள் கூறும். எ-று. (உஎ)

முத்தி நல்கிய கந்தபுட் கரிணிநீர் மூழ்கார்
பத்தி மைச்செய லாற்குமரேசனைப் பரவார்
நித்த நித்தமு மாறெழுத் துண்மையை நினையார்
சித்தி யற்றதென் புலத்துளோர் சிந்தையி னினையா.

இ-ள். முத்தி நல்கிய கந்தபுட்கரிணி நீர் மூழ்கார் - (தாம் முன்னரே பூமியில் வாழ்ந்த பொழுது) முத்தியைக் கொடுப்பதாகிய கந்தபுட்கரிணி தீர்த்தத்தில் முழுகாராய்,—பத்திமைச்செயலாற் குமரேசனைப் பரவார் - பத்திச்செய்கையினாற் குமாரசுவாமியைத்துதியாராயும்,—நித்தம் நித்தமும் ஆறெழுத்துண்மையை நினையார் - நாடோறுஞ் சடக்ஷர மெய்ப்பொருளைத் தியானியாதவராயும்,—சித்தி அற்ற தென்புலத்துளோர் - நற்பயன்பெறுதி இழந்த பிதிரர்கள்,—சிந்தையில் நினையா - (தமக்குவந்த மோசத்தை) மனத்தில் நினைத்து. எ-று.

"நினையா" என்னும் எச்சம் வரும் இரண்டாஞ் செய்யுளீற்றில் "நவில்வார்" என்பதனைக் கொண்டு முடிவது. (உஅ)

நமது தொல்குலத் துதித்தவ ரொருவரா னுலுங்
குமர நாயகன் செயந்திநன் னகரிடைக் குறுகி
யமரர் போற்றிய கந்தபுட் கரிணிநீ ராடிக்
கமையு டன்றில மிட்டெறி நீர்க்கடன் கழித்தால்.

இ-ள். நமது தொல் குலத்து உதித்தவர் ஒருவராஜனும்-நமது பழமையினையுடைய வமிசத்திலே (இப்பொழுது) பிறந்திருப்பவரில் ஒருவரே யாயினும்,—குமரநாயகன் செயந்திநன்னகரிடைக்குறுகி - குமாரசுவாமியினுடைய செயந்திபம்பதியின்கட்சேர்ந்து,—அமரர் போற்றிய கந்தபுட்கரிணி நீர் ஆடி-தேவர்களாலே துதிக்கப்பட்ட கந்தபுட்கரிணி தீர்த்தத்திலே முழுகி,—கமையுடன் திலம் இட்டு எறி நீக்கடன் கழித்தால் - பொறுமையுடனே எள்ளை இட்டுத் தருப்பிக்கும் நீக்கடனைச் செய்துவிட்டால்.எ-று.

கமை=க்ஷமை=பொறுமை. (உகூ)

யாமெ லாஞ்சுரர் நாட்டுள வின்னமு தருந்திக்
காமர் பெற்றித ழாயிரப் பொன்னலர் கமலப்
பூமி ஞரெதிர் புகுந்தடி வணங்கநேர் போந்து
நாம நீடய னவைக்கணெய் துவமென நவில்வார்.

இ-ள். யாமெலாஞ் சுரர்நாட்டுள இன்னமுது அருந்திக் காமர் பெற்று- நாமெல்லாம் விண்ணுலகிலுள்ள நல்ல அமிர்தத்தை உண்டு சிறப்பைப் பெற்று,—இதழாயிரப் பொன் அலர் கமலப் பூமினார் எதிர்புகுந்து அடி வணங்க நேர்போந்து - ஆயிரம் இதழ்களையுடைய அழகுவிரிந்த தாமரைமலரில் இருக்கும் பெண்கள் எதிர்கொண்டு பாதங்களை வணங்க நேரேபோய்,—

நாமம் நீடு அயன் அவைக்கண் எய்துவம் - புகழ்மிகுந்த பிரமதேவனது சபையின்கண் வாழ்வேமே,—என நவில்வார்-என்றுசொல்வார். எ-று. (௩௦)

நிரய முற்றுளார் தங்கள்வாண் முகத்தைநேர் நோக்கி
யுருமெ னத்தெழித் தழலெனச் சீறியுள் ளுடைந்து
கரத லம்புடைத் தந்தகன் முறுவலுங் கனிய
விரைவி னுலவர் தம்முட னிருந்திது விளம்பும்.

இ-ள். நிரயம் உற்றுளார் தங்கள் வாள் முகத்தை - நரகத்தில் இருந்தவர்களுடைய ஒளிபொருந்திய முகங்களை,—அந்தகன் நேர்நோக்கி-(மேற்சுட்டியபடி அவர்கள் பேசியவாற்றாற் செயந்திபுரத்தில் அவருள்ளம் பதிந்த குறிப்பை அறிந்த) இயம(னவ)ன் (வந்து) நேரேபார்த்து,—உரும் எனத்தெழித்து - இடியேறு போலப்பேரொலிசெய்து,—அழலெனச் சீறி-கனல்போலச் சினந்து,—உள் உடைந்து - மனம் நிலையழிந்து,—கரதலம் புடைத்து-கை கொட்டி,—முறுவலுங் கனிய-நகையுந் தோன்ற,—அவர் தம்முடன் இருந்து - அவரோடு இருந்து,—விரைவினுல் இது விளம்பும்-விரைவோடு இதனைக் கூறுவான். எ-று. (௩௧)

மோன மோடுபோய்க் கந்தபுட் கரிணிநீர் மூழ்கி
வான நாடர சளித்தவேள் சரணமே வணங்கி
ஞான கார ணசெயந்திநன் னகரநண் ணுமை
யீன மாஞ்சன னச்சுமை சுமந்ததென் னென்று.

இ-ள். மோனமோடு போய்க் கந்தபுட்கரிணி நீர் மூழ்கி - (மனமொரு வழிப்படுதலாலுளதாய) மௌனத்தோடு சென்று கந்தபுட்கரிணி தீர்த்தத்திலே முழுகி,—வானநாடு அரசு அளித்த வேள் சரணமே வணங்கி - விண்ணுலகத்தை இந்திரனுக்குக் கொடுத்த முருகக்கடவுளது திருவடிகளையே பணிந்து,—ஞான காரண செயந்தி நல் நகரம் நண்ணுமல் - ஞானத்துக்குக் காரணமாகிய செயந்தியம்பதியில் வசியாமல்,—ஈனமாஞ் சனனச் சுமை என்னென்று சுமந்தது - இழிவாகியபிறவிச்சுமையை எதற்கென்று (நீங்கள்) சுமந்தது. எ-று. (௩௨)

மோது தெண்டிரை நீர்வத ளுரம்ப மூழ்கச்
சீத நீர்க்கந்த புட்கரி ணியும்பரி சிக்கச்
சோதி வேற்குமரேசனைத் தெரிசிக்கத் தொன்னுண்
மாத வஞ்சிறி தியற்றினர் பெறுகுவர் மாதோ.

இ-ள். மோது தெண்டிரை வதளுரம்பநீர் மூழ்க - மோதுகின்ற தெளிவாகிய திரைகளையுடைய வதளுரம்பதீர்த்தத்து முழுகவும்,—சீத கந்தபுட்கரிணிநீர் பரிசிக்கவும் - குளிர்மையாகிய கந்தபுட்கரிணி தீர்த்தத்தைத் தீண்டவும்,—சோதி வேற்குமரேசனைத் தெரிசிக்க - ஒளிபொருந்திய வேலாயுதத்தையுடைய செயந்திபுரேசரை வணங்கவும்,—தொன்னுள் மாதவம் இயற்றினர் சிறிது பெறுகுவர் - முன்னுளிற் பெருந்தவஞ் செய்தவர்களே சிறிதே பெறுவார்கள். எ-று. (௩௩)

சிந்து நன்னக ரத்திலே பிறக்கினுஞ் சிறந்த
சிந்து நன்னக ரத்தையே தெரிசனஞ் செயினுஞ்

சிந்து நன்னக ரத்திலே யிறக்கினுந் தெய்வச்
சிந்து நன்னக ரெண்ணினு முத்திசேர்ந் திருப்பார்.

இ-ள். சிந்து நன்னகரத்திலே பிறக்கினும் - செயந்திமாநகரத்திலே தோன்றினும்,—சிறந்த சிந்து நன்னகரத்தையே தெரிசனஞ் செயினும் - விசேடித்த செயந்திமாநகரத்தையே தெரிசிப்பினும்,—சிந்து நன்னகரத்திலே இறக்கினும் - செயந்திமாநகரத்திலே மரிக்கினும்,—தெய்வச சிந்து நன்னகர் எண்ணினும் - திவ்வியமாகிய செயந்தி மாநகரத்தையே நினைப்பினும்,—முத்தி சேர்ந்து இருப்பார் - (அவை செய்தவர்) பரகதியை அடைந்து இருப்பார். எ-று. (௩௪)

உரைத்த நால்வகைச் செய்கையி னொன்றுபெற் றாலும்
வருத்த மின்றியே முத்திசென் றெய்துவர் வடிவேற்
கரத்த னாணையாற் பாரத கண்டத்திற் கதிக்கே
பரித்த வேழுநன் னகருள வவைபெயர் பகர்வாம்.

இ-ள். உரைத்த நால்வகைச் செய்கையின் ஒன்றுபெற்றாலும் - (மேலே)கூறிய நால்வகைச்செய்கைகளுள் ஒன்றினைப் பெற்றுக்கொண்டாலும்,—வடிவேற் கரத்தன் ஆணையால் வருத்தமின்றியே முத்தி சென்று எய்துவர் - (அங்ஙனம் பெற்றுக்கொண்டவர்) கூரிய வேற்படையைத் தாங்கிய திருக்கரத்தையுடைய (கடவுளி)னது ஆஞ்ஞையினாற் பிரயாசமின்றியே வீட்டிற் போய்ச் சேருவர்,—பாரத கண்டத்திற் கதிக்கே பரித்த ஏழு நல் நகர் உள - பாரதகண்டத்தின்கண்ணே முத்திக்காகவே அமைக்கப்பட்ட ஏழு புண்ணியத் தலங்கள் உள்ளன,—அவை பெயர் பகர்வாம் - அவற்றின் பெயர்களைச் சொல்லுவாம். எ-று. (௩௫)

திருவ யோத்திமா மதுரைமா யாபுரி தேவர்க்
குரிய காசிமெய்க் காஞ்சிபே ரவந்திவா னுரைக்க
விரிது வாரகை முத்தியை யளித்திடும் வேதப்
பரிதி வேலவ னுறைந்தருள் செயந்தியம் பதியே.

இ-ள். திரு அயோத்தி ... ... ... துவாரகை - (முத்தி கொடுக்குந் தலங்களென்று ஆன்றோரால் எடுத்துக் கூறப்பட்டனவாகிய) அழகிய அயோத்தி, பெரிய மதுரை, மாயாபுரி, தேவர்களுக்கும் உரிய காசி, மெய்ம்மையாகிய காஞ்சி, பெரிய அவந்தி, விண்ணுலகினருங் கூறுமாறு (புகழ்)விரிந்த துவாரகை என்னும் ஏழு தலங்கள் வழியானும்,—வேதப் பரிதி வேலவன் உறைந்தருள் செயந்தியம்பதியே முத்தியை அளித்திடும் - மறைவடிவாகிய ஒளியினையுடைய வேலாயுதக் கடவுள் இருந்தருளுகின்ற செயந்திமாநகரமே முத்தியைக் கொடுக்கும். எ-று.

"அவ்வேழு தலங்களுக்குஞ் சிவகலையைக் கொடுப்பவர் செயந்திபுரத்துக் குகதேவரே" யென்று ஆரிய செயந்தி மான்மியத்துக் கூறப்பட்டமையின் இச் செய்யுளுக்கு இவ்வாறு பொருளுரைக்கப் பட்டது. (௩௬)

எண்ணு தற்கரி தாகிய முத்திபெற் றிருக்க
நண்ணு வித்திடு மென்பது சொல்வதென் ஞானப்
புண்ணி யத்திருச் செயந்திமா புரம்புகா தவமாய்
மண்ண கத்தினிற் பாவகா ரியரென வதிந்தீர்.

இ-ள். ஞானப் புண்ணியத் திருச் செயந்திமாபுரம் - ஞானத்தைக் கொடுக்குஞ் சுத்தமாகிய ஸ்ரீ செயந்திமஹாபுரம்,—எண்ணுதற்கு அரிதாகிய முத்திபெற்று இருக்க நண்ணுவித்திடும என்பது சொல்வதென் - நினைத்தற்கு அரிதாகிய முத்தியையடைந்து இருக்கும்படி சேர்த்துவிடும் என்பதைச் சொல்வதென்னே?,—புநாது அவமாய் மண்ணகத்தினிற் பாவகாரியர் எனே வதிந்தீர் - (நரகவாசிகளே நீங்கள் அச்செயந்தியிற்) செல்லாது வீணாக விவ்வுலகத்திற் பாவமே பொருளாகக் கொண்டவர்களாய் ஏன் இருந்தீர்கள்! எ-று.

என்னே என்பது எனேயென விகாரப்பட்டு நின்றது. (௩௭)

என்று கூற்றுவ னிரயத்தார் தங்களுக் கிசைய
வொன்று மன்பினு லுரைத்தசொல் லவர்செவி யுறலாற்
கன்று மாநிர யத்தினை யிகந்துமேற் கதிக்கே
சென்று ளாரெனச் சுகனுக்கு வியாசன்செப் பினனால்.

இ-ள். என்று கூற்றுவன் நிரயத்தார்தங்களுக்கு இசைய ஒன்றும் அன்பினால் உரைத்த சொல் - இவ்வாறு இயமன் நரகத்திலுள்ளவர்களுக்கு (பாவநீக்கம்) இயையும்பொருட்டுப் பொருந்திய அன்பினேடுகூறியமொழிகள்,—அவர் செவி உறலால் - அவர்களுடைய காதுகள் வழியால் (உள்ளத்துப்) போதலால்,—கன்று மா நிரயத்தினை இகந்து மேற்கதிக்கே சென்றுளார் - (தாம்) வருந்திய பெரிய நரகத்தை நீங்கிச் சுவர்க்க கதிக்கே போயினர்,—என-என்று சொல்லி,—வியாசன் சுகனுக்குச் செப்பினன் - வியாதமுனிவன் சுகனுக்கு (மேலுங்) கூறினன். எ-று. (௩௮)

ஆதக லாற்சிந்து புரமெலா நகர்க்குமே லாமா
லோது மந்நகர்த் தீர்த்த மெத்தீர்த் தத்து முயர்ச்சி
மேத குஞ்சுரர் தங்களிற் குமரவேண் மேலாஞ்
சோதி வானவ னாமென நான்மறை துதிக்கும்.

இ-ள். ஆதலாற் சிந்துபுரம் எலா நகர்க்கும் மேலாம் - ஆகையாற் செயந்திநகரம் எல்லா நகரங்களினும் விசேடித்ததாம்,—ஓதும் அந்நகர்த் தீர்த்தம் எத்தீர்த்தத்தும் உயர்ச்சி - சொல்லப்படுகின்ற அந்நகரத்திலுள்ள தீர்த்தங்கள் மற்றெல்லாத் தீர்த்தங்களினும் விசேடமுடையன,—மேதகுஞ் சுரர்தங்களிற் குமரவேள் மேலாஞ் சோதி வானவன் ஆம் என நான்மறை துதிக்கும் - மேன்மையாகிய(எத்)தேவர்களினுங் குமாரசுவாமி மேன்மையயுடைய ஒளிவடிவாய கடவுளாம் என்று நான்குவேதங்களுந் துதிக்கும். எ-று. (௩௯)

பருவ நூறுமா கப்புனல் காசியிற் படியும்
பெருமை மாதவப் பதிசிந்து புரமெனப் பேசி
யொருத ரங்கந்த புட்கரி ணிப்புன லூடு
மருவி மூழ்குநர்க் கந்தமா தவக்கதி வழங்கும்.

இ-ள். மாதவப் பதி சிந்துபுரம் எனப் பேசி - பெருமையாகிய தவத்திற்குரிய நகரமாவது செயந்திபுரமே என்று கூறி,—மருவி ஒருதரங் கந்த புட்கரிணிப் புனலூடு மூழ்குநர்க்கு - (அங்கே) சென்று ஒருமுறை கந்த புட்கரிணி தீர்த்தத்தில் முழுகினவர்களுக்கு,—நூறு பருவம் மாகங் காசியிற்

புனல் படியும் பெருமை அந்த மா தவங் கதி வழங்கும் - நூறுவருஷத்து மாசிமாதங்களிலே காசியிற் கங்கையிலே முழுகும் பெருமையாகிய அந்தப் பெருந் தவத்தின் பயனை (இந்த ஒருதரமுழுக்கே) கொடுக்கும். எ-று. (௪௰)

பிறந்த நாண்முத லீறுறு மளவையும் பிரியா
துறைந்து தெய்வதப் பிரயாகையின் மாகமா டுநர்க்குஞ்
சிறந்த வான்றிரைக் கந்தபுட் கரிணியிற் றிளைத்து
நிறைந்த மூன்றுநா ளாடுநர்க் குங்கதி நிகர்க்கும்.

இ-ள். பிறந்தநாண்முதல் ஈறுறுமளவையுந் தெய்வதப்ரயாகையின் மாகம் பிரியாதுறைந்து ஆடுநர்க்கும் - பிறந்தகாலந் தொட்டு இறக்கும் வரையுந் திவ்வியமாகிய பிரயாகதீர்த்தத்திலே மாசிமாதங்களில் விலகாதிருந்து மூழ்குபவர்க்கும்,—நிறைந்த மூன்றுநாள் சிறந்த வான் திரைக் கந்தபுட் கரிணியில் திளைத்து ஆடுநர்க்கும் - பூரணமான மூன்று நாட்களிற் சிறந்த பெருமையான திரைகளையுடைய கந்தபுட்கரிணி தீர்த்தத்திலே (மனம்) அழுந்தி மூழ்குபவர்க்கும்,—கதி நிகர்க்கும் - (பெறப்படும்) பயன் சமனாகும். எ-று. (௪௧)

முன்னு வோருக்கு முன்னுவோர் தங்கண் முன்னாக
மன்னு வோருக்குந் தினந்தினம் படியுமா தவர்க்கு
நன்ன லந்தரு தீர்த்தங்க ளிருபத்து நான்குஞ்
சென்னி யாறுளார்க் கினியகா யத்திரிச் செல்வி.

இ-ள். முன்னுவோருக்கும் - (தம்மைச் சிரத்தையோடு) தியானிப்பவருக்கும்,—முன்னுவோர் தங்கண் முன்னாக மன்னுவோருக்கும் - (அங்ஙனந்) தியானிபவர்களின் முன்னிலையிற் சேர்பவர்களுக்கும்,—தினந்தினம் படியும் மாதவர்க்கும் - (தம்மிடத்தே) நாடோறும் முழுகும் பெருந்தவமுடையோர்க்கும்,—நன்னலந் தரு தீர்த்தங்கள் இருபத்துநான்கும் - நற்சுகத்தை (ஏற்றபெற்றி) அருளுகின்ற (அங்குள்ளனவாய) தீர்த்தங்கள் இருபத்து நான்கும்,—சென்னியாறுளார்க்கு இனிய காயத்திரிச்செல்வி - ஆறுமுகப் பிரானுக்கும் பிரீதிகரமாகிய காயத்திரி (மந்திரத்துத்) தேவதையின் மூர்த்திகளே)யாம். எ-று. (௪௨)

எழுத்தொ ராறுநான் கானவுஞ் சுரர்பணிந் தேத்தி
வழுத்து தாட்குமரேசமுன் புண்ணிய வடிவா
யழுத்து தீர்த்தமோ ரெழுத்ததா யாழிநீர்க் கயலின்
விழுத்த கும்பெயர் வேறுகொண் டிருத்தல்வேண் டினன்யான்.

என்று நின்றுகா யத்திரிச் செல்விவாக் கெடுத்துக்
குன்றெ றிந்தவே லாறுமா முகத்தன்முன் கூற
நன்று ளத்தொடு கூறினை நாமுள மகிழ்ந்தா
மன்ற நிற்குதி யென்னநின் றுண்மறை மாதா.

இ-ள். குன்று எறிந்த வேல் ஆறுமாமுகத்தன்முன் - (கிரௌஞ்ச) மலையைப் பிளந்த வேலையுடைய ஆறுமாமுக பெருமான் சந்நிதியிலே,—காயத்திரிச் செல்வி நின்று வாக்கெடுத்து - (ஆதி காலத்திற்) காயத்திரி

தேவி நின்று (துதி) வசனங்களைக் கூறி,—சுரர் பணிந்து ஏத்தி வழுத்து தாட் குமரேச - தேவர்கள் வணங்கித் துதித்துப் புகழுந் திருவடிகளையுடைய குமாரபெருமானே!,—எழுத்து ஒராறுநான்கானவும் - (என்கண்ணுள்ள) எழுத்துக்கள் இருபத்துநான்கும,—முன் புண்ணிய வடிவாய் ஒரெழுத்தது அழுத்து தீர்த்தமாய் - (உமது) சன்னிதியிலே புண்ணியரூபமாய் ஒ(வ்வோ)ரெழுத்து ஆழமாகிய (ஒவ்வொரு) தீர்த்தமாக,—ஆழிநீர்க்கு அயலின், விழுத்தகும் பெயர் வேறுகொண்டு இருத்தல் யான் வேண்டினன் - கடலினீருக்குப் பக்கத்திலே மாட்சிமை பொருந்திய நாமங்களைத் தனித்தனி கொண்டு இருத்தலை யான் விரும்பினேன்,—என்று கூற - என்று விண்ணப்பஞ் செய்ய,—நன்று உளதமொடு கூறினை நாம் உளம் மகிழ்ந்தாம் நிற்குதி என்ன - (அது கேட்டகடவுள் அக்காயத்திரிதேவியை நோக்கி,) நல்வார்த்தையை மனத்தோடு கூறினாய் ஈாம் மனமுவந்தாம் (அவ்வாறே) நிற்பாய் என்று கூற,—மறைமாதா நின்றாள் - காயத்திரிதேவி (அவ்வாறு தன்னெழுத்துக்கள் இருபத்து நான்கு தீர்த்தங்களாய்) நிற்கச் செய்தாள். எ-று.

ஆக என்பது ஆய் எனத் திரிந்துநின்றது. மறை மாதா=மந்திரத்தாய்= காயத்திரி மந்திரத்தின் தலைவி என்றபடி. நிற்பித்தாள் என்பது பிவ்விகுதி தொக, நின்றாள் என நின்றது. (௩௩-௩௪)

வே று.

கந்தன்முன் னுகந்த முகாரம்ப தீர்த்தங் களிற்றிளம் பிடியரு
டீர்த்தங், கொந்தலர்க் கமல வீட்டுளா டீர்த்தங் கூறருஞ் சித்தர்
தந் தீர்த்த, முந்திய திக்கு வேந்தர்தந் தீர்த்த முதியகா யத்தி
ரிதீர்த்த, மிந்திர பவனிக் கேதுவ தாகு மினியசா வித்திரி தீர்த்
தம்.

இ-ள். கந்தன் முன் உகந்த - முருகக்கடவுளின் சன்னிதானத்திலே உயர்ந்துள்ள(தீர்த்தங்களாவ)ன,—முகாரம்ப தீர்த்தம் - வதனாரம்ப தீர்த்தமும்,—அருள் களிற்றிளம்பிடி தீர்த்தம் - அருளினையுடைய தெய்வயானையம்மை தீர்த்தமும்,—கொந்து அலர்க் கமல வீட்டுளாள் தீர்த்தம் - கொத்தாகிய அலர்களையுடைய இலக்குமிதீர்த்தமும்,—கூறருஞ் சித்தர்தந் தீர்த்தம்- சொல்லுதற்கரிய சித்தர் தீர்த்தமும்,—முந்திய திக்கு வேந்தர்தந் தீர்த்தம்- முற்பட்ட திக்குப்பாலகர் தீர்த்தமும்,—முதிய காயத்திரி தீர்த்தம்-பழைய காயத்திரி தீர்த்தமும்,—இந்திர பவனிக்கு ஏதுவது ஆகும் இனிய சாவித்திரி தீர்த்தம் - தேவேந்திர உலாவுக்குக் காரணம் ஆகிய இனிய சாவித்திரி தீர்த்தமும். எ-று. (௩௫)

மேயவெண் கமலத் தரசிதன் றீர்த்தம் வெள்ளைவா ரணத்
தருந் தீர்த்தந், தூயமுச் சூலக் காரிதன் றீர்த்தந் தோமறு குறக்
கொடி தீர்த்த, மாய்விலா துயர்ந்த துர்க்கைதன் றீர்த்தம் வயங்
கொளி ஞானவான் றீர்த்தம், பாயொளி பரந்த சத்திய தீர்த்தம்
பகர்தருந் தருமத்தின் றீர்த்தம்.

இ-ள். மேய வெண்கமலத்தரசிதன் தீர்த்தம் - பொருந்திய சரசுவதி தீர்த்தமும்,—அரும் வெள்ளைவாரணத்துத் தீர்த்தம் - அருமையாகிய ஐராவத தீர்த்தமும்,—தூய முச்சூலக் காரிதன் தீர்த்தம்-சுத்தியாகிய முத்தலைச் சூலத்தையுடைய வைரவர தீர்த்தமும்,—தோமறு குறக்கொடி தீர்த்தம்- குற்றமற்ற வள்ளியம்மைதீர்த்தமும்,—மாய்விலாது உயர்ந்த துர்க்கைதன்

தீர்த்தம்-கேடின்றி உயர்ந்த துர்க்காதீர்த்தமும்,—வயங்கு ஒளிவான் ஞான தீர்த்தம் - விளங்கும் ஒளியையுடைய பெருமையான ஞானதீர்த்தமும்,—பாய் ஒளி பரந்த சத்தியதீர்த்தம் - பொருந்திய ஒளியினாற் பரந்த சத்திய தீர்த்தமும்,—பகர்தரும் தருமத்தின் தீர்த்தம் - சொல்லப்படுகின்ற தரும தீர்த்தமும். எ-று (௬௬)

முனிவர்க ளர்த்தந் தேவர்க ளர்த்த முயல்பவ நாசன தீர்த்
தங், கனியுமா னந்தக் கந்தபுட் கரிணி கம்பலை யருதவான் சேது,
நனிமுழக் கருத பத்தெனுங் கங்கை நான்மறைக் கந்தமா தனத்
தின், புனிதமாந் தீர்த்த மாதிரு தீர்த்தம் போற்றுதென் புலத்து
ளார் தீர்த்தம்.

இ-ள். முனிவர்களர்த்தம் - முனிவர் தீர்த்தமும்,—தேவர்களர்த்தம் - தேவர் தீர்த்தமும்,—முயல் பவநாசனதீர்த்தம் - (தன்கட்படிய யாரும்) முயலாநின்ற பவநாசனதீர்த்தமும்,—கனியும் ஆனந்தக் கந்தபுட் கரிணி-முதிருகின்ற இன்பத்தைத்தருங் கந்தபுட்கரிணிதீர்த்தமும்,—கம்பலை அருத வான் சேது - ஒலி ஒழியாத பெருமையாகிய சேது தீர்த்தமும்,—நனி முழக்கு அருத பத்தெனுங் கங்கை-மிக முழக்கம் ஒழியாத தசகங்காதீர்த்தமும்,—நான்மறைப் புனிதமாங் கந்தமாதனத்தின் தீர்த்தம் - சதுர்வேத அத்தியயனத்தினாற் சுத்தமான கந்தமாதன தீர்த்தமும்,—மாதிரு தீர்த்தம்-மாதிரு தீர்த்தமும்,—போற்று தென்புலத்துளார் தீர்த்தம்-துதிக்கப்படுகின்ற பிதிரர்தீர்த்தமும் (ஆகிய இருபத்துநான்குமே). எ-று.

"கந்தன்முன்னுகந்த" என்பது முதலிய மூன்று செய்யுட்களும் ஒரு தொடர் எனவும், "முகாரம்பதீர்த்தம்" முதலியனவாய் உண்மைதோகின்ற இருபத்துநான்கு எழுவாய்கட்கும் பயனிலையாவது "கந்தன்முன்னுகந்த" என்பதே எனவுங் கண்டுகொள்க. (௬௭)

வேறு.

அன்ன தீர்த்தமுந் தீர்த்தத்தின் மகிமையு மவண்போய்த்
துன்னி மூழ்குறு முறைமையு மம்முறைத் தொடர்பாற்
பன்னருஞ்சிறப் பெய்திய பான்மையும் பரிவாய்ச்
சொன்னலம்பெற வியாசன்முன் சொற்றவா சொல்வாம.

இ-ள். அன்னதீர்த்தமும்-அந்தத்தீர்த்தங்களையும்,—தீர்த்தத்தின் மகிமையும்-(அவ்வத்)தீர்த்தத்தின்பெருமைகளையும்,—அவண் போய்த் துன்னி மூழ்குறு முறைமையும் - அங்ஙனம் போய்ச் சேர்ந்து முழுகும் முறைமையினையும்,—அம்முறைத் தொடர்பால் எய்திய பன்னருஞ் சிறப்புப் பான்மையும் - அம்முறைமையின் உரிமையினாற் பெற்ற சொல்லுதற்கரிய சிறப்பின் இயல்புகளையும்,—வியாசன் முன் பரிவாய்ச் சொல் நலம் பெறச் சொற்றவா சொல்வாம் - வியாசமுனிவன் முன்னே அன்பாய்ச் சொற்சுவையினால் இன்பம் பெறப்படுமாறு கூறியபடியே கூறுவாம். எ-று (௬௮)

இந்த மாநிலத் துயர்ந்தவான் தீர்த்தங்கள் யாவும்
வந்து சிந்துநன் னகர்வயின் மரகத மயூரச்
சுந்த ரச்சுடர்ப் பரிதிவை வேலொடுந் தோன்றுங்
கந்த வேடிருக் கருணையாங் கதியளிப் பதுவே.

இ-ள். மாநிலத்து உயர்ந்த இந்த வான் தீர்த்தங்கள் யாவும் வந்து கதியளிப்பது - பெருமையையுடைய நிலவுலகத்தில் உயர்ந்த இந்தத் திவ்விய தீர்த்தங்களனைத்திலும் (அன்பர்கள் விதிப்படி ஆடுந்தோறும் அவர்க்கருளுமாறு) வந்து (அதிட்டித்து நின்று ஏற்றபெற்றி) பரகதி கொடுப்பது (யாதோ என்னில்),—சிந்து நன்னகர் வயின் மரகத மயூர சுந்தரசுடர்ப் பரிதி வைவேலொடுந் தோன்றுங் கந்தவேள் திருக்கருணையேயாம் - செயந்திமாநகரத்தின்கண்ணே பச்சைமயிலின்மேலே அழகிய ஒளிபொருந்திய கிரணத்தைவீசுகின்ற கூரிய வேலாயுதத்தோடுவிளங்குகின்ற கந்த சுவாமியாருடைய திருவருளேயாம்; (மற்றல்ல) எ-று

உலகத்துப் பலதிறத்தனவாயுள்ள நீர்நிலைகளுள்ளே உண்மைநூல்களால் எடுத்துக் கூறப்படும் நீர்நிலைகள் தீர்த்தங்களென வழங்கப்படுதலுந் தம்மைச்சேர்ந்தார்க்கு உறுதிபயப்பனவாதலுங் கடவுளினுடைய திருவருட் கலப்புப்பற்றியே என்பது இனிதுதோன்ற இங்ஙனம் கந்தவேடிருக்கருணையாங் கதியளிப்பதுவே என்றார். (சகூ)

அறந்திறம்பினோர் தங்கட்கு மறந்துளோர் தமக்கு
நிறைந்த தேவர்க்கு மூவர்க்கும் யாவர்க்கு நெறியா
லுறைந்த வாறுமா முகத்தவ னருளெலா மொன்றாய்ச்
சிறந்திருந்தது மாவதரைம்பா தீர்த்தம்.

இ-ள். மாவதரைம்பா தீர்த்தம் - பெரிய முகாரம்ப தீர்த்தமானது,— அறந்திறம்பினோர் தங்கட்கும் அறந்துளோர் தமக்கும் - தருமத்தின் வழுவினவருக்குந் தருமத்தினையுடையவருக்கும்,—நிறைந்த தேவர்க்கும் மூவர்க்கும் யாவர்க்கும் - (சிற்றினபமுதலாகிய செல்வத்தின்) நிறைவுடைய தேவர்களுக்கும் (பிரமா விட்டுணு உருத்திரன் என்னும்) மூவருக்கும் (மற்றை) எவருக்கும்,—நெறியால் உறைந்த ஆறுமாமுகத்தவன் - நீதி(யைநடத்துகை)யினோடு வீற்றிருந்த ஆறுமாமுகக்கடவுளினுடைய,— அருளெலாம் ஒன்றாய்ச் சிறந்திருந்தது - (அவ்வவர்பக்குவத்துக்கு ஏற்பச் செயற்பாலனவாகிய) கருணைகளெல்லாம (தன்கண்) வியாபித்தலையுடையதாய்ச் சிறந்து இருந்தது. எ-று

ஒன்றுதல் என்பது விகுதிகெட ஒன்று எனநின்றது ஒன்றுதல் கலத்தல்=வியாபித்தல (௬0)

எவ்வமில் கவுரி கங்கை யமுனைகாவிரி நீர்த்தோயை
கவ்வையோ டிரங்குந் தெண்ணீர்க் கவுசிகை விதஸ்தை யாற்றி
னவ்விடை படிந்துளோர்கள் அருமபெறலாக்க நல்குஞ்
செவ்விநான் மறைக்கு மேலாந் தேவகுஞ்சரமான் றீர்த்தம்.

இ-ள். செவ்வி நான் மறைக்கு மேலாந் தேவகுஞ்சரமான் றீர்த்தம் - அழகினையுடைய நான்குவேதங்களின் மேலாகிய தெய்வயானையம்மையின் தீர்த்தமானது,—எவ்வமில் கவுரி . . . விதஸ்தையாற்றின் அவ்விடை படிந்துளோர் அருமபெறல் ஆக்கம் நல்கும் - குற்றமற்ற கவுரியாறுங் கங்கையாறும் யமுனையாறுங் காவிரியாறும் நீரையுடைய சுரதோயையாறும் ஒலிமுழங்குகிற தெளிவாகிய நீரையுடைய கவுசிகையாறும் விதஸ்தையாறும் ஆகிய அந்த(த்தீர்த்த)இடங்களிலே ஸ்நானஞ்செய்தவர் பெறுவனவாகிய பெறுதற்கரிய சித்திகளை(த் தன்கண்மூழ்கினோர்க்கு)க் கொடுக்கும். எ-று

கரதோயை யென்பது தலைக்குறைந்து தோயை யெனநின்றது. (௫௧)

மாதவக் குமரி தோகை வந்தனை தூதபாவை
வேதநற் சுருதி துங்க பத்திரை விபாசை யூவை
காதலிற் பலகான் மூழ்குங் கதிதனைக் காட்டுந் தோட்டுச்
சீதளக் கமல வீட்டுத் திருமக ளர்த்த மாதோ.

இ-ள். தோட்டுச் சீதளக் கமல வீட்டுத் திருமகள் தீர்த்தம் - இதழ்களையுடைய குளிர்மைபொருந்திய தாமரைப்பூவாகிய ஆசனத்தையுடைய இலக்குமியின் தீர்த்தமானது,—மாதவக்குமரி ... ... ... காதலிற் பலகான் மூழ்குங் கதிதனைக் காட்டும் - பெரிய தவத்தினாற் சேருங் குமரி, தோகை, வந்தனை, தூதபாவை, வேதம், நல்லசுருதி, துங்கபத்திரை, விபாசை, யூவை (என்னுந்தீர்த்தங்)களில் அன்போடு பலதரம் முழுகுதலாலாகும் பயனை விளைவிக்கும். எ-று. (௫௨)

வாலுவா கினிவி வாதை வைகைதே வகிமெய்ஞ் ஞானங்
கோலிய கண்ண வேணி கோதைகண் டகையாந் தீர்த்த
நூலுள முறையின் மூழ்கி னோர்க்குள கதியைக் காட்டுஞ்
சீலமா மறைக்கு மேலாய்ச் சிறந்துள சித்தர் தீர்த்தம்.

இ-ள். சீலமா மறைக்கு மேலாய்ச் சிறந்துள சித்தர் தீர்த்தம் - குணத்தினையுடைய பெரிய சுருதியின் பரமா(ர்த்தமா)ய் வாய்ந்துள்ள சித்தர்தீர்த்தமானது,—வாலுவாகினி ... ... ... தீர்த்தம் நூலுள முறையின் மூழ்கினோர்க்கு உள கதியைக் காட்டும் - வாலுவாகினி, விவாதை, வைகை, தேவகி, மெய்யறிவைப்பயக்கும் அழகியகண்ணவேணி, கோதை, கண்டகை என்னுந் தீர்த்தங்களிலே நூல்களிற் சொல்லிய கிரமத்தால் ஸ்நானஞ் செய்தவர்கட்கு உள்ள பயனை விளைவிக்கும். எ-று. (௫௩)

தக்கதோ ருவதி பம்பை தாமதி சரயு நாதந்
தொக்கநீர்க் கம்பை தூர்க்கை சோபனை யிவற்றி னாடு
மிக்கவான் கதியை நல்கும் வேதத்தின் மரபாய் நின்று
திக்கெலாஞ் சிறந்து காக்குந் தேவர்க ளர்த்தந் தானே.

இ-ள். வேதத்தின் மரபாய்நின்று திக்கெலாஞ் சிறந்து காக்குந் தேவர்கள் தீர்த்தம் - சுருதியின் கிரமமாய் நின்று திக்குக்களெல்லாவற்றையுஞ் சிறக்கக் காக்குந் தேவர்க(ளாகிய திக்குப்பாலகர்க)ளுடைய தீர்த்தமானது,—தக்கதோருவதி ... ... ... இவற்றின் ஆடும் மிக்க வான் கதியை நல்கும் - தக்கதாகிய உவதி, பம்பை, தாமதி, சரயு, ஒலிசேர்ந்த நீரையுடைய கம்பை, தூர்க்கை, சோபனை (என்னுந் தீர்த்தங்களாகிய) இவைகளில் முழுகுதலாலாகிய மிக்க பெரிய பயனை விளைவிக்கும். எ-று. (௫௪)

திருமதை தெசானை வாய்ந்த நிருவிந்தை தரபி யாதிக்
கருமநா சனியி னாடுங் கதிதருங் கமல வீட்டி
னருமறைக் கடவுள் போற்று மாறுமா முகத்துச் செவ்வே
டிருமுனஞ் சிறந்த காயத் திரியெனுந் தீர்த்த மாதோ.

இ-ள். கமல வீட்டின் அருமறைக் கடவுள் போற்றும் ஆறுமாமுகத் தூச்செவ்வேள் திருமுனம - தாமரையாசனத்தையுடைய அரிய வேதத் தலைவரான பிரமதேவராலே துதிக்கப்படும் ஆறுமாமுகங்களையுடைய முருகக்கடவுளினது ஸ்ரீ சன்னிதானத்திலே,—சிறந்த காயத்திரி யெனுந் தீர்த்தம் - விளங்கிய காயத்திரி என்னுந் தீர்த்தமானது,—விருமதை . . கதி தரும் - விருமதை, தெசானை, சிறந்த விருவிந்தை, தாபி, முதன்மையான கருமநாசனி(என்பவைக)ளில் முழுகுதலாலாகும் பயனை அருளும். எ-று. (௫௫)

பொன்மய முகரி கோதா வரிபெண்ணை பொருவில் சோதி
மின்மணி தரங்கந் தூற்றும் வேத்திர வதியி னாடு
நன்மைய தனைத்துங் காட்டு நான்மறை முடிவின் மேலாஞ்
சின்மயத் துருவாஞ் சாவித் திரியெனுந் தீர்த்தந் தானே.

இ-ள். நான் மறை முடிவின் மேலாஞ் சின்மயத் துருவாஞ் சாவித்திரி யெனுந் தீர்த்தம் - சதுர்வேதாந்தத்தினும் மேற்பட்ட ஞானரூபி(யாகிய கந்தசுவாமி)யினதுருபமாகிய சாவித்திரியென்னுந்தீர்த்தமானது,—பொன்மயமுகரி . . . . நன்மைய தனைத்துங் காட்டும் - பொன்மயமுகரி, கோதாவரி, பெண்ணை, ஒப்பற்றசோதி, ஒளிபொருந்திய இரத்தினங்களைத் திரைகள் தூற்றுகின்ற வேத்திரவதி (என்பவை)களில் முழுகுதலாலாகும் நற்பயன்களையெல்லாம் அருளும். எ-று. (௫௬)

விதிசைவை தரணி மந்தா கினிசிலா சலிவே வேக
வதிவிரே பதிப லாகை வழங்குவான் கதிக ளெல்லாந்
துதியுட னளிக்கு ஞானச் சுவேதப்பூப் போலென் னெஞ்சப்
பதியினீங் காது மேவும் பாரதி தீர்த்த மன்றே.

இ-ள். ஞானச் சுவேதப் பூப்போல் என் நெஞ்சப் பதியின் நீங்காது மேவும் பாரதி தீர்த்தம் - ஞானம்(என்னுந் தேன்)பொருந்திய வெண்(டாமரை)மலர்போன்ற எனது மனமாகிய கோயிலின் அகலாத (முருகக் கடவுளாகிய பதிவஸ்)து(விசேடவியாத்தியைப்)பொருந்தியுள்ள சரசுவதி தீர்த்தமானது,—விதிசை . . . . வழங்கு வான் கதிகளெல்லாந் துதியுடன் அளிக்கும - விதிசை, வைதரணி, மந்தாகினி, சிலாசலி, வேகவதி, விரேபதி, பலாகை(என்னுமிவை)கள் அருளும் பெரும்பயன்களையெல்லாம் புகழ்ச்சியோடு அருளும். எ-று.

நீங்காது என்பது வினையாலணையும் பெயர். (௫௭)

சந்திர பதாகை பன்னு சையுலோ கிதைவி பாசை
சிந்துவா குதையின் மூழ்குந் திறன்வழா தென்று நல்கு
முந்துநான் முகனைக் குட்டு மோதிரச் செங்கையான் முன்
னந்தர நாதற் றாங்கை ராவத தீர்த்த மம்மா.

இ-ள். முந்து நான் முகனைக் குட்டு மோதிரச் செங்கையான் முன் - முன்னே பிரமதேவனைக் குட்டிய மோதிரத்தையணிந்த செம்மையாகிய திருக்கரத்தையுடைய (எம்பெருமா)னது சன்னிதியிலே(உள்ள),—அந்தர நாதன் தாங்கு ஐராவத தீர்த்தம் - இந்திரனைச்சுமந்த ஐராவதயானையின் தீர்த்தமானது,—சந்திரபதாகை . . . . . . . மூழ்குந் திறன் வழாது என்றும்

நல்கும் - சந்திரபதாகை, பன்னூசை, உமேலாகினை, விபாசை, சிந்து, வாகுதை (என்பவை)களிலே முழுகுதலாலாகும்பயனைத் தப்பாமல் எப்பொழுதும் அருளும். எ-று. (௫௮)

சரசோதி சோணை யாற்றிற் றண்புனன் முத்தங் காலும்
பொருனைபூங் கம்பை யாற்றிற் புகுந்துளோர்க் களிக்குங் காட்சி
விரைவுட னுதவுங் கஞ்ச வீட்டுளா னகந்தை நீக்கி
யொருதலைக் கபால மேந்து மொருவன்மா தீர்த்த மாதோ.

இ-ள். கஞ்ச வீட்டுளான் அகந்தை நீக்கி ஒருதலைக் கபாலம் ஏந்தும் ஒருவன் மாதீர்த்தம் - தாமரையாசனத்திலுள்ள (பிரமதே)வனது செருக்கை நீக்கி (அவனது)ஒருதலையின் ஓட்டைத்தாங்கிய ஒருவ(னாகிய வைரவக் கடவுளி)னது பெரிய தீர்த்தமானது,—சரசோதி........புகுந்துளோர்க்கு அளிக்குங் காட்சி விரைவுடனுதவும் - சரசோதியாற்றிலுஞ் சோணையாற்றிலுங் குளிர்மையாகிய நீர்பொருந்திய முத்துக்களைக்காலுகின்ற பொருனையாற்றிலும் பொலிவாகிய கம்பையாற்றிலுஞ்சோந்தவர்களுக்கு (அவைகள்) கொடுக்கும் முத்தியை விரைந்து அருளும். எ-று. (௫௯)

அம்பிகைத் தலங்கண் மூன்று மருள்பொழி கண்ணின் பேராய்ப்
பம்பிய தலமோர் மூன்றும் பரவினர்க் குரிய ஞான
நம்புற வளிக்கும் வேற்கை நாயகன் புயமீ ராறுங்
கொம்பினிற் படரு மானின் குறக்கொடி தீர்த்த மன்றே.

இ-ள். வேற்கை நாயகன் ஈராறு புயமாங் கொம்பினிற் படரும் - சத்தியத்தக்கடவுளினுடைய பன்னிரண்டு புயங்களாகிய கொம்புகளில் (உலாவுதலாகிய) படர்தலைச்செய்கின்ற,—மானின் குறக்கொடி தீர்த்தம் - மான் பெற்ற (வள்ளியம்மையாகிய) குறக்கொடியினது தீர்த்தமானது,—அம்பிகைத் தலங்கள் மூன்றும் அருள்பொழி கண்ணின் பேராய்ப் பம்பிய தலம் ஓர் மூன்றும் - உமாதேவியாருடைய திருக்கோயில்கண் மூன்றும் அருளைப்பொழிகின்ற திருக்கண்ணின் பெயராகிய அக்ஷி என்பதை உடையனவாய் முறையே விசாலாக்ஷி கோயில் காமாக்ஷி கோயில் மீனாட்சி கோயில் என்)ப் பிரசித்திபெற்றுள்ள(னவாகக்கொண்ட காசி காஞ்சி மதுரை என்னும் புண்ணிய)ஸ்தலங் மூன்றிலும்,—பரவினர்க்கு உரிய ஞானம் அளிக்கும் - (சென்று) வழிபட்டவர்களுக்கு உரிமையான முத்தியை அருளும்,—நம்புற - இதனை நம்பிக்கொள்க. எ-று.

குறக்கொடி - குறவரால் வளர்க்கப்பட்ட கொடிபோல்வாள். ஞானம் என்பது ஆகுபெயராய் ஞானத்தாற் சாதிக்கப்படுவதாய முத்தியை உணர்த்தி நின்றது. மேலைத் திருவிருத்தத்துக் காட்சி என்றதும் அது. (௬௦)

வேறு.

இகத்தி லேசெய் பிடும்பை நீக்கியே, மகத்து வப்பரம் வழங்கு மாறுமா, முகத்தன் முன்னரே முழங்கிக் காட்டி வான், சுகத்தை யீந்திடுந் துர்க்கை தீர்த்தமே.

இ-ள். ஆறுமாமுகத்தன் முன்னர் முழங்கிக் காட்டி வான் சுகத்தை ஈந்திடுந் துர்க்கை தீர்த்தம் - ஆறுமாமுகக்கடவுளின் சன்னிதியிலே பேரொலிசெய்து (தன்னைக்)காட்டி (அவ்வொலியினால் யார்க்கும்) பேரின்பத்

தைக்கொடுக்குந் துர்க்கைதீர்த்தமானது,—இகத்திலே செயும் இடும்பை நீக்கி மகத்துவப் பரம் வழங்கும் - (தன்கண்மூழ்கினோர்க்கு) இம்மையிலே (முன்வினை)செய்தலாலாய துன்பங்களைநீக்கிப் பெருமையான முத்தியைக் கொடுக்கும். எ-று. (௬௧)

பரவு வார்க்குமுட் பரவ நெஞ்சகங், கருது வார்க்குநற் கதியைக் காட்டுமாற், சுரர்வ ணங்குதாட் டோகை யான்முனை, நரலை வாய்த்திரு ஞான தீர்த்தமே.

இ-ள். சுரர் வணங்கு தாள் தோகையான் முனம் நரலை வாய்த் திரு ஞான தீர்த்தம் - தேவர்கள் வணங்கும் பாதங்களையுடைய மயில்வாகனக் கடவுளின் சந்நிதியிற் சமுத்திரக்கரையிலுள்ள அழகிய ஞானதீர்த்தமானது,—உள் பரவுவார்க்கும் பரவ நெஞ்சகங் கருதுவார்க்கும் நற்கதியைக் காட்டும் - தன்னுள்ளே (படிந்து) துதிப்பவர்களுக்கும் அவ்வாறு துதிக்க மனத்தினகத்து நினைப்பவர்களுக்கும் நற்பயனை விளைவிக்கும். எ-று. (௬௨)

அல்லல் யாவையு மகற்றி நீக்கருந், தொல்லை யூழறத் தொலைத்து வேதநாற், கல்வி காட்டிச்செங் கமலத் தாளருட், செல்வங் காட்டுஞ்சத் தியத்தின் றீர்த்தமே.

இ-ள். சத்தியத்து இன் தீர்த்தம் - சத்தியமாகிய இனிய தீர்த்தமானது,—அல்லல் யாவையும் அகற்றி - (தன்கண் முழுகுபவருக்கு) துன்பங்கள் எல்லாவற்றையும் நீக்கி,—நீக்கருந் தொல்லை ஊழ் அறத் தொலைத்து - அகற்றுதல்கூடாத பழைய ஊழை முற்றாக அகற்றி,—வேதநாற் கல்வி காட்டி,—வைதிகசாத்திரஞானத்தை(க் குருமுகத்தால்) உணர்த்தி,—செங் கமலத் தாள் அருட் செல்வங் காட்டும் - (கடவுளினுடைய) செந்தாமரை மலர்போலுந் திருவடிகளின் திருவருட்செல்வத்தை விளக்கும். எ-று. ()

தொடர்ந்த மும்மலத் துரிச நீக்குவா, னடங்க லும்படிந் தாடி னோர்க்குறுந், திடம்பெ றத்தருஞ் செயந்தி யம்பதித், தடங்கொள் வாரிவாய்த் தரும தீர்த்தமே.

இ-ள். செயந்தியம்பதித் தடங்கொள் வாரிவாய்த் தருமதீர்த்தம் - செயந்திபுரநகரத்தின்கண்ணே பெருமைபொருந்திய ஜலத்துக்கிடமாகிய தருமதீர்த்தமானது,—தொடர்ந்த மும்மலத் துரிச நீக்குவான் அடங்கலும் படிந்து ஆடினோர்க்கு உறுந் திடம் பெறத் தரும் - பந்தித்த மும்மலக் குற்றங்களை நீக்கும்பொருட்டு(ப் பிறதீர்த்தங்கள்) எல்லாவற்றிலும் (அங்கங்குச் சிலசிலகாலந்) தங்கி ஸ்நானஞ்செய்தவர்களுக்கு எய்தும் உறுதிப்பயனை(த் தன்கண்மூழ்கினோர் எளிதின்) அடையும்படி அருளும். எ-று. (௬௪)

இருவி னைத்தொட ரிரும்பு தேய்த்திடற், கரமெ னச்சிறந் தாறு மாமுகக், குருப ரற்குமுன் குலவிக் காட்டுறான், முரற ரும்பல முனிவர் தீர்த்தமே.

இ-ள். முனிவர் தீர்த்தம் - முனிவர் தீர்த்தமானது,—இரு வினைத் தொடர் இரும்பு தேய்த்திடற்கு அரமெனச் சிறந்து - (தன்கண் மூழ்கினவருடைய) இருவகைக் கருமபந்தமாகிய இரும்பைக் குறைத்தழித்தற்கு

(வலிய) அரம்போலச் சிறந்து,—ஆறுமாமுகக் குருபரற்கு முன் குலவி நூல் முரறரும் பலங் காட்டும் - (அவர்கள்) ஆறுதிருமுகங்களையுடைய பரமகுருவின் முன்னிலையிற் பொருந்தி(த் திருவருள்பெற்)று உண்மைநூல்களை ஓதுதலாகிய பயனை (அவர்க்கு) விளைக்கும். எ-று.

முரலுதல் - ஒலித்தல். இங்கே கற்றலை உணர்த்தியது. (கூ௩)

காம மேமுத லாறுங் காய்ந்தநற், சோம சேகரச் சுருதி யான்பதப், பூமலர்க்குளாய்ப் புகுத்து ஞானத்தின், சேம மாம் பலத் தேவர் தீர்த்தமே.

இ-ள். ஞானத்தின் சேமமாம் பலத் தேவர் தீர்த்தம் - ஞானத்தின் அடக்கமாகும் வலிமையினையுடைய தேவர்தீர்த்தமானது,—காமமே முதல் ஆறுங் காய்ந்த நற் சோமசேகரச் சுருதியான்பதப் பூமலர்க்கு உள் ஆய்ப் புகுத்தும் - காமம் முதலிய ஆறையும் ஒழித்த நல்ல சந்திரசூடராகிய வேத நாயகருடைய திருவடிகளென்னும் பொலிந்த மலர்களின் உள்ளாக(த் தன்கண்மூழ்கினோரை)ப் பிரவேசிப்பிக்கும். எ-று. (கூகூ)

கோப மாய்த்தவக் கோதி லார்சொலுஞ், சாபம் யாவுக்குந் தாப மாகுமே, நீப மாலையா னிறைந்த சன்னிதிப், பாவ நாச மாய்ப் பரம்பு தீர்த்தமே.

இ-ள். நீபமாலையான் நிறைந்த சன்னிதிப் பாவநாசமாய்ப் பரம்பு தீர்த்தம்-கடப்பமலர்மாலையையுடைய (முருகக்கடவுளி)னது (அருள்)நிரம்பிய திருமுன்னே பாவநாசம் எனப்(பெயருடையதாய்ப்) பிரசித்திபெற்ற தீர்த்தமானது,—தவக் கோதிலார் கோபமாய்ச் சொலுந் சாபம் யாவுக்குந் தாபம் ஆகும் - தவத்தினையுடைய குற்றமற்ற(முனி)வர்கள் (யாதானு மொவ்வொருகாரணம்பற்றிக்) கோபமுடையராய்ச் சொல்லிய சாபங்கள் யாவற்றையுங் கெடுத்தற்குங் காட்டக்கினிபோலாகும் எ-று. (கூஎ)

ஈட்டுந் தீவினை யிலக்க மாகவே, மூட்டுஞ் சஞ்சித முடித்து மோலிநீர், சூட்டு வான்பதஞ் சூட்ட மேற்கதி, காட்டுங் கந்தபுட் கரிணி யானதே.

இ-ள். கந்தபுட்கரிணியானது - கந்தபுட்கரிணிதீர்த்தமானது,—இலக்கமாக ஈட்டுந் தீவினை மூட்டுஞ் சஞ்சிதம் முடித்து - (தன்கண் மூழ்குவார்க்கு) அநேகமாகச் சம்பாதிக்கப்படும் (ஆகாமியமான) தீவினைகளையும், (முன் சம்பாதிக்கப்பட்டிருந்து காலக்கிரமத்திற் பயனை)மூட்டுகின்ற சஞ்சிதவினையையுங் கெடுத்து,—மோலி நீர் சூட்டுவான் பதஞ் சூட்ட மேற்கதி காட்டும் - முடியின்கண்ணே நதியையணிந்த(பரசி)வனது திருவடிகளை (அவர்தாம்) உச்சிமேற்கொள்ளும்வண்ணம் பரகதியை விளைவிக்கும். எ-று. (கூ௮)

வையம் யாவுக்கு மலினந் தீர்க்கவே, ஐயன் பாதமா மம்பு யத்துணை, கையி னெல்லி போற் காட்டு மாதவச், செய்யு ளாய்வருஞ் சேது தீர்த்தமே.

இ-ள். மாதவச் செய்யுள் ஆய்வருஞ் சேது தீர்த்தம் - முனிவர்களுடையபாடல்களினால் ஆராயப்படுஞ் சேதுதீர்த்தமானது,—வையம் யாவுக்

கும் மலினைத் தீர்த்த வேல் - (துட்டநிக்கிரகத்திலேயே) உலகமனைத்தினுக்குங் குற்றத்தை நீக்கிய வேற்படையினையுடைய,—ஐயன் பாதமாம் அம்புயத்துணை கையில் நெல்லி போற் காட்டும் - சுவாமியினது பாதங்களாகிய தாமரைமலர்களிரண்டையுங் கரதலாமலகம்போலக் காண்பிக்கும். எ-று.

முத்திக் கின்பமூ லிகையு மாய்த்தரி, சித்துப் போற்றுவார் சென்ன மாகுமா, வத்துக் காக்கவா னமுத மாகுமாற், பத்துப் பேரினாற் பரம்பு கங்கையே.

இ-ள். பத்துப் பேரினாற் பரம்பு கங்கை - பத்து என்னும் பெயரினாற் (புகழ்)பரவிய(தச)கங்காதீர்த்தமானது,—முத்திக்கு இன்பமூலிகையுமாய்-(தன்னை மேற்கொண்டார்) முத்தியிற்சேர்தற்குச் சுகமான மூலியுமாய்,—தரிசித்துப் போற்றுவார் சென்னமாகும் ஆவத்துக் காக்க வானமுதம் ஆகும் - (தன்னைத்) தரிசனஞ்செய்து துதிப்பவரைப் பிறவியாகிய ஆபத்தினின்று இரட்சித்தற்கு (வலிய) தேவாமிர்தமும் ஆகும். எ-று. (௭௦)

இந்த்ர சாலமா யெடுத்து மானிடர்க், கந்த மாதியில் லாத வாதியான், சந்த நாண்மலர்ச் சரணங் காட்டுமாற், கந்த மாதனக் கருணைத் தீர்த்தமே.

இ-ள். கருணைக் கந்தமாதன தீர்த்தம் - (முருகக்கடவுளது) திருவருளுக்கிடமாகிய கந்தமாதனதீர்த்தமானது,—மானிடர்க்கு - (தன்கண்மூழ்கிய) மனுடர்களுக்கு,—அந்தம் ஆதி இல்லாத ஆதியான் சந்த நாண்மலர்ச் சரணம் - ஒடுக்கமுந் தோற்றமும் இல்லாத முதற்கடவுளினுடைய அழகு பொருந்திய புதுமலர்கள்போலுந் திருவடிகளை,—இந்த்ரசாலமாய் எடுத்துக் காட்டும் - இந்திரசாலவித்தை(செய்வது)போலாகித் (தன்மாட்டுத்) தரித்துக்காட்டும். எ-று.

முழுகினஅப்பொழுதே ஆண்டுக் கடவுள் காட்சிகொடுத்தல் அத்தியற்புதகரமாதலின் இந்த்ரசாலமாய் என்றார். (௭௧)

கோதி லாததங் குலத்து ளோர்கதிக், கேது வாகநீ ரெள்ளி றைத்திடு, நீதி யார்க்கெலா நெறியைக் காட்டுமா, மாதிர் தீர்த்தமாய் வயங்குந் தண்புனல்.

இ-ள் மாதிர்தீர்த்தமாய் வயங்குந் தண்புனல் - மாதிருதீர்த்தம் எனப்படுவதாய் விளங்குங் குளிர்ந்த தீர்த்தமானது,—கோதிலாத தங்குலத்துளோர் கதிக்கு ஏதுவாக - குற்றமற்ற தமது (முற்)குலத்தவரது நற்பயனுக்குக் காரணமாகும்படி,—நீரெள்ளிறைத்திடு நீதியார்க்கெலாம் நெறியைக் காட்டும் - தருப்பணஞ்செய்யும் முறைமையினையுடையார் யாவருக்கும் (அவர்கருதிய) பயனை விளைவிக்கும். எ-று. (௭௨)

ஒருத ரம்படிந் துள்ளங் கையினீர், மருவு மெள்ளுடன் மறித்து விட்டுளார், இருமை யுஞ்சிறந் திருக்க வீசன்று, மருளுந் தென்புலத் தார்க டீர்த்தமே.

இ-ள். தென்புலத்தார்கடீர்த்தம் - பிதிரர்தீர்த்தமானது,—ஒருதரம் படிந்து - (தன்மாட்டு) ஒருக்கால் ஸ்நானஞ்செய்து,—உள்ளங்கையின் மரு

1446



னும் எள்ளுடன் நீர் மறித்து விட்டுளார் - உள்ளங்கைகளிற் பொருந்திய எள்ளினோடு ஜலத்தை(க் கைகளை)மடக்கி(த் தருப்பித்து)விட்டவர்கள்,— இருமையுஞ் சிறந்திருக்க ஈசன்றாள் அருளும் - இம்மையினும் மறுமையினும் மேம்பட்டுவாழுமாறு கடவுளினது திருவடிகளை (அவர்க்கு)க் கொடுக்கும். எ-று. (எரு)

நாட்டு தீர்த்தமோ ராறு நான்கையும், பாட்டி னூற்றினம்
பகர மூழ்கநீ, டேட்டி னாட்டிக்கொண் டெழுதிப் பூசிக்க, மூட்டு
வார்க்குமெய்க் கதியை மூட்டுமே.

இ-ள். நாட்டு தீர்த்தம் ஒராறு நான்கையும் - (மேலே) காட்டப்பட்ட தீர்த்தங்கள் இருபத்துநான்கையும்,—பாட்டினால் தினம் பகர - பாட்டுக்களால் நாடோறும் ஓதவும்,—மூழ்க - (அடைந்து) படியவும்,—நீடு ஏட்டில் எழுதி நாட்டிக்கொண்டு பூசிக்க - உயர்ந்த ஏட்டில் எழுதிப் பிரதிட்டை செய்துகொண்டு (கிரமமாக) அருச்சிக்கவும்,—மூட்டுவார்க்கும் - (பிறரை) ஏவிவிடுபவர்களுக்கும்,—மெய்க் கதியை மூட்டும் - (அவற்றின் விசேடவியாத்தியுற்றுநின்ற குமரபெருமானே) உறுதிப்பயனைப் பெறுவிப்பார். எ-று. (எசு)

செயந்திபுர வைபவமுரைத்த அத்தியாயம்
முற்றிற்று.

ஆக திருவிருத்தம் கஎஉ.

## ச-வது திருவவதார அத்தியாயம்.

சுரும்ப ரின்னிசை முரன்றுபண் பாடுதண் டுளவக்
கரும்பு யற்படி வத்திருச் செங்கணான் கனகத்
தரும்பி தழ்க்கம லாசனத் தண்ணல்வா னரசு
விரும்பு வச்சிர பாணிமற் றுள்ளவான் விபுதர்.

இ-ள். சுரும்பர் இன்னிசைப் பண் முரன்று பாடு தண் துளவக் கரும் புயற் படிவத் திருச் செங்கணான் - வண்டுகள் இனிமையான இசைபொருந்திய பாட்டுக்களை முழங்கிப்பாடுகின்ற குளிர்ந்த துளசிமலர்மாலையையணிந்த கருமுகில்போலுந் திருமேனியையுடைய திருமாலும்,—அரும்பு இதழ்க் கனகக் கமல ஆசனத்து அண்ணல் - அரும்பிய இதழ்களையுடைய பொற்றாமரைமலராகியஆசனத்தினை யுடைய பிரமதேவனும்,—வானரசு விரும்பு வச்சிரபாணி - சுவர்க்கராச்சியத்தை விரும்பிய இந்திரனும்,—மற்று உள்ள வான் விபுதர் - வேறுமுள்ள சுவர்க்கத்துத் தேவர்களும். எ-று. (க)

அருந்த வங்களு மறைகளு மவரவ ரரசு
மிருந்த தானமு மவுணர்தந் தீமையா லிழந்து
முருந்தின் வாணகைக் கவுரியோர் பங்குடை முதல்வன்
பொருந்து வெள்ளிமால் வரைபுகுந் தவனடி போற்ற.

இ-ள். அவுணர்தந் தீமையால் - (தங்களுக்கு) அசுரர்களாற் செய்யப்பட்ட கொடுமைகளினாலே,—அவரவர் அருந்தவங்களும் மறைகளும் அரசும் இருந்த தானமும் இழந்து - தத்தம்அருமையான தவங்களையும் வேதங்

களையும் அரசுகளையும் இருந்த இடங்களையும் இழந்து,—முருந்தின் வாள் நகைக் கவுரி ஓர் பங்கு உடை - அன்ன இறகின் முள்ளுப்போலும் ஒளி பொருந்திய முறுவலையுடைய பார்வதியாரது ஒருபாகத்தையுடைய,—முதல்வன் பொருந்து மால் வெள்ளிவரை புகுந்து - சிவபெருமான் வீற்றிருக்கின்ற பெருமையினையுடைய கயிலைமலையிற்சேர்ந்து,—அவன் அடி போற்ற - அவருடைய ஸ்ரீபாதங்களைத் துதிக்க. எ-று (௨)

அன்ன பான்மையை யுணர்ந்திம யத்தர சளித்த
கன்னி வார்முலைக் களபநாற் புயந்தொறுங் கமழத்
தன்ன தாலயந் தணப்பிலா துளத்தொடுந் தழுவிப்
பன்னெ டும்பக லிருந்தனன் யாவர்க்கும் பகவன்.

இ-ள். யாவர்க்கும் பகவன் - எவர்க்கும் முதல்வ(ராகிய சிவபெருமானவ)ர்,—அன்ன பான்மையை உணர்ந்து - (தமது திருக்கோயில் வாயிலில் அரிபிரமாதியர் வந்துநின்று துதித்தமையாகிய) அந்த இயல்பினை அறிந்து,—தன்னது ஆலயம் - தமது திருக்கோயிலின்கண்ணே,—இமயத்தரசு அளித்த கன்னி-இமயமலையரசன்வளர்த்த கன்னிகையா(கியஅம்மையா)ரை,—வார்முலைக் களபம் நாற் புயந்தொறுங் கமழ உளத்தொடுந் தழுவி - கச்சையணிந்த (அவருடைய) ஸ்தனங்களில் அப்பிய கலவைச்சாந்து நான்காகிய (தம்)புயங்கடோறும் பரிமளிக்க மனத்தோடு தழுவிக்கொண்டு,—தணப்பு இலாது பன்னெடும்பகல் இருந்தனன் - பிரிவில்லாது பல நெடுநாட்களில் இருந்தருளினர். எ-று. (௩)

நெற்றி நாட்டத்த னிந்தவா றமைந்தரு ணெறியை
முற்று நாடிய வமரர்கள் யாவரு முறையிட்
டற்ற மில்லதோர் புணர்ப்பினுண் டாகிய போகத்
துற்ற தன்மையெத் தன்மையோ யாமிவ ணுரைக்கின்.

பரையு நீயுமுண் டாக்கிய போகத்தின் பாரந்
தரைய டந்தையும் பரிப்பரி தாமெனத் தளர்வா
ளுரைசெ யும்பொழு தேழையேம் பையுளுற் றுளேமேவம்
விரைய நீக்குதி யெனச்சுரர் சூழாங்கொடு விளம்ப.

இ-ள். நெற்றிநாட்டத்தன் இந்தவாறு அமைந்தருள் நெறியை முற்றும் நாடிய அமரர்கள் யாவரும் - நெற்றிக்கண்ண(ராகிய சிவபெருமா)ன் இப்படி(ப் புணர்ச்சியை)ப்பொருந்தியருளிய முறைமையினை முழுதும் அறிந்த தேவர்கள் எல்லாரும்,—யாம் இவண் முறையிட்டு உரைக்கின் - (சுவாமீ!) நாம் இங்கே(வந்து எமதுகுறையை) முறையிடுசெய்து கூற,—அற்றம் இல்லதோர் புணர்ப்பின் உண்டாகிய போகத்து உற்றதன்மை எத்தன்மையோ-(நீர்) சோர்வில்லாத ஒருபுணர்ச்சியினுளதாகிய சுகத்தினோடு இருந்தருளிய வாறு எவ்வாறோ?,—பரையும் நீயும் உண்டாக்கிய போகத்தின் பாரம் - அம்மையாரும் நீருஞ் செய்த போகத்தினால் ஆகும் பாரத்தை,—பரிப்பரிதாம் எனத் தரைமடந்தையுந் தளர்வாள் - தாங்குதல் இயலாததாம் என்று நிலமகளுந் தளருவாள்,—உரைசெயும் பொழுது ஏழையேம் பையுளுற்றுளேம் - சொல்லும்போழுதே ஏழையேங்கள் துன்பமுற்று உளைவையுடையேமாகின்றேம்,—விரைய நீக்குதி - (ஆதலினால் எம்பெருமானே இப்புணர்ச்சியை) விரைந்து நீக்கியருளும்,—எனச் சுரர்குழாங்கொடு

விளம்ப-என்று (மற்றுமுள்ள)தேவர்கூட்டங்களோடு விண்ணப்பஞ்செய்ய. எ-று.

நாடியவமரர்யாவரும் இவ்வாறு விண்ணப்பஞ்செய்தவழி ஏனையமரரும் அதனையுணர்ந்து அனுவதித்து விண்ணப்பஞ்செய்தனர் என்க. நாடிய அமரராவார் அரிபிரமரோடு மற்றுஞ்சிலரபோலும். (௨-ரு)

மூர லுந்திரு வுள்ளமுங் கனியமுக் கண்ண
னார ருட்கொடு சயனத்தை நீத்தன மாதி
வீரி யப்பொறி நம்வயி னீங்கின வெற்பி
னாரி பக்கமும் வைத்தில மதற்கிட நவில்வீர்.

இ-ள். முக்கண்ணன் ஆர் அருள்கொடு-சிவபெருமான் (அத்தேவரிடம்) நிறைந்த அருளைக் கொண்டு (அவரைத் தம்முன்வருவித்து),—மூரலும் உள்ளந் திருவுங் கனிய - (முகத்தின்கண்ணே) நகையும் அகத்தின்கண்ணே (ஆனந்தத்)திருவும் முதிர (அவரைநோக்கி),—சயனத்தை நீத்தனம் - புணர்ச்சியை ஒழித்தேம்,—நம்வயின் நீங்கின ஆதி வீரியப்பொறி வெற்பினாரி பக்கமும் வைத்திலம் - நம்மிடத்தினின்று அகன்ற முதன்மையையுடைய சுக்கிலமாகிய பொறியை மலைமகளிடத்தும் வைத்திலேம்,—அதற்கு இடம் நவில்வீர் - அதனை வைத்தற்கு(த் தக்க)இடத்தைச் சொல்லுங்கள். எ-று. (சு)

என்று ரைத்தசொற் கேட்டுணர் கின்றவா னிமையோ
ருன்ற னக்குள மூர்த்திக ளெட்டுள வவையிற்
றுன்று கின்றதோர் பார்மக ளாகுமத் தொடர்பான்
மன்ற வைத்தெமைக் காத்தரு ளெனச்சிவன் மகிழ்ந்து.

இ-ள். என்று - என்றுசொல்ல,—உரைத்தசொற் கேட்டு உணர்கின்றவான் இமையோர் - (அங்ஙனஞ் சிவபெருமான்) கூறிய வசனத்தைக் கேட்டு (ஆண்டுத்தம்மைக் காத்தருளும்பொருட்டே புணர்ச்சிநிகழ்த்தியதென்னும் உண்மையை) அறிகின்ற பெருமையினையுடையதேவர்கள் (எம்பெருமானை நோக்கி),—உன்றனக்கு உள் அம் மூர்த்திகள் எட்டு உள - உமக்கு (உரியனவென்று) கருதப்படுகிற அழகிய வடிவங்கள் எட்டு உள்ளன,—அவையில் துன்றுகின்றது ஓர் பார் மகளாகும் - அவற்றுள் (ஒன்றாய்ப்)பொருந்துகின்றதாகிய ஒப்பில்லாத நிலம் (ஒரு)பெண்ணாம்,—அத்தொடர்பான் மன்ற வைத்து எமைக் காத்தருள் என - அவ்வுரிமையாற்றானே (நிலமகளிடத்து)வைத்து எங்களைக்காத்தருள்க என்றுசொல்ல,—சிவன் மகிழ்ந்து - சிவபெருமான் மகிழ்ச்சிகொண்டு. எ-று. (எ)

நிலம டந்தைபால் வீரியஞ் சேர்த்தலு நிலமான்
பெலமொ டுங்கிவெப் படையவீ ரியவழற் பிழம்பைப்
புலனொ டுங்குற வெயர்ப்பெழ வுடலம்வெய் துயிர்த்துச்
சுலனை னைக்கொளத் தேவர்க ளறைந்திடச் சுமந்தான்.

இ-ள். நிலமடந்தைபால் வீரியஞ் சேர்த்தலும் - நிலமகளினிடத்தே (தமது)வீரியத்தை அடைவிக்க,—நிலமான் பெலம் ஒடுங்கி வெப்படைய - நிலமகள் பெலம் ஒடுங்கி வெப்பத்தைஅடைய,—தேவர்கள் சுலனை வீரிய அழற்பிழம்பைக் கொள அறைந்திட - (அதுகண்ட) தேவர்கள் அக்கினிதேவனை (நோக்கி) வீரியமாகிய தீப்பிழம்பைச் சுமக்குமாறு சொல்ல,—

புலனடங்குற உடலம் வெயர்ப்பு எழ வெய்துயிர்த்துச் சுமந்தான்-(அவன்) இந்திரியங்கள் நடுங்க உடம்பில் வேர்வையெழச் சுடுமூச்செறிந்து சுமந்தான். எ-று. (அ)

வெய்ய செந்தழ றாங்கமாட் டாதுள மெலிவுற்
றைய கோவெனக் கங்கையிற் சேர்த்தலு மவடான்
மொய்யி னாற்பனி மால்வரை யொருபுடை முளரிச்
செய்ய பூஞ்சர வணத்திடப் பெருமிதஞ் சிறந்து.

இ-ள். வெய்ய செந்தழல் தாங்கமாட்டாது ஐயகோ என உளம் மெலிவுற்றுக் கங்கையிற் சேர்த்தலும் - வெம்மையாகிய அக்கினிதேவன் சுமக்கமாட்டாமல் ஐயையோ என்று மனம்வாடிக் கங்காநதியின்கட் சேர்விக்க,—அவடான் மொய்யினால் மால் பனிவரை ஒருபுடைச் செய்ய முளரிப் பூஞ்சரவணத்து இட - (கங்கையாகிய) அவள் வலிமையினாற்(கொண்டு சென்று) பெருமையாகிய இமயமலையின் ஒருபக்கத்திலே(உள்ள) செம்மை பொருந்திய தாமரைமலர்களையுடைய சரவணவாவியினிடத்துச் சேர்க்க. எ-று.

"பெருமிதஞ் சிறந்து" என்பது வருஞ்செய்யுளிற் சேர்த்து உரைக்கப்படும். (கூ)

விளங்கு வீரியக் காந்தியி னற்சுட ரமேய
களங்க றுத்தவோ ரெட்டெனு முலோகங்க ளீன்று
வளங்கொ டெண்டிரைப் பரம்புநீர்ப் புணரிசூழ் வைப்பிற்
றுளங்கி யெங்கணும் வான்பொரு ளெனத்துலங் கியதால்

இ-ள். பெருமிதஞ் சிறந்து விளங்கு வீரியக் காந்தியின் நற்சுடர் - (கங்கையிலிட்டபின்னர் முன்னையிலும்மிகப்)பெருமைசிறந்து விளங்கின வீரியமாகிய காந்தியினையுடைய நல்ல அக்கினிப்பிழம்பானது,—களங்கு அறுத்த அமேய எட்டெனும் உலோகங்கள் ஈன்று - குற்றத்தை ஒழித்த அளவிடப்படாத எண்வகையான உலோகங்களைப் பிறப்பித்து,—துளங்கி- (நீரசைவினால்) அசைந்துகொண்டு,—வளங்கொள் தெண்டிரைப் பரம்பு நீர்ப் புணரி சூழ் வைப்பின் எங்கணும் வான் பொருள் எனத் துலங்கியது- மாட்சிமைகொண்ட தெளிவாகிய திரைகளாற் பரம்புகின்ற நீரையுடைய கடலாற் சூழப்பட்ட நிலவுலகத்தின் எவ்விடங்களிலும் (காணப்பட்டுப்) பெரும்பொருளாய் விளங்கினது. எ-று.

பொன் வெள்ளி முதலிய உலோகங்கள் ஐந்தென்பாரும் ஏழென்பாரும் எட்டென்பாரும் எனப் பலதிறத்தர் ஆன்றோரென்க.

அவ்வீரியப்பிழம்பு கங்கையிலிடப்பட்டவழி மிகப்பருத்துத் தோன்றியதும், அதினின்று பொன்முதலியலோகங்கள் தோன்றியதும் "க்ஷிப்தங் கங்காதடே தேசோ மேருமந்தர சந்நிபம், ... ... தஸ்மாத் ரூப்யஞ் சதாம்றஞ்ச லோகங் காஞ்சியந் ததைவச, சாதஞ் சமஸ்தம் பகுதா" என வருஞ் செயந்திமான்மியச் சுலோகங்களால் இனிது துணியப்படும்.

இச்செய்யுள் நான்கண்ட நான்கேடுகளிலும் இப்படியே உளது. ஆயினும் இரண்டாமடியீற்றில் "உலோகங்கள் கவின்று" என்றிருந்த அது மட்டுமே இயைபுபற்றி "உலோகங்களீன்று" என இங்கே திருத்தப்பட்டிருக்கின்றது. எழுதியவர்வழுவால் ஒரு ககரமும் வவ்வொற்றுஞ் சேர்ந்தனவே போலும். அன்றிக் "கவின்று" என்பதே "தோற்றுவித்து" எனப்

பொருள்படுமெனக்கொண்டு அங்ஙனம் பாடமோதினும் இழுக்காகாது. இனி ஆரியத்தின்வழி வழாது மொழிபெயர்த்த நூலாசிரியாகருத்தை யுணராது ஏடுகள் ஒருவழிப்படுதலையும் நோக்காது புத்தகப்பதிப்பாசிரியர் கள் "ஒரெட்டெனு முருவத்திற் கவின்று" எனவும், "எங்கு மவ்வாண் பெருளெனத் துலங்கிய" எனவும் மாற்றிப் பதிப்பித்துவைத்த வழக்குச் சழக்கே யென்று தெற்றெனத்தெளிக. (கΟ)

விள்ளு தற்கரி தாகிய வீரிய வெற்புப்
பொள்ளெ னக்கதி ராயிர கோடியிற் பொலிந்து
நள்ளி ருட்பர சமயமேவர் நாமற வீட்ட
வள்ளி லைச்சுடர் வேலிறை யாயவ தரிக்க.

இ-ள். விள்ளுதற்கரிதாகிய வீரியவெற்பு - (இனைத்தென்று) சொல் லற்கரியதாகிய (அந்த) வீரியமலையானது,—பொள்ளென - விரைவாக, — நள்ளிருட் பரசமயம்வேர் நாம் அறவீட்ட ஆயிரகோடி கதிரிற் பொலிந்து- நடுவிராப்போன்ற மாற்றலர் மதங்களை வேரோடு பேரும் இல்லையாகும் வண்ணஞ் சங்கரித்தற்கு ஆயிரகோடி சூரியர்போல விளங்கி,—அள் இலைச் சுடர் வேல் இறையாய் அவதரிக்க-கூர்மையாகிய இலைபோலும்(வடிவுள்ள) ஒளிபொருந்திய வேலாயுதத்தையுடைய கடவுளாய்த் தோன்றியருள. எ-று. (கக)

இரண்டு மூன்றிடத் துற்றதாற் கந்தனென் றிசைத்துத்
திரண்ட வானவர் கார்த்திகை யாந்தெரி வையரைச்
சுருண்ட குஞ்சியஞ் சேய்க்குநும் வரைத்துணை முலைப்பா
லருண்டி டாதுநீ ரூட்டுமி னென்றறைந் தனரால்.

இ-ள். திரண்ட வானவர் - (அங்ஙனம்) கூடிய தேவர்கள்,—இரண்டு மூன்றிடத்து உற்றதாற் கந்தன் என்று இசைத்து - (சிவன், பூமி, அக்கினி, கங்கை, சரவணவாவி என்னும்) ஐந்திடங்களிற் பொருந்தினமையினாலே கந்தர் என்று (அக்கடவுளுக்குத் திருநாமத்தைச்)சொல்லி,—கார்த்திகை யாந் தெரிவையரை-(பின்பு தம்மால்வருவிக்கப்பட்ட) கார்த்திகைகளாகிய பெண்களை(நோக்கி),—நீர் சுருண்ட குஞ்சி அஞ் சேய்க்கு நும் வரைத் துணை முலைப்பால் அருண்டிடாது ஊட்டுமின் - நீங்கள் சுருண்ட ரோமங் களையுடைய அழகிய (இப்)பாலருக்கு உங்கள் மலைகள் போலும் இணையா கிய முலைகளின் பாலை அசையாது பருகுவியுங்கள்,—என்று அறைந்தனர்- என்று கூறினார்கள். எ-று.

ஸ்கந்த் என்னுந் தாது போதல் எனப் பொருள்படுவது. அ விகுதி. ()

அந்த வேலையி லறுபத்து நாற்கலை யனைத்து [தாம்
முந்து தோன்றிட வுணர்ந்தொள்பான் மணியின்மொய்ம் பினர்
வந்து மொய்த்திட வள்ளியை மணஞ்செய்து வயத்தால்
வெந்தி றற்கொடுஞ் சூருரம் வேலினால் வென்று.

இ-ள். அந்தவேலையில் - அந்த(க்கார்த்திகைமகளிரறுவருங் கொடுத்த முலைப்பாலை அக்கடவுள் தாங்கொண்ட ஆறுமுகங்களாலும் பானம்பண்ணி அக்கணத்திற்றானே பதினாறுவயதுபடைத்த குமாரராய்விளங்கிய) சமயத் திலே,—அறுபத்துநாற்கலை அனைத்தும் முந்து தோன்றிட உணர்ந்து -

அறுபத்துநான்குகலைகளும் மற்றனைத்தும் (உணர்த்துவார் ஒருவரைவேண்டாது) முன்னாய்ப் புலப்பட அறிந்து,—ஒன்பான் மணியின் மொய்ம்பினர் தாம் வந்து மொய்த்திட - நவரத்தின சத்திகளினின்று தோன்றிய (இலக்கத்தொன்பது)வீரர்களும்வந்து (தம்பரிவாரங்களாய்ச்சூழ்ந்து)நெருங்க,—வள்ளியை மணஞ்செய்து - (விட்டுணுவின் வேண்டுகோளினால் அவரது கண்ணிற் றோன்றிய மகளாகிய) வள்ளியம்மையாரை விவாகஞ்செய்து,—வயத்தால் வெந்திறற் கொடுஞ்சூர் உரம் வேலினால் வென்று - (தாரகன் முதலியோரை அடர்த்த) வெற்றியினோடு வெய்ய வலிமையையுடைய கொடிய சூரனது வலிமையை வேற்படையினால் வென்று. எ-று. (௧௩)

சுரர்கள் யாவருந் துதித்திடச் சுந்தரித் தோகை
திருமணச்செயல் புரிந்தபின் றேவர்கோன் முதலாய்
விரவு தேவர்கள் யாரையு முருகவேள் விளித்துக்
கருணை கூர்ந்தவர் தங்கள்பா லின்னவை கழறும்.

இ-ள். சுரர்கள் யாவருந் துதித்திட - தேவர்களெல்லாருந்துதிக்க,—சுந்தரித் தோகை திருமணச் செயல் புரிந்தபின் -(விட்டுணுவின் கண்ணிற்றோன்றி இந்திரன்பால் வளர்ந்திருந்த கனகசுந்தரி (என்னு முற்பெயரையுடைய தெய்வயானை)யம்மையாரை (அவ்விந்திரனுடைய வேண்டுகோளினாலே திருக்கலியாணஞ்செய்தபின்,—முருகவேள் தேவர்கோன் முதலாய் விரவு தேவர்கள் யாரையும் விளித்து - முருகக்கடவுளானவர் (அங்ஙனம்) இந்திரன் முதலாய்க் கலந்துநின்ற புலவர்களெவரையும் முன்னிலைப்படுத்தி,—கருணை கூர்ந்து அவர்தங்கள்பால் இன்னவை கழறும்-திருவருள் பெருகி அவரிடத்து இம்மொழிகளைத் திருவாய்மலர்ந்தருள்கின்றார். எ-று.

சிந்து நீரமு மடுக்கலு நதிதருஞ் சிறப்புங்
கொந்த லர்க்கம லாசனத் திருவருட் குறிப்புஞ்
சுந்த ரம்பெறு மோரிடன் வேலைநீர் சூழ்ந்த
வந்த மற்றசீர்ப் பாரதகண்டத்தி னறைவீர்.

இ-ள். வேலை நீர் சூழ்ந்த அந்தமற்ற சீர்ப் பாரத கண்டத்தின் - கடனீராற் சூழப்பட்ட அளவற்ற திருவினையுடைய பாரதகண்டத்தின் கண்ணே,—சிந்து நீரமும் அடுக்கலும் நதி(யுந்) தருசிறப்பும் - கடற்கரையினாலும் மலையினாலும் யாற்றினாலும் ஆக்கப்படுஞ் சிறப்பினையும்,—கொந்தலர் - பூஞ்சோலைகளோடு,—கமலாசனத்திரு அருட் குறிப்பும் - தாமரை மலர்ப்பீடத்தினையுடைய சீதேவியினது அருளின் குறிப்புக்(களாய பலவளங்)களையும்,—சுந்தரம் பெறும் ஓரிடன் அறைவீர் - அழகோடுகொண்ட ஓரிடத்தை (ஆராய்ந்தெடுத்து எமக்குச்)சொல்வீர். எ-று.

கொத்தலரென்பது கொத்துக்களாகியஅலர்களையுடையது என விரிக்கப்படும் அன்மொழித்தொகையாய்ச் சோலையின் பெயராம். அது விகாரவகையாற் கொந்தலர் என நின்றது. (௧௪)

இன்ன செய்கைபெற் றிருக்குமோ ரிடத்தினி திருந்து
மன்னு கின்றமா முனிவர்க்குந் தேவர்க்கும் வையந்
துன்னு யாக்கடங் குழுவுக்கு மருண்மழை சொரிந்து
நன்ன லம்பெற வீற்றிருப் பாமென நவில.

இ-ள். இன்ன செய்கை பெற்றிருக்கும் ஓரிடத்து - இந்தச்(சிறப்புச்) செய்கைகளைப் பொருந்தியிரு(ந்ததென்று நீவிர்குறி)க்கும் ஒருதலத்தின் கண்ணே,—இருந்து இனிது மன்னுகின்ற - (நம்மேற்கொண்ட அன்பினாலே தாம் வந்து)இருந்து (நம்மை வழிபடலாகிய) இனிய செய்கையைச் சேருகின்ற,—மாமுனிவர்க்குந் தேவர்க்கும் வையந் துன்னு மாக்கடங் குழுவுக்கும் - பெரிய முனிவர்கட்குந் தேவர்கட்கும் நிலவுலகத்தில் வாழுகிற மனிதர்கூட்டங்கட்கும்,—நன்னலம் பெற அருண் மழை சொரிந்து வீற்றிருப்பாம் - (அவர் தாம்) நல்லின்பத்தைப்பெறுமாறு திருவருளாகிய மழையைப் பொழிந்துகொண்டு (யாம்)வீற்றிருப்பாம்,—என நவில - என்று திருவாய்மலர்ந்தருள. எ-று. (௧௧)

தெரிந்த வானவர் யாவரு மம்முறை தெளிந்து
விரிந்த போதத்தா லடியரேம் விரும்பினே மேனாட்
புரிந்த மாதவப் புணர்ப்பினு லீது நீ புகன்று
யருந்த வந்தரு செயந்திநன் னகரநின் னருள்போல்.

புணரி வானிரைத் தரங்கமும் பொற்றையும் பொழிலு
மணிவ ரன்றிய சாகர சங்கம வளத்தி
னணிவி ளங்கிய பொருநையுந் திருமக ளன்பின்
குணமு முள்ளது செயந்திநன் னகரங்கூ றுதுமால்.

இ-ள். விரிந்த போதத்தால் அம்முறை தெரிந்த வானவர் யாவருந் தெளிந்து - (அதுகேட்டுத் தம்முட்)கலந்த அறிவினால் அக்குணங்களை ஆராய்ந்த தேவரெல்லாரும் (இன்னதே என) நிச்சயித்துக்கொண்டு (அக்கடவுளை நோக்கி),—அடியரேம் விரும்பினேம் - அடியேங்கள் (உமது அபிப்பிராயத்தை இனிதென்று) இச்சித்தேம்,—மேனாட் புரிந்த மாதவப் புணர்ப்பினால் ஈது நீ புகன்றாய் - முன்னைநாளில் (எம்மனோர் செய்த பெரிய தவத்தின் சேர்ப்பினால் இதனை நீர் திருவாய்மலர்ந்தருளினீர்,—அருந்தவந் தரு செயந்தி நன்னகரம் - அரிய தவப்பயன்களைத் தருகின்ற செயந்தி என்னும் நல்ல நகரமானது,—புணரி வான் இரைத் தரங்கமும் - சமுத்திரத்தினது பெரிய முழக்கம் பொருந்திய திரைகளை(யுடைய கரையை)யும்,—பொற்றையும் - மலையையும்,—பொழிலும் - சோலைகளையும்,—மணிவரன்றிய சாகரசங்கம வளத்தின் அணி விளங்கிய பொருநையும் - இரத்தினங்களைக்கொழித்த சாகரசங்கமம் என்னும் மாட்சிமையிற் சார்ந்து பிரகாசித்த தாமிரபர்ணிநதியையும்,—திருமகள் அன்பின் குணமும் - சீதேவியினது அன்பு(க்குரிமையான பலவள)ச் சீர்மையினையும்,—நின்னருள் போல் உள்ளது - உமது திருவருளையேபோல உடையது,—செயந்தி நன்னகர் அங் கூறுதும் - (அவ்வியல்பினவாகிய) செயந்திமாநகரத்தின் மாட்சிமைகளை (இங்கே விளங்க)க் கூறுவாம். எ-று.

அணி=அண்ணி விகாரம். சாகரசங்கமம் - கடற்பொருந்து. யாறுங் கடலுஞ் சந்திக்குமிடமாகிய விசேட புண்ணியதீர்த்தஞ் சாகரசங்கமம் எனப்படும். (௧௭-௧௮)

திருவவதார அத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௧௫ப.

## ரு-வது. செயந்திபுர அத்தியாயம்.

கந்த மாதனப் பிறங்கலின் கவின்களுங் கனிதேன்
சிந்து தென்பொரு னைத்திரு நதியுறு சிறப்பு
முந்து மாதவச் செயந்தியம் பதிவள முழுது
மெந்தை கேளென வமரர்க ளிறைஞ்சிநின் றிசைத்தார்.

இ-ள். கந்தமாதனப் பிறங்கலின் கவின்களும் - கந்தமாதன மலையின் மாட்சிமைகளையும்,—கனி தேன் சிந்து தென் பொருநைத் திருநதி உறு சிறப்பும் - (வாரிவந்த) கனிகளையுந் தேன்களையும் (கரைகளிற்) சிதறுகின்ற தெற்கிலுள்ள பொருநையாகிய திருநதியின் மிக்கமாட்சிமைகளையும்,—முந்து மாதவச் செயந்தியம் பதி வளம் முழுதும் - முற்பட்ட பெரிய தவப்பயனைத்தருஞ்செயந்திமாநகரத்தின்மாட்சிமைகள் அனைத்தினையும்,—எந்தை கேள் - (யாமீண்டு விரித்துரைப்பம்; அவற்றை) எம்பெருமானே கேட்க,—என அமரர்கள் இறைஞ்சி நின்று இசைத்தார் - என்றுசொல்லித் தேவர்கள் நமஸ்கரித்து நின்றுகொண்டு (முறைப்பட எடுத்துக்) கூறுவாராயினார். எ-று (க)

காந்த ளுங்குர வுங்குர வந்தரு கடம்புஞ்
சாந்த முங்கய வல்லியும் வல்லியுந் தழுவி
வாய்ந்த பன்மணிக் குலைகளுந் தாங்கிய மரபாற்
சேந்த னொத்தது முத்தமிழ்ச் சந்தனச் சிலம்பு.

இ-ள். முத்தமிழ்ச் சந்தனச் சிலம்பு - மூவகைத்தமிழுக்கு இடனாகிய சந்தனமரங்களையுடைய கந்தமாதனமலையானது,—காந்தளும்-கார்த்திகை மலர்களையும்,—குரவும் - குராமலர்களையும்,—குரவந் தரு கடம்பும் - நறுமணத்தைத்தருகின்றகடப்பமலர்களையும்,—சாந்தமும்- சந்தனங்களையும்,—கய அல்லியும் - குளங்களில் அல்லிகளையும்,—[கயவல்லி - தெய்வயானையம்மை] வல்லியும் - கொடிகளையும்,—[வள்ளியம்மையையும்] தழுவி - பொருந்தி,—வாய்ந்த பன்மணிக் குலைகளும் - சிறந்த பலஇரத்தினக்கூட்டங்களையும்,—[இரத்தினாபரணக்கூட்டங்களும்] தாங்கிய மரபால் - தன் மேற்கொண்ட முறைமையினாலே,—சேந்தன் ஒத்தது - முருகக்கடவுளை (உம்மை)நிகர்த்தது. எ-று.

உபமானபக்கத்து வேறுபடும்பொருள்களை [ ] இக்குறியுட் கண்டு கொள்க. (உ)

குரவுங் கொன்றையுங் கூவிளத் தணியுங்கூ ரெயிற்ற
வரவுந் திங்களுங் கங்கையுந் தரித்துவா னகிலம்
பரவுந் தன்மையும் பெற்றுல கத்துயிர்ப் பரிப்பின்
விரவுஞ் சங்கர னொத்தது சந்தன வெற்பு.

இ-ள். சந்தன வெற்பு-சந்தனமரங்களையுடைய (அம்)மலையானது,—குரவுங் கொன்றையும் அணிக் கூவிளமுங் கூர் எயிற்ற அரவுந் திங்களுங் கங்கையுந் தரித்து - குராமலர்களையுங் கொன்றைமலர்களையும் அழகினையுடைய வில்வங்களையுங் கூர்மையான பற்களையுடைய பாம்புகளையுஞ் சந்திரனையுங் கருந்தினைகளையுந் தாங்கி,—[கங்காநதியையும்] வான் அகிலம்

பரவுந் தன்மையும் பெற்று - விண்ணுலகத்தாராலும் மண்ணுலகத்தாராலும் புகழப்படுந்தன்மையையும் அடைந்து,—உலகத்து உயிர்ப்பரிப்பின் - உலகத்தையும் உயிர்களையுந் தாங்குதலினாலே,—விரவுஞ் சங்கரன் ஒத்தது-(எப்பொருளினுங்)கலந்த சிவபெருமானை நிகர்த்தது. எ-று. (௬)

சொல்லு மாழியா னன்றிறைஞ் சப்படுந் தொடர்பா
லெல்லை நின்றள விடற்கரி தாகிமீ தெழுந்து
பல்வ ளத்தொடை யானனஞ் சிறந்துபைங் கொடியும்
புல்ல லாற்சிவ னொத்தது சந்தனப் பொருப்பு.

இ-ள். சந்தனப் பொருப்பு - கந்தமாதனமலையானது,—சொல்லும் ஆழியால் நன்று இறைஞ்சப்படுந் தொடர்பால் - சொல்லப்படுகின்ற சமுத்திரத்தினால் நன்றாகச் சூழப்படும் உரிமையினாலும்,—[ஆழியான் நன்று இறைஞ்சப்படும் - சக்கிரபாணியினால் இனிது வணங்கப்படும்] எல்லை அளவிடற்கு அரிதாகி மீது எழுந்து நின்று - (யாவராலுந் தனது) எல்லை அளவிடப்படுதற்கு அரியதாக மேலே உயர்ந்து நின்று,—பல்வளத்தொடு - பலமாட்சிமைகளோடு,—ஐயானனஞ் சிறந்து - சிங்கங்களாற் சிறந்து,—[ஐந்து திருமுகங்களாற் சிறத்தல்] பைங்கொடியும் புல்லலால் - பசுமையாகிய கொடிகளையும் பொருந்தலால்,—[கொடிபோன்ற பார்வதியாரைத் தழுவல்] சிவன் ஒத்தது - சிவபெருமானை நிகர்த்தது. எ-று. (௭)

அறுகும் வன்னியுஞ் சிகரமீ தாதரித் தயில்வே
லுறுகு மாரநா யகன்றனைத் தன்வயி னுடைத்தாய்க்
குறுகு மாரியை யிடனமைத் தும்பர்கைக் கொளலாற்
பிறையின் வேணியா னொத்தது சந்தனப் பிறங்கல்.

இ-ள். சந்தனப் பிறங்கல் - கந்தமாதனமலையானது,—அறுகும் வன்னியுஞ் சிகரமீது ஆதரித்து - யானைகளையுங் கிளிகளையுஞ் சிகரமேற் கொண்டு,—[அறுகம்புல்லையும் வன்னிமலரையுஞ் சிரமேற்கொள்ளல்] அயில் வேல் உறு குமாரநாயகன்றனைத் தன்வயின் உடைத்தாய் - வேலாயுதத்தைத்தரித்த குமாரசுவாமியைத் தன்மாட்டு உடையதாய்,—குறுகும் மாரியை இடன் அமைத்து - கிட்டிய முகிலை(த் தன்னொருபாலாய) இடத்திற் கொண்டு,—[குறுகும் மாரியை - கிட்டிய உமையம்மை] உம்பர் கைக்கொளலால் - தேவர்களாலும் பற்றிக்கொள்ளப்படுதலால்,—பிறையின் வேணியான் ஒத்தது - சந்திரசேகரரை நிகர்த்தது. எ-று. (௮)

சுரரு மாதவக் குழுக்களும் விழுத்தகு துணர்ப்பூந்
தருவுஞ் சுந்தர வரம்பையும் வேழமுஞ் சசியும்
பொருவின் மேனகை யும்புடை துலங்கலாற் பொன்னாட்
டரசன் பேரவை போன்றது சந்தன வடுக்கல்.

இ-ள். சந்தன அடுக்கல் - கந்தமாதனமலையானது,—சுரரும் மாதவக் குழுக்களும் - (தன்விசேடநோக்கி வந்துசேருகிற) தேவர்களும் முனிவர் கூட்டங்களும்,—விழுத்தகு பூந்துணர்த் தருவும் - மாட்சிமைதக்க பூங்கொத்துக்களையுடைய மரங்களும்,—[பஞ்சதருக்களும்] சுந்தர அரம்பையும் - அழகினையுடைய வாழைகளும்,—[அரம்பை என்னுந் தேவப்பெண்ணும்] வேழமும் - யானைகளும்,—[ஐராவதயானையும்] சசியும் - சந்திர

னும்,—[இந்திராணியும்] பொருவில் மேனகையும் - ஒப்பில்லாத (இரத்தின முதலியவற்றின்) மேலான காந்தியும்,—[மேனகை என்னுந் தேவப்பெண்ணும்] புடை துலங்கலால் - பக்கங்களில் விளங்குதலால்,—பொன்னாட்டு அரசன் பேரவை போன்றது - சுவர்க்கலோகத்தின் அரச(னாகிய இந்திர)னுடைய பெரிய சபையை நிகர்த்தது. எ-று (சு)

இரவு நண்பக லும்விழி யிமைப்பிலா திருந்து
கருத ரும்பல வருத்தமு மேதினங் கவர்ந்து
பரவும் வானகக் குறியைமேற் காட்டிய பண்பில்
விரக மங்கையர்ப் போன்றது சந்தன வெற்பு.

இ-ள். சந்தன வெற்பு - கந்தமாதனமலையானது,—இரவும் நண்பகலும் விழி இமைப்பு இலாது இருந்து - (தனது இடையறாது விளங்கும் ஒளிச்சிறப்பினாலே) இராவும் பொருந்துகின்ற பகலும் (நோக்குவோர்களுடைய)கண்களுக்கு விளங்குதல் இல்லாவண்ணம் இருந்து,—[இரவிலும் பொருந்திய பகலிலும் கண்களை இமைத்தலின்றி இருத்தல்] கருதரும் பல வருத்தமுந் தினங் கவர்ந்து - (தன்னையடைந்தார்க்கு உளவான) எண்ணுதற்கரிய அநேகவருத்தங்களையும் நாடோறும் அழித்து,—[(தம்பால்வருங் காமுகரிடத்தே) எண்ணற்கரிய பலபொருள்களையும் நாடோறும் பற்றிக் கொள்ளுதல்] பரவும் வானகக்குறியை மேற்காட்டி - (தான் மிக உயர்ந்திருத்தலினாலே) புகழப்படுகின்ற சுவர்க்கலோகத்தின் குறிப்பை மேலே காட்டி,—[பரந்த பெருமையான நகத்தழும்புகளை (தம்முடலின்)மேற்காட்டுதல்] பண்பு இல் விரக மங்கையர்ப் போன்றது - குணம் இல்லாத காமத்தினை விளைக்கும் (பரத்தை) மகளிரை நிகர்த்தது. எ-று. (எ)

திணிகொள் சாந்தமு நானமும் பலபல திறத்த
பணிக ளுங்களி யானைவெண் கோடும்பன் மணியுங்
கணித மின்மருந் தானவுங் கைக்கொளுந் திறத்தால்
வணிக மாக்களை நிகர்த்தது சந்தன மலையே.

இ-ள். சந்தனமலை - கந்தமாதனமலையானது - திணிகொள் சாந்தமும் நானமும் - திண்மைபொருந்திய சந்தனத்தையுங் கத்தூரியையும்,—பலபல திறத்த பணிகளும் - பற்பலவகையான பாம்புகளையும்,—[பற்பலவகையாபரணங்களையும்] களி யானை வெண் கோடும் - களிப்பினையுடைய யானையினது வெண்மையாகிய கொம்பையும்,—பன்மணியும் - பல இரத்தினங்களையும்,—கணிதம் இன் மருந்தானவும் - எண்ணில்லாத மருந்தாயுள்ளவற்றையும்,—கைக்கொளுந் திறத்தால் - தன்கட்கொண்ட தன்மையினால்,—வணிக மாக்களை நிகர்த்தது - செட்டிகளாகியமக்களை ஒத்தது. எ-று. (அ)

மழைக்கண் ணீரிறைத் தருஞ்சினைக் கையின்மல ரேந்திக்
குழைத்த தாதகத் தடக்கியோர் நிலைமையிற் குறுகி
யழுத்து பேரளி யொடு செவ்வே டனையருச் சிக்கத்
தழைத்த மாதவர்ப் போன்றது கந்தமா தனமே.

இ-ள். கந்தமாதனம் - கந்தமாதன மலையானது,—மழைக்கண்ணீர் இறைத்து - முகிலினிடத்து நின்று வந்த (அருவி)நீரைச் சொரிந்து,—[மழைபோலும் (ஆனந்தக்)கண்ணீரைச்சொரிந்து] அருஞ்சினைக் கையின்

மலர் ஏந்தி - அருமையான கிளைகளினிடங்களிற் பூக்களைத் தாங்கி,—[அரிய அவயவமாகிய கையிற் பூவை ஏந்தி] குழைத்த தாது அகத்து அடக்கி - கலந்த (பொன் முதலிய) தாதுக்களை அகத்தே பொதிந்து,—[(யார்க்கும் உள்ளத்தை) நெகிழ்வித்த சுக்கிலத்தை அகத்தில் அடக்கி] ஓர் நிலைமையிற் குறுகி - ஒரேநிலையில் நின்று,—[ஞானநிலைமையிற் பொருந்தி] அழுந்து பேரளியொடு செவ்வேடனை அருச்சிக்கத் தழைத்த மாதவர்ப் போன்றது - (மனத்தை மற்றொன்றினும் பற்றவிடாது ஞேயத்தின்கண்ணே) அழுந்தச் செய்யும் பேரன்போடு சுப்பிரமணியபெருமானைப் பூசித்தலால் வாழ்ந்த பெருந்தவமுடைய (மதாண்டரை) நிகர்த்தது. எ-று. (௯)

தூங்க லோசையுஞ் செப்பலி னோசையுந் துள்ள
றாங்கு நீர்மையி னோசையுங் கனியுந்தண் பூவு
மோங்கு காயுந்தே மாவுங்கூ விளமுமொன் றலிற்சீர்
தேங்கு செந்தமிழ் போன்றது சந்தனச் சிலம்பு.

இ-ள். சந்தனச்சிலம்பு - கந்தமாதனமலையானது,—தூங்கல் ஓசையுஞ் செப்பலின் ஓசையுந் துள்ளல் தாங்கு நீர்மையின் ஓசையும் - யானையொலியையும் பேச்சின் ஒலியையுங் குதித்தலைக் கொண்ட நீரினையுடைய முகிலின் ஒலியையும்,—[(வெண்பா முதலியவற்றுக்குத் தளைவேறுபாடுபற்றி விதிக்கப்பட்ட ஓசைவேறுபாடுகளின் உட்பட்டனவாகிய) தூங்கல், செப்பல், துள்ளல் என்னும் ஓசையியல்புகளையும்] கனியுந் தண்பூவுங் காயும் ஓங்கு தேமாவுங் கூவிளமும ஒன்றலின் - பழங்களுங் குளிர்மையான மலர்களுங் காய்களும் உயர்ந்த தேமாமரங்களையும் வில்வமரங்களையும்பொருந்தியிருத்தலால்,—[(நிரை நேர்முதலிய அசைவிகற்பங்களுக்குக் காட்டிய உதாரணவாய்பாடுகளின் உட்பட்டனவாகிய) கனி, தண்பூ, காய், தேமா, கூவிளம் என்னும் வாய்பாடுகளையும் பொருந்திய] சீர் தேங்கு செந்தமிழ் போன்றது - சீரியல்பின் நிறைந்த (யாப்பிலக்கணம் என்னுஞ்) செந்தமிழ் நூலை நிகர்த்தது. எ-று. (௧௦)

மாலி னுந்தியின் விளங்கிநான் மறைமுறை வகுத்துக்
கோல நான்முக மாகியெண் கையுமேற் கொண்டு
பாலி னன்கலை மானையும் பரித்துப்பங் கயத்தோன்
போல நின்றது தென்றலஞ் சந்தனப் பொருப்பு.

இ-ள். தென்றல் அஞ் சந்தனப் பொருப்பு - தென்றற்காற்றின் அழகினையுடைய கந்தமாதனமலையானது,—மாலின் உந்தியின் விளங்கி - முகில்களின் உயர்ச்சியினால் விளங்கி,—[விட்டுணுவின் நாபிகமலத்தில் விளங்கல்] நான்மறை முறை வகுத்து - (தன்கண் வாழ்வார்) சதுர்வேதங்களையும் முறையானே ஓத,—[சதுர்வேதங்களை முறைப்படவகுத்தல்] கோலம் நான்முகம் ஆகி - (அருவி) நீரோட்டம் நாற்புறங்களினும் ஆக,—[அழகான நான்கு முகங்களை உடைமை] எண்கையும் மேற்கொண்டு - கரடிகளையும் மேலேகொண்டு,—[எட்டுக்கைகளைக் கொள்ளுதல்] பாலின் நன்கலைமானையும் பரித்து - பக்கங்களிலே நல்ல கலை மான்களையுந் தாங்கி,—[வெண்மையான நல்ல கலைமகளையுந் தாங்கிய] பங்கயத்தோன் போல நின்றது - பிரமதேவன்போல நின்றது. எ-று. (௧௧)

கந்த மாதனச் செய்கையைத் தேவநங் கருத்தின்
வந்த வாறுனக் குரைத்தன மிதுநிற்க மலர்த்தேன்

சிந்து தெண்பொருநைத்திரு நதிச்சிறப் பனைத்து
முந்து மார்வத்தா லறைகுதுங் கேளென மொழிந்தார்.

**இ-ள்.** தேவ கந்தமாதனச் செய்கையை நங் கருத்தின் வந்தவாறு உனக்கு உரைத்தனம் - கடவுளே! கந்தமாதனமலையினது செய்தியை எங்கள் எண்ணத்தில் வந்தபடி உமக்குக் கூறினோம்,—இது நிற்க - இது (இவ்வளவில்) நிற்க,—மலர்த்தேன் சிந்து தென் பொருநைத் திருநதிச் சிறப்பனைத்தும் - பூந்தேனை (வாரிவந்து) சிதறுகின்ற தென்பொருநையாகிய திருநதியின் பெருமிதமுழுதையும்,—முந்தும் ஆர்வத்தால் அறைகுதும் - முற்பட்ட காதலான் மொழிவேம்,—கேள் என மொழிந்தார் - கேளும் என்று சொல்லி (மேல் அத்தேவர்) கூறினார். எ-று. (௧௨)

விரைத்த மான்மத மாமதத் தானமேற் கோலிக்
கரைத்து முக்கனி யவலொடு கடலையுங் கலந்து
திரைத்து வான்மருப் புடனெடுத் திமைத்தலாற் செயந்தி
புரத்து நான்மறைக் குஞ்சரம் போன்றது பொருநை.

**இ-ள்.** பொருநை - தாமிரபர்ணி நதியானது,—விரைத்த மான்மதம் மா மதந் தானமேற் கோலி - நறுமணமுடைய கஸ்தூரியும் யானைமதமும் பொருந்திய இடங்களின் மேற் சூழ்ந்து (அவ்வவற்றை வாரிக்கொண்டு),—[நறுமணமுடைய கஸ்தூரியைப் பெருமையான மதம்பாயுமிட(மாகிய கபோல)த்தின்மேற் பூசுதல்] முக்கனி கரைத்து அவலொடு கடலையுங் கலந்து - முப்பழங்களையும் (வாரிக்) கரைத்துப் பள்ளங்களையுஞ் சமுத்திரத்தையுஞ் செறிந்து,—[முப்பழங்களைக் கரைத்து அவலுங் கடலையுங் கலந்து உட்கொள்ளல்] திரைத்து - திரைகளை யுடையதாய்,—[உடற்றிரையுடைமை] வான்மருப்பு உடனெடுத்து இமைத்தலால் - பெருமையாகிய மரக்கொம்புகளை (மூலங்களின்) உடனே எடுத்துக்கொண்டு விளங்குதலால்,—[வெண்மையாகிய ஒருகொம்பை(த் திருக்கரத்தின்)உடனே எடுத்துவிளங்குதல்] செயந்திபுரத்து நான்மறைக் குஞ்சரம் போன்றது - செயந்திநகரத்தில் வீற்றிருக்கின்ற சதுர்வேதபதியாகிய யானைமுகக்கடவுளை நிகர்த்தது. எ-று. (௧௩)

கூன வெண்பிறை யின்வளை குரண்டவான் சிறையிற்
பேன மின்றரக் கால்பல சடையினிற் பிறங்க
வான வம்புயங் கபாலநேர் திரைக்கர மமைத்துப்
போன கம்பெறப் போந்தவர்ப் போன்றது பொருநை.

**இ-ள்.** பொருநை-அவ்யாறு,—கூன வெண் பிறையின் வளை குரண்டவான் சிறையிற் பேனம் மின்றர - வளைந்த வெள்ளிளம்பிறைபோலச் சங்கும், கொக்கின் பேரிறகுபோல நுரையும் விளங்க,—பல சடையினிற் கால் பிறங்க - பலசடைகள்போல(ப்பிரிந்துசெல்லுங்) கால்கள் விளங்க,—கபாலம் நேர் ஆன அம்புயங் கரத்திரை அமைத்து - (பிக்ஷாபாத்திரமாய) தலையோட்டைப் போல்வதான தாமரைமலரைக் கைபோலுந் திரையில் அடக்கிக்கொண்டு,—போனகம் பெறப் போந்தவர்ப் போன்றது - (பண்டு முனிபன்னிகண்மாட்டுப் பிச்சை) அன்னம் வாங்கப்போன (மகாதே)வரை ஒத்தது. எ-று. (௧௪)

அரவந் தாங்கிவன் றோலெடுத் தம்பர விடமார்ந்
திருமருங்குநால் வேதபா ரகர்படிந் திறைஞ்சச்
சுரரும் வந்தனை புரிதர யாவருந் தொழமுப்
புரமெ ரித்தகண் ணுதற்பரன் போன்றது பொருநை.

இ-ள். பொருநை - அவ்யாறு,—அரவந்தாங்கி - ஒலியைக்கொண்டு,—[பாம்பை அணிந்து] வன் றோல் எடுத்து - வலிய யானையையும் வாரி,—[வலிய தோலை மேற்கொண்டு] அம்பரவிடம் ஆர்ந்து - கடலினிடத்துச் சேர்ந்து,—[கடலின் விடத்தை உண்டு] இரு மருங்கும் நால்வேத பாரகர் - இருபக்கங்களிலுஞ் சதுர்வேதங்களின் கரைகண்டவ(ர்களாகிய துவிச)ர்கள் (வந்து),—படிந்து இறைஞ்ச - முழுகிவணங்க,—[விழுந்து வணங்க] சுரரும் வந்தனைபுரிதர - தேவர்களும் வழிபாடுசெய்ய,—யாவருந் தொழ - எவர்களும் வணங்க(ப்பெறுதலால்),—முப்புரம் எரித்த கண்ணுதற்பரன் போன்றது - திரிபுரங்களையுந்தகித்த நெற்றிக்கண்ணையுடைய பரசிவனை நிகர்த்தது. எ-று. (௧௫)

செங்க டம்பெடுத் துங்குறிஞ் சித்திணை திரிந்துஞ்
சங்க முந்தியுஞ் சீரலை வாய்க்கரை சார்ந்து
மெங்கு மாசுர மொழித்தலாற் குமரவே ளென்னப்
பொங்கு கின்றது மன்றலந் தென்றலார் பொருநை.

இ-ள். மன்றல் தென்றல் ஆர் பொருநை - நறுமணம்பொருந்திய தென்காற்றை ஆர்ந்த அவ்யாறு,—செங் கடம்பு எடுத்தும் - செம்மையாகிய கடம்பின்பூக்களை மேற்கொண்டும்,—குறிஞ்சித்திணை திரிந்தும் - குறிஞ்சிநிலத்தின் உலாவியும்,—சங்கம் உந்தியும் - சங்குகளை(க் கரையிலே)தள்ளியும்,—[சங்கம் முந்தியும் - (மதுரைச்)சங்கத்தின் முற்பட்டிருந்தும்] சீர் அலைவாய்க்கரை சார்ந்தும் - சிறப்பாகிய சமுத்திரத்தின் கரையைச் சார்ந்தும்,—[திருச்சீரலைவாயின்கண் வாழ்ந்தும்]எங்கும் மா சுரம் ஒழித்தலால் - எங்கும் பெரிய பாலைநிலத்தை (வெம்மையின்) நீக்கிவிடுதலினாலே,—[எங்கும் ஆசுரம் ஒழித்தல்-எங்கும் அசுரர்கூட்டத்தை ஒழித்தலையுடைய]குமர வேள் என்னப் பொங்குகின்றது - குமாரசுவாமிபோலப் பொலிகின்றது. எ-று. (௧௬)

விரவு பூந்துணர் சிந்துசெந் தாதின்மெய் சிவந்து
மருவு கந்தர நுழைந்துவந் தமரர்வாழ்த் தெடுப்பப்
பரவை மேனடந் தொற்றெனச் சூரன்முன் பகர்ந்து
பொருத வீரவா குவைநிக ரானது பொருநை.

இ-ள். பொருநை - அவ்யாறு,—விரவு பூந்துணர் சிந்து செந்தாதின் மெய் சிவந்து - கலந்த பூங்கொத்துக்களினின்றுசிந்திய செந்தாதுக்களினால் மேனி சிவந்து,—[...செந்தாதுக்கள்போல மேனிசிவந்து] மருவு கந்தரம் நுழைந்து வந்து - பொருந்திய முழைஞ்சுகளில் நுழைந்துவந்து,—[(கிரௌஞ்சமலையின்) முழைஞ்சில் நுழைந்துவந்து] அமரர் வாழ்த்து எடுப்ப - தேவர்கள் துதிகளை எடுத்துச்சொல்ல,—பரவைமேல் நடந்து - கடலின்மேற் செல்லுதலினாலே,—[கடலின்மேற்(கடந்து)சென்று] சூரன்முன் ஒற்றெனப் பகர்ந்து பொருத வீரவாகுவை நிகரானது - சூரபன்மனுக்கெதிரே (முன்பு) தூதனாய்ப்பேசி(ப் பின்பு) யுத்தஞ்செய்த வீரவாகுவை நிகர்த்தது. எ-று. (௧௭)

வரையி னிற்பிறந் தீசர்தம் மேனியு மாகித்
தரைம கட்குமே லாய்ச்சர மசரமுந் தழைத்துக்
கருவு யிர்ப்பதற் கின்னருண் முழுவதுங் காட்டிப்
பொருவில் கற்புடைக் கவுரிபோ லானது பொருநை.

இ-ள். பொருநை - அவ்யாறு,—வரையினிற் பிறந்து - மலையினின்று தோன்றி - ஈசர்தம மேனியும் ஆகி - சிவபிரானது இலிங்கத்திருமேனிகளி னுங் கலந்ததாகி,—[சிவபிரானது பாதித்திருமேனியாதல்] தரைமகட்கு மேலாய் - பூமிதேவிக்கு மேலாய்,—சரம் அசரமுந் தழைத்துக் கருவுயிர்ப்ப தற்கு - இயங்கியற்பொருள்களும் நிலையியற்பொருள்களும் வாழ்ந்து காரி யங்களைத் தோற்றுவித்தற்கு,—இன்னருள் முழுவதுங் காட்டி - இனிய அருளை முழுதுங் காண்பித்து,—பொருவில் கற்புடைக் கவுரிபோலா னது - ஒப்பில்லாத கற்பினையுடைய உமையம்மைபோலாயிற்று. எ-று. ()

சங்க மேந்தியுஞ் சக்கிரந் தரித்துமா தரையுந்
துங்க முற்றசெம் பொன்னொடு தழுவியுந் துணர்ப்பூங்
கொம்பு யிர்த்தமா மருதொடித் தகிலமுங் கொளலாற்
புங்க வர்க்கமு தளித்தமா லொத்தது பொருநை.

இ-ள். பொருநை - அவ்யாறு,—சங்கம் ஏந்தியும் - சங்கைத் தாங்கி யும்,—சக்கிரந் தரித்தும் - நீர்ச்சுழியைத் தாங்கியும்,—[சக்கிராயுதத்தைத் தாங்கல்] மாதரையுந் துங்கமுற்ற செம்பொன்னொடு தழுவியும் - (தன் பால் வந்து முழுகும்) பெண்களையும் உயர்ச்சிபெற்ற (அவரணிந்த) செம் பொன்களையுந்தழுவியும்,—[பெரியபூதேவியையுஞ் சீதேவியையுந்தழுவல்] துணர்ப்பூங் கொம்பு உயிர்த்த மா மருது ஒடித்து - குலைகளாகிய பூக்களை யுடைய கொம்புகளை ஈன்ற பெரிய மருதமரத்தை முரித்து,—அகிலமுங் கொளலால் - (தன்வழியில் அகப்பட்ட) எல்லாவற்றையுங் கைக்கொள்ளுத லால் [உலகத்தை உட்கொள்ளல்] புங்கவர்க்கு அமுது அளித்த மால் ஒத் தது - தேவர்கட்கு அமுதத்தைக் கொடுத்த விட்டுணுவை நிகர்த்தது. எ-று. (கக)

மலர்ப ரித்தன மேற்கொடு சதுர்மறை வருத்திவ்
வுலக னைத்துமுண் டாக்கியு மாதவத் தொருங்காய்ப்
பலக லைத்திரு நாமிசைப் பழகலாற் படைத்தோன்
பொலிவு பெற்றது கற்றமா தவர்தொழும் பொருநை.

இ-ள். கற்ற மாதவர் தொழும் பொருநை - படித்தமுனிவராற் சேவிக் கப்படும் பொருநையாறு,—மலர் பரித்து - பூக்களைத் தாங்கி,—[பூவினுலே தாங்கப்பட்டு] அனம் மேற்கொடு - அன்னத்தை மேலேகொண்டு,—[அன் னக்கொடியை] சதுர்மறை வருத்து - (தன்கட்படிவார்) நால்வேதங்களை யும் பாட,—[நால்வேதங்களைக்கூறி] இவ்வுலகனைத்தும் உண்டாக்கியும் - இவ்வுலகத்தின் எல்லாவற்றையும் உண்டாகச்செய்தும்,—மா தவத்து ஒருங் காய் - பெரியதவத்தின் அடக்கமாய்,—பலகலைத் திரு நாமிசைப் பழகலால் - பலகல்விகளைப் பயின்ற (பெரியோர்களினுடைய) திருநாக்குக்களில் (அவ ராற் கொள்ளப்பட்டுப்) பயிலுதலால்,—[சரசுவதி நாவிற் பயின்றிருத்தலை யுடைய] படைத்தோன் பொலிவு பெற்றது - பிரமதேவனது பொலிவினை அடைந்தது. எ-று. (உ௰)

பலதருக்களும் வெள்ளைவா ரணமு மோர்பாலிற்
செலநி றைந்தெழு மீனினங் கண்களிற் றிகழத்
தலைமை பெற்றிமை யோர்தினந் தாழ்ந்திறைஞ் சுதலாற்
பொலனி லத்திறை போன்றதா லான்றநீர்ப் பொருநை.

இ-ள். ஆன்றநீர்ப் பொருநை - நிறைந்த நீரையுடைய அவ்யாறு,—பல தருக்களும் வெள்ளை வாரணமும் ஓர்பாலிற் செல-பலமரங்களும் வெண் சங்குகளும்(தேவதருக்களும் வெள்ளையானையும்போல)ஒருபுடை செல்ல,—நிறைந்தெழு மீனினங் கண்களின் திகழ - நிரம்பி எழுகின்ற மீன்கூட்டங்கள் கண்கள்போல விளங்க,—தலைமைபெற்று-முதன்மையை அடைந்து,—இமையோர் தினந் தாழ்ந்து இறைஞ்சுதலால் - தேவரால் நாடோறும் படிந்து சேவிக்கப்படுதலினால்,—பொல னிலத்திறை போன்றது - சுவர்க்க அரச(னாகிய இந்திர)னை நிகர்த்தது. எ-று. (௨௧)

ஆசின் மிக்குமென் மதுரமாய்ச் சித்திரத் தளவி
யோசை பெற்றுவித் தாரமா யைந்திணை யுடன்று
காசு நாண்மலர் பிறப்புடன் காட்டிமெய்க் கலசப்
பூசு ரன்றமி ழொத்தது வித்தகப் பொருநை.

இ-ள். வித்தகப் பொருநை-நன்மையினையுடைய அவ்யாறு,—ஆசின் மிக்கு மென்மதுரமாய்ச் சித்திரத்து அளவி ஓசை பெற்று வித்தாரமாய் - விரைவின் மிகுந்து மென்மையோடு இன்சுவையாய்ப் பலநிறங்களோடு கலந்து ஒலியை அடைந்து விரிவையுடையதாய்,—[ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகளையும் நல்லோசையையும் உடையதாய்] ஐந்திணை உடன்று - (குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்னும்) ஐந்து திணைகளிலும் பொருந்தி,—[ஷை ஐந்திணைப் பொருள்களையும் விளக்கி] காசு நாண்மலர் பிறப்புடன் காட்டி - இரத்தினங்களையும் புதியமலர்களையும் (அவற்றின்) உற்பத்தித்தானங்களோடு காட்டி,—[காசு நாள் மலர் பிறப்பு என்னும் உதாரண வாய்பாடுகளைக் காட்டுவதாகிய] மெய்க் கலசப் பூசுரன் தமிழ் ஒத்தது - மெய்ம்மையாகிய அகத்திய முனிவனது செந்தமிழ்நூலை நிகர்த்தது. எ-று. (௨௨)

வாய்த்த மங்கையர் மஞ்சளும் வாள்விழி மையுந்
தேய்த்த பாலொடும் படிதலின் மும்மையுஞ் சிறந்து
ளேத்தும் வாணியும் யமுனையுங் கங்கையி னியல்பும்
பூத்து வெம்பவங் காய்த்தருள் கனிந்தது பொருநை.

இ-ள். பொருநை - அவ்யாறு,—வாய்த்த மங்கையர் மஞ்சளும் வாள் விழி மையுந் தேய்த்த பாலொடும் படிதலின் - சிறந்த பெண்கள் (பூசிய) மஞ்சளோடும் வாள்போலுங் கண்களிலே ஊட்டிய மையோடுந் தேய்த்த பாலோடும் முழுகுதலினாலே,—உள் மும்மையுஞ் சிறந்து - தன்னுள்ளே (செம்மை கருமை வெண்மை என்னும் நிறங்கண்)மூன்றுஞ் சிறக்கப் பெற்று,—எத்தும் வாணியும் யமுனையுங் கங்கையி னியல்பும் பூத்து - துதிக்கப்படுஞ் சரசுவதி யமுனை கங்கை என்பவற்றின் ஒப்புமை பொலிந்து,—வெம்பவங் காய்த்த அருள் கனிந்தது - கொடிய பிறவியைக் கெடுக்குமாறு அருள் முதிர்ந்துளது. எ-று. (௨௩)

MAHAMAHOPADHYAYA
... LIBRARY

கரைக டந்துளங் கலங்கிவான் பொருளெலாங் கவர்ந்து
விரைக லந்தமென் போதுசெந் தாதுடன் விளங்கி
யுரனெ டும்பல வணைதொறும் படுத்துல கடுத்த
பொருண்ம டந்தையர்ப் போன்றதா லான்றநீர்ப் பொருநை.

இ-ள். ஆன்ற நீர்ப் பொருநை - நிறைந்த நீரையுடைய அவ்யாறு,—கரை கடந்து-எல்லையைக்கடந்து,—உளங் கலங்கி-உள்ளோலங்கலங்கி,—[மனங்கலங்கி] வான் பொருளெலாங் கவர்ந்து - பெருமையான பொருள்களையெல்லாங் கவர்ந்து,—விரை கலந்த மென் போது செந்தாதுடன் விளங்கி - நறுமணஞ் செறிந்த மென்மையான மலர்களாலும் பொன்களாலும் பிரகாசித்து,—உரனெடும் பல அணைதொறும் படுத்து - திண்மையினோடும் பல செய்கரைகடோறும் படிந்து,—[பல சயனங்களிலுங் கிடந்து] உலகடுத்த பொருண்மடந்தையர்ப் போன்றது - உலகத்திற் சேர்ந்த வரைவின்மகளிரை நிகர்த்தது. எ-று. (௨௪)

மணிவ ரன்றிய கடனையு மணிமுத்த நதியுந்
திணிகொள் சந்தனச் சித்திர நதியுஞ்செம் பவளம்
பணில முந்திய பச்சைமா நதியும்பாங் கியராப்
புணரி யாடுவான் போவது போன்றது பொருநை.

இ-ள். பொருநை - அவ்யாறானது,—மணி வரன்றிய கடனையும்-இரத்தினங்களை வாரிய கடனையாறும்,—மணிமுத்த நதியும் - மணிமுத்தயாறும்,—திணிகொள் சந்தனச் சித்திர நதியும் - திண்மைபொருந்திய சந்தனங்களையுடைய சித்திரயாறும்,—செம் பவளம் பணிலம் உந்திய மா பச்சை நதியும் - செம்மையாகிய பவளங்களையுஞ் சங்குகளையுந் தள்ளிய பெரிய பச்சையாறும்,—பாங்கியரா - (பக்கங்களில் உடன்செல்லுமாற்றாற்) சகிகள் போலாக,—புணரி ஆடுவான் போவது போன்றது - சமுத்திரத்தின் முழுகும்பொருட்டுச் செல்வது போன்றது. எ-று. (௨௫)

பொருநை மாநதிப் பெருமிதஞ் சிலசில புகன்றே
முருக கேளெனக் கடவுள ருச்சிமேன் முகுழ்த்த
கரத லத்துடன் செயந்தியம் பதிவளங் கந்தன்
றிருவு ளங்களி தரநனி மகிழ்ந்துரை செய்வார்.

இ-ள். உச்சிமேன் முகுழ்த்த கரதலத்துடன் கடவுளர் - உச்சிமேற் கூப்பிய கைகளோடு (இங்ஙனங்கூறுகின்ற) தேவர்கள்,—முருக பொருநை மா நதிப் பெருமிதஞ் சிலசில புகன்றேம் செயந்தியம்பதி வளங் கேள் என - முருகக்கடவுளே! தாமிரபர்ணிமகாநதியின் மான்மியங்களுட் சிலசிலவற்றைக் கூறினேம்; (இனிச்) செயந்திமாநகரத்தின் மாட்சிமைகளையுங் கேட்டருளும் என்று தொடங்கி,—கந்தன் திருவுளங் களிதர நனி மகிழ்ந்து உரைசெய்வார் - அக்கடவுள் (தங்கள்பத்தியைக்காண்டலினாலே) திருவுளம் பெரிது களிப்புற (அதனால் தாங்கள்) மிகமகிழ்ந்து சொல்வார். எ-று. (௨௬)

வேறு.

வரியரவ மணியிமைக்கும் பாலினர்க்கும் பாணருக்கு மழையே போல, வரியரவ மணியிமைக்கும் பாலனமுந் தினங்கொடுத்து

மகிழ்கின் றாரு, மிரவலருக் கிணைந்தருப்போற் றினந்தினமுங் கொடுத்துமகிழ்ந் திருக்கின் றாரு, மிரவலருக் கிணைந்துமடந் தையரிடந்தா டொடர்ந்துபடிந் திறைஞ்சு வாரும்.

இ-ள். வரி அம் அரமணி இசைக்கும் பாலினர்க்கும் - இரேகை பொருந்திய அழகிய உருத்திராக்கமணியை அணியும் இயல்பினையுடை(ய அடி)யார்கட்கும்,—(வரி அரவம் அணி இசைக்கும்) பாணருக்கும் - பாட்டுக்களின் இசைகளை அழகாகப் பாடுகின்ற பாணர்கட்கும்,—வரி அரவ மணி பால் பிசைக்கும் அனமும் - வரையாகிய நாகரத்தினங்களையும் பாலோடு பிசைந்த அன்னத்தையும்,—மழையே போலத் தினங் கொடுத்து மகிழ்கின்றாரும் - மழையையேபோல நாடோறும் பொழிந்து உவக்கின்றவர்களும்,—இரவலருக்கு இன் ஐந்தருப் போல் தினந் தினமுங் கொடுத்து மகிழ்ந்து இருக்கின்றாரும் - யாசகர்களுக்கு இனிய பஞ்சதருக்கள்போல நாடோறுங் கொடுத்து உவந்து வாழ்கின்றவர்களும்,—இரவு அலருக்கு இணைந்து - இரவிலே (காமபாணங்களாகிய) பூக்களால் வருந்தி,—மடந்தையரிடந் தொடர்ந்து தாள் இறைஞ்சிப் படிவாரும் - பெண்டிரிடங்களைத் தொடர்ந்து (அவர்)பாதங்களை வணங்கிக் கலப்பவர்களும். எ-று.

படிந்திறைஞ்சுவாரும் என்பதின் விகுதி பிரித்து மாற்றிக்கூட்டியது காண்க. (௨௭)

கதிர்வரவு தனைப்பார்த்துக் கொண்டுழவர் பலர்சூடு களஞ்
செய் வாருங், கதிர்வரவு தனைப்பார்த்து வாளுழவர் பலராடு
களஞ்செய் வாருப், பதிகமுடன் றிருமுறைபார்த் தங்கங்கே
படித்தருத்தம் பகர்கின் றாரும், பதிகமுடன் கலைக்குவலை கலை
வாரும் பதியதனின் வதிவா ரன்றே.

இ-ள். கதிர்வரவுதனைப் பார்த்துக்கொண்டு சூடு களஞ் செய்வார் உழவர் பலரும் - (நெற்)கதிர்கள் (விளைந்து)வந்தமையைக் கண்டுகொண்டு (அரியப்பட்டஅவற்றாற்) சூடுகளைக் களங்களிற் செய்பவர்களாகிய உழவரும்,—கதிர் வரவுதனைப் பார்த்து ஆடு களஞ் செய்வார் வாளுழவர் பலரும் - சூரியன் உதித்தலைக்கண்டு பொரு(துபயிலுங்)களங்களை அமைப்பவர்களாகிய வாள்வீரர் பலரும்,—அங்கங்கே பதிகமுடன் திருமுறை பார்த்துப் படித்து அருத்தம் பகர்கின்றாரும் - (ஏற்புடையனவாய) அவ்வவ்விடங்களிலே பாயிரங்களோடு திருமுறைகளைப் பார்த்து வாசித்துப் பொருள் கூறுபவரும்,—பதிகமுடன் கலைக்குவலை கலைவாரும் - பாசிகளோடு கலைகளாகிய உற்பலங்களைக் களைபவர்களும்,—பதியதனின் வதிவார் - அச்செயந்தியம்பதியில் இருப்பார். எ-று. (௨௮)

வேறு.

தளவம் புயத்து மடந்தையெனத் தழைப்பார் தலைவ ருடனூ
டித், தளவம் புயத்தி னிடைநீபத் தண்டே னொழுகும் பெருக்
காற்றிற், களபந் திமிரம் புயப்பாகர் கருத்தூக் கடங்காக் கறை
யடிப் போர்க், களபந் திமிரக் குருளையெனக் களிக்கு மளிக்கா
வகமெல்லாம்.

இ-ள். தள அம்புயத்து மடந்தையெனத் தழைப்பார் தலைவருடன் ஊடித்தள - இதழ்களையுடைய தாமரைமலரிற் சீதேவிபோல (அழகு)மிகு

பவர்க(ளாகியபெண்க)ள் கணவரோடு வெறுத்து (அவரைத்)தள்ள,—அம்புயத்தினிடை நீபத்தண்டேன் பெருக்காற்றின் ஒழுகும் - (அங்ஙனந் தள்ளுண்ட) அழகிய புயங்களில் (அணிந்திருந்து நெரிந்த) கடம்புமலர்களின் குளிர்மையான தேன் பெருக்கினையுடைய யாறுபோலப் பாயும்,—களபந் திமிர் அம் புயப் பாகர் கருத்துக்கு அடங்காக் கறையடிப் போர்க்களபம் - கலவைச்சாந்துபூசிய அழகியபுயங்களையுடைய பாகர்களது கருத்துக்கு அமையாத உரல்போலுங் கால்களையுடைய போரில் வலிய யானைக் கன்றுகள்,—அளிக்காவகம் எல்லாம் - வண்டுகள்பொருந்திய சோலையிடங்களிலெல்லாம்,—திமிரக் குருளையெனக் களிக்கும்-இருள்வடிவான குட்டிகள்போலக் களிப்புற்றிருக்கும். எ-று. (௨௯)

வேறு.

கரும்புருவச் சிலைமடவார் கந்துகநின் றுடவுயர் கவின்செய் மாடங், கரும்புருவச் செலுமதன்மேற் கற்பகம்பூந் தேன்சாய்க் குங்காமர் வீதி, கரும்புருவக் குரிசிலன்னார் வளர்க்கவளர் கங்குனிறங் கடுக்குங் காழ்த்த, கரும்புருவை செம்மையும்போ ராட்டோதை யெவ்வயினுங் கணைப்ப றுதால்.

இ-ள். கருஞ் சிலைப்புருவ மடவார் நின்று கந்துகமாட உயர் கவின்செய் மாடம் - கருமையாகிய விற்போலும் புருவங்களையுடைய மகளிர் நின்று பந்துவிளையாட உயர்கின்ற காந்தியைச் செய்யும் மாடம்,—கரும்பு உருவச் செலும் - புனர்பூசத்தின்பதத்தையும் பீறி மேற்செல்லும்,—அதன் மேற் கற்பகம் பூந்தேன் சாய்க்கும் - அம்மாடத்தின்மேலே கற்பகதரு மலர் மதுவை வீழ்த்தும்,—உருவக் கரும்புக் குரிசிலன்னார் வளர்க்கவளர் - உருவங்கொண்ட கருப்புவில்லியை ஒத்த காளையர்கள் வளர்க்கவளர்ந்த,—கங்குல் கடுக்கும் நிறக் காழ்த்தகருஞ் செம்மைப் புருவையும் போராட்டு ஓதை - இருள் போலும் நிறத்தினையுடைய வயிரம் பொருந்திய ஆடுகளுஞ் செம்மையாகிய ஆடுகளும் போர்செய்யுமிடத்துண்டாகும் ஒலியினுல்,—காமர் வீதி எவ்வயினுங் கணைப்பு அறுது - அழகிய வீதிகளின் எவ்விடங்களினும் முழக்கம் ஒழியாது. எ-று. (௩௰)

வேறு.

தானத் தோடு தழுவுமவ் வாரணந், தானத் தோடு தழுவுமவ் வாரணம், வானத் தோடு மலையும் வலம்புரி, வானத் தோடு மலையும் வலம்புரி.

இ-ள். தானத்தோடு தழுவும் அவ் ஆரணம் - (ஆண்டுள்ளார்செய்யும்) தானங்களோடு சேர்(த்துச்சரிக்கப்படு)கின்ற சிவவேத ஒலிகளும்,—வலம்புரி-சங்கொலிகளும்,—வானத்து ஓடும் அலையும்-சுவர்க்கத்திலுஞ் சென்று திரியும்,—வானத்தோடு மலையும் வலம்புரி - முகில்களையும் மலைகளையும் வென்ற,—அவ்வாரணம் - அங்குள்ள யானைகள்,—தானத்தோடு தழுவும் - மதசலப்பெருக்கோடு பொருந்தும். எ-று. (௩௧)

செல்லு மீனுந் திகழ்தரு மாசினி, செல்லு மீனுந் திகழ்தரு மாசினி, யெல்லை நீக்கு மிருஞ்சுனை யாரமே, யெல்லை நீக்கு மிருஞ்சினை யாரமே.

இ-ள். திகழ்தரும் ஆசினி - விளங்குகின்ற ஈரப்பலாக்கள்,—செல்லும் மீனுந் திகழ்தரும் ஆசினி செல்லும் ஈனும் - முகில்களும் நட்சத்திரங்

களும் ஒளியைத்தருகின்ற ஆகாயத்திற் செல்லும் (சென்று காய்களை) ஈனும்,—இருஞ் சுனை ஆர் அம் - பெரிய வாவிகளிற் பொருந்திய ஜலங் கள்,—எல்லை நீக்கும் - வெய்யிலி(ன் வெம்மையி)னை அகற்றும்,—இருஞ் சினை ஆரம் - பெரிய கிளைகளையுடைய சந்தனமரங்கள்,—எல்லை நீக்கும் - (மிகமேலோங்கிச்) சூரியனையும் (போகவிடாது) விலக்கும். எ-று. (௬௨)

காலுந் தேறல் கழனியின் கண்ணெலாங், காலுந் தேறல் கரும்புறு கண்ணெலாஞ், சாலி யூடு செலுந்திரட் சங்கமே, சாலி யூடு செலுந்தருச் சங்கமே.

இ-ள். கழனியின்கண் நெல் கால் உந்து ஏறல் ஆம் - வயல்களில் நெற்கள் வாயுமண்டலத்தையுந் தள்ளி மேற்செல்லுதலை உடையனவாம்,— கரும்பு உறு கண் எலாந் தேறல் காலும் - கரும்புகள்பொருந்திய இடங்களி லெல்லாம் இரசம் வடியும்,—திரட் சங்கஞ் சாலியூடு செலும் - திரளாகிய சங்குகள் நெற்பயிர்களினுள்ளே உலாவும்,—தருச்சங்கஞ் சாலி ஊடு செலும் - மரக்கூட்டங்கள் அருந்ததியின் பதத்தினுஞ் செல்லும். எ-று. ()

ஓடை காட்டு மொளிர்வனப் போதக, மோடை காட்டு மொளிர் வனப் போதகங், கோடு காட்டுங் குளிர்ந்ததண் ணாரமே, கோடு காட்டுங் குளிர்ந்ததண் ணாரமே.

இ-ள். ஓடை அகம் ஒளிர் வனப் போது காட்டும் - ஓடைகளின் இடங்கள் விளங்குகிற வன்னமாகிய மலர்களைக் காட்டும்,—ஒளிர் வனப் போதகம் ஓடைகாட்டும் - விளங்குகிற காடுகளிற் பிறந்த யானைகள் நெற் றிப்பட்டங்களைக் காட்டும்,—கோடு குளிர்ந்த தண் நாரம் காட்டும் - நீர்க் கரைகள் மிகக்குளிர்ந்த ஜலத்தைக்காட்டும்,—குளிர்ந்த தண் ஆரம் கோடு காட்டும் - மிகக்குளிர்ந்த சந்தனமரங்கள் கொம்பர்களைக் காட்டும்.எ-று. ()

வாலி பத்தின் மதர்ப்புமிக் காகிய, வாலி பத்தினை யொப்ப வர் வைத்துள, மூல மட்டுறு முட்கனி யின்பலா, மூல மட்டுறு மொய்ப்பன வண்டெலாம்.

இ-ள். வாலிபத்தின் மதர்ப்பு மிக்காகிய வால் இபத்தினை ஒப்பவர் - சிறுபருவத்தினையுடைய களிப்புமிகுந்த சுத்தமாகிய யானைக்கன்றுகளை நிகர்ப்பவர்(களாகிய காளையர்)கள்,—வைத்துள மூலம் மட்டு உறு பலா முட்கனியின்-உண்டாக்கிய மூலநட்சத்திரம்வரையும் உயர்ந்தபலாக்களின் முட்பொருந்திய பழங்களிலே,—வண்டெலாம் மூலம் மட்டு உறு மொய்ப் பன - வண்டுகளெல்லாம் (தலைமுதல்) அடிவரையும் பொருந்தி மொய்ப் பன. எ-று. (௬௫)

வான ரம்பை வளவயற் கோடெலாம், வான ரம்பயி லும் மரக் கோடெலாம், பான லத்திடை பாய்வசெந் தேன்களே, பாந லத்திடை பாய்வசெந் தேன்களே.

இ-ள். வள வயற்கோடெலாம் வான் அரம்பை-மாட்சிமைபொருந்திய வயற்கரைகளினெலலாம் பெருமையாகிய வாழைகள் (உள),—மரக்கோ டெலாம் வானரம் பயிலும் - மரக்கொம்புகளிலெல்லாங் குரங்குகள் உலா வும்,—செந்தேன்கள் பானல் இடை பாய்வ - செம்மையாகிய வண்டுகள் கருங்குவளைகளின்மீது வீழ்வன,—நலத்துப் பாவிடைச் செந்தேன்கள்

பாய்வ - நன்மையாகிய பாட்டுக்களினிடங்களினின்று (சுவையுடைப் பொருள்களாகிய) செந்தேன்கள் பெருகுவன. எ-று.

பானலத்திடை என்புழி அத்துச்சாரியை. (௫௬)

வேறு.

வாழ்த்தலை மதகு தோறு மடுத்தலை கொழித்துத் தெண்ணீர்
வீழ்த்தலை நோக்கி நாரை மிசைத்தலை விரும்பி வாளைக்
காழ்த்தலை முனைவாய் குத்தக் கதிர்த்தலை சாய்த்துத் தண்சாய்க்
கீழ்த்தலைப் பதுங்கி மீண்டு கிளர்ந்தலை புனலிற் பாயும்.

இ-ள். தெண்ணீர் - (பொருநையாற்றின்) தெளிந்தநீர்,—தலை வாழ் மதகுதோறும் மடுத்து - தலைமை தங்கிய மதகுகடோறும் நிறைந்து,—அலை கொழித்து வீழ்த்தலை - திரைகளினாலே (மீன்முதலியவற்றை) வாரி (க்கரையில்) விழுத்திவிடுதலை,—நாரை நோக்கி மிசைத்தலை விரும்பி வாளைக் காழ்த் தலை முனை வாய் குத்த-நாரை கண்டு உண்ணுதலை வேண்டி வாளைமீன்களின் வயிரமாகிய சிரசுகளை நுதிபொருந்திய வாயினாற்குத்த,—கதிர்த் தலை சாய்த்து-(அம்மீன்கள் அகப்படாது தம்முடைய) ஒளிபொருந்திய தலைகளைச்சாய்த்து,—தண் சாய்க் கீழ்த்தலைப் பதுங்கி-குளிர்மையான கோரைப்புற்களின் கீழிடங்களிற் பதுங்கி,—மீண்டு கிளர்ந்து அலை புனலிற்பாயும் - திரும்பி எழுந்து அலைகின்ற நீரினுட்பாயும். எ-று. (௫௭)

காரெனத் திரண்டு பால்வாய்க் கன்றுள்ளிக் கனைத்து லாவி
நீரிடைப் படிந்த மேதி நெரிமருப் பூர்ந்த சங்க
மாரமுத் துகுப்பத் திங்க ளமுதவான் றாரை யென்னக்
கூரிதழ்ப் பசுந்தாள் வாசக் குவளைவாய் மலரு மாதோ.

இ-ள். காரெனத் திரண்டு பால் வாய்க் கன்று உள்ளிக் கனைத்து உலாவி - முகில்போலத் திரண்டவடிவினவாய்ப் பால்பொருந்திய வாயையுடைய கன்றுகளை நினைந்து ஒலித்துத் திரிந்து,—நீரிடைப் படிந்த மேதி - நீரினுள்ளே தங்கிய எருமைகளினது,—நெரி மருப்பு ஊர்ந்த சங்கம் ஆர முத்து உகுப்ப - முறுகிய கொம்புகளில் ஏறிய சங்குகள் நிறைய முத்துக்களை ஈன,—குவளைப் பசுந்தாள் வாசக் கூரிதழ் - குவளைகளினது பசுமையாகிய நாளம் பொருந்திய நறுமணத்தையுடைய கூரிய முகைகள்,—திங்கள் அமுதவான் தாரை என்ன - (அம்முத்தொளியை) சந்திரனுடைய (கிரண) அமுதமாகிய மழையின் ஒழுக்கென்று நினைந்து,—வாய்மலரும் - வாய்விரியும். எ-று. (௫௮)

வண்டலை யிழைக்கும் வாட்கண் மகளிர்பூங் காம ரோதி
கொண்டலென் றயிர்த்துத் தோகைக் குலஞ்சிறை விரிப்ப வாசத்
தண்டலை கிடந்த மேகந் தண்புனல் சொரியுந் தோறும்
விண்டலை யளப்பச் சாலி வேலிமீக் கிளரு மாதோ.

இ-ள். வண்டலை இழைக்கும் வாட்கண் மகளிர் பூங் காமர் ஓதி - வண்டல் விளையாட்டைச் செய்யும் வாள்போலுங் கண்களையுடைய பெண்களினது பூவையணிந்த அழகிய கூந்தலை (க்கண்டு),—தோகைக் குலங் கொண்டலென்று அயிர்த்துச் சிறை விரிப்ப - மயிற்கூட்டங்கள் முகிலென்று ஐயுற்றுச் சிறைகளை விரிக்க,—வாசத் தண்டலை கிடந்த மேகம்-

நறுமணமுடைய சோலைகளிற்கிடந்த முகில்கள் (அம்மயிலாட்டத்தைக் கண்டு தம்பருவம்வந்ததென்று நினைந்து),—தண்புனல் சொரியுந்தோறும்—குளிர்ந்த நீரைப் பொழியுந்தோறும்,—விண் தலை அளப்பச் சாலி வேலி மீக்கிளரும் - ஆகாயத்தின் இடத்தை அளாவி நெற்கள் நிலத்தின்கண் மேலே விளங்கும். எ-று. (௩௯)

வீதியின் மறையோ ரோதும் வேள்விக்கா ரிசைநூல் கேட்டுப்
போதுகொய் கிளியும் பாடற் பூவையு மிழற்றுந் தீஞ்சொற்
கேதமின் முனிவர் தேவர் கேட்டவி நமக்குண் டாமென்
றேதிலாப் பொதும்ப ரெல்லா மிமைப்பிலா திருப்பர் மாதோ.

இ-ள். வீதியின் மறையோர் வேள்விக்கு ஓதும் ஆர் இசைநூல் கேட்டு - வீதிகளில் வேதியர்கள் யாக(கால)த்தில் ஓதிய அரிய சுரம் பொருந்திய வேதங்களைக் கேட்டு (மனனஞ்செய்து கொண்ட),—போது கொய் கிளியும் பாடற்பூவையும் - மலர்களைக் கொய்கின்ற கிளிகளும் பாடலில் வலிய நாகணவாய்ப்புட்களும்,—மிழற்றுந் தீஞ் சொல் - (காலாந்தரங்களில்) ஒலிக்கின்ற இனிமையான (அவ்வேத) மொழிகளை,—கேதம் இன் முனிவர் தேவர் கேட்டு - துன்பமில்லாத முனிவர்களுந் தேவர்களுங் கேட்டு,—நமக்கு அவி உண்டு ஆம் என்று - (இங்ஙனம் வேள்வி நிகழ்கின்றது போலும்; ஆதலின்) எமக்கும் அவிப்பாகம் உள்ளதாமே என்று நினைந்து,—ஏதிலாப் பொதும்பரெல்லாம் இமைப்பிலாது இருப்பர் - குற்றமற்ற சோலைகளிலெல்லாம் (எவ்விடத்து எப்பொழுது தம்மை அழைத்தல் நிகழுமோ என்னுங் கருத்தால்) விழியிமைத்தலின்றி இருப்பர். எ-று. (௪௦)

அம்புரு வங்கோ டாம லயில்விழி யிமையா டாமற்
றம்புரு வேழு வேழான தானத்திற் கான மூட்டிக்
கம்புருக் களம்விம் மாமற் கனியனார் பாடுந் தோறுந்
தும்புரு முதலோர் கேட்டுச் சுடர்முடி துளக்கு வாரால்.

இ-ள். கனியனார் - கனியையொத்த (இனியவனிதையரான)வர்,—தம்புரு வேழு வேழான தானத்திற் கானம் மூட்டி - தம்புருவாத்தியத்தில் இருபத்தொரு தானங்களில் (ஏற்ற பெற்றி) கீதத்தை அமைத்துக்கொண்டு,—அம் புருவங் கோடாமல் - அழகிய புருவங்கள் வளையாமலும்,—அயில்விழி இமை ஆடாமல் - வேல்போலுங் கண்களின் இமைகள் அசையாமலும்,—கம்பு உருக் களம் விம்மாமல்-சங்குபோலும் அழகினையுடைய கழுத்து விம்மாமலும்,—பாடுந்தோறும் - (தம்மிடறுகளாற்) பாடும்பொழுதெல்லாம்,—தும்புரு முதலோர் கேட்டுச் சுடர் முடி துளக்குவார் - (தலைவாசவிசேடம் பற்றிப்பயின்றுவருந்) தும்புரு முதலிய (பெரியோ)ர்கேட்டு (அதிசய ஆநந்தமுடையராய்) ஒளிபொருந்திய முடிகளை அசைப்பார். எ-று. (௪௧)

வாணொளி மதியுந் தங்கள் வதனமும் பதண மாதர்
கேளுட னிருந்து செங்கைக் கிசலயக் கவின்செய் யாடி
நீளொளி முழுது நோக்கி நிழன்மதி களங்கா மென்று
சாளரக் கதவு சாத்தித் திங்களைத் தடைசெய் வாரால்.

இ-ள். பதணம் மாதர் கேளுடன் இருந்து - மதின்மேடைகளிலே மகளிர் சுற்றத்தோடு இருந்து,—கிசலயச் செங்கைக் கவின்செய் ஆடி-

தளிர்போலுஞ் செம்மையான (தங்) கைகளிற்கொண்ட காந்தியைச் செய்யுங் கண்ணாடிகளினுள்ளோ,—வாளொளி மதியுந் தங்கள் வதனமும் நீள் ஒளி முழுதும் நோக்கி - (விரகிகளைத் துயருறுத்தலால்) வாளை நிகர்த்த ஒளியினையுடைய சந்திரனிடத்துந் தங்கள் முகத்தினிடத்தும் மிகுந்த ஒளிமுழுமையையும் (ஒத்துப்) பார்த்து,—மதிநிழல் களங்கம் என்று - சந்திரனது ஒளி குற்றமுடையதாம் என்று (இகழ்ந்து) கூறி,—சாளரக் கதவு சாத்தித் திங்களைத் தடை செய்வார் - பலகணிக்கதவை அடைத்து (அச்) சந்திரனது ஒளியை (உள்ளே வாராவண்ணந்) தடைசெய்வார் எ-று. (௬௨)

ஒருதலைக் காமத் துற்றோ ரோவியத் தலைமை பூண்டோர்
வருகலைக் குறித்து நோக்கி மாணுருக் கிழியிற் கோட்டித்
தருதலைப் புரிதி ராயிற் றனதனொப் பாக்கு வோமென்
றிருதலைப் பேரி னோரு மிரங்கிநொந் தழுங்கு வாரே.

இ-ள். ஒருதலைக்காமத்து உற்றோர் - (பிரிந்ததமது துணையை நினைந்து வருந்தல் என்னும் இயல்பினையுடைய) கைக்கிளையினைக்கட் பொருந்தினவராகிய,—இருதலைப் பேரினோரும் - (தலைமகன் தலைமகள் என்னும்) இருதிறமாய தலைநாமத்தவர்களும்,—ஓவியத் தலைமை பூண்டோர் வருகலைக் குறித்து - சித்திரவித்தையின் முதன்மை படைத்தவ(ரானசிற்ப)ர்(தம்மிடத்து)வருதலை(த்தக்கதுதார்வாயிலால்) நியமித்து,—நோக்கி - (அங்ஙனஞ் சுட்டிய காலத்துச் சுட்டியவிடத்து வந்த அவரைப்) பார்த்து,—மாண் உருக் கிழியிற் கோட்டித் தருதலைப் புரிதிராயின் தனதன் ஒப்பாக்குவோம் என்று நேர்ந்து - (நாஞ் சுட்டியவரது) மாட்சிமையான உருவத்தைப்படத்தில் எழுதித்தருதலைச் செய்வீராயின் (உம்மைக்)குபேரனுக்கு நிகராக்குவோம் என்று பிரதிஞ்ஞைசெய்து,—இரங்கி அழுங்குவார் - மனமுருகி அலைவார். எ-று. (௬௩)

சூதினிற் பொருது வென்றோர் தோற்றவர் நிதியம் வாங்கி
வீதியிற் குவித்த றேர்ந்து வெள்கிய தன்மை யாலோ
தாதகிச் சடையான் றோழத் தன்மையு மாக மேனிக்
கேதமுற் றியக்கர் வேடத் திருந்தன னளகைக் கோமான்.

இ-ள் சூதினிற் பொருது வென்றோர் - சூதின் மலைந்து ஜயம்பெற்றவர்கள்,—தோற்றவர் நிதியம் வாங்கி வீதியிற் குவித்தல் - அபஜயமுற்றவருடைய திரவியங்களை(க் காலந்தோறும்)வாங்கி வீதியிற் சேர்த்திருத்தலை,—அளகைக்கோமான் தேர்ந்து வெள்கிய தன்மையாலோ - குபேரன் அறிந்து நாணிய இயல்பினாற்போலும்,—தாதகிச் சடையான் தோழத்தன்மை ஆகவும் - ஆத்திமாலையை அணிந்த சடையையுடைய (சிவபெருமா)னுக்குத் தோழனென்றதன்மை உளதாகவும்,—மேனிக்கு ஏதம் உற்று - உடம்பிற் குற்றம் பற்றி,—இயக்கர் வேடத்து இருந்தனன் - இயக்கருக்குரிய கோலத்தோடு இருந்தான். எ-று. (௬௪)

ஆறெனு மங்கத் தாற்றி னைமைந்துமா மகத்தின் செய்கை
தேறுநான் மறையோ ரெல்லாஞ் சிறந்துமுப் போது மாற்றிக்
கூறிரு வினைக ணீக்கிக் குமரநா யகன்றா ளொன்றே
பேறென விதயத் தெண்ணிப் பெருமிதத் தடைவ ரம்மா.

இ-ள். தேறுநான்மறையோர் எல்லாம் - தெளிந்த சதுர்வேத ஞானத்தையுடைய(அந்தண)ரெல்லாரும்,-ஆறெனும் அங்கத்து ஆற்றின் அமைந்து-(ஓதல் ஓதுவித்தல் முதலிய) ஆறாகிய அங்கங்களோடு (வைதிக) மார்க்கத்தில் அமைதலுடையராய்,—மாமகத்தின் செய்கை சிறந்து - பெரியயாகச் செயலாற்சிறப்புற்று,—முப்போதும் ஆற்றி - திரிகாலக்கியதிகளையும் அனுட்டித்து,—கூறு இருவினைகள் நீக்கிக் குமரநாயகன் தாள் ஒன்றே பேறு என இதயத்து எண்ணி - சொல்லப்படுகின்ற இருவினைகளையும் நீக்கிக் குமாரசுவாமியினுடைய திருவடிகளின் ஒன்றுதலே (தமக்கு வேண்டும்) பெறுதி என்று மனத்து நினைத்து,—பெருமிதத்தவர் - பெருமையிற் சேர்வர். எ-று. (௪௫)

மைந்தர்தஞ் சிறுபொற் றேரும் வாம்பரி மகநான் முற்றி
யந்தணர் வருந்திண் டேரு மரசர்மாக் கடவு தேரு
மிந்திரன் முதலாந் தேவ ரேறுபொற் கொடிஞ்சித் தேருஞ்
சந்தத மளவ ளாவித் தலைமயக் குற்ற வீதி.

இ-ள். மைந்தர்தஞ் சிறுபொற்றேரும் - சிறுவர்களுடைய சிறியபொற்றேர்களும்,—அந்தணர் வாம்பரிமகம் நால் முற்றி வருந் திண் டேரும் - மறையவர்கள் அசுவமேத யாகங்களைச் சாத்திரவிதியால் (இயற்றி) முடித்து (இவர்ந்து) வருந் திண்மையாகிய தேர்களும்,—அரசர் மாக் கடவு தேரும்- அரசர்கள் குதிரைகளைக் கொண்டு செலுத்துகிற தேர்களும்,—இந்திரன் முதலாந் தேவர் ஏறு பொற்கொடிஞ்சித் தேரும் - இந்திரன் முதலான தேவர்கள் ஏறும் பொன்மயமான கொடிஞ்சிகளையுடைய தேர்களும்,—வீதி சந்ததம் அளவளாவித்தலைமயக்குற்ற - வீதிகளில் எப்போதுங்கலந்து எங்கும் பொலிதலுற்றன. எ-று. (௪௬)

வேறு.

ஏர்க்காலின் றலைபிடிப்பா ரிணைக்காலி லெழுந்தகய லினமார்த் தாண்டன், றேர்க்காலின் வெடிதாவிச் செருக்காற்றிங் களினமுதச் சேறா டாடிப், போர்க்காலிற் போய்வானப் புதுக்காலிற் குடைந்தாடிப் பொழியு மேக, நீர்க்காலின் மீண்டிறங்கி நெடுங்காலின் றலையுலவி நிகழு மாதோ.

இ-ள். ஏர்க்காலின்றலை பிடிப்பார் இணைக்காலில் எழுந்த கயலினம்- மேழிகளைப் பிடிப்பா(ராகிய உழவ)ரது உபயபாதங்களின்(மிதிபட்டு)மேலே சென்ற கயன்மீன்கூட்டங்கள்,—மார்த்தாண்டன் தேர்க்காலின் வெடிதாவி - சூரியனது தேருருளின்கண்ணே அச்சந்தோடு பாய்ந்து,—திங்களின் அமுதச் சேறாடாடி - (ஆண்டுச்சூடுபெற்றமையின் மீண்டுபாய்ந்து) சந்திரனது அமுதக்குழம்பிற் படிந்து,—செருக்காற் போர்க்காலிற் போய் வானப் புதுக்காலிற் குடைந்து ஆடி - களிப்பினோடு பொருதலையுடைய வாயுப்போல விரைந்து சென்று ஆகாயகங்கையிற படிந்து விளையாடி,—மேகம் பொழியும் நீர்க்காலின் மீண்டு இறங்கி - முகில்பொழியும் மழைநீரின் வழியான் மீண்டு கீழ்வந்து,—நெடுங்காலின்றலை உலவி நிகழும்- யாற்றின்கண்ணே உலாவி விளங்கும். எ-று. (௪௭)

வேறு.

மதுநவ பானஞ் செய்யு மாதர்கண் மாட மேற்போய்
மிதுனநல் யாழெடுத் தெண்ணி விண்ணிடைக் கரங்க ணீட்டக்

கதுமெனச் சேடி யார்கள் கல்லென நகைத்துத் தங்கைப்
பதுமயாழ் கொடுத்து முன்னர்ப் பண்பினை யமைத்தல் செய்வார்.

இ-ள். மது நவபானஞ் செய்யும் மாதர்கள் - கள்ளைப் புதிதாகக் குடித்த மகளிர்கள்,—மேன்மாடம் போய் - மேன்மாளிகைகளில் உலாவி,—விண்ணிடை மிதுனம் நல்யாழென்று எண்ணிக் கரங்கள் நீட்ட - ஆகாயத்துள்ள மிதுனராசியை (வடிவொப்புமையினால்) நல்ல வீணையென்று நினைந்து (அதனை எடுத்துப்பாடவேண்டிக்) கைகளைநீட்ட,—சேடிமார்கள் கல்லென நகைத்து - (கண்ட)பாங்கியர்கள் கல் என்று சிரித்து,—கதுமெனத் தங்கைப்பதுமயாழ் கொடுத்து - விரைவாகத் தங்கள் கைத்தாமரைமலர்களில் வைத்திருந்த வீணைகளைக் கொடுத்து,—முன்னர்ப் பண்பினை அமைத்தல் செய்வார் - (இராசியைக்கைக்கொள்ளு முயற்சியாகிய) முன்னர்க்கொண்ட குணத்தை அடக்குவார். எ-று. (௬௮)

வேறு.

பழமறை முறைமுறை தெரிதொனியும் பலசுருதியினிசை பயிறொனியும், விழைவுறு வதுவையின் முழவொலியும் விகலமின் மனுநெறி பயிறொனியு, மழல்விழி மதகய முரறொனியு மயில் விழியினர்நட மிடுமொலியு, மழையென வுதவினர் தமதொலியு மறிகட லினுமொலி தருமறுகு.

இ-ள். மறுகு - வீதிகளிலே,—பழமறை முறைமுறை தெரிதொனியும் - பழைய வேதங்களை முறைமுறையாக ஆராயும் ஒலியும்,—பலசுருதியின் இசை பயில் தொனியும் - பலவேதங்களின் சுரங்களைப் பழகும் ஒலியும்,—விழைவுறு வதுவையின் முழவொலியும் - விரும்பும் விவாகத்து முரசொலியும்,—விகலமில் மனுநெறி பயில் தொனியும் - குறைவற்ற மனுநீதிகளைப் பயிலும் ஒலியும்,—அழல் விழி மதகயம் முரல் தொனியும் - தீக்காலுங் கண்களையுடைய மதயானைகள் ஒலிக்கும் ஒலியும்,—அயில் விழியினர் நடமிடும் ஒலியும் - வேற்கண் மகளிர் கூத்தாடும் ஒலியும்,—மழையென உதவினர் தமது ஒலியும் - முகில்போலத் தானம் பண்ணினவரது ஒலியும்,—மறிகடலினும் ஒலிதரும் - (திரைகளை) மடக்குகின்ற சமுத்திரனும் (மேற்பட்டு) முழங்கும். எ-று. (௬௯)

தரளவெண் மணிபல தரமிடுவார் தமதெதி ரெதிர்தலை விலை பகர்வார், பருமணி வயிரமி தெனவறைவார் பவளமி தொளியில தெனவிகழ்வார், விரைகமழ் பரிமள நலதெனவே மிகுதிலை யிதுபண வெடையினுமே, யரிதென விலைபக ரிளைஞர்கள்கூ றமலைகள் கடல்பொரு மணி மறுகே.

இ-ள். அணிமறுகு - அழகிய வீதிகளில்,—வெண் தரளமணி பல தரமிடுவார் - வெண்மையான முத்துமணிகள் பலவற்றைத் தரம்வகுப்பவர்களும்,—எதிரெதிர் தமது தலைவிலை பகர்வார் - எதிர்ந்தெதிர்ந்து தம்மதற்கு மேல்விலை சொல்வாரும்,—இது பரும் வயிரமணி என அறைவார் - இது பருமையான வயிரரத்தினம் என்று சொல்வாரும்,—இது ஒளியிலது பவளம் என இகழ்வார் - இது ஒளியற்ற பவளம் என்று நிந்திப்பாரும்,—விரை கமழ் பரிமளம் நலது என - (கொள்பவர் இந்தக்) கலவைச்சாந்து கமழுகின்ற சுகந்தத்தால் நல்லது என்று (புகழ்ந்து) சொல்லுதலும்,—

இது பணவெடையினும் மிகுது இலை அரிது என விலை பகர் இளைஞர்கள் - இக்கலவை ஒருபணவெடையினும் மிகுதியாய் (நம்மிடத்து) இல்லை; (இது யாண்டும்) அரியதே என்று விலை (யேற்றிச) சொல்லுகின்ற இளையர்களும்,- கூறு அமலைகள் கடல்பொரும் - பேசுகின்ற ஓசைகள் கடலொலியோடு மாறு கொள்ளும். எ-று. (௫0)

பரிநிரை விலையொடு சுழிதெரிவார் பணிமணி யொருவயின் விலையிடுவார், கரிநிரை யொருபுடை விலைபகர்வார் கதிர்திகழ் கனகம துரையிடுவார், மருமலி மலயச நிலைதெரிவார் வடகலை தமிழுரை முறையறைவார், விரிகலை பலபல விலைதெரிவார் மிகுதிக ளளவில தெருநிரையே.

இ-ள். தெருநிரை - தெருநிரைகளிலே,—பரிநிரை விலையொடு சுழி தெரிவார் - குதிரைநிரைகளுக்கு விலைகளையுஞ் சுழிகளையும் ஆராய்பவரும்,—ஒருவயின் பணிமணி விலையிடுவார் - ஒருபால் நாகரத்தினங்களுக்கு விலைமதிப்பவரும்,—ஒருபுடை கரிநிரை விலைபகர்வார் - ஒருபால் யானை நிரைகளுக்கு விலைகூறுவாரும்,—கதிர் திகழ் கனகமது உரையிடுவார் - ஒளி விளங்குகின்ற பொன்னை உரைப்பாரும்,—மருமலி மலயச நிலை தெரிவார் - மணமிகுந்த சந்தனத்தின் இயல்பை ஆராய்வாரும்,—வடகலை தமிழுரை முறை அறைவார் - வடநூல் தமிழ்நூல்களின் ஆவலிகளைச சொலவாரும்,—விரி கலை பலபல விலை தெரிவார் - விரிந்த (அவ்விருவகை) நூல்கள் பலபலவற்றுக்கும் விலைகளை ஆராய்வாரும்,—மிகுதிகள் அளவில - மிகு(ந்து சஞ்சரித்) தல்கள் அளவிறந்தன எ-று.

ஆவலி என்றது அட்டவணையை. (௫௧)

விரிதரு கொடைபொழி வியன்முரசும் வியனுறு வதுவையி னதிர்முரசு, மருவல ரடன்முடி கொளுமுரசும் மறையவர் மக முறை தருமுரசு, மருவிழும் மதகய மறைபுனலுண் ணமைதியி னடிபடு கடிமுரசு, மிரவொடு பகலுமன் மதன்முரசி னிகல்புரி வனசில சிலமறுகு.

இ-ள். சிலசில மறுகு - சிலசில வீதிகளிலே,—விரிதரு கொடை பொழி வியன் முரசும் - பரந்த தானங்களைப் பொழியுமிடத்துப் பெரிய முரசுகளும்,—வியனுறு வதுவையின் அதிர் முரசும் - பெருமைமிக்க மணங்களின் முழங்கும் முரசுகளும்,—அடல் மருவலர் முடிகொளும் முரசும் - போரிற பகைவரது முடிகளைக் கொள்ளுமிடத்து முரசுகளும்,—மறையவர் மகம் முறைதரும் முரசும் - அந்தணர் வேள்விகளை முறையே செய்யுமிடத்து முரசுகளும,—அருவி மும்மத கயம் அறை புனல் உண் அமைதியின் அடிபடு கடிமுரசும் - அருவிபோலும் மும்மதங்களைப்பொழியும் யானைகள் ஒலிக்கின்ற நீரைப் பருகும்பொழுதில் அடிபடுங் காவலாகிய முரசுகளும்,—இரவொடு பகலும் மன்மதன்முரசின் இகல்புரிவன - இரவும் பகலுங் கடலோடு மாறுபடுவன. எ-று.

மன்மதனுக்கு முரசாவது கடலாகலின் அது அதன்பெயராயிற்று. ()

சுளுகுகள் விவரமொ டுரையிடுவார் சுடர்விடு மணிமுடி விலையிடுவா, ரொளிவலை மணிபல தரமிடுவா ருறையிடு சரிகைநெய்

துவரிடுவா, ரளியொடு மிரவல ரெதிரெதிர் கூஉ யறுசுவை தருமச
னமுமிடுவார், களியின ரெழுதிய கிழியெதிரே களியொடு திரிபவ
ரளவிலரே.

இ-ள். சுளுகுகள் விவரமொடு உரையிடுவார் - (எண்ணியகருமத்திற் சித்திபெறுதற்கு வேண்டிய) உபாயங்களை விவரங்களோடு சொல்லவல்ல வரும்,—சுடர்விடு மணி முடி விலை இடுவார் - ஒளியை வீசுகின்ற மணி கட்கு முடிவானவிலையை மதிப்பவரும்,—ஒளி வளை மணி பல தரமிடு வார் - ஒளியையுடைய சங்குமுத்துக்கள் பலவற்றையுந் தரம்வகுப்பவர் களும்,—உறை இடு சுரிகை நெய் துவரிடுவார் - உறைகளில் இடப்படும் உடைவாட்படைகட்கு நெய் பூசுவாரும்,—அளியொடும் இரவலர் எதி ரெதிர்கூஉய் அறுசுவைதரும் அசனமும் இடுவார் - அன்போடு யாசகர் களை நேர்நேராக அழைத்து அறுசுவை பயக்கும் உண்டிகளை வழங்கு வாரும்,—களியினர் எழுதிய கிழி எதிரே - செருக்கினையுடையராய் (நாம் இதுசெய்வம் நாம் இதுசெய்வம் என்று தனித்தனி தத்தம் இன்முகங் களிலே) எழுதிவைத்த படங்களின் முன்னே,—களியொடு திரிபவர் அள விலரே - (அவ்வவரால் அவ்வக்கரும முடிக்கவேண்டி) மகிழ்ச்சியோடு திரிபவரும் எண்ணிறந்தவர்கள். எ-று. (௫௩)

மலர்மக ளரியுடன் வருவதெனு மணிகெழு சிவிகையி னிடை
வருவா, ரிலைதளிர் மலர்சிவ னடியிடவே யிரவியின் னெழுமுன
மவைதெரிவார், பலகலை தெரிகுர வரினிடையே பணிவிடை
முழுவது முறைபுரிவார், துலையறு சதுர்மறை முறைமுறையோ
துநர்பெரு கியதெரு வளவிலவே.

இ-ள். மலர்மகள் அரியுடன் வருவதெனு மணிகெழு சிவிகையினிடை வருவார் - திருமகள் திருமாலோடு வருவதுபோல இரத்தினமழுத்திய சிவிகைகளில் வருந் தம்பதிகளும்,—இலை தளிர் மலர் சிவனடி இட இரவி யின்னெழு முனம் அவை தெரிவார் - பத்திர பல்லவ புட்பங்களைச் சிவ பாதங்களிற சாத்துமாறு சூரியன் உதிக்குமுன் அவற்றை ஆய்வாரும்,— பலகலை தெரி குரவரினிடையே பணிவிடை முழுவதும் முறை புரிவார்- பலநூல்களையும் அறிந்த ஆசிரியரிடத்தே (சார்ந்து அவருடைய) தொண்டு களையெல்லாங் கிரமமாகச் செய்பவரும்,—துலையறு சதுர்மறை முறை முறை ஓதுநர் - ஒப்பற்ற சதுர்வேதங்களைக்கிரமங் கிரமமாக ஓதுபவரும்,- பெருகிய தெரு அளவில - மிகுந்துள்ள தெருக்கள் அளவற்றன. எ-று. ()

வேறு.

இனைய தாகிய செயந்திநன் னகரென விமையோர்
முனைவை வேலவன் முன்னநின் றெடுத்துரை மொழிய
வனைய செய்கையை யாறுமா முகப்பிரா னறிந்தே
வினைய மோர்ந்துபோர் வீரவா குவுக்கிவை விளம்பும்.

இ-ள். இனையதாகிய செயந்தி நன்னகர் என - இவ்வியல்புகளை யுடையதாகிய செயந்தியே நல்ல நகரமாம் என்று,—இமையோர் முனை வை வேலவன் முன்னம் நின்று உரை எடுத்து மொழிய - தேவர்கள் நுதிபொருந்திய கூரியவேலையுடைய கடவுளின் எதிரேநின்று ஒலியெடுத் துக்கூற,—ஆறுமாமுகப்பிரான் அனையசெய்கையை அறிந்து - ஆறுமா முகக்கடவுள் அச்செய்கையை அறிந்து,—வினையம் ஓர்ந்து போர் வீரவாகு

வுக்கு இவை வினய்யும் - உபாயத்தை அறிந்துபொருதலையுடைய வீரவாகுவுக்கு இவற்றைச் சொல்வார். எ-று. (ருரு)

வீர வாகுநீ கேளென யாவர்க்கு மேலோன்
பேர வாவுறு நினைக்கிளை யார்தமைப் பெரிதாம்
பாரி டத்தொகை யவர்தமைப் பதாதியந் தலைவர்
யாரை யும்மிவட் கொணருதி யாலென விசைத்தான்.

இ-ள் யாவர்க்குமேலோன் வீரவாகு நீ கேள் என - எவர்க்குந்தலைவ(ராகிய அ)வர் வீரவாகுவே நீ கேள் என்று சொல்லி,—பேரவா உறும் நினைக்கிளையார்தமை - பேராசை பொருந்திய உன் தம்பிமாரையும்,—பெரிதாம் பாரிடத்தொகையவர்தமை - பெருமையான பூதக்கூட்டத்தவரையும்,—பதாதியந்தலைவர் யாரையும் - பூதசேனபதிகள் யாவரையும்,—இவண் கொணருதி என இசைத்தான் - இங்ஙனம் வருவி என்று ஆஞ்ஞாபித்தார். எ-று. (ருசா)

இசைசெய் வாசக மனைத்தையுங் கருத்திற லெண்ணி
விசைய மொய்ம்பனும் பாரிடத் தொகையையு மேலா
மசைவில் பூதசே னாதிபர் யாரையு மடங்காத்
திசைதொ ழும்பினோர் தம்மையும் விளித்தனன் சிறந்தான்.

இ-ள். இசைசெய் வாசகம் அனைத்தையுஞ் சிறந்தான் விசயமொய்ம்பனுங் கருத்திறல் எண்ணி - (அவர்) கூறிய மொழிகளையெல்லாம் (கேட்டுச்) சிறந்த வீரவாகுவும் மனத்தில் நினைத்து,—பாரிடத்தொகையையும்-பூதக்கூட்டங்களையும்,—மேலாம் அசைவில் பூதசேனாதிபர் யாரையும் - மேலான சோம்பலற்ற* பூதசேனபதிகள் எவரையும்,—அடங்காத் திசைதொழும் பினோர்தம்மையும் - வலி குறையாத எத்திசையாராலும் வணங்கப்படுந் தம்பிமாரையும்,—விளித்தனன் - அழைத்தார். எ-று. (ருஎ)

விளித்த போதுபூ தாதியர் யாருமுள் வியந்து
களித்து வானமும் வையமு மொன்றெனக் கலந்து
துளிக்கும் வல்விடச் சேடனும் பணமுடி துளக்கி
நெளிக்க நின்றுகூத் தாடினர் வயங்கொடு நிரம்பி.

இ-ள். விளித்தபோது - அழைத்தபொழுதில்,—பூதாதியர் யாரும் வியந்து உட்களித்து வானமும் வையமும் ஒன்றெனக் கலந்து வயங்கொடு நிரம்பி - பூதவீரர் முதலியோரெல்லாரும் அதிசயித்து மனமகிழ்ந்து விண்ணும் மண்ணும் ஒன்றாகச்செறிந்து விஜயகோஷங் கொண்டு நிறைந்து,—சேடனும் வல்விடந் துளிக்கும் பணமுடி துளக்கி நெளிக்க நின்று கூத்தாடினர் - ஆதிசேடனும் வலியநஞ்சை ஒழுக்கும் படமுடைய முடிகளை அசைத்து(ப்பொறுக்கலாற்றாது) நெளிக்குமாறு நின்று கூத்தாடினார்கள். எ-று. (ருஅ)

வந்த காலையின் மாருதத் தலைவநீ மனத்தின்
முந்து தேரினைக் கடவுதி யாலென மொழிந்தே
யிந்தி ரன்மகண் மான்மக ளொடுங்கடி தெழுந்து
சிந்து ரப்பகைப் பீடநின் றொருவினன் சேயோன்.

இ-ள். வந்தகாலையில் - (அங்ஙனம் அவரெல்லாம்) வந்தபொழுதில்,—சேயோன் மாருதத்தலைவ நீ மனத்தின் மூந்து தேரினைக் கடவுதி என மொழிந்து - குமாரசுவாமியானவர் வாயுதேவனே நீ (வேகத்தினால்) மனத்தின் முற்பட்ட தேரைக் கொணர்தி என்று கூறி,—இந்திரன்மகள் மான்மகளொடுங் கடிதெழுந்து சிந்துரப்பகைப்பீடநின்று ஒருவினன்-தெய்வயானையோடும் வள்ளியம்மையோடும் விரைந்தெழுந்து சிங்காசனத்தினின்று நீங்கினார். எ-று. (ருகூ)

சீய மெல்லணை நீங்கியே செங்கதி ரனைய
பாயொ ளிச்சுடர்ப் பாதுகை மேற்பதஞ் சேர்த்தி
நாய கன்பெருங் கோபுர வாயிலி னண்ணி
வாயு வுக்கிறை கொணர்ந்ததே ரேறினன் மகிழ்ந்தே.

இ-ள். நாயகன் சீயமெல்லணை நீங்கி - (அங்ஙனம் அக்)கடவுள் சிங்காசனத்தினின்று நீங்கி,—செங்கதிரனைய பாயொளிச் சுடர்ப் பாதுகை மேற் பதஞ் சேர்த்தி-சூரியன்போலும் பரந்த ஒளியையுடைய பொற்பாதுகையிற் பாதங்களை வைத்து,—பெருங் கோபுரவாயிலின் நண்ணி - பெருமையாகிய கோபுரவாயிலிற் சேர்ந்து,—வாயுவுக்கிறை கொணர்ந்த தேர் மகிழ்ந்து ஏறினன் - வாயுதேவன் கொணர்ந்த தேரின்கண்ணே உவந்து இவர்ந்தருளினார். எ-று. (சு0)

தேரி னேறிய வேல்வையிற் செம்பொனி னடைப்பை
மார னேந்தினன் களாசியை வருணனின் றெடுத்தான்
கோர வீரவாள் கூற்றுவன் றனதுகைக் கொண்டா
னேரு லாவிய சாமர மிந்திர னெடுத்தான்.

இ-ள். தேரின் ஏறிய எல்வையில் - (சுவாமி) தேரில் இவர்ந்தருளிய பொழுது,—மாரன் செம்பொனின் அடைப்பை ஏந்தினன் - காமன் பொன்னாலாய வெற்றிலைப்பாத்திரத்தைத் தாங்கினான்;—வருணன் களாசியை எடுத்து நின்றான் - வருணன் படிக்கத்தை எடுத்து நின்றான்;—கூற்றுவன் கோர வீர வாள் தனது கைக்கொண்டான் - இயமன் பயங்கரமான வீரம்பொருந்திய வாட்படையைத் தன் கையிற் கொண்டான்;—இந்திரன் ஏருலாவிய சாமரம் எடுத்தான் - இந்திரன் அழகுபொருந்திய கவரியை எடுத்தான். எ-று. (சுக)

ஆத வத்தனிக் கடவுளு மமுதவான் றாரைச்
சீத வெண்மதிக் கடவுளுங் குடையுடன் செல்ல
நாத மிக்கெழு தந்திரி நகங்கொடு தடவி
மாத வத்துயர் தும்புரு நாரதர் வணங்க.

இ-ள். தனி ஆதவக்கடவுளும் அமுத வான் தாரைச் சீத வெண் மதிக்கடவுளுங் குடையுடன் செல்ல - ஒப்பற்ற சூரியதேவனும் அமுதமழையொழுக்கினையுடைய குளிர்ந்த வெண்மையான சந்திரதேவனுங் குடைபிடித்தலோடுசெல்ல,—மாதவத்து உயர் தும்புரு நாரதர் நாதம் மிக்க எழு தந்திரி நகங்கொடு தடவி வணங்க - பெருந்தவத்தின் உயர்ந்த தும்புருவும் நாரதரும் ஓசை மிகுந்த (யாழ்களின்) ஏழுநரம்புகளை நகங்களினாலே தடவி(ப்பாடி)வழிபட. எ-று. (சுஉ)

தாலு வேழுடைக் கடவுடீ வர்த்திகை தாங்கிப்
பாலின் வந்திட நிருதியுங் குபேரனும் பரவி
யால வட்டமும் விசிறியுங் கைக்கொள வலராக்
கோல நாண்மலர் மாரிதூஉய்க் கடவுளர் குழுமே.

இ-ள். ஏழு தாலு உடைக் கடவுள் தீவர்த்தி கை தாங்கிப் பாலின் வந்திட - ஏழு நாவுடைய அக்கினிதேவன் தீவர்த்தியைக் கைக்கொண்டு பக்கத்து வர,—நிருதியுங் குபேரனும் பரவி ஆலவட்டமும் விசிறியுங் கைக்கொள - நிருதியுங் குபேரனுந் துதித்து (முறையே) ஆலவட்டத்தையும் விசிறியையுங் கைகளிற் கொள்ள,—கடவுளர் அலராக் கோல நாண் மலர் மாரி தூஉய்க் குழும - தேவர்கள் பரந்து அழகான புதுமலர்மழைகளைப் பொழிந்து கூட. எ-று. (௬௩)

ஆயி ரக்கம லாசனத் திறையவ னன்னத்
தூய புட்கொடு புறஞ்செலச் சுடர்மணிக் கிரணப்
பாயொ ளிப்பணிப் பாயலான் படரிருஞ் சிறைய
நாய கத்தனிக் கருடன்மீ தேறின னடப்ப.

இ-ள். ஆயிரக்கமல ஆசனத்து இறையவன் தூய அன்னப்புட்கொடு புறஞ் செல - ஆயிரவிதழ்த்தாமரைமலராகிய ஆசனத்தையுடைய பிரமன் சுத்தமான அன்னப்பறவையின்மேற் கொண்டு பக்கத்திற் போக,—சுடர் கிரண மணிப் பாயொளிப் பணிப்பாயலான் - விளங்குகின்ற கிரணத்தை வீசுகின்ற இரத்தினத்தைக்கொண்ட பரந்த ஒளிபொருந்திய சேடனாகிய சயனத்தையுடைய(விட்டுணுதே)வன்,—படர் இருஞ் சிறைய நாயகத் தனிக் கருடன்மீது ஏறினன் நடப்ப - பரந்த பெரிய இறகுகளையுடைய (புள்) வேந்தனாகிய ஒப்பற்ற கருடன்மேல் இவர்ந்து செல்ல. எ-று. (௬௪)

சுரர்க ளார்த்தனர் முனிவர்க ளார்த்தனர் தொழுதே
நரர்க ளார்த்தன ரார்த்தன மறையொரு நான்குந்
தரையின் மேயசீ ரறஞ்சிறந் தார்த்தன தரங்கப்
பரவை யார்த்தென வார்த்தன பாரிடப் படையே.

இ-ள். சுரர்கள் ஆர்த்தனர் - தேவரும் ஒலித்தனர்;—முனிவர்கள் ஆர்த்தனர் - முனிவரும் ஒலித்தனர்;—நரர்கள் தொழுது ஆர்த்தனர் - மனிதரும் வணங்கி ஒலித்தனர்;—மறை ஒருநான்கும் ஆர்த்தன - வேதங்கள் நான்கும் ஒலித்தன;—தரையின் மேய சீர் அறஞ் சிறந்து ஆர்த்தன - நிலவுலகின்கண்ணே (கடவுள்) பொருந்திய பெருமையினாலே தருமங்கள் சிறந்து நிறைந்தன;—தரங்கப் பரவை ஆர்த்தெனப் பாரிடப்படை ஆர்த்தன - திரைகளையுடைய கடல் ஒலித்ததுபோலப் பூதசேனைகள் ஒலித்தன. எ-று. (௬௫)

துடிமு ழங்கின பேரிகை முழங்கின சொரிகா
ரிடிமு ழங்கின போலவான் றுந்துபி யிரைத்த
படக மேங்கின பதலைகள் பம்பின பரம்புங்
கடன்மு ழங்கின போலொலி பரந்தகா களமே.

இ-ள். துடி முழங்கின - உடுக்கைகள் கோஷித்தன;—பேரிகை முழங்கின - துந்துபிகளுங் கோஷித்தன;—சொரி கார் முழங்கின இடி

போல வான்றுந்துபி இரைத்த - (மழையைப்) பொழியும் முகில்கள் கோஷித்த இடிபோல ஆகாய பேரிகைகளும் முழங்கின;—படகம் ஏங்கின- பெரும்பேரிகைகளும் முழங்கின;—பதலைகள் பம்பின - ஒருகட்பறைகளும் முழங்கின;—பரம்பும் முழங்கின கடல்போற் காகளம் ஒலி பரந்த - பரந்து முழங்கிய கடல்போலக் காளங்கள் ஒலிபெருகின. எ-று (சுசு)

வேறு.

விண்ணவர் பெருமான் வந்தான் வேனெடும் படையான் வந்தான், பண்ணவர் மகுடந் தேய்க்கும் பதாம்புயக் கடவுள் வந்தா, னண்ணலங் குமரன் வந்தா னறுமா முகத்தன் வந்தான், றண்ணற வொழுகு நீபத் தாமவேள் வந்தான் வந்தான்.

கழுமலத் துதித்தஞானக் கான்முளை வந்தான் வந்தான், மழையெனக் கருணை யெம்பால் வழங்கிய செவ்வேள் வந்தான், றழையுமுச் சங்கத் தேறுந் தலைமைப்பா வலவன் வந்தான், செழுமறைப் பெருமான் வந்தா னென்றன சின்ன மெல்லாம்.

இ-ள். சின்னமெல்லாம் விண்ணவர் பெருமான் வந்தான்......... செழுமறைப் பெருமான் வந்தான் என்றன - சின்னங்களெல்லாம் "தேவாதிதேவர் வந்தார்; வேலாகிய உயர்ந்த ஆயுதத்தையுடையவர் வந்தார்; தேவர்களின் முடிகளை உரிஞ்சும் பாதாரவிந்தங்களையுடைய பதி வந்தார்; பெருமையாகிய குமாரசுவாமி வந்தார்; ஆறுதிருமுகங்களையுடையவர் வந்தார்; குளிர்ந்ததேன் ஒழுகுங் கடப்பமாலையையுடைய சுவாமி வந்தார் வந்தார்; சீர்காழியிற்றோன்றிய சிவஞான குமாரர் வந்தார் வந்தார்; மழைபோலத்திருவருளை நம்மாட்டுப் பொழிந்த முருகபிரான் வந்தார்; தழைத்த முச்சங்கங்களில் ஏறிய முதன்மையையுடைய புலவர் வந்தார்; மாட்சிமையாகிய வேதநாயகர் வந்தார்" என்று ஒலித்தன. எ-று. (சுஎ-சுஅ)

ஆறுமா முகத்துப் புத்தே ளணிகெழு தேரி னீங்கிக், கூறுநான் மறையு மொன்றுங் கோயிலிற் குறமான் யானைப், பேறதாந் தெய்வ யானைப் பெண்ணொடு மடியர் வாழ்த்த, மாறிலாக் குமர மூர்த்தி மகிழ்ந்துவீற் றிருந்தான் மாதோ.

இ-ள். ஆறுமாமுகத்துப் புத்தேள் மாறிலாக் குமர மூர்த்தி - ஆறு பெரியமுகங்களையுடைய கடவுளாகிய ஒப்பில்லாத குமாரசுவாமியானவர்,- குறமான் யானைப்பேறதாந் தெய்வயானைப் பெண்ணொடும் - வள்ளியம்மையாரோடும் ஐராவதயானை வளர்த்த தெய்வயானையம்மையாரோடும்,— அணி கெழு தேரின் நீங்கி - அழகார்ந்த இரதத்தின் இறங்கி,—கூறு நான் மறையும் ஒன்றுங் கோயிலில் - சொல்லுகின்ற சதுர்வேதங்களும் ஒன்றுபட்ட கோயிலின்கண்ணே,—அடியர் வாழ்த்த மகிழ்ந்து வீற்றிருந்தான் - தொண்டர்கள் துதிக்க உவந்து அமர்ந்தருளினார். எ-று. (சுகூ)

வீற்றிருந் தருளினேடும் வேதற்கும் விளங்குஞ் சோதி, யாற்றலந் திகிரி யாற்கு மமரர்க்கும் விடைமுன் னீந்து, தேற்றுநான் மறைவல் லோராந் திரிசுதந் திரத்தர் வாழ்த்திப், போற்றவேற் கரத்துப் புத்தேள் புவனிகாத் தளிக்கு நாளில்.

இ-ள். வேற்கரத்துப் புத்தேள் அருளினோடும் வீற்றிருந்து - வேலாயுதக்கடவுள் கருணையினோடும் அமர்ந்தருளி,—வேதற்கும் விளங்கும் சோதி ஆற்றல் அந் திகிரியாற்கும் அமரர்க்கும் விடை முன் ஈந்து - பிரமதேவருக்கும் விளங்கும் ஒளிபொருந்திய வலிமையாகிய அழகிய சக்கிரத்தையுடைய(விட்டுணுதே)வருக்கும் (மற்றைத்) தேவர்கட்கும் அனுமதியை முன்னரே உதவி,—நான்மறை தேறு வல்லோராந் திரிசுதந்திரத்தர் வாழ்த்திப் போற்ற - சதுர்வேதங்களைத் தெளிந்து வல்லவராகிய திரிசுவதந்திரர்கள் பூசித்துத் துதிக்க,—புவனி காத்து நாளில் அளிக்கும் - (அன்போடுவழிபடும்) உலகத்தாரை இரட்சித்து நாடோறும் (அவர்க்குவேண்டும்வரங்களை) க்கொடுப்பா(ராயின)ர். எ-று. தேற்று - விரித்தல். (எ0)

செயந்திபுர அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் உஉ0.

---

## கா-வது வள்ளியம்மை திருவவதார அத்தியாயம்.

அகிலம் யாவுக்கு மந்துரு வாணிபோ, னிகரி லாதுயர் நீடு பொற் குன்றின்வா, யிகலுஞ் செற்றமு நீக்கிய வேமனுந், தகைமைசேர்ந்த தவமுனி யேன்றுளான்.

இ-ள். அகிலம் யாவுக்கும் அந் துருவ ஆணிபோல் நிகரிலாது உயர் நீடு பொற்குன்றின்வாய் - பூமி முழுதுக்கும் அழகிய அசையாநிலைமைச்செய்யும் ஆணிபோல ஒப்பின்றி உயர்ந்து நீண்ட பொன்மலையின் கண்ணே,—இகலுஞ் செற்றமும் நீக்கிய ஏமனுந் தகைமை சேர்ந்த முனி தவம் என்றுளான் - பகைமையுஞ் சினத்தையும் ஒழிந்த ஏமனென்னுந் தகுதிபொருந்திய முனிவன் தவத்தைப் பொருந்தியுள்ளவனாய். எ-று. (க)

சங்கு சக்கிரந் தாங்கு தடக்கையும், பங்க யத்திருப் பாரப் படீரப்பொற், கொங்கை வெற்பிற் குளிர்ந்த பசுந்துழாய்த், தொங்க லுக்கிசைந் தோங்குதிண் டோள்களும்.

இ-ள். சங்கு சக்கிரந் தாங்கு தடக் கையும் - (திருமாலினுடைய) சங்கையுஞ் சக்கிரத்தையுந் தாங்கிய பெருமையான கரங்களையும்,—பங்கயத் திருப் படீரப் பொற் பாரக் கொங்கை வெற்பின் - தாமரைமலரில் இருக்குஞ் சிதேவியின் சந்தனத்தையணிந்த அழகிய பாரமான ஸ்தனமலைகளோடு,—குளிர்ந்த பசுந்துழாய்த்தொங்கலுக்கு இசைந்து ஓங்கு திண் டோள்களும் - குளிர்மையான பசியதுளசிமாலைக்கும் இயைந்து உயர்ந்த திண்மையான புயங்களையும். எ-று.

கொங்கை வெற்பைத்தழுவுதற்குந் தொங்கலை அணிதற்கும் இசைந் தோங்குதிண்டோள்களையும் என்க. உம்மையால் மற்றுந்திருமாலின் அங்க முதலியனவுந் தியானிக்கப்பட்டன என்பதுணர்க. (உ)

எண்ணி யுள்ளத் திருத்திமெய்ந் நாசியிற், கண்ணி ரண்டுங் கவிழ்தர நோக்கியே, விண்ணு வர்க்கும் வியப்புற யோகத்து, நண்ணு கின்ற துணர்ந்தன ளுகர்த்தோன்.

இ-ள். எண்ணி உள்ளத்து மெய் இருத்தி - தியானித்து மனத்தின் மெய்யாய் இருக்கச்செய்து,—நாசியிற் கண்ணிரண்டுங் கவிழ்தர நோக்கி-மூக்கினிடத்தைக் கண்களிரண்டினாலும் வளைவாகப் பார்த்து,—விண்ணவர்க்கும் வியப்பு உற யோகத்து நண்ணுகின்றது - தேவர்கட்கும் அதிசயம் உண்டாக யோகத்தில் இருக்கின்றமையை,—நாகர் கோன் உணர்ந்தனன் - தேவேந்திரன் அறிந்தவனாய் எ-று.

முனி என்றுளானாய் எண்ணி இருத்தி நோக்கி நண்ணுகின்றதை நாகர்கோன் உணர்ந்தனனாய் என இயைதலுணர்க. (ஙு)

கான யாழிசை கந்தரு வத்தரும், வான நாடக மாதரும் வம்மினென், ஞான சொல்லொன் றுணர்த்துவ னன்னது, தானு ளத்திற் றரிக்குதிர் நீரென.

இ-ள். யாழ்க் கானம் இசை கந்தருவத்தரும் வான நாடக மாதரும் வம்மினென்று - வீணைகளிற் கீதங்களைப் பாடுகின்ற கந்தருவர்களையுஞ் சுவர்க்கத்து நாட்டியப்பெண்களையும் வாருங்களென்று(தன்முன்னழைத்து),—ஆன சொல்லொன்று உணர்த்துவன் அன்னது நீர் உளத்தில் தரிக்குதிர் என - (நான் என்பொருட்டு) ஆகிய வசனமொன்றைக் கூறுவேன் அதனை நீவிர் (மறாது) மனத்திற் கொள்ளக்கடவீர் என்று (முகவுரை) சொல்லி. எ-று. (௪)

பொருளின் மேற்படு பொற்றையிற் போய்த்தவத், தெருளி னேமத் திருமுனி யென்பவ, னருளின் வைகின னாங்கவ னெஞ்சகம், மருள நீவிர்மெய் மாற்றுமென் றோதலும்.

இ-ள். பொருளின் மேற்படு பொற்றையில் - பொன்னின் மேம்பட்ட மலையிலே,—தெருளின் திரு ஏமமுனி என்பவன் - ஞானச் செல்வத்தையுடைய ஏமமுனி என்பவன்,—அருளின் தவம் வைகினன் - அருள்பெறும் பொருட்டுத் தவத்தின் அமர்ந்தான்,—நீவிர் ஆங்குப் போய் அவன் நெஞ்சகம் மருள மெய் மாற்றும் - நீங்கள் அங்கேபோய் அவனது மனம் மயங்க (ச் செய்து) மெய்யறிவை நீக்கி விடும்,—என்று ஓதலும் - என்று சொல்ல. எ-று. (ரு)

சொற்ற வாசகங் கேட்டிசை தும்புருக், கற்று ணர்ந்துள கந்தரு வத்தரும், பற்று நாடகப் பைந்தொடி யார்களு, முற்று ணர்ந்த முனிவன்முன் போயினார்.

இ-ள். சொற்ற வாசகங் கேட்டு - (அங்ஙனம் இந்திரன்) கூறிய வசனத்தைக்கேட்டு,—தும்புரு இசை கற்றுணர்ந்துள கந்தருவத்தரும் பற்றும் நாடகப் பைந்தொடியார்களும் - தும்புருமுனிவனிடத்தே இசைநூலை ஓதியறிந்த கந்தருவரும் விரும்பப்படும் நாட்டிய மகளிரும்,—முற்றுணர்ந்த முனிவன் முன் போயினார் (தன்னெல்லையிற்பட்டன) முழுதையுமறிந்த (அவ்வேம)முனிவன் முன்னே சென்றனர். எ-று. (சு)

கையின் யாழிற் கனிந்தபண் டேறலு, மைய நுண்ணிடை யாரடி பேர்த்திடுஞ், செய்ய தாளச் செயனடத் தேறலு, மையி லாமுனி வன்செவி யார்தலும்.

14416



இ-ள். கையின் யாழிற் கனிந்த பண் தேறலும் - (கந்தருவர்)கைகளின் வீணைகளிலெழுந்த முதிர்ந்த கீதமாகிய தேனும்,—ஐய நுண் இடையார் அடி பேர்த்திடுஞ் செய்ய தாள நடச்செயல் தேறலும் - அழகிய நுண்ணிய இடைகளையுடைய (நாட்டியமகளி)ர் கால்களைப் பெயர்க்குஞ் செம்மையாகிய தாளத்தையுடைய நடனச்செய்கை(யொலி) யாகிய தேனும்,—மை இலா முனிவன் செவி ஆர்தலும் - குற்றமில்லாத முனிவனது செவிகளிற் சேர. எ-று. (எ)

யோகு விட்டு முனிவர னுள்ளத்தின்,
மோக மிக்க மனத்தொடு முன்னர்வான்,
றோகை யொத்த சுரிகுழ லாரையும்,
பாகி சைத்தவர் தம்மையும் பார்த்துளான்.

இ-ள். முனிவரன் உள்ளத்தின் யோகு விட்டு - (அம்)முனிச்சிரேட்டன் (தன்) மனத்திற்பொருந்திய யோகத்தை விடுத்து,—மோகம் மிக்க மனத்தொடு முன்னர் - (தனக்கு) மோகஞ்செய்தற்பொருட்டுக் கிளர்ந்த உள்ளத்தோடு முன்னின்றவர்களாகிய,—பாகு இசைத்தவர் தம்மையும் வான் தோகை ஒத்த சுரிகுழலாரையும் பார்த்துளான் - பாகுபோலப்பாடிய (கந்தரு)வர்களையும் பெருமையான மயிலை நிகர்த்த மகளிரையும் நோக்கினவனாய். எ-று. (அ)

நீங்கள் யாரு நிகரறு யோகத்தின்,
பாங்கர் வந்து பரிபவஞ் செய்ததாற்,
றீங்கொ டுஞ்சொலிற் சீறிய வெம்மொழி,
தாங்கி வேடுவத் தன்மைசென் றெய்துவீர்.

உங்கள் பால்வந்த வொண்டொடி மாதரு,
மங்கண் மாநிலத் தற்றமி லாவரைத்,
துங்க வேடுவத் தோகைய ராகவு,
மிங்கி சைத்தனம் போமின்க ளென்றனன்.

இ-ள். நீங்கள் யாரும் நிகரறு யோகத்தின் பாங்கர் வந்து பரிபவஞ் செய்ததால் - (கந்தருவரே) நீவிரெல்லாம் ஒப்பற்ற யோகஞ் செய்யுமிடத்து வந்து அவமதி பண்ணினமையால்,—சீறிய எந் தீங்கொடுஞ் சொலின் மொழி தாங்கி அங் கண் மா நிலத்து அற்றமிலா வரை சென்று வேடுவத்தன்மை எய்துவீர் - சினந்த எமது சாபமாகிய மொழியை ஏற்று அழகிய இடத்தையுடைய பெரிய பூமியில் அழிவற்ற மலையிற்போய்வேடுவராந் தன்மையை அடைவீர்,—உங்கள் பால் வந்த ஒண்டொடி மாதருந் துங்க வேடுவத் தோகையராக இங்கு இசைத்தனம் போமின்கள் - நும் பக்கத்தில் வந்த ஒள்ளிய வளையலையுடைய (இம்) மகளிரும் உயர்ச்சியையுடைய வேடிச்சிகளாக இங்ஙனஞ் சபித்தேஞ் செல்லுங்கள்,—என்றனன் - என்று கூறினான். எ-று. (௯-௧௦)

அந்த வெம்மொழி கேட்டலு மன்னவர்,
சிந்தை நொந்து தெருமந்து மாழ்கியே,
மைந்தர் குற்ற மனங்கொடு வல்விடந்,
தந்தை யூட்டிற் றனயர்க்குச் சார்புண்டோ.

இ-ள். அந்த வெம்மொழி கேட்டலும் அன்னவர் - அச்சாபத்தைக் கேட்டு அவர்கள்,—சிந்தை நொந்து தெருமந்து மாழ்கி - மனம் வருந்திச் சுழன்று மயங்கி (அம்முனிவனை வணங்கிநின்று),—தந்தை மைந்தர் குற்றம் மனங்கொடு வல்விடம் ஊட்டின் தனயர்க்குச் சார்பு உண்டோ - பிதா மக்களுடைய குற்றத்தை மனத்தில் வைத்து வலிய நஞ்சை ஊட்டினால் (அம்)மக்களுக்குத்தஞ்சம் (வேறு) உண்டோ. எ-று. (௧௧)

ஆயி னுங்கொடுஞ் சாபம கன்றுமுன், மேய தொல்வடி வங்கொடு மேவவு, நீயி ரங்கி நிகழ்த்துதி யென்றலுந், தூய மாதவ னன்றெனச் சொல்லுவான்.

இ-ள். ஆயினும் - (சுவாமீ! நக்குற்றம்பற்றியெழுந்த சினத்தாற்சபித்தீரே) ஆனாலும்,—நீ இரங்கி - (இனி) நீர் தயை கூர்ந்து,—கொடுஞ் சாபம் அகன்று முன் மேய தொல் வடிவங்கொடு மேவவும் நிகழ்த்துதி - கொடியசாபத்தை நீங்கி (நாமெல்லாம்)முன்னர்ப் பொருந்திய பழைய உருவத்தைக்கொண்டு வாழவுஞ் செய்யக்கடவீர்,—என்றலும் - என்று வேண்டிக்கொள்ள,—தூய மாதவன் நன்றெனச் சொல்லுவான் - சுத்தனாகிய (அம்)முனிவன் நல்லது என்று (அவர்க்கு உறுதியைக்) கூறுவானாய் எ-று.

கால மூன்று முளங்கொடு காண்பவன், சீல முன்னித் திகைத் தருள் சிந்தியா, மூல மின்றி முளைத்துக் கயிலையிற், கோலங் கொண்டிருந் தானடி கும்பிட்டு.

இ-ள். மூலமின்றி முளைத்துக் கயிலையிற் கோலங் கொண்டு இருந்தான் அடி கும்பிட்டு - காரணமின்றி வெளிப்பட்டுக் கயிலாயத்தில் உருவு கொண்டு அமர்ந்த சிவபெருமானுடைய பாதங்களை வணங்கி,—அருள் சிந்தியா - (அவரது) அருளினாலே தியானித்து,—மூன்று காலமும் உளங்கொடு காண்பவன் - முக்கால நிகழ்ச்சிகளையும் மனத்தின் அறிபவனாய்,—சீலம் உன்னி - (அவர்சாபநீக்கத்துக்குவாய்ப்பான) இயல்பை அறிந்து,—திகைத்து - (தாஞ்சபித்தமையும் ஈசுரசங்கற்பத்தானமைந்ததேயாயினமையைக்காணலின்) அதிசயமடைந்து (அவர்களை நோக்கி). எ-று. (௧௫)

தாது குத்த கடுக்கையுந் தாதகிப், போது மொய்த்த புரிசடை யான்றருஞ், சோதி வேற்கைச் சுருதியம் பண்ணவன், காதல் கூர்ந்துல கத்தைக் களிப்பினால்.

காக்க வேண்டிக் கடுந்தொழிற் சூர்கிளை, நீக்கி மாதவ னேத் திரத் துற்றுள, மாக்க யத்திரு வள்ளி மணந்தருட், டேக்கொ டுஞ்சிறந் தான்செயந் திப்பதி.

இ-ள். தாது உகுத்த கடுக்கையுந் தாதகிப்போதும் மொய்த்த புரி சடையான் தரும் - தாதுக்களைக் கான்ற கொன்றை மலர்களும் ஆத்திமலர்களுஞ் செறிந்த முறுக்காகிய சடையையுடைய(பசுபதியா)ர் பயந்த,—சோதி வேற்கைச் சுருதிப் பண்ணவன் - ஒளிபொருந்திய வேலைக்கொண்ட கரத்தினையுடைய வேதகீதத்தினை(ராகியகுமாரபிரா)ன்,—காதல் கூர்ந்து உலகத்தைக் களிப்பினாற் காக்கவேண்டி - (துட்டரை) நிக்கிரகித்தலின் மிக்கு(ச்சிட்டராகிய)உலகினரை மகிழ்ச்சியோடு அனுக்கிரகிக்கவிரும்பி,—கடுந்தொழிற் சூர்கிளை நீக்கி - கடுந்தொழிலைச்செய்த சூரனையும் (அவன்) கூட்டத்தாரையும் ஒழித்து,—மாதவன் நேத்திரத்து உற்றுள மாக் கயத் திரு வள்ளி மணந்து - விட்டுணுவின் கண்களிற் பிறந்த பெருமையான தெய்வயானையாரையும் வள்ளியம்மையாரையும் வரைந்து,—அருள் தேக்கொடுஞ் செயந்திப்பதி சிறந்தான் - கருணை நிறைவோடும் செயந்தி நகரத்திலே சிறந்(திருந்)தார். எ-று.

"தாது" என்னும் இப்பாட்டுமுதல் "வளாறு" என்னும் முப்பதாம் பாட்டிறுதியில் "தொன்மைபோலவுற்றிருத்திர்" என்பது வரைமுனிவன் கூற்று. (௧௬-௪௫)

அருமறைக்கமலாசனத் தந்தணன், மருமலர்த்துளவத்திரு
மான்மகக், குரிசின் மற்றுள தேவருங் கும்பிடத், திருவின்வை
கிச் சிறந்தருள் காலையில்.

இ-ள். கமலாசனத்து அரு மறை அந்தணன் - தாமரைமலராசனத்தையுடைய அருமையான வேதத்தை ஆராயும் பிரமதேவனும்,—மருத்துளவ மலர்த் திருமால் - மணமுள்ள துளசிமலரையணிந்த விட்டுணுவும்,— மகக்குரிசில் மற்றுளதேவருங் கும்பிட - இந்திரனும் வேறுள்ள வானவரும் வணங்க,—திருவின் சிறந்து வைகி அருள்காலையில் - ஐசுவரியத்தாற்சிறந்திருந்து (அக்கடவுள்) அருள்செய்யுங்காலத்தில். எ-று. (கரு)

யாவருந்தொழு தேத்த விருந்துள, மூவிரண்டு முகத்தவன்
மால்விழித், தேவி மாருடன் சேர்ந்து கருணையின், மேவி யன்
பின் விளங்குமவ் வேலையில்.

இ-ள். யாவருந் தொழுது எத்த இருந்துள மூவிரண்டு முகத்தவன் - எவரும் வணங்கித்துதிக்க இருந்த (அந்த) ஆறுமுகபெருமான்,—மால்விழித் தேவிமாருடன் அன்பிற் சேர்ந்து-விட்டுணுவின் கண்களிற்பிறந்த அம்மைமா(ரிருவ)ரோடும்(ஒத்த)அன்பாற் கலந்து,—கருணையின் மேவி விளங்கும் அவ்வேலையில் - அருளோடு பொருந்தி விளங்கும் அச்சமயத்தில். எ-று .()

முருக வேளுக்கு முந்திய தாரமாய், மருவுவல்லி மதர்ப்பினின்
வாய்ந்தபே, ருருவ மெய்து முவப்பினில் வேள்புணர், பெருமி
தத்தி லகந்தை பிடித்துளாள்.

இ-ள். முருகவேளுக்கு முந்திய தாரமாய் மருவுவல்லி - முருகக்கடவுளுக்கு மூத்த மனைவியாய்ப் பொருந்திய வள்ளியம்மையார்,—மதர்ப்பினின் வாய்ந்தபேருருவம் எய்தும் உவப்பினில் - அழகிற் சிறந்தபெருமையான வடிவத்தை அடைந்த மகிழ்ச்சியினாலும்,—வேள் புணர் பெருமிதத்தில் - (அக்)கடவுள் (விசேடமாகத்தம்மைப்)புணர்(பவரென்று நினைத்)துணர்ந்ததனாலாய பெருமையினாலும்,—அகந்தை பிடித்துளாள் - அகங்காரங் கொண்டவராய் எ-று. (கஅ)

இந்தி ரன்மக ளென்னிகர்க் காளெனச், சிந்தை மேற்கொடச்
சேயிழை யைத்தின, நிந்தை செய்தன ளாகவு நீதிதே, ரந்த
மாது பொறுத்தன ளன்பினே.

இ-ள். இந்திரன் மகள் என் நிகர்க்காள் எனச் சிந்தைமேற்கொடு - தெய்வயானை எனக்கு ஒப்பாகாளென்று உள்ளத்திற் கொண்டு,—அச் சேயிழையைத் தினம் நிந்தைசெய்தனளாகவும் - அந்தச் செம்மையான அணிகளையுடையாரை நாடோறும் அவமதி செய்தாராகவும்,—நீதி தேர் அந்தமாது அன்பிற் பொறுத்தனள் - நீதியை அறிந்த அந்த அம்மையார் அன்போடு பொறுத்தனர். எ-று. (கக)

அரிகண் வந்திடு மவ்விரு வர்க்குமே, கருணை யொத்தவை
வேற்கரக் கந்தவே, டிருவு ளஞ்செறி திவ்வியக் கண்ணினவ்,
விருவ ருள்ளுறு மெண்ணமுந் தேர்ந்துளான்.

இ-ள். அரி கண் வந்திடும் அவ்விருவர்க்குங் கருணை ஒத்த வை வேற்கரக் கந்தவேள் - திருமாலின் கண்களிற்பிறந்த அவ்விருவர்யாட்டும் அரு

ளின் ஒருபடியான கூரிய வேலாயுதங் கொண்ட கையையுடைய முருகக் கடவுள்,—திருவுளஞ்செறி திவ்வியக் கண்ணின் - திருவுள்ளத்துப் பொருந்திய ஞானக்கண்ணினலே,—அவ்விருவருள்ளுறும் எண்ணமுந் தேர்ந்துளான் - அவ்விருவருடைய உள்ளங்களிற் பொருந்திய நினைவுகளையும் அறிந்தவராய். எ-று. (உ0)

விண்டு வின்வலக் கண்ணிடை மேவிய, தொண்டை யந்துவர் வாய்மடத் தோகையைக், கண்டு மெல்லக் கலங்கா முகமனு, ழுண்டு காரிய மொன்றெனை வோதுவான்.

இ-ள். விண்டுவின் வலக்கண்ணிடை மேவிய - விட்டுணுவின் வலக்கண்ணிற் பிறந்த,—தொண்டைத் துவர் வாய் மடத் தோகையைக் கண்டு - கொவ்வைக்கனிபோலுஞ் சிவந்த அதரங்களையுடைய மடமை பொருந்திய அம்மையாரை நோக்கி,—காரியம் ஒன்று உண்டு என - (பெண்ணேயினக் குறைக்குஞ்) செய்தி ஒன்று உளது என்றுசொல்லி,—மெல்லக் கலங்கா முகமனுல் ஓதுவான் - மென்மையாக (அவர்தாம் மிக மனங்) கலங்காமைக் கேதுவாய இன்மொழி கூறுதலோடு(பின்வருமாறு)கூறினர். எ-று. (உக)

மாறு மீக்கொடு வாரணப் பாவையைச், சீறி நிந்தனை செய்தனை யன்னதாற், கூறு கின்ற கொடுமொழிச் சாபத்தி, னாறு சென்றவ ணாற்றிட வேண்டுநீ.

இ-ள். மாறு மீக்கொடு வாரணப்பாவையைச் சீறி நிந்தனைசெய்தனை - (பெண்ணே நீ) பகையைமேற்கொண்டு தெய்வயானையைக் கோபித்து அவமதிசெய்தாய்,—அன்னதால் நீ - அதனுல் நீ,—கூறுகின்றகொடுமொழிச் சாபத்தின் ஆறு சென்று - (யாமீண்டுச்) சொல்லுங் கொடிய மொழியாகிய சாபத்தின் வழியே போய்,—அவண் ஆற்றிடவேண்டும் - (சுட்டப்படும்)அவ்விடத்தே(அக்குற்றத்தைப்)பரிகரித்தல் வேண்டும் எ-று.

தார மாயிரு வீருந் தழுவினீர், வார முன்வயின் வைத்தன மாகவா, வீர மின்றி யிழிவுரைத் தாயதன், கார ணத்தைக் கருத்துள டக்கினள்.

இ-ள். இருவீருந் தாரமாய்த் தழுவினீர் - (நீயும் அவளுமாகிய) இருவீரும் மனைவியராய் (நம்மை)த் தழுவினீர்,—உன்வயின் வாரம் வைத்தனமாக வால் ஈரமின்றி இழிவுரைத்தாய் - (நீயோ நாம்) உன்மேல் அன்பு வைத்தனம் என்று கொண்டு சுத்தமான தண்ணளியின்றி (அவளை) நிந்தித்தாய்,—அதன் காரணத்தைக் கருத்துள் அடக்கினள் - (அவள்) அ(ங்ஙனம் இழிவுரைத்த)தேயாகிய காரணத்தை (சினமென்னுங் காரியம் பிறப்பிக்க விடாமலும் எவர்க்குமுரையாமலுந் தன்) மனத்துள்ளேதானே அடக்கிவிட்டாள். எ-று.
பொறுத்துக்கொண்டாள் என்றபடி. (உஙு)

அன்ன பான்மையு ணர்ந்தன மாதலா, லுன்னி டத்தி லுறுபவம் யாவையும், பன்னெடும்பக லாற்றுதல் பண்டெனக், கொன்னி லைச்சுடர் வேலவன் கூறுவான்.

இ-ள். அன்னபான்மை உணர்ந்தனம் - அந்தச் சம்பவத்தை (நாம்) அறிந்தனம்,—ஆதலால் - (இங்ஙனம் அடக்கமின்மை) ஆயினமையால்,—உன்னிடத்தில் உறுபவம் யாவையும் - உன்கட் பொருந்திய பாவமனைத்

தையுர்,—பன்னெடும் பகல் ஆற்றுதல் பண்பு என - பல நெடுநாட்களில் (மேற்காட்டுமாறு செய்து) பரிகரித்தலே குணமாம் என்று சொல்லி,—கோன் இலைச்சுடர் வேலவன் கூறுவான் - பெருமையான இலைவடிவுடைய் ஒளி பொருந்திய வேலாயுதத்தையுடைய கடவுள் மேலுஞ்சொல்வார். எ-று.

அலகி லாப்பொறை யாற்றிய மாதரா, ருலகெ லாந்தொழு தேத்தலு மும்பருந், தலைவ ணங்குந் தலைமையு மெய்துவார், நிலைமை யென்று மறையு நிகழ்த்துமால்.

இ-ள். பொறை ஆற்றிய மாதரார் - பொறுமையைச் செய்த பெண்கள்,—அலகிலா உலகெலாந் தொழுது ஏத்தலும் - அளவில்லாத உலகத்தாரெல்லாரும் வணங்கித்துதித்தலையும்,—உம்பருந் தலைவணங்குந் தலைமையும் - தேவர்களாலுந் தலைவணக்கப்படும் முதன்மையையும்,—எய்துவார் - அடைவார்,—நிலைமை என்று மறையும் நிகழ்த்தும் - (இது) மெய்ம்மையே என்று சுருதிகளுங் கூறும். எ-று. (௨௫)

நிந்த னைக்குரித் தாகிய நீயும்வ, சுந்த ரைக்கட் சுலாவுவி லங்கின்பான், முந்து தித்து முனைச்சிலை வேடர்பால், வந்து ளச்சிறப் போடு வளர்தியால்.

இ-ள். நிந்தனைக்கு உரித்தாகிய நீயும் - (பொறுமையடைத்த அவள் போலன்றிப் பாவமாகிய) நிந்தனையில் உரிமையுடையையான நீயும்,—வசுந்தரைக்கட் சுலாவு விலங்கின்பான் முந்து உதித்து - நிலவுலகத்திற் சஞ்சரிக்கும் மிருகத்தினிடத்து முற்பட்டுப்பிறந்து,—முனைச்சிலை வேடர்பால் வந்து உளச்சிறப்போடு வளர்தி - நுதிபொருந்திய விற்களையுடைய வேடரிடத்துச் சேர்ந்து மனமகிழ்ச்சியோடு வளர்வாய். எ-று. (௨௬)

இழிவின் முன்ன ரியற்று கொடும்பவ, மொழியும் பாவ மொழியுமக் காலைநா, மழன்முன் னாக வமரரொ டேகியே, விழுமி தாக மகிழ்ந்துனை வேட்குதும்.

இ-ள். முன்னர் இயற்று கொடும் பவம் - மேல் அடையும் (அந்தக்) கொடிய பிறவியிற்றானே,—இழிவிற் பாவம் ஒழியும் - (உனது) நிந்தனையாகிய பாவந் தீரும்,—ஒழியும் அக்காலை - (அது) தீரும் அச்சமயத்தில்,—நாம் அமரரொடு ஏகி - நாம் தேவர்களோடு (நின்மாட்டு) வந்து,—விழுமிதாக மகிழ்ந்து - (நீ) மாட்சிமையாக மகிழ,—அழன் முன்னாக உனை வேட்குதும் - அக்கினி சாட்சியாக உன்னை வரைவேம். எ-று. (௨௭)

என்னு மாற்ற மிளையன் விளம்பலுங், கன்னி யுள்ளங் கவலுழந் தோமெனச், சென்னி தாழ்ந்துளஞ் சிந்தித்து வைகினாள், மன்னு மானின் வரன்முறை செப்புவாம்.

இ-ள். என்னும் மாற்றம் இளையன் விளம்பலும் - என்றவசனங்களைக் குமாரசுவாமி கூற,—கன்னி உள்ளங் கவல் உழந்து - அம்மையார் மனங் கவலையினால் வருந்தி,—சென்னி தாழ்ந்து ஓம் என - தலையால் வணங்கி ஆம் என்று (உடன்பட்டுக்கொண்டு அவரைப் பிரிந்து),—உளஞ் சிந்தித்து வைகினாள் - (அங்ஙனஞ் செய்தற்கு வாய்க்கும் வழியை) மனத்தில் நினைத்து இருந்தார்,—மானின் மன்னும் வரன்முறை செப்புவாம் - (இனி) அவர் மான்வயிற்றிற் சேரும் வரலாற்றினைச் சொல்வாம். எ-று. (௨௮)

வேறு.

காஞ்சனை யென்னுந் தெய்வக் கன்னிகை கவுரிக் குள்ள
வாஞ்சையிற் சேடி யாகி மன்னுதல் வேட்டு விந்தைப்
பூஞ்சிலம் பிடத்து மானிற் பொலிவுறுங் குழவி யாகித்
தேஞ்சுரும் பார்றுங் கூந்தற் றெரிவைவந் துதிக்கு மப்பால்.

இ-ள். காஞ்சனை என்னுந் தெய்வக் கன்னிகை - காஞ்சனை என்னுந் தேவபெண்ணானவள்,—கவுரிக்கு உள்ள வாஞ்சையிற் சேடியாகி மன்னுதல் வேட்டு - பார்வதியாருக்கு மனப்பற்றுள்ள அடியாளாகி வாழ்தலைவிரும்பி,—பூம் விந்தைச் சிலம் பிடத்து மானிற் பொலிவு உறும் - அழகிய விந்தைமலையின்கண்ணே மான்வடிவத்தோடு (தவப்)பொலிவைப் பொருந்துகின்றாள்,—தேஞ் சுரும்பாற்றுங் கூந்தல் தெரிவை அப்பால் வந்து குழவியாகி உதிக்கும் - நறுமணம்பொருந்திய வண்டுகள் ஒலித்தற்கிடமான கூந்தலையுடைய அம்மையார் அந்த(மானின்)இடத்தே வந்து குழந்தையாய்த் தோன்றுவார். எ-று. (௨௯)

வளனுற வெடுத்து நீங்கள் வளர்ப்புறு மெல்லை நோக்கி
யளவறு முவப்பாற் செவ்வே ளன்னவ டன்னை வேட்டுக்
கிளையுட னளிக்கு நீராற் கிடைத்தநுஞ் சாப நீங்க
வுளமகிழ் பூத்துத் தொன்மை போலவுற் றிருத்தி ரென்று.

இ-ள். நீங்கள் வளனுற எடுத்து வளர்ப்புறும் எல்லை - (வேடராகிய) நீங்கள் (அக்குழந்தையை) மாட்சிமைபொருந்த எடுத்து வளர்க்கும்பொழுதில்,—செவ்வேள் நோக்கி அளவறும் உவப்பால் அன்னவடன்னை வேட்டு - குமாரசுவாமி (பருவம்)பார்த்து அளவிறந்த மகிழ்ச்சியோடு அவ்வம்மையாரை வரைந்து,—கிளை உடன் அளிக்குநீரால் - (அவ்வம்மையார்க்குத் தமர்களாய உங்க)ளை உடனே அருளுந் திறத்தினால்,—கிடைத்த நுஞ் சாபம் நீங்கத் தொன்மைபோல உளமகிழ் பூத்து உற்றிருத்திர் என்று - (இங்ஙனம் என்பாற்) பெற்ற உங்கள் சாபம் அகல முன்போல மனமகிழ் சிறந்து (அக்கடவுள் அருளும் பதத்தைப்)பெற்றிருப்பீர்கள் என்றிவ்வாறு. எ-று.

"உற்றிருத்திர்" என்பது ஏமமுனி கூற்றின் முடிபு. "என்று" என்பது கவிகூற்று; வருஞ்செய்யுளில் "உரைத்து" என்பதனோடியையும். ()

முனிவர னுரைத்து முன்போன் மோனத்தா றிருப்ப வன்னோ
ரனைவரு முணர்ச்சி நீங்கி யரிவையர் மருங்கிற் செல்ல
வினையுழந் தவல மெய்தி விந்தையஞ் சாரற் பாங்கர்க்
கனைகுரல் வேட ராகிக் கதுமெனச் சென்றா ரன்றே.

இ-ள். முனிவரன் உரைத்து முன்போல் மோனத்து ஆறு இருப்ப - முனிச்சிரேட்டன் கூறி முன்னர்ப்போல மௌனத்தினையுடைய (தவ) வழியில் இருக்க,—அன்னோரனைவரும் உணர்ச்சிநீங்கி வினையுழந்து அவலம் எய்தி - அவரெல்லாரும் (முன்னை) அறிவிழந்து தீவினையால் வருந்தி வலியின்மையையடைந்து,—கனைகுரல்வேடராகி - ஆரவாரிக்கும் ஓசையையுடைய வேடுவராகி,—அரிவையர் மருங்கிற் செல்ல - (தம்போலாகிய) மகளிர் பக்கத்திற் சார,—கதுமென விந்தைச்சாரற்பாங்கர்ச் சென்றார் - விரைந்துவிந்தைமலைச்சாரலின்கட் சேர்ந்தார். எ-று. (௩௧)

கந்தன தருளாற் றெய்வக் காஞ்சனை வனப்பு வாய்ந்த
சுந்தரச் சிறுமா னாகித் தூநிலாத் தவழுங் கோட்டு
விந்தையஞ் சாரலுற்ற வேலைமால் விழியிற் றோன்று
மந்தமா னருண மானி னணிவயி றுற்ற தன்றே.

இ-ள். கந்தனது அருளால் வனப்பு வாய்ந்த தெய்வக் காஞ்சனை சுந்தரச் சிறுமானாகி - முருகக்கடவுளது திருவருளினாலே அழகுசிறந்த தேவியாகிய காஞ்சனை அழகினையுடைய சிறிய மான்வடிவாகி,—தூ நிலாத் தவழுங் கோட்டு விந்தைச்சாரல் உற்ற வேலை - சுத்தமாகிய பிறை ஊருகின்ற உச்சியையுடைய விந்தைமலைச்சாரலில் இருந்தபொழுது,—மால் விழியில் தோன்றும் அந்த மான் - விட்டுணுவின் கண்ணிற் பிறந்த அந்த (வள்ளியம்மை என்னும்) பெண்(குழந்தை),—அருணமானின் அணி வயிறு உற்றது - செந்நிறமுடைய மானின் அழகாகிய வயிற்றிற் சேர்ந்தது. எ-று ()

கருப்பத்தின் முதிர்ச்சி காட்டிக் காறளர்ந் துடலம் வீங்கிப்
பொருப்பகத் துறைந்து பாரம் பொறுக்கலா துழன்று வாடி
மருப்புயர் பசுங்காச் சுற்றி மலைச்சிறு குறவர் யாரு
மிருப்புறுஞ் சீறூர்ப் பாங்க ரீற்றுளாந் தேகிற் றம்மான்.

இ-ள். அம்மான் கருப்பத்தின் முதிர்ச்சி காட்டிக் கால் தளர்ந்து உடலம் வீங்கிப் பொருப்பகத்து உறைந்து - அந்தமான் சினையின் முதிர்வைக் காண்பித்துக் கால்சோர்ந்து உடல்பருத்து மலையில் இருந்து,—பாரம் பொறுக்கலாது உழன்று வாடி - சுமை தாங்கமாட்டாது வருந்தி மெலிந்து,—ஈற்று உளைந்து மருப்புயர் பசுங்காச் சுற்றி - ஈனுதற்கு (வயிறு) நொந்து கொம்புகளுயர்ந்த பசுமையாகிய சோலைகளைச் சூழ்ந்து,—மலைச் சிறு குறவர் யாரும் இருப்புறுஞ் சீறூர்ப்பாங்கர் ஏகிற்று - (அம்)மலையிற் சிறிய குறவரெல்லாரும் இருக்குஞ்சிற்றூரின்பாலிற் சென்றது. எ-று. (௫௫)

சென்றமான் சுழன்று பார்க்குஞ் செய்கையுங் கருப்பந் தாங்கி
யொன்றிய வயர்வு நோக்கி யுயர்ந்தவான் சிலைவி டாத
குன்றுறை வேடர் யாருங் கொம்மென வெழுந்து மானுக்
கின்றுணை யாகப் போது மென்றன ரதனைச் சூழ்ந்தார்.

இ-ள். சென்றமான் சுழன்று பார்க்குஞ் செய்கையும் - (அங்ஙனம்) போந்த மான் கலங்கி விழிக்குஞ் செயலையும்,—கருப்பந் தாங்கி ஒன்றிய அயர்வும் - கருவைத்தரித்துப் பொருந்திய தளர்வையும்,—உயர்ந்த வான் சிலைவிடாத குன்றுறை வேடர் யாரும் நோக்கி - உயர்வான பெரிய விற்களைக் கைவிடாத (அம்)மலையிலுள்ள வேடரெல்லாம் அறிந்து,—கொம்மென எழுந்து-விரைவாக எழுந்து,—மானுக்கு இன்றுணையாகப் போதும் என்றனர் அதனைச் சூழ்ந்தார் - (நாம் இம்)மானுக்கு இனிய துணையாகச் செல்வேம் என்று சொல்லி அதனைச் சூழ்ந்தனர் எ-று. (௫௬)

எழுமெழுந் தரற்றுங் காலொன் றெடுத்தடி பெயர்க்கு மீள, விழுமிருந் திசையைப் பார்க்கும் வெருண்டுதன் மேனி நாக்கொண், டுழுநெடு மூச்சு வீங்கு முலப்புறு தரற்றுஞ் சோலைப், பழுமர மூட்டிற் சாயும் பரிவுறும் படிக்கு மாதோ.

இ-ள். எழும் - (படுக்கையைவிட்டுக்) கிளரும்;—எழுந்து அரற்றும் - கிளர்ந்து அழும்;—அடி பெயர்க்கும்-(நடக்கவேண்டி ஓர்) அடியைத் தூக்கி வைக்கும்;—மீளக் காலொன்று எடுத்து விழும் - மீண்டு (வைக்குமாறு) அடியொன்றைத்தூக்கி (ஆற்றாது) விழும்;—இருந் திசையைப் பார்க்கும்- பெருமையாகிய திக்குக்களைப் பார்க்கும்;—வெருண்டு தன்மேனி நாக் கொண்டு உழும் - அஞ்சித் தன்னுடலை நாவினால் நக்கும்;—நெடுமூச்சு வீங்கும் - பெருமூச்சு மிகும்;—உலப்புறாது அரற்றும் - (இடையிடையே) ஒழியாது அழும்;—சோலைப் பழுமர மூட்டிற் சாயும் பரிவுறும் படுக்கும் - சோலையில் ஆலமரச் செறிவிலே சாய்ந்து பரிவுற்றுக் கிடக்கும். எ-று.

பரிவு - துன்பம். (௫௫)

அருணமா னிவ்வா றுள்ளத் தயர்வுகொண் டிரங்கி ஞானத்
தருணவில் வீச வீங்குஞ் சராசர மனைத்து மீன்று
பொருணவில் வேதம் பூத்துப் பொருவருங் கற்பு வாய்ந்த
குருமணி யதனை வல்லிக் கொம்பென வீன்ற தம்மா.

இ-ள். அருணமான் இவ்வாறு உள்ளத்தயர்வுகொண்டு இரங்கி - செந்நிறமாகிய மான் இங்ஙனம் மனத்தளர்ச்சிகொண்டு வருந்தி(யபின்),—பொருவருங் கற்பு வாய்ந்த குருமணியதனை - ஒப்பற்ற கற்பிற்சிறந்த குருரத்தினமாகிய அம்மையாரை,—வீங்குஞ் சராசர மனைத்தும் ஈன்று பொருள் நவில் வேதம் பூத்து ஞானத் தருண இல் வீச - (அவர்தாம்பின்னர்ப்) பெருத்த சங்கமத்தாவரங்(களாகிய பிரபஞ்சக்கிளை)களையெல்லாந் தந்து, அருத்தங்கூறப்படும் வேதங்க(ளாகியமலர்க)ளை அலர்த்திச் சிவ ஞானத்தாலாகும் முத்திஸ்தானங்(களாகிய கனி)களை உதவுமாறு,—வல்லிக் கொம்பு என ஈன்றது - (ஒரு)கொடியையுங் கொம்பையும் போலப் பெற்றது. எ-று. (௫௬)

மானிடைப் பிறந்த தெய்வ மணியினைக் கண்டு விந்தைக்
கானவர் குழாங்கொண் டுள்ளக் களிப்பெனும் புணரி மூழ்க
வானவப் போழ்து மாறு மரிவைகாஞ் சனையம் மானைத்
தானளித் திருந்து ஞானத் தண்ணளி பெற்ற வாற்றால்.

இ-ள். மானிடைப்பிறந்த தெய்வ மணியினை - மானினிடத்துத் தோன்றிய கடவுண் மணியை,—விந்தைக் கானவர் குழாங் கண்டுகொண்டு உள்ளக்களிப்பெனும் புணரி மூழ்க - விந்தைமலையின் வேடர்கூட்டங் கண்டு கைக்கொண்டு மனமகிழ்ச்சியென்னுங் கடலில் அமிழ்ந்த,—மாறுங் காஞ்சனை அரிவை - மானாய் நின்ற காஞ்சனை (யென்னும்) பெண்ணானவள்,—தான் அம்மானை அளித்து இருந்து ஞானத் தண்ணளி பெற்ற வாற்றால் - தான் அந்த அம்மையாரை ஈன்று (அதனால்) ஞானத்தோடு அருளை அடைந்தவாற்றினால்,—ஆன அப்போழ்து - (அங்ஙனம்) ஆகிய அச்சமயத்திற்றானே. எ-று

அரிவை என்னும் எழுவாய்க்குப்பயனிலை இருந்தனள் என அடுத்த பாட்டில் வருதல் காண்க. (௫௭)

எண்ணிய வெண்ணி யாங்கே யாவர்க்கு முதவும் வேத
புண்ணிய கவுரி வைகும் பொற்புறு புவனந் தன்னி
னண்ணினள் கவுரிக் குள்ள நாடருஞ் சேடி யாகி
விண்ணவர் முனிவர் வாழ்த்த விருந்தன டவத்தின் மிக்காள்.

இ-ள். யாவர்க்கும் எண்ணிய எண்ணியாங்கு உதவும் வேத புண்ணிய கவுரி வைகும் - எவர்க்கும் நினைந்தவற்றை நினைந்தவாறு அருளும் வேதப் பொருளாகிய சுத்தமான உமையம்மையார் வீற்றிருக்கின்ற,—பொற்புறு புவனந் தன்னில் நண்ணினள் - அழகு பொருந்திய உலகத்திற் சேர்ந்தவளாய்,—கவுரிக்கு உள்ளம் நாடு அருஞ் சேடியாகி - (அந்த) அம்மையாருக்கு மனம் விரும்பும் அரிய அடியாளாகி,—விண்ணவர் முனிவர் வாழ்த்துந் தவத்தின் மிக்காள் இருந்தனள் - தேவரும் முனிவருந் துதிக்கத் தவத்தின் மேற்பட்டவளாய் இருந்தாள். எ-று. (௫௮)

அடுக்கலிற் கிராதர் கூட்டத் தனைவரு மன்பு மீதூர்ந்,
தெடுத்துடன் கொடுபோய் விந்தைக் கிறைவனைத் தொழுது வேண்டிக்,
கொடுத்தன ரன்னோன் வாங்கிக் கொண்டனன் சுற்றத் தோடுந்,
தொடுத்தபே ரன்பின் மூழ்கிச் சொல்லரு முவகை பூத்தான்.

இ-ள். அடுக்கலிற் கூட்டத்துக் கிராதர் அனைவரும் அன்புமீதூர்ந்து எடுத்து உடன்கொடுபோய் - மலையிற் கூட்டமாகிய வேடரெல்லாரும் அன்பு மேற்கொண்டு அவ்வம்மையாரை) எடுத்து உடனே கொண்டுபோய்,—விந்தைக்கிறைவனை வேண்டித்தொழுது கொடுத்தனர் - விந்தை மலையரச(னாகியவேட)னை விரும்பி வணங்கிக் கொடுத்தார்,—அன்னோன் வாங்கிக்கொண்டனன் சுற்றத்தோடுந் தொடுத்தபேரன்பின் மூழ்கிச் சொல்லரும் உவகை பூத்தான் - அவன் ஏற்றுக்கொண்டவனாய்ச் சுற்றத்தாரோடும் அவ்வம்மையார்மீது கலந்த பேரன்பிற் படிந்து சொல்லக்கூடாத மகிழ்ச்சி பொலிந்தான். எ-று. (௫௯)

மனமகிழ் சிறந்து வேடர்க் கிறைமருங் கிருந்த மான, முனை
நெடுஞ் சிலைக்கை வேடர் முகமலர்ந் தன்பு கூரத், தனைநிக ரின்
றித் தோன்றுந் தார்க்கருங் கூந்தற் செவ்வாய்க், கனிமொழி
வனப்பின் செவ்வி கண்டுமற் றிதனைச் சொல்வான்.

இ-ள். வேடர்க்கிறை மனமகிழ்சிறந்து - வேடராசன் உள்ளுவகை வாய்ந்து,—தனை நிகரின்றித் தோன்றுந் தார்க் கருங் கூந்தற் செவ்வாய்க் கனி மொழி வனப்பின் செவ்வி கண்டு - தன்னை ஒப்பாரின்றி விளங்குகின்ற மாலையணிந்த கரிய கூந்தலையுஞ் செம்மையாகியவாயிற் கனிந்த மொழியையுமுடைய அம்மையாரது அழகுச்சிறப்பைப் பார்த்து,—மருங்கிருந்த மான முனை நெடுஞ் சிலைக்கை வேடர் முகமலர்ந்து அன்பு கூர இதனைச் சொல்வான் - பக்கத்திலிருந்த மனக்கிளர்ச்சியையுடைய நுனி பொருந்திய நெடிய விற்களைக் கைகளிற்கொண்ட வேடர்கள் முக மலர்ந்து அன்பு பெருக இவ்வசனத்தைச் சொல்வான். எ-று. (௬௦)

உருவத்தின் வனப்பு வாய்ந்த வொண்டொடி சுணங்கு பூத்த
விருவெற்பின் களபக் கொங்கை யின்னலம் பருகத் தக்கான்
றருமத்தின் றலைமை யாய்மூ தண்டத்தி னுயிர்கட் கெல்லாங்
கருமத்தின் செயலாய் நின்று காக்குமோர் கடவு ளாமால்.

இ-ள். வனப்பு வாய்ந்த உருவத்தின் ஒண்டொடி - அழகு சிறந்த வடிவத்தினையுடைய ஒள்ளிய வளையையுடைய (இம்மக)ளினது,—சுணங்கு பூத்த இரு வெற்பின் களபக் கொங்கை இன்னலம் பருகத் தக்கான் - தேமல் பொலிந்த இரண்டு மலைகள் போலுங் கலவையணிந்த தனங்களின்

இனிய சுகத்தை நுகரத்தக்கவனுவான்,—தருமத்தின் தலைமையாய் மூதண்டத்தின் உயிர்கட்கெல்லாங் கருமத்தின்செயல் ஆய்ந்து நின்று காக்கும் ஒரு கடவுளாம் - அறத்தின் முதல்வனுய்ப் பழையவண்டத்துள்ள அனைத்துயிர்களின் வினைச்செயல்களையும் ஆராய்ந்து நின்று ஆளும் ஒரு தேவனேயாம். எ-று.

இது வேடஅரசன் கூற்று. (௬௪)

இவ்வண முரைத்து வேடர்க் கிறையவ னிரங்குந் தெண்ணீர்ப்
பவ்வநீ டுடுத்த பாரின் பரப்பும்வா னகமும் போற்றுங்
கொவ்வைவா யமுதத் தீஞ்சொற் கோற்றொடிக் கினிய நாமஞ்
செவ்விநன் கமைந்த வள்ளி யென்றனன் சிறப்பின் மிக்கான்.

இ-ள். வேடர்க்கிறையவன் இவ்வணம் உரைத்து - வேடராசன் இவ்வாறு கூறி,— சிறப்பின் மிக்கான் - சிறப்புச்செய்தலின் மிகுதியையுடையவனுய்,—இரங்குந் தெண்ணீர்ப் பவ்வம் நீடு உடுத்த பாரின்பரப்பும் வானகமும் போற்றும் - ஒலிக்குந் தெளிவாகிய நீரையுடைய கடலால் நீண்டு சூழப்பட்ட மண்ணகத்துள்ளாராலும் விண்ணகத்துள்ளாராலுந் துதிக்கப்படுகிற,—கொவ்வை வாய் அமுதத் தீஞ்சொற் கோற்றொடிக்கு இனிய நாமம் - கொவ்வைக்கனிபோலும் இதழையுஞ் சுவைபோலும் இன்மொழியையும் உடைய (இந்த) அழகிய வளையையுடையாளுக்கு இனிய பெயராவது,—செவ்வி நன்கு அமைந்த வள்ளி - மாட்சிமை இனிது பொருந்திய வள்ளி என்பதே,—என்றனன் - என்று கூறினுன். எ-று. (௬௫)

செய்யதோர் நாமஞ் சூட்டித் தெரிவையைத் தனது வேடத்
தையறன் கரத்தி லுய்ப்பத் தண்ணளி சிறப்ப வாங்கிக்
கொய்ம்மயிர்க் கவரி மேய்ந்த குடிலிடைக் கொடுபோய்ச் சூழ்ந்த
வையக மளிக்குந் தாயை மகளென வளர்க்கின் றாளால்.

இ-ள். செய்யது நாமஞ் சூட்டி - செம்மையாகிய (அப்) பெயரை இட்டு,—தெரிவையைத் தனது வேடத்தையறன் கரத்தில் உய்ப்ப - அம்மையாரை (அவன்) தன் மனைவியாகிய)வேடப்பெண்ணினது கையிற் கொடுக்க,—தண்ணளி சிறப்ப வாங்கிக் கவரிக் கொய்ம் மயிர் மேய்ந்த குடிலிடைக் கொடுபோய் - (அவள்)அன்புவாய்ப்பக் கைக்கொண்டு கவரிமானின் கொய்யப்பட்ட மயிர்கொண்டு வேய்ந்த சிற்றிலிற் கொண்டு சென்று,—சூழ்ந்த வையகம் அளிக்குந் தாயை மகளென வளர்க்கின்றாள் - (கடல்)சூழ்ந்த நிலத்தைக் காக்குந் தாயா(கிய அவ)ரை(த் தன்)மகளென்று வளர்த்தாள். எ-று. (௬௬)

கடவுளர்க் கமுத மன்ன கனிமொழிப் பவளச் செவ்வாய்
மடவரல் வசந்த கால மென்னுமோர் மடந்தை தூண்டாச்
சுடர்மணி விளக்கம் போலத் தோமறு வடிவம் வாய்த்து
முடிவிலா மறைகட் கெட்டா முதல்வி யாங்கிருந்தாண் மன்னோ.

இ-ள். கடவுளர்க்கமுதம் அன்ன கனிமொழிப் பவளச் செவ்வாய் மடவரல் - தேவாமிர்தம்போன்ற (இனிமை)கனிந்த சொற்களைப் பேசுகின்ற பவளம்போலுஞ் செம்மையாகியவாயையுடைய இளம்பெண்ணுகிய,—முடிவிலா மறைகட்கு எட்டா முதல்வி - இறுதியற்ற வேதங்களுக்கு அகப்படாத அம்மையார்,—வசந்தகாலம் என்னும் ஓர்மடந்தை(போல)

தூண்டாச் சுடர் மணி விளக்கம் போலத் தோமறு வடிவம் வாய்த்து ஆங்கு இருந்தாள், — (இங்ஙனம் உருவுடைத்தான) வசந்தகாலமே எனப்படும் ஒரு பெண் போலவுந் தூண்டப்படாத ஒளியினையுடைய இரத்தினதீபம் போலவுங் குற்றமற்ற உருவஞ் சிறந்து அங்ஙனம் இருந்தார். எ-று. (சச)

கொல்லையங் குறிஞ்சிக் கோட்டுக் குறவர்தங் குடிலி னூப்பண்
மல்லலஞ் சிறப்பின் மேலாம் வள்ளியுஞ் சரற்கா லத்துச்
சொல்லுமுற் பக்கத் துற்ற சுடர்மதி போன்று ளன்று
னில்லிடை மலரின் மாரி யிரவுநன் பகலுந் தூற்றும்.

இ-ள். கொல்லை அங் குறிஞ்சிக் கோட்டுக் குறவர்தங் குடிலின் நாப்பண் - கொல்லைகளின் சிறப்பையுடைய குறிஞ்சிநிலத்தின் பக்கத்திற் குறவரது சிறுகுடிலின் நடுவில்,—மல்லலஞ் சிறப்பின் மேலாம் வள்ளியும் - மாட்சிமையாகிய சிறப்பின் மேற்பட்ட வள்ளியம்மையாரும்,—சரற்காலத்துச் சொல்லு முற்பக்கத்து உற்ற சுடர் மதி போன்றுள்-கூதிர்ப்பருவத்துக் கூறப்படும் பூருவபக்கத்திற் பொருந்திய ஒளியினையுடைய பிறையை நிகர்த்தாள்,—அன்னாள் இல்லிடை இரவும் நன்பகலும் மலரின் மாரி தூற்றும்- அவரது வீட்டிலே இரவிலும் நல்லபகலிலும் புட்பமாரி சொரியப்பட்டது. எ-று. (சரு)

அண்டர்தம் முரசி னார்ப்பு மருவிநீர் சொரியு மார்ப்புந்
தொண்டக முழவி னார்ப்புஞ் சூழ்தரும் வரைப்பா லுற்ற
கெண்டையங் கடங்கட் செவ்வாய்க் கிள்ளையைப் பிள்ளை யென்று
ளண்டரு நிதியம் வாய்த்த விருநில விளக்கம் போன்றுள்.

இ-ள். அண்டர்தம் முரசின் ஆர்ப்பும் அருவிநீர் சொரியும் ஆர்ப்புந் தொண்டக முழவின் ஆர்ப்புஞ் சூழ்தரும் வரைப்பால் - தேவதுந்துபியின் ஒலியும் அருவிச்சலம் வீழும் ஒலியுங் குறிஞ்சிப்பறைகளின் ஒலியுஞ் சூழும் (அம்)மலையின்கண்,—கெண்டையுற்ற அடங்கட் செவ்வாய்க் கிள்ளையைப் பிள்ளையென்றுள் - சேல்போலும் பெரியகண்களையுஞ் செய்ய வாயினையு முடைய அம்மையாரை(த் தன்)புதல்வியென்று வளர்த்த(கொடிச்சியான)வள்,—விளக்கம் எண் தரு நிதியம் வாய்த்த இருநிலம் போன்றுள் - பிரகாசத்தினாலே பெருமை பொருந்திய திரவியம் (தன்னகத்துச்) சிறந்த பெருமையான நிலத்தை நிகர்த்தாள். எ-று. (சசு)

பெண்ணலங் கனியப் பேதை பெதும்பையுங் கடந்து வேற்கைப்
பண்ணவற் கினிய மங்கைப் பருவம தடையுங் காறும்
வண்ணவிற் கிராதர் வேந்தன் மைந்தரில் லாத சோகத்
தெண்ணமுள் ளொழித்து மாதை யினிதுடன் மகிழ்ந்து காத்தான்.

இ-ள். வண்ண விற் கிராதர்வேந்தன் - அழகாகிய வில்லையுடைய வேடராசன்,—மைந்தரில்லாத சோகத்து எண்ணம் உள் ஒழித்து - மக்களில்லாத கவலை நினைவை மனத்தின் நீக்கி,—மாதை - (வள்ளியம்மையாராகிய)பெண்ணை,—பேதை பெதும்பையுங் கடந்து வேற்கைப் பண்ணவற்கு இனிய மங்கைப் பருவம் பெண்ணலங் கனிய அடையுங்காறும் - (அவ்வம்மையார்) பேதைப்பருவத்தையும் பெதும்பைப்பருவத்தையும் நீங்கி வேல்கொண்ட திருக்கரத்தையுடைய கடவுளுக்கு இனிய மங்கைப்பருவத்தைப் பெண்மைக்குணம் முதிரப் பெறும்வரையும்,—இனிதுடன் மகிழ்ந்து காத்தான் - இனியசெய்தலோடு சந்தோஷித்துப் பாலித்தான். எ-று. (சஎ)

அனைத்துல களிக்குந் தாயை யன்புடன் வளர்க்கு மெல்லைத்
தினைப்புனங் காக்கு மற்றச் சேடிய ரிவளை வாவென்
றினக்கிளி கடியப் போது மென்றன ரிவளு மேனற்
புனத்திளங் கிளிக ளோச்சப் போந்தனள் பொருவி லாதாள்.

இ-ள். அனைத்துலகு அளிக்குந் தாயை அன்புடன் வளர்க்குமெல்லை - எல்லாவுலகங்களையும் ஆளும் அம்மையாரை (அவர்கள்) அன்போடு வளர்க்குங்காலத்திலே,—தினைப்புனங் காக்கும் அற்றச் சேடியர் - தினைகளைப் புனங்களிலிருந்து காக்கும் பருவத்துத் தோழியர்கள்,—இவளை வாவென்று இனக்கிளி கடியப் போதும் என்றனர் - (அம்மையாராகிய) இவரை(த் தலைவியாரே)வாரீர் என்று (முன்னிலைப்படுத்தி) இனமாகிய கிளிகளை ஓட்டப் போகுவம் என்றார்கள்,—பொருவிலாதாள் இவளும் ஏனற்புனத்து இளங்கிளிகள் ஓச்சப் போந்தனள் - ஒப்பற்றவராகிய இவருந் தினைப்புனத்தில் இளமையாகிய கிளிகளைக் கடியச் சென்றார். எ-று. (௬௮)

மாதரு மிவளு மேனல் வனத்திடை யிருத்தல் கண்டு
காதலி னரம்பு பாடுங் கந்தரு வத்த ரிம்மான்
பாதபங் கயத்தி னாலே பருப்பத முன்செய் துள்ள
தீதகன் றளவி லாத சிறப்பினைப் பெற்ற தென்றார்.

இ-ள். மாதரும் இவளும் ஏனல்வனத்திடை இருத்தல் - மகளிரோடு (அம்மையாராகிய) இவருந் தினைப்புனத்தில் இருத்தலை,—நரம்புபாடுங் கந்தருவத்தர் கண்டு காதலின் - யாழிசைக்குங் கந்தருவர்கள் கண்டு அன்போடு,—இம்மான் பாதபங்கயத்தினாலே பருப்பதம் முன்செய்துள்ள தீது அகன்று அளவிலாத சிறப்பினைப்பெற்றது என்றார் - இம்மாதின் பாதாரவிந்த (பரிச)த்தினாலே மலையானது முன்புபண்ணிய தீங்கினீங்கி அளவற்ற சிறப்பை அடைந்தது என்று கூறினார். எ-று. (௬௯)

அண்டகோ டிகட்குந் தாயா மணங்கினை மகளாக் கொண்ட
வண்டிருங் குழற்கி ராத மடந்தைமா தவத்தை யாம்வாய்
விண்டிட லெளிமை யன்றால் வேடருக் கரசன் வாழ்வோ
கொண்டபே ரன்பி னுள்ள குலமெலா முயர்ந்த வம்மா.

இ-ள். அண்டகோடிகட்குந் தாயாம் அணங்கினை மகளாக்கொண்ட - அண்டங்கள் பலவற்றிற்கும் மாதாவாகிய அம்மையாரைப் புதல்வியாகக் கொண்ட,—வண்டு இருங் குழற் கிராதமடந்தை மாதவத்தை - வண்டு கட்கிடமாகிய பெரிய கூந்தலையுடைய கொடிச்சி யா(ன் முற்பிறப்பி)ற் செய்யப்பட்ட பெருந்தவத்தை,—யாம் வாய்விண்டிடல் எளிமையன்று - யாம் வாயாற்கூறுதல் இலகுவன்று,—கொண்டபேரன்பின் வேடருக்கரசன் வாழ்வோ உள்ள குலமெலாம்உயர்ந்த-(இவ்வம்மையார்மேற்)கொண்ட பெருங்காதலினாலே வேடராசனது குடி(யாத்திரமே)யோ (அவனுக்கு) உள்ள வமிசமெல்லாம் உயர்ந்தன. எ-று.

இச்செய்யுளும் அடுத்தசெய்யுளும் அங்குள்ள முனிவர்கூற்று. அது அடுத்த பிற்செய்யுளான் விளங்கும். (௭௦)

கொன்னிலை நெடுவேற் செங்கைக் கொற்றவனரிது நோன்பு
பன்னெடுங் கால மாற்றப் பண்புறு தவத்தின் பான்மை

பின்னெனும் வடிவந் தாங்கி வேடர்தம் மரபி னுற்றா
லன்னவன் றவத்தை யாரே யறைந்திட வல்ல ரம்மா.

இ-ள். கொன் இலை நெடுவேற்செங்கைக் கொற்றவன் - பெருமையாகிய இலைவடிவுடைய நெடியவேலைக்கொண்ட செம்மையாகியகையையுடைய வேடராசன்,—அரிதுநோன்பு பன்னெடுங்காலம் ஆற்ற-அருந்தவத்தைப் பலநெடும்போது செய்ய,—பண்புறு தவத்தின் பான்மை பின்னெனும் வடிவந்தாங்கி வேடர்தம் மரபில் உற்றால் - குணம்பொருந்திய (அத்)தவத்தின் பயனே பெண்ணென்னும் உருவத்தைக் கொண்டு வேடர்குலத்தின் உற்றதாயின்,—அன்னவன் தவத்தை யாரே அறைந்திடவல்லர் - (வேடராசனாகிய) அவனது தவத்தை எவரே சொல்லவலியர். எ-று. (ருக)

என்றுளம் வியப்பு மீதூர்ந் தெடுத்தெடுத் துரைத்து வான்றோய்
குன்றிடத் திருந்த ஞானக் குருமணி விளக்கைக் காம
வன்றளை யறுத்து மூத்த முனிவரர் வழுத்தி நாளுஞ்
சென்றவ ணிருப்ப மாதுஞ் சிறப்பின்வீற் றிருந்தா ளன்றே.

இ-ள். என்று உளம் வியப்பு மீதூர்ந்து எடுத்தெடுத்துரைத்து - என்று மனத்து அதிசயமிகுந்து எடுத்தெடுத்துக்கூறி,—காம வன்றளை அறுத்து மூத்த முனிவரர் - காமமாகிய வலியவிலங்கை ஒழித்து முதிர்ந்த முனிச்சிரேட்டர்கள்,—வான் தோய் குன்றிடத்து இருந்த ஞானக் குருமணி விளக்கை நாளுஞ் சென்று வழுத்தி அவண் இருப்ப - முகில் படியும மலையில் இருந்த ஞானவடிவாகிய நிறம்பொருந்திய இரத்தினதீபத்தை நாடோறும் போய்த் துதித்துக்கொண்டு அம்மலையிலே (தமது தவத்தானத்து) இருக்க,—மாதுஞ் சிறப்பின் வீற்றிருந்தாள் - அம்மையாருஞ் சிறப்போடு (தினைப்புனத்தில்) வீற்றிருந்தனர். எ-று. (ருஉ)

வள்ளியம்மை திருவவதார அத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் உஎஉ.

## எ-வது. கந்தசுவாமி வள்ளியம்மையிடத்திற் சென்ற அத்தியாயம்.

முதிருந் தினைமொய்த் துயர்கொல் லையெலாங்
கதிர்கண் டுகவண் கொடுகன் னியர்தா
மிதணின் றுபுள்யா வையுமின் குரலா
லதிரும் படியோச் சினரவ் வரையின்

இ-ள். அவ்வரையின் கன்னியர் - அம்மலையில் வேடக்கன்னிகைகள்,—தினை மொய்த்து உயர் கொல்லையெலாம் - தினைப்பயிர்கள் நெருங்கி உயர்ந்த புனங்களினெல்லாம்,—இதண் நின்று கவண் கொடு - (அமைக்கப்பட்ட) அட்டாலைகளிலே நிலையாயிருந்து கவணைக் (கையிற்) கொண்டு,—முதிரும் கதிர் கண்டு - முதிர்ந்த (அத்தினைக்) கதிர்களைப் பார்வையிட்டு,—புள் யாவையும் இன் குரலால் அதிரும்படி ஓச்சினர் - (அக்கதிர்களைக் கவரவரும்) பறவைகள் எல்லாவற்றையும் (தமது) இனிய ஓசையினால் (அவை) நடுங்குமாறு கடிந்தனர். எ-று. (க)

தினைகாத் துளசே டியரோ டெளியேன்
வினைநீக் கியவேள் புணர்மின் னனையாள்
மனைநீத் துமடந் தையரோ டுசெலா
நனிவேட் கையினா டினளே னலையே.

இ-ள். எளியேன் வினை நீக்கிய வேள் புணர் மின்னனையாள் - சிறியேனது கருமத்தை ஒழித்த சுவாமியைப் புணரும் மின்போல்வார்,—மனை நீத்து மடந்தையரோடு செலா - வீற்றிலை அகன்று பொற்றொடியாரோடு சென்று,—தினைகாத்துள சேடியரோடு - தினைகாத்த பாங்கிகளோடு,—நனி வேட்கையின் ஏனலை நாடினள் - மிகு விருப்பத்தோடு (தாமுந்) தினைகளைக் காத்தார். எ-று. (௨)

புள்ளன் பொடுமோச் சியபொற் றொடியார்
நள்ளன் பொடுபோ யிவளு டியனத்
துள்ளன் பொடுகூ டியுறைந் துசெவ்வாய்
விள்ளுஞ் செயலா லவ்வண் மேவினளால்.

இ-ள். புள் அன்பொடும் ஓச்சிய பொற்றொடியார் நள் - பறவைகளை (ஊறு செய்யுங் கருத்தின்றி) அன்போடு கடிந்த மகளிரின் நடுவே,—இவள் போய் அன்பொடு நாடி - இவ்வம்மையாருஞ் சென்று அன்போடு (புட்கடிந்து) காத்துக்கொண்டு,—மனத்துள் அன்பொடு செவ் வாய்விள்ளுஞ் செயல் ஆல் கூடியுறைந்து - உள்ளத்தில் (அவர்மேற்கொண்ட) அன்போடு செவ்வே பேசுஞ் செய்கை பொருந்திச் சகவாசஞ்செய்து,—அவண் மேவினள் - ஆண்டு இருந்தார் எ-று. (௩)

அக்கா லையிலந் தரவா னெறியான்
மைக்கார் முகிலா மயில்வா கனவேள்
புக்கா னதுபோழ் துபுனத் திடையே
யிக்கா மொழியெய் துதனோக் கினனால்.

இ-ள். அக்காலையில் மைக் கார் முகிலாம் மயில்வாகன வேள் - அந்நாளிலே நீரைக்கொண்ட கரியமுகில்போலும் மயூரவாகனத்தையுடைய சுவாமியார்,—வால் அந்தர நெறியாற் புக்கான் - சுத்தமாகிய ஆகாயமார்க்கத்தாற் புகுந்தவராய்,—அதுபோழ்து புனத்திடை இக்காமொழி எய்துதல் நோக்கினன் - அப்பொழுது புனத்திலே கரும்புபோலும் மொழியினையுடைய அம்மையார் இருத்தலைப் பார்த்தார். எ-று. (௪)

பிறையா நுதலா கியபே ரழகும்
மறைவா ணியைநேர் சொலும்வா சகமு
நறையார் மலரோ தியுநாண் மலருங்
கறையா ரயில்வே லிறைகண் டனனே.

இ-ள். பிறையாம் நுதலாகிய பேரழகும் - பிறைபோலும் நெற்றியிலுள்ள பெருந்திருவையும்,—மறைவாணியை நேர்சொலும் வாசகமும் - வேதவாக்குப்போலப் பேசும் மொழியையும்,—நறை ஆர் மலர் ஓதியும் - பரிமளமார்ந்த பூவைமுடித்த கூந்தலையும்,—நாள் மலருங் கறையார் அயில் வேல் இறை கண்டனன் - (துட்டரை நிக்கிரகிக்கவேண்டுங்)காலத்து வெளிப்படுகின்ற நிறமார்ந்த கூரிய வேற்படையையுடைய சுவாமியார் நோக்கினார். எ-று. (௫)

கருணைக் கடலா கியகண் ணிரையு
மருணத் திருமே னியுமா றுமுகத்
தருணத் தலர்தா மரைநாண் மலரின்
வருணத் தையுநோக் கினண்மான் விழியாள்.

இ-ள். கருணைக்கடலாகிய கண்ணிரையும் - கிருபாசமுத்திரமாகிய திருநேத்திரப்பந்தியையும்,—அருணத்திருமேனியும் - செந்திருமேனியையும்,—ஆறுமுகத் தருணத்து அலர் தாமரைநாண்மலரின் வருணத்தையும் - ஆறுமுகங்களினது இளைய அலர்ந்த பங்கயப்புதுமலர்போலும் பிரகாசத்தையும்,—மான் விழியாள் நோக்கினள் - மானேருக்கியார் கண்டார். எ-று. (௬)

பிடிபோ னடைபெற் றுளபெண் ணமுதை
வடிவே லிறைகண் டுமகிழ்ச் சியினுற்
படைவேள் கணைபாய் தொறுமா விரகக்
கடன்மூழ் கிமிகுந் துயர்கை யுறவே.

இ-ள். வடி வேல் இறை பிடிபோல் நடைபெற்றுள பெண்ணமுதை மகிழ்ச்சியினுற் கண்டு - கூரிய வேலாயுதத்தையுடைய கடவுள் யானைப் பிடிநடைபோலும் நடையைக்கொண்டபெண்களுள் அமுதுபோல்வாரைப் பிரீதியோடு கண்டு,—படை வேள் கணை பாய்தொறும் மிகுந்துயர் கையுற- விறையாகிய காமபாணங்கள் வீழுந்தோறும் (இலக்காயினோர்க்கு) மிகுகின்ற துன்பம் (தம்முள்ளத்தின்) இடத்திலே பொருந்த,—மா விரகக்கடல் மூழ்கி- (செயற்கையால்) ஆகின்ற காமக்கடலில் அமிழ்ந்தி (அங்ஙனங் காமுகத் தன்மை பூண்டதற்கேற்பச் சிறிது புனைந்துரைக்கத் தொடங்கி). எ-று.

மூழ்கி என்பதற்கு முடிக்குஞ் சொல் மேற் பதினொராம்பாட்டிற் பெறப்படும். இடையில் வரும் முச்செய்யுட்களுஞ் சுவாமியார் கூற்று. (௭)

அல்லோ குழலோ வறியேன் மதவேள்
வில்லோ நுதலோ விரகந் தருவாள்
சொல்லோ கிளியோ துவரோ விதழோ
பல்லோ தளவோ வுவமிப் பதுவே.

இ-ள். விரகந் தருவாள் குழலோ அல்லோ - காமப்பிணியைத் தருபவ(ளாகிய இவ)ளது கூந்தலோ? இருளோ?,—நுதலோ மதவேள் வில்லோ - (இவள் நெற்றியோ? காமன் வில்லோ?,—சொல்லோ கிளியோ - (இவள்) மொழியோ? கிளிமொழியோ?,—இதழோ துவரோ - (இவள்) அதரமோ? பவளமோ?,—பல்லோ தளவோ - (இவள்) பல்லோ? முல்லைமுகையோ?,— உவமிப்பது அறியேன் - ஒப்புப்பொருளை(ப் புகழ்பொருளிற் பிரித்தெடுத் துரைத்தல்) அறியேன். எ-று. (௮)

மானோ கடுவோ வடுவோ கமலந்
தானோ மதனன் சரமோ கருமைத்
தேனோ குவளைத் திருநாண் மலரோ
மீனோ விவள்வாள் விழியே விணையே.

இ-ள். இவள் விழி இணை - இவளுடைய கண்களிரண்டும்,—மானோ ... ... ... மீனோ வாளோ வேலோ - மானோ? நஞ்சோ? (மாம்)பிஞ்சோ? தாமரை மலரோ? காமபாணமோ? கருமையாகிய வண்டோ? குவளையினது

அழகிய புதிய மலரோ? மற்சமோ? வாட்படையோ? வேற்படையோ? (யா தென்பேன்). எ-று. (௯)

புருவத் திணையோ பொருவேள் சிலையோ
விருவெற் பணையோ விணைவார் முலையோ
வுருவத் தியலோ மயிலோ வுளைவேன்
விரகத் துறமூட் டியமெல் லியலே.

இ-ள் விரகத்து உற மூட்டிய மெல்லியல்-காமத்தின்கண் (என்னை) மிகப்பற்றுவித்த (இப்)பெண்ணினிடத்து(உள்ளன),—புருவத்து இணையோ பொரு வேள் சிலையோ-புருவங்கள் இரண்டோ? பொருகின்ற காமன் விற்களோ?,—இருவெற்பணையோ இணை வார் முலையோ - இரண்டு மலைகளோ? இரண்டு கச்சுகட்டப்பட்ட முலைகளோ?,—உருவத்தியலோ மயிலோ - உருவத்தினியலோ? மயிலின்சாயலோ?,—உளைவேன் - அறியாது வருந்துவேன். எ-று. (௧௦)

என்றா றுமுகே சனிரும் பணியார்
குன்றா னிழிந் துகுளிர்ந் தநறா
மென்றா துகுசோ லையின்மெல் லியன்முன்
னின்றா னவளோ டுநிகழ்த் திடுவான்.

இ-ள். என்று ஆறுமுகேசன் - என்றுசொல்லி (அந்த) ஆறுமுகக்கடவுள்,—இரும் பணியார் குன்றான் இழிந்து - பெரிய பனியார்ந்த மலையின் கண் இறங்கி,—குளிர்ந்த நறா மென் தாது உகுசோலையின்-குளிர்ந்த தேனையும் மெல்லிய தாதுக்களையுஞ் சொரிகின்ற பொழிலின்கண்,—மெல்லியல் முன் நின்றான் அவளோடு நிகழ்த்திடுவான் - அம்மையார் முன்னர் நின்று அவரோடு பேசுவார். எ-று. (௧௧)

வேயார் வரைமீ துபுனத் திலுள
நீயா ரிடமே துநினைப் பெறுமோர்
தாயா ரருடந் தையரார் பவள
வாயா ரமுதே வறியேற் குரையாய்.

இ-ள் ஆர் அமுதே - அரிய அமிழ்துபோல்வாளே,—வேய் ஆர் வரை மீது புனத்தினுள நீ யார் - மூங்கில் செறிந்த மலையின்மேற் கொல்லையிலுள்ள நீ யாவள்,—இடம் எது - (உனது) இடம் யாது,—நினைப் பெறும் ஓர் தாய் ஆர் - உன்னைப் பயந்த ஒரு மாதா யார்,—அருள் தந்தையர் ஆர் - பெற்ற தகப்பனார் யார்,—பவள வாய் வறியேற்கு உரையாய் - (இவற்றின் விடைகளைப்) பவளம்போலும் வாயினாற் சிறியேனுக்குச் சொல்லுதி. எ-று.

கொன்னே குறமா தர்குழூஉ வரலு
னென்னே யுனைவேட் டுளன்யாண் டுளனோ
நன்னே யமொடென் முனவிற் றுதியாற்
பொன்னே விலகாய் பொருவேள் கணையே.

இ-ள். கொன்னே குறமாதர் குழூஉ வரல் தான் என்னே - (பெருந் திருவிற் சிறந்த நீ இங்ஙனம்) வீணே குறமகளிர் கூட்டத்தில் வந்தது என்னை?,—உனை வேட்டு உளன் யாண்டுளன் - உன்னை வரைதலிற் கருத்துடையான் எங்குளன்?,—என்முன் நல் நேயமொடு நவிற்றுதி - என் கண்ணே புரியும் நல்ல அன்போடு கூறுதி,—பொன்னே பொரு வேள்

கணை விலகாய் - சீதேவிபோல்வாய் (இவ்வாறு கூறுவாயின்) பொருகின்ற காமனது பாணத்துக்கு (இலக்காகாது) விலகமாட்டாய். எ-று. (௧௩);

வாளா வொருகன் னிகைமா தெனிற்
கேளா யிவணீ கிரணந் தருபொற்
றோளா றிருசுந் தரமால் வரைமே
னாளார் தொடைசூ டுவனன் குறவே.

இ-ள். நீ வாளா ஒரு கன்னிகை மாது எனில் இவண் கேளாய் - நீ (வரைவு குறிக்கப்படாது) சும்மா(இருக்கின்ற) ஒரு கன்னிப்பெண்ணாயின் இங்ஙனங் கேட்குதி,—கிரணந் தரு ஆறிரு பொற்றோட் சுந்தர மால் வரை மேல் - காந்தியை வீசுகின்ற (என்) பன்னிரண்டு திருப்புயங்களாகிய அழகிய பெரிய மலைகளின்மேலே,—நாள் ஆர் தொடை நன்குறச் சூட்டுவன் - (சுப)தினத்திலே நிறைந்த (மண)மாலையை நன்றாக அணிவேன். எ-று. ()

மன்றற் றொடைசூட் டுதிமான் மகணீ
யென்றற் புதமோ டுசெவ்வே லிசையக்
குன்றக் குறமான் குமரன் புயமே
லொன்றக் கணிரண் டுமுறக் கவிழா.

இ-ள். மான் மகள் நீ மன்றற்றொடை சூட்டுதி - மானின் மகளே நீ மணமாலையைச் சூட்டு,—என்று செவ்வேள் இசைய - என்று சுவாமியார் கூற,—குன்றக் குறமான் அற்புதமோடு - மலையில் வேடர்பெண்ணாகிய அம்மையார் அதிசயத்தோடு,—குமரன் புயமேற் கண் இரண்டும் ஒன்ற உறக் கவிழா - சுவாமியினுடைய புயங்களிலே கண்களிரண்டும் பொருந்த மிக(த்தலை)குனிந்து. எ-று. (௧௫)

உள்ளத் தினில்வே ளொருநாற் படையு
மெள்ளச் செலவிட் டதின்மெய் வியராத்
தள்ளற் கருநா ணொடுநா னகையா
வள்ளத் துணைவார் முலைவாய் திறவா.

இ-ள். உள்ளத்தினில் வேள் ஒரு நாற்படையும் மெள்ளச் செலவிட்டதின் - (தன்)மனத்தின்கண்ணே காமன் நான்குபடைகளையும் மெல்லச் செலுத்தினமையால்,—வள்ளத் துணை வார் முலை - கிண்ணங்கள்போலும் இரண்டு கச்சுகட்டப்பட்ட தனங்களையுடைய(அவ்வம்மையா)ர்,—மெய் வியராத் தள்ளற்கரும் நாணொடு நகையா வாய்திறவா - உடல் வேர்த்து ஒழித்தல்கூடாத வெட்கத்தோடு சிரித்து வாய்திறந்து. எ-று. (௧௬)

விந்தைக் கிரிவேந் தனளித் தருள்வோ
னந்தக் கிரியா யிழையா ளருடாய்
சிந்தைக் குரியீர் சிறியேன் றாம்பதியோ
சந்தப் பொழில்சூழ் தருவாள் வரையே.

இ-ள். சிந்தைக்கு உரியீர் - எண்ணத்துக்கு உரிமையுடையீர்,—விந்தைக்கிரிவேந்தன் அளித்தருள்வோன் - விந்தைமலையரசனை பயந்தருளிய வன்,—அந்தக் கிரியாயிழையாள் அருள் தாய் - அழகினையுடைய கொடிச்சியே அருளிய தாய்,—சிறியேன் பதியோ சந்தப் பொழில் சூழ்தரு தாழ் வரை - சிறியேனது வாசஸ்தானமோ சந்தனச்சோலை சூழ்ந்த மலையின் அடிவாரம். எ-று. (௧௭)

அடியேன் சிறுகன் னிகையா குமெனத்
தொடிவாய்ந் தகைசொற் றலுமன் னவள்பாற்
கடிவாய்ந் தகடம் பன்மிகுந் துயரா
லுடன்வாஞ் சையினோக் கினனொண் ணுதலை.

இ-ள். அடியேன் சிறுகன்னிகையாகும் - தமியேன் சிறியகன்னிகை யாம்,—எனச் சொற்றலும் - என்று கூற,—தொடி வாய்ந்த கை அன்ன வள்பாற் கடிவாய்ந்த கடம்பன்-வளையல் பொருந்திய கையையுடைய அவ ளிடத்தே மணக்கருத்தைப்பொருந்திய சுவாமியார்,—மிகுந்துயரால் உடன் வாஞ்சையின் நோக்கினன் ஒண்ணுதலை - மிக்கதுக்கத்தால் உடனே விருப் பத்தோடு அம்மையாரைப் பார்த்தார். எ-று. (கஅ)

அன்பா லறுமா முகவே ளரிணை
மின்பால் விழிவைத் ததைமீட் பரிதா
யுன்பா லருள்வைத் தனனொண் ணுதலீ
யென்பால் வதுவைக் கிசைவா யினியே.

இ-ள். அறுமாமுகவேள் - ஆறுதிருமுகங்களையுடைய சுவாமி,— அரிணை மின்பால் அன்பால் வைத்தது விழியை மீட்பரிதாய் - மான்மக ளிடத்துக் காதலோடு வைத்த பார்வையைத் திருப்புதல் கூடாது,—ஒண் ணுதல் உன்பால் அருள் வைத்தனன் - ஒள்ளியநெற்றியையுடையாய்! நின்மாட்டுக் கருணையை வைத்தேன்,—இனி நீ என்பால் வதுவைக்கு இசைவாய் - இனி நீ என்மாட்டு மணத்துக்கு உடன்படுவாய் (என்றார்), எ-று. (ககூ)

எனவா றுமுகே சனியம் புதலுங்
கனிவாய் மொழியன் பொடுகா தலியாத்
தனிநா யகரே தருமந் தவறா
முனியா தருள்வீ ரெனவே மொழிவாள்.

இ-ள். என ஆறுமுகேசன் இயம்புதலும் - என்று ஆறுமுகக்கடவுள் கூறுதலும்,—கனிவாய் மொழி அன்பொடு காதலியா - அம்மையார் அன் போடு காதலித்து,—தனி நாயகரே தருமந் தவறா முனியாது அருள்வீர் என மொழிவாள் - ஒரு தலைவரே! அறம் வழுவாவண்ணம் வெறாது அரு ளுக என்று கூறிச் சொல்லுவார். எ-று (உ0)

குரவோர் களளித் திடுகொள் கையினால்
வரைவா ருடன்வாழ் வதுவே மரபாங்
கரவா லொருகா ளையர்கை யுறலாற்
றரைமீ துயர்கன் னிமையுந் தவறும்.

இ-ள். குரவோர்கள் அளித்திடுகொள்கையினால் வரைவாருடன் வாழ்வதுவே மரபாம் - தந்தைதாயர் கொடுக்குமியல்பேபாடு கைப்பற்றுவா ருடனே வாழ்தலே முறையாம்,—கரவால் ஒரு காளையர் கையுறலால் - கரவினையுடைய ஒருதலைவர் கைப்பற்றுதலினாலே,—தரைமீது உயர் கன் னிமையுந் தவறும் - நிலத்திலே உயர்ந்த கன்னித்தன்மையும் வழுவும். எ-று. (உக)

வேறு.

எனையரு டந்தை தாய ரின்னருள் பெற்றோர் தம்பால்
வினவுதி ருமது தோற்றம் வியப்புற நோக்குங் காலை
யனையவ ருதகத் தோடு மளியனை யழல்சான் றாகக்
கனைமுர சோதை யார்ப்பக் கடிமணம் புரிவிப் பாரால்.

இ-ள். எனை அருள் தந்தை தாயர் இன் அருள் பெற்றோர் - என்னைப் பெற்ற தந்தைதாயர் இனிய அருளைப் பெற்றவர்கள்,—தம்பால் வினவுதிர் - அவரிடத்துக் கேட்குதிர்,—உமது தோற்றம் வியப்புற நோக்குங் காலை - உமதுதிருவுருவத்தை அதிசயம் பொருந்தப் பார்க்கும்பொழுதே,—அனையவர் அளியனை அழல் சான்றாகக் கனை முரசு ஓதை ஆர்ப்ப உதகத்தோடுங் கடிமணம் புரிவிப்பார் - அவர் தமியேனை அக்கினி சாக்ஷியாக முழங்கு முரசொலி நிறையச் சலதாரையோடு கைப்பற்றுவிப்பார். எ-று. (௨௨)

அற்புட னினைய வாற்றா லருமணம் புரிதி ராயிற்
கற்பினின் முதன்மை யாய கன்னியும் யானே தந்தோர்
பொற்புறு குலங்க ளெல்லாம் புனிதமா மெனுஞ்சொற் கேட்டுச்
சிற்பர குமர மூர்த்தி திருவுள மகிழ்ச்சி பூத்தான்.

இ-ள். இனையவாற்றால் அற்புடன் அரு மணம் புரிதிர் ஆயின் - இவ்வாறு அன்போடு அரிய விவாகத்தைச் செய்வீராயின்,—கற்பினின் முதன்மையாய கன்னியும் யானே - கற்பின்மேம்பாடுடைய கன்னிகையும் யானே,—தந்தோர் பொற்பு உறு குலங்களெல்லாம் புனிதமாம் - பெற்றாருடைய பொலிவினை உற்ற குலமெல்லாஞ் சுத்தமாம்,—எனுஞ் சொற் சிற்பர குமரமூர்த்தி கேட்டு - என்ற வசனத்தைப் பசுபதியாகிய குமாரசுவாமி கேட்டு,—திருவுளம் மகிழ்ச்சி பூத்தான் - திருவுள்ளத்துப் பிரீதி மிகுந்தார். எ-று. (௨௩)

கண்ணியுங் கயிறுந் தாம்புங் கவண்வலை முதல யாவும்
வண்ணவிற் றழும்புங் காட்டும் புயமலை வாணர் வேந்தன்
றிண்ணிய குறவர்க் கெல்லாஞ் செய்வினை காட்டுங் காலை
யெண்ணினுக் கடங்கா வேற்கை யெம்பிரான் சென்று கண்டான்.

இ-ள். கண்ணியுங் கயிறுந் தாம்புங் கவண் வலை முதல யாவும் வண்ணவிற்றழும்புங் காட்டும் புய மலைவாணர் வேந்தன் - கண்ணி கயிறு தாம்பு கவண் வலை முதலிய அனைத்தையும் அழகாகிய விற்றழும்புகளையுங் காட்டுகின்ற புயங்களையுடைய வேடராசன்,—திண்ணிய குறவர்க்கெல்லாஞ் செய்வினை காட்டுங் காலை - வலிய வேடர்களுக்கெல்லாஞ் செய்தொழிலைப் பயிற்றுஞ் சமயத்திலே,—எண்ணினுக்கு அடங்கா வேற்கையெம்பிரான் சென்று கண்டான் - சிந்தையின் உட்படாத வேலைக்கொண்டகையையுடைய எம்பெருமான் போய்க்கண்டார். எ-று. (௨௪)

## கந்தசுவாமி வள்ளியம்மையிடத்திற்சென்ற அத்தியாயம்

## முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௨௯௩.

## ௮-வது. வள்ளியம்மை திருக்கலியாண அத்தியாயம்.

பவக்குறும் பெறியும் வியாசனை நோக்கிப் பலகலைச் சுருதியா
ராய்ந்த, தவக்கட லனைய சுகமுனி யுள்ளந் தண்ணளி சுரப்பவீற்
றிருந்து, சுவைத்தமிழ் முனிவற் குரைத்தவச் சுடர்வேற் சோதி
வா னவன்கதை யனைத்துஞ், செவிக்கினி தமிர்தா மெந்தைகே
ளடியேன் செப்புவ துண்டுசாற் றுவனால்.

இ-ள். பவக்குறும்பு எறியும் வியாசனை - பிறவிப்பகையை நீக்கும் வியாசமுனிவனை,—பலகலைச் சுருதி ஆராய்ந்த தவக்கடல் அனைய சுகமுனி நோக்கி-பலநூல்களையும் வேதங்களையும் ஆராய்ந்த தவத்திற் கடல் போன்ற சுகமுனிவன் பார்த்து,—உள்ளந் தண்ணளி சுரப்ப வீற்றிருந்து முனிவர்க்குச் சுவைத்தமிழ் உரைத்த - மனத்தில் அருள் பெருக வீற்றிருந்து அகத்தியனுக்குச் சுவைபொருந்திய தமிழைப் போதித்த,—அச்சுடர் வேற் சோதி வானவன் கதை அனைத்தும் - அந்த ஒளிபொருந்திய வேலையுடைய கடவுளின் கதைகளெல்லாம்,—செவிக்கு இனிது அமிர்தாம் - செவிகளுக்கு இனிய அமுதமாம்,—எந்தை கேள் - எம்பெருமானே கேட்க,—அடியேன் செப்புவதுண்டு சாற்றுவன் - தமியேன் கூறுவதுண்டு; (அதனைக்) கூறுவேன். எ-று. (௧)

தந்தைநின் வதனத் தாமரை மலரத் ததும்புபே ரானந்த
வெள்ளஞ், சிந்தனைச் சனன மரணவே ரறுத்துச் செங்கண்மால்
பங்கயன் காணா, மந்திரப் பொருளாஞ் சிவனிரு சரண வாரிச
மென்னுமோர் வீட்டின், முந்துறச் செலுத்து மென்றபான்
மையினான் முத்தலை யிருதலை வேலோன்

இ-ள். தந்தை நின் வதனத் தாமரை மலரத் ததும்பு பேரானந்த வெள்ளஞ் சிந்தனை என்ற பான்மையினால் - ஐயா! உமது முகத்தாமரை அலர (அதினின்று) வழிகின்ற (கதையின்) பேரின்பப் பெருக்கு (என்) மனத்துப் பொருந்துந் தன்மையினால்,—முத்தலை இருதலை வேலோன் - வேலாயுதக்கடவுள்,—சனனமரணவேர் அறுத்து - பிறப்பிறப்புக்களின் மூலத்தைக் களைந்து,—செங்கண் மால் பங்கயன் காணா மந்திரப்பொருளாஞ் சிவன் இருசரணவாரிசம் என்னும் ஒர்வீட்டின் முந்துறச் செலுத்தும் - விட்டுணு பிரமர் அறியாத பிரணவார்த்தமாகிய சிவபெருமானுடைய உபயபாதாரவிந்தமென்னும் ஒருவீட்டின் முன்னாகச் சேர்ப்பார். எ-று. (௨)

வேடருக் கரசன் முன்குும ரேசன் மேவிய தன்மையுங்
கிராத, னாடுதற் கரிதாங் குமரவேண் முன்ன நவின்றது நகை
முகத் துவர்வாய், மாடகத் திவவி யாழ்மொழிக் களப வனமுலை
மகளையீந் ததுவுஞ், சூடகத் தளிர்க்கை மாலைசூட் டியது மெந்தை
நீ சொல்லுக வென்றான்.

இ-ள். குமரேசன் வேடருக்கரசன்முன் மேவிய தன்மையும் - குமாரசுவாமி வேடராசன்முன்னே சேர்ந்த இயல்பினையும்,—கிராதன் நாடுதற் கரிதாங் குமரவேள்முன்னம் நவின்றதும் - வேடன் அறிதற்கரிய குமாரசுவாமிக்குமுன்னே பேசியதனையும்,—நகை முகத் துவர் வாய் மாடகத்

திவவு யாழ் மொழிக் களப வண முலை மகளை ஈந்ததுவும் - நகைத்த முகத்தையும் பவளம்போலும் இதழையும் முறுக்காணியின் வலிக்கட்டையுடைய வீணையின் இசைபோலும் மொழியையுங் கலவைச்சாந்தையணிந்த அழகிய முலையையுமுடைய புத்திரியைக் கொடுத்தமையையும்,—சூடகத் தளிர்க்கை மாலை சூட்டியதும்-(அப்புத்திரி) வளையணிந்த தளிர்க்கைகளால் மாலை சூட்டினமையையும்,—எந்தை நீ சொல்லுக என்றான் - சுவாமீ நீர் கூறுக என்று சொன்னான். எ-று. (௩)

என்றலும் வியாசன் சுகன்முக நோக்கி யிம்பரு மும்பரும் வணங்கக், குன்றகம் பிளந்த நெட்டிலைச் சுடர்வேல் கொண்டவன் காதையி னன்பு, சென்றுள தானக்கிங் காதலாற் குமரன் சீர்த்தியைப் புகன்றவர் யார்க்கு, நன்றுணர் தருமம் பொருளின்ப மோக்க நண்ணுமா லினிதுகே ணவில்வாம்.

இ-ள். என்றலும் வியாசன் சுகன் முக நோக்கி - என்றுகூற வியாசர் (அச்)சுகரது முகத்தைப் பார்த்து,—இம்பரும் உம்பரும் வணங்கக் குன்றகம் பிளந்த நெட்டிலைச்சுடர்வேல் கொண்டவன் காதையின் உனக்கு இங்கு அன்பு சென்றுளது - இவ்வுலகினருந் தேவரும் வழிபடக் கிரவுஞ்ச கிரியைக் கிழித்த நெட்டிலைச்சுடர்வேலைத் தரித்தவரது கதையில் உனக்கு இங்கே அன்பு சென்றது,—குமரன் சீர்த்தியைப் புகன்றவர் யார்க்கும் நன்றுணர் தருமம் பொருள் இன்பம் மோக்கம் நண்ணும் - சுவாமியின் புகழைக்கூறினரெவர்க்கும் நல்லறிவோடு அறம் பொருள் இன்பம் வீடுகள் எய்தும்,—ஆதலால் நவில்வாம் இனிது கேள் - ஆதலாற் கூறுவாம் இனிது கேட்க. எ-று. (௪)

முகில்வயி றுடையக் கூனுடற் கருங்கான் முசுக்கலை யுலவு மால் வரையிற், றகைநெடுஞ் சிலைக்கை வேடர்கோ மகன்பாற் சதுர்மறை முறையிடு மிருதாட், குகன்முக மாறும் புயங்களீ ராறின் கோலமுங் கரந்துமா னுடன்போ, லகமகிழ் சிறப்பச் சென்றுநின் றெயினர்க் கரசகே ளொன்றுனக் கறைவாம்.

இ-ள். கூன் உடற் கருங்கால் முசுக்கலை முகில் வயிறு உடைய உலவும் மால் வரையில் - வளைந்த சரீரத்திற் கரிய கால்களையுடைய ஆண் முசுக்கள் மேகங்களின் வயிறு கிழிய உலாவுகின்ற பெரிய மலையில்,—தகை நெடுஞ் சிலைக்கை வேடர் கோமகன்பால் - தகுதியாகிய நெடிய வில்லைக்கைக்கொண்ட வேடராசனிடத்து,—சதுர்மறை முறையிடும் இருதாட் குகன்-நான்குவேதங்களாலும் முறையேதாங்கப்படுகின்ற உபயபாதங்களையுடைய குமாரசுவாமி,—முகம் ஆறும் புயங்கள் ஈராறின் கோலமுங் கரந்து - முகங்கள் ஆறையும் புயங்கள் பன்னிரண்டின் கோலத்தையும் மறைத்து - மானுடன்போல் அகம் மகிழ்சிறப்பச் சென்று நின்று - மனிதன்போல மனமகிழ்ச்சி பெருகப் போய்நின்று,—எயினர்க்கரச உனக்கு ஒன்று அறைவாங் கேள் - வேடராசனே உனக்கொன்று சொல்லுவாங் கேட்குதி. எ-று. (௫)

உன்னிடத் துதித்த மகள்வயி னார்வ முற்றன மளிக்குதி யென்ன, வன்னவிற் கரத்துப் புளினர்கோ னழன்று மகிழ்சிறந் தெம்மலை காக்குங், கொன்னிலைச் சுடர்வேன் முருகனுக் கிவளைக்

கொடுப்பதை யன்றிமுத் தேவ ரென்னிடத் திரந்து கேட்கினுங் கொடுப்ப தில்லைநீ போவென விசைத்தான்.

இ-ள். உன்னிடத்து உதித்த மகள்வயின் ஆர்வம் உற்றனம் அளிக்குதி என்ன - உன்னாற் பிறந்த புத்திரியில் ஆசை கொண்டோந் தருகுதி என்று சொல்ல,—வன்ன விற்கரத்துப் புளினர்கோன் அழகிய வில்லைக் கையிலுடைய வேடராசன் சினந்து,—எம்மலை மகிழ்சிறந்து காக்குங் கோன் இலைச் சுடர் வேல் முருகனுக்கு இவளைக் கொடுப்பதையன்றி - நம் மலையைப் பிரீதியிருந்து காக்கும் வேலாயுதக்கடவுளுக்கு இவளைக் கொடுப்பதேயன்றி,—முத்தேவர் என்னிடத்து இரந்து கேட்கினுங் கொடுப்ப தில்லை நீ போ என இசைத்தான் - (பிரமா தி) மூன்றுதேவரும் என்னிடத்து வேண்டிக் கேட்பினுங் கொடுத்தலில்லை நீ செல்லுதி என்று கூறினான். எ-று. (௬)

அந்தவா சகந்தே னறிரு செவிக்கு மமுதமூற் றுவதெனக் கேட்டுக், கந்தவேண் மகிழ்ந்து மானிடைப் பிறந்த கன்னிகை யெனலம் புனத்துட், சிந்தையின் விரைந்து சென்றிவ ளார்வந் தெரிக்குது மெனவுளந் தேறி, யிந்திர சாலம் போலொரு தருவா யிராறுதோ ளெம்பிரா னின்றான்.

இ-ள். அந்த வாசகம் ஆறிரு செவிக்குந் தேன் அமுதம் ஊற்றுவதென - அந்த வசனமானது பன்னிரண்டு செவிகளிலுந் தேனையும் அமுதத்தையும் ஊற்றுவதுபோலாக —இராறுதோள் எம்பிரான் கந்தவேள் அகத்துள் மகிழ்ந்து - பன்னிரண்டு புயங்களையுடைய எம்பதியாகிய சுவாமி உள்ளே மகிழ்ந்து,—மானிடைப் பிறந்த கன்னிகை ஏனலம் புனத்துட் சிந்தையின் விரைந்து சென்று - வள்ளியம்மையாரது தினைப்புனத்தின்கண்ணே மனத்தின் விரைந்து சென்று,—இவள் ஆர்வந் தெரிக்குதும் என உளந் தேறி - இவளுடைய காதலை விளக்குவோமென்று மனத்துத் தெளிந்து,—இந்திர சாலம்போல் ஒருதருவாய் நின்றான் - இந்திரசாலஞ் செய்வார்போல ஒரு மரமாகி நின்றார். எ-று. (௭)

தாருவின் றோற்றங் கண்டுமான் பயந்த தண்ணறு வொழுகு பூங் கூந்த, னாரியும் பிரியாச் சேடியர் தாமு நாடரு முளத்திலற் புதமாய்க், காரிருட் படலங் கவித்தகற் பகத்திற் கவின்செறி நிழலிடை யினிது, வேரியந் தென்ற றைவர வுள்ளம் வியப்புறத் துயிலுமே லவையினில்.

இ-ள். தாருவின் தோற்றங் கண்டு - மரத்தின் வெளிப்பாட்டைக் கண்டு,—மான்பயந்த தண் நறு ஒழுகு பூங் கூந்தல் நாரியும் பிரியாச் சேடியர் தாமும் - மான் பெற்ற குளிர்ந்த தேன் ஒழுகும் பூங்குழலையுடைய அம்மையாரும் பிரியாத சகிமாரும்,—உளத்தில் நாடரும் அற்புதமாய் - மனத்தில் அறிதற்கரிய அதிசயமாய்,—கார் இருட் படலங் கவித்த கற்பகத்தின் கவின் செறி நிழலிடை - கரிய இருட்கூட்டஞ் செறிந்த கற்பகதருவினது போல அழகுசெறிந்த (அம்மர) நிழலின்கண்,—இனிது வேரியந் தென்றல் தைவர - இன்பமாகிய சுகந்தமான தென்றற்காற்றுப் பட,—உள்ளம் வியப்புறத் துயிலும் எல்வையினில் - மனத்து வியப்புப்பொருந்த உறங்கும் பொழுது. எ-று (௮)

குறைவருங் குறவர்க் கிறைவனு மின்னற் கொள்கைய
னுகிமா னளித்த, விறைவிநங் குறிச்சி விட்டகன் றேன விளம்
புனத் தினிதுவீற் றிருந்தா, ளுறைவிடந் தேடி நாடுது மென்ன
வுற்றன னற்றமின் றுயர்ந்த, நறைமலர் பொதுளுந் தாருவின்
றோற்ற நாடிநின் றெயினர்கோ னினையா.

இ-ள். குறைவருங் குறவர்க்கிறைவனும்-குறைவற்ற வேடராசனும்,—மானளித்த இறைவி நங் குறிச்சி விட்டகன்று ஏனவிளம்புனத்து இனிது வீற்றிருந்தாள் உறைவிடந்தேடி நாடுதும் என்ன இன்னற் கொள்கையனுகி உற்றனன் - மான்பெற்ற தலைவி நம்மூர்(வருதலை) விட்டுநீங்கி இளந் தினைப்புனத்திற்றனே நன்கிதினமர்ந்தாள்; (அதன்காரணத்தை இருப்பிடத்தில் ஆராய்ந்தறிவோம் என்று துக்கபாவமுடையனுய்ச் சென்றான்,—எயினர்கோன் - (அங்ஙனஞ்சென்ற) வேடராசன்,—அற்றமின்றுயர்ந்த நறைமலர் பொதுளுந் தாருவின் தோற்றம் நாடி நின்று நினையா - பருவமின்றியுயர்ந்த நறுமபூச் செறிந்த மரத்தோற்றத்தைக் கண்டு நின்று நினைந்து எ-று. (௯)

கதிரவன் றடந்தேர்க் கலினமா விலகக் கற்பக தாருவின்
னுயர்ந்து, முதுவரை யிடத்து வந்தகா ரணநா முன்னுறின்
மாயமா மென்றே, யதிர்குரல் வேடர்க் கரசனின் றறையா வருந்
தருக் குறைப்பனு னென்று, கதிருறு பரசு கைக்கொள வாங்கே
சண்முகன் றருவுருக் கரந்தான்.

இ-ள். முதுவரையிடத்து - பழைய இம்மலையினிடத்தே,—கற்பக தாரு - கற்பகம்போலும் இம்மரம்,—கதிரவன் தடந்தேர்க் கலினமா விலக விண்ணுயர்ந்து வந்த காரணம் - சூரியனுடைய பெரிய தேர்க்குதிரைகளும் விலகுமாறு ஆகாயத்தில் உயர்ந்து வந்ததன் காரணத்தை,—நாம் முன்னுறின் மாயமாம் என்று-நாம் எண்ணுங்கால் ஒருமாயமேயாம் என்று,—வேடர்க்கரசன் நின்று அதிர் குரல் அறையா - (அவ்)வேடராசன் நின்று முழங்குகின்ற பேரொலியாற் சொல்லி,—நான் அருந் தருக் குறைப்பன் என்று கதிருறு பரசு கைக்கொள - நான் அரிய மரத்தைத் தறிப்பேன் என்று ஒளிபொருந்திய மழுவைக் கையிற் கொள்ள,—ஆங்கே சண்முகன் தருவுருக் கரந்தான் - அப்பொழுதே சண்முகக்கடவுள் மரவடிவத்தை மறைத்தார். எ-று. (௰)

மாமுதல் றடிந்து வான்றரு வளர வாங்கிய வடிநெடு வேலோன்,
றாமமென் குழற்காய் மைத்துனற் பதைத்துத் தானுமோர் மர
னுரு வெடுத்துக், காமுற வளர்ந்து கானவற் கொளிப்பக் கான
வர்க் கரசன்றன் மகளைத், தோமறு குறிஞ்சிப் புற்குடி லகத்துச்
சுறுக்கொடு கொண்டுசென் றிருந்தான்.

இ-ள். மாமுதல் தடிந்து வான் தரு வளர வாங்கிய வடி நெடு வேலோன் - மாமரமாகிய சூரபன்மனைக் கொன்று சுவர்க்க தருக்களை வளர்க்க எடுத்த கூரிய நெடிய வேலினையுடையவர்,—தாம மென் குழற்காய் மைத்துனற் பதைத்து-மாலையணிந்த மெல்லிய கூந்தலையுடையவர்க்காக (க்காமனென்னும்) மைத்துனனுல் வருந்தி,—தானும் ஓர் மரனுரு எடுத்து - தாமும் ஒரு மரவடிவத்தைக்கொண்டு,—காம் உற வளர்ந்து - காமம் மிக

வளர்ந்து,—கானவற்கு ஒளிப்ப-வேடுவனுக்கு மறைய,—கானவர்க்கரசன்-வேடராசன்,—தன் மகளைச் சுறுக்கொடு கொண்டு சென்று-தன்புத்திரியை விரைவோடு கொண்டுபோய்,—தோமறு குறிஞ்சிப் புற்குடிலகத்து இருந்தான் - குற்றமற்ற குறிஞ்சிநிலத்துப் புற்குடிலின்கண் இருந்தான். எ-று.

இருந்தபின் னொருநா ளேனலம் புனத்தி னீர்ங்கனித் துவ ரிதழ் மடந்தை, கருந்தட நெடுங்கட் சேடிய ரோடுங் கானிடைச் சென்றுநாங் கண்ட, பெருந்தண்மா மரம்போன் முதுவரை யகத்துட் கண்டிலெ மென்றுபே துற்று, வருந்தினர் போலத் திரிந்து தண் புனத்து வைகினள் வைகுமேல் வையினில்.

இ-ள். இருந்தபின் ஒருநாள் - இருந்தபின்னர் ஒருநாளில்,—ஈர்ங்கனித் துவர் இதழ் மடந்தை-குளிர்ந்த கனியும் பவளமும்போலும் இதழ்களையுடைய அம்மையார்,—கருந் தட நெடுங் கட் சேடியரோடும் - கரிய பெரிய நெடிய கண்களையுடைய பாங்கிமாரோடும்,—ஏனலம் புனத்தின் கானிடைச் சென்று - தினைப்புனத்தைச்சார்ந்த காட்டில் உலாவி,—நாங் கண்ட பெருந் தண் மா மரம் போல் முதுவரையகத்துட் கண்டிலமென்று-நாம் (அன்று) கண்ட குளிர்ந்த மிகப்பெரியமரம்போல (ஒரு மரத்தை) பழையமலையின்கண் (யாண்டும்) பார்த்திலமேயென்று சொல்லி,—பேதுற்று வருந்தினர் போலத் திரிந்து - மயங்கி வருந்தினவர்போலத் திரிந்து,—தண் புனத்து வைகினள் - தண்புனத்தி லமர்ந்தாள்,—வைகும் எல்லையினில் - அமரும் பொழுதில். எ-று. (கஉ)

மரனுருக் கரந்த குருபரன் புனத்து மான்மக டனக்குள மயங்கிச், சரமெடுத் தெறியு மதனனுக் குடைந்து சஞ்சலித் தெண்ணம்வே றாகிப், பொருவருங் கரடக் குஞ்சர முகத்துப் புங்கவற் றொழுதுநின் றிரந்து, பருவரற் கிடனு மேழையேற் குனது பார்வையி னருடர வேண்டும்.

இ-ள். மரனுருக் கரந்த குருபரன் புனத்து மான்மகடனக்கு உள மயங்கி - (முன்பு) மரவடிவத்தை மறைத்த சுவாமி புனத்திலுள்ள அம்மையாரின் மனமயங்கி,—சரமெடுத்தெறியும் மதனனுக்கு உடைந்து சஞ்சலித்து எண்ணம் வேறாகி - அம்பெடுத்துவிடுங் காமனுக்குத் தோற்று வருந்தி நினைவு வேறுபட்டு,—பொருவருங் கரடக் குஞ்சர முகத்துப் புங்கவன் தொழுது நின்று இரந்து - ஒப்பில்லாத மதம்பாய்சுவட்டையுடைய யானைமுகக்கடவுளை வணங்கிநின்றுவேண்டி,—பருவரற்கு இடனும் ஏழையேற்கு உனது பார்வையின் அருள் தர வேண்டும் - துன்பத்துக்கிடமாகிய ஏழையேனுக்கு உமது நோக்கத்தினல் அருளைத் தருதல்வேண்டும். எ-று. (கங)

என்றலுங் கடவுட் குஞ்சர வதனத் தெம்பிரான் றுணைவனை நோக்கி, யுன்றனை துள்ளத் தெண்ணம்யா தென்றே யுரைத்தலுங் குமரவே ளிசைப்பான், குன்றவர் தலைவன் புதல்விமே லன்பு கொண்டதாற் றெண்டிரைக் கடலுந், தென்றலுங் கன்றுங் காமவேள் கணையுந் தெண்ணிலா வும்பகைத் தனவால்.

இ-ள். என்றலுங் குஞ்சரவதனத்துக் கடவுள் எம்பிரான் துணைவனை நோக்கி - என்றுசொல்ல யானைமுகக்கடவுளாகிய எம்பெருமான் இளையவ

னைப் பார்த்து,—உன்றனது உள்ளத்தெண்ணம் யாது என்று உரைத்த லும்-உன் மனத்துக்கருத்து ஏது என்று கூற,—குமரவேள் இசைப்பான்:-சுவாமி கூறுவார்,—குன்றவர் தலைவன் புதல்விமேல் அன்புகொண்டது - வேடராசன்மகளிற் பற்றுற்றது,—தெண்டிரைக்கடலுந் தென்றலங்கன் றுங் காமவேள் கணையுந் தெண்ணிலாவும் பகைத்தன-சமுத்திரமும் இளந் தென்றியுங் காமபாணமுந் தெண்மதியும் முரணின. எ-று. (கச)

யாவர்தம் மிடத்து முறுகுறை யனைத்து மெம்பிரா னகற் றுவை யிளைய, சேவக னிளமான் கன்றிறுக் குடைத றீர்ப்பதற் கெண்ணினை யாகி, மாவடுப்புரையுங் கண்ணியுள் வெருவ மத்த மால் யானையின் வடிவாய், மூவகைக் கடங்கான் றன்னவன் முன் னர் முழக்கொடு வருதல்வேண் டினனால்.

இ-ள். யாவர்தம்மிடத்தும் உறு குறையனைத்தும் அகற்றுவை எம் பிரான் - யாரிடத்தும் எய்துங் குறைமுழுதையுந் தீர்க்கும் எம்பெருமானே நீர்,—இளைய சேவகன் இளமான் கன்றினுக்கு உடைதல் தீர்ப்பதற்கு எண் ணினையாகி-இளைய அடியேன் யுவதியினால் வருந்துதலைத் தீர்த்தற்கு நினை த்து,—மாவடுப்புரையுங் கண்ணி உள் வெருவ-மாவடுவெதிர்போலுங் கண்களை யுடையாள் மனமஞ்ச,—மால்மத்தயானையின்வடிவாய் மூவகைக்கடங் கான்று அன்னவள்முன்னர் முழக்கொடு வருதல் வேண்டினன்-பெரிய மதகரிவடிவாய் மும்மதம் பொழிந்து அவளுக்குமுன்னே முழக்கத்தோடு வருதலை விரும்பினேன். எ-று. (கரு)

அன்னமென் னடைமுன் வந்தனை யாயி னவ்விடை யளியனு மடைந்து, நின்னுவை னுனது தோற்றத்தில் வெருவித் தோகையு மவ்வயிற் பொருந்தும், வன்னமென் முலையு மார்பகத் தழுந்தும் வாயமிர் தத்துளி யருந்திக், கன்னிபொன் னுடலம் புணர்ந்துவிற் கழைப்போர்க் காமனு டகமுமா டுவனால்.

இ-ள். அன்னமென்னடைமுன் வந்தனையாயின் அளியனும் அவ் விடை அடைந்து நின்னுவன் - அன்னநடையாண்முன் வருவீராயின் தமியேனும் ஆண்டு வந்து சேருவேன்,—உனது தோற்றத்தில் வெருவித் தோகையும் அவ்வயிற் பொருந்தும் - உம்முருவத்தினஞ்சிப் பெண்ணும் ஆண்டுச் சேருவாள்,—வன்ன மென் முலையும் மார்பகத்து அழுந்தும் - அழ கிய மெல்லிய தனங்களும் மார்பில் அழுந்தும்,—கன்னி வாயமிர்தத்துளி அருந்திப் பொன்னுடலம் புணர்ந்து கழை விற்போர்க் காமனுடகமும் ஆடுவன் - கன்னிகையது இதழமுதத்துளியை உட்கொண்டு மெய்யுறப் புணர்ந்து கருப்புவிற்போரையுடைய மன்மதனது கூத்தையும் ஆடுவேன். எ-று. (கசா)

காமநூற் பயிற்சி நடந்தபின் வேதக் காரிகை யைத்தழல் சான்றுத், தாமரைத் தலைமீ திருந்தநான் முகனுந் தண்டுழாய்ப் படலைசூழ் மோலி, மாமனு மகிலத் தேவருங் காண வதுவையான் முடிக்குவ னென்று, பூமல ருச்சித் தைங்கரற் றொழுது போந் தருள் புரிகென விரந்தான்.

இ-ள். காமநூற்பயிற்சி நடந்தபின் - மதனநூலின்பயிற்சி நிகழ்ந்த பின்,—காரிகையை வேதத்தழல் சான்று - அப்பெண்ணை வைதிகாக்கினி

சாக்ஷியாக,—தாமரைத் தலைமீதிருந்த நான்முகனுந் தண் துழாய்ப் படலை சூழ் மோலிமாமனும் அகிலத்தேவருங் காண - கமலாசனத்துச் சதுர்முகனுந் தண்ணிய துளசிமாலையையணிந்த முடியையுடைய மகாவிட்டுணுவுஞ் சமஸ்ததேவர்களுங் காண,—யான் வதுவை முடிக்குவன் என்று - யான் மணஞ்செய்வேன் என்று,—பூ மலர் அருச்சித்து ஐங்கரன் தொழுது போந்து அருள்புரிக என இரந்தான் - பொலிவாகிய மலர்களாற் பூசித்து விநாயகக்கடவுளை வணங்கிச் சென்று அருள் செய்க என வேண்டிக்கொண்டார். எ-று. (௧௭)

கற்றையஞ் சுடர்வேற் றுணைவனுக் கடங்காக் காதல்கண் டைங்கரக் கடவுள், எற்றமின் றுளத்தி லார்வமீ தூர வடுக்கலிற் குறச்சிறு மடந்தை, சுற்றுறு மடவா ருடன்விளை யாடுஞ் சூழலிற் கருவரை கடுப்பக், கொற்றவெங் கரடக் கிம்புரிக் கோட்டுக் குஞ்சர வடிவொடுஞ் சென்றான்.

இ-ள். கற்றையஞ்சுடர்வேற்றுணைவனுக்கு அடங்காக் காதல் ஐங்கரக் கடவுள் கண்டு-கதிர்வேலிளையர்க்கு மேற்கொண்ட காதலை விநாயகபிரான் கண்டு,—அடுக்கலிற் குறச்சிறுமடந்தை உளத்தில் ஆர்வம் அற்றமின்று மீதூரச் சுற்றுறு மடவாருடன் விளையாடுஞ் சூழலில் - மலையில் வள்ளியம்மையார் மனத்தில் (முன்னைய மரவிழனுகர்ச்சி) விருப்பஞ் சோர்வின்றி மேற்படத் தொடர்ந்தபெண்களோடு விளையாடுஞ் சூழலின்கண்ணே,—கருவரை கடுப்பக் கொற்றவெங் கரடக் கிம்புரிக் கோட்டுக் குஞ்சர வடிவொடுஞ் சென்றான்-நீலகிரிபோல் வெற்றியினையுடைய கொடிய மதம்பாய்சுவட்டையும் பூணணிந்த கொம்பையுமுடைய யானையின்வடிவத்தோடு போயினார். எ-று. (௧௮)

குஞ்சர முழங்கி வருதலுங் குறமான் கொம்புவெம் புள்ளத்தளாகித், தஞ்சமின் றெனக்கா ரென்றுநின் றேங்கிச் சஞ்சலித் திருகணீர் சோரப், பஞ்சடிக் கமலஞ் சேப்பமென் மருங்குல் பயோதரச் சும்மையாற் றுறு, வஞ்சியிற் றுவண்டு துவண்டுதள் ளாட மறுக்கமுற் றுழலுமப் போழ்தின்.

இ-ள். குஞ்சரம் முழங்கி வருதலும் - யானை முழங்கி வர,—குறமான் கொம்பு வெம்பு உள்ளத்தளாகி - வள்ளியம்மையார் கலங்கிய மனத்தினராகி,—இன்று எனக்குத் தஞ்சம் ஆர் என்றுநின்று ஏங்கி - இன்றைக்கு எனக்குப் புகலிடமாவார் யார் என்றுநின்று ஏங்கி,—சஞ்சலித்து இருகண்ணீர் சோர - துன்புற்று இரண்டுவிழிகளிலும் நீர்சொரிய,—பஞ்சடிக்கமலஞ் சேப்ப - பஞ்சுபோலும் பாததாமரைகள் சிவக்க,—மென்மருங்குல் பயோதரச்சும்மை ஆற்றுது வஞ்சியின் துவண்டு துவண்டு தள்ளாட - மெல்லிய இடை முலைச்சுமையைப் பொறுது வஞ்சிபோல அசைந்தசைந்து தளர,—மறுக்கமுற்று உழலும் அப்போழ்தின் - வருந்தி அலைந்த அச்சமயத்தில். எ-று. (௧௯)

வேறு.

அந்த வேளை யருவஞ் செய் தான்றருங்
கந்த வேளைக்கண் டாள்கண்ட கன்னியு
மிந்த வேளை யெனக்கரு ளென்றுமுன்
வந்த வெண்மணி மார்புறக் கட்டினாள்.

இ-ள். அந்த வேளை அருவஞ்செய்தான் தரும் கந்தவேளைக் கண்டாள் - அழகிய காமனை அருபியாக்கியவர்பெற்ற கந்தசுவாமியை (எதிரே) கண்டார்,—கண்ட கன்னியும் முன்வந்து - (அங்ஙனம்) கண்ட அம்மையாரும் (அவர்க்கு) எதிரே வந்து,—இந்தவேளை எனக்கு அருள் என்று அவ்வேள் மணி மார்பு உறக் கட்டினாள் - இந்நேரத்தில் எனக்கு அருளுக என்று அச்சுவாமியின் திருமார்பிலே (தனங்கள்) பொருந்தத் தழுவினார். எ-று. (உ௦)

சுருண்ட பூங்குழற் றோகையைப் புல்லிநீ
வெருண்ட வேழம் விலக்கினன் யானுமோ
திரண்டு வீங்கிச் சிறந்திறு மாந்தெழு
மிரண்டு வேழத் திளமுலைக் கஞ்சினேன்.

இ-ள். சுருண்ட பூங்குழற்றோகையைப் புல்லி-சுருளான மலர்க்குழலையுடைய அம்மையாரைத் தழுவி,—நீ வெருண்ட வேழம் விலக்கினன் யானும் - நீ வெருளுதற்குக் காரணமாய்நின்ற யானையைத் தடுத்த நானும்,—ஓ திரண்டு வீங்கிச் சிறந்து இறுமாந்து எழும் இரண்டு இள முலை வேழத்துக்கு அஞ்சினேன் - ஓ திரண்டு பருத்துச் சிறந்து செம்மாந்து எழுந்த இரண்டு இளைய தனங்களாகிய யானைக்கொம்புகளுக்குப் பயந்தேன். எ-று.

வாகைப் போதின் வயங்கு பொன் மேனியு
மோகத் தேன்றரு முத்தச்செவ் வாம்பலு
மேகக் கூந்தல் விரைச்சிறு காற்றுமென்
னாகத் தேபுணர்ந் தேனென் றயிலினான்.

இ-ள். வாகைப் போதின் வயங்கு பொன்மேனியும் - வாகைமலர் போல விளங்குந் திருமேனியையும்,—மோகத் தேன் தரு முத்தச் செவ் வாம்பலும் - மயக்கமாகிய தேனைத் தருகின்ற முத்துப்போலும் பற்களோடு கூடிய செவ்வாம்பற்பூப்போலும் இதழ்களையும்,—மேகக் கூந்தல் விரைச் சிறு காற்றும்-முகில்போலுங்குழலினது சுகந்தம்படிந்த சிறுகாற்றையும்,—என் ஆகத்தே புணர்ந்தேன் என்று - என் உடம்பிற் கலந்தேன் என்று,—அயிலினான் - வேலாயுதக்கடவுள். எ-று. (உஉ)

ஆறி ரண்டுகை யாரத் தழுவியே
யாறி ரண்டு நயனங்க ளாலுமே
மாறி ரண்ட மலர்க்குழ லாடனை
மாறி ரண்ட மனத்தொடு நோக்கினான்.

இ-ள். ஆறிரண்டு கை ஆரத் தழுவி-பன்னிரண்டு கைகளும் பொருந்தத் தழுவி,—ஆறிரண்டு நயனங்களாலும் - பன்னிரண்டு திருக்கண்களாலும்,—மால் திரண்ட மலர்க்குழலாடனை - முகில்போலுந் திரண்ட மலரை முடித்த கூந்தலையுடையாரை,—மால் திரண்ட மனத்தொடு நோக்கினான் - மயக்கங் கூடிய மனத்தோடு பார்த்தார். எ-று. (உ௩)

அன்னம் போல்வரு மாய்மயி லாட்கெதிர்
சென்னி யாறுடைச் சேவகன் செப்புவான்
கன்னி யானுனைக் காதலித் தேனுயிர்ப்
பன்னி யாய்ப்புணர்ந் தாயிது பண்பரோ.

இ-ள். அன்னம்போல்வரும் ஆய்மயிலாட்கு எதிர் சென்னியாறுடைச் சேவகன் செப்புவான் - அன்னநடையுடைய அம்மையாரைத் தலைப்பெய்த ஆறுமுகசுவாமி சொல்லுவார்,—கன்னி யான் உனைக் காதலித்தேன் உயிர்ப் பன்னியாய்ப் புணர்ந்தாய் இது பண்பு - கன்னிகையே யான் உன்னை விரும்பினேன் நீ பிராணநாயகியாய்ச் சேர்ந்தாய் இது குணமாம். எ-று.

என்று கூறு மிளையனு மானருள்
கன்று மேவிக் கலப்பது காண்டலு
மொன்று மன்புட னுள்ளக் களிப்பினு
னின்ற தேவர் நிகழ்த்துதன் மேயினார்.

இ-ள். என்று கூறும் இளையனும் மான் அருள் கன்றும் மேவிக் கலப்பது காண்டலும் - என்று சொல்லிய குமாரரும் அம்மையாரும் (மனம்) பொருந்திப் புணர்வதைக் கண்டு,—நின்ற தேவர் - (அங்ஙனம் முனிவர் சித்தரோடு)நின்ற தேவர்கள்,—ஒன்றும் அன்புடன் உள்ளக்களிப்பினால் நிகழ்த்துதன்மேயினார் - பொருந்திய அன்போடு மனமகிழ்ச்சியினாற் சொல்லுவார். எ-று. (உரு)

மூக்கி னோடு விழிமுகிழ்த் தன்பின்வே
ளோக்கு நோன்மையர்க் குந்நுவ லாநிற்கும்
வாக்கி னூடு மனத்தும் பெருக்கொடு
தேக்கு மானந்த ஞானச்செந் தேறலாம்.

இ-ள். மூக்கின் ஓட விழி முகிழ்த்து - மூக்குநுனியிற்செல்லக் கண்களைச் சிறிதுமூடி,—அன்பின் வேள் நோக்கும் நோன்மையர்க்கும் - அன்போடு சுவாமியைத் தியானிக்குந் தவத்திகளுக்கும்,—நுவலாநிற்கும் வாக்கினூடும் மனத்தும் - பேசும் வாக்கின்கண்ணும் மனத்தின்கண்ணும்,—பெருக்கொடு தேக்கும் ஆனந்த ஞானச் செந்தேறல் ஆம் - பெருகுதலோடு நிறைந்த இன்பமும் அறிவுமாகிய செந்தேன் உள்ளதாம். எ-று.

சிறப்பும்மையாற் சுவாமியினுடைய வாக்கினும் மனத்தினும் அது அளவின்றியுளதாதல் பெறப்படும். (உசு)

முருக னென்று மொழிந்து மொழிந்துளத்
துருகு மன்பினார்க் கும்முரு காநிற்போ
ரருகு சென்றிடு மன்பர்க்குங் காமமாம்
பெருகு மாறுஞ் செலாதுளம் பேதுறும்.

இ-ள். முருகன் என்று மொழிந்து மொழிந்து உளத்து உருகும் அன்பினார்க்கும் - முருகக்கடவுள் என்று பன்முறைகூறி உள்ளத்தில் உருகுகின்ற அன்பினையுடையாரிடத்திலும்,—உருகாநிற்போர் அருகு சென்றிடும் அன்பர்க்கும் - (அங்ஙனம்) உருகுகின்றவர்களின் பக்கத்திற் சேர்ந்த அன்பர்களிடத்தும்,—பெருகுங் காமமாம் ஆறுஞ் செலாது உளம் பேதுறும் - பெருகுகின்ற காமமாகிய நதியும் போகமாட்டாது மனம் வருந்தும். எ-று. (உஎ)

தாயி னாகிச் சராசர நல்குவாண்
மேய காஞ்சனை மின்னிடைத் தோன்றுகை
யாய பூதங்க ளாதிகட் கேதுவாம்
பாயு மூலப் பகுதியின் றோற்றமே.

இ-ள். தாயினாகிச் சராசர நல்குவாள் மேய காஞ்சனை மின்னிடைத் தோன்றுகை - மாதாவாகிச் சங்கமஸ்தாவரங்களைப் படைக்குமம்மையார் பொருந்திய காஞ்சனையென்னும் பெண்ணினிடத்துத் தோன்றியது,—ஆய் பூதங்களாதிகட்கு ஏதுவாம் பாயும் மூலப்பகுதியின் தோற்றம் - தோன்றிய பஞ்சபூதங்கண் முதலியவற்றுக்குக் காரணமாகிய பரந்த மூலப்பிரகிருதியினது (மாயையினிடத்ததாகிய) தோற்றத்தைப் போலும். எ-று. (உஅ)

உலக வாழ்க்கையை யோம்புதற் கெண்ணியே
யலகி லாவிளை யாட்டயர்ந் தையனுந்
திலக வாணுதன் மானிளஞ் செல்வியுங்
கலவி வேட்டதென் றுள்ளங் கருதினார்.

இ-ள். ஐயனும் அலகிலா விளையாட்டு அயர்ந்து - விச்சுவசேவிய(ராகிய சுவாமியா)ரும் எண்ணில்லாத விளையாட்டுக்களைச் செய்து,—திலக வாள் நுதல் மானிளஞ் செல்வியுங் கலவி வேட்டது - பொட்டிட்ட திருநெற்றியையுடைய இளைய மான்மகளையும் புணர்தலை விரும்பியது,—உலக வாழ்க்கையை ஓம்புதற்கு எண்ணியே - உலகத்தில் இல்லறத்தைப் பேணுதற்கு நினைந்தேயாம்,—என்று உள்ளங் கருதினார் - என்று (அவர்களெல்லாம்) மனத்தில் நினைத்தனர். எ-று. (உகூ)

மடந்தை வேலவன் மார்புறச் சேர்ந்துட
னடந்த செய்கையைச் சேடியர் நாடியே
கடந்து வானக் கதிர்கடவா மலை
யடைந்து வேடர்க் கரசன்முன் கூறுவார்.

இ-ள். மடந்தை வேலவன் மார்பு உடல் உறச் சேர்ந்து நடந்த செய்கையை - அம்மையார் வேற்கடவுளின் மார்பை மெய்யுறக் கலந்து ஒழுகிய செய்தியை,—சேடியர் நாடி வானக்கதிர் கடவாமலை கடந்து - பாங்கியர் பார்த்து விண்ணிற் சுடருங் கடவாத மலையைக் கடந்து,—வேடர்க்கரசன் முன் அடைந்து கூறுவார் - வேடராசன்முன்னே சேர்ந்து சொல்லுவார். எ-று. (கூ0)

ஓங்கல் வாய்மதத் தோங்கல்வந் துற்றதுந்
தேங்க ருட்பன் னிருவிழித் தெய்வதம்
பூங்கு ழற்றிருப் புல்லிய பான்மையும்
பாங்கு றப்பணிந் தேத்திப் பகரவே.

இ-ள். ஓங்கல்வாய் மதத்து ஓங்கல் வந்துற்றதும் - மலையின்கண் மதயானை யொன்று வந்தமையையும்,—தேங்கு அருட் பன்னிரு விழித் தெய்வதம் பூங்குழற்றிருப் புல்லிய பான்மையும் - நிறைந்த அருளையுடைய பன்னிருகட்கடவுள் அம்மையாரைத் தழுவியபடியினையும்,—பாங்குறப் பணிந்து ஏத்திப் பகர - உரிமைபொருந்த வணங்கித் துதித்துச் சொல்ல. எ-று. (கூக)

ஆலமென்ன வழன்றழி வுற்றிடுங்
கால மொய்த்த கடலெனுங் கேளொடு
சூல வேற்படை யான்மகன் றோய்ந்தவான்
கோல மும்மகள் கோலமும் பார்த்தனன்.

இ-ள். ஆலமென்ன அழன்று அழிவுற்றிடுங் காலம் பொய்த்த கடலெனுங் கேளொடு - (கேட்ட அரசன்) நஞ்சுபோலச் சீறிப் பிரளய காலத்துக் கெழுதிய கடல்போலுஞ் சுற்றத்தோடு (சென்று),—சூலவேற்படையான் மகன் வான் தோய்ந்த கோலமும் மகள் கோலமும் பார்த்தனன் - சிவகுமாரருடைய பெருமைதங்கிய திருக்கோலத்தையும் மகளது கோலத்தையும் பார்த்தான் எ-று. (௬௨)

தாதை கேளுடன் சார்ந்தமை கண்டுபூங்
கோதை கண்டுளங் கூசிக் கடப்பந்தா
ராதி யைத்தணந் தந்தமி றாதைபாற்
காத லோடுசென் றாள்கவிழ்ந் தாணின்றாள்.

இ-ள். தாதை கேளுடன் சார்ந்த அத்தன்மை பூங்கோதை கண்டு உளங் கூசி - தந்தை சுற்றத்தோடு வந்த அவ்வியல்பை அம்மையார் கண்டு மனஞ் சுருங்கி,—கடப்பந் தார் ஆதியைத் தணந்து - கடப்பமாலையணிந்த கடவுளை விட்டு,—அந்தமில் தாதைபாற் காதலோடு சென்றாள் கவிழ்ந்தாள் நின்றாள் - அழிவில்லாத தந்தைபக்கத்தில் அன்போடு சென்று (தலை) கவிழ்ந்து நின்றார். எ-று. (௬௩)

நின்ற மாமக ணெஞ்சங் குறிப்பினால்
வென்றி வேட்டுவர் வேந்த னுணர்ந்துதான்
கன்று மாறொழிந் துள்ளக் கவலொரீஇ
யொன்று மன்பி னுளத்துடன் சொல்லுவான்.

இ-ள். வென்றி வேட்டுவர் வேந்தன் - வெற்றியினையுடைய வேடராசன்,—நின்ற மாமகள் நெஞ்சங் குறிப்பினால் உணர்ந்து - நின்ற திருமகளின் எண்ணத்தைக் குறிப்பாலறிந்து,—தான் கன்றுமாறு ஒழிந்து உள்ளக்கவல் ஒரீஇ - தான் கோபிக்குமாற்றை ஒழிந்து மனக்கவலை நீங்கி,—ஒன்றும் அன்பு இன் உளத்துடன் சொல்லுவான் - (அம்மையாருக்குத் தலைவர்மேற்)பொருந்திய அன்பை இனிய (தன்)மனத்தோடு கூறுவானாய். எ-று. (௬௪)

நமது தொல்குல நாயக னுமயிற்
குமர வேளென வுள்ளக் குறிப்பினோ
டமைய நோக்குமுன் னாறணிந் தான்புண
ருமைகு மார னுருவங்கண் டானரோ.

இ-ள். நமது தொல் குல நாயகனும் அயிற் குமரவேள் என - எங்கள் பழைய குலபதியாகிய வேற்படையையுடைய குமாரசுவாமியே(போலுமிவர்) என்று,—உள்ளக்குறிப்பினோடு - கொண்ட மனக்குறிப்பினோடு,—அமைய நோக்குமுன் - (மனம்)அமைய ஆராயுமுன்னரே,—ஆறணிந்தான் புணர் உமை குமாரன் உருவங் கண்டான் - கங்கையணிந்தவரோடு புணர்ந்த உமையின் குமாரர் (தமது திவ்விய) ரூபத்தை (அவனினிது தரிசிக்குமாறு) அமைத்தருளினார். எ-று. (௬௫)

வேறு.

கார்வரை யிடத்துக் கதிர்வரை யுதயங் காட்டுதல் போற்களி
மயின்மேற், றார்வரை யனைய பன்னிரு புயமுஞ் சந்தன வரைத்

தட மார்புஞ், சூர்வரை யறுத்த சுடர்வடி வேலுந் துகிர்வரை மேனியு மாய்ச்சி, றார்வரை யரசன் விழிக்கெதிர் நின்று னுயர் வரைச் சரவணத் துதித்தோன்.

இ-ள். உயர்வரைச் சரவணத்துதித்தோன் - உயர்ந்த(இமய)மலையிற் சரவணவாவியிலே தோன்றிய கடவுள்,—கார்வரையிடத்துக் கதிர்வரை உதயங்காட்டுதல்போல் - கருமலைமேற் சூரியன் உதித்தல்போல,—களி மயின்மேல் தார் வரையனைய பன்னிருபுயமுஞ் சந்தன வரைத் தடமார் புஞ் சூர் வரை அறுத்த சுடர்வடி வேலுந் துகிர்வரை மேனியுமாய் - களிப் பினையுடைய மயிலின்மேலே மாலையணிந்த மலைபோலும் பன்னிரண்டு புயங்களுஞ் சந்தனம்பூசிய மலைபோலும் பெரிய மார்புஞ் சூரனையுங் (கிரௌஞ்ச)மலையையும் அழித்த கதிர்வடிவேலும் பவளமலைபோலுந் திரு மேனியும் உடையவராய்,—வரைச் சிறார் அரசன் விழிக்கெதிர் நின்றான்- மலையிற் சிற்றூரின் அரசனது கண்களுக்கெதிரே நின்றான். எ-று (௫௫)

சந்தநான் மறையு முறையிடு மிருதாட் சரவணத் தோற் பவன் றிரு வடிவம், விந்தைமால் வரையிற் கானவர்க் கரசன் விழியினாற் பருகுவான் போலச், சிந்தையாற் களித்து நோக்கினன் யான் முன் செய்தவப் பேறென நினைந்து, கந்தவார் குழலா டன்னைமார் பணைத்துக் கட்டின னுச்சிமோந் தனனால்.

இ-ள். மால் விந்தைவரையிற் கானவர்க்கரசன் - பெரிய விந்தைமலை யில் வேடராசன்,—சந்த நான்மறையும் உறையிடும் இருதாட் சரவணத்தோற்ப வன் திருவடிவம் - அழகிய சதுர்வேதங்களினும் வசிக்கும் உபயபாதங்களை யுடைய சரவணபவரது திருவுருவத்தை,—விழியினாற் பருகுவான் போலச் சிந்தை களித்து நோக்கினன் - கண்களாற் குடிப்பான்போல மனமகிழ்ந்து பார்த்து,—யான் முன் செய்தவப்பேறு என நினைந்து - நான் முன்னாளிற் செய்த தவத்தின் பயன்(இதுவே)என்றெண்ணி,—கந்த வார்குழலாடன்னை மார்பணைத்துக் கட்டினன் உச்சிமோந்தனன் - மணமார்ந்த கூந்தலையுடைய அவ்வம்மையாரை மார்பிறசேர்த்துப் பிணித்து உச்சியை மோந்தான். எ-று.

மட்டறு முவகை பூத்தவே டுவர்கோன் மயூரவா கனத்துயர் செவ்வேள், கட்டழ கனைத்து நோக்கின னிதயங் களித்தனன் றுதித்துநாக் குளறித், தொட்டமெய்ம் மயிர்க்கூச் செறிதர விழி யிற் றூயவா னந்தநீர் சொரியச், சிட்டருள் ளடங்கி நான்மறைக் கடங்காச் சேயினை வழுத்துவ தானான்.

இ-ள். மட்டறும் உவகை பூத்த வேடுவர்கோன் - அளவற்ற மகிழ்ச்சி பொலிந்த வேடராசன்,—மயூரவாகனத்து உயர் செவ்வேள் கட்டழகனைத் தும் நோக்கினன் - மயிலூர்தியின் உயர்ந்த சுவாமியினது பேரழகுமுழு தையும் பார்த்து,—இதயங்களித்தனன் துதித்து நாக்குளறி - மனமகிழ்ந்து புகழ்ந்து உரைதடுமாறி,—மெய் தொட்ட மயிர்க்கூச்சு எறிதர - உடம்பிற் பொருந்திய மயிர்ச்சிலிர்ப்பு (ஒளியை) வீச,—விழியின் தூய ஆனந்த நீர் சொரிய-கண்களினின்று சுத்தமான ஆனந்தவருவிபொழிய,—சிட்டர் உள் அடங்கி நான்மறைக்கு அடங்காச் சேயினை வழுத்துவதானான்-ஆன்றோரது மனத்தின் அமைந்து சதுர்வேதங்களின் அமையாத சுவாமியைத் துதிப்பா னாயினான். எ-று. (௫௮)

வேறு.

உலகத்தின் முதலாய் நின்ற வொருதனிப் பொருளே போற்றி
கலைகட்கு முணர வொண்ணாக் கருணைவா ரிதியே போற்றி
மலைவிற்கைப் பெருமான் கண்ணின் வந்தமா மணியே போற்றி
புலமைக்குத் தலைமையான புண்ணியா போற்றி போற்றி.

இ-ள். உலகத்தின் முதலாய் நின்ற ஒரு தனிப் பொருளே போற்றி - சகத்காரணமாய்நின்ற ஏக கேவலவஸ்துவே காக்க;—கலைகட்கும் உணர வொண்ணாக் கருணைவாரிதியே போற்றி,—நூல்களாலும் அறியலாகாத கிருபாசமுத்திரமே காக்க;—மலைவிற்கைப் பெருமான் கண்ணின் வந்த மாமணியே போற்றி - (மேரு)கிரியாகிய வில்லைக் கையிற்கொண்ட கடவுளினது விழியிற் பிறந்த பெரிய இரத்தினமே காக்க;—புலமைக்குத் தலைமையான புண்ணியா போற்றி போற்றி - அறிவின் முதன்மையான சுத்தரே காக்க காக்க. எ-று. (௩௯)

பேரழ குடைய தெய்வப் பிடிபுணர் களிறே போற்றி
கோரவெஞ் சிலைக்கை வேடர் குலமுய்ய வந்தாய் போற்றி
யாரமு தனைய வம்மா னருளுமான் கணவா போற்றி
சூருடற் குருதி மாறாச் சோதிவேற் கடம்பா போற்றி.

இ-ள். பேரழகுடைய தெய்வப்பிடி புணர் களிறே போற்றி - பெருந் திருவினையுடைய தெய்வயானையைப் புணருங் குஞ்சரமே காக்க;—கோர வெஞ் சிலைக்கை வேடர்குலம் உய்ய வந்தாய் போற்றி - பயங்கரமான கொடிய வில்லைக் கையிற்கொண்ட வேடர்வமிசம் உய்ய வந்தீர் காக்க;—ஆர் அமுதனைய அம்மான் அருளும் மான் கணவா போற்றி - நிறைந்த அமுது போலும் அழகிய மான் பெற்ற பெண்ணின் நாயகரே காக்க;—சூர் உடற் குருதி மாறாச் சோதிவேற் கடம்பா போற்றி - சூரனது சரீரத்தின் இரத்தம் நீங்காத கதிர்வேலையுடைய கடம்பரே காக்க. எ-று. (௪௦)

என்றடி வணங்கி வேடர்க் கிறையவன் பகர்வா னெங்கள்
குன்றகந் தன்னிற் போந்து குழுக்கொடு சுரர்கள் வாழ்த்த
வென்றிவேற் கண்ணி னாளை வேதத்தின் முறையே நீயு
மன்றலந் தொடையல் சூட்ட வருதியா லைய வென்று.

இ-ள். என்று அடிவணங்கி வேடர்க்கிறையவன் - என்று துதித்து (அக்கடவுளினுடைய)பாதங்களை நமஸ்கரித்து வேடராசனானவன்,—ஐய - சுவாமீ!,—சுரர்கள் குழுக்கொடு எங்கள் குன்றகந்தன்னிற் போந்து வாழ்த்த - தேவர்கள்கூட்டத்தோடு எங்கள் மலையில் வந்து (தரிசித்துத்) துதிக்க,—நீயும் வென்றிவேற் கண்ணினாளை வேதத்தின்முறையே மன்றலந்தொடையல்சூட்ட வருதி - நீரும் வெற்றிவேல்போலுங் கண்களுடையாளுக்கு வேதவிதிப்படி மணமாலைசூட்ட வருக;—என்று பகர்வான் - என்று சொல்வானாய் (அழைத்துச்சென்று). எ-று. (௪௧)

தந்திவெண் கோட்டுக் காலிற் சந்தனச் சட்டஞ் சேர்த்திச்
சுந்தரப் புயல்சூழ் வெங்கைத் தூணர்ப்பசுங் கொம்பர் சாய்த்து
விந்தையிற் றோகைப்பீலி வேய்ந்துவெண் கவரி நாற்றிப்
பந்தரச் சுதனீன் றுள்ள பங்கயன் சபைபோற் செய்தான்.

இ-ள். விந்தையில் - விந்தமலையின்கண்ணே,—வெண் தந்திக் கோட்டுங் காலிற் சந்தனச் சட்டஞ் சேர்த்தி - வெள்ளிய யானைக்கொம்பா லாகிய கால்களிலே சந்தனச்சட்டங்களை மாட்டி,—சுந்தரப் புயல் சூழ் வேங்கைத் துணர்ப் பசுங்கொம்பர் சாய்த்து - அழகிய முகில்கள் படியும் வேங்கையினது இணர்பொருந்திய பச்சைக் கொம்பர்களை (அவற்றின்மேல்) வளைத்து,—தோகைப்பீலி வேய்ந்து - மயிற்பீலிகளான் மேய்ந்து,—வெண் கவரி நாற்றி - வெண்சாமரைகளைத் தூக்கி,—பந்தர் அச்சுதனீன்றுள்ள பங்கயன் சபைபோற் செய்தான் - (இவ்வாறே மணப்)பந்தரை விட்டுணு பெற்ற பிரமனது சபையைப்போலச் செய்வித்தான். எ-று. (௪௨)

தேவரு முனிவர் தாமுஞ் சித்தரு முத்த ராய
யாவரு மிறைஞ்சி யேத்த வெம்பிரான் பந்தர்ப் போந்தா
னாவினு மனத்து மெட்டா நாரண னயனத் துற்ற
காவியங் கண்ணி னாளைக் கடிமணக் கோல மாக்க.

இ-ள். தேவரும் முனிவர்தாமுஞ் சித்தரும் உத்தராய யாவரும் இறைஞ்சி ஏத்த - விண்ணவரும் பண்ணவருஞ் சித்தருந் தக்கவராகிய எவருந் தொழுது புகழ,—எம்பிரான் பந்தர்ப் போந்தான் - சுவாமி பந்தரிற் சேர்ந்தார்;—நாவினும் மனத்தும் எட்டா நாரணனயனத்துற்ற காவியங் கண்ணினாளை - வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாத அரிகண்வந்த அம்மையாருக்கு,—கடி மணக்கோலமாக்க - (அரசனனுமதிப்படி வேடுவிச்சிகள்) புதிய விவாககோலத்தை ஆக்கும்பொருட்டு. எ-று. (௪௩)

கேசமே யாதி யாகக் கேழ்கிளர் சரணங் காறுங்
காசுலாம் பணிக ளாகக் கவினுறத் திருத்திக் காதிற்
பூசலார் விழிக்குச் சந்தப் பூந்தழை யுடுத்தி வேடர்க்
கீசனும் வேடன் றன்முன் விடுத்தன ரிதயத் தன்பால்.

இ-ள். காதிற் பூசலார் விழிக்கு - செவிகளோடு பொருங் கண்களையுடை(ய அவ்வம்மை)யாருக்கு,—கேசம் ஆதியாகக் கேழ்கிளர் சரணங் காறும் - தலைமயிர் முதல் நிறம்விளங்குகின்ற கால்வரையாக,—காசு உலாம் பணிகளாக - பொன்னால் விளங்கும் அணிகளாமாறு,—கவினுறத் திருத்தி - காந்திபொருந்த அமைத்து,—சந்தப் பூந்தழை உடுத்தி - சந்தனத்தின் பொலிவான இலையை உடுத்தி,—இதயத்தன்பால் வேடர்க்கீசனும் வேடன் முன் விடுத்தனர் - மன அன்போடு வேடர்க்கு அரசனாகிய வேடன்முன்னே விட்டார்கள். எ-று. (௪௪)

வண்ணவிற் குனிக்கும் வேடர் மன்னவன் வனப்பு வாய்ந்த
பெண்ணினுக் கரசி செங்கை பிடித்துவேல் பிடிக்குஞ் செங்கை
யண்ணறன் முகம்பார்த் தெங்க ளருங்குல முறைமை யீதாற்
றண்ணளி சுரப்ப யானுந் தருகுவ னென்று தானே.

இ-ள். வண்ண விற் குனிக்கும் வேடர்மன்னவன் - (இலக்கு வாய்க்கும்பொழுது) அழகிய வில்லை வளைக்கும் வேடராசன்,—வனப்புவாய்ந்த பெண்ணினுக்கரசி செங்கை பிடித்து - திருச்சிறந்த பெண்ணரசியாரது திருக்கையைக் கைப்பற்றிக்கொண்டு,—வேல்பிடிக்குஞ் செங்கை அண்ணல் முகம் பார்த்து - வேல்கொண்ட திருக்கையையுடைய கடவுளின் திருமுகத்தை நோக்கி,—எங்கள் அருங்குல முறைமை ஈது - எங்கள்

அரிய வமிசக்கிரமம் இது;—யானுந் தண்ணளி சுரப்பத் தருகுவன் என்று-அடியேனும் (உமது) திருவருள் பெருகும்பொருட்டு (இவளைத்) தருவேன் என்று சொல்லி. எ-று. (சரு)

பொன்னொடு புனலுஞ் செங்கைப் போதினி லேந்தி மானின்
கன்னியைக் குமர மூர்த்தி கையினிற் கொடுத்த காலைத்
துன்னிய மலரின் மாரி தூர்த்தனர் தோமி லாத
வன்னவான் முரசம் யாவும் வான்முழக் கென்ன வார்த்த.

இ-ள். பொன்னொடு புனலுஞ் செங்கைப்போதினில் ஏந்தி - பொன்னினோடு நீரையுஞ் செம்மையாகிய மலர்போலுங்கையிற் கொண்டு,—மானின் கன்னியைக் குமரமூர்த்தி கையினிற் கொடுத்தகாலை - மானின் மகளைக் குமாரசுவாமியினுடைய கையிற் கொடுத்தபொழுது,—துன்னிய மலரின் மாரி தூர்த்தனர் - செறிந்த புட்பமாரியை(த் தேவர்) பொழிந்தனர்;—தோமிலாத வன்ன வான் முரசம் யாவும் வான்முழக்கென்ன ஆர்த்த-குற்றமற்ற அழகிய பெரிய முரசுகளெல்லாம் முகின்முழக்கம்போல ஒலித்தன. எ-று. (சசு)

அப்பொழு தகில மீன்ற வன்னையு மலரின் மாதுஞ்
செப்பருங் கலையின் மாதுஞ் சேடியர் தாமும் போந்து
துப்பிதழ்க் குறப்பெண் பூண்ட தோமுறு மணிக ணீக்கிச்
செப்புதற் கினிய வாகு மணியினாற் சிறப்பித் தாரால்.

இ-ள். அப்பொழுது - அதுசமயத்தில்,—அகிலமீன்ற அன்னையும் - உலகங்களைப்பெற்ற தா(யாகிய உமாதேவி)யாரும்,—மலரின்மாதுஞ் செப்பருங் கலையின்மாதுஞ் சேடியர்தாமும் போந்து - மலர்மகளுஞ் சொல்லுதற்கரிய கலைமகளுஞ் சேடியர்களும் வந்து,—துப்பிதழ்க் குறப்பெண் பூண்ட தோமுறும் அணிகள் நீக்கி-பவளம்போலும் இதழையுடைய வள்ளியம்மையார் அணிந்த குற்றமுற்ற நகைகளை அகற்றி,—செப்புதற்கினியவாகும் அணியினாற் சிறப்பித்தார் - சொல்லுதற்கினியவான (திவ்விய) நகைகளினால் அலங்கரித்தார். எ-று. (சஎ)

கங்குலின் வனப்பு வாய்ந்த கூந்தலைக் கவினக் கோதித்
தொங்கலி னிறுக வாரிச் சொருகினான் பட்டஞ் சேர்த்த
மங்கல முறைமை வான முகிலினை வளைந்து வானிற்
றங்குமிந் திரவில் லென்னச் சாற்றலாந் தகைமைத் தம்மா.

இ-ள். கங்குலின் வனப்பு வாய்ந்த கூந்தலைக் கவினக் கோதி - இருள்போல அழகமைந்த அளகத்தைச் சிறப்ப வகிர்ந்து,—வாரித் தொங்கலின் இறுகச் சொருகி - அள்ளி மாலையோடு இறுகச் சொருகி,—வான்பட்டஞ் சேர்த்த மங்கலமுறைமை - (அவ்வளகத்தினின்றுவந்து நெற்றியிற்றொங்குமாறு) பெருமையான பட்டத்தைச் சேர்த்த நன்மையாகிய முறைமையானது,—வான முகிலினை வளைந்து வானில் தங்கும் இந்திரவில் என்னச் சாற்றலாந் தகைமைத்து - மழைபொருந்திய (கரு)முகிலைச் சூழ்ந்து ஆகாயத்துப் பொருந்திய வானவில் என்று சொல்லப்படுந் தன்மையையுடைத்து. எ-று. (சஅ)

நானநெய் தடவுங் கூந்த லுப்பணி னழகு வாய்ப்ப
வானவிற் சுட்டியோடு வயங்குசங் கிலியுஞ் சேர்த்த

சோணைவிண் முகிலின் பாங்கர்ச் சுடரிமைத் தழியா மின்னுண்
டானதுண் டாகி லம்மா வதற்கிணை யாக்க லாமால்.

இ-ள். நானம் நெய் தடவுங் கூந்தல் நாப்பணின் - கத்தூரியும் நெய்யுந் தடவிய அளகத்தின் நடுவே,—வானவிற் சுட்டியோடு வயங்கு சங்கிலியும் அழகுவாய்ப்பச் சேர்த்த - இந்திரவிற்போலுஞ் சுட்டியும் விளங்குகின்ற சங்கிலியும் அணியமையச் சேர்க்கப்பட்டன;—சோணைவிண் முகிலின்பாங்கர்ச் சுடரிமைத்து அழியா மின் உண்டானது உண்டாகில் - விடாமழையையுடைய மேகத்தின்கண்ணே ஒளிவிளங்கி அழியாத மின்னல் இருந்தது உளதாயின்,—அதற்கு இணை ஆக்கலாம் - அம்மின்னலுக்கு(ச் சுட்டியசுட்டி சங்கிலிகளின்) உபமானமாந்தன்மையைக் கற்பிக்கலாம். எ-று. (௪௯)

அலகிலா மறைகள் சாற்று மரிணமா னுதலி னூடு
திலகநின் றிமைத்தன் மானத் திங்களை யடைந்து நீயெங்
குலமகண் முகத்தில் வட்டங் கொள்ளுதி திலக மாயா
னிலவுவ னென்று தொன்று ணிகழ்த்தியுற் றிடுதல் போலும்.

இ-ள். அலகிலா மறைகள்சாற்றும் அரிணமான் நுதலினூடு - அளவற்ற மந்திரங்களாற்றுதிக்கப்படுகின்ற மான்மகளினது முகத்தின்கண்ணே,—திலகம் நின்றிமைத்தல் - பொட்டு நின்றுவிளங்குதல் (யாதுபோலுமெனில்),—மான் அத்திங்களை - (சந்திரவிம்பத்திற்றோன்றுகின்ற) மானானது (தன்றானமாகிய) அச்சந்திரனை (நோக்கி),—நீ எங்குலமகள் முகத்தில் அடைந்து வட்டங்கொள்ளுதி யான் திலகமாய் நிலவுவன் என்று தொன்றுள் நிகழ்த்தி-நீ எமது சாதி(யாகியமானின்)மகளது முகத்திலே சேர்ந்து வட்டங்கொண்டிரு (ஆண்டு)யான் பொட்டாய்விளங்குவேன் என்று முன்னாளிற் கூறி,—உற்றிடுதல் போலும்-(அவ்வாறமைந்துவந்து) இருத்தலையே போலும் (என்க). எ-று. (௫0)

அருமறைக் குதலைச் செவ்வா யமுதமென் முலையி னுடன்
றிருமுகத் தழகுஞ் சோதிச் செவ்விமூக் குத்தி முத்து
முருவகப் படுத்தின் வானத் துரோணியை மதிய மேந்தி
மருவிமுத் தாடு மாறுய் வழுத்தலாஞ் சிறிது மாதோ.

இ-ள். அருமறைக் குதலைச் செவ்வாய் அமுத மென்முலையினுள் திருமுகத்து அழகும் - அரிய சுருதியுருவாய மழலை பேசுஞ் செம்மையாகிய வாயினையும் அமுதக்கிடமாய மெல்லிய தனங்களையுமுடையவரது திருவதனத்தின் சிறப்பையும்,—சோதிச் செவ்வி மூக்குத்தி முத்தும் - (அதிலணிந்த) ஒளி நலத்தையுடைய மூக்குத்தியின் முத்தையும்,—சிறிது உருவகப்படுத்தின் - (முற்றுமொப்பாம்பொருளின்மையின்) சிறிதே ஆரோபிக்கப்புகின்,—மதியம் வானத்து உரோணியை ஏந்தி மருவி முத்தாடுமாறு ஆய் வழுத்தலாம் - சந்திரன் ஆகாயத்தில் உரோகிணியைத் தாங்கி அணைத்து முத்தமிடும்வண்ணம் என்று புகழலாம். எ-று. (௫௧)

சொல்லுதற் கரியவாய சுருதியுங் கருதா மானின்
வல்லியின் கண்களூடு மைவரைந் தெழுதன் ஞானத்
தெல்லையில் கடற்குக் கூல மிட்டதோ கண்ணே றுறப்
புல்லிய கறுப்புக் காட்டி வைத்ததோ புகலினம்மா.

இ-ள். சொல்லுதற்கரியவாய சுருதியுங் கருதா மானின் வல்லியின்- இசைத்தற்கரிய வேதங்களானுங் கருதுதலாகாத மான்மகளினது,—கண்க ளூடு மை வரைந்தெழுதல் - திருக்கண்களில் அஞ்சனத்தைச் சித்திரித்துத் தீட்டினமையை,—புகலின் - உருவகப்படுத்துகில்,—ஞானத்து எல்லையில் கடற்குக் கூலமிட்டதோ - ஞானமாகிய அளவுகடந்த கடலுக்குக் கரை யமைத்த(தென்ப)தோ?,—கண்ணேறு ஆறப் புல்லிய கறுப்புக் காட்டி வைத்ததோ-திஷ்டிதோஷந்தீரப் பொருந்திய கறுப்பைக் காண்பித்திட்ட (தென்ப)தோ? எ-று. (௫உ)

வண்டென மிழற்றுந் தீஞ்சொன் மானிளஞ் செல்வி யாய
வொண்டொடி கபோலச் செவ்வி யோதிமக் கொல்லன் வாழ்த்தி
யண்டர்தம் பெருமான் செய்ய வாறுமா முகத்தின் சோதி
கண்டுகண் களிக்க வைத்த கஞ்சனம் போலு மாதோ.

இ-ள். வண்டென மிழற்றுந் தீஞ்சொல் மானிளஞ் செல்வியாய ஒண்டொடி கபோலச் செவ்வி-வண்டிசைபோலப் பேசும் இனிய சொல்லை யுடைய இளையமான்மகளாகியஒண்டொடியினது கபோலசோபையானது,- அண்டர்தம்பெருமான் செய்யவாறுமாமுகத்தின் சோதி கண்டு கண்களிக்க- சுவாமியார் ஆறுதிருமுகங்களின் பிரதிவிம்பத்தைப் பார்த்துக் கண்களி கூரும்பொருட்டு,—ஓதிமக்கொல்லன் வாழ்த்தி வைத்த கஞ்சனம்போலும்- அன்னவூர்தியாகியகம்மியன் புகழ்ந்து அமைத்துவைத்த கண்ணாடியின் சோபையையேபோலும். எ-று. (௫௩)

கருமுகில் விளர்ப்ப வுள்ளங் கறுத்தபூங் காம ரோதி
யிருகுழைக் கிணங்கச் சாத்து மிணைமணித் தோட்டின் செவ்வி
பெருமையி னன்பர் ஞானம் பிறங்கநோக் குதற்கு வைத்த
திருவினிற் பொலியுஞ் சோதிச் சிறியகண் ணாடி போலும்.

இ-ள். கருமுகில் விளர்ப்ப உள்ளங் கறுத்த பூங் காமரோதி - நீல மேகமும் வெளுக்க அகங் கறுத்த பொலிந்த அழகிய கூந்தலையுடையா ரது,—இருகுழைக்கு இணங்கச் சாத்தும் இணை மணித்தோட்டின்செவ்வி- இணைச்செவிகளில் இசைய அணிந்த இரண்டு இரத்தினத்தோடுகளின் சோபையானது,—பெருமையின் அன்பர் ஞானம் பிறங்க நோக்குதற்கு வைத்த - பெருமையினையுடைய அடியவர்கள் சிவஞானத்தை விளங்கக் காணும்பொருட்டு வைத்த,—திருவினிற் பொலியுஞ் சோதிச் சிறியகண் ணாடி போலும் - சிவஞானச்செல்வத்தாற் பொலிந்த ஒளியினையுடைய சிறு கண்ணாடிகளின் சோபையையேபோலும். எ-று. (௫௪)

பூவைபோ னிறத்து மாயன் புதல்விசெவ் விதழி னூடு
யாவக மெழுதுங் காம ரெம்மனோர்க் கிசைக்கற் பாற்றோ
மாவகம் பிளந்த வேற்கை வரன்கிளிக் கமுத மூறுங்
கோவையங் கனிநே ரென்னக் கூறலாஞ் சிறிது மாதோ.

இ-ள். பூவைப்போனிறத்து மாயன்புதல்வி செவ்விதழினூடு - காயாம் பூநிறத்துத் திருமாலின்மகளினது செம்மையாகிய இதழின்கண்,—யாவ கம் எழுதுங் காமர் எம்மனோர்க்கு இசைக்கற்பாற்றோ-செம்பஞ்சு தீட்டிய சிறப்பானது எம்மனோரால் சொல்லற்பாலதோ?,—மாவகம் பிளந்த வேற் கை வரன்கிளிக்கு அமுதமூறுங் கோவையங்கனி நேர் என்ன - மாவைக்

கிழித்த வேலைக்கொண்டகையையுடைய சுவாமியாகிய இனிக்கு அமுது சுரக்கும் கொவ்வைப்பழம்போலும் என்று,—சிறிது கூறலாம் - சற்றே சொல்லலாம். எ-று. (ருரு)

சுந்தரங் கவினு மானின் றோகையார்க் கோதை காட்டுங்
கந்தர வனப்புப் பூசுங் காழகிற் கவினி னம்மா
முந்துசே தகத்தி னூடு முழங்குவெண் சங்கம்போலு
மிந்தவா றுரைப்ப தல்லால் யாதெனப் பகர்வன் மாதோ.

இ-ள். சுந்தரங் கவினு மானின் தோகையார்க்கு - அழகு விளங்கும் மான்மகளாரது,—ஓதை காட்டுங் கந்தர வனப்பு - ஒலிகாட்டுங் கழுத்தின் சோபையானது,—பூசுங் காழகிற் கவினின் - பூசிய அகிற்குழம்பின் பிரகாசத்தால்,—முந்து சேதகத்தினூடு முழங்கு வெண் சங்கம்போலும் - முற்பட்ட சேற்றினுட்பட்டு ஒலிக்கின்ற வெள்வளையைப்போலும்,—இந்தவாறு உரைப்பதல்லால் யாதெனப்பகர்வன்-இங்ஙனங் கூறுவதன்றி என்னென்று சொல்வேன். எ-று. (ருசு)

நாரணன் புதல்வி மார்பி னளினநாண் முகையின் வாய்ந்த
வாரண மருப்பின் கொங்கை மதர்ப்பும்பூண் வனப்பும் பார்க்கிற்
காரண மில்லா வேலோன் காமப்பேய் தணிப்பான் சாந்திப்
பூரண கும்பம் வைத்தல் போலுமென் றுரைக்க லாமால்.

இ-ள். நாரணன் புதல்வி மார்பில் - வள்ளியம்மையாரது மார்பின் கண்ணே,—நளின நாண் முகையின் வாரணமருப்பின் வாய்ந்த கொங்கை மதர்ப்பும் பூண்வனப்பும் பார்க்கில் - தாமரைப்புதுமுகைபோலவும் யானைக் கோடுபோலவுஞ் சிறந்த தனங்களினது அழகையும் (அவற்றின்) ஆபரணச் சிறப்பையும் பார்த்தால்,—காரணமில்லா வேலோன் காமப்பேய் தணிப்பான் - சுயம்புவாகிய சுவாமியாருடைய காமமென்னும்பேயை அகற்றுதற்கு,—சாந்திப் பூரணகும்பம் வைத்தல் போலும் என்று உரைக்கலாம் - சாந்திக்கிரியைக்குரிய நிறைகுடங்களை வைத்தமையென்று சொல்லலாம். எ-று. (ருஎ)

ஆரமு தனைய மானுக் கம்பொனி னுடை சாத்தல்
சூரிய கிரணம் வாரிச் சுடர்ப்பக லாய சேடி
மேருவுக் காடையாக வுடுத்துமெய் யழகு நோக்குஞ்
சீரிய சிறப்பு மானச் செப்பலாம் புலவர்க் கம்மா.

இ-ள். ஆர் அமுதனைய மானுக்கு அம்பொனினுடை சாத்தல் - நிறைந்த அமுதுபோன்ற அம்மையாருக்கு அழகியபொன்வஸ்திரம் உடுத்தினமை,—மேருவுக்குச் சுடர்ப்பகலாய சேடி சூரியகிரணம் வாரி ஆடையாக உடுத்து - மகாமேருவுக்கு ஒளியினையுடைய பகற்காலமாகிய பாங்கி சூரிய கிரணங்களை அள்ளி வஸ்திரமாக உடுத்தி,—மெய்யழகு நோக்குஞ் சீரிய சிறப்பு மானப் புலவர்க்குச் செப்பலாம் - சரீரகாந்தியைப் பார்க்கும் மிக்க சிறப்புக்கொப்பாகப் புலவர்களாற் கூறப்படலாம். எ-று. (ருஅ)

மயிலிளஞ் சாயல் காட்டு மானிளஞ் செல்வி யார்க்கு
வெயில் விரி மணியிற் செய்த மேகலை வயங்கச் சேர்த்த
லயனுறு முலைதாங் காது நையுநா விடைக்குச் செம்பொன்
பயில்வுறு பூண்சேர்த் தன்பிற் பாதுகாத் திடுதல் போலாம்.

இ-ள். இளமயிற் சாயல்காட்டும் மானிளஞ்செல்வியார்க்கு-இளமயிலி னியலையுடைய மான்புதல்வியார்க்கு,—வெயில் விரி மணியிற் செய்த மேகலை வயங்கச் சேர்த்தல் - ஒளியை வீசுகின்ற இரத்தினங்களால் அமைத்த மேகலாபரணத்தை விளங்க அணிந்தமை,—நயனுறு முலை தாங்காது நையும் நூலிடைக்கு - நன்மைபொருந்தும் முலைகளைப் பொறுக்கலாற்றாது வருந்தும் நூல்போன்ற இடைக்கு,—செம்பொன் பயில்வுறு பூண் சேர்த்து-பொன்னினாற் பற்றுதலுற்ற பூணை அமைத்து,—அன்பிற் பாதுகாத்திடுதல் போலாம் - அன்போடு பாதுகாத்தமையை நிகர்க்கும். எ-று. (நக)

கவினுறு கையில் வெள்ளிக் கடகமுந் துகிரு மேய
வவிர்கரு வளையு மானி னணங்கினுக் கிணங்கச் சேர்த்த
லுவமையி றேவர் மூவர்க் குளகுண மூன்று நல்க
விவள்கரம் பிடித்த தாமென் றிசைக்கலாந் தகைமைத் தம்மா.

இ-ள். மானினணங்கினுக்குக் கவினுறு கையில் - மான்புதல்வியாரது அழகுபொருந்திய கையிலே,—வெள்ளிக்கடகமுந் துகிரும் அவிர்மேய கருவளையும் இணங்கச் சேர்த்தல்-வெள்ளிக்கங்கணத்தையும் (செய்ய)பவள வளையையும் பிரகாசம்பொருந்திய கருவளையையும் (ஒருங்கு)பொருந்தச் சேர்த்தமையானது,—உவமையில் தேவர் மூவர்க்குள குணமூன்றும் நல்க இவள்கரம்பிடித்ததாம் என்று-ஒப்பற்ற கடவுள் (பிரமாதி)மூவர்க்குமுள்ள குணங்கண் மூன்றையுங் கொடுக்க இவர்கைபற்றிக்கொண்டதாம் என்று,—இசைக்கலாந் தகைமைத்து—சொல்லப்படும் இயல்பினையுடைத்து. எ-று.

மாயவன் வலக்கண் பாங்கர் வந்தவ தரித்த மானின்
மேயகை விரல்க டோறும் விளங்குமோ திரங்கள் சேர்த்தல்
பாயமென் வசந்த காலப் பாவைகற் பகப்பூங் கொம்பிற்
றாயநாண் மலர்கள் பூப்பத் துலங்குதல் போலு மாதோ.

இ-ள். மாயவன் வலக்கண்பாங்கர் வந்து அவதரித்த மானின் - திருமாலின் வலக்கண்ணின் வந்து தோன்றிய அம்மையாரது,—கை மேய விரல்கடோறும் விளங்கு மோதிரங்கள் சேர்த்தல் - கைகளிற் பொருந்திய விரல்கடோறும்பிரகாசிக்கின்ற மோதிரங்களைச் சேர்த்தமை,—பாய மென் வசந்தகாலப்பாவை கற்பகப் பூங்கொம்பில் - பரந்தமெல்லிய வசந்தகாலமாகியபெண்ணினது (கைவிரல்களாகிய) கற்பகதருவின் பூங்கொம்பர்களிலே,—தூய நாண் மலர்கள் பூப்பத் துலங்குதல் போலும் - சுத்தமாகிய புது மலர்கள் பொலிவாக விளங்குதலைப் போலும். எ-று. (௬௧)

கொண்டலைப் பழித்த கூந்தற் குறக் கொடி கமலத் தாளிற்
றண்டையுஞ் சிலம்பும் வெள்ளிச் சதங்கையுந் தயங்கச் சேர்த்தன்
முண்டகத் தளிமத் தன்ன முட்டையிட் டதனைக் காத்து
விண்டறற் றுதலா மென்ன விளம்பலா முளங்கொண் டம்மா.

இ-ள். கொண்டலைப் பழித்த கூந்தற் குறக்கொடி கமலத்தாளில் - முகிலை வென்ற கூந்தலையுடைய வள்ளியம்மையாரது தாமரைமலரடிகளிலே,—தண்டையுஞ் சிலம்பும் வெள்ளிச்சதங்கையுந் தயங்கச் சேர்த்தல் - தண்டையையுஞ் சிலம்பையும் வெள்ளிச்சதங்கையையும்(ஒலி)விளங்கச் சேர்த்தமை,—முண்டகத் தளிமத்து அன்னம் முட்டையிட்டு அதனைக் காத்து விண்டு அரற்றுதலாம் என்ன - தாமரைமலராகிய மெத்தையிலே

அன்னங்கள் முட்டையிட்டு அவற்றைக் காத்து வாய்திறந்து ஒலித்தல் போலாம் என்று,—உளங்கொண்டு விளம்பலாம் - மனங்கொண்டு சொல்லத்தகும். எ-று. (௯௨)

செய்யமா னளிக்க வந்த செல்விசெங் கமலத் தாளுங்
கையும் வான் செம்பஞ் சூட்டுங் கதிர்வனப் பொளிய வைவே
லையனா றிருக ணீல மழுத்தக்கே வணத்துச் செய்த
துய்யசெம் மெழுகுக் கொப்பச் சொல்லலாம் புலவர்க் கம்மா.

இ-ள். செய்ய மானளிக்கவந்தசெல்வி - செம்மையாகிய மானின் புதல்வியாரது,—செங்கமலத்தாளுங் கையும் ஊட்டுவான் செம்பஞ்சு - செந்தாமரைப்பூப்போலுங் கால்களிலுங் கைகளிலும் ஊட்டிய பெருமையாகிய செம்பஞ்சுக்குழம்பானது,—கதிர்வனப்பு - ஒளியழகினாலே,—ஒளிய வை வேல் ஐயன் ஆறிருகண் நீலம் அழுத்தக் கேவணத்துச் செய்த துய்ய செம் மெழுகுக் கொப்ப - ஒளிபொருந்திய கூரிய வேலையுடைய சுவாமியினது பன்னிரண்டு திருக்கண்களாகிய நீலமணிகளை அழுத்துமாறு குழிவட்டத்துக்காக அமைத்த சுத்தியான செம்மெழுகுக்கு நிகராக,—புலவர்க்குச் சொல்லலாம் - புலவராற் கூறப்படலாம். எ-று. (௯௩)

இவ்வண்ண முவமை யாரு மிசைப்பவீர்ங் கமல மாதுங்
கொவ்வை வாய்க் கலையின் மாதுங் குறக்கொடி தனக்குக் கோலச்
செவ்வியின் வாய்ப்பச் செய்த செய்கையை நெடுவே லண்ண
லெவ்வமில் கருணைக் கண்க ளிராறினு முள்ளம் வைத்தான்.

இ-ள். இவ்வண்ணம் யாரும் உவமை இசைப்ப-இவ்வாறு எவரும் உவமை கூற,—ஈர்ங்கமல மாதுங் கொவ்வைவாய்க்கலையின் மாதுங் குறக்கொடிதனக்கு வாய்ப்பச்செய்த கோலச்செவ்வியின்செய்கையை-பூமகளும் நாமகளும் அம்மையாருக்கு இயையச் செய்த வேடச் சிறப்புச் செய்கையை,—நெடுவேலண்ணல் எவ்வமில் கருணைக் கண்கள் இராறினால் உள்ளம் வைத்தான் - வேலாயுதக்கடவுள் துன்பத்தையொழிக்கும் அருளினையுடைய திருக்கண்கள் பன்னிரண்டினாலும் உட்கொண்டார். எ-று. (௯௪)

வீரவேற் றடக்கை யண்ணன் மெல்லியல் வனப்ப தான
வாரியிற் படிந்து காம வயாவொழித் தளவி லாத
பேரருள் சிறந்த காலைப் பெயர்த்திரி சுதந்தி ரத்தர்
காரிகைச் சடங்கு காட்டக் களித்தவ ணடைந்தார் மன்னோ.

இ-ள். வீரவேற்றடக்கையண்ணல் மெல்லியல் வனப்பதானவாரியிற் படிந்து-வெற்றிவேலாயுதக்கடவுள் அம்மையாரது அழகுக்கடலில் அமிழ்ந்தியும்,—[அழகுமுழுது நோக்கியும் என்றபடி] காமவயா ஒழித்து அளவிலாத பேரருள் சிறந்தகாலை - (திருமான்முதலியோர்போலக்) காமத்தின் வருந்துதல் ஒழிந்து அளவுகடந்த பெருங்கருணைசிறந்தபொழுது,—பெயர்த்திரிசுதந்திரத்தர் காரிகைச் சடங்கு காட்டக் களித்து அவண் அடைந்தார்-புகழினையுடைய திரிசுவதந்திரர்கள் திருக்கலியாணத்தை நடத்துமாறு மகிழ்ந்து ஆண்டுச் சேர்ந்தார். எ-று. (௯௫)

திரிசுதந் திரத்தர் யாருஞ் சிறந்துயர் கிருகி யப்போச்
சுருதியி னியதிக் குள்ள தோமறு முறைகள் செய்யப்

பொருவரு மணியிற் பொன்னிற் புரியுமண் டபத்திற் போந்த
வரியணைப் பீடத் தெங்க ளையன்வீற் றிருத்தல் செய்தான்.

இ-ள். திரிசுதந்திரத்தர்யாரும் - திரிசுவதந்திரரனைவரும்,—சிறந்துயர் கிருகியப்பேர்ச் சுருதியின் விதிக்குள்ள தோமறு முறைகள் செய்ய- சிறந்துயர்ந்த கிருகியமென்னுஞ் சுருதியின் விதிப்படியுள்ள குற்றமற்ற கிரியைகளைச் செய்ய,—எங்களையன் பொருவரு மணியிற் பொன்னிற் புரியு மண்டபத்திற்போந்த அரியணைப்பீடத்து வீற்றிருத்தல்செய்தான் - எம் பெருமான் (அவற்றையங்கீகரித்துக்கொண்டு) ஒப்பற்ற காசுகளாலும் ஆசை களாலும் ஆக்கிய சாலையினுள்ள சிங்காசனத்தில் வீற்றிருந்தார். எ-று. ()

காதலி குறக்கோ மாட்டி கரகநீர் வார்ப்பச் செவ்வேள்
பாதமெய்த் துணையை வேடர் பார்த்திவன் விளக்கிப் பின்னர்க்
கோதிலா சமன நீருங் கொடுத்தருக் கியமு நல்கி
மாதவன் முருகன் கையின் மதுபருக் கமுமீந் தானால்.

இ-ள். காதலி குறக்கோமாட்டி கரகநீர் வார்ப்ப - மனைவியாகிய வேடிச்சி கரகத்திற் சலத்தை வார்க்க,—மாதவன் வேடர்பார்த்திவன் செவ் வேள் மெய்ப் பாதத்துணையை விளக்கி - பெருந்தவத்தனாகிய வேடராசன் சுவாமியின் மெய்ம்மையாகிய திருவடிகளிரண்டையும் அபிடேகித்து,— பின்னர்க் கோதில் ஆசமனநீருங் கொடுத்து அருக்கியமும் நல்கி - பின்பு குற்றமற்ற ஆசமனஜலத்தையுங்கொடுத்து அருக்கியத்தையுங்கொடுத்து,— முருகன் கையில் மதுபருக்கமும் ஈந்தான் - சுவாமிகையில் மதுபருக்கத் தையுங் கொடுத்தான். எ-று. (சுஎ)

அந்தணர் கிருகி யத்தி னுகம மரபின் மிக்க
செந்தழ லதனை மூட்டிச் செய்வினைச் சமிதை யெல்லா
முந்திய முறையா லோம முடித்ததற் பின்பு ஞானக்
கந்தன்முன் னரிணை மீன்ற கன்னியைக் கொடுவந் துய்த்தார்.

இ-ள். அந்தணர் கிருகியத்தினுகமமரபின் மிக்க செந்தழலதனை மூட்டி-வேதியர்கள் கிருகியச்சுருதிவிதிப்படி மிக்க அக்கினியை மூட்டி,— செய்வினைச் சமிதையெல்லாம் முந்தியமுறையால் ஓமமுடித்ததற்பின்பு - செய்தொழிற்கு வேண்டுஞ் சமித்துக்களனைத்தினையும் மேலைவிதிப்படி ஓம மியற்றி முடித்தபின்,—ஞானக்கந்தன்முன் அரிணைமீன்ற கன்னியைக் கொடுவந்துய்த்தார் - சுவாமியாரின்முன்னே மான்புதல்வியாரை (அரமக ளிர்) கொணர்ந்து விட்டார்கள். எ-று. (சுஅ)

வலது செங் கையினாற் பொன்னின் மங்கல நாணை வாங்கிக்
கலைமகள் கையி னீந்து வள்ளிகந் தரத்துச் செவ்வே
ளலனுறப் புனைவித் தைய நன்பொரி தூவி வேதச்
சுலனனை வலம தாக மும்முறை சூழ்ந்த பின்னர்.

இ-ள். செவ்வேள் பொன்னின் மங்கலநாணை வலது செங்கையினால் வாங்கி - சுவாமியார் பொன்மங்கலசூத்திரத்தை வலத்திருக்கரத்தால் எடுத்து,—கலைமகள் கையின் ஈந்து-சரசுவதியின் கையிற் கொடுத்து,— வள்ளி கந்தரத்து நலனுறப் புனைவித்து - அம்மையாரது திருக்கழுத்தின் மாட்சிமை பொருந்தத் தரிப்பித்து,—ஐய நன்பொரி தூவி வேதச்சுலனனை

வலமதாக மும்முறை சூழ்ந்தபின்னர் - அழகிய நல்ல பொரிகளைத் தூவி வைதிகாக்கினியைப் பிரதக்ஷிணமாக மூன்றுதரஞ் சுற்றியபின்பு. எ-று. ()

மான்மகள் வலக்கால் பற்றி வஞ்சனேன் மனமா மம்மி
நான்முறை மிதிப்பித் துள்ள நோன்மைபெற் றுயர்வான் சாலி
மீன்விழி பார்த்துப் பின்னு மிக்குயர் கரும முற்றிக்
கான்வரைக் குறவ னீன்ற கன்னியை மணஞ்செய் தானால்.

இ-ள். மான்மகள் வலக்கால் பற்றி வஞ்சனேன் மனமாம் அம்மி நான்முறை மிதிப்பித்து - அம்மையாரது வலத்திருவடியைப் பிடித்து வஞ்சமுடையேனது நெஞ்சுபோலும் அம்மியின் விதிப்படி மிதிப்பித்து,—உள்ள நோன்மைபெற்றுயர் வான்சாலிமீன் விழிபார்த்து- மனவலிகொண்டுயர்ந்த அருந்ததியைக் கண்ணுற்று,—பின்னும் மிக்க உயர்கருமம் முற்றி - மேலும் எஞ்சிய சுபக்கிரியைகளை முடித்து,—கான்வரைக்குறவனீன்ற கன்னியை மணஞ்செய்தான் - குன்றவாணன்பெற்ற மகளை (இவ்வாறு) வரைந்தார். எ-று. (எ0)

மணவினை காண்பான் வேதன் மாலரன் றேவர் கோமா
னிணையறு முனிவர் கான மிசைத்தகந் தருவர் சூழ்ந்தார்
பணைமுர சோதை யார்த்த பைந்தரு மலரின் மாரி
கணமழை போலத் தூர்த்த கந்தனு மகிழ்ச்சி பூத்தான்.

இ-ள். மணவினை காண்பான் வேதன் மால் அரன் தேவர்கோமான் இணையறு முனிவர் கானமிசைத்த கந்தருவர் சூழ்ந்தார் - விவாகக்கிரியையைப் பார்க்கப் பிரம விட்டுணு உருத்திர இந்திரரும் நிகரற்ற முனிவருங் கீதம்பாடிய கந்தருவர்களும் (வேடர் காணுதபடி) சூழ்ந்தார்கள்,—பணை (ஓதை) முரசோதை ஆர்த்த - குழலொலிகளும் முரசொலிகளும் நிறைந்தன,—பைந்தரு மலரின்மாரி கணமழைபோலத் தூர்த்த - தேவதருக்கள் பூமழையைக் குலமுகில்கள்போலப் பொழிந்தன;—கந்தனும் மகிழ்ச்சி பூத்தான் - சுவாமியாரும் பிரீதி மிகுந்தார். எ-று. (எக)

மன்றலந் தொடையல் சூட்டும் வதுவைநோக் குற்ற வானோர்
நின்றவர் யாருந் தத்த நீள்பதி யடைந்தார் விந்தைக்
குன்றவர் சாப நீங்கிக் குமரவே ளுலகம் புக்கார்
மின்றிகழ் மருங்கின் மாதும் விசாகனு மகிழ்ச்சி பூத்தார்.

இ-ள். மின்றிகழ் மருங்கின் மாதும் விசாகனும் - மின்போல விளங்குகின்ற இடையையுடைய அம்மையாருஞ் சுவாமியாரும்,—மகிழ்ச்சிபூத்தார் மன்றலந் தொடையல் சூட்டும் வதுவை - பிரீதிமிக்காராய் மணமாலை சூட்டிய திருக்கலியாணத்தை,—நோக்குற்ற வானோர் நின்றவர் யாருந் தத்தநீள் பதியடைந்தார் - தரிசித்த தேவரும் (மற்று) நின்றவர் யாவருந் தத்தம் உயர்ந்த தானங்களிற் சேர்ந்தனர்,—விந்தைக் குன்றவர் சாபம் நீங்கிக் குமரவேளுலகம் புக்கார் - விந்தைமலையின் வேடர்கள் சாபத்தையொழிந்து குமாரசுவாமியினுலகத்தை அடைந்தனர். எ-று. (எஉ)

சூருயிர் குடித்த வொள்வேற் றோகையெம் பெருமான் வேட
ராரமிர் தனையா ளோடு மணிமணிச் சிறப்பு வாய்ந்த
தேரின்மேற் கொண்டு ஞானச் செயந்தியம் பதியில் வானக்
காருலா வியதன் சாரற் கந்தமா தனத்திற் புக்கான்.

இ-ள். குருயிர்குடித்த ஒள்வேல் தோகையெம்பெருமான் - சூரனைச் சங்கரித்த திருவேலையுடைய மயில்வாகனக்கடவுள்,—வேடர் ஆரமிர் தனையாளோடும் - வேடரது அமிர்தம்போல்வாரோடும்,—மணியணி சிறப்பு வாய்ந்த தேரின்மேற்கொண்டு - இரத்தினக்களிற்புனைந்த சிறந்த இரதத்தி லிவர்ந்து,—ஞானச் செயந்தியம்பதியில்-ஞானத்தைத்தருஞ் செயந்திநகரத் தில்,—வானக்கார் உலாவிய தண் சாரற் கந்தமாதனத்திற் புக்கான் - விண் முகில்கள் செறிந்த குளிர்ந்த சாரலையுடைய கந்தமாதனத்திற் புகுந்தார். எ-று. (எங)

கரடிகை பேரி தாளங் காகளம் பதலை பம்பை
முருடுதுந் துபிதடாரி முரசுசல் லிகைதி சாளம்
வரிவிர லேறு கோடு மத்தளம் படகந் தக்கை
பரவையி னார்ப்பத் தேவர் பனிமலர் மாரி தூர்த்தார்.

இ-ள். கரடிகை ... ... ... தக்கை பரவையின் ஆர்ப்ப - கரடிகை பேரிகை தாளங் காளம் ஒருகட்பறை பம்பை முருடு துந்துபி தடாரி முரசு சல்லிகை தண்ணுமை விரலேறு கொம்பு மத்தளந் தம்பட்டம் இடக்கை என்னுமிவைகள் கடல்போல ஒலிக்க,—தேவர் பனிமலர் மாரி தூர்த்தார் - விண்ணவர் தண்ணிய பூமழைகளைத் தூவினார்கள். எ-று. (எச)

விந்தைமால் வரையிற் கந்தன் வேள்வியின் பொருட்டாற் சென்ற
வந்தநாட் டொட்டுத் தெய்வ வாரணந் தணங்கு நோற்றுக்
கந்தமா தனத்தி னுற்றுள் கண்ணுதற் பரனன் னுண்முன்
னிந்திரா திபரும் போற்ற விலிங்கத்தின் வடிவங் கொண்டான்.

இ-ள். கந்தன் வேள்வியின்பொருட்டு விந்தைமால்வரையிற் சென்ற அந்தநாள் தொட்டு - குமாரசுவாமி திருமணத்தின்பொருட்டு விந்தைமலைக் குப்போன அந்நாள் முதலாக,—தெய்வ வாரணத்தணங்கு கந்தமாதனத் தின் நோற்று உற்றுள் - தெய்வயானையம்மையார் கந்தமாதனமலையின் கண்ணே தவஞ்செய்துகொண்டு இருந்தார்,—கண்ணுதற்பரன் அன்னாள் முன் இந்திராதிபரும் போற்ற இலிங்கத்தின் வடிவங் கொண்டான் - சிவ பெருமான் அவ்வம்மையாருக்கு எதிரே திருமாலுந் துதிக்க ஒரு இலிங்க வடிவத்தைக் கொண்டருளினார். எ-று. (எரு)

கான்றமாக் கலுழி நால்வாய்க் களிறுலாங் குன்றந் தன்னிற்
றோன்றிலிங் கத்தின் முன்னர்ச் சுந்தரியடியே னெஞ்சி
லான்றபே ரெண்ணந் தானு மன்பினங் கேள்வ னெஞ்சத்
தேன்றவெண் ணமுமே நன்று யிறைமுடித் தருள்வா யென்றாள்.

இ-ள். மாக்கலுழி கான்ற நால் வாய்க் களிறு உலாங் குன்றந் தன் னில் - மதசலத்தைக் கான்ற நான்ற வாயினையுடைய யானைகள் உலாவுங் கந்தமாதன மலையின்கண்ணே,—தோன்றிலிங்கத்தின் முன்னர் - வெளிப் பட்ட சிவலிங்கத்தின்முன்னே,—சுந்தரி - தெய்வயானையம்மையார் (பத் தியோடு நின்று),—அடியேன் நெஞ்சில் ஆன்ற பேரெண்ணந் தானும் - தமியேனது மனத்திற்பொருந்திய பெரியஎண்ணத்தையும்,—அன்பின் நங் கேள்வன் நெஞ்சத்து ஏன்ற எண்ணமும் - அன்பினையுடைய நமது பதி யின் மனத்திற்பொருந்திய எண்ணத்தையும்,—இறை நன்றாய் முடித்தரு ள்வாய் என்றும் - சுவாமீ! இனிது முடித்தருளக்கடவீர் என்றும். எ-று. ()

எம்மிறை வேட்ட மாதும் யானுமோ ருள்ள மாகுஞ்
செம்மையை யருள்வா யென்றுஞ் சிந்தனை செய்ய வந்தக் [ண்
கொம்மைவெம் முலையாண் முன்னர்க் கோதிலா விலிங்கந் தன்னி
மைம்மலி மிடற்றுப் புத்தேள் வந்தனன் மறைக ளார்ப்ப.

இ-ள். எம்மிறை வேட்ட மாதும் யானும் ஒருள்ளமாகுஞ் செம்மையை அருள்வாய் என்றும் - எம்பதி வரைந்த வள்ளியம்மையும் நானும் ஒருகருத்தாகுஞ் செப்பத்தை அருள்வீர் என்றும்,—சிந்தனை செய்ய- எண்ண,—அந்தக் கொம்மை வெம்முலையாள் முன்னர்க் கோதிலா இலிங்கந்தன்னில் மைம்மலிமிடற்றுப்புத்தேள் வந்தனன் - அந்த அம்மையாருக்கு முன்னே சுத்தமான இலிங்கத்தின்கண்ணே நீலகண்டக்கடவுள் வெளிப்பட்டார்,—மறைகள் ஆர்ப்ப - வேதங்கள் ஒலித்தன. எ-று. (எஎ)

கயிலையெம் பெருமான் கந்த மாதனத் திலிங்கத் தூடு
வெயில்விரித் துலவுங் கோலம் வெள்ளைவா ரணன்கு மாரி
புயலினைக் கண்ட தோகை போலுளங் களித்தா ளந்தக்
குயின்மொழிக் குள்ளத் துற்ற குறிப்பெலாம் பரனு மீந்தான்.

இ-ள். கயிலையெம்பெருமான் கந்தமாதனத்து இலிங்கத்தூடு வெயில் விரித்து உலவுங் கோலம் - கயிலாசமலையில் வீற்றிருக்குமெம்பெருமான் கந்தமாதனகிரியிலே (காட்டியருளிய) இலிங்கத்திருமேனியிலே (தோற்றியருளிய) ஒளிபரப்பி விளங்குகின்ற உருவத்திருமேனியை,—வெள்ளைவாரணன்குமாரி புயலினைக் கண்ட தோகைபோல் உளங்களித்தாள் - (கண்ட) இந்திரகுமாரியார் முகிலைக்கண்ட மயில்போல மனமகிழ்ந்தார்,— பரனும் அந்தக் குயின்மொழிக்கு உள்ளத்துற்ற குறிப்பெலாம் ஈந்தான் -கடவுளும் அவ்வம்மையாருக்கு மனத்துப் பொருந்திய குறிப்புக்களையெல்லாங் கொடுத்தார். எ-று. (எஅ)

ஈந்தவப் பொழுது தெய்வ யானையு மகிழ்ந்து வேற்கைச்
சேந்தனுக் கத்த னென்றுஞ் செகத்துளோர் நாத னென்றுங்
காந்தளங் கரத்துச் சூலி காதல னென்று நீங்கா
வாய்ந்தபே ரன்பி னோலே வணங்கினள் வழுத்தி நின்றாள்.

இ-ள். ஈந்த அப்பொழுது தெய்வயானையும் மகிழ்ந்து - கொடுத்தருளிய அப்பொழுது தெய்வயானையாரும் உவந்து,—வேற்கைச் சேந்தனுக்கு அத்தனென்றும் - வேலாயுதக்கடவுளுக்குத் தந்தையாரென்றும்,—செகத்துளோர் நாதனென்றும் - உலகத்தாருக்கு முதல்வரென்றும்,—காந்தளங் கரத்துச் சூலி காதலனென்றும்-கார்த்திகைமலர்போலுங் கையையுடைய பார்வதியாருக்கு நாயகரென்றும்,—நீங்கா வாய்ந்தபேரன்பினோலே வணங்கினள் வழுத்திநின்றாள் - பிரியாது சிறந்தபேரன்பினோடு வணங்கித் துதித்துநின்றார். எ-று. (எகூ)

வழுத்திய தெய்வ யானை மாமனுங் கடவுள் பாத
முழுத்ததண் ணளியிற் போற்றி முப்புர மெரித்த மூர்த்தி
தொழத்தகு மிலிங்கத் தண்டச் சூழனுள் ளளவு நீயே
தழைத்தசிந் தையினுன் ஞானத் தண்ணளி சுரத்தல் வேண்டும்.

இ-ள். மாமனுங் கடவுள் பாதம் வழுத்திய தெய்வயானை - மாமனாகிய சுவாமியாருடைய திருவடிகளைத் துதித்த தெய்வயானையம்மையார்,

(அவரைநோக்கி),—முப்புரமெரித்தமூர்த்தி - திரிபுரதகனகருத்தாவே!,—நீ தொழத்தகும் இலிங்கத்து அண்டச்சூழல் உள்ளளவும் முழுந்த தண்ணளியிற் போற்றி - நீர் வணங்கப்படும் இவ்விலிங்கத்திலே (வியாபித்து) அண்டகடாகத்திலுள்ள உயிரனைத்தையும் பூரணகிருபையினாற் காத்து,—தழைத்த சிந்தையினால் ஞானத்தண்ணளி சுரத்தல்வேண்டும் - வாழச்செய்யும் உள்ளத்தோடு சிவஞானமாகிய தேனைப் பெருக்குதல்வேண்டும். எ-று.

ஐயநீ யுனது சேய்க்குஞ் சேய்க்கருந் தார மாகுந்
தையலா ரிருவருக்குந் தயவுடன் பரவி யேத்தும்
வையகத் தெவர்க்கு மன்பு மழையெனச் சுரந்து காத்தல்
செய்யநின் னருளே வேண்டு மென்றன டெய்வ யானை.

இ-ள். ஐய நீ உனது சேய்க்கும் - சுவாமீ நீர் உமது குமாரருக்கும்,—சேய்க்கு அருந்தாரமாகுந் தையலார் இருவருக்கும் - குமாரருக்கு அரிய மனைவியராகிய பெண்கள் இருவர்க்கும்,—தயவுடன் பரவி ஏத்தும் வையகத்தெவர்க்கும் - அன்போடு துதித்து வழிபடுகின்ற உலகத்தவரெவர்களுக்கும்,—அன்பு மழையெனச் சுரந்து காத்தல்செய்ய நின்னருளே வேண்டும் என்றனள்-அன்பை மழைபோலப் பொழிந்து காக்க, உம்முடைய கருணையே வேண்டும் என்று கூறினார். எ-று.

தெய்வயானை என்பது வருஞ்செய்யுளிற் சேர்த்துரைக்கப்படும். (௮௧)

கண்ணுத லதனைக் கேளாக் கடவுளர்க் கரச னீன்ற
பெண்ணமு தனையா யுள்ளம் பேதுற றவிர்தி நீயு
மெண்ணிய வெண்ணி யாங்கே யாமருள் புரிவோ மீது
திண்ணநம் மாணை யென்று செப்பின னொப்பி லாதான்.

இ-ள். ஒப்பிலாதான் கண்ணுதல் தெய்வயானை அதனைக் கேளா - ஒப்பற்ற சிவபெருமான் தெய்வயானையம்மையாருடைய அந்தவசனத்தைக் கேட்டு,—கடவுளர்க்கரசன் ஈன்ற பெண்ணமுதனையாய் - இந்திரன்பெற்ற பெண்களுள் அமுதம்போல்பவளே,—உள்ளம் பேதுறல் தவிர்தி - மனம் வருந்துதலை ஒழி,—நீ எண்ணிய எண்ணியாங்கு யாம் அருள்புரிவோம் - நீ நினைத்தவற்றை நினைத்தவாறு யாம் அருளுவோம்,—ஈது நம் ஆணை திண்ணம் - இஃது நம்முடைய ஆஞ்ஞை நிச்சயம்,—என்று செப்பினன் - என்று கூறினார். எ-று. (௮௨)

கொன்றைதேன் றுளிப்ப நின்று குஞ்சித சரணம் பேர்த்து
மன்றினி னடிக்கும் பொற்றாள் வானவன் சந்த நீடு
குன்றகந் தன்னில் யாருங் கும்பிடப் பரிதி வேத
னின்றுள கற்ப மெல்லா நிறைந்திவ ணிருப்போ மென்று.

இ-ள். மன்றினிற் குஞ்சிதசரணம் பேர்த்து நின்று கொன்றை தேன் துளிப்ப நடிக்கும் பொற்றாள் வானவன் - கனகசபையிலே வளைக்கப்பட்ட திருவடியை மடக்கிநின்று (முடியிற்) கொன்றைமலர் தேன் பிலிற்ற ஆடுந் திருவடியையுடைய கடவுளானவர் (மேலும் அம்மையாரை நோக்கி),—இவண் நீடு சந்தக் குன்றகந்தன்னில் யாருங் கும்பிட - இந்த உயர்ந்த கந்தமாதனமலையிலே எவரும் வழிபடும்பொருட்டு,—பரிதிவேதன் நின்றுள கற்பமெல்லாம் நிறைந்திருப்போம் என்று - சூரியனும் பிரமனும் உள்ள கற்பமுழுதினும் விசேடவியாத்திபெற்றிருப்போம் என்று சொல்லி. எ-று. (௮௩)

பேரரு ளிலிங்கத் தூடு பிரானுடன் மறைந்தான் றெய்வ
வாரண மடந்தை மீண்டும் வணங்கின ணிற்குங் காலைத்
தேரிடை யரிண மீன்ற செல்வியுங் குமர வேளு
மேருவி னுயர்ந்த கந்த மாதன வெற்பிற் போந்தார்.

இ-ள். பேர் அருள் இலிங்கத்தூடு பிரான் உடன் மறைந்தான் - பெருங் கருணையோடு இலிங்கத்தின்கண்ணே (அந்தக்)கடவுள் உடனே மறைந்தார்,—தெய்வவாரணமடந்தை மீண்டும் வணங்கினள் நிற்குங்காலை - தெய்வயானையம்மையார் பின்னும் வணங்கிநிற்கும்பொழுது,—தேரிடை அரிணமீன்ற செல்வியுங் குமரவேளும் - (முன்னர்ச் சுட்டியபடி) தேரின் (இவர்ந்த) வள்ளியம்மையாருங் குமாரசுவாமியாரும்,—மேருவின் உயர்ந்த கந்தமாதனவெற்பிற் போந்தார் - மேருமலைபோல உயர்ந்த (அக்)கந்தமாதன கிரியிற் சேர்ந்தார். எ-று. (அச)

உழைதருங் கொடியுஞ் செவ்வே லொருவனும் பொற்றேர் மீது
விழைவுடன் வருத னோக்கி வேழமான் மகிழ்ச்சி கூர்ந்து
குழையொடும் போந்து செங்கை குவித்தன ளருட்க ணீரா [ல்.
மழைகொடு முலையாஞ் செம்பொன் வார்க்குடம் விளக்கி னாளா

இ-ள். உழைதருங் கொடியுஞ் செவ்வேலொருவனும் பொற்றேர்மீது விழைவுடன் வருதல் நோக்கி - அம்மையாருஞ் சுவாமியாரும் பொற்றேரின் மேலே விருப்பத்தோடு வருதலைக் கண்டு,—வேழமான் மகிழ்ச்சிகூர்ந்து குழையொடும் போந்து செங்கை குவித்தனள் - தெய்வயானையம்மையார் பிரீதி மிகுந்து பணிவோடுஞ் சென்று கைகுவித்து,—அருட் கணீராம் மழைகொடு முலையாஞ் செம்பொன் வார்க்குடம் விளக்கினாள் - அருளிற்பொழியுங் கண்ணீராகிய மழையினாலே (தமது) முலைகளாகிய பொற்குடங்களைக் கழுவினார். (அரு)

கடவுதேர் நிறுத்தி வள்ளி கரங்களால் வலக்கை தூக்க
விடது கை தூக்கிக் கந்த னெடுத்தனன் யானை மாதுந்
தடநெடுந் தேரி னேறிச் சண்முக னிடப்பா கத்தி
னுடனிருந் தருளுங் கோல முவமையா னுரைக்கற் பாற்றோ.

இ-ள். கடவுதேர் நிறுத்தி வள்ளி கரங்களால் வலக்கை தூக்க - செலுத்திய தேரை நிறுத்தி வள்ளியம்மையார் (தமது)கைகளினாலே வலக் கரத்தை(ப் பிடித்து)த் தூக்க,—கந்தன் இடதுகை தூக்கி எடுத்தனன் - சுவாமியார் இடக்கரத்தை(ப் பிடித்து)த்தூக்கி (மேலே)எடுத்தார்,—யானை மாதுந் தடநெடுந்தேரினேறி - தெய்வயானையம்மையாரும் பெரிய தேரின் கண்ணேறி,—சண்முகன் இடப்பாகத்தின் உடனிருந்தருளுங் கோலம் - சுவாமியாரது இடப்பாகத்தின் ஒருங்கிருந்த திருக்கோலம்,—யான் உவமை உரைக்கற்பாற்றோ - யான் ஒப்புக்கூறத் தக்கதோ? எ-று. (அசு)

மாதர்க ளிரண்டு பேரும் வானர சளித்த வேற்கைச்
சோதியுந் துலங்கு தோற்றஞ் சுடர்வயப் பரிதி யேந்துஞ்
சீதரன் றிருவும் பூமி தேவியுஞ் செம்பொற் றேரிற்
போதுமா றொப்ப தென்றே புகலலாம் புலவர்க் கம்மா.

இ-ள். வானரசு அளித்த வேற்கைச் சோதியும் மாதர்கள் இரண்டு பேருந் துலங்கு தோற்றம்-சுவர்க்கராச்சியத்தை (இந்திரனுக்கு)க்கொடுத்த

வேலாயுதக்கடவுளும் அம்மைமார் இருவரும் (தேரிலே) விளங்குகின்ற தோற்றமானது,—சுடர்வயப் பரிதி ஏந்துஞ் சீதரன் திருவும் பூமிதேவியுஞ் செம்பொற்றேரிற் போதுமாறு ஒப்பதென்றே - ஒளிபொருந்திய வெற்றியைத் தருஞ் சக்கிராயுதத்தைத் தாங்கிய விட்டுணுவுஞ் சீதேவியும் பூதேவியும் பொற்றேரின்கண்ணே சேர்ந்தவாற்றை நிகர்ப்பதாமென்று,—புலவர்க்குப் புகலலாம் - வித்துவான்களுக்குச் சொல்லல்கூடும். எ-று. (அஎ)

தூயபொற் றேரி னீங்கிச் சோதிவே லுடைய காளை
யாயிழை மார்க ளோடு மாலய மதனிற் போந்து
மேயபே ரழகு வாய்ப்ப வேழத்தின் பகைய தாய
சீயவான் பீடத் தெங்கோன் சிறந்துவீற் றிருந்தான் மன்னோ.

இ-ள். சோதிவேலுடைய காளை எங்கோன்-ஒளிபொருந்திய வேலாயுதக்கடவுளாகிய எம்பெருமான்,—ஆயிழைமார்களோடுந் தூயபொற்றேரின் நீங்கி ஆலயமதனிற் போந்து - அம்மைமாரோடுந் திருவிரதத்தினின்றும் இறங்கித் திருக்கோயிலினுட் சென்று,—வேழத்தின்பகையதாய சீய வான் பீடத்து - யானைகட்குப்பகையாகிய சிங்கங்கள்சுமந்த பேராசனத்திலே,—பேரழகு சிறந்து வாய்ப்ப வீற்றிருந்தான் - பேரொளி சிறந்தமைய வீற்றிருந்தருளினார். எ-று. (அஅ)

ஞானசத் தியினால் வைகு நவையறு சிவன்பா கத்தி
னானபே ரிச்சா சத்தி யரிதுசெய் கிரியா சத்தி
யூனமின் மூன்று மொன்றா யுயர்வுட னிருத்தல் போல
மானவேற் படையான் சிந்து மாநகர் வதிந்தான் மாதோ.

இ-ள். ஞானசத்தியினால்வைகும் நவையறு சிவன்-(சகஜமான) ஞானசத்தியோடிருக்கின்ற மலரகிதராகிய சிவபெருமான்,—பாகத்தினான பேரிச்சாசத்தி அரிதுசெய் கிரியாசத்தி ஊனமில் மூன்றும் ஒன்றாய் உயர்வுடன் இருத்தல்போல-(உபாதிபற்றி அஞ்ஞானசத்தியின்) பிரிவினாலாகிய இச்சாசத்தியும் கிரியாசத்தியும் (சேரக்) குற்றமற்ற மூன்றான சத்திகளும் ஒருங்காய் உயர்ச்சியோடு இருத்தல்போல,—மானவேற்படையான் சிந்து மாநகர் வதிந்தான்-வேலாயுத(மென்னுஞ்சத்தியையுடைய)சுவாமி செயந்தி மாநகரத்தின்கண்ணே (அவ்விருசத்திமாரோடும்) அமர்ந்தருளினார். எ-று.

இந்திரன் மாதுக் காக விலிங்கமாங் கெழுந்த செய்கை
கந்தவே ளுணர்ந்து வேட்ட காதலிக் காக வந்த
தந்தையா மென்றென் றுள்ளந் தண்ணளி சிறந்து ஞானச்
சிந்தையாற் றாதை பூசை செய்தருள் புரிந்தான் சேயோன்.

இ-ள். இந்திரன் மாதுக்காக இலிங்கம் ஆங்கு எழுந்த செய்கை சேயோன் கந்தவேள் உணர்ந்து - தெய்வயானையம்மையாருக்காகச் சிவலிங்கம் அங்ஙனந்தோன்றிய செய்கையைக் குமாரராகிய முருகக்கடவுள் கண்டு,—வேட்டகாதலிக்காக வந்த தந்தையாம் என்றென்று உள்ளந் தண்ணளி சிறந்து - (நாம்) வரைந்த பன்னிக்கு அருள்புரியவந்த எம்பெருமானும் என்று பலகால் நினைந்து உள்ளன்புசிறந்து,—ஞானச் சிந்தையால் தாதை பூசைசெய்தருள்புரிந்தான் - ஞானம்பொருந்திய மனத்தினாலே தந்தையாருக்குப் பூசைசெய்தருளினார். எ-று. (கூ0)

...ழ... தாரகத் துருவ மான
தாரமா மிரண்டுடைய யண்ணன் மேருவிற் குழைத்தான் பொற்று
வீரவேற்ற... டு பூசை யாற்றினர் சனக ஞதி
...ரிய முனி...வர் தாமுந் திரிசுதந் திரரும் போற்ற.

...-ள். சனகனுதி சீரிய முனிவர்தாமுந் திரிசுதந்திரரும் போற்ற - சனகன் முதலிய சிறந்த முனிவர்களுந் திரிசுவதந்திரர்களுந் துதிக்க,—தாரமாம் இரண்டுபேரும் - மனைவியராகிய இருவரும்,—தாரகத்துருவமான வீரவேற்றடக்கையண்ணல் (பொற்றாள்) - பிரணவ வடிவமாகிய வேலாயுதக்கடவுளினது திருவடிகளையும்,—மேருவிற் குழைத்தான் பொற்றாள் - சிவபெருமானுடையதிருவடிகளையும்,—ஆர் அருளோடு பூசையாற்றினர் - நிறைந்த அருளை வேண்டுதலோடு பூசை செய்தார்கள். எ-று. ()

சனகனே யாதி யான தாபதர் தமக்கு மோன
வினியயோ கத்தி னுண்மை யிசையமா நிலத்து ளோர்க்கு
நனியருள் புரிந்து வேத நாயக னுகுஞ் செவ்வேள்
சினகரத் திருந்தான் ஞானச் செயந்தியம் பதியி லென்றான்.

( ள். வேதநாயகனுகுஞ் செவ்வேள் - மறைமுதல்வராகிய அறுமுக பெருமான்,—ஞானச் செயந்தியம்பதியிற் சினகரத்து - ஞானத்தைத் தருகின்ற செயந்திபுரத்துத் திருக்கோயிலிலே,—சனகனே யாதியான தாபதர் தமக்கும் மாநிலத்துளோர்க்கும் - சனகன் முதலிய முனிவர்களுக்கும் பெரிய பூமியிலுள்ளவர்களுக்கும்,—இனிய மோன யோகத்தின் உண்மை இசைய நனி அருள் புரிந்து இருந்தான் - இனிய ஞானயோகத்தின் உண்மையை ஏற்குமாறு நன்றாக உணர்த்தியருளி வீற்றிருந்தார்;—என்றான் - என்று வியாசமுனிவன் கூறினான். எ-று. (கூஉ)

வள்ளியம்மை திருக்கலியாண அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௬அஅ.

## கூ-வது. பிரமாவுக்கு வரங்கொடுத்த அத்தியாயம்.

வேதமொரு நான்கென விதித்துள வியாதன்
பாதமலர் மெய்த்துணை பணிந்துசுக னின்று
காதலொடு நீடுகம லாசனன் வணங்க
வாதிதரு சேயுதவு மாறறைதி யென்றான்.

இ-ள். சுகன் - (இங்ஙனம்வியாசமுனிகூறக்கேட்ட) சுகமுனிவன்,—வேதம் ஒருநான்கென விதித்துள வியாதன் மெய்ப் பாதமலர்த்துணை பணிந்து நின்று - மறைகளை நான்காக வகுத்த வியாசமுனிவனுடைய மெய்ம்மையாகிய அடிமலர்களிரண்டையும் வணங்கி நின்று,—நீடு கமலாசனன் காதலொடு வணங்க ஆதிதரு சேய் உதவுமாறு அறைதி என்றான் - உயர்ந்த பிரமா அன்போடு வழிபடச் சிவகுமாரர் அருளியபடியைச் சொல்க என்றான். எ-று.

இது கவிகூற்று. வருஞ்செய்யுண்முதலியன வியாசமுனிகூற்றே. (க)

குருபரன்வி மானமுயர் கோயிலி னிருந்தே
மெய்வருதிரிசு தந்திரமெய்ம் மாமறையி னோர்கா
ளொருவசன முண்டது வழாதிவ ணுரைப்பாஞ்
சுருதியொடு நம்மடி துதித்தரு கிருப்பீர்.

என்றுமுல கேழுதொழு மெம்பதியி ருந்தே
நன்றியுட னம்மடியி னாண்மல ரெடுத்தே
மன்றவணி வீர்கதி வழங்குவது தென்கா
னின்றுலவு சிந்துபுர மேயென நினைப்பீர்.

நம்மையுந னம்பொருளு மாதரையு நாடுஞ்
செம்மைதரு கோயிலுள சீரியன யாவுஞ்
சும்மைகொடு காப்பது தொழிற்குரிய தென்றா
னிம்மையுட னம்மையு மெனக்குதவு செவ்வேள்.

இ-ள். இம்மையுடன் அம்மையும் எனக்கு உதவு செவ்வேள் குருபரன்-இப்பிறப்பின்பத்தையும் வருபிறப்பின்பத்தையும் எனக்கு அருளுங் குமாரசுவாமியாகிய பரமகுருவானவர்,—விமானம் உயர் கோயிலின் இருந்து - விமானம் உயர்ந்த திருக்கோயிலில் வீற்றிருந்து (திரிசுவதந்திரரை நோக்கி),—மெய் வரு திரிசுதந்திர மா மறையினோர்காள்-மெய்ம்மை பொருந்திய திரிசுவதந்திரராகிய பெரிய வேதியர்களே!,—ஒருவசனம் உண்டு அது வழாது இவண் உரைப்பாம்-(நமக்கு)ஒன்று சொல்லற்பாலது உளது அதனைத் தவறாது இங்குச் சொல்வாம் (கேட்க),—தென்கால் நின்றுலவு சிந்துபுரமே கதிவழங்குவது என நினைப்பீர் - தென்றல் நின்று வீசுகின்ற (இச்)செயந்தியே உறுதிப்பயனை உதவுவது என்று எண்ணுதிர்,—உலகேழு தொழும் எம்பதி என்றும் இருந்து நாண் மலர் எடுத்து நன்றியுடன் நம்மடியில் அணிவீர் - உலகமேழும் வணங்கும் நமது (இத்)தலத்தில் எப்போதும் வசித்துப் புதுமலர்களை எடுத்து (ஏனைய) நற்செய்கைகளோடு எம்பாதத்திற் புனைதிர,—சுருதியொடு நம்மடி துதித்து அருகு இருப்பீர் - வேதமோதலோடு நம் பாதங்களைப் புகழ்ந்து பக்கத்தில் இருத்திர்,—நம்மையும் நல் நம்பொருளும் மாதரையும் - எம்மையும் நல்ல எம்பொருள்களையும் பெரிய (எம்)இலங்களையும்,—நாடுஞ் செம்மைதரு கோயில் உள சீரியன யாவும் - ஆராயப்படுஞ் செம்மை(ப்பயனைத்)தருகின்ற (நங்)கோயிலினுள்ள சிறந்தன யாவற்றையும்,—சும்மைகொடு காப்பது தொழிற்கு உரியது - பாரமாகக்கொண்டு பரிபாலிப்பதும் (உங்கள்)தொழிலாதற்குத் தக்கது,—என்றான் - என்று சொல்லியருளினர். எ-று. (உ-௩-௪)

ஆயிரமி ரட்டியுள வந்தணர்க ணீவிர்
மேயவதி னாமொருவ ரென்றுரை விளம்பித்
தாயினுமி ரங்கியெளி யேன்றனை யளிக்குஞ்
சேயுளம கிழ்ந்துதிரு வாய்மலர்வ தானான்.

இ-ள். தாயினும் இரங்கி எளியேன்றனை அளிக்குஞ்சேய்-மாதாவைப் பார்க்கிலும் அருள்செய்து சிறியேனைக் காக்குஞ் சுவாமியார் (மேலும் அவரை நோக்கி),—நீவிர் இரட்டி ஆயிரமுள அந்தணர்கள் - நீங்கள் இரண்டாயிரக்கணக்கான வேதியர்கள்,—மேய அதில் நாம் ஒருவர் என்று உரை விளம்பி - பொருந்திய அ(த்தொகையாகிய இரண்டாயிரத்)தினுள் நாமும்

ஒருவர் என்று (அவர்களது) புகழைக்கூறி,—உளமகிழ்ந்து திருவாய்மலர்வ தானுன் - மனமகிழ்ந்து (மேலும்) கூறுவாராயினுர். எ-று. (ரு)

வந்துதெரி சித்துநமை வாழ்த்துநர் பெறுஞ்சீர்
சந்ததமு நுங்களை யடைந்தவர்கள் சார்வா
ரிந்தமட மாதரிரு வோருடனி யாமிச்
சிந்துபுரம் வந்துதரி சித்தினிதி ருந்தாம்.

இ-ள். சந்ததமும் நுங்களை அடைந்தவர்கள் - என்றும் உங்களை அடைந்தவர்கள்,—வந்து நமைத் தெரிசித்து வாழ்த்துநர் பெறுஞ் சீர் சார்வார்-வந்து நம்மைப் பார்த்து வழிபடுவோர் எய்துஞ் சிறப்பை எய்துவர்,—யாம் இச் சிந்துபுரம் வந்து இந்த மடமாதரிருவோருடன் இனிது தரிசித்து இருந்தாம் - நாம் இச்செயந்திநகரில் வந்து இந்தப் பேதைமையையுடைய அம்மைமாரிருவரோடும் இன்பத்தை நுகர்ந்து இருந்தாம். எ-று. (சு)

ஞானமில ராய்விடினு நம்மையுண விற்று
தீனமுறு பாதக மிழைத்துளர்க ளேனு
மானமொடு சிந்துபுரம் வந்தடைய வர்க்கே
மேனிலைய ளித்தருள்வம் வேண்டிய விருப்பால்.

இ-ள். ஞானமிலராய்விடினும் - அறிவிலராயினும்,—நம்மை உன்கவிற்று ஈனமுறு பாதகம் இழைத்துளர்களேனும் - நம்மை உள்ளே கொள்ளாது குற்றமுற்ற பாதகங்களைச் செய்தாராயினும்,—மானமொடு சிந்துபுரம் வந்து அடையவர்க்கு-காதலோடு செயந்தியில் வந்து (நம்மைச்) சேர்பவர்க்கு,—வேண்டிய மேனிலை விருப்பால் அளித்தருள்வம் - (அவர்) விரும்பிய பரகதியை ஆதரத்தோடு கொடுத்தருள்வாம். எ-று. (எ)

என்னவுரை செய்தகும ரேசனிரு போதாம்
பொன்னடி வணக்கமுறு பூசுரர்கள் யாரு
மன்னபரி சேயுன தடிக்கமலம் வீடே
மன்னுதொழி லாயினும் வழுத்துவ தொன்றுண்டால்.

இ-ள். என்ன உரை செய்த குமரேசன் - என்று திருவாய்மலர்ந்தருளிய குமாரசுவாமியினுடைய,—இரு போதாம் பொன்னடி வணக்கமுறு பூசுரர்கள் யாரும் - இரண்டு மலர்கள்போலுந் திருவடிகளை வணங்கிய வேதியரெல்லாம் (கடவுளைநோக்கி),—அன்னபரிசே உனது அடிக்கமலம் மன்னுதொழில் வீடேம் - அவ்வாறே உமது பாதாரவிந்தங்களையும் நிலையான (வழிபாட்டுத்)தொழிலையும் விடேம்,—ஆயினும் வழுத்துவது ஒன்று உண்டு - ஆனாலும் விண்ணப்பஞ் செயற்பாலது ஒன்று உளது. எ-று. (அ)

நித்தமுமி றைஞ்சியிவ ணேயமொடு மூழ்கச்
சித்திவிழை மானுடர்க டேவர்பிறர் மூழ்கப்
புத்திரப வுத்திரர்கள் புண்ணிய மருத்த
முத்திதரு மத்தகைய மூலமும தாகி.

இ-ள். இவண் நித்தமும் இறைஞ்சி நேயமொடு மூழ்க-இங்கே (யாம்) என்றும் வணங்கி அன்போடு முழுகவும்,—சித்தி விழை மானுடர்கள் தேவர் பிறர் மூழ்க - பயனை வேண்டும் நரருஞ் சுரரும் பிறரும் முழுகவும்,—புத்திர பவுத்திரர்கள் புண்ணியம் அருத்தம் முத்தி தரும் அத்தகைய

மூலமும் ஆதாகி-சந்ததி அறம் பொருள் வீடுகளைத் தரும் அவ்வியல்புடைய காரணமுந் தானேயாகி. எ-று. (கூ)

நல்குரவு வெம்பிணி யொழித்தினிய நாவின்
மெல்லமுத மொத்தசுவை மேன்மையுள தாகிக்
கல்விபெரு ஞானமொடு காட்டியெமை யாளச்
செல்வமுள தீர்த்தவர நீயருள்செய் வாயால்.

இ-ள். நல்குரவு வெம்பிணி ஒழித்து - வறுமையையுங் கொடிய நோயையும் நீக்கி,—நாவின் மெல்லமுதம் ஒத்த இனிய சுவை மேன்மையுளதாகி-நாவுக்கு மெல்லிய அமுதுபோன்ற மதுரரச மேம்பாடுடையதாகி,—கல்வி பெரு ஞானமொடு காட்டி எமை ஆள - கல்வியைப் பேரறிவோடு விளக்கி எம்மை இரட்சிக்குமாறு,—செல்வமுள வரதீர்த்தம் நீ அருள் செய்வாய்—ஆக்கமுள்ள சிரேஷ்ட தீர்த்தத்தை நீர் தந்தருளும் எ-று. ()

வேலையிடை மூழ்குதினை மேலவர் விதித்தார்
சீலமுட னேழையர் தினந்தினமு மூழ்க
வாலியவிண் மாநதியின் வாய்ந்ததொரு தீர்த்த
மூலமிடை யீறின்முதல் வாவருள்க வென்றார்.

இ-ள். மூலம் இடை ஈறு இல் முதல்வா - ஆதி மத்திய அந்தங்கள் இல்லாத கடவுளே!,—வேலையிடை மூழ்குதினம் மேலவர் விதித்தார் - (இங்குள்ள தீர்த்தமாகிய) சமுத்திரத்தில் முழுகுதற்கு (உரிய) தினங்களை மேலோர் விதித்தனர்,—(ஆதலால் என்றும் முழுகுதல் கூடாது). சீலமுடன் ஏழையர் தினந்தினமும் மூழ்க - நல்லியல்பினோடு ஏழைகள் நாடோறும் முழுகுதற்பொருட்டு,—வாலிய மா விண்ணதியின் வாய்ந்தது ஒரு தீர்த்தம் அருள்க-சுத்தமான பெரிய ஆகாசகங்கைபோலச் சிறந்த ஒரு தீர்த்தத்தைத் தந்தருள்க,—என்றார் - என்று கூறினர். எ-று. (கக)

கலைபயிலும் வேதியர்சொல் கட்டுரை வினுவி
மலைமகள ளித்தருளு மைந்தனு மகிழ்ந்தே
சிலையினிரு நூறளவு தென்றிசையின் வென்றி
யிலைகொடுநெடு வேலினை யெடுத்தினிது விட்டான்.

இ-ள்.மலைமகள் அளித்தருளுமைந்தனுங் கலைபயிலும் வேதியர் சொல் கட்டுரை வினுவி மகிழ்ந்து - பார்வதிகுமாரருங் கல்விபயின்ற அந்தணர் கூறிய உறுதிமொழியைக் கேட்டு உவந்து,—இலைகொள் நெடு வென்றிவேலினை எடுத்து - இலைவடிவுகொண்ட நீண்டவெற்றிவேலை எடுத்து,—தென்றிசையின் இருநூறு சிலை அளவின் இனிது விட்டான் - தெற்கே இருநூறு விற்கிடையளவில் (வீழ) இனிது செலுத்தினர். எ-று. (கஉ)

விட்டவயில் சேடன்முடி மீதினும ளாவித்
தொட்டவழி கங்கைவரு மாறுசெய்து தூவேன்
மட்டலர் கடம்பமணி மாலைபுனை செவ்வேள்
கட்டழகு பெற்றகரம் வந்தது களித்தே.

இ-ள். விட்ட அயில் தூ வேல் - செலுத்திய கூரிய சுத்தியான வேலாயுதம்,—சேடன் முடிமீதினும் அளாவி - (கீழ்ச்சென்று) அளாந்தன்று சிரசினும் பட்டு,—தொட்டவழி கங்கை வருமாறு செய்து - அகழ்ந்து சென்ற

வழியாற் (கீழிருந்து) கங்கை வரும்வண்ணம் பண்ணி,—களித்து மட்டலர் கடம்பம் மணிமாலை புனை செவ்வேள் கட்டழகு பெற்ற கரம் வந்தது -: மகிழ்ந்து மணம்பரந்த கடப்பமாலையையும் இரத்தினமாலையையும் அணிந்த சுவாமியினது பேரழகு கொண்ட கையின்கண் வந்தது. எ-று. (கங)

வேலொடு வேலையங் கரையின் மீமிசை
வாலிய கங்கைநீர் வரவு கண்டுளை
மூலமின் றுயர்ந்தவேள் முருகன் முந்துறச்
சீலநான் மறையினாற் சென்று மூழ்கினான்.

இ-ள். வேலையங்கரையின்மீமிசை - கடற்கரையின்கண்ணே,— வாலிய கங்கைநீர் வேலொடு வரவு கண்டுளை மூலமின்று உயர்ந்த வேள் முருகன் - சுத்தியாகிய கங்காசலம் வேலாயுதத்தோடு வந்ததனைக் கண்ட காரணமின்றி(ச் சுயம்புவாய்) உயர்ந்த வேலாயுதக் கடவுள்,—முந்துறச் சென்று சீல நான் மறையினால் மூழ்கினான்-முன்பு (அத்தீர்த்தத்துட்)போய் நல்லியல்பினையுடைய சதுர்வேத ஒலியோடு முழுகினார். எ-று. (கச)

முந்துறக் குமரவேள் மூழ்குந் தன்மையா
லந்தமுற் றொளிருமவே லளித்த பான்மையா
லிந்திரப் பெருவள மின்பத் துய்த்தலாற்
கந்தபுட் கரிணியாய்க் கவின்சி றந்ததே.

இ-ள். முந்துறக் குமரவேள் மூழ்குந் தன்மையால்-முன்னர்க் குமார சுவாமியார் முழுகியவாற்றாலும்,—அந்தம் முற்று ஒளிரும் வேல் அளித்த பான்மையால்-அழகுமுதிர்ந்து விளங்கும் வேலினால் (அக்கடவுள்) ஆக்கிய வாற்றாலும்,—கந்தபுட்கரிணியாய் - (அத்தீர்த்தம்) கந்தபுட்கரிணி எனப் பெயரியதாய்,—இந்திரப்பெருவளமின்பத்து உய்த்தலாற் கவின் சிறந்தது- (தன்கண் மூழ்குவாரை) மகேந்திரைசுவரிய சுகத்திற் சேர்த்தலான் மேன்மை சிறந்தது. எ-று. (கரு)

வருதிரி சுதந்திர மறைவல் லோர்களு
மருமறை முறையினா லதனின் மூழ்கினார்
திரிபுவ னங்களுந் தினமு மூழ்கிடப்
பெரிதிது நன்றென மகிழ்ந்து பேசினார்.

இ-ள். வருதிரி சுதந்திர மறைவல்லோர்களும் அருமறை முறையினால் அதனின் மூழ்கினார் - (அக்கடவுளின்பின்னாக) வந்த திரிசுவதந்திர வேதியரும் அரிய வேதவொலியோடு கிரமப்படி அதின் முழுகினவர்களாகி,— திரிபுவனங்களுந் தினமும் மூழ்கிட இது பெரிது நன்று என மகிழ்ந்து பேசினார் - மூவுலகினரும் என்றும் முழுக இது மிக நல்லது என்று உவந்து கூறினார். எ-று. (கசா)

தாவறு கந்தபுட் கரிணித் தண்புனன்
மூவிரு முகத்தினா னருளி முன்பத
சேவையின் மிக்குயர் திரிசு தந்திரர்க்
கேவரும் புகழ்திதி காசங் கூறுவான்.

இ-ள். மூவிருமுகத்தினான் தாவறு கந்தபுட்கரிணித் தண்புனல் அருளி - ஆறுமுகப்பிரான் குற்றமற்ற கந்தபுட்கரிணிதீர்த்தத்தை வகுத்தரு

ளியபின்,—முன் பதசேவையின் மிக்குயர்திரிசுதந்திரர்க்கு - சந்நிதியிலே திருவடி வழிபாட்டின் மிக்குயர்ந்த திரிசுவதந்திரருக்கு,—எவரும் புகழ் இதிகாசங் கூறுவான் - எவரும் புகழும் முற்கதையைச் சொல்வார். எ-று.

திரைவத ஞரம்ப தீர்த்தத் துண்மையால்
வருதினந் தினந்தொறும் வழாது நான்மறைச்
சுருதியின் மூழ்கியே தொல்லை வான்கதி
விரைவொடு மடைந்துளார் மேன்மை கேண்மினோ.

இ-ள். உண்மை ஆல்வரு தினந்தினந்தொறும் வழாது திரைவதனு ரம்பதீர்த்தத்து நான்மறைச்சுருதியின் மூழ்கி - மெய்ந்நூற்கு அமைந்து வரும் நாடோறும் தவறாது திரைகளையுடைய முகாரம்பதீர்த்தத்திலே சதுர்வேத இசையோடு முழுகி,—தொல்லை விரைவொடும் வான்கதி அடைந் துளார் மேன்மை கேண்மின் - முன்னாளில் விரைவிற் பெரும்பயன் பெற் றவரது மேம்பாட்டைக் கேளுங்கள். எ-று. (கஅ)

நனைமுறுக் கவிழ்தரு நளின வீட்டுளான்
முனைமுளை கற்பத்தின் முராரி யென்பவன்
பனகநாப் பண்டுயில் பரிந்து நீத்துவான்
றனுவொடி ராமவ தாரத் துற்றனன்.

இ-ள். நனைமுறுக்கு அவிழ்தரு நளினவீட்டுளான் முனைமுளை கற்பத் தில் - முகைமுதிர்ந்து விரிந்த தாமரைமலராசனத்த(ஞகிய பிரம)னது பழைய கற்பகாலத்தில்,—முராரியென்பவன் பனக நாப்பண் பரிந்து துயில் நீத்து - திருமால் சேடனடுவே அன்புற்று உறங்குதலை விட்டு,— வான் தனுவொடு இராமவதாரத்து உற்றனன் - பெரிய வில்லோடு இராம அவதாரத்தை அடைந்தான். எ-று. (கக)

செற்றமொ டிலங்கையிற் சேரி ராவணன்
கொற்றம தகற்றுவான் குறித்து ராகவ
னற்றமி னம்முன மாதி சேதுவைக்
குற்றமின் றுயர்தரக் கோலி னைரோ.

இ-ள். இராகவன் - (அச்)சிறீராமனானவன்,—செற்றமொடு இலங்கை யிற் சேர் இராவணன் கொற்றமது அகற்றுவான் குறித்து - சினத்தோடு இலங்கையில் இருந்த இராவணனது வெற்றியை நீக்கக் கருதி,—அறறமில் நம்முனம்-அழிவில்லாத நமது சந்நிதியிலே,—ஆதிசேதுவைக் குற்றமின்று உயர்தரக் கோலினன் - முதலாகிய அணையைக் குற்றமின்றி ஓங்கச் செய் தான். எ-று. (உ0)

காதலிற் சீதையைக் காக்க வேண்டியே
மாதவன் மூன்றவ தார மாயிவ
ணாதியிற் சேதுவை யமைத்த பான்மையான்
பூதலத் தமரராய்ப் புனித முற்றுளீர்.

இ-ள். பூதலத்தமரராய்ப் புனிதமுற்றுளீர் - பூதேவர்களாய்ச் சுத்தி பெற்றவர்களே!,—மாதவன் மூன்று அவதாரமாய் - திருமால் மூன்று (கற் பாந்தங்களில் இராம)அவதாரங்களையுடையனாய்,—காதலிற் சீதையைக் காக்கவேண்டி இவண் ஆதியிற்சேதுவை அமைத்த பான்மையான்,—(அவ்

வவதாரந்தோறும்) அன்பினையுடைய சீதையைக் காக்கவிரும்பி இங்கே முதன்மையாகிய சேதுவை அமைத்த இயல்பினை உடையரானான். எ-று.

நங்கொடு தவழ்திரை நமது சந்நிதிச்
சிந்துவிற் றினந்தினந் திளைத்து மூழ்கலா
மிந்தவான் கதையலால் யாமு றைந்தசீர்க்
கந்தமா தனம்வரு காதை சாற்றுவாம்.

இ-ள். நங்கொடு தவழ்திரை நமது சந்நிதிச் சிந்துவில் - சங்குகளோடு தவழுகின்ற அலைகளையுடைய நம்முன்னுள்ள கடலிலே,—தினந்தினந் திளைத்து மூழ்கலாம் - நாடோறும் படிந்து முழுகலாம்,—இந்த வான்கதையலால்-இப்பெருமையான கதையை(க் கூறியதே)யன்றி,—யாம் உறைந்த சீர்க் கந்தமாதனம் வருகாதை சாற்றுவாம் - யாம் வசித்த சிறீ கந்தமாதனம் வந்த கதையையுஞ் சொல்வாம். எ-று. (உஉ)

கருமுகில் படிந்துகண் டுயிலுஞ் சந்தனப்
பெருவரை மேருவாம் பிறங்க லோடுவெஞ்
செருமுயன் றுள்ளமுந் தேம்பி யாடகத்
தருவரை தானென வாக வேண்டியே.

இ-ள். கருமுகில் படிந்து கண்டுயிலும் பெருஞ் சந்தனவரை - கார மேகங்கள் தங்கி உறங்குகின்ற பெரிய கந்தமாதனமலை,—மேருவாம்பிறங்கலோடு வெஞ்செரு முயன்று உள்ளமுந் தேம்பி - மேருகிரியோடு கொடும் போர்செய்து (உடலோடு) மனமும் இளைத்து,—தான் ஆடகத்து அருவரை என ஆகவேண்டி - தான் பொன்மயமான அரிய மலை என்று ஆக விரும்பி எ-று. (உங)

மாற்றருந் தவத்தினால் வருந்தி நம்வயி
னோற்றலு நோக்கிநா நோன்மை யானுயர்
காற்றினின் முத்தலைக் கவினி ழந்துள
வாற்றலசால் பொன்வரை யாக வேண்டிநீ

இ-ள். மாற்றருந் தவத்தினால் நம்வயின் வருந்தி நோற்றலும் - ஒழிக்கலாகாத (சோக)வெப்பத்தோடு நம்மைச்சுட்டி வருந்தித் தவஞ்செய்ய,—நாம் நோக்கி - நாம் (அம்மலைமுன் வெளிப்பட்டு அதனைப்)பார்த்து,—நீ நோன்மையானுயர் காற்றினின் முத்தலைக்கவின் இழந்துள ஆற்றல்சால் பொன்வரையாக வேண்டி - நீ வலிமையினுயர்ந்த வாயுவினால் முச்சிகர வொளியை இழந்த பொறையமைந்த மேருப்போலாக விரும்பி. எ-று. ()

பண்ணிய மாதவப் பண்பு நோக்கினாந்
தண்ணளி சிறந்தபூஞ் சந்தச் சாரனீ
புண்ணியச் செயந்தியம் பதியிற் பொற்றையாய்
நண்ணுதி நவிற்றுதி நம்மை நாவினால்.

இ-ள். பண்ணிய மாதவப்பண்பு நோக்கினாம் - செய்த பெருந்தவத் தியல்பைப் பார்த்தாம்,—தண்ணளிசிறந்த பூஞ் சந்தச்சாரல் - அருள் சிறந்த சிறீ கந்தமாதனமலையே,—நீ புண்ணியச் செயந்தியம்பதியிற் பொற்றையாய் நண்ணுதி-நீ சுத்தமான செயந்திபுரத்தின் மலையாய் இருந்து,—நம்மை நாவினால் நவிற்றுதி - நம்மை வாயினால் வாழ்த்துதி. எ-று. (உ௫)

நடந்துள பிரமகற் பத்தி னாளெலாங்
கடந்துபின் வருமயன் கற்பத் தெல்லையின்
மிடைந்தபொன் மேருவாய் விளங்கு வாயெனத்
தொடர்ந்தபே ரன்பினுற் றுணிவு செப்பினோம்.

இ-ள். நடந்து உள பிரமகற்பத்தின் நாளெலாங் கடந்து - நிகழ்ந்து நிகழாநின்ற பிரமகற்பத்தின் நாட்களெல்லாங் கழிய,—பின்வரும் அயன் கற்பத்தெல்லையில் - மேல்வரும் பிரமகற்ப எல்லையில்,—மிடைந்த பொன் மேருவாய் விளங்குவாய் - நெருங்கிய பொன்களையுடைய மேருப்போலாய்ப் பிரகாசிப்பாய்,—எனத் தொடர்ந்த பேரன்பினுல் துணிவு செப்பினோம் - என்று இயைந்த பெருங்காதலோடு துணிந்துரைத்தாம். எ-று. (உசு)

ஆதலா னமது சந் நிதிய டைந்தலை
மோதுதெண் கடலிடைத் தினமு மூழ்கிநம்
பாதவா ரிசங்களும் பணிந்து நம்மையுங்
கோதிலாத் தன்னகங் கொண்டி ருந்ததால்.

இ-ள். ஆதலால் நமது சந்நிதி அடைந்து - ஆகையினுல் (அம்மலை) நம்முடைய சந்நிதானத்துச் சேர்ந்து,—அலைமோது தெண்கடலிடைத் தினமும் மூழ்கி - திரைமோதுஞ் சமுத்திரத்து நாடோறும் முழுகி,—நம்பாதவாரிசங்களும் பணிந்து - நந்திருவடிமலர்களையும் வணங்கி,—நம்மையுங் கோதிலாத் தன்னகங்கொண்டு இருந்தது - எம்மையுங் குற்றமற்ற தன்னிடத்தே தாங்கி அமர்ந்தது. எ-று. (உஎ)

தருக்கினுற் கந்தமா தனத்தண் சாரலு
மிருக்கினுற் றினந்தின மினிது மூழ்கலாற்
பெருக்குமா நிலத்துளோ ரெவரும் பெட்புறக்
குருக்குநா டொறுந்தொறுங் குளிக்க லாகுமால்.

இ-ள். தருக்கினுற் கந்தமாதனத்தண்சாரலும் - களிப்பினுற் கந்தமாதன மலையும்,—இருக்கினுல் தினந்தினம் இனிது மூழ்கலால் - வேதத்தோடு நாடோறும் நன்முக முழுகுதலினுல்,—பெருக்குமாநிலத்துளோரெவரும் - மிகப்பெரிய நிலவுலகத்துள்ளாரியாரும்,—பெட்புறக் குருகு நாடொறுந்தொறுங் குளிக்கலாகும்-விருப்பம்பொருந்தக் கடலில் நாடோறும் முழுகலாகும். எ-று. குருகு ஆகுபெயர். (உஅ)

இன்னுமோர் காதையுண் டெடுத்துக் காட்டுதுந்
துன்னுநான் மறைத்திரி சுதந்தி ரத்தர்கா
ளன்னவா கன்த்தய னகந்தை யான்மணிப்
பன்னகா பரணனைப் பழித்து வைகினுன்.

இ-ள். இன்னுமோர்காதை உண்டு எடுத்துக் காட்டுதும் - மேலுமொரு கதைஉளது; (அதனையும்) எடுத்து விளக்குவாம்,—நான்மறை துன்னுந் திரிசுதந்திரத்தர்காள் - சதுர்வேதங்கள் நிறைந்த திரிசுவதந்திரர்களே!,—அன்னவாகனத்தயன் அகந்தையான் மணிப்பன்னகாபரணனைப் பழித்து வைகினுன் - அன்னவூர்தியாகிய பிரமன் செருக்கினுற் சிவபெருமானை (முன்னொருகாலத்து) நிந்தித்திருந்தான். எ-று. (உகூ)

என்றலை யீசனு மெண்ணிக் காரிநீ
கன்றலை தூற்றிதழ்க் கமலக் கோயிலான்

றன்றலை யைந்திலோர் தலையைச் சோரிநீர்
நின்றலை யெறிதர வுகிரி னீக்குவாய்.

இ-ள். என்றலை ஈசனும் எண்ணி - இங்ஙனமாதலைச் சிவபெருமானும் நினைந்து (வைரவக்கடவுளை நோக்கி),—காரி நீ கன்றலை - வைரவனே! நீ கோபமுடையையாய்,—நூற்றிதழ்க் கமலக்கோயிலான்றன் தலையைந்தில் ஓர் தலையை - சததள கமலாசனனுடைய ஐந்தலைகளுள் ஒருதலையை,—சோரிநீர் நின்று அலை எறிதர உகிரின் நீக்குவாய் - இரத்தசலம்நின்று திரை எறிய நகத்தினால் நீக்குதி. எ-று. (ஙய)

என்றலுங் கபாலங்கை யேந்து காரியு
நன்றென வணங்கிப்பூ நளினத் தான்வயிற்
சென்றனன் செயிர்த்தனன் சிரங்க ளைந்தினி
லொன்றற விடக்கையி னுகிரி னீக்கினான்.

இ-ள். என்றலும் - என்றுகூற,—கபாலங் கையேந்து காரியும் நன்றென வணங்கி - கபாலத்தைக் கைக்கொள்ளும் வைரவக்கடவுளும் நல்லதென்று தொழுது,—பூ நளினத்தான்வயிற் சென்றனன்-கமலாசனன் பாற் போய்,—செயிர்த்தனன் சிரங்கள் ஐந்தினில் ஒன்று அற இடக்கையின் உகிரின் நீக்கினான் - கோபித்துத் தலைகள் ஐந்துள் ஒன்று இல்லையாக இடக்கை நகத்தினால் அகற்றினார். எ-று. (ஙக)

ஈர்ந்தபின் கமலத்தோ னிரங்கி வைகுண்டஞ்
சார்ந்துதன் றந்தைபொற் சரணந் தாழ்ந்துளஞ்
சோர்ந்தனன் சோர்ந்துள சுதனைத் தேற்றவுந்
தேர்ந்தனன் றனஞ்சயன் றேரின் பாகனே.

இ-ள். ஈர்ந்தபின் கமலத்தோன் இரங்கி - (அவ்வாறு) நீக்குதலும் பிரமதேவன் வருந்தி,—வைகுண்டஞ் சார்ந்து தன் தந்தை பொற்சரணந் தாழ்ந்து உளஞ் சோர்ந்தனன் - வைகுண்டத்தை அடைந்து தன் பிதாவினது திருவடிகளை வணங்கி (விண்ணப்பஞ்செய்து) மனந்தளர்ந்தான்,—தனஞ்சயன் தேரின் பாகன் - அருச்சுனருக்குத் தேர்ப்பாக(ரா)கிய விட்டுணு தேவ(ர்),—சோர்ந்துள சுதனைத் தேற்றத் தேர்ந்தனன் - தளர்ந்த மகனைத் தெளிவிக்கச் சூழ்ந்தார். எ-று. (ஙஉ)

பெண்மையி லீசனைப் பேது றச்செய்தோர்
மண்மையின் மயங்கிய மாலும் வான்முகிற்
றண்மையிற் சரவணேற் பவன்ற னாறெழுத்
துண்மையை யென்மகற் கோது வேனென.

இ-ள். பெண்மையில் ஈசனைப் பேதுறச்செய்து ஓர் மண்மையின் மயங்கிய மாலும் - (மோகினியென்னும்) பெண்வடிவத்தினால் சிவபெருமானை மயக்கச்செய்து (தாம்) ஒரு பூமியாகிய பெண்ணில் மயங்கிய விட்டுணுவும்,—வான்முகில் தண்மையிற் சரவணேற்பவன்றன் ஆறெழுத் துண்மையை என்மகற்கு ஓதுவேன் என - விண்முகில்போலுந் தண்ணிய மயிலையுடைய சரவணபவக்கடவுளினது சடக்ஷரவுண்மையை என்மகனுக்குச் சொல்லுவேன் என்றெண்ணி. எ-று. (ஙங)

ஆர்வமீ தூர்ந்திட வம்புயக் கணே
சார்வுறு தனயனைத் தழுவித் தாங்கிநீ

யோர்வுற வாறெழுத் துண்மை யோதுவாஞ்
சோர்வறக் கேளெனச் சொல்லன் மேயினன்.

**இ-ள்.** அம்புயக்கணே சார்வுறுதனயனை ஆர்வம் மீதூர்ந்திடத் தழுவித் தாங்கி - கமலாசனனுடைய மகனை அன்பு மேற்கொள்ளத் தழுவி அணைத்து,—நீ ஓர்வுற ஆறெழுத்துண்மை ஓதுவாம் - நீ அறியச் சடக்ஷரங்களினுண்மையைச் சொல்லுவாம்,—சோர்வறக் கேள் எனச் சொல்லன்மேயினன் - தளர்வின்றிக் கேள் என்று சொல்லத்தொடங்கினர். எ-று. (௬௪)

ஒருதலை போயுள தூனது சென்னிமேல்
வருதலை வேண்டினை யாயின் மாமுதற்
பொருதலை வாரியிற் புலவு காட்டிய
விருதலை யொருசெவ்வே லிறைவன் மந்திரம்.

**இ-ள்.** ஒருதலை போயுளது உனது சென்னி மேல் வருதலை வேண்டினையாயின் - உறுதியாக நீங்கிய உனது தலை இனி வருதலை விரும்பினையானால்,—மாமுதற் பொருது அலைவாரியிற் புலவு காட்டிய இருதலை ஒரு செவ்வேல் இறைவன் மந்திரம் - மாமரமாகிய சூரபன்மனைப் பொருது கடலிற் புலவைக் காட்டிய வேலாயுதத்தையுடைய கடவுளினது மந்திரத்தை. எ-று. (௬௫)

குருமுறை யாகயாங் கூறு வாமது
மருவுமா ணுக்கரின் மரபிற் கேட்டுநீ
யுருவகத் தேற்றென வுளங்கொண் டோதினன்
கருமுகிற் படிவமார் கமலக் கண்ணனே.

**இ-ள்.** யாங் குருமுறையாகக் கூறுவாம் - நாம் ஆசிரியக்கிரமமாக உபதேசிப்பாம்,—நீ அது மருவும் மாணுக்கரின் மரபிற்கேட்டு உருவகத் தேற்று-நீ அதனை ஏற்ற சிடக்கிரமமாகக்கேட்டுப் பலதரந்தியானிக்கக்கடவாய்,—எனக் கருமுகிற் படிவமார் கமலக்கண்ணன் உளங்கொண்டு ஓதினன் - என்று கரிய சலசலோசனர் (அம்மந்திரத்தை) உளங்கொளப் போதித்தார். எ-று. (௬௬)

அந்தவா றெழுத்தையு மம்பு யாசனன்
சிந்தையார் வத்துடன் றியானித் தான்றவ
முந்துநாங் கண்டுநான் முகத்த நீயுள
நொந்துமா தவஞ்செய்து நோற்ப தேதென.

**இ-ள்.** அந்த ஆறெழுத்தையும் அம்புயாசனன் சிந்தையார்வத்துடன் தியானித்தான்-அந்தச் சடக்ஷரங்களையும் பிரமதேவன் மனவிருப்பத்தோடு தியானித்தான்,—தவங் கண்டு முந்து நாம் - (அங்ஙனந் தியானித்தலோடு அவன் செய்த) தவத்தைக் கண்டு (அவனுக்கு) முற்பட்ட நாம்,—நான்முகத்த நீ உளம் நொந்து மாதவஞ்செய்து நோற்பது ஏது என - நான்முகனே நீ மனம்வருந்திப் பெருந்தவஞ்செய்து (அருந்துயர்) பொறுப்பது என்னையென்று வினவ. எ-று. (௬௭)

உரைத்தவா சகந்தனை யுணர்ந்து வேதனுஞ்
சிரத்திலைந் தொன்றியான் சேதிப் பாகலின்
வருத்தமுற் றேயுனை நோற்ற வாறெனக்
கருத்தழிந் தனனெனக் கழறிப் பின்னரும்.

இ-ள். வேதனும் உரைத்த வாசகந்தனை உணர்ந்து-பிரமனும் (யான்) கூறிய வசனத்தை அறிந்து,—ஐந்து சிரத்தில் ஒன்று சேதிப்பாகலின் – (என்)ஐந்துதலைகளுள் ஒன்று அறுபட்டமையின்,—யான் 'வருத்தமுற்று உனை நோற்றவாறு என கருத்து அழிந்தனன் - யான் வருந்தி உம்மை(ச் சுட்டி)த் தவஞ்செய்தவாற்றால் என்கருத்துக் கெட்டேன்,—எனக் கழறிப் பின்னரும் - என்று சொல்லிப் பின்னரும். எ-று. (கூஅ)

விழுந்தடி வணங்கினன் விழியி னீர்மழை
பொழிந்தன னகந்தையாம் பொருமல் போக்கிநெஞ்
சழிந்தன னளவிலா வன்பினெற் றொழு
தெழுந்தனன் றுதியினு லின்ன சாற்றுவான்.

இ-ள். விழுந்து அடி வணங்கினன் விழியினீர்மழை பொழிந்தனன் - விழுந்து பாதங்களை வணங்கிக் கண்ணீர்மழைசொரிந்தவனாய்,—அகந்தை ஆம் பொருமல் போக்கி நெஞ்சழிந்தனன் - (முன்பு கொண்ட) அகந்தையி னால் உண்டாயிருந்த துன்பத்தை நீக்கி மனநிலையழிந்து,—அளவிலா அன் பின் என் தொழுது - கரைகடந்த பத்தியோடு என்னை வணங்கி,—எழுந் தனன் இன் ஆல் இன்னதுதி சாற்றுவான் - எழுந்து இனிமை அமைந்த இத்துதிகளைச் சொல்லலுற்றான். எ-று. (கூகூ)

வேறு.

கயிலையி லீசன் போற்றுங் கடவுளே கடவுட் டெய்வ
மயிலுடன் குறமான் றோயு மாமறைக் கடலே மேருப்
புயம்விழி யீரா றான புங்கவா மதமா றுக்கு
நயனுறு முகமா றான நாதனே போற்றி போற்றி.

இ-ள். கயிலையிலீசன் போற்றுங் கடவுளே - கயிலாசநாயகரால் அரு ளப்பட்ட சுவாமீ!,—கடவுள் தெய்வமயிலுடன் குறமான் தோயும் மா மறைக்கடலே - திவ்வியமான தெய்வயானையம்மையாரையும் வள்ளியம் மையாரையுங் கலந்த பெரிய வேதசாகரமே!,—மேருப் புயம் விழி ஈரா றான புங்கவா - மேருமலைபோலும் புயங்களுங் கண்களும் பன்னிரண்டா கக்கொண்ட கடவுளே!,—மதமாறுக்கும் நயனுறு முகம் ஆறான நாதனே போற்றி போற்றி - சமயங்களாறுக்கும் நன்மைபொருந்திய முகங்கள் ஆறா கக்கொண்ட தேவரே காக்க காக்க. எ-று. (சo)

கனகமா முடியிற் றாங்குங் கவின்பெறு மணியா லன்பர்
மனவிரு ளகற்றும் பானு வடிவமே கவுரி யீச
னினியபேர் வாஞ்சை யாகு மினமணி யிருக்கச் சேர்த்த
வினையிறா ரகம தாக விளங்குபே டகமே போற்றி.

இ-ள். மா கனகமுடியில் தாங்குங் கவின்பெறு மணியால் - பெரிய பொன்மகுடத்துப் புனைந்த ஒளியார்ந்த இரத்தினங்களால்,—அன்பர் மன விருள் அகற்றும் பானுவடிவமே - தொண்டரது அகவிருளைக் கடியுஞ் சூரியரூபமே!,—கவுரியீசன் இனிய பேர்வாஞ்சையாகும் இனமணி இருக் கச் சேர்த்த - உமாமகேசுரரது இனிய பெருங்காதலென்னுஞ் சாதியிரத் தினம் இருக்கும்பொருட்டு அமைத்த,—வினையில் தாரகமதாக விளங்கு பேடகமே போற்றி - இருவினைகளுமில்லாதொழிதற்குக் காரணமான பிர ணவவடிவாக விளங்கும் பெட்டியே! காக்க. எ-று. (சக)

திருவரு ளனுவாற் றேவர் மூவரிற் சிறப்பு வாய்ப்ப
வருளுதல் காத்தன் மீட்டு மழித்திடல் புரிவாய் போற்றி
மருளும்வேள் கணைக ணீக்கு மாதவ ரிதயப் போதிற்
பருதிபோல் விளங்கு ஞானப் பன்னிரு புயத்தாய் போற்றி.

இ-ள். திருவருள் அனுவால் தேவர்மூவரில் - திருக்கருணையின் மிகு சிறுபாகத்தினுற்றுனே (நான்முதலிய) தேவர்மூவரைக்கொண்டு,—அருளுதல் காத்தல் மீட்டுமழித்திடல் சிறப்புவாய்ப்பப் புரிவாய் போற்றி-சிருட்டி திதி சங்காரங்களைச் செவ்வியமையைச் செய்வீர் காக்க,—மருளும் வேள் கணைகள் நீக்கும் மாதவர் இதயப்போதில்-மயக்கும் காமபாணங்களை ஒழிக்கும் முனிவருடைய இருதயகமலத்தில்,—பருதிபோல் விளங்கும் ஞானப் பன்னிருபுயத்தாய் போற்றி - சூரியன்போல விளங்கும் அறிவுருவான பன்னிருபுயக்கடவுளே காக்க. எ-று. (சஉ)

தரைபுனல் செந்தீ காற்றுத் தாவறு வெளிய தான
வுரைதரு பூத மைந்தோ டுயர்மகத் துவமாங் காரம்
விரவுதத் துவப்பூந் தோட்டான் மேயதோ ரண்டமொன்று
பரவுநான் படைக்கு மண்டம் பான்மையா மீது போலாம்.

அளவிலா வண்ட மெல்லா மையனீ பீட மாக
வளனுற விருக்கு நின்சீர் மறைகளு முடிவு தேரு [குங்
வெளியனேற் குரைக்கற் பாற்றோ யாவர்க்குங் குருவா ளோர்க்
களிமகிழ் சிறக்க வோதுங் கருணையாங் குருவே போற்றி.

இ-ள். தரை புனல் செந்தீ காற்றுத் தாவறு வெளி ஆன உரைதரு பூதமைந்தோடு - பிருதிவி அப்புத் தேயு வாயுக் கேடில்லாத ஆகாயம் என்னுஞ் சொல்லப்பட்ட பூதங்களைந்தோடு,—உயர் மகத்துவம் ஆங்காரம் விரவு தத்துவப் பூந்தோட்டால் மேயது நான் படைக்குமண்டம் - உயர்ந்த மான் அகங்காரம் (முதலாகப்) பொருந்திய தத்துவங்களாகிய பொலிந்த இதழ்களினால் அமைந்தது நான் சிருட்டிக்கும் (இந்த) அண்டம் (என்னும் மலர்),—ஈதுபோலாம் பான்மை ஓரொன்றண்டம் பரவும் அளவிலா வண்டமெல்லாம் - இதுபோலும் இயல்பினையுடைய ஒவ்வோரண்டமாய்ப் பரந்த அளவிறந்தவண்டங்களெல்லாம்,—ஐயன் ஈ பீடமாக வளனுற இருக்கும் நின்சீர் - சிவபெருமான் ஈந்த (மலர்ப்)பீடங்களாக (அவற்றின்) மாட்சிமைபொருந்த வீற்றிருக்கும் உமது சீர்த்தியை,—மறைகள் முடிவுந் தேரு - வேதாந்தங்களுந் தெளியா,—எளியனேற்கு உரைக்கற்பாற்றோ - (ஆனபின் அச்சீர்த்தி) எளியேனாற் கூறற்பாலதா,—யாவர்க்குங் குருவானோர்க்குங் களிமகிழ்சிறப்ப ஓதுங் கருணையாங் குருவே போற்றி - எவர்க்குந் தேசிகராயினோர்க்கும் மிக்க பரீதிபெருகப் போதிக்கும் அருள்வடிவான தேசிகரே காக்க. எ-று (சங-சச)

சொல்லுமுன் றியான மாகுஞ் சூரண வசியத் தாற்பூ
மெல்லியல் வாணி நான்கு வேதவா கமங்கள் வல்லா
ளெல்லையின் ஞான முன்று ளிறைஞ்சுவோர்க் கெய்துங் கல்லாப்
புல்லறி வுடையே னெங்ஙன் றேர்குவன் பொறுத்தாள் போற்றி.

இ-ள். சொல்லும் உன் தியானமாகுஞ் சூரணவசியத்தால் - சொல்லப் படுகின்ற உம்மைத் தியானித்தலேயாகிய வசியசூரணத்தினால்,—பூமெல் லியல் வாணி நான்குவேத ஆகமங்கள் வல்லாள் - வெண்மலர்மகளாகிய சரசுவதி சதுர்வேதங்களிலும் ஆகமங்களிலும் வல்லளாயினள்,—உன்றாள் இறைஞ்சுவோர்க்கு எல்லையில் ஞானம் எய்தும் - நும்மடிகளை வணங்குவா ர்க்கு அளவிறந்த ஞானம் ஆகும்,—கல்லாப் புல்லறிவுடையேன் எங்ஙன் தேர்குவன் - படியாத சிற்றறிவினேன் எங்ஙனம் அறிவேன்,—பொறுத் தாள் போற்றி - (என்குற்றங்களைப்) பொறுத்தாட்கொள்க காக்க. எ-று.

தலைமைசே ருலக மூன்றுந் தருதற்கோர் கமலை போலாங்
கலையெலா முதவ வெள்ளைக் கமலையாங் களிக்கு ஞான
நிலைமைசார் வதற்கு வாய்மை நிறைதரு குருவாந் யான
மலைவற வருளு நின்றாள் வாரிசம் போற்றி போற்றி.

இ-ள். நின் தாள் வாரிசம் - உம்முடைய பாதாரவிந்தங்களே,—சேர் உலக மூன்றுந் தலைமை தருதற்கு ஓர் கமலை போலாம் - வழிபடும் மூவுல கினர்க்கும் ஐசுவரியத்தை அருளுதற்கு ஒரு பூமகள் போலாகும்,—கலை யெலாம் உதவ வெள்ளைக்கமலையாம் - கல்விகளையெல்லாம் அருள நாமகள் போலாகும்,—ஞானநிலைமை சார்வதற்கு வாய்மை நிறைதரு குருவாம் - சிவஞானவுறுதியை அருளுதற்கு மெய்ம்மை நிறைந்த தேசிகராகும்,— த்யானம் மலைவற அருளும் - (மற்றுஞ்)சிந்தித்தவற்றை மாறுபாடற அருள் செய்யும்,—போற்றி போற்றி - தோத்திரம் தோத்திரம். எ-று. (சசு)

தத்துவத் தரங்க மோதித் தணப்பிலா மோக மாய
வித்தெனு மிடங்க ரோடு வெண்மதி யாசை கண்டு
கத்துமிச் சனன வேலை கடப்பத்தா ளுவாய் நல்கு
முத்தனே கருணை மாறா மூவிரு முகத்தாய் போற்றி.

இ-ள். தத்துவத் தரங்கம் மோதி - தத்துவங்களாகிய திரைகளை மோதி,—தணப்பிலா மோக மாய வித்து எனும் இடங்கரோடு - பிரிவற்ற ஆணவம் மாயை கன்மம் என்னும் முதலைகளோடு,—வெண்மதி ஆசை கண்டு கத்தும் - காமனுகிய திங்களை ஆசையோடு பார்த்து இரைகின்ற,— இச் சனன வேலைகடப்ப - இப்பிறவிக்கடலைக் கடக்குமாறு,—தாள் நாவாய் நல்கும் முத்தனே - திருவடியாகிய புணையை அருளும் மலரகிதரே,— கருணை மாறா மூவிரு முகத்தாய் போற்றி - அருளகலாத ஆறுமுகபிரானே காக்க. எ-று. (சஎ)

வீரவா சனத்துச் சீய மெல்லணை பொருந்தி வாமச்
சீருறுங் கரத்தை வாமத் திருமுழந் தாளிற் சேர்த்திச்
சாருறும் வலக்கை ஞான முத்திரை தரித்து வானி
லூருவா மதிய மேய்ப்ப வொளிதிகழ் வடிவ மாகி.

இ-ள். சீயமெல்லணை வீரவாசனத்துப் பொருந்தி - சிங்காசனத்தின் மேலே வீராசனம் என்னும் இருக்கையின் அமர்ந்து,—வாமச் சீருறுங்கரத் தை வாமத்திருமுழந்தாளிற் சேர்த்தி - இடத்திருக்கையை இடத்திருமுழந் தாளில் வைத்து,—சாருறும் வலக்கை ஞானமுத்திரை தரித்து - வலக்கை யிற் சின்முத்திரையைக்கொண்டு,—வானிலூர் உவாமதியம் ஏய்ப்ப ஒளி

திகழ் வடிவமாகி - விண்ணிற்றவழ்கின்ற பூரணசந்திரன்போல ஒளிவிளங்குந் திருவுருவங்கொண்டு. எ-று.

வீராசனமாவது இடக்காலை வலத்தொடையினும் வலக்காலை இடத்தொடையினும் ஏற்றியிருப்பது. (௪௮)

மாலய னுணரா ஞான வானவற் குபதே சிக்குங்
கோலமு நினைந்து நெஞ்சிற் குறித்தமே லவரை யெல்லாஞ்
சீலநான் மறையுந் தேடுஞ் சிவகுரு வாக்கு ஞான
மூலமே யெங்க ளாறு முகத்தனே போற்றி போற்றி.

இ-ள். மாலயன் உணரா ஞானவானவற்கு உபதேசிக்குங் கோலமும் நினைந்து நெஞ்சிற் குறித்த மேலவரையெல்லாம் - பிரமவிட்டுணுக்களும் அறியாத சித்துருவான சிவபெருமானுக்கு உபதேசித்த திருக்கோலத்தையுந் தியானித்து மனத்தால் வழிபட்ட சத்துக்களையெல்லாம்,—நான்மறையுந் தேடுஞ் சீலச் சிவகுருவாக்கும் ஞானமூலமே - சதுர்வேதங்களுந் தேடுஞ் சிறப்பினையுடைய சிவாசாரியராகச் செய்யும் ஞானகாரணமே,—எங்கள் ஆறுமுகத்தனே போற்றி போற்றி - எங்கள் ஆறுமுகசுவாமீ காக்க காக்க. எ-று. (௪௯)

உன்னரு ளமுத வாரி குளித்துளோர் பிரம லோகந்
தன்னுள சீரு மாவி போகுறு சரீரத் தூடு
துன்னலங் காரம் போல நோக்கவுந் துணிவு தேற்று
முன்னவா கருணை யாறு முகத்தனே போற்றி போற்றி.

இ-ள். உன்னருள் அமுதவாரி குளித்துளோர் - நுங்கருணையாகிய அமுதக்கடலிற்படிந்தவர்கள்,—பிரமலோகந்தன்னுள சீரும்-(என்) சத்தியலோகத்தில் வாழுஞ் சிறப்பினையும்,—ஆவி போகுறு சரீரத்தூடு துன்னு அலங்காரம் போல நோக்கத் துணிவுந் தேற்றும் முன்னவா - உயிர்நீங்கிய பிணத்திற் பொருந்திய (ஆடையணிச்)சிறப்பைப்போல (வெறுத்துப்)பார்க்கத் துணிதலையும் ஆக்குகின்ற பழையவரே,—கருணை ஆறுமுகத்தனே போற்றி போற்றி - அருளினையுடைய ஆறுமுகக்கடவுளே காக்க காக்க. எ-று. (௫0)

தேறலாங் கனிமு னிந்து விடமுண்டார் செய்கை போல
வேறுமோ ரியவு ளெண்ணி மெலிவுறா தடியார்க் கெல்லா
மாறுமா முகத்தி யானத் தமிர்தத்தாற் குளிர்ச்சி காட்டு
மீறிலா முதலே வேற்கை யிறைவனே போற்றி போற்றி.

இ-ள். தேறலாங் கனி முனிந்து விடமுண்டார் செய்கைபோல - தேன்பொருந்திய பழத்தை வெறுத்து நஞ்சையுண்டவரதுசெயல்போல,—வேறுமோரியவுள் எண்ணி மெலிவுறாத - மற்றொரு தலைவரை நினைந்து வருந்தா(து உம்மையேநினைந்)த,—அடியார்க்கெல்லாம் ஆறுமாமுகத் தியானத்து அமிர்தத்தாற் குளிர்ச்சி காட்டும் - தொண்டர்க்கெல்லாம் ஆறு திருமுகங்களைத் தியானித்தற்கண் (ஆனந்த) அமிர்தத்தினாற் குளிர்மையைக் காட்டும்,—ஈறிலா முதலே - அழிவற்ற முதல்வரே,—வேற்கையிறைவனே போற்றி போற்றி - வேலாயுதக்கடவுளே காக்க காக்க. எ-று. (௫௧)

வள்ளியங் கொடிக்கு வாய்த்த வான்றருக் கொம்பே போற்றி
தள்ளருங் கருணை காட்டுஞ் சண்முகத் தெந்தாய் போற்றி

வெள்ளியங் கிரியின் ஞான மேருவின் மணியே போற்றி
யுள்ளநெக் குருகு மென்பா லுதவுவாய் போற்றி யென்றான்.

இ-ள். வள்ளியங்கொடிக்கு வாய்த்த வான்றருக் கொம்பே போற்றி - வள்ளியம்மையாரென்னுங் கொடிபடர்தற்கு இயைந்த சுரதருசாகையே காக்க,—தள்ளருங் கருணைகாட்டுஞ் சண்முகத்தெந்தாய் போற்றி - நீக்கல் கூடாத அருளைக்காட்டும் ஆறுமுகசுவாமியே காக்க,—வெள்ளியங்கிரியின் ஞானமேருவின் மணியே போற்றி - கயிலைமலையில்வீற்றிருக்கும் அறிவான் மேருமலையைவிகர்த்த இரத்தினமே காக்க,—உள்ளம் நெக்குருகும் என்பால் உதவுவாய் போற்றி என்றான் - மனங் கசிந்துருகும் என்மாட்டு அருளுக, காக்க என்று துதித்தான். எ-று. (ருஉ)

தோட்டலர் கமல வீட்டுச் சுருதியா னுரைத்த வேதப்
பாட்டுரைத் திடுவோ ருக்கும பகர்ந்துளார் பக்க மாகக்
கேட்டுளார் தமக்கு மேலாங் கேடிலா வாழ்க்கை நல்கித்
தாட்டுணைக் கமல வீடு கொடுப்பது சரத மன்றே.

இ-ள். கமலத்தோட்டலர்வீட்டுச் சுருதியான் உரைத்த வேதப் பாட்டு உரைத்திடுவோருக்கும் - கமலாசனனாகிய பிரமன் கூறிய சுருதிப்பொருளைப் பொதிந்த (தோத்திரப்)பாட்டுக்களைச்சொல்வார்க்கும்,—பகர்ந்துளார் பக்கமாகக் கேட்டுளார் தமக்கும் - சொன்னவரிடத்துக் கேட்டவர்க்கும்,—மேலாங் கேடிலா வாழ்க்கை நல்கி - மேலான அழிவற்ற நல்வாழ்வை (இம்மையிற்) கொடுத்து,—தாட்டுணைக்கமலவீடு கொடுப்பது சரதம் - உபயபாதாரவிந்தங்களின் கதியை (நாம்) உதவுவது உண்மை. எ-று. (ருங)

பிரமனை நோக்கி நெஞ்சம் பேதுறேல் கருத்தில் வேட்ட
வரமுனர்ப் பகர்தி யாமும் வழங்குது மென்ன முன்னம்
புரமெரித் தானை யெள்ளல் புரிந்தன னதனா லைந்தாஞ்
சிரசிலொன் றிழந்தேன் மீளத் திருவரு ளிரங்க வென்றான்.

இ-ள். பிரமனை நோக்கி - (நாம் அப்போது) பிரமனைப் பார்த்து,—நெஞ்சம் பேதுறேல் முனர்க் கருத்தில் வேட்ட வரம் பகர்தி யாம் வழங்குதும் என்ன-மனம்வருந்தாதே. முன்னரே மனத்தில் விரும்பிய வரத்தைக் கூறு; யாந் தருவேம் என்று சொல்ல,—முன்னம் புரமெரித்தானை எள்ளல்புரிந்தனன் அதனால் ஐந்தாஞ் சிரசில் ஒன்று இழந்தேன் மீளத் திருவருள் இரங்க என்றான்-(அதுகேட்டபிரமன்) முன்னாட் புராரியை இகழ்ந்தேன்; அதனால் ஐந்தலைகளுள் ஒன்றை இழந்தேன்; (அது) மீண்டெய்துமாறு திருவருள்செய்தற்கு இரங்குக என்றுசொன்னான். எ-று. (ருச)

முனிவர்கா ளாமப் போது முராரிகா தலன்முன் னோற்ற
னனிமகிழ்ந் தெய்து கால நாடியோங் காரந் தன்னாற்
கனியுமைந் தெழுத்தி னுண்மை கழறியோ ரறிவுங் காமர்ப்
பனிமலர்க் கமலத் தான்முன் பகர்ந்தவா பகர்வன் கேண்மின்.

இ-ள். முனிவர்காள் நாம் அப்போது முராரிகாதலன் முன் நோற்றல் நனிமகிழ்ந்து - முனிவர்களே! நாம் அப்பொழுது பிரமனது கருத்துக்குந் தவத்துக்கும் மிகவுவந்து,—எய்து காலம் நாடி - (சிரசு) சேருஞ்சமயத்தை ஆராய்ந்து,—ஓங்காரந் தன்னாற் கனியும் ஐந்தெழுத்தின் உண்மை ஓரறி

வுங் கழறி - பிரணவத்தோடு முதிர்ந்த பஞ்சாட்சரத்தின் உண்மையான ஒப்பற்ற ஞானத்தையும் போதித்து,—காமர்ப் பனிமலர்க்கமலத்தான் முன் பகர்ந்தவா பகர்வன் கேண்மின் - அழகிய (அப்)பிரமனுக்கு முன்னே கூறியவாற்றினைக் கூறுவேன் கேளுங்கள். எ-று. (ருரு)

வாமமார் களிற்றின் மாது வயாவுற நோற்றற் காகக்
காமர்சூ ழிலிங்கத் தன்மை காட்டிய வகில நாத
ஞமமா யிரமு நாவி னவிற்றியைந் தெழுத்தின் மூல
மோமென வழுத்திக் கங்கு லும்பகற் காலு மேத்தி.

இ-ள். வாமமார் களிற்றின் மாது வயாவுற நோற்றற்காக - அழகு பொருந்திய தெய்வயானை விருப்புறத் தவஞ்செய்ததற்காக,—காமர்சூழ் இலிங்கத்தன்மை காட்டிய - அழகுசூழ்ந்த இலிங்காகாரத்தைக் காட்டியருளிய,—அகிலநாதன் நாமமாயிரமும் நாவின் நவிற்றி - சகந்நாதருடைய ஆயிரம்பேர்களையும் நாவினால் உச்சரித்து,—ஐந்தெழுத்தின்மூலம் ஓமென அழுத்தி - பஞ்சாக்ஷரமாகிய மூலமந்திரத்தைப் பிரணவ முன்னாக (மனத்தில்)அழுத்திக்கொண்டு,—கங்குலும் பகற்காலும் ஏத்தி - இரவிலும் பகலிலும் துதித்து. எ-று. (ருசு)

இடைவிடா தொழுகு நீரா லினியவைந் தெழுத்திற் பூசை
யடைவினு லியற்று வாயென் றறைந்தன மவனுஞ் சூலப்
படையினுன் பாத நாலா யிரயுகம் பணிந்தான் முன்னந்
தடைபடா திலிங்கத் தூடு தோன்றினன் றழற்கட் பெம்மான்.

இ-ள். ஒழுகும் நீரால் - (நியமத்தின்வழாது) ஒழுகும் இயல்போடு,—இனிய ஐந்தெழுத்தின் பூசை இடைவிடாது அடைவினால் இயற்றுவாய் - இனியபஞ்சாக்ஷரசெபத்தையும்பூசையையும் இடையிலொழியாது முறைப்படி செய்குதி,—என்று அறைந்தனம் - என்றுகூறினோம்,—அவனுஞ் சூலப்படையினான் பாதம் நாலாயிரயுகம் பணிந்தான் - அப்பிரமனுஞ்சிவபெருமானுடையதிருவடிகளை நாலாயிரம்யுகங்களில் வழிபட்டான்,—தழற்கட்பெம்மான் தடைபடாது முன்னம் இலிங்கத்தூடு தோன்றினன் - எம்பெருமான் (அதன்பின்) தடையின்றி (அவன்)முன்னே இலிங்கத்து வெளிப்பட்டனர். எ-று. (ருஎ)

தோன்றிய முக்கட் சோதி தொழுங்கம லத்தோ யாதுக்
கான்றமா தவத்தான் மேனிக் கயர்வுகொண் டிருந்த தெம்மு
னென்றுரை பகர்தி யாமுந் தருகுவ மென்ன வேதன்
கான்றநீர் கண்கள் சோர வுரைப்பது கருத்துட் கொண்டான்.

இ-ள். தோன்றிய முக்கட்சோதி - வெளிப்பட்ட எம்பெருமான்,—தொழுங் கமலத்தோய் ஆன்ற மாதவத்தான் மேனிக்கயர்வு கொண்டிருந்தது யாதுக்கு - வணங்குகின்ற பிரமனே அமைந்த பெருந்தவத்தால் உடற்றளர்ச்சியைப்பொருந்தியிருந்தது எதற்கு,—எம்முன் என்ற உரை பகர்தி- எமக்குமுன்னே (உன்னுள்ளத்துப்) பொருந்திய வாக்கைச் சொல்லு,—யாமுந் தருகுவம் என்ன - யாமும்அருள்வேம் என்று கூற,—வேதன் கண்கள் நீர் கான்ற சோர உரைப்பது கருத்துட்கொண்டான் - பிரமன் (தன்) கண்கள் நீரைக் கான்றனவாய்த் தளரச் சொல்லுவதனை உள்ளெண்ணினான். எ-று. (ருஅ)

கருத்தினின் மகிழ்ச்சி கூர்ந்து கரதல முச்சி கூப்பி
யருத்தியிற் கண்ணீ ராகு மானந்த வாரி மூழ்கித்
திருத்துநாக் குழற நின்று தெண்ணிலா வேணி யானைப்
பொருத்துபே ரன்பின் வேதன் றொழுதனன் புகழ்வ தானான்.

இ-ள். வேதன் கருத்தினின் மகிழ்ச்சிகூர்ந்து - பிரமன் மனத்து உவகைமிக்கு,—அருத்தியிற் கரதலம் உச்சி கூப்பி - ஆசையோடு கைகளை உச்சிமேற் குவித்து,—ஆனந்தக்கண்ணீராகும் வாரிமூழ்கி - ஆனந்த பாஷ்பமென்னும் நீரிற் படிந்து,—தெண்ணிலாவேணியானைப் பொருத்து பேரன்பின் தொழுதனன் - சந்திரசேகரக்கடவுளைப் பொருந்திய பெருங் காதலோடு நமஸ்கரித்து,—நின்று திருத்து நாக்குழறப் புகழ்வதானான் - (எழுந்து) நின்றுகொண்டு திருந்திய நாக்குத் தடுமாறத் துதிப்பானாயினான். எ-று. (ருக)

வேறு.

உவமை யின்றெழு முமையின் பாகமா
யவிரு ஞானவா னந்த வாரியாய்ச்
சிவணும் வாஞ்சையிற் சிறப்ப நல்கிடு
நவையி லாச்சகந் நாத போற்றியே.

இ-ள். உவமையின்று எழும் உமையின் பாகமாய் - ஒப்பின்றி உயர்ந்த அம்மைபங்கராய்,—அவிரும் ஞான ஆநந்த வாரியாய் - விளங்குகின்ற அறிவாலும் இன்பத்தாலுஞ் சமுத்திரமாய்,—சிவணும் வாஞ்சையிற் சிறப்ப நல்கிடும் - (அடியார்க்குப்) பொருந்திய விருப்பத்தினும் விசேடமாக உதவுகின்ற,—நவையிலாச் சகந்நாத போற்றி - மலரகிதரான சகந்நாதரே காக்க. எ-று. (சுo)

துதிவெண் பூதியும் புலியின் றோலுமாய்
கதிரின் மேனியிற் கவினப் போர்த்துளாய்
மதியும் பாம்பொடு வான்ச டைக்கணே
நதியுஞ் சூழ்சகந் நாத போற்றியே.

இ-ள். ஆய் கதிரின் மேனியில் - ஆராயப்படுங் கிரணங்களையுடைய திருமேனியிலே,—துதி வெண் பூதி கவினப் புலியின்றோல் போர்த்துளாய் - புகழப்படும் வெண்ணீறு (பூசப்பட்டு) விளங்கப் புலித்தோலை உடுத்தவரே,—வான் சடைக் கண் மதியும் பாம்பொடு நதியுஞ் சூழ் சகந்நாத போற்றி - பெருமையாகிய சடையின்கண்ணே பிறையும் அரவுங் கங்கையுஞ் சூழ்ந்த சகந்நாதக்கடவுளே காக்க. எ-று. (சுக)

ஆல காலத்தா லரிய கண்டத்தோர்
கோல மாக்கிய கொள்கை யாய்புரத்
தேல வேநகைத் தெரிவைத் தாய்மறை
நாலுஞ் சொற்சகந் நாத போற்றியே.

இ-ள். ஆலகாலத்தால் அரியகண்டத்து ஓர் கோலம் ஆக்கியகொள்கையாய் - விஷத்தினாலே திருக்கண்டத்தில் ஒருருவத்தை அமைத்தருளிய படியினீர்,—நகைத்துப் புரத்து எரி ஏலவைத்தாய் - சிரித்துப் புரங்களில் அக்கினியைப் பொருந்த வைத்தீர்,—மறைநாலுஞ் சொற் சகந்நாத போற்றி - வேதநான்கையுந் திருவாய்மலர்ந்த சகந்நாத சுவாமீ காக்க. எ-று. (சுஉ)

காமன் மேனியைக் கனற்றும் பார்வையாய்
தூம வார்குழற் றோகை பாதியாஞ்
சாம கானனே தகைய வாயிர
நாம னேசகந் நாத போற்றியே.

இ-ள். காமன் மேனியைக் கனற்றும் பார்வையாய் - மன்மதனுடலை எரித்த திருக்கண்ணுடையீர்,—தூம வார் குழல் தோகை பாதியாஞ் சாம கானனே - புகையுண்ட நெடிய அளகத்தையுடைய அம்மையாரைப் பாகத்துடைய சாமவேதகீதரே,— தகைய ஆயிரநாமனே - தக்க ஆயிரம் பெயரினரே,—சகந்நாத போற்றி - சகந்நாதரே காக்க. எ-று. (கூங)

எண்ணுந் தாருவும் மினிய தேனுவும்
பண்ண மைந்தமா மணியும் பண்பினு
னுண்ணி னைந்துளார்க் குதவி ஞானத்தி
னண்ணு வாய்சகந் நாத போற்றியே.

இ-ள். ஞானத்தின் பண்பின் ஆல் உள் நினைந்துளார்க்கு - அறிவினாலுங் குணத்தினாலும் நிறைந்த மனத்து நினைத்த(அடிய)வருக்கு,—எண்ணுந் தாருவும் இனியதேனுவும் பண்ணமைந்த மாமணியும் உதவி - (அவர்) கருதுஞ் சுரதருவையும் இனிய சுரபியையுந் திருவமைந்த சிந்தாமணியையும் அருளி,—நண்ணுவாய் - (மேலும் வேண்டியன அருளுமாறு அவர் மனத்துப்பிரியாது)வசிப்பீர்,—சகந்நாத போற்றி - சகந்நாதரே காக்க. எ-று. (கூச)

உன்னை யெள்ளியே யுரைத்த தன்மையாற்
சென்னி யொன்றுபோய்த் தேம்பி னேனது
மன்னி யுய்ந்திடற் காக வந்தனை
பண்ணி னேனெனப் பகர்ந்திட் டானரோ.

இ-ள். உன்னை எள்ளியுரைத்ததன்மையாற் சென்னியொன்று போய்த் தேம்பினேன்-உம்மை இகழ்ந்து கூறியவாற்றானே சிரசொன்று போக வாடினேன்,—அது மன்னி உய்ந்திடற்காக வந்தனை பண்ணினேன் - அதனை அடைந்து உய்தற்காக வழிபாடு செய்தேன்,—எனப் பகர்ந்திட்டான் - என்று (பிரமன்) கூறினன். எ-று. (கூரு)

வேதன் சொல்லினை வினவிச் சூலவே
லாதன் கூறுவா னாகி ளங்களி
யோதி மத்தநிற் குணர்த்து வாமுளத்
தாத ரத்தினு லகத்துட் கோடிநீ.

இ-ள். சூலவேலாதன் வேதன் சொல்லினை வினவிக் கூறுவான் - சூலபாணியார் பிரமனது வசனத்தைக்கேட்டு (அவனைநோக்கிச்) சொல்வார்,—நாகிளங் களி ஓதிமத்த - மிக இளைய களிப்பான அன்னத்தை யுடையவனே,—நிற்கு உணர்த்துவாம் நீ உளத்தாதரத்தினால் அகத்துட் கோடி - உனக்கு (ஆவதனை) அறிவிப்பாம்; நீ மனக்காதலோடு (அதனை) உள்ளத்தமைத்துக்கொள். எ-று. (கூசு)

வேறு.

போற்றிய சிந்து புரந்தனி லன்பு புகுந்தாராய்ச்
சாற்றுதி யான மருச்சனை மிக்க தவத்தாலே

யேற்றமு றும்பெரி யோர்பெரி யோர்க ளியாதேனு
மாற்றமி லாது நினைக்குமுன் முன்னர் வருந்தானே.

இ-ள். போற்றிய சிந்துபுரந்தனில் அன்பு புகுந்தாராய் - (குமாரசுவாமியைப்) போற்றும் பொருட்டுச் செயந்திபுரத்தின்கண் அன்போடு சென்றவராய்,—சாற்று தியானம் அருச்சனை மிக்கதவத்தாலே - (துதிச்) சொல் தியானம் பூசை மிகுந்த நோன்பு என்னுமிவைகளால்,—ஏற்றமுறும் பெரியோர் பெரியோர்கள் - உயர்ச்சியடைந்த பெரியரிற் பெரியருக்கு,—யாதேனும் - (அவர்விரும்பியது) எதுவாயினும் (அது),—மாற்றமிலாது நினைக்குமுன் முன்னர்வரும் - மாறுபாடின்றி (அவர்) நினைக்குமுன்னரே முற்படவரும். எ-று. (கஎ)

என்னமு னாறு முகக்கும ரேச னிசைத்தானு
லன்னவன் மேவிய வாலய வாயி லணித்தான
சன்னிதி வாரி தினந்தின மூழ்கு தணப்பின்றிப்
பொன்னின்வி மான வுருக்கொடு போற்றுதி பொற்பாமால்.

இ-ள். என்ன முன் ஆறுமுகக்குமரேசன் இசைத்தான் - என்று முன்னே அறுமுகக்குமாரர் கூறினார்,—அன்னவன் மேவிய ஆலய வாயில் அணித்தான சந்நிதி வாரி தினந்தினம் மூழ்கு - அவர் இருந்த கோயிலின் வாயிலிற் சமீபித்த சன்னிதானத்துச் சமுத்திரத்தில் நாடோறும் முழுகு,—தணப்பின்றிப் பொன்னின்விமானவுருக்கொடு போற்றுதி - பிரிதலின்றிப் பொன்விமானவுருவங்கொண்டு துதிக்குதி,—பொற்பாம் - இது அழகாம். எ-று. (கஅ)

விமானம தாகி விளங்குதி வேத வியப்பானங்
குமாரசு வாமி விமானம தான குறிப்பாலே
யமானத வாவியு ளாய்தலை யைந்து மளிப்பாமே
னமாணையு னக்குள கற்பம கன்றிடு நன்றாலே.

இ-ள். அம் மானதவாவியுளாய் வேத - அழகிய மானதவாவியையுடைய பிரமனே,—வியப்பால் விமானமதாகி விளங்குதி - (குமாரசுவாமியைத்) துதித்தலோடு விமானவடிவமாய் விளங்கு,—நங் குமாரசுவாமி விமானமதான குறிப்பாலே - நமது குமாரசுவாமிக்கு விமானமாயிருக்குங் கருத்தினால்,—மேல் நமாணை உனக்குள கற்பம் அகன்றிடு நன்றால் - பின்பு நமதாஞ்ஞையினால் உனக்குள்ள கற்பம் நீங்கும் நல்லகாலத்திலே,— தலையைந்தும் அளிப்பாம் - சிரமைந்தையுந் தருவாம். எ-று. (ககூ)

தண்ணளி யாலிது தந்தன நம்முள சாரூபங்
கண்ணளி னாலய மேவுதி கந்த வரைக்கண்ணார்
புண்ணிய சிந்துவி னிற்றின மூழ்கு பொருக்கென்றே
யெண்ணிய வெண்ணிய வெய்துமி துண்மை யிசைத்தேமால்.

இ-ள். கள் நளின ஆலய - தேன்பொருந்திய தாமரைமலராகிய ஆசனத்தையுடையவனே,—நம்முள சாரூபம் மேவுதி - நமதுண்மையான சாரூப்பியத்தை (அக்காலத்தில்) அடைவாய்,—தண்ணளியால் இது தந்தனம் - (உன்மேற்கொண்ட) கருணையினால் இ(வ்வரத்)தைத் தந்தாம்,—கந்தவரைக்கண் ஆர் புண்ணிய சிந்துவினில் தினம் மூழ்கு - கந்தமாதன மலையிற் சேர்ந்த சுத்தமான சமுத்திரத்தில் நாடோறும் முழுகுதலால்,—

எண்ணிய எண்ணிய பொருக்கென்றே எய்தும் - (அங்ஙனம் முழுகினோர்க்கு) நினைந்தன நினைந்தன யாவும் விரைந்து சேரும்,—இது உண்மை இசைத்தேம் - இதனை உண்மையாகக் கூறினேம். எ-று. (௭0)

தலைமைபு ரிந்திட நாமருள் செய்துள சாரூப
நிலைமைய டைந்திடி லைந்தலை யுன்றலை நேராமான்
மலிசுடர் வேலவன் வாயிலின் முத்து வழங்குஞ்சீ
ரலைமணி யாழியி னித்தமு மூழ்குத லாமன்றே.

**இ-ள்.** தலைமை புரிந்திட - (நீ அங்ஙனஞ் சிந்துஸ்நான விமானரூப தாரணகுகசேவநங்களையியற்றலாகிய தொண்டுத்)தலைமையை அனுட்டித்த பின்,—நாம் அருள்செய்து உள சாரூபநிலைமை அடைந்திடில் - நாம் அருளுதலால் உளதாகுஞ் சாரூப்பியநிலையைப் பெறின்,—உன்றலை ஐந்தலை நேராம் - உன்மாட்டு ஐந்தலைகளும் நேர்படும்,—மலிசுடர்வேலவன் வாயிலின் முத்து மணி வழங்குஞ் சீர் அலை ஆழியில் - வேலாயுதக்கடவுளின் (கோயில்) வாயிலிலே முத்துக்களையும் மணிகளையுஞ் சேர்க்குஞ் சீர்த்தி பொருந்திய திரைகளையுடைய (சந்நிதானத்துச்) சமுத்திரத்திலே,—நித்தமும் மூழ்குதல் ஆம் - (ஏனைச்சமுத்திரங்களிற்போல விலக்கியநாட்களை ஒழியாது) நாடோறும் முழுகுதல் தக்கதாம். எ-று. (௭௧)

நீதலை யெய்துமந் நாளள வுங்குக னேராகும்
வாயிலின் வாரிதி னந்தின மூழ்கல் வழக்காகு
மாயனி ராமவ தாரமொர் மூன்றில் வருஞ்சேதுட்
சேய்முன ராதிச் சேதுவி தாகவுஞ் செய்தானால்.

**இ-ள்.** நீ தலையெய்தும் அந்நாளளவும் - நீ சிரசைப்பெறும் அக்காலம் வரையும்,—குகன் வாயிலின் நேராகும் வாரி தினந்தினம் மூழ்கல் வழக்காகும் - முருகபிரானின் (கோயில்) வாயிலுக்கு நேரான சமுத்திரத்தில் நாடோறும் முழுகுதல் முறைமையாம்,—மாயன் இராமவதாரம் ஓர்மூன்றில் வருஞ் சேதுள் - விட்டுணு (எடுத்த) இராம அவதாரங்கண் மூன்றிலும் அமைத்த சேதுக்களுள்,—சேய்முனர் இது ஆதிச்சேதுவாகச் செய்தான் - குமாரசுவாமிசந்நிதியில் இ(ச்சே)து தானே ஆதிசேதுவாகச் செய்தனன். எ-று. (௭௨)

வேறு.

மிடைந்த தெண்டிரைச் சேதுவுங் கண்டுநம் வியப்புறு மிருதாளை
யடைந்து பூசனை விதிமுறை புரிந்தன னாதலி னயன்கேண்மோ
படிந்து நீயிவண் வைகுதி யுன்றலைப் பான்மையின் றவத்தாலே
தொடர்ந்த பேர்வத னாரம்ப மாமெனச் சொல்லுதன் மரபாமால்.

**இ-ள்.** மிடைந்த தெண்டிரைச் சேதுவுங் கண்டு - நெருங்கிய கடலிற் சேதுவையுஞ் செய்து,— நம் வியப்புறும் இருதாளை அடைந்து விதிமுறை பூசனை புரிந்தனன் - நம்முடைய வியக்கப்படும் உபயபாதங்களையுஞ் சார்ந்து விதிப்படி அருச்சனை செய்தான்,—ஆதலின் அயன் கேள் - ஆதலாற் பிரமனே கேள்,—நீ இவண் படிந்து வைகுதி - நீ இங்கேமுழுகிக்கொண்டு இரு,—உன் தலைப்பான்மையின் தவத்தால் - உனது முதன்மையான தவத்தினால்,—தொடர்ந்தபேர் வதனாரம்பமாம் எனச் சொல்லுதல் மரபாம் - (இச்சந்நிதானக்கடலுக்கு) இயைந்த நாமம்முகாரம்பமென்பதாம் என்று கூறுதல் முறைமையாம். எ-று. (௭௩)

தொட்ட வாரிதி யுடுத்தமா நிலத்துள தூயநன் னதியாய, மட்டி லாதவான் றீர்த்தமுற் றுடிய மாதவக் கதியெல்லாங், கட்டு நான் மறைக் கடவுணீ முகாரம்பக் கடலொரு தினமூழ்கக், கிட்டு மென்றுபின் னிலிங்கத்தி லடைந்தனன் கெழுமுமுத் தலைவே லோன்.

இ-ள். தொட்ட வாரிதி உடுத்த மாநிலத்துள - (சகரர்) தொட்ட கடலாற் சூழப்பட்ட பெரிய பூமியிலுள்ள,—தூய நன்னதியாய மட்டிலாத வான்றீர்த்தமுற்று ஆடிய மாதவக் கதியெல்லாம் - சுத்த சுபநதிகளாகிய அளவிறந்த மகாதீர்த்தங்களெல்லாவற்றினும் ஆடுதல்களாகிய பெருந்தவங் களின் பயன்களெல்லாம்,—கட்டு நான்மறைக் கடவுள் நீ முகாரம்பக்கடல் ஒருதினம் மூழ்கக் கிட்டும் - உறுதியான சதுர்வேதங்களையறிந்ததேவனே நீ வதனாரம்பக்கடலில் ஒருநாண் முழுகலால் (உனக்குச்) சேரும்,— என்று பின் கெழுமுமுத்தலைவேலோன் இலிங்கத்தில் அடைந்தனன் - என்றுசொல்லிப் பின்பு சூலபாணியார் (மறைந்து) இலிங்கத்துட் சேர்ந் தார். எ-று. (எச)

ஆய பான்மையா னமதுசந் நிதிவத னாரம்பக் கடலூடு
தூய வான்றிரி சுதந்திர முனிவர்கா டோன்றிய தினந்தோறு
மேய வன்பினுன் மூழ்குதன் மரபென விதித்தன மிதுநிற்க[ரால்.
நேய மாகநாங் காதையொன் றுணர்த்துவ நெறியினின் றுணர்வீ

இ-ள். ஆயபான்மையால் நமது சந்நிதி வதனாரம்பக் கடலூடு தோன் றிய தினந்தோறும் மேய அன்பினுன் மூழ்குதல் மரபு எனவிதித்தனம் - அவ்வியல்பினுற்றான் நஞ்சந்நிதானத்து முகாரம்பக்கடலில் (வேண்டிய பயன்) தோன்றும்பொருட்டு நாடோறும் பொருந்திய காதலோடு முழு குதன் முறையாம் என்று விதித்தாம்,—இது நிற்க தூய வான் திரிசுதந்திர முனிவர்காள் - இது நிற்க; சுத்தமான பெருமையையுடைய திரிசுவதந்திர முனிவர்களே,—நாங் கதையொன்று நெறியின் உணர்த்துவம் - நாம் ஒரு கதையை முறையானே விளக்குவாம்,—நேயமாக நின்று உணர்வீர் - அன்பாக நின்று அறிவீர். எ-று. (எரு)

பொலனி லத்தருக் குளகென நெடும்பணைப் புழைக்கைவான் புடைநீட்டிக், கலுழி மாமுகி லெனப்பொழி களிறுசூழ் கலிங்க நாட்டரசீன்ற, திலக வாணுதற் கனகசுந் தரிப்பெயர்த் திருமருக் கருங்கூந்தற், கலவ மாமயில் போற்குறு முனிவரன் கவினுறுந் தமிழ்ச்சாரல்.

இ-ள். பொலனிலத்தருக் குளகென நெடும் பணைப் புழைக்கை வான் புடை நீட்டி - சுவர்க்கதருவை உணவென்று நெடிய பெரிய புழைக்கையை ஆகாயத்து நீட்டி,—கலுழி மாமுகிலெனப் பொழி களிறுசூழ் - (மதமாகிய) கலங்கனீரைப் பெரியமேகம்போலப் பொழியும் யானைகள் சூழுகின்ற,— கலிங்க நாட்டு அரசு ஈன்ற - கலிங்கதேசத்தின் அரசன் பெற்ற,—திலக வாள் நுதல் மருக் கருங்கூந்தல் கனகசுந்தரிப் பெயர்த்திரு - பொட்டின் ஒளியார்ந்த நெற்றியையும் நறுமணமான கரியகுழலையும் உடைய கனக சுந்தரி எனப் பெயர்பெற்ற சிதேவிபோல்வாள்,—கலவ மாமயில்போல் - கலாபத்தையுடைய பெரிய மயில்போல,—குறுமுனிவரன் கவினுறுந்

தமிழ்ச் சாரல் - அகத்தியமுனிவன்வாழும் அழகுபொருந்திய தமிழ்ந் திடமாகிய(பொதிய)மலையின்கண்ணே. எ-று. (எசு)

பொருநை யந்துறை மூலத்தி னாடுவான் போந்தனள் போங்காலை
யரிய மாதவ னருவரைக் கானிடை யயக்கிரீ வனைப்பாராத்
தெரிவை யாயிடை நின்றவ மதிப்பினாற் சிரித்தன ளதுகாலை
விரைவி னீவருஞ் சனனத்தின் முகம்பரி யாகென விதித்தானால்.

இ-ள். பொருநைத்துறை மூலத்தின் ஆடுவான் போந்தனள் - பொருநைநதியின் அடியிலே முழுகுமாறு சென்றாள்,—போங்காலை அருவரைக் கானிடை அரிய அயக்கிரீவன் மாதவனைப் பாரா - போம்போது அரியமலையிற் காட்டிலே விட்டுணுவின் அவதாரமான அயக்கிரீவ முனிவனைப் பார்த்து,—தெரிவை ஆயிடை நின்று அவமதிப்பினாற் சிரித்தனள் - (அப்) பெண் அவ்விடத்து நின்று அவமதித்தலோடு சிரித்தாள்,—அதுகாலை நீ வருஞ்சனனத்தின் முகம் பரியாக என விரைவின் விதித்தான் - அப்போது (சினந்த அம்முனிவன்) நீ வரும்பிறவியின் முகத்தினாற் குதிரையாக என்று விரைவிற் சபித்தான். எ-று.

ஹய - குதிரை. கிரீவா - கழுத்து. குதிரையின் கழுத்துப்போலுங் கழுத்துடைமையால் ஹயக்கிரீவன் எனப்பேர்பெற்றான். ஹ தமிழில் அ ஆயிற்று. (எஎ)

விதித்த சாபத்திற் கனகசுந் தரியெனு மெல்லிய றுயரோடுந்
துதித்து நீபகர் கொடுமொழி தவிர்பகற் சொல்லுதி யெனலோடு
மதித்தி ருந்தயக் கிரீவனு மவண்முகம் பார்த்துமா தவனுபி [றே.
யுதித்து ளான்முனர்ப் போந்தலை வருதலை யுன்னிநோற் றுளனன்

கந்த மாதன வரையுள தவ்வரைக் கண்ணிடைக் கவின்பூத்த
மந்தி ரத்தினின் மந்திரப் பொருளதா மயூரவா கனத்தெந்தை
முந்து சந்நிதிச் சிந்துவின் மூழ்கினன் மொய்குழ லவணீபோ
யிந்த மாமுகம் போயந்த மாமுக மெய்துநீ யெனென்றான்.

இ-ள். விதித்த சாபத்தின் கனகசுந்தரியெனும் மெல்லியல் துயரோடுந் துதித்து - கற்பிக்கப்பட்ட சாபத்தினையுடைய கனகசுந்தரியென்னும் பெண் துக்கத்தோடு (முனிவனைத்) துதிசெய்து,—நீபகர் கொடுமொழி தவிர்பகற் சொல்லுதி எனலோடும் - (சுவாமீ!) நீர் கூறிய சாபம் நீங்குங் காலத்தைக் கூறுக என்று வேண்டிக்கொள்ள,—அயக்கிரீவனும் இருந்து மதித்து அவண்முகம் பார்த்து-அம்முனிவனும் (சிறிதுபொழுது மௌனத்தோடு)இருந்து தியானித்து(ப் பின்)அவளது முகத்தை நோக்கி,—மாதவனுபியுதித்துளான் முன்னர்ப் போந்தலை வருதலை உன்னி - பிரமதேவன் முன்னாளில் (வைரவக்கடவுளால்) அழிந்ததலை (மீள)வருதலை நினைந்து,—கந்தமாதனவரையுளது அவ்வரைக்கண்ணிடை - கந்தமாதனமலையைச் சார்ந்துள்ளதாகிய அவ்வெல்லைப்பட்டதானத்தின்கண்ணே,—கவின் பூத்த மந்திரத்தினில் - அழகுபொலிந்த கோயிலில் வீற்றிருக்கின்ற,—மந்திரப் பொருளதாம் மயூரவாகனத்தெந்தை-மந்திரார்த்தமான மயில்வாகனக்கடவுளினது,—முந்து சந்நிதிச் சிந்துவின் மூழ்கினன் நோற்றுளன் - முற்பட்ட சந்நிதானத்துச் சமுத்திரத்திலே முழுகினவனாய் நோற்றிருக்கின்றான்,—அவண் நீபோய் (பிற்பிறவியில்) ஆண்டு நீ போக,—இந்த மாமுகம் போய்

அந்த மாமுகம் எய்தும் - இ(ப்பொழுதைச் சாபத்தாலவ)ந்த குதிரைமுகம் நீங்க அழகினையுடைய மனிதமுகம் அடையும்,—நீ ஏகு என்றான் - நீ போ என்று கூறினான். எ-று. (எகூ)

புக்க வச்சன னச்சுமை போயபின் புவிபொது வறக்காக்கு
முக்கி ரப்பெரு வழுதியா லுதித்தன ளொளிவனப் புறுமேனி
மிக்க வங்கசுந் தரியெனும் பெயரொடும் விளங்கினள் பரிபோன்
தக்க மாமுக மாயினள் வழுதியுஞ் சஞ்சலித் துளஞ்சோர்ந்தான்.

இ-ள். புக்க அச்சனனச்சுமை போயபின் - (அவள் தான்) புகுந்த (கலிங்கராசன்மகள் கனகசுந்தரி என்னும்) அப்பிறவிச்சுமை நீங்கிய பின்பு,—புவி பொதுவறக் காக்கும் உக்கிரப் பெரு வழுதியால் உதித்தனள் - நிலத்தைப் பொதுமைநீங்கக் காக்கும் உக்கிரனென்னும் பெரிய பாண்டியனிடத்துப் பிறந்தாள்,—ஒளிவனப்பு உறு மேனி மிக்க அங்கசுந்தரி எனும்பெயரொடு விளங்கினள் - பேரழகானது (தான்) பொருந்திய சரீரத்தின் மிகுதலால் அங்கசுந்தரி என்னும் பெயரோடு விளங்கினாள்,—(அற்றாயினும்), தக்கமாமுகம் பரிபோன்று ஆயினள் - தகுந்த பெரிய முகத்தாற் குதிரை போலாயினாள்,—வழுதியுஞ் சஞ்சலித்து உளஞ் சோர்ந்தான் - (அதுகண்ட) பாண்டியனுங் கலங்கி மனந்தளர்ந்தான். எ-று. (அ0)

சோர்ந்த காலையி லந்தர வாணியொன் றரசநின் சுதைக்கிம்
மாக், கூர்ந்த வானன நன்முக னாகநற் குரைகட னதிவாவி, யார்
ந்த தீர்த்தத்தி னாடுக வென்றவ ணறைந்ததா லதுகேளாத், தேர்
ந்த மந்திரி மாரொடுங் களித்தனன் செழியர்கோ னினிதுற்றான்.

இ-ள். சோர்ந்த காலையில் - (அவன்) தளர்ந்தபொழுது,—அவண் அந்தரவாணியொன்று - அவ்விடத்தே அசரீரிவாக்கொன்று,—அரச நின் சுதைக்கு இம்மாக் கூர்ந்த ஆனனம் நன்முகனாக நற்குரைகடல் நதி வாவி ஆர்ந்த தீர்த்தத்தின் ஆடுக என - அரசனே உன்மகட்கு இந்தக் குதிரையினதுபோலக் கூர்ந்த முகம் நன்முகமாகும்பொருட்டுச் சமுத்திரம் யாறு குளம் எனப் பொருந்திய தீர்த்தங்களில் ஆடுக என்று,—அறைந்தது - சொல்லிற்று,—அதுகேளாத் தேர்ந்த மந்திரிமாரொடும் செழியர்கோன் களித்தனன் இனிதுற்றான் - அதனைக்கேட்டு (நீதிநூல்களை) ஆராய்ந்த அமைச்சரோடு பாண்டியன் மகிழ்ந்து இனிதிருந்தான். எ-று. (அக)

வேறு.

செழியர்பிரா னமைச்சரொடுஞ் சேனையொடுந் தன்மகளை
வழிமரபின் மூத்தார்க ளொடுங்கூட்டி வானதியாஞ்
சுழியெறியுங் கங்கைதனுக் கோடிமுதற் றூயபுனல்
விழுமியதண் ணதிமூழ்க மகிழ்வினொடும் விடுத்தனனால்.

இ-ள். செழியர்பிரான் தன்மகளை - பாண்டியராசன் (பின்பு) தன் புதல்வியை,—அமைச்சரொடுஞ் சேனையொடும் வழிமரபின் மூத்தார்களொடுங் கூட்டி - மந்திரிமாரோடுஞ் சேனைகளோடும் பழைய வமிசத்து முதியோரோடுஞ் சேர்த்து,—வானெறியாஞ் சுழியெறியுங் கங்கை(முதல்) விழுமிய தண்ணதி தனுக்கோடி முதல் தூயபுனல் மூழ்க மகிழ்வினொடும் விடுத்தனன் - சுரநதியாகிய சுழிகளையெறியுங் கங்கைமுதலிய புண்ணிய நதிகளிலுந் தனுக்கோடிமுதலிய புண்ணியதீர்த்தங்களிலும் முழுகுமாறு பிரீதியோடு அனுப்பினான். எ-று. (அ௨)

நன்பொருளாந் தாரகத்தை நண்ணுவிக்குங் கங்கைமுத
லின்பமுறு தீர்த்தமெல்லா மினிதாடித் தண்பொதியத்
தென்பொருநை யிருகரையுந் தீர்த்தமுழு வதுந்திளைத்து
மின்பொலியுஞ் சங்கமமார் வேலையினும் படிந்தனளால்.

இ-ள். நன்பொருளாந் தாரகத்தை நண்ணுவிக்குங் கங்கைமுதல் இன்பமுறுந் தீர்த்தமெல்லாம் இனிதாடி - சிவப்பொருளாகிய பிரமத்தை அடைவிக்குங் கங்கைமுதலிய இன்புறுத்துந் தீர்த்தங்களினெல்லாம் இனிது முழுகி,—தண்பொதியத் தென்பொருநை இருகரையுந் தீர்த்தமுழுவதுந் திளைத்து - பொதியமலையின்வரும் பொருநையாற்றின் இருகரைகளிலுமுள்ள தீர்த்தங்களெல்லாவற்றினும் முழுகி,—மின்பொலியுஞ் சங்கமமார்வேலையினும் படிந்தனள் - ஒளிபொலியுஞ் சங்கமசாகரத்தினும் முழுகினாள். எ-று. (அங)

ஆடியபின் னீடுவத னாரம்பத் துறைமூழ்கக்
கோடகத்தின் முகமொளித்துக் குறுமுயலின் மறுவொழித்த
நீடுமுவா மதிபோல நிறைவுபெறு முகநோக்கிச்
சூடகச்செந் தளிர்க்கையுளந் துளங்கினண்மா மகிழ்பூத்தாள்.

இ-ள். ஆடியபின் நீடுவதனாரம்பத்துறை மூழ்க - (அவற்றின்)முழுகியபின் உயர்ந்த முகாரம்பத்துறையின் முழுகுதலும்,—கோடகத்தின முகம் ஒளித்து-குதிரைமுகம் மறைய,—குறு முயலின்மறு ஒழித்த நீடும் உவாமதிபோல நிறைவு பெறு முகம் நோக்கி - குறிய முயற்களங்கத்தை நீக்கிய உயர்ந்த பூரணையிற்சந்திரன்போல நிறைதலைப்பெற்ற முகத்தைக் கண்டு,—சூடகச் செந்தளிர்க்கை - தொடியையணிந்த செந்தளிர்போலும் கைகளையுடைய(அ)வள் மாமகிழ்பூத்தாள் உளந்துளங்கினள் - பேரானந்தம் பொலிந்து மனஞ்சிறந்தாள். எ-று. (அச)

விதிமுறையிற் பலபொருளும் வேதியருக் கினிதளித்து
மதிமுகத்தின் செவ்விபெறு மடவரலன் பினின்மூழ்கிக்
கதிர்மதியக் குலத்தாதைக் கொற்றர்தமைக் கடிதுய்த்தா
ளதிர்குரற்றா னைகளோடுஞ் சென்றடைந்தான் பஞ்சவர்கோன்.

இ-ள். மதி முகத்தின் செவ்விபெறு மடவரல் அன்பினின் மூழ்கி - சந்திரவதனகாந்தியைப்பெற்ற பெண்ணானவள் அன்போடு (பின்னும்) முழுகி,—விதிமுறையிற் பலபொருளும் வேதியருக்கு இனிதளித்து - விதிப்படி பலதிரவியங்களையும் அந்தணருக்கு நன்றாகக் கொடுத்து,—கதிர்மதியக்குலத் தாதைக்கு ஒற்றர்தமைக் கடிதுய்த்தாள் - சந்திரகுலத் தனுகிய தந்தையை வருவித்தற்கு ஒற்றரை விரைந்தனுப்பினாள்,—பஞ்சவர்கோன் அதிர்குரல் தானைகளோடுஞ் சென்றடைந்தான் - பாண்டியன் பேரொலியையுடைய சேனைகளோடும் போய்ச்சேர்ந்தான். எ-று. (அரு)

கவுரியர்கோன் செயந்திபுரந் தனிலடைந்து கன்னிகையி
னவிரொளிவாண் முகநோக்கி யற்புதத்தின் கடன்மூழ்கி
யுவரியினீ ருடன்படிந்து மகளோடு முவமையிலா
நவமணிக் கோயிலிற்புகுந்து நம்மையும்பூ சனைபுரிந்தான்.

இ-ள். கவுரியர்கோன் செயந்திபுரந்தனில் அடைந்து - பாண்டியராசன் செயந்திநகரிற்சேர்ந்து,—கன்னிகையின் அவிரொளிவாள் முகம் நோ

க்கி - மகளது பேரொளியான முகத்தைப் பார்த்து,—அற்புதத்தின்கடல் மூழ்கி - அதிசயக்கடலிற் படிந்து,—உடன் உவரியினீர் படிந்து - உடனே (தானும் அக்)கடனீரின் முழுகி,—மகளோடும் உவமையிலா நவமணிக் கோயிலிற் புகுந்து நம்மையும் பூசனைபுரிந்தான் - புதல்வியோடும் ஒப்பற்ற நவரத்தினங்களாலமைந்த ஆலயத்திற் சேர்ந்து நம்மையும் பூசித்தான். எ-று. (அசு)

ஆதலினம் மாலயத்துச் சந்நிதியி லருந்தீர்த்த
மோதிடுநற் றிருப்பெயரு முறுமுகா ரம்பமதா
மாதரவின் வாஞ்சாதீர்த் தப்பெயரா மல்லாமற்
போதமுறுஞ் சத்தியதீர்த் தமுமாகும் பூசுரரே.

இ-ள். ஆதலின் நம்மாலயத்துச் சந்நிதியில் அருந்தீர்த்தம் - ஆகையால் நக்கோயிற் சந்நிதானத்துள்ள அரியதீர்த்தத்துக்கு,—ஓதிடும் நற்றிருப்பெயர் உறு முகாரம்பமதும் ஆம் - சொல்லும் நல்ல திருநாமம் பொருந்திய வதனாரம்பம் என்பதுமாம்,—ஆதரவின் வாஞ்சாதீர்த்தப் பெயராம் - பற்றைத்தருகின்ற வாஞ்சாதீர்த்தம் என்னும் பெயருமாம்,—அல்லாமற் போதம் உறுஞ் சத்தியதீர்த்தமுமாகும் - அன்றிப் போததீர்த்தம் சத்தியதீர்த்தம் என்பனவுமாம்,—பூசுரரே-வேதியர்களே (உணர்மின்). எ-று.

என்றுரைத்த குமரேச னின்னமுதச் செந்தேற
னின்றமுனி வரர்செவியா லெடுத்தருந்தி நிகரின்மறை
யின்றளவு முணர்வரிய குகன்பாதத் திணைநிழற்கீழ்த்
துன்று திரி சுதந்திரரு நீங்காது தொழுதிருந்தார்.

இ-ள். என்று குமரேசன் உரைத்த இன்னமுதச் செந்தேறல் - என்று சுவாமி சொல்லிய இனிய வசனமாகிய செந்தேனை,—நின்ற முனிவரர் துன்று திரிசுதந்திரரும் - நின்ற முனிச்சிரேட்டராகிய செறிந்த திரிசுவதந்திரர்களும்,—செவியால் எடுத்தருந்தி - செவிகளா(கியகைகளா)ல் எடுத்து உட்கொண்டு,—நிகரின்மறை இன்றளவும் உணர்வரிய குகன்பாதத்திணை நிழற்கீழ் - ஒப்பற்ற சுருதிகள் இன்றுவரையும் அறியாத சுவாமியினுடைய உபயபாதங்களின் நிழற்கண்ணே,—நீங்காது தொழுதிருந்தார் - பிரியாது வழிபட்டிருந்தனர். எ-று. (அஅ)

பிரமாவுக்கு வரங்கொடுத்த அத்தியாயம்
முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் சஎசு.

## கo-வது. திரிசுவதந்திரர் வரலாறுரைத்த அத்தியாயம்.

முற்றுணர் வியாசமா முனிவன் றாண்மலர்
பற்றுடன் சுகமுனி பணிந்து தந்தைநீ
சொற்றிரி சுதந்திரர் வரமுந் தோற்றமு
மற்றதுஞ் சொல்கென வழங்கன் மேயினான்.

இ-ள். முற்று உணர் வியாசமாமுனிவன் தாண்மலர் - (இவ்வாறு போதித்த) முதிர்ந்த உணர்ச்சியையுடைய வியாசமகாமுனிவனுடைய பா

தாரவிந்தங்களை,—சுகமுனி பற்றுடன் பணிந்து-சுகமுனிவன் அன்போடு வணங்கி,—தந்தை நீ சொல் திரிசுதந்திரர் வரவுந் தோற்றமும் மற்றதுஞ் சொல்க என - ஐயா! நீர் (மேலே)சொல்லிய திரிசுவதந்திரரது வரலாற்றையும் சிறத்தியையும் பிறவற்றையும் கூறியருள்க என்று வேண்ட,—வழங்கன் மேயினன் - (வியாசமுனிவன்) சொல்லலுற்றான். எ-று. (க)

சுகமுனி வருந்திரி சுதந்தி ரத்தருங்
குகனுமொன் றாகவே யிருந்த கொள்கையார்
முகமனன் றுரைப்பது மோனத் துண்மைபோ
லகமகிழ்ந் தினிதுகே ளறைகு வாமரோ.

இ-ள். சுகமுனி - சுகமுனிவனே,—வருந் திரிசுதந்திரத்தருங் குகனும் ஒன்றாக இருந்த கொள்கையாரே - (மேலே காட்டப்பட்டு)வருந் திரிசுவதந்திரர்களும் முருகபிரானோடும் ஒற்றுமையுடையராய் இருந்த இயல்பினரே,—உரைப்பது முகமனன்று - (யான்)கூறுவது உபசாரவார்த்தையன்று,—மோனத்து உண்மைபோல் அகமகிழ்ந்து இனிதுகேள் அறைகுவாம் - மௌனத்தோடு பெறப்படும் (சிவஞான) மெய்ப்பொருளைப்போல மனமுவந்து இனிது கேட்குதி கூறுவாம். எ-று. (உ)

முதுக்குறை யுறுதவ முனிவர் தாங்குழு
விதித்திட வரியவாம் வேத நான்கையு
மதிக்கொளும் வலியினோர் மகியிற் கங்கைமா
நதிக்கரை யினிதுமா தவத்தி னண்ணினார்.

இ-ள். விதித்திடவரியவாம் வேதநான்கையும் மதிக்கொளும் வலியினோர் - சொல்லுதற்கரிய சதுர்வேதங்களையும் மனத்துக்கொண்ட வலிமையுடையராகிய,—முதுக்குறையுறு தவக் குழு முனிவர்தாம் - பேரறிவு பொருந்திய தவத்தையுடைய கூட்டமாகிய(பல)முனிவர்கள்,—மகியிற் கங்கை மாநதிக்கரை இனிது மாதவத்தின் நண்ணினார் - பூமியிலே கங்காநதியின் கரையிலே நன்றாகப் பெருந்தவஞ் செய்தலோடு இருந்தார்கள். எ-று. (ங)

களிசிறந் தாறெனுங் கருும மாற்றுவார்
தெளிதரு முனிவரர் தேவர் தென்புலத்
துளரிவர் மும்மையார்க் குரிய வன்பினு
ளவறு சுருதிநூ லகங்கொண் டாய்ந்திடா.

பிரமவான் சரியத்தான் முனிவர் பெட்புறக்
கருமநின் றாற்றுவார் கடவுளோர்க்கெலா
மரியவேள் விகள்புரிந் தார்வ மூட்டுவார்
வருசுத ரைக்கொட வாசிக் கண்ணுளார்.

தங்களுக் கன்புறத் தரும மாற்றுவார்
பொங்குவெங் காமமுன் புகலு மாறெனத்
தங்குமக் குறும்பறத் துயருந் தன்மையார்
செங்கம லத்தனை நோற்குஞ் செய்கையார்.

இ-ள். களிசிறந்து ஆறெனுங் கருமம் ஆற்றுவார் - மகிழ்ச்சிமிகுந்து ஆறுதொழில்களையுஞ் செய்தலுடையவராய்,—தெளிதரு முனிவரர் தேவர் தென்புலத்துளர் இவர்மும்மையார்க்கு உரிய அன்பின் ஆல் - தெளிந்த

முனிவர் தேவர் பிதிரர் என்னும் மூவரிலும் உரிமையான அன்புசெய்தலின் அமைந்து,—முனிவர் பெட்புற - (அம்மூவருள் முதல்வராகிய) முனிவர்கள் பிரீதியடைய,—வான் பிரமசரியத்தான் நின்று அளவறு சுருதி நூல் அகங்கொண்டு ஆய்ந்திடாக் கருமம் ஆற்றுவார் - பெருமையாகிய பிரமசரியநிலையில் நின்று அளவிறந்த வேதங்களையும் (மிருதிமுதலிய) நூல்களையும் உளங்கொண்டு ஆராய்ந்து (உரிய) கருமங்களை (முன்னரே) செய்தலுடையவராய்,—கடவுளோர்க்கெலாம் - (இரண்டாமவராகிய) தேவர்களெல்லாருக்கும் (பிரீதியாம்பொருட்டு),—அரிய வேள்விகள் புரிந்து ஆர்வம் ஊட்டுவார் - அரிய யாகங்களைச் செய்து அன்போடு அவிகளை ஊட்டுதலுடையவர்களாய்,—அவாசிக்கண்ணுளார் தங்களுக்கு அன்பு உற - (மூன்றாமவராகிய) தென்புலத்தார்க்குப் பிரீதி உண்டாக,—வரு சுதரைக் கொடு தருமம் ஆற்றுவார் - (இல்வாழ்க்கைபூண்டு) பெற்ற புதல்வரைக் கைக்கொண்டு (இல்லறமாகிய) தருமத்தைச்செய்தலுடையராய்,—பொங்கு வெங் காமமுன் புகலும் ஆறெனத்தங்கும் அக்குறும்பு அறுத்து உயருந்தன்மையார் - மேற்படுங் கொடிய காமமுதலாகச் சொல்லப்படுகிற ஆறாகிய அப்பகைகளை ஒழித்து உயருமியல்புடைய(ரான அ)வர்கள்,—செங்கமலத்தனை நோற்குஞ் செய்கையார் - பிரமதேவரை (நோக்கித்) தவஞ்செய்தலையுடையராயினார். எ-று. (௪-௫-௬)

இருந்தனர் தம்முனர் வேத னெய்திநீர்
புரிந்தமா தவத்துள புகழ்ச்சி யெய்திறு
மருந்தவத் தீருளத் தார்வ மீதெனத்
திருந்துறப் புகலுமென் றிறைவன் செப்பலும்.

இ-ள். இருந்தனர் தம்முனர் இறைவன் வேதன் எய்தி - இருந்த (அம்முனி)வர்முன்னே தலைவராகிய பிரமா வந்து,—நீர் புரிந்த மா தவத்துள புகழ்ச்சி எய்திறும் - நீர் செய்த பெருந்தவமாயுள்ள வழிபாட்டை ஏற்றும்,—அருந்தவத்தீர் உளத்தார்வம் ஈதெனத் திருந்துறப் புகலும் - முனிவர்காள்! மனவிருப்பம் இன்னதென்று திருத்தமாகக் கூறுமின்,—என்று செப்பலும் - என்று சொல்ல. எ-று. (எ)

அஞ்சலி செலுத்திநின் றந்த ணாளர்வெண்
கஞ்சநாண் மலர்வளர் கலைம கட்குறத்
தஞ்சநா வளித்தசெந் தாம ரைக்குளாம்
விஞ்சையா யகத்துள விருப்பஞ் செப்புகேம்.

இ-ள். அந்தணாளர் அஞ்சலி செலுத்தி நின்று - (அதுகேட்ட)முனிவர்கள் கைகூப்பி நின்று,—வெண்கஞ்சநாண்மலர் வளர் கலைமகட்குத் தஞ்சம் உற நாவளித்த செந்தாமரைக்குளாம் விஞ்சையாய் - வெண்டாமரைப்பூமலரில் வாழும் நாமகட்குத் துணையாய் இருக்குமாறு நாக்கைக் கொடுத்த செந்தாமரைமலரிலுள்ள ஞானியாரே,—அகத்துள விருப்பஞ் செப்புகேம் - (எங்கள்)மனத்துள்ள விருப்பத்தைக் கூறுவேம். எ-று. (அ)

புடவியுஞ் சுவர்க்கமும் பொன்னந் தாமரைக்
கடவுணின் னுலகமுங் காமுற் றேமவை
யினிடைதொறுஞ் சுதந்திரத் திருத்தற் கெந்தைநீ
தடைபடா தருளெனச் சாற்றும் வண்ணமே.

அம்புயத் தண்ணலு மளித்துப் போயினன்
வெம்புமக் கினியவர் வேட்ட மூவர
நம்புற வளித்தன னகைநி லாக்கொழுந்
தும்புனைந் தருள்புரி சூல பாணியும்.

இ-ள். பொன்னந்தாமரைக்கடவுள் - பொற்றாமரைமலரிலிருக்குந் தேவரே,—புடவியுஞ் சுவர்க்கமும் விண்ணுலகமுங் காமுற்றேம் - பூமியையும் விண்ணுலகையும் உம்முலகையும் விரும்பினேம்,—அவணிடைதொறுஞ் சுதந்திரத்து இருத்தற்கு - அவ்விடங்கடோறும் (விரும்பியபடி) சுவதந்திரத்தோடு வசித்தற்கு,—எந்தை நீ தடைபடாது அருள் என - சுவாமீ! நீர் தடைபடாமல் அருள்செய்யும் என்றுசொல்ல,—அம்புயத்தண்ணலுஞ் சாற்றும்வண்ணமே அளித்துப் போயினன் - பிரமாவும் (அதனைக்கேட்டு அவர்) சொல்லியபடியே அருள்செய்து போயினர்,—நகை நிலாக்கொழுந்தும் புனைந்து அருள்புரி சூலபாணியும் - ஒளிபொருந்திய சந்திரகலையையும் அணிந்து அருளிய சிவபெருமானும் (தம்மைநோக்கி அம்முனிவர் செய்த அருந்தவத்துக்காக வந்துவெளிப்பட்டு),—வெம்பும் அக்கினி அவர் வேட்ட மூவரம் நம்புற அளித்தனன் - வெய்ய தீயையோம்பும் அ(ம்முனி)வர் விரும்பிய மூன்றுவரங்களையும் நம்புமாறு அருளினர். எ-று.

சுவதந்திரம்-தன்வயம். இது சுதந்திரம் எனவும் வழங்குவது. (கூ-க0)

வேட்டமூ வரங்களும் வேதி யர்க்குளங்
கூட்டுற மாயனுங் கொடுத்துப் போயினு
னாட்டிமுத் தேவுமுப் புவன நல்கலாற்
சூட்டுபேர் திரிசுதந் திரரென் றாயதே.

இ-ள். மாயனும் - (முன்னரே தம்மைநோக்கிச்செய்த தவத்துக்காக வந்த) திருமாலும்,—வேட்டமூவரங்களும் வேதியர்க்கு உளங் கூட்டுறக் கொடுத்துப் போயினன் - விரும்பிய மூன்றுவரங்களையும் அவர்களுக்கு மனமபொருந்தக் கொடுத்துச் சென்றார்,—நாட்டு முத்தேவும் முப்புவனம் நல்கலால் - நிலைப்படுத்துகின்ற மூன்றுதேவரும் மூன்றுபுவனங்களையுங் கொடுத்ததனால்,—திரிசுதந்திரரென்று சூட்டு பேர் ஆயது - திரிசுவதந்திரரென்று சூட்டப்பட்ட நாமம் உளதாயிற்று. எ-று.

பிரமாவின்பின் விட்டுணுவும் அவர்பின் சிவபெருமானும் வரங்கொடுத்தனர் எனவுணர்க. செய்யுளாகலின் முறைபிறழவைத்தார். (கக)

அன்னதன் பான்மையா லந்த ணாளர்தா
மன்னுமுப் புவனமு மகிழ்ந்து வைகினர்
பின்னரும் பொருநையங் கரையிற் பேர்மகந்
தன்னொடு மில்லறந் தழைத்து வைகினர்.

இ-ள். அன்ன அந்தணாளர்தாம் மன்னுமுப்புவனமுந் தன்பான்மையான் மகிழ்ந்து வைகினர் - அந்த முனிவர்கள் நிலைபெற்ற மூவுலகங்களிலுஞ் சுவதந்திரத்தோடு உவந்தமர்ந்தனர்,—பின்னரும் பொருநையங்கரையிற் பேர்மகந்தன்னொடும் இல்லறந் தழைத்து வைகினர்-பின்னும் பொருநைநதிக்கரையிலே பெரிய யாகஞ்செய்தலோடு இல்லறத்தின் வாழ்ந்து இருந்தனர். எ-று. (கஉ)

இந்தமாக் கதைதனை யெடுத்துக் காட்டிய
தந்தையாம் வியாதனைத் தாழ்ந்து போற்றியே
யந்தண ரிலக்கமெவ் வளவென் றன்சுகன்
சிந்தையிற் கழிமகிழ் சிறப்பச் சொல்லுவான்.

இ-ள். இந்தமாக்கதைதனை யெடுத்துக்காட்டிய தந்தையாம் வியாதனை - இப்பெருங்கதையினை எடுத்து விளக்கிய பிதாவாகிய வியாதமுனிவனை,—சுகன் தாழ்ந்து போற்றி - சுகமுனிவன் வணங்கித் துதித்து,—அந்தணர் இலக்கம் எவ்வளவு என்றான் - (அத்திரிசுவதந்திர) முனிவரது தொகை எத்துணைத்து என்று கேட்டான்,—சிந்தையிற் கழிமகிழ் சிறப்பச் சொல்லுவான் - (அதுகேட்ட வியாதமுனிவன்) மனத்தின் மிகுமகிழ்ச்சி சிறக்கக் கூறுவான். எ-று. (கூ)

திருமுது குன்றினிற் சிவன்றன் பூசனை
சுருதியி னின்புறப் புரிந்து சூழ்வினைக்
கருமல மகற்றிமுக் கண்ணன் றண்மல
ரிருமையும் பெற்றொரா யிரவர் வைகினார்.

இ-ள். ஒராயிரவர் - (அத்திரிசுவதந்திரருள்) ஓராயிரவர்கள்,—திருமுதுகுன்றினில் - விருத்தாசலத்தின்கண்ணே,—முக்கண்ணன் சிவன்றன் தாண்மலரிருமையும் பூசனை பெற்று - மூன்றுகண்களையுடைய சிவபெருமானது பாதாரவிந்தங்களிரண்டுக்கும் பூசித்தலைப் பெற்று,—சுருதியின் இன்புறப் புரிந்து - வேதவிதிப்படி (இல்லறத்தின்) இன்பம்பொருந்த ஒழுகி,—சூழ் வினைக் கரு மலம் அகற்றி வைகினார்-சூழ்ந்த கருமமாயா மலங்களை நீக்கி இருந்தார். எ-று. (கச)

பெறலருந் திருவுடன் சிறந்து பெய்மதத்
தறுகண்மால் யானையாற் றாரம் புல்லிய
வறுமுகன் பாலிரண் டாயி ரத்தரு
முறுபொரு ளடைந்துவா னவர்க்கொப் பாகவே.

நித்தமுங் குகன்பத நீக்க மின்றியே
பத்திமைச் செயந்தியம் பதியின் வைகினார்
வித்தகர் சரித்திரம் விளம்பு மேலையோர்
முத்தராய்க் குகனடி முளரி சார்வரால்.

இ-ள். இரண்டாயிரத்தர் செயந்தியம்பதியின் - இரண்டாயிரவர்கள் செயந்திபுரத்தின்கண்ணே,—பெய்மதத்தறுகண்மால்யானையால் தாரம்புல்லிய அறுமுகன் பால் - யானையினாலே மனைவியாரைத் தழுவிய ஆறுமுகசுவாமிக்கு உரிமையாய்,—பெறலருந் திருவுடன் சிறந்து - பெறுதல்கூடாத (அருட்)செல்வத்தோடு சிறந்து,—வானவர்க்கு ஒப்பாக உறுபொருள் அடைந்து - தேவர்கட்குப்போல(த் தமக்கு)ப் பொருந்துஞ் செல்வங்களை எய்தி,—நித்தமுங் குகன்பதம் நீக்கமின்றியே பத்திமை வைகினார்-என்றுஞ் சுவாமிபாதங்களைப் பிரிதலின்றிப் பத்தியோடு இருந்தார்,—வித்தகர் சரித்திரம் விளம்பு மேலையோர் - சதுரப்பாட்டினையுடைய (அ)வரது வரலாறுகளைக் கூறும் மேலோர்,—முத்தராய்க் குகனடிமுளரி சார்வர் - மலரகிதராய்க் குமாரபாதாரவிந்தங்களை அடைவார். எ-று. (கரு-கசு)

புண்டரீ கத்தொடு பாம்பு போற்றிய
புண்டரீ கப்புரம் பொதுவிற் பொற்புறப்
புண்டரீ கத்துரி போர்த்த புங்கவன்
புண்டரீ கத்தடி பூசை செய்திடா.

மும்மையா யிர முனிவர் வேள்வியிற்
செம்மைபெற் றருணடத் தியானத் துற்றுளார்
தம்மையர்ச் சனைபுரி தன்மை யோர்கடா
மிம்மையு மறுமையு மின்பத் தெய்துவார்.

இ-ள். மும்மையாயிர முனிவர்-மூவாயிரம் முனிவர்கள்,—புண்டரீகத்தொடு பாம்பு போற்றிய புண்டரீகப்புரம் - வியாக்கிரபாதரோடு பதஞ்சலி வழிபட்ட புலியூரின்கண்ணே,—வேள்வியிற் செம்மை பெற்று-யாகங்களாற் சிறப்பை எய்தி,—பொதுவிற் பொற்புறப் புண்டரீகத்துரி போர்த்த புங்கவன் புண்டரீகத்தடி பூசை செய்திடா - (கனக)சபையிலே பொலிவு பொருந்தப் புலித்தோல் போர்த்த நடராசருடைய தாமரைமலர்போலுந் திருவடிகளைப் பூசித்து,—அருள் நடத் தியானத்து உற்றுளார் - திருவருளினாலே நடனத்தைத் தியானித்தலோடு இருந்தார்,—தம்மை அர்ச்சனைபுரி தன்மையோர்கள் - அவர்களைப் பூசிக்கும் இயல்புடையவர்,—இம்மையும் மறுமையும் இன்பமெய்துவார் - இம்மையினும் மறுமையினும் இன்பத்தை அடைவார். எ-று. (கஎ-கஅ)

அளக்குநா லாயிர மந்த ணாளர்தாந்
தளக்கம லாசன புரத்துச் சார்ந்துளார்
வளத்துட னிருந்துமா தவனைப் பூசனை
யுளக்களி சிறப்பநோற் றுயர்ச்சி மேவினார்.

இ-ள். அளக்கும் நாலாயிரம் அந்தணாளர்தாம் - அளவிடப்படும் நாலாயிரம் முனிவர்கள்,—தளக்கமலாசனபுரத்து வளத்துடன் இருந்து - பிரமபுர(மென்னும்விஷ்ணுஸ்தல)த்திலே செல்வத்தோடு இருந்து,—மாதவனைப் பூசனை சார்ந்துளார் - திருமாலைப் பூசித்தல் பெற்றவராய்,—உளக்களி சிறப்ப நோற்று உயர்ச்சி மேவினார் - மனமகிழ்பெருகத் தவஞ்செய்து உயர்ச்சியை அடைந்தார். எ-று. (கக)

அல்லுறழ் கண்டன்வா ழருணை வெற்பினிற்
சொல்லுமை யாயிரந் தோமில் பூசுரர்
ரெல்லையி லன்பினா லீசன் றாண்மலர்
மல்லலம் பூசைசெய் தினிது வைகினார்.

இ-ள். சொல்லுந் தோமில் ஐயாயிரம் பூசுரர் - கூறப்படுங் குற்றமில்லாத ஐயாயிரம் முனிவர்கள்,—அல்லுறழ் கண்டன்வாழ் அருணைவெற்பினில் - நீலகண்டசுவாமி வாழுகின்ற அருணாசலத்தின்கண்ணே,—ஈசன் தாண்மலர் - (அக்)கடவுளினுடைய பாதாரவிந்தங்களை,—எல்லையில் அன்பினால் பூசைசெய்து - அளவிறந்த அன்போடு பூசித்துக்கொண்டு,—இனிது மல்லல் வைகினார் - இனிய செல்வத்தோடு இருந்தார்கள். (உ0)

அருஞ்சகந் நாதத்தா ருயி ரப்பெயர்ப்
பெருப்புலிக் கடவுளர் பிரசத் தும்பிருழ்

கருந்துள வத்தனைக் கருதிப் பூசனை
புரிந்துவான் சிறப்பொடு பொருந்தி வைகினுர்.

இ-ள். பெரும்பெயர் ஆறுயிரம் புவிக்கடவுளர்-பெருட்புகழையுடைய ஆறுயிரம் முனிவர்கள்,—அருஞ் சகர்நாதத்து - அருமையாகிய சகந்நாதத்திலே,—பிரசத் தும்பிசூழ் கருந் துளவத்தனைக் கருதிப் பூசனைபுரிந்து - தேனுக்கு வண்டுகள்சூழுங் கரிய துளசிமாலையையணிந்த திருமாலை நினைத்துப் பூசித்துக்கொண்டு,—வான் சிறப்பொடு பொருந்தி வைகினுர்-பெருஞ் சிறப்போடு பொருந்தி இருந்தார்கள். எ-று. (உக)

வாழிய மாதொரு பாகன் வாழ்திரு
வீழியின் மிழலையில் வேதத் தன்மையாற்
சூழுமே ழாயிரஞ் சுருதி யந்தண
ரேழையோர் பாகனை யிறைஞ்சி வைகினுர்.

இ-ள். சூழும் ஏழாயிரஞ் சுருதியந்தணர் - (நல்வினையைச்)சூழுகின்ற ஏழாயிரம் முனிவர்கள்,—வாழிய மாதொரு பாகன் வாழ் திருவீழியின் மிழலையில் - (உலகெல்லாம்)வாழுமாறு சிவபெருமான் வாழ்கின்ற திருவீழி மிழலையின்கண்ணே,—வேதத்தன்மையால் ஏழையோர்பாகனை இறைஞ்சி வைகினுர் - சுருதிவிதியால் (அந்த) உமாபதியைப் பூசித்து இருந்தார்கள். எ-று. (உஉ)

கூடலி னிருந்தருள் குழகன் பக்கமாய்
நாடுமெண் ணுயிரர் நான்கு வேதமும்
பீடுற வுணர்ந்துளார் பிறையின் வேணியை
யேடவிழ் மலரினு லருச்சித் தேத்தினுர்.

இ-ள். நாடும் எண்ணுயிரர் - (உறுதியை)விரும்பிய எண்ணுயிரவர்கள்,—கூடலின் இருந்து-மதுரையின்கண்ணே இருந்து,—அருள் குழகன் பக்கமாய் நான்கு வேதமும் பீடுற உணர்ந்துளார் - அருளிய சிவபெருமான் மாட்டுச் சதுர்வேதங்களையும் பெருமைபொருந்த உணர்ந்தவராய்,—பிறையின் வேணியை ஏடவிழ் மலரினுல் அருச்சித்து ஏத்தினுர் - (அச்)சந்திரசேகரரை இதழலர்ந்த பூக்களாற் பூசித்துத் துதித்தார்கள். எ-று. (உ௩)

சாற்றருந் தண்டக வனத்து மாதவ
மாற்றிய வொன்பதி னுயி ரத்தரு
மேற்றமாம் பூசனை யிராமன் றண்மலர்
போற்றியுட் களித்தவண் பொருந்தி வைகினுர்.

இ-ள். மாதவமாற்றிய ஒன்பதினுயிரத்தர்-பெருந்தவஞ்செய்த ஒன்பதினுயிரவர்கள்,—சாற்று அருந் தண்டகவனத்து-சொல்லப்படுகின்ற அருமையான தண்டகாரணியத்தில்,—ஏற்றமாம் பூசனை இராமன் தாண்மலர் போற்றி-உயர்வாகிய (சிவ)பூசையையுடைய இராமசுவாமியினதுபாதாரவிந்தங்களைத் துதித்து,—உட்களித்து அவண் பொருந்தி வைகினுர் - மனமகிழ்ந்து ஆண்டுப் பொருந்தி இருந்தனர். எ-று. (உ௪)

வாழுவின்மா தவத்துமா தவன்றன் கோகுலத்
தழிவில்வே தியர்பதி னுயி ரத்தர்தா

முழவலன் போடுமா லுபயத் தாண்மலர்
தொழுதுளக் களிப்பொடு சூழ்ந்து வாழ்ந்தனர்.

இ-ள். அழிவில் பதினாயிரத்தர் வேதியர் - அழிவற்ற பதினாயிர முனிவர்கள்,—வழுவின் மாதவத்து மாதவன்றன் கோகுலத்து - குற்றமற்ற பெருந் தவத்தினையுடைய விட்டுணுவினது கோகுலத்தின்கண்ணே,—உழுவலன்போடு மால் உபயத்தாண்மலர் தொழுது -பெருங்காதலோடு (அவ்)விட்டுணுவின் இருபாதாம்புயங்களையும் பணிந்து,—உளக்களிப்பொடு சூழ்ந்து வாழ்ந்தனர் - மனமகிழ்வோடு சூழ்ந்து இருந்தார்கள். எ-று. (உ௫)

சிறப்புயர் வதரிகாச் சிரமத் தைந்துடன்
குறிக்குமா றாயிரங் கோடி லந்தணர்
நறைத்துழா யலங்கல்சூழ் நார ணன்பதம்
பிறப்பிறப் பொழிதரப் பேணி யுற்றுளார்.

இ-ள். ஐந்துடன்குறிக்குமாறாயிரங் கோடிலந்தணர் - பதினொராயிரம் முனிவர்கள்,—சிறப்புயர் வதரிகாச்சிரமத்து - சிறப்பானுயர்ந்த வதரிகாச்சிரமத்திலே,—நறைத்துழாயலங்கல் சூழ் நாரணன் பதம்-நறுந்துளசிமாலையை அணிந்த விட்டுணுவின் பாதங்களை,—பிறப்பிறப்பு ஒழிதரப் பேணி உற்றுளார் - ஆக்க அழிவுகளை நீக்குமாறு வழிபட்டு இருந்தார்கள். எ-று.

துதிதரு முகிலுறாச் சுவாமி மாமலைப்
பதியினின் மிக்குறு பன்னி ராயிரர்
விதிநிகர் வேதியர் வெற்றைச் சேவகன்
முதியதாட் டாமரை முடிக்கொ டுற்றுளார்.

இ-ள். மிக்குறு பன்னிராயிரர் விதிநிகர் வேதியர் - எஞ்சியுள்ள பன்னீராயிரவர்களாகிய பிரமனையொத்த முனிவர்கள்,—துதிதரு முகிலுறாச் சுவாமிமாமலைப்பதியினில் - புகழப்படும் மேகங்கள்நீங்காத சுவாமிமலைத் தலத்திலே,—வேற்றைச் சேவகன் முதியதாட்டாமரை முடிக்கொடு உற்றுளார் - வேலாயுதக்கடவுளினது பழைய பாதாரவிந்தங்களைச் சிரமேற் கொண்டு இருந்தனர். எ-று. (உஎ)

அளவெழு பானொடெண் ணாயி ரம்பெறு
வளனுறு திரிசுதந் திரத்தர் வான்றிரைக்
குளிர்பனிக் கருங்கடற் கோசி கம்புனை
தளிரியன் மல்குறத் தவத்தின் வைகினார்.

இ-ள். எழுபானொடெண்ணாயிரம் அளவு பெறு வளனுறு திரிசுதந்திரத்தர் - (இங்ஙனமே) எழுபத்தெண்ணாயிரமாகிய அளவைக்கொண்ட மாண்புபொருந்திய திரிசுவதந்திரர்கள்(யாரும்),—வான்றிரைக் குளிர் பனிக் கருங்கடற் கோசிகம் புனை தளிரியல் மல்குற - பெருந்திரைகளையுடைய மிகக்குளிர்ந்த கருங்கடலாகிய உடையைக்கொண்ட (பூமியென்னும்)பெண் சிறப்புற,—தவத்தின் வைகினார் - (மேற்சுட்டியபடி அங்கங்கே) தவத்தினோடு அமர்வாராயினார். எ-று. (உ௮)

எவர்க ளாயினு மிவரை நெஞ்சிடைப்
பாவனை செய்யினும் பண்பி னேத்தினும்

பூவடித் தாமரைப் போது தாழினுந்
தேவரோர் மூவர்க்குஞ் சிறப்புச் செய்துளார்.

இ-ள். ஏவர்களாயினும் இவரை நெஞ்சிடைப் பாவனை செய்யினும் பண்பின் ஏத்தினும் - யாவராயினும் இவர்களை உள்ளத்துத் தியானிப்பினுங் குணத்தோடு துதிப்பினும்,—பூ அடித்தாமரைப் போது தாழினும் - பொலிவாகிய (இவருடைய) பாதாரவிந்தங்களை வணங்கினும்,—தேவரோர் மூவர்க்குஞ் சிறப்புச் செய்துளார் - அவர்கள் முத்தேவர்கட்கும் வழிபாடு செய்தவராவர். எ-று. (௨௧)

**திரிசுவதந்திரர் வரலாறுரைத்த அத்தியாயம்**
**முற்றிற்று.**

ஆகத் திருவிருத்தம் ௫௦௫.

## ௧௧-வது மாதபூசைவிதியுரைத்த அத்தியாயம்.

பொறிவழியிற் புலன்செலுத்தா வியாசமுனி சுகன்முகத்தைப் பொருந்த நோக்கிக், குறியமுனிக் கறமுரைத்த செங்கனிவாய்க் குருபரன்றாள் குறித்து மாதந், தொறுமுறையிற் பூசனையாற் றிடு மாறு மவனருளிற் றொடர்ந்த ஞானத், துறுசுருதி யுணர்ந்ததிரி சுதந்திரர்செய் கையும்விதியி னுரைப்பான் மாதோ.

இ-ள். பொறிவழியிற் புலன்செலுத்தா வியாசமுனி - இந்திரியங்களின்வழியால் (மனத்தை) விடயங்களிற் போக்காத வியாசமுனிவன்,—சுகன்முகத்தைப் பொருந்த நோக்கி - சுகமுனிவனது முகத்தை (அன்பு) பொருந்தப் பார்த்து,—குறியமுனிக்கு அறம் உரைத்த செங்கனிவாய்க் குருபரன் தாள் குறித்து - அகத்தியமுனிக்குச் சிவதருமங்களைப் போதித்த கொவ்வைக்கனிபோலும் வாயையுடைய குமரகுருசுவாமியின் பாதங்களைத் தியானித்து,—அவன் அருளின் தொடர்ந்த ஞானத்து உறு சுருதி யுணர்ந்த திரிசுதந்திரர் செய்கையும் - அவரது அருளோடு இயைந்த அறிவைப்பெற்ற வேதங்களையுணர்ந்த திரிசுவதந்திரர்களுடைய பெருஞ்செயல்களையும்,—மாதந்தொறும் முறையிற் பூசனை ஆற்றிடும் ஆறும் - மாசந்தோறுங் கிரமமாகப் பூசை செய்யும் பயனையும்,—விதியின் உரைப்பான் - விதிப்படி கூறுவான். எ-று. (௧)

கூறுமிரண் டாயிரரு மிருக்காகு முதல்வேதக் குழுவோ ருள்ள, மாறுபட வருங்காம முதலாகும் பகையனைத்து மரபின் வென், றோர், தேறுபெறு ஞானமெல்லாந் தாமுணர்ந்து பிறர்க்குரைக், குஞ் செயலோர் செவ்வே, ளாமெழுத்து மம்புலத்து ளடக்கி யொரு நால்வேத மங்கமாறும்.

இ-ள். கூறும் இரண்டாயிரரும் - (மேலே)சொல்லிய (செயந்தியிலுள்ளாராகிய) இரண்டாயிரவர்களும்,—இருக்காகும் முதல்வேதக் குழுவோர் - இருக்கென்னும் முதலாம்வேதத்தையுடைய கூட்டத்தவர்கள்,—உள்ளம் மாறுபடவருங் காமமுதலாகும் பகையனைத்தும் மரபின் வென்றோர் - மனத்தின் மாறுப்வருங் காமாதியான பகைகளையெல்லாம் முறை

யானேனென்றவர்கள்,—தேறுபெறு ஞானமெல்லாந் தாமுணர்ந்து பிறர்க்கு உரைக்குஞ் செயலோர் - தெளிவுபெற்ற ஞானமுழுதையுந் தாமறிந்து பிறர்க்கு அறிவிக்குஞ் செய்கையையுடையோர்,—செவ்வேள் ஆறெழுத்தும் அப்புலத்துள் அடக்கி - முருகபிரானது சடக்கரங்களையும் மனத்தில் அடக்கி,—ஒருநால் வேதம் அங்கமாறும் - நான்கு வேதங்களையும் ஆறு அங்கசாத்திரங்களையும் எ-று. (உ)

முற்றுணரும் பெரியோர்க ளருமகத்தின் கருமமுற்று முரவோர் வேதத், துற்றசுபா சுபகரும மனைத்தினையுந் தவறாதுள் ளோது மேலோர், பற்றிகலி லாதுறைவோர் முத்தேவர் தம்பதமும் பழித்து வாய்ந்த, பெற்றமுகைத் தவன்சரண பங்கயமே பொருளாகப் பேணு நீரார்.

இ-ள். முற்றுணரும் பெரியோர்கள் - முற்றவறியும் பெருமையுடையவர்கள்,—அரு மகத்தின் கருமம் முற்றும் உரவோர் - அரிய வேள்வித்தொழில்களைச் செய்துமுடிக்கும் அறிவுடையவர்கள்,—வேதத்து உற்ற சுபாசுப கருமம் அனைத்தினையுந் தவறாது உள் ஓது மேலோர் - சுருதிகளிற் பொருந்திய சுபாசுபகருமமந்திரங்கள் எல்லாவற்றையுந் தவறவிடாது மனங்கொண்டு ஓதிய மேலவர்கள்,—பற்றிகல் இலாது உறைவோர் - விருப்பு வெறுப்பு இன்றி இருப்பவர்,—முத்தேவர் தம்பதமும் பழித்து - முத்தேவர்களுடைய தானங்களையும் (நிலையிலவென்று) அவமதித்து,—வாய்ந்த பெற்றமுகைத்தவன் சரணபங்கயமே பொருளாகப் பேணு நீரார் - சிறந்த இடபாரூடருடைய பாதாரவிந்தங்களையே உறுதியாகக்கொண்டு போற்றுமியல்பினர். எ-று. (௩)

ஐப்பசிசுக் கிலநவமி கார்த்திகையிற் சுக்கிலத்தட் டமிவை காசிச்
சுப்பிரபக் கத்தொருமுன் றும்பக்க மாசியினிற் சுவேத பக்கஞ்
செப்பருஞ்சத் தமியான யுகாதிநான் மூன்றுகுந் திங்க டோறு[ம்.
மெய்ப்படுபூர் ணிமைமகர சுக்கிலத்தேழ் பதினொன்று மேய பக்க

சொல்லுமனுப் புரட்டாதிப் பிறபக்கப் பிரதமையைத் தொட்டு முன்று, மல்லலஞ்சீர்ச் சுவேதபக்க முன்றுகு மாலையமா மாசந் தோறும், புல்லியபிற் பக்கவுவாப் பன்னிரண்டுஞ் சங்கிரமப் பொழுதீ ராறும், வெல்லரிய வைதிருதி வியதிபாத நாலாறு மேனு மூன்றும்.

தனுமகரங் குடமீனத் தபரபக்க சத்தமிசார் நவமி மேய, வரு வெனுமட் டகையிவையி னூடுவரு மட்டமிநான் கான பக்க, மினியமகா வட்டகையா மித்தொகைதொண் ணூற்றாறு மிடுஞ்சி ரார்த்த, மனுவினெறி வழிமரபிற் றென்புலத்தோர் தங்களுக்கு வழங்குந் தூயோர்.

இ-ள். ஐப்பசி சுக்கிலநவமி கார்த்திகையிற் சுக்கிலத்தட்டமி வைகாசிச் சுப்பிரபக்கத்து ஒருமூன்றும்பக்கம் மாசியினிற் சுவேதபக்கஞ் செப்பருஞ் சத்தமி ஆன யுகாதி - ஐப்பசியிற் பூருவநவமி கார்த்திகையிற் பூருவ அட்டமி வைகாசியிற் பூருவ திருதியை மாசியிற் பூருவ சத்தமி என்னும் யுகாதிகள் நான்கும்,—நான்மூன்றுகுந் திங்கடோறும் மெய்ப்படு பூர்ணிமை

மகரசுக்கிலத்து ஏழ் பதினொன்று மேயபக்கஞ் சொல்லுமனு - பன்னிரண்டு மாசங்களிற் பூரணைகள் தையிற் பூருவசத்தமி ஏகாதசி என்று சொல்லப் பட்ட மனுவாதிகள் பதினான்கும்,—புரட்டாதிப் பிற்பக்கப் பிரதமையைத் தொட்டு மூன்றும் மல்லலஞ்சேர்ச்சுவேதபக்கம் மூன்றுகும் மாளயம் - புரட்டாதியின் அபரப்பிரதமைமுதல் மேல்வரும் பூருவபக்கத்தின் மூன்றுயுள்ள மாளயபக்கநாட்பதினைந்தும்,—மாமாசந்தோறும் புல்லிய பிற்பக்கவுவாப் பன்னிரண்டும் - பெரிய மாசந்தோறும் பொருந்திய அமாவாசைகள் பன்னிரண்டும்,—சங்கிரமப்பொழுது ஈராறும் - சங்கிராந்திகாலம் பன்னிரண்டும்,—வெல் அரிய வைதிருதி விதிபாதம் நாலாறுமேலுமூன்றும்- மேம்படுகின்ற அரிய (பதின்மூன்று) வைதிருதிகளோடு (பதினான்கு) வியதிபாதங்களாகிய இருபத்தேழும்,—தனுமகரங் குட மீனத்து அபரபக்க சத்தமி சார் நவமி மேய அநுவெனுமட்டகை-மார்கழி தை மாசி பங்குனிகளிற் பிற்பக்கத்துச் *சத்தமிகளும் நவமிகளுமாய அநுவட்டகைகள் எட்டும்,—இவையினூடு வரும் அட்டமிப்பக்கம் நான்கான இனிய மகாவட்டகை - (சுட்டிய நான்குமாசங்களிலுஞ் சத்தமி நவமிகளாய) இவற்றினிடையே வரும் அட்டமிதிதிகள் நான்காகிய இனிய மகாவட்டகைள் நான்கும்,—ஆம் இத்தொகை தொண்ணூற்றாறும் இடுஞ் சிராத்தம் - ஆகிய இந்தத் தொண்ணூற்றாறு காலங்களிலுஞ் செய்யற்பாலனவாகிய சிராத்தங்களை,—மனுவினெறி வழி மரபின் தென்புலத்தோர் தங்களுக்கு வழங்குந் தூயோர் - மனுஸ்மிருதியின்வழியே முறையாகப் பிதிரர்களுக்குச் செய்யுஞ் சுத்திமான்கள். எ-று.

யுகாதி-ச, மனுவாதி-கச, மாளயபக்கம்-கரு, அமாவாசை-கஉ, சங்கிராந்தி-கஉ, வைதிருதி, விதிபாதம்-உஎ, அநுவட்டகை-அ, மகாவட்டகை-ச. ஆ கசுசு. (ச-ரு-சு)

மேயசுவா காகாரஞ் சுதாகாரம் வஷட்கார மிக்கமூன்றி, லாய விதி மந்திரத்தின் மிக்குயர்ந்தோர் பகலிரவு மனுட்டானத்திற், றாயர்கொடிக் கினிதூட்டி யதிதியரோ டிருந்துணவு துய்ப்போர் பூதி, காயமணிந் தரன்மணியு மணியாக வாகமெலாங் கவினப் பூண்போர்.

இ-ள். மேய சுவாகாகாரஞ் சுதாகாரம் வஷட்காரம் மூன்றின் மிக்க - சுவாகாகாரம் சுவதாகாரம் வஷட்காரம் என்னும் மூன்றனோடும் (ஏற்றபெற்றிகூடுதலான்)மிகுந்த,—விதி ஆய மந்திரத்தின் மிக்குயர்ந்தோர் - விதிக்கப்பட்ட மந்திர(உச்சாரண)த்தான் மிக உயர்ந்தவர்,—பகலிரவும் அனுட்டானத்தின் தூயர் - பகலுமிரவும் (நித்தியாதிகளை) அனுட்டித்தலாற் சுத்தியுடையர்,—கொடிக்கு இனிதூட்டி அதிதியரோடு இருந்து உணவுதுய்ப்போர் - காகங்கட்குப் பலியூட்டி விருந்தரோடு இருந்து புசிப்பவர்,—பூதி காயம் அணிந்து அரன்மணியும் ஆகமெலாம் அணியாகக் கவினப் பூண்போர் - திருநீற்றை உடலின் அணிந்து உருத்திராக்கங்களையும் மேனிமுழுதினும் ஆபரணமாய் விளங்கப் பூண்பவர்கள். எ-று. (எ)

இருக்காலு முக்காலுந் தூயகந்த புட்கரிணி யினிதின் மூழ்கி, மருக்காலு மலரெடுத்துக் குகனையருச் சனைபுரிந்து வணங்கி ஞானச், செருக்காலுங் களிசிறப்போ ரவர்முகச்செந் தாமரையைத் தியான மாக, வொருக்காலுங் ணினைப்பவரை யிருக்காலு மெடுத்துரைப்ப வலப்பின் றுமால்.

இ-ள். தூய கந்தபுட்கரிணி முக்காலும் இருக்கால் இனிதின்மூழ்கி- சுத்தமான கந்தபுட்கரிணியிலே முப்போதும் வேதகோஷத்தோடு இனிது முழுகி,—மருக்காலும் மலர் எடுத்துக் குகனை அருச்சனைபுரிந்து வணங்கி- நறுமணம் வீசும் பூக்களை எடுத்துச் சுவாமியைப் பூசித்துத் தொழுது,— ஞானச் செருக்கு ஆலுங் களிசிறப்போர் - சிவஞானச்செருக்கினால் நிறைந்த மகிழ்ச்சி சிறப்பவர்களாம்,—அவர் முகச்செந்தாமரையை - (இத்துணைச்சிறப்புடைய திரிசுவதந்திரராகிய) அவர்களுடைய முகங்களாகிய செந்தாமரைமலர்களை,—உள் ஒருக்கால் தியானம் ஆக இருக்காலும் நினைப்பவர் ஐ - மனத்தை ஒருக்குதலோடு தியானயோகம் ஆமாறு (காலை மாலையென்னும்) இருபோதிலும் நினைப்பவர்களது சிறப்பு,—எடுத்துரைப்ப உலப்பின்றாம் - எடுத்துக் கூற முடிவுபெறல் இல்லாததாம். எ-று. (அ)

நவையறுகாட் சியராகிக் காலமொரு மூன்றுமுள நாடித் தூய,
தவவடிவா குந்திரிசு தந்திரத்தர் தங்களிடஞ் சார்ந்து சார்ந்தூண்,
கவளமெடுத் தருந்திடினு நீர்சிறங்கை யருந்திடினுங் கவற்சி பூண்ட, பவமகன்று மேலாய பரபோக மடைந்தூழின் பகைவெல் வாரால்.

இ-ள். நவையறு காட்சியராகிக் காலமொரு மூன்றும் உள நாடித் தூய தவவடிவாகுந் திரிசுதந்திரத்தர்தங்களிடஞ் சார்ந்து சார்ந்து - நிருமல ஞானத்தினராய் முக்காலங்களினும் உள்ள நிகழ்ச்சிகளை உணர்ந்து சுத்த தவரூபராகிய திரிசுவதந்திரர்களிடத்துப் பலகாற் சேவைசெய்து,—ஊண் கவளம் எடுத்தருந்திடினும் நீர்சிறங்கை அருந்திடினும் - (அவருடையபிரசாதமாகிய) ஒருதிரளையுணவை எடுத்து உட்கொள்ளினும் ஒருசிறங்கை நீரை உட்கொள்ளினும்,—கவற்சி பூண்ட பவம் அகன்று மேலாய பரபோகம் அடைந்து ஊழின்பகை வெல்வார் - (அங்ஙனஞ்செய்தவர்) கவலைபொருந்திய பிறவியை நீங்கி மேலான பரமசுகத்தை அடைந்து விதியாகிய பகையை வெல்வர். எ-று. (கூ)

வேறு.

இத்திரி சுதந்திர ரென்னும் பூசுரர்
வத்திர சததளம் பார்க்கு மாண்பினோர்
குத்திரப் பாவவேர் குறைத்து மேலதா
முத்திபெற் றரனடி முளரி சார்வரால்.

இ-ள். இத்திரிசுதந்திரரென்னும்பூசுரர் வத்திர சததளம் பார்க்கும் மாண்பினோர் - இத்திரிசுவதந்திரப்பிராமணருடைய முகத்தாமரைகளைத் தரிசிக்குங் குணமுடையார்,—குத்திரப் பாவவேர் குறைத்து - வஞ்சமாகிய பாவமூலங்களைத் தேய்த்து,—மேலதாம் முத்தி பெற்று அரனடி முளரி சார்வர் - மேலாய முத்தியை அடைந்து சிவபாதாரவிந்தங்களைச் சேர்வர். எ-று. (கO)

திரிசுதந் திரத்தராஞ் செல்வ மிக்குள
விருபிறப் பாளருக் கிடுக்கண் செய்துளோர்
வெருவருஞ் சேதக வெவ்வழற் பெரு
நரகிடை யளப்பில்பல் கால நண்ணுவார்.

இ-ள். செல்வமிக்குள திரிசுதந்திரத்தராமிருபிறப்பாளருக்கு இடுக்கண் செய்துளோர் - (அருட்) செல்வமிகுந்த திரிசுவதந்திரபூசுரருக்குத்

தீங்குசெய்தவர்கள்,—வெருவருஞ் சேதக வெவ்வழற் பெருநரகிடை - பயங்கரமான சேறுஞ் சுடுதீயும் பொருந்திய பெரிய நரகத்தில்,—அளப்பில்பல் காலம் நண்ணுவார் - அளவற்ற நெடுங்காலம் இருப்பார். எ-று. (கக)

கந்தனை வந்தனைக் கடவுள் வேதியர்
சிந்தனை நோவுறச் செப்பு வாரவர்
முந்துறச் சீறுவோர் முகங்கண் டுள்ளக
நிந்தையே புரிதர நினைக்கு நெஞ்சினூர்.

இ-ள். கந்தனை வந்தனைக் கடவுள் வேதியர் சிந்தனை நோவுறச் செப்புவார் - முருகபிரானை வழிபடும் (அத்) திவ்விய பூசுரர் மனம்வருந்தப் பேசுபவரும்,—அவர் முந்துறச் சீறுவோர் - அவரெதிரே சினப்பவரும்,—முகங்கண்டு உள்ளகம் நிந்தை புரிதர நினைக்கும் நெஞ்சினூர் - (அவர்) முகங்களைப் பார்த்து அகத்தே அவமதிசெய்ய எண்ணும் மனத்தினரும். எ-று (கஉ)

அளப்பருங் கொடுநர கழுந்து வார்மதித்
துளத்திடை வணங்குவா ரொளிரும் பூஞ்சத
தளக்கம லாசனஞ் சார்ந்த செஞ்சுடர்
விளக்கருள் பெற்றுவே ளருளு மேவுவார்.

இ-ள். அளப்பருங் கொடு நரகு அழுந்துவார் - அளவிடலாகாத கொடுமைகளையுடைய நரகங்களில் அழுந்துவார்கள்,—உளத்திடை மதித்து வணங்குவார் - மனத்தில் (அப்பூசுரரைத்) தியானித்து வணங்குபவர்கள்,—ஒளிரும் பூஞ் சததளக் கமலாசனத் தளிமச் செஞ் சுடர் விளக்கு அருள் பெற்று - விளங்கும் பொலிவான நூற்றிதழ்த் தாமரைமலராசனத்தையுடைய அழகான செஞ்சோதித்தீபம்போல்வா(ஞய பிரமதேவ)னது அருளை அடைந்து,—வேள் அருளும் மேவுவார் - குமாரசுவாமியினது திருவருளையுஞ் சேர்வார். எ-று. (கங)

திரிசுதந் திரருளத் தெய்வத் தாமரை
யரதனச் சிங்கவேற் றணையின் வள்ளியுஞ்
சரவணோற் பவனுமா தவத்துச் செந்தியம்
புரநிறைந் திருத்தல்போற் புகுந்து வாழ்வரால்.

இ-ள். திரிசுதந்திரர் உளத் தெய்வத்தாமரை அரதனச் சிங்கவேற்றணையில் - திரிசுவதந்திரர்களுடைய மனங்களென்னுந் திவ்வியத்தாமரை மலர்களாகிய இரத்தினசிங்காசனங்களிலே,—வள்ளியுஞ் சரவணோற்பவனும் - வள்ளியம்மையாரு(ந் தெய்வயானையாரு)ஞ் சரவணபவரும்,—மாதவத்துச் செந்தியம்புரம் நிறைந்திருத்தல்போற் புகுந்துவாழ்வர் - பெருந்தவத்தலமாகிய செயந்திபுரத்தில் நிறைந்திருத்தல்போலப் புகுந்துவாழ்வார்கள். எ-று. (கச)

ஆதலாற் பரகதி யடைய வேண்டினோர்
நீதிலாத் திரிசுதந் திரரைச் சேவிப்பா
ரேதுதா னஞ்செய வெண்ணினுமவ்
வேதியர் தங்கள்பாற் செய்யவேண்டு மால்.

இ-ள். ஆதலால் - ஆகையினாலே,—பரகதி அடைய வேண்டினோர் - முத்தியைப்பெற விரும்பினவர்,—நீதிலாத் திரிசுதந்திரரைச் சேவிப்பார்- நீக்கற்ற திரிசுவதந்திரரை வழிபடுவோர்,—ஏது தானஞ் செய எண்ணினும் அவ்வேதியர்தங்கள்பாற் செய்யவேண்டும் - யாதுதானத்தைச் செய்ய நினைப்பினும் (நினைத்தவர் அவ்வத்தானங்களை) அப்பூசுரரிடத்தே செய்தல் வேண்டும். எ-று. (௧௫)

உத்தம தானமே முதல வொண்பொரு
ளெத்தனை தானமென் றாலும் வேற்கரத்
தத்தனுக் குரியவந் தணர்க்குச் செய்குநர்
முத்திபெற் றிருப்பர்நான் மொழிவன் கேட்டியால்.

இ-ள். வேற்கரத்தத்தனுக்குரிய அந்தணர்க்கு ஒண்பொருள் எத்தனை தானமென்றாலும் - வேலாயுதக்கடவுளுக்கு உரிய அப்பூசுரர்கட்கு(ச் செய்வது) ஒண்மையாகிய பொருள்களில் எவ்வளவு சிறுதொகையைக் கொடுத்தலேயாயினும்,—முதல உத்தம தானமே- (அது) முதன்மையாகிய உத்தமதானமேயாம்,—செய்குநர் முத்தி பெற்றிருப்பர் - (அதனைச்) செய்பவர் முத்தியைச் சேர்ந்திருப்பர்,—நான் மொழிவன் கேட்டி - நான் (இன்னுங்) கூறுவேன் கேட்குதி. எ-று. (௧௬)

தெளிந்திவர் பெருமையைச் செப்ப வேண்டியே
யுளங்கொடு நினைப்பினு முலப்பின் றாகுமா
லிளங்கும ரேசன்சீ ரிசைத்த பான்மையா
லளந்தனன் புதல்வநீ யறியும் வண்ணமே.

இ-ள். தெளிந்த இவர்பெருமையைச் செப்பவேண்டி - (மேலோர்களாலே) தெளியப்பட்ட இவர்மகிமைகளைக் கூறவிரும்பி,—உளங்கொடு நினைப்பினும் உலப்பின்றாகும் - மனத்தால் நினைப்பினும் (அவைகள் அளவுபட்டு) ஒழிதலில்லையாம்,—இளங்குமரேசன் சீர் இசைத்தபான்மையால் புதல்வநீ அறியும் வண்ணம் அளந்தனன் - குமாரசுவாமியினது திருவருள் கூட்டியவாற்றால் மகனே நீ அறியுமாறு அளவாக்கி(க்கூறி)னேன். எ-று ()

ஆயுமீ ராயிர மந்த ணாளரோ
டேயவேற் குமர னுக் கினிய கார்த்திகைத்
தூயகார்த் திகைதனிற் சொன்மு காரம்பப்
பாயுமென் புணரியிற் படிந்துள் ளன்பினால்.

பரவுவா ரிம்மையிற் பாரின் வேந்தரா
யிருமைபெற் றம்மையி னெய்து பேரின்பத்
திருவொடு புணர்ந்துசெவ் வேள்செந் தாமரை
புரையடி நிழலினிற் புகுந்து வைகுவார்.

இ-ள். ஆயும் ஈராயிரம் அந்தணாளரோடு ஏய வேற்குமரனுக்கு இனிய கார்த்திகைத் தூய கார்த்திகைதனில் - ஆராய்கின்ற இரண்டாயிரம் வேதியர்களோடு பொருந்திய வேலாயுதக் கடவுளுக்கு இனியதான கார்த்திகை மாதத்துத் திருக்கார்த்திகையிலே,—சொன் முகாரம்பப் பாயும் மென் புணரியிற் படிந்து - புகழையுடைய வதனாரம்பமென்னும் பரந்த மென்மையான சமுத்திரத்தின் மூழ்கி,—உள் ளன்பினாற் பரவுவார் - மனவன்போடு

துதிப்பவர்கள்,—பாரின்வேந்தராய் இருமைபெற்று-(பொருள்சிறந்து) நில வுலகரசராய் (ஏனை அறமும் இன்பமுமாய) இரண்டையும் பெற்று,— அம்மையின் செவ்வேள் செந்தாமரைபுரையடி நிழலினிற் புகுந்து - மறு மையின் முருகபிரானது செய்யபாதாரவிந்தங்களின் நிழலிற் சார்ந்து,— எய்து பேரின்பத்திருவொடு புணர்ந்து வைகுவார் - அடைவதாகிய பேரின் பச் செல்வத்தோடு சேர்ந்து இருப்பார். எ-று. (கஅ கக)

பன்னிரு திங்களும் பரவு கார்த்திகை
யன்னநாட் சன்னிதி யாழி மூழ்கிவெம்
பன்னகப் பகைமயிற் பகவன் றாளிணை
சென்னிசேர்த் தினர்கதி செப்பற் பாலதே.

இ-ள். பன்னிருதிங்களும் பரவுகார்த்திகை அன்னநாட் சன்னிதி யாழி மூழ்கி - பன்னிரண்டு மாதங்களிலும் புகழப்படுங் கார்த்திகைகளா கிய அத்தினங்களிலே சன்னிதிக்கடலின் முழுகி,—வெம் பன்னகப்பகை மயிற் பகவன் தாளிணை சென்னிசேர்த்தினர் கதி செப்பற் பாலதோ - கொடிய அரவின்பகையாகிய மயிலையுடைய சுவாமியின் பாதங்களிரண்டை யுஞ் சிரமேற்கொண்டவரது கதி சொல்லத்தக்கதா. எ-று. (உ0)

மாகவான் றிங்களின் வருமு காரம்ப
மேகநா ளிரண்டுநா ளினிய மூன்றுநா
ளோகையோ டாடிவே ளுபய தாண்மலர்ப்
போகமுண் டார்சன னத்தைப் போக்குவார்.

இ-ள். மாக வான் திங்களின் வரு முகாரம்பம் - மாசியாகிய மகிமை யையுடைய மாசத்தில் வந்து வதனாரம்பதீர்த்தத்திலே,—இனிய மூன்று நாள் இரண்டுநாள் ஏகநாள் ஓகையோடு ஆடி - உத்தமமான மூன்று நாளி லாயினும் (மத்திமமான) இரண்டுநாளிலாயினும் (அதமமான) ஒருநாளிலா யினும் பிரீதியோடு முழுகி,—வேள் உபயதாண்மலர்ப் போகம் உண்டார் - சுவாமியினுடைய உபயபாதாரவிந்தங்களின் (தரிசன) ஆனந்தத்தை நுகர்ந் தவர்,—சனனத்தைப் போக்குவார் - பிறவியை நீக்குவார். எ-று. (உக)

சித்திரை முப்பதுந் திரைமு காரம்பத்
தத்துநீர் படிந்துவேள் சரணஞ் சேவிக்கு
முத்தரே கந்தவேண் முருகன் முத்திசேர்
பத்தரே யன்றிவே றுரைக்கற் பாலரோ.

இ-ள். சித்திரை முப்பதும் - சித்திரைமாதத்து முப்பது நாட்களினும்,— திரை தத்து முகாரம்பநீர் படிந்து வேள்சரணஞ் சேவிக்கும் உத்தர்- திரைகள் பாய்கின்ற முகாரம்பதீர்த்தத்தின் முழுகிச் சுவாமியின் பாதங் களை வழிபடுந் திருவாளர்,—கந்தவேண் முருகன் முத்தி சேர் பத்தரே - (அக்) கந்தசுவாமியாரின் முத்தியைச் சேரும் பத்திமான்களே,—அன்றி வேறுரைக்கற்பாலரோ - (அவர் அவ்வாறே) அன்றிப் பிறிதுபடி கூறற் பாலரா. (அல்லர்) எ-று. (உஉ)

கந்தபுட் கரிணிநீர் களித்து மாகநாண்
முந்துறப் படிந்துவேண் முருகற் போற்றுவா

ரிந்தமா நிலத்துளா ரெவர்க்கு முன்னரே
வந்துமா முகத்தினன் மலினந் தீர்ப்பரே.

இ-ள். மாக நாள முந்துறக் கந்தபுட்கரிணிநீர் களித்துப் படிந்து வேண்முருகற் போற்றுவார் - மாசிமாதத்து (முப்பது) நாட்களினும் முற்பட்டுக் கந்தபுட்கரிணிதீர்த்தத்தின் மகிழ்ந்து முழுகி வேலாயுத சுவாமியை வழிபடுபவர்கள்,—இந்தமாநிலத்துளாரெவர்க்கும் முன்னரே - இந்நிலத்துள்ளாரியார்க்கும் முன்னனவர்களே,—வந்து மாமுகத்தினன் மலினந் தீர்ப்பர் - (எவர்களும் பத்தியோடு அவர்கள் சன்னிதியில்) வந்து திருமுக (தரிசன)த்தினாலே (தம்) பாவங்களைத் தீர்த்துக்கொள்வர். எ-று. (உ௩)

சித்திரை யைப்பசித் திங்கட் காலமு
முத்தர தெக்கிண யனமு மோர்வில்வேண்
மைத்துனர்ப் பரவுவார் வாச பேயத்தை
நித்தமுஞ் செய்குநர் நிலைமை யெய்துவார்.

இ-ள். சித்திரை ஐப்பசித்திங்கட்காலமும் - சித்திரை ஐப்பசி மாத (சங்கிராந்தி)காலங்களிலும்,—உத்தர தெக்கிணயனமும் - உத்தராயண தெக்கிணயன (சங்கிரம)ங்களிலும்,—ஓர்வில்வேண்மைத்துனர்ப் பரவுவார்-குமாரசுவாமியாரை(த்தீர்த்தஸ்நானத்தோடு) வழிபடுபவர்,—வாசபேயத்தை நித்தமுஞ் செய்குநர் நிலைமை எய்துவார் - வாசபேயயாகத்தை நாடோறுஞ் செய்பவர்க்குரிய உறுதியை அடைவர். எ-று. (உச)

சங்கிர மந்தொறுஞ் சமயம் பார்த்துமுன்
னங்குள மாவத ஞரம் பத்துநீர்
பொங்கிய கந்தபுட் கரிணிப் பூம்புனன்
மங்கலச் சுருதிநூன் மரபின் மூழ்கியே.

இ-ள். சங்கிரமந்தொறுஞ் சமயம் பார்த்து - சங்கிராந்திகடோறும் (புண்ணிய) காலத்தை ஆராய்ந்து,—அங்கு முன்னுள மாவதஞரம்பத்து நீர் - ஆண்டுச் சன்னிதானத்துள்ள பெரிய முகாரம்பதீர்த்தத்திலும்,—பொங்கிய கந்தபுட்கரிணிப் பூம்புனல் - பொலிந்த கந்தபுட்கரிணிதீர்த்தத்திலும்,—மங்கலச் சுருதிநூன் மரபின் மூழ்கி - சிவவேதசாத்திரவிதிப்படி முழுகி. எ-று. (உ௫)

சிறுபய றளவிய செந்நெ லோதன
மறுமுகத் தவன்றனக் கமுதுசெய் வித்தோ
ருறுமக நூறுசெய் துயர்ந்த வான்கதி
பெறுகுவ ரெனமறை பிரித்துப் பேசுமால்.

இ-ள். அறுமுகத்தவன்றனக்குச் சிறுபயறளவிய செந்நெலோதனம் அமுதுசெய்வித்தோர் - ஆறுமுகசுவாமிக்குச் சிறுபயறுகலந்த செந்நெற் சோற்றை நிவேதித்தவர்,—மகநூறு செய்து உறு உயர்ந்தவான்கதி பெறுகுவர் - வேள்விநூற்றைச் செய்து அடையும் உயர்ந்த பெருங்கதியை அடைவர்,—என மறை பிரித்துப் பேசும் - என்று சுருதிகள் (அவரைப் பிறரிற்) பிரித்துச் சொல்லும். எ-று. (உசு)

அடியோர் முப்பது மாவின் வெண்டதி
நீடிய வோதன நிவேதிக் தன்பினிற்

கோடலங் கண்ணிசூழ் குமரற் போற்றுவார்
நாடரு மவன்பத நளின மெய்துவார்.

இ-ள். ஆடி ஒர்முப்பதும் - ஆடிமாதத்து முப்பதுநாளிலும்,—ஆவின் வெண்டதி நீடிய ஓதனம் நிவேதித்து - பசுவின் வெண்டயிரோடு உயர்ந்த அன்னத்தை நிவேதித்து,—அன்பினிற் கோடலங்கண்ணிசூழ் குமரற் போற்றுவார் - அன்போடு கார்த்திகைமாலையை அணிந்த சுவாமியைச் சேவிப்பவர்,—நாடரும் அவன் பதநளினம் எய்துவார் - (அபக்குவரால்) அறிதற்கரிய அவருடைய பாதாரவிந்தங்களை அடைவார். எ-று. (உஎ)

ஆவணித் திங்களி னரிய வேதத்தான்
மூவிரு முகத்தனை முழுதும் போற்றுவா
ரோவிலா வெச்சநா றுஞற்று வார்பெறுந்
தாவிலாப் பரகதி சார்வர் திண்ணமே.

இ-ள். ஆவணித்திங்களின் முழுதும் - ஆவணிமாதமுழுதிலும்,—மூவிருமுகத்தனை அரிய வேதத்தாற் போற்றுவார் - ஆறுமுகபெருமானை அரிய வேதங்களாலே துதிப்பவர்,—ஒவிலாது எச்சநாறு உஞற்றுவார் பெறுந் தாவிலாப் பரகதி சார்வர் திண்ணம் - ஒழிவின்றி வேள்விகணூற்றைச் செய்பவர் எய்துங் குற்றமற்ற பரகதியை எய்துவார்: (இது) நிச்சயம். எ-று. (உஅ)

கன்னியின் மாளயச் சிராத்தங் காமுறச்
சென்னியா றுள்ளவன் செயந்தி யம்பதி
தன்னிருந் தாற்றுவார் பிதிர்க டங்குலம்
பொன்னலர் கமலத்தோன் புரத்து நண்ணுவார்.

இ-ள். சென்னியாறுள்ளவன் செயந்தியம்பதிதன்னிருந்து - ஆறுமுகபெருமானது செயந்திநகரினிருந்து,—கன்னியின் மாளயச்சிராத்தங் காமுற ஆற்றுவார்தங் குலம் பிதிர்கள் - புரட்டாதியின் மாளயச்சிராத்தத்தை விரும்பிச் செய்பவரது வமிசத்துப் பிதிரர்,—பொன்னலர் கமலத்தோன் புரத்து நண்ணுவார் - இரணியகருப்பனுறைகிய கமலாசனனது பதத்திற் சார்வார்கள். எ-று. (உகூ)

துலைநெடுந் திங்களிற் சுரர்கள் போற்றிய
வலைபுனற் கந்தபுட் கரிணி யாடிவேல்
வலவனைப் பணிகுவார் தமக்கு வான்பிறப்
பிலையிலை யென்றுநான் மறையி சைக்குமால்.

இ-ள். துலைநெடுந்திங்களில் - ஐப்பசிமாதத்திலே,—சுரர்கள் போற்றிய அலைபுனற் கந்தபுட்கரிணி ஆடி - தேவராலும் போற்றப்பட்ட அலையும் புனலையுமுடைய கந்தபுட்கரிணியின் முழுகி,—வேல்வலவனைப் பணிகுவார் தமக்கு - வேலாயுதபிரானை வணங்குபவர்கட்கு,—வான்பிறப்பு இலையிலை என்று - பெருமையாகிய பிறவி இல்லையில்லை என்று,—நான்மறை இசைக்கும் - சதுர்வேதஞ்ஞர்கள் சொல்வர். எ-று. (௩௦)

தீதிலா மார்கழித் திங்க ளிற்றதி
யோதனங் குமரனுக் குவப்பித் தன்னவன்

பாதமெய்த் துணையெனப் பரவு வார்மது
சூதனன் பதத்துணை சூழ்ந்து வைகுவார்.

இ-ள். மார்கழித்திங்களில் - மார்கழிமாதத்திலே,—தீதிலாத் ததியோதனங் குமரனுக்கு உவப்பித்து - குற்றமற்ற தயிர்ச்சோற்றினாலே குமாரசுவாமிக்குப் பிரீதிசெய்து,—அன்னவன் பாதம் மெய்த்துணையெனப் பரவுவார் - அவருடைய பாதங்களை உறுதித்துணையென்று துதிப்பவர்கள்,—மதுசூதனன் பதந் துணை சூழ்ந்து வைகுவார் - விட்டுணுவினுடைய புரத்திலே துணைவர்கள் சூழ வசிப்பார்கள். எ-று. (௫௧)

மகரமோர் முப்பது மணிபொன்னாலய
மகருவின் றூபத்தா லமைத்துச் செய்யவேற்
குகனையே யிறைஞ்சுவார் குலங்கு ழூஉக்கொடு
தகையவான் சிவன்பதஞ் சார்வர் திண்ணமே.

இ-ள். மகரம் ஓர்முப்பதும் - தைமாதத்து முப்பதுநாளிலும்,—மணி பொன்னால் அயம் அகருவின்றூபத்தால் - இரத்தினங்களாலும் பொன்னாலும் (சந்தனக்) குழம்பினாலும் அகிற்புகையினாலும்,—செய்யவேற்குகனை அமைத்து இறைஞ்சுவார் - செம்மையாகிய வேலாயுதக்கடவுளை அலங்கரித்து வணங்குபவர்,—தகைய வான் சிவன்பதம் - தகுதியினையுடைய பெருமையாகிய சிவலோகத்திலே,—குலங் குழூஉக்கொடு சார்வர் - திருக்கோயிற் கூட்டத்தாரோடு சேர்வார்கள். திண்ணம் - (இது) நிச்சயம். எ-று. (௫௨)

சேயிருந் திருவிழா நடத்துஞ் செவ்வியோ
ராயிரஞ் சனனம்பே ரரசின் வைகியே
காயம்விட் டாவிபோங் காலை மான்மக
ணாயகன் சரணதா மரையை நண்ணுவார்.

இ-ள். சேய் இருந் திருவிழா நடத்துஞ் செவ்வியோர் - குமாரசுவாமியின் பெருமையான திருவிழாவை நடத்துஞ் சிறப்புடையோர்,—ஆயிரஞ் சனனம் பேரரசின் வைகி - பலபிறவிகளிலும் மகாராசராய் வாழ்ந்து,—ஆவி போங்காலை - (ஸாம்விதரராகியதம்பாலேஞானப்) பிரகாசம் எய்தும் பொழுது,—காயம் விட்டு - (மீண்டு) உட(லெடுத்த)லை ஒழிந்து,—மான் மகள் நாயகன் சரணதாமரையை நண்ணுவார் - (அவ்) வள்ளிமணவாளருடைய பாதாரவிந்தங்களை அடைவார். எ-று. (௫௩)

செப்பருங் கார்த்திகைத் திங்கண் முப்பது
மொப்பிலாக் குமரன்முன் னுள்ளத் தன்பினான்
மெய்ப்படு மாவினெய் விளக்கு வைத்துளார்
சுப்பிர மணியன்றாட் டுணையிற் சேர்வரால்.

இ-ள். செப்பருங் கார்த்திகைத் திங்கண் முப்பதும் - (பெருமை) சொல்லக்கூடாத கார்த்திகைமாதத்து முப்பதுநாளிலும்,—ஒப்பிலாக்குமரன்முன் - ஒப்பில்லாத குமாரக்கடவுளின் சந்நிதியிலே,—உள்ளத்தன்பினான் மெய்ப்படும் ஆவினெய் விளக்கு வைத்துளார் - மனவன்போடு மெய்ம்மையாகிய பசுநெய்கொண்டு தீபம் வைத்தவர்,—சுப்பிரமணியன் தாட்டுணையிற் சேர்வர் - (அச்) சுவாமியாருடைய திருவடியிணையிற் சேர்வார். எ-று. (௫௪)

கார்த்திகை யாரலிற் கந்தன் செஞ்சுடர்
போர்த்தமு விருமுக புண்ட ரீகங்கள்
பார்த்திடா ரட்டையிற் படுகு ழிக்களை
யார்த்திடு நிரயத்தா டழுந்து வார்களே.

இ-ள். கார்த்திகை ஆரலில் - கார்த்திகை மாதத்துத் திருக்கார்த்திகையிலே,—கந்தன் செஞ்சுடர் போர்த்த மூவிருமுகபுண்டரீகங்களை பார்த்திடார் - கந்தபெருமானுடைய செஞ்சோதி பரந்த அறுமுககமலங்களைத் தரிசியாதவர்,—ஆர்த்திடு நிரயத்தாடு அட்டையிற் படுகுழிக்கண் அழுந்துவார்கள் - செறிந்த நரகங்களிலே அட்டைகள் பொருந்திய படுகுழிகளில் வருந்துவார்கள். எ-று. (சுரு)

நிலைதருங் கார்த்திகைத் தினத்து நெல்லியி
னிலைகொடு குகனடிக் கிறைத்து ளோரெலாஞ்
சொலுமிலைக் கொருமகந் தொடரி னாற்றிய
பலனடை வாரெனப் பகரு நான்மறை.

இ-ள். நிலைதரும் கார்த்திகைத் தினத்து - உறுதியை உதவுகின்ற திருக்கார்த்திகைநாளில்,—நெல்லியினிலைகொடு குகனடிக்கு இறைத்துளோரெலாம் - நெல்லிப்பத்திரங்களாற் சுவாமியின் பாதங்களுக்குப் பூசித்தவரெல்லாம்,—சொலும் இலைக்கு ஒருமகம் தொடரின் ஆற்றிய பலனை அடைவார் - சொல்லப்படும் (ஒரு) இலை(யைச்சாத்துகை)யில் ஒருயாகத்தை உரிமையோடுசெய்த பலனை அடைவார்,—என நான்மறை பகரும் - என்னச் சதுர்வேதஞானிகள் கூறுவர். எ-று. (சுசு)

திரிசுதந் திரர்கடஞ் சிறப்புந் திங்களுக்
குரியபூ சனைவிதி யுரைத்த காதையுங்
கருத்தினர் கேட்பவர் கந்தன் முன்புறுந்
திரைகடன் மூழ்குநர் பலனைச் சேர்வரால்.

இ-ள். திரிசுதந்திரர்கடஞ் சிறப்புந் திங்களுக்குரியபூசனைவிதி உரைத்த காதையும் - (இவ்வத்தியாயத்துப்போந்த) திரிசுதந்திரராகாரது சிறப்பையும் மாதங்கட்குரிய பூசைவிதிகளைக் கூறிய வசனங்களையும்,—கருத்தினர் கேட்பவர் - கருத்துடையராய்க் கேட்பவர்—கந்தன்முன்பு உறுந்திரைகடன் மூழ்குநர் பலனைச் சேர்வர் - சுவாமி சந்நிதானத்துப் பொருந்திய வருணரம்பதத்தின் முழுகினவரது பயனை அடைவர் எ-று. (சுஎ)

மாதபூசாபலமுரைத்த அத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் சுசஎ.

## கஉ-வது விபூதி அத்தியாயம்.

சுருதி யாவையு முற்றுணர்ந் தருங் குமாரவேள் பகமென வுந் தவத்
தோர்சொற், சுருதி யானமா முனிக்குமா ருஞ் சொல்வது தகைய
மான் மறைநூலஞ், சுருதி யாவர்க்கும் விளம்பவொண் ணாதது

கைநெல்லிக் கனிபோலாம், வருதி யாறுமா முகத்தவன் சரித்தி
ரம் வழுத்துது மெனச்சொல்வான்.

இ-ள். சுருதியாவையும் ஒருங்கு உற்று உணர்வுறுஞ் சுகனெனுந் தவத்தோய் வருதி - வேதமுழுதையும் (மன) ஒருப்பாட்டைப் பொருந்தி உணருஞ் சுகமுனிவனே (இன்னுமென்பால் மனத்தான்)வா,—சொல் தருதியானமாம் உனக்கு நாஞ் சொல்வது கைநெல்லிக்கனிபோல் ஆம் - சொல்லனைவற்றை(க்கேட்டு உள்ளே) தருகின்ற தியானமுள்ள உனக்கு யாங் கூறுவது கரதலாமலகம்போல (இனிதுபுலப்படுவது) ஆகும்,—தகையநான் மறைமூலம் - தகுந்த சதுர்வேதகாரணமானதும்,—யாவர்க்குங் கருதிவிளம்பவொண்ணாதது - எவராலும் நினைந்து சொல்லத்தகாததும் ஆகிய,—ஆறுமாமுகத்தவன் சரித்திரம் - ஆறுமுகபெருமானது (விபூதிச்) செய்கையை,—வழுத்துதும் - (எடுத்துக்கூறுமாற்றானே) போற்றுவம்,—எனச்சொல்வான் - என்று (வியாதமுனிவன்) கூறுவானாயினன். எ-று. (க)

கொடிய சூரற வறமறை விண்ணகங் குடிபுக விகல்காட்டு, நெ
டிய வேலெடுத் தமர்த்தொழின் முடித்துமா னின்னிடை வருந்தே
னைக், கடிம ணம்புரிந் தாறுமா முகத்தவன் கடவுளர் பலர்சூழ,
வடிய ராந்திரி சுதந்திரர் தம்மொடு மாலயத் தினிதுற்றான்.

இ-ள். நெடிய வேல் எடுத்து அமர்த்தொழின் முடித்து - உயர்ந்த வேலை எடுத்துப் போர்த்தொழிலை முடித்து,—கொடிய சூர் அற அறம் மறை விண்ணகங் குடிபுக இகல்காட்டும் ஆறுமாமுகத்தவன்-கொடிய சூரபன்மன் அழியவும் அறங்களும் மறைகளும் விண்ணிற் குடிபுகவும் வலிமையைக் காட்டிய ஆறுமுகபெருமான் (மேலேகூறியபடி செந்திநகரின் வந்தபின்),—கடவுளர் பலர் சூழ மானின்னிடைவருந்தேனைக் கடிமணம்புரிந்து - தேவரும் (பிறர்) பலருஞ்சூழ மான்புதல்வியாரை வரைந்து,—அடியராந் திரிசுதந்திரர்தம்மொடும் ஆலயத்து இனிதுற்றான் - (தம்முறுதிமொழிகளைக்கேட்ட) தொண்டராகிய திரிசுவதந்திரர்களோடு கோயிலின்கண் இனிதமர்ந்தனர். எ-று. (உ)

பெருமி தத்துட னுட்பல பிறபடப் பேரருட் குமரேசன்
பருமி தப்பரி வாரத்தி னொடுந்திருப் பயிலுமண் டபநாப்பண்
டருமி தத்தொடு மிருந்தன னிருந்தபின் றண்ணளி யுடனேத்திப்
பொருமு கத்திறல் வாகுவாங் கெய்தியம் போருக பதம்போற்றி.

இ-ள். பேரருட் குமரேசன் பருமிதப் பரிவாரத்தினொடும் - பெருங் கருணையையுடைய குமாரசுவாமி இறுமாப்புப்பொருந்திய பரிவாரங்களோடும்,—திருப்பயிலும் மண்டபநாப்பண் - அழகுதங்கிய திருமண்டபத்தின் நடுவிலே,—பிறபடப் பலநாட் பெருமிதத்துடன் தரும் இதத்தொடும் இருந்தனன் - பின்னரும் பலகாலம் பெருமையினோடும் (அடியார்க்கு) உதவும் இதங்களோடும் அமர்ந்தருளினார்,—இருந்தபின் - (அங்ஙனம்) அமர்தலும் (ஒருநாள்),—பொருமுகத்திறல் வாகு ஆங்கு எய்தி - பொரும் வலிமையையுடைய வீரவாகு சன்னிதியில் வந்து,—அம்போருகபதம் போற்றித் தண்ணளியுடன் ஏத்தி - பாதாரவிந்தங்களைப் பணிந்து அன்போடு துதித்து நின்று. எ-று. (ங)

ஞானவாரிதியே குருவே திருநான்மறையினுங்காணா, மான
வேற்படைய பொருவின்மையா மாலயன் றொழுதேத்துங், கூன
வெண்பிறை மிலைச்சிய வேணியானை குரைகழற் றுணைவாழ்த்தி,
மோனமோடிருந் தருள்புரி வடிவமா முதல்வநின் றிருக்கோலம்.

எங்குமாகயான் கண்டுனைப் பூசனை யியற்றுதற் கென்றேவேள்,
பங்கயப்பதம் பரவிய வாகுவைப் பார்த்துனக் கருட்கோலச், சங்
கை சொல்வதற் கெண்ணினை யென்னுமுன் சாற்றினை மகிழ்ந்தே
யா, மங்கண் மாநில முதற்பல வண்டமு மானது நாமேயாம்.

இ-ள். ஞானவாரிதியே குருவே திருநான்மறையினுங் காணா மான வேற்படையாய - ஞானசாகரமே! ஆசிரியரே! ஸ்ரீ சதுர்வேதங்களாலுங் காணப்படாத உயர்ந்த வேலாயுதக்கடவுளே!,—மாலயன தொழுதேத்துங் கூனவெண் பிறைமிலைச்சியவேணியானை குரைகழற்றுணை மோனமோடிருந்து வாழ்த்தி முதலவ - அரிபிரமரால வணங்கித் துதிக்கப்பட்ட சந்திரசேகரரது திருவடியிணைகளை மௌனத்தோடிருந்து வழிபட்ட முதல்வரே!,—ஒரு விண்ணப்பம் - (இங்ஙனம் அடியேனசெய்யும) ஒரு விண்ணப்பம்:- எங்கும் வடிவமாம் நின் திருக்கோலம் - அனைத்து(லகு)ந் திருமேனியாகக் கொண்ட உமது விபூதியை,—ஆக யான் கண்டு உனைப் பூசனையியற்றுதற்கு அருள்புரி - முழுதும் அடியேன் அறிந்து உம்மைப் பூசித்தற்பொருட்டு உணர்த்தியருளக,—என்று-எனக்கூற,—வேள் பங்கயபபதம் பரவிய வாகுவைப் பார்த்து - சுவாமியார் (தம) பாதாரவிந்தங்களை வழிபட்ட வீரவாகுவை நோக்கி,—உனக்கு அருட்கோலச் சங்கை சொல்வதற்கு எண்ணினை - உனக்கு விபூதியின் அளவைக் கூற நினைந்தாம்,—என்னுமுன் சாற்றினை மகிழ்ந்தேம் - நினைக்குமுன்னமே (நீயுங்) கூறினை (அதனால்) உவந்தாம்,—அங்கண் மாநிலமுதற் பலவண்டம் ஆனதும் நாமே - அழகிய இடமபொருந்திய பெரிய பிருதிவிமுதலிய பலவிதமான அண்டத்தொகுதியாயதும் நாமே (என்றார்.) எ-று.

வாழ்த்தி வினையாலணையும் பெயர. "சாவசகநநாதபூசாபர" என்று முதனூலில் விரித்ததற்கியைய இவ்வாறு கொளளப்பட்டது. ஆக என்பது முழுமைப் பண்புணர்த்தும் உரி. விசுவரூபத்தின் பரியாயமாகிய கோலம் எனபது, அது கருவியாகஉணரப்படுந் திவ்வியத்தலைமையாகிய விபூதியை யுணர்த்தி ஆகுபெயராய் நின்றது. பார்த்து என்னும் எச்சத்துக்கு முடிக்குஞ் சொல் வருவிக்கப்பட்டது. (சு-ரு)

திருத்து நான்மறைக் கொருபொரு ளாங்குகன் செய்யவா
குவைநோக்கிச், சுருக்க மாகநம விபூதியி னளவையைச் சொல்
லுது மெனவானம், பொருந்து மண்டபத் தருநிழல் யோகத்துப்
பூண்டவா சனமாகி, யருத்தி பெற்றுயர் ஞானமுந் திரையுட
னாறுமா முகத்தையன்.

இ-ள். திருத்து நான்மறைக்கு ஒருபொருளாங் குகன் ஆறுமாமுகத்தையன - (அன்போடோதுவாரைத) திருத்துஞ் சதுர்வேதங்களின ஏகார்த்தமாயுள்ள குகராகிய ஆறுமுகசுவாமி,—செய்யவாகுவை நோக்கி - வீரவாகுவை (மீண்டும்) பார்த்து,—நம விபூதியின் அளவையைச் சுருக்கமாகச் சொல்லுதும் என - நமது திவ்வியத்தலைமையின் அளவைச சுருக்கமாகக்

கூறுவாம் என்று,—வானம் பொருந்து மண்டபத்து அருநிழல் பூண்ட யோகத்து ஆசனம் ஆகி - விண்ணை (மண்ணோடு) பொருந்தும் மண்டபத்திலே அரிய ஒளியைப் பொருந்திய யோக ஆசனத்தில் அமர்ந்து,—உயர் ஞானமுத்திரையுடன் அருத்திபெற்று - உயர்ந்த சின்முத்திரையோடு அன்பைப்பெற்று. எ-று. (௬)

தார மாகிய வோரிரு சத்திக டாமிரு மருங்காக
வீர வாகுவைப் பார்த்துநெட் டிலைச்சுடர் வேல்வல வயினேந்தி
நேரு மாநந்த வடிவமாய் வடிவிலா நின்மலப் பொருளாகும்[யால்.
பேர ருட்கொடு தாதைக்கு முன்னமே பிரணவஞ் சொலும்வா

இ-ள். தாரமாகிய ஓரிரு சத்திகள் இருமருங்கு ஆக - மனைவியராகிய இரண்டு சத்திகளும் இரண்டு பக்கங்களினும் அமர,—நெட்டிலைச் சுடர் வேல் வலவயின் ஏந்தி - நெடிய இலைவடிவாகிய சோதிவேலை வலப்பக்கத்துத் தாங்கி,—வீரவாகுவைப் பார்த்து - வீரவாகுவை நோக்கி,—நேரும் ஆனந்தவடிவமாய் வடிவிலா நின்மலப்பொருளாகும் தாதைக்கு - (யோகிகளாற்) சாக்ஷாற்கரிக்கப்படும் ஆனந்தரூபமாய் (இயல்பானே) உருவமில்லாத நிருமலவஸ்துவாகிய சிவபெருமானுக்கு,—பேரருட்கொடு முன்னம் பிரணவஞ் சொலும் வாயால் - பேரருளோடு முற்காலத்துப் பிரணவப் பொருளைச் சொல்லிய திருவாயினாலே. எ-று.

மேலைச் செய்யுளின் "ஐயன்" என்னும் எழுவாயும் அதன்பின்வந்த வினையெச்சங்களும் ஈண்டு "வாயால்" என்னுங் கருவியும் இதனையடுத்து வரும் அனுவாதங்களின் முடிவில் ௨௪-ஞ் செய்யுளில் வருகிற "உரைத்தான" என்பதனோடு முடிதல்காண்க. (௭)

வேறு.

முத்தொழிலின் கருமமுநான் முதற்றொழிலாம் பிரமரொரு
பத்துளரி னான்முகனான் பரவுலகிற் சுவர்க்கமுநா
னொத்தநவ மானகண்டத் துயர்பரத கண்டமுநா
னத்திரியின் மேருவுநா னமரர்தம்மி லிந்திரனான்.

இ-ள். முத்தொழிலின் கருமமும் நான் - முத்தொழிற் செயல்களும் நான்,—முதற்றொழிலாம் பிரமரொருபத்துளரில் நான்முகன் நான் - சிருட்டிசெய்யுந் தசப்பிரமருட் சதுர்முகன் நான்,—உலகிற் பரவு சுவர்க்கமும் நான் - உலகங்களுட் புகழப்படுஞ் சுவர்க்கமும் நான்,—ஒத்த நவமானகண்டத்து உயர் பரதகண்டமும் நான் - பொருந்திய நவகண்டங்களுள் உயர்ந்த பரதகண்டமும் நான்,—அத்திரியின் மேருவும் நான் - மலைகளுண் மகாமேருவும் நான்,—அமரர்தம்மில் இந்திரன் நான் - தேவர்களுள் இந்திரனும் நான். எ-று. (அ)

மதியுளரிற் பொன்னவனான் றேர்த்தொழிலின் மாதலிநான்
புதியமணித் தடந்தேரிற் புட்பகச்செம் பொற்றேர்நான்
றுதிதருதே வர்க்கினிய தோகையரி லுருப்பசிநான்
விதமுறுகா னத்தொழிலின் மேம்படுகந் தருவருநான்.

இ-ள். மதியுளரிற் பொன்னவன் நான் - விவேகிகளுள் வியாழனும் நான்,—தேர்த்தொழிலின் மாதலி நான் - இரதத்தொழில்வல்லாருண் மாத

வியும் நான்,—தடந்தேரிற் புதிய மணிப் புட்பகச் செம்பொற்றேர் நான் - பேரிரதங்களுள்ளே புதிய அழகிய புட்பகமென்னும் பொற்றேரும் நான்,—தேவர்க்கினிய தோகையரில் துதிசரு உருப்பசி நான் - விண்ணவர்க்கினிய பெண்களுள்ளே புகழப்படும் உருப்பசியும் நான்,—விதமுறுகானத்தொழிலின் மேம்படு கந்தருவரும் நான் - குணமான பாட்டுத் தொழிலாளருள்ளே மேற்பட்ட கந்தருவரும் நான். எ-று. (௯)

விளக்கரிய வுலகுகளின் மேயசிவ லோகமுநான்
களக்கறுக்குங் கலையவையிற் கருதரிய வேதமுநான்
வளக்கெழுவே தச்சுரமோர் நான்கவையின் வாழியசீ
ரளக்கறிதற் கொண்ணாத வரும்பிரச வோசையுநான்.

இ-ள். அரிய உலகுகளில் விளங்கு மேய சிவலோகமும் நான் - (எளிதின் எய்துதற்கு) அரிய உலகங்களுட் பிரகாசம் பொருந்திய சிவலோகமும் நான்,—களக்கு அறுக்குங் கலையவையிற் கருதரிய வேதமும் நான் - குற்றத்தை ஒழிக்கும் நூல்களுள்ளே நினைத்தல் கூடாத ஆதிச்சுருதியும் நான்,—வளங் கெழு வேதச் சுரமோர் நான்கவையின் சீர் அளக்கறிதற் கொண்ணாத அரும் பிரசவோசையும் நான் - மாட்சிமை அமைந்த வேதங்களின் ஓசைகணான்கனுள்ளே சிறப்பினை அளவிட்டறிதல்கூடாத பிரசயமென்னுமோசையும் நான். எ-று. (௧௦)

எழுத்தவையிற் பிரணவநா னிருடிகளி லகத்தியனு
னழுத்தமுறு யோகிகளி லரியதெத்தாத் திரயனுநான்
விழுத்தகைய சிவன்பாதம் விருப்புடைய பத்தர்தமின்
முழுத்ததிருப் பாற்கடலின் விழிதுயிலு முகுந்தனுநான்.

இ-ள். எழுத்தவையிற் பிரணவம் நான் - அக்கரங்களுள் ஓங்காரமும் நான்,—இருடிகளில் அகத்தியன் நான் - முனிவருள் அகத்தியனும் நான்,—அழுத்தமுறு யோகிகளில் அரிய தெத்தாத்திரயனும் நான் - (மனத்தைக் கடவுளில்) அழுத்தும் யோகிகளுள்ளே அரிய தெத்தாத்திரேயனும் நான்,—விழுத்தகைய சிவன்பாதம் விருப்புடைய பத்தர்தமில் முழுத்த திருப்பாற் கடலில் விழிதுயிலும் முகுந்தனும் நான் - சிறந்த சிவபாதங்களை விரும்புந் தொண்டர்களுட் பூரணமான பாற்கடலிற் பள்ளிகொள்ளுந் திருமாலும் நான். எ-று. (௧௧)

புண்ணியத்தின் வடிவாய புரியவையிற் காசியுநான்
வண்ணமலை யோரேழில் வானளவு பனிவரைநா
னெண்ணரிய சிருட்டிதனி லிரணியகர்ப் பத்தனுநான்
றண்ணளியாற் காப்பதனிற் றக்கமகா விட்டுணுநான்.

இ-ள். புண்ணியத்தின் வடிவாய புரியவையிற் காசியும் நான் - புண்ணியரூபமாய தலங்களுட் காசியும் நான்,—வண்ணமலையோரேழில் வானளவு பனிவரை நான் - குலபருவதங்களேழுள் விண்ணையளாவிய இமகிரியும் நான்,—எண்ணரிய சிருட்டிதனில் இரணியகர்ப்பத்தனும் நான் - எண்ணுதற்கரிய படைப்பினுற் பிரமனும் நான்,—தண்ணளியாற் காப்பதனில் தக்க மகாவிட்டுணு நான் - அன்போடு காத்தலினுலே தகுந்த மகாவிட்டுணுவும் நான். (௧௨)

கடியசங்கா ரத்தொழிலிற் காலத்தீக் கடவுளுநான்
மிடலுடைய செய்கையரில் வெலற்கரிய காலனுநான்
வடிவுடைய குருவடிவில் வாய்ந்ததெக்கி ணாமூர்த்தத்
துடனிருக்குந் திருக்கோலத் துவமையிலா வடிவுமுநான்.

இ-ள். கடிய சங்காரத்தொழிலிற் காலத்தீக்கடவுளும் நான் - அச்சமாகிய அழித்தற்றொழிலாற் காலாக்கினிருத்திரனும் நான்,—மிடலுடைய செய்கையரில் வெலற்கரிய காலனும் நான் - வன்செயலாளருள் வெல்லல் கூடாத இயமனும் நான்,—வடிவுடைய குருவடிவில் - அழகினையுடைய ஆசாரியரூபங்களுள்ளே,—வாய்ந்த தெக்கிணாமூர்த்தத்துடன் இருக்குந் திருக்கோலத்து உவமையிலாவடிவமும் நான் - சிறந்த தெற்குநோக்கிய திருமுகத்தோடு இருக்குந் திருக்கோலமாகிய ஒப்பில்லாத (ஆசாரிய)ரூபமும் நான். எ-று. (கங)

சொலவரிய தெய்வமடந் தோகையர்க டம்மிலுயர்
மலைமகளு மலர்மகளும் வாணிதிரு வடிவுமுநா
னிலவியமா தங்கடமி னிறைதருசீ ராவணிநா
னலகிலா துயர்வேத வாரிடரில் வசிட்டனுநான்.

இ-ள். சொலவரிய தெய்வமடந்தோகையர்கடம்மில் - கூறரிய தேவியர்களுள்,—உயர்மலைமகளும் மலர்மகளும் வாணி திருவடிவமும் நான் - உயர்ந்த பார்வதி, பூமகள், நாமகள் என்னும் மூர்த்திகளும் நான்,—நிலவிய மாதங்கடமில் நிறைதரு சீர் ஆவணி நான் - விளங்கிய மாதங்களுள்ளே நிரம்பிய சிறப்பினையுடைய ஆவணியும் நான்—வேதவாரிடரில் அலகிலா துயர் வசிட்டனும் நான் - பிரமரிஷிகளுள் அளவின்றியுயர்ந்த வசிட்டனும் நான். எ-று. (கச)

கடவுளரா மிருடிகளிற் களிக்குமிசை நாரதனுன்
படவரவத் துடன்புடவி பரிக்குமத மாக்கடமின்
மிடலுறுஞ்சா ருவபௌம வெண்மருப்பு வேழமுநான்
குடநிகர்த்த செருத்தலுடைக் கோவினத்திற் சுரபியுநான்.

இ-ள். கடவுளராமிருடிகளிற் களிக்கும் இசை நாரதன் நான் - தேவரிஷிகளுள்ளே களிப்பைவிளைக்கும் இசையையுடைய நாரதனும் நான்,—படவரவத்துடன் புடவி பரிக்கும் மதமாக்கடமின் மிடலுறுஞ் சாருவபௌம வெண்மருப்பு வேழமும் நான் - சேடனோடு பூமியைத் தாங்கும் யானைகளுள் வலிமிக்க சாருவபௌமமாகிய வெண்கோட்டுயானையும் நான்,—குடநிகர்த்த செருத்தலுடைக் கோவினத்திற் சுரபியும் நான் - குடம்போலும் மடியுடைய ஆவினங்களுட் காமதேனுவும் நான். எ-று. (கரு)

நாடரிய பரியினெழு நாமவாம் புரவியுநான்
கேடில்பல விலங்கவையிற் கெழுதகைய கேசரிநான்
பீடுபெறு பறவைகளிற் பெருந்திறல்சேர் சரபமுநான்
நேடுபன்னோ ருருத்திரரிற் சிறப்புடைய சங்கரனுன்

இ-ள். நாடு அரிய பரியின் எழு நாம வான்புரவியும் நான் - விரும்பப்படும் அரிய குதிரைகளுள் எழென்னும்பெயரிய பெரிய குதிரையும் நான்,—கேடில் பல விலங்கவையிற் கெழுதகைய கேசரிநான் - அழிவில்

லாத பல மிருகங்களுண் மாட்சிமையான சிங்கமும் நான்,—பீடுபெறு பறவைகளிற் பெருந்திறல்சேர் சரபமும் நான் - பெருமைபொருந்திய பக்ஷிகளுள் பெருவலிமையைக் கொண்ட சிம்புளும் நான்,—பேசுபென்னோருருத்திரரிற் சிறப்புடைய சங்கரன் நான் - ஆராயப்படும் பதினொருருத்திரர்களுட் சிறப்புப்பொருந்திய சங்கரரும் நான். (கசு)

பாதலத்திற் பணிவேந்திற் பஃறலைய சேடனுநான்
மாதர்தரு மோடைகளின் மானதப்பூம் பொய்கையுநான்
போதநிறை மந்திரத்திற் பொலிவுறுகா யத்திரிநான்
பேதநெடுந் தாருவினிற் பிப்பலப்பூந் தாருவுநான்.

இ-ள். பாதலத்திற் பணிவேந்திற் பஃறலைய சேடனும் நான் - பாதாளத்து நாகராசருள் ஆயிரந்தலையனந்தனும் நான்,—மாதர்தரும் ஓடைகளில் மானதப்பூம்பொய்கையும் நான் - இச்சையைத்தரும் வாவிகளில் மானசவாவியும் நான்,—போதநிறை மந்திரத்திற் பொலிவுறு காயத்திரி நான் - அறிவைநிறைக்கும் மந்திரங்களுட் சிறந்த காயத்திரியும் நான்,—நெடும்பேதத் தாருவினிற் பிப்பலப் பூந்தாருவும் நான் - பலவகைமரங்களுள் அரசமரமும் நான். எ-று. (கஎ)

வருமுயிரைக் கொடுபோகும் வலியோரி லியமனுநா
னரிதுசுசி செயுமவரி லாண்டகைய வாயுவுநா
னுரனுடைய வானரத்தி லுணர்வுடைய மாருதிநான்
பொருவரிய சிலைவலியிற் போர்காட்டு மிராமனுநான்.

இ-ள். வரும் உயிரைக் கொடுபோகும் வலியோரில் இயமனும் நான்-(உடல்பிரியுமெல்லை) வரப்பெற்ற ஆன்மாக்களைக் கொண்டுசெல்லும் வலியருள் இயமனும் நான்,—அரிது சுசி செயுமவரில் ஆண்டகைய வாயுவும் நான் - செயற்கரிய சுத்தியைச் செய்வாருள் ஆண்டகைமையையுடைய காற்றும் நான்,—உரனுடைய வானரத்தில் உணர்வுடைய மாருதி நான் - வலிமையுள்ள குரங்குகளுள் அறிவுடைய அனுமானும் நான்,—பொருவரிய சிலைவலியிற் போர்காட்டும் இராமனும் நான் - ஒப்பில்லாத வில்வலிமையுடையாருட் போரிலே(புகழை)விளக்கிய இராமனும் நான். எ-று. (கஅ)

உற்றமனற் சூரர்களி லுயர்கார்த்த வீரியனு
னற்றமிலா வறநெறியி லளப்பரிய சத்தியநான்
பற்றுமக நூற்றின்மிக்காம் பாய்பரியின் வேள்வியுநான்
குற்றமறு கற்பின்மடக் கோதையரிற் பார்ப்பதிநான்.

இ-ள். மல் உற்ற நற்சூரர்களில் உயர் கார்த்தவீரியன் நான் - மற்போரிற் (சிறப்புப்)பொருந்திய நல்ல வீரர்களுள் உயர்ந்த கார்த்தவீரியனும் நான்,—அற்றமிலா அறநெறியில் அளப்பரிய சத்தியம் நான் - சோர்வில்லாத தருமநெறிகளுள்ளே அளவிடுதற்கரிய மெய்ம்மையும் நான்,—பற்றுமக நூற்றின் மிக்காம் பாய்பரியின் வேள்வியும் நான் - விரும்பும் யாகங்கள் பலவற்றுள்ளுஞ் சிரேட்டமான அசுவமேதயாகமும் நான்,—குற்றமறு கற்பின் மடக்கோதையரிற் பார்ப்பதி நான் - வடுவில்லாத கற்பினையுடைய மாதர்களுட் பார்வதியும் நான். எ-று (ககூ)

வியப்புறுபல் பொருளதனின் மிக்கான தபனியநா
னயப்பொடுவந் தனைக்குரிய நாரியரி லன்னையுநான்

செயற்கரிய தானத்துச் சீரபய தானமுநா
னியற்பெயராம் யதுகுலத்துக் கெழில்காட்டுங் கண்ணனுநான்.

இ-ள். வியப்புறு பல்பொருள்தனில் மிக்கான தபனியம் நான்-வியக்கப்படும் பலதிரவியங்களுள் மேலான பொன்னும் நான்,—நயப்பொடு வந்தனைக்குரிய நாரியரில் அன்னையும் நான் - விருப்போடு வழிபடுதற்குரிய பெண்களுள்ளே மாதாவும் நான்,—செயற்கரிய தானத்துச் சீர் அபயதானமும் நான்-செய்தற்கரிய தானங்களுட் சிறப்பாகிய அபயதானமும் நான்,—இயற்பெயராம் யதுகுலத்துக்கு எழில்காட்டுங் கண்ணனும் நான் - குணமான பெயரையுடைய யதுராசன்வமிசத்தாருள் விளங்கிய கிருஷ்ணனும் நான். எ-று. (உ0)

வாக்குடைய முநிவோரில் வல்லவரிச் சந்திரனான்
றேக்குநதி பலவையிற் றெசகங்கை மாநதிநான்
றாக்குமலை வாரிதியிற் றண்டரங்கப் பாற்கடனான்
மீக்கிளர்தா ரகைக்குழுவில் வெண்மதியக் கடவுளுநான்.

இ-ள். வாக்குடைய முநிவோரில் வல்ல அரிச்சந்திரன் நான்-(தவறா) வாக்குடைய ஆன்றோருள் வலிய அரிச்சந்திரனும் நான்,—தேக்குநதி பலவையில் தெசகங்கை மாநதி நான் - நிறைந்த யாறுகள் பலவற்றுட் பெரிய தசகங்காநதியும்நான்,—அலை தாக்கும் வாரிதியில் தண் தரங்கப் பாற்கடல் நான் - திரைமோதுங் கடல்களுட் குளிர்ந்த திரைகளையுடைய பாற்கடலும் நான்,—மீக் கிளர் தாரகைக்குழுவில் வெண்மதியக் கடவுளும் நான் - ஆகாயத்தில் விளங்குகின்ற உடுக்கூட்டங்களுள் உடுபதியும் நான். எ-று.

இருதுவெனு மோராறி னிணங்குகுளிர் வசந்தனுநா
னரிவையரை மோகஞ்செய் யாடவரின் மன்மதனான்
பெரியதவத் தினிலுரிய பிராணயா மத்தியனான்
பரவையெழு நவமணியிற் பானிறவெண் முத்தமுநான்.

இ-ள். இருதுவெனும் ஓராறின் இணங்குகுளிர் வசந்தனும் நான் - பருவங்கள் ஆறனுள் (ஆரோக்கியத்துக்கு) இயைந்த குளிர்மையாகிய இளவேனிலும நான்,—அரிவையரை மோகஞ்செய் ஆடவரின் மன்மதன் நான் - மகளிரை மயக்கும் புருடருட் காமனும் நான்,—பெரிய தவத்தினிலுரிய பிராணயாமத்தியல் நான் - பெரிய தவத்துக்குரியவற்றுட் பிராணயாமமும் நான்,—நவமணியிற் பரவையெழு பானிறவெண்முத்தமும் நான் - நவரத்தினங்களுட் கடலிற்றோன்றும் வெண்ணித்திலமும் நான். எ-று. (உஉ)

ஏற்றமுறு மாவரணத் தெழில்வனப்பா குங்கலைநா
னாற்றலுறும் பிதிர்கடமி லரியமா வென்பவனான்
மாற்றருஞ்சீர் நால்வருண மானவையின் மறையோர்நான்
சாற்றரிய வாச்சிரம நான்கினிற்சந் யாசமுநான்.

இ-ள். ஏற்றமுறும் ஆவரணத்து எழில்வனப்பாகுங் கலை நான் - உயர்ந்த உடுக்கைகளுட் பீதாம்பரமும் நான்,—ஆற்றலுறும் பிதிர்கடமில் அரியமா என்பவன் நான் - தருப்பிக்கப்படும் பிதிரர்களுள் அரியமாவும் நான்,—நால்வருணமானவையில் மாற்றருஞ் சீர் மறையோர் நான் - நான்கு

வருணங்களுட் சொல்லருஞ் சிறப்பினையுடைய பிராமணவருணமும் நான்,—ஆச்சிரம நான்கினிற் சாற்றரிய சந்யாசமும் நான் - நான்காச்சிரமங்களுட் சொல்லல்கூடாத சன்னியாசநிலையும் நான். எ-று. (௨௩)

துன்னரிய வனமலையிற் சயித்திரதச் சோலையுநா
னொள்ளொளியிற் கதிர்பரப்பு முயர்வானப் பரிதியுநான்
வின்னரிய வித்தைதனின் மெய்ஞ்ஞான வித்தையுநா
னென்னரிய விந்தியங்கட் கேதுவா மிதயமுநான்.

இ-ள். துன்னரிய வனமலையிற் சயித்திரதச் சோலையும் நான் - நீக்க லாகாத வனங்களுள்ளே சயித்திரதவனமும் நான்,—வான ஒள்ளொளியிற் கதிர்பரப்பும் உயர் பரிதியும் நான் - ஆகாயத்துச் சோதிகளுட் கிரணங்களை வீசுகின்ற உயர்ந்த சூரியனும் நான்,—வின்னரிய வித்தைதனின் மெய்ஞ்ஞான வித்தையும் நான் - சொல்லலாகாத கல்விகளுள் மெய்யறிவுக்கல்வியும் நான்,—என்னரிய இந்தியங்கட்கு ஏதுவாம் இதயமும் நான் - இகழ்தலாகாத இந்திரியங்களுள்ளே (வினையைச் செலுத்தற்கு) ஏதுவாகிய மனமும் நான். எ-று. (௨௪)

பொற்பமைசத் திரியர்தம்மிற் புருகுச்சப் புரவலனே
னற்புறுத்த தனத்தர்தம்மி லளகைநக ராதிபனென்
பற்பலவாந் தீர்த்தத்திற் பரம்புமணி கர்ணிகைநா
னெற்பொலியு நிவப்பதனி னெல்லையிலா வரைகளுநான்.

இ-ள். பொற்பமை சத்திரியர்தம்மிற் புருகுச்சப்புரவலன் நான் - அழகிய க்ஷத்திரியர்களுள்ளே புருகுச்சன் என்னும் அரசன் நான்,—அற்புறுத்த தனத்தர் தம்மில் அளகைநகராதிபன் நான் - அன்பையுறுவிக்கின்ற செல்வர்களுட் குபேரனும் நான்,—பற்பலவாந் தீர்த்தத்திற் பரம்பு மணிகர்ணிகை நான்,—அனேகமான தீர்த்தங்களுள் (மேன்மை) பரந்த மணிகர்ணிகையும் நான்,—எற்பொலியும் நிவப்பதனின் எல்லையிலா வரைகளும் நான் - ஒளிபொலிந்த உயர்வுடைப்பொருள்களுள் அளவிறந்த மலைகளும் நான் எ-று. (௨௫)

தெறுபவநா சனமதனிற் றிரைமோது சேதுவுநா
னுறுதயவின் மாதாநா னுயரிரவி குலத்தோரின்
விறலுடைய விராமனுநான் விதுகுலத்து வேந்தர்தம்மி
னிறைபொறையி னரசாட்சி நிலைமைதனிற் றருமனுநான்.

இ-ள். தெறுபவநாசனமதனில் திரைமோதுசேதுவும் நான் - வருத்தும்பாவங்களை அழிப்பனவற்றுள் அலைமோதுகின்ற சேதுவும் நான்,—உறுதயவின் மாதா நான் - பேரருளினாலே தாயும் நான்,—இரவிகுலத்தோரின் உயர் விறலுடைய இராமனும் நான்,—சூரியகுலத்தாருள் மிகுவலியுடைய இராமனும் நான்,—விதுகுலத்து வேந்தர்தம்மில் நிறைபொறையின் அரசாட்சி நிலைமைதன் இல் தருமனும் நான்,—சந்திரகுலராசர்களுள் முழுப்பொறுமையோடு அரசாட்சிநிலைமைக்கு இடமாகிய தருமனும் நான். எ-று.

தண்டனையில் யமதண்டத் தன்மையுநா னவத்தைகளா
மெண்டகைய நால்வகையில் யௌவனமா மவத்தையுநான்
மண்டலத்தோர் பூசனையின் மானசமாம் பூசனைநான்
கொண்டபடப் பன்னகத்திற் கூறரிய வாசுகிநான்.

இ-ள். தண்டனையில் யமதண்டத் தன்மையும் நான் - தண்டங்களுள் இயமதண்டமும் நான்,—எண்டகைய அவத்தைகளாம் நால்வகையில் யௌவனமாம் அவத்தையும் நான் - எண்ணப்படுந் தகைமையினையுடைய அவஸ்தைகளாகிய நான்குவகைகளுள் யௌவனவஸ்தையும் நான்,—மண்டலத்தோர் பூசனையின் மானசமாம் பூசனை நான் - மண்ணவர் செய்யும் பூசைகளுள் மானசபூசனையும் நான்,—கொண்டபடப்பன்னகத்திற் கூறரிய வாசுகிநான் - படவரவுகளுட் சொல்லுதற்கரிய வாசுகியும் நான். எ-று. (உஎ)

சுவையாறி னுப்பதுநான் சுடர்விரிக்குஞ் செந்தீயி
னவைதீர்ந்த சாடரத்தி நான்முதிய காவியத்தி
னுவமையில்ரா மாயணநா னுறுந்தரும சரித்திரங்க
ளவையின்மனு நான்ஞானத் தருங்கதையிற் கீதையுநான்.

இ-ள். சுவையாறின் உப்பது நான் - அறுவகைச் சுவைப்பொருள்களுள் உப்பும் நான்,—சுடர்விரிக்குஞ் செந்தீயின் நவைதீர்ந்த சாடரத்தி நான் - ஒளிகாலும் அக்கினிகளுட் குற்றமற்ற உதராக்கினியும் நான்,—முதிய காவியத்தின் உவமையில் ராமாயணம் நான் - புராதன காவியங்களுள் நிகரற்ற இராமாயணமும் நான்,—உறுந்தருமசரித்திரங்களவையின் மனுநான் - பொருந்திய ஸ்மிருதிகளுள் மனுஸ்மிருதியும் நான்,—ஞானத்தருங்கதையிற் கீதையும் நான் - ஞானநூல்களுட் பகவற்கீதையும் நான். உ-று. (உஅ)

வரகவியில் வியாசனுநான் வரனயன மானவைகட்
குரியவணி கெழுபொருளு னுள்ளத்தா லிவைகருதிச்
சுருதிமுறை யாராய்ந்து தோமறுமுன் பூசனையைப்
புரிகுதிநீ யெனவுரைத்தான் பூமகன்றின் சிரம்புடைத்தான்.

இ-ள்: வரகவியில் வியாசனும் நான் - நற்புலவருள் வியாசனும் நான்,—நயனமானவைகட்கு வரனுரிய அணிகெழு பொருள் நான் - கண்களுக்குப் புலனாகும் அழகிய பொருள்களனைத்தும் நானே,—உள்ளத்தால் இவை கருதி - மனத்தால் இவற்றை நினைந்து,—சுருதி முறை ஆராய்ந்து -வேதங்களுக்கு (இவை ஒத்த தணிபாதலை) முறையான் ஆராய்ந்து,—தோமறும் உன் பூசனையைப் புரிகுதி நீ என உரைத்தான் - குற்றமற்ற உன் பூசையை நீ செய்குதி என்று கூறினர். எ-று.

சேடம் அடுத்தசெய்யுளில் உரைக்கப்படும். (உகூ)

இத்தகைய விபூதியிய லீராறு தோண்மலையா
ரத்தனருள் புரிந்தமர வாராய்ந்து கணத்தலைமை
வித்தகமைப் புயவீரன் வியப்புற்று னக்காதைப்
புத்தமுதஞ் சுகமுனிநின் புலனருந்த விருந்தளித்தேன்.

இ-ள். பூமகன் றின் சிரம்புடைத்தான் ஈராறு தோண்மலையா ரத்தன் - பிரமனைச் சிரசிற் குட்டினவராகிய துவாதச புயாசலக்கடவுள்,—இத்தகைய விபூதியியல் அருள்புரிந்து அமர - இவ்வியல்பாகிய விபூதித்திறத்தைக் கூறியருளி இருக்க,—கணத்தலைமை வித்தகமைப் புயவீரன் - கணநாதத்துவமாகிய வித்தகத்தன்மையையுடைய வீரவாகு,—ஆராய்ந்து வியப்புற்றான் - தேர்ந்து அதிசயித்தார்,—சுகமுனி நின் புலன் அருந்த அக்கா

தைப் புத்தமுதம் விருந்து அளித்தேன் - சுகமுனிவனே உன்மனம் உட்கொள்ளுமாறு அச்சரித்திராமிர்தமாகிய விருந்தைத் தந்தேன். எ-று. (கூ0)

விபூதி அத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௬எ௨.

## கக - வது விசுவரூப அத்தியாயம்.

எந்தையே பல்லுயிர்க் கிறைவனே சதுர்மறைத்
தந்தையே தந்தையுந் தாயுமில் லான்றரு
மைந்தனே கலபமா மயில்வருங் கடவுளே
முந்துமா னந்தவோங் காரமா மூர்த்தமே.

இ-ள். எந்தையே - என்கடவுளே,—பல்லுயிர்க்கிறைவனே - பலவுயிர்களுக்கும் நாயகரே,—சதுர்மறைத் தந்தையே - நால்வேத நாதரே,—தந்தையுந்தாயுமில்லான்றரும் மைந்தனே - சுயம்பு குமாரரே,—கலபமாமயில் வருங் கடவுளே - மயூரவாகனரே,—முந்தும் ஆனந்த ஓங்காரமா மூர்த்தமே - முற்பட்ட சுகமுடைய பிரணவ மூர்த்தியே. எ-று. (க)

என்றுவா கைப்புயத் தேந்தலும் புகலுவான்
மன்றல்வா ரீசநாண் மலரடித் தொண்டனேன்
றுன்றுபே ரன்பினாற் சொலும்விபூ திச்செய
னன்றியாற் புனிதமாய் நவையறுத் தேனியான்.

இ-ள். என்று வாகைப்புயத்து ஏந்தலும் புகலுவான் - என்று துதித்து வீரவாகுவும் பின்னுங் கூறுவார்,—மன்றல் வாரீசநாண்மலரடித் தொண்டனேன் யான் - சுகந்த பாதாரவிந்தங்களின் அடியேனாகிய தமியேன்,—துன்று பேரன்பினாற் சொலும் விபூதிச்செயல் நன்றியால் - பொருந்திய பெருங்காதலினாலே (நீர்) சொல்லிய விபூதியியல்பின் நன்மையினால்,—புனிதமாய் நவையறுத்தேன் - (மனச்)சுத்தியுளதாகக் குற்றத்தையொழித்தேன். எ-று. (உ)

வேண்டுமோர் கருமமொன் றுளதியான் விள்ளுகே
னாண்டநீ யன்றிவே றரியவான் பொருளெனத்
தூண்டுமா றொன்றிலைத் தோமின் மாணுக்கரிற்
பூண்டநின் பேருருப் பொற்புறுந் தோற்றமாய்.

இ-ள். யான் வேண்டுங் கருமம் ஒன்றுளது விள்ளுகேன் - (மேலும்) யான் வேண்டிக்கொள்ளுஞ் செய்தி ஒன்றுளது (அதனைக்)கூறுகேன்,—ஆண்ட நீ அன்றி வேறு அரியவான்பொருளெனத் தூண்டுமாறு ஒன்றிலை - (சேதனாசேதனப்பிரபஞ்சங்களையெல்லாம்) அடக்கிய நீரேயன்றி வேறாய அரும்பெரும்பொருளென்று எடுத்துரைக்கும்வண்ணம் ஒன்றுமில்லை,—தோமின் மாணுக்கரிற் பூண்ட நின் பொற்புறுந் தோற்றப் பேருருவாய் - குற்றமற்ற சிறுவர்போல(த் திருமேனியை)ப்பூண்ட உமது பொலிவு பொருந்திய (எப்பொருளுந் தன்கண்ணே) தோன்றுதலையுடைய பெரிய உருவமாய். எ-று. (ந)

பரவுறும் விசுவரூ பத்திருத் தோற்றமாந்
தெரிசனைக் குள்ளம்வைத் தேனையத் தெரிசனைக்
கருணைவைத் தாளெனக் கழறும்வான் வாகுவாங்
குரிசிலுக் கருளொடுங் குருபரன் பகருவான்.

இ-ள். பரவுறும் விசுவரூபத் திருத்தோற்றமாந் தெரிசனைக்கு - பரந்த விசுவரூபமென்னுந் திருவடிவத்தினதாகுந் தரிசனத்தின்கண்,— உள்ளம் வைத்தேனை - மனம்வைத்த சிறியேனை,—கருணை வைத்து அத்தெரிசனை ஆள் என - திருவருள்செய்து அத்தரிசனத்தை(த் தருதலால்) ஆளுக என்று கூற,—கழறும் வான்வாகுவாங்குரிசிலுக்குக் குருபரன் அருளொடும் பகருவான் - (அங்ஙனஞ்)சொல்லிய வீரவாகுதேவருக்குக் குமாரசுவாமி அருளொடு கூறுவார். (௪)

இருடிகட் கரிதுவா னிமையவர்க் கரிதுநாற்
சுருதிகட் கரிதுமெய்த் தொண்டருக் கரிதுசொற்
கருதுதற் கரிதுளங் காண்பதற் கரிதுமாம்
பொருவிலற் புதமொடும் போற்றுநந் தோற்றமே.

இ-ள். பொருவில் அற்புதமொடும் போற்றுநந் தோற்றம்-ஒப்பில்லாத அதிசயத்தோடும் (பக்குவராலே) துதிக்கப்படும் நமது திருவடிவம்,—இருடிகட்கு அரிது - முனிவர்க்கும் அரிது,—வானிமையவர்க்கு அரிது - சுவர்க்கத்துத் தேவர்கட்கும் அரிது,—நாற்சுருதிகட்கு அரிது - சுருதிநூல்கட்கும் அரிது,—மெய்த்தொண்டருக்கு அரிது - மெய்யடியார்க்கும் அரிது,—சொல் உளங் கருதுதற்கு அரிது - சொல்லுதற்கும் மனத்தால் நினைத்தற்கும் அரிது,—காண்பதற்கு அரிதுமாம் - காணுதற்கும் அரியதாம். எ-று. (௫)

ஊனுறுங் கண்களுக் குட்படா துன்றனக்
கானஞா னக்கணை யருளொடுந் தருதுநீ
ஞானநாட் டத்தினா னந்திருத் தோற்றமே
மானவாட் செங்கையாம் வாகுவே காண்டியால்.

இ-ள். மான வாட்செங்கையாம் வாகுவே - உயர்ச்சிபொருந்திய வாளைக்கையிற்கொண்ட வீரவாகுவே,—நந்திருத்தோற்றம் - நமது விசுவரூபமானது,—ஊனுறுங்கண்களுக்கு உட்படாது - ஊனக்கண்களுக்குப் புலப்படாது,—உன்றனக்கு ஆன ஞானக்கண் அருளொடுந் தருதும் - உனக்குப் பொருந்திய ஞானக்கண்ணை அருளோடுந் தருவம்,—நீ ஞானநாட்டத்தினாற் காண்டி - நீ (அந்த)ஞானக்கண்ணினால் (அதனைக்) காண்குதி. எ-று. (௬)

என்னமு விருமுகத் தெம்பிரான் கருணையான்
மன்னுபே ரண்டமும் மற்றவண் டந்தொறுந்
துன்னுமோர் தோற்றமுஞ் சுரருமா முனிவரும்
பன்னுநான் மறைகளின் பயனுமாய் நின்றனன்.

இ-ள். என்ன மூவிருமுகத்தெம்பிரான் - என்றுசொல்லி ஆறுமுகக் கடவுள்,—கருணையால் மன்னுபேரண்டமும் - திருவருளினாலே நிலைபெற்ற பெரியவண்டங்களும்,—அ அண்டந்தொறுந் துன்னுமோர் தோற்றமும் - அந்த அண்டங்கடோறுஞ் செறிபவராது தோற்றங்களும்,—சுரரும்

மாமுனிவரும் - தேவர்களும் முனிவர்களும்,—பன்னு நான்மறைகள் இன்
பயனுமாய் நின்றனன் - ஓதுஞ் சதுர் வேதங்களும் இனிய பயன்களுமாய்
நின்றார். எ-று. (௭)

கருணையாம் வடிவினைக் காண்டலுந் நீண்டவா
னொருகையா னிருகையு முச்சிமேற் கூப்பியே
யருவிநீ ரிருவிழிக் காறுமீ ராறெனப்
பெருகவாய் குளறியே களியொடும் பேசுவான்.

இ-ள் கருணையாம் வடிவினைக் காண்டலும் - அருளுருவாகிய விசுவ ரூபத்தைக் கண்டு,—நீண்ட வானொருகையான் இருகையும் உச்சிமேற் கூப்பி - வீரவாகு இருகரங்களையுஞ் சிரமேற் குவித்து,—இருவிழிக்காறும் அருவிநீர் ஈராறெனப் பெருக - இரண்டுகண்களின் வழியாலும் ஆனந்த வருவி இரண்டுயாறுகள்போலப் பெருக,—வாய்குளறிக் களியொடும் பேசுவான் - உரைதடுமாறி மகிழ்வோடுஞ் சொல்லுவார். எ-று. (௮)

அத்தநின் வடிவிலே யளவிலா வமரரும்
பத்தெனும் பிரமரும் பன்னிரண் டாகிய
கொத்துறும் பரிதியுங் கூறுருத் திரர்களா
யொத்தபன் னொருவரா யுளரையுங் கண்டனன்.

இ-ள். அத்த நின் வடிவிலே - சுவாமீ உமது ரூபத்திலே,—அளவிலா அமரரும் - அளவிறந்த தேவர்களையும்,—பத்தெனும் பிரமரும் - தசப்பிரமரையும்,—பன்னிரண்டாகிய கொத்துறும் பரிதியும் - துவாதச ஆதித்தியர்களையும்,—கூறு உருத்திரர்களாய் ஒத்த பன்னொருவராயுளரையுங் கண்டனன் - ஏகாதச உருத்திரர்களையுங் கண்டேன். எ-று. (௯)

ஏழுமால் வரைகளு மேமவான் குன்றமுஞ்
சூழுமால் கோடியாஞ் சுரநதித் தொகைகளும்
வாழிமா கயிலைமால் வரையுமவ் வரையிலே
யூழியா னடனமுங் கண்டுவப் பெய்தினேன்.

இ-ள். ஏழு மால் வரைகளும் - எழுந்த பெரிய (எட்டுக்) குலபருவதங்களையும்,—ஏமவான் குன்றமும் - பொன்மகாமேருமலையையும்,—சூழும் மால் கோடி - சூழ்ந்த மலைகள் பலவற்றையும்,—ஆஞ் சுரநதித் தொகைகளும் - அவற்றிலுண்டாகின்ற கங்கை(முதலிய) நதித்தொகைகளையும்,—வாழிமா கயிலைமால்வரையும் - வாழ்வைச் செய்யுந் திருக்கைலாச மகாமலையையும்,—அவ்வரையிலே ஊழியான் நடனமும் - அம்மலையிலே சிவபெருமானது நடனத்தையும்,—கண்டு உவப் பெய்தினேன் - கண்டு மகிழ்ந்தேன். எ-று. (௧௦)

பாற்றிரைப் புணரியும் பாம்பணைப் பள்ளியு
மூற்றிருந் தொழுகுதே னுந்தியங் கமலமு
மாற்றலந் திகிரியு மம்புயத் தாயிழை
போற்றுநா ரணனையுங் கண்டுநான் போற்றினேன்.

இ-ள். பாற்றிரைப் புணரியும் - பாற்கடலையும்,—பாம்பணைப் பள்ளியும் - (ஆண்டுச்) சேடசயனத்தையும்,—ஊற்றிருந்தொழுகு தேன் உந்தியங் கமலமும் - (அதன்மேல்) ஊறியொழுகுந் தேனையுடைய நாபிகமலத்தோ

டும்,—ஆற்றலந் திகிரியும் - வலிமையினையுடைய சக்கரப்படையோடும்,—அம்புயத்தாயிறைஞ் போற்று நாரணனையும் - பூமகளாலே துதிக்கப்படுந் திருமாலையும்,—கண்டு நான் போற்றினேன் - கண்டு நான் துதித்தேன். எ-று. (கக)

அரியபல் யோகியர்க் காதியாங் கபிலனும்
பெரியமா தவன்முதற் பின்னுளோர் தம்மையு
முரியநான் மறைதெரிந் துளவசிட் டனைமுத
லிருடியோர் தம்மையுங் கண்டுளே னெளியனேன்.

இ-ள். அரிய பல் யோகியர்க்கு ஆதியாங் கபிலனும் பெரிய மாதவன் முதற் பின்னுளோர் தம்மையும் - அரிய பலயோகிகளுக்கு முதல்வனாகிய கபிலமகாமுனிவன் முதலிய ஏனையோரையும்,—உரிய நான்மறை தெரிந்துள வசிட்டனை முதல் இருடியோர் தம்மையும் - சதுர்வேதங்களை அறிந்த வசிட்டன் முதலிய இருடிகளையும்,—எளியனேன் கண்டுளேன் - தமியேன் கண்டேன். எ-று. (க௨)

மனுவினீ டியமுறை மன்னரும் பூரணத்
தினியவா நதிகளு மெழில்வரைத் தலைமுதற்
கனைகடற் றலைவரைக் கடவுளர் தொகுதியு
மினைநதிக் கிருகரைக் கிடைதெரிந் தேனியான்.

இ-ள். இனை நதிக்கு இருகரைக்கு இடை - மகாநதிகளின் இரண்டு கரைகளிலுமுள்ள இடங்களிலே,—மனுவின்முறை நீடிய மன்னரும் - மனுநீதியின் உயர்ந்த அரசர்களையும்,—பூரணத்து இனியவாம் நதிகளும் - நிறைந்த இனிய சிற்றாறுகளையும்,—எழில் வரைத்தலைமுதற் கனைகடற் றலைவரைக் கடவுளர் தொகுதியும் - அழகிய மலையிடம்முதற் கடலிடம் வரை தேவாலயங்களையும்,—யான் தெரிந்தேன் - நான் கண்டேன். எ-று.

கருதரும் பெருநவ கண்டமும் மவனுறு
மருவனங் கருமமர் வாளினாற் போரிடைச்
செருமுயன் றுயிர்விடுந் தீரரும் மகளிரும்
பொருவருந் தகையவான் புவனமுங் கண்டனன்.

இ-ள். கருதரும் பெரு நவகண்டமும் - நினைத்தற்கரிய பெரிய நவ கண்டங்களையும்—அவனுறும் அருவனங்களும் - ஆண்டுள்ள அரிய வனங்களையும்,—போரிடை அமர் வாளினாற் செருமுயன்று உயிர்விடுந் தீரரும் மகளிரும் பொருவு அருந்தகைய வான்புவனமும்-சமர்க்களத்தில்(அஞ்சாது) அமர்ந்து வாளாற் போர்செய்து இறந்த வீரர்களும் மகளிர்களும் பொருந்துகின்ற அரிய (வீர) சுவர்க்கலோகத்தையும்,—கண்டனன் - கண்டேன். எ-று. (கந)

எழுதுதற் கரியவா மெந்தைநின் வடிவினின்
முழுமணிக் கிரணவா பரணமும் மொய்கதிர்க்
கழுகனித் தொளிசெய்பொன் னுடையுங் குண்டலக்
குழைமெயிற் கடர்களின் கோடிசூ ரியர்களும்.

இ-ள். எந்தை நின்வடிவினின் முழு மணிக்கிரண ஆபரணமும் - சுவாமீ! உமது வடிவத்தின் முழுதும் இரத்தினங்களாலாகிய ஒளிபொருந்

தியெ ஆபரணங்களும்,—மொய்கதிர்க்கு அழகு அளித்து ஒளிரெய் பொன், னுடையும் - சூரியனுக்கும் அழகுகொடுத்து விளங்கும் பீதாம்பரமும்,— குழைக்குண்டல வெயிற்சுடர்கள் ஈன் கோடிசூரியர்களும் - திருச்செவிக ளில் குண்டலங்களாகிய வெயிலொளியை வீசுகின்ற சூரியகோடிகளும்,— எழுதுதற்கு அரியவாம்- சித்திரித்தல் கூடாதனவாம். எ-று. (௧௫)

அளவிலா மதனவா காரமும் மளவிலா
வொளிகள் வாண் மதிதருங் கிரணமும் மொள்ளழுந்
கொளுவுமா ரழலெலாங் கோலவா ளயனமாம்
வளனெலாங் கொண்டதோர் வடிவமைந் துள்ளை நீ

இ-ள். அளவிலா மதன ஆகாரமும்-அனேக மன்மதர்போலும் அழகு வடிவமும்,—(அளவிலா) ஒளிகள் (தருங் கிரணமும்) - அனேக சூரியர்கள் தருங் கிரணம்போலும் பிரகாசமும்,—(அளவிலா) வாண் மதி தருங்கிரண மும் - அனேக சந்திரர்கள் தருங் கிரணம்போலுந் தண்மையும்,—ஒள் ளழற் கொளுவும் ஆர் அழல் எல் ஆங் கோல வான் நயனம்-(சாயங்காலத்து) அக்கினியைக் கொள்ளுவிக்கும் அரிய வெப்பத்தையுடைய சூரியர்களா கிய அழகிய பெரிய கண்களும்,—ஆம் வளனெலாங் கொண்டதோர் வடிவு அமைந்துள்ளை நீ - ஆகிய மாட்சிமைகளெல்லாவற்றையுங் கொண்ட திரு வடிவத்தைப் பொருந்தியுள்ளீர் நீர். எ-று. (௧௬)

அண்டகோ டிகளெலா மையநின் மேனியிற்
கொண்டரோ மத்திடைக் கோத்தமா மணிகளாக்
கண்டனே னின்முகக் கமலமுங் கோரமாம்
விண்டபே ரொதையும் விண்ணிடிக் கண்ணவாம்.

இ-ள். ஐய அண்டகோடிகளெலாம் - சுவாமீ! பலவண்டங்களை யெல் லாம்,—நின் மேனியிற் கொண்ட ரோமத்திடைக் கோத்த மா மணிகளாக் கண்டனேன் - உமது உருவத்திற் பொருந்திய மயிர்களிலே கோத்த பெரிய மணிகளாகக் கண்டேன்,—நின் முகக் கமலமுங் கோரமாம்-உமது வதனபங்கயமும் பயங்கரமாம்,—விண்டபேரொதையும் விண்ணிடிக்கு அண்ணவாம் - (நீர்) வாய்திறந்த பேரொசைகளும் இடியேற்றைச் சாரந் தனவாம். எ-று. (௧௭)

சூலம்வா ளண்டுவிற் றோமரங் காமர்சூழ்
வேலெழுச் சக்கர மாயவெம் படைகளுஞ்
சிலநின் கைகளிற் செற்றின பற்றிகல்
மூலமே நடுவிலா துற்றதோர் மூர்த்தமே.

இ-ள். பற்றிகல் மூலமே நடு இலாதுற்றதோர் மூர்த்தமே - விருப்பு வெறுப்புக்களும் ஆதியும் மத்தியமும் (அந்தமும்) இல்லாதுள்ள திருவடி வமே!,—சூலம் ... ... ... ... சக்கரம் ஆய வெம்படைகளும் - சூலம் வாள் தண்டு வில் தோமரம் அழகுபொருந்திய வேல் எழு சக்கரம் என் னுங் கொடிய படைகளும்,—சில நின் கைகளிற் செற்றின - சிறப்பினை யுடைய உமது திருக்கரங்களிலே செறிந்தன. எ-று. (௧௮)

அளவிலா வானன மளவிலா நீள்குழை
யளவிலா நீள்விழி யளவிலா நாசிக

ளளவிலா துயர்கர மளவிலா நின்வடி
வளவிலா மறைகளா கமமுநா டரியதால்.

இ-ள். அளவிலா ஆனனம் - எண்ணில்லாத முகங்களும்,—அளவிலா நீள் குழை - எண்ணிறந்த நீண்ட செவிகளும்,—அளவிலா நீள் விழி - எண்ணிறந்த நீண்ட கண்களும்,—அளவிலா நாசிகள் - எண்ணிறந்த மூக்குகளும்,—அளவிலாத உயர்கரம் - எண்ணிறந்த உயர்ந்த கைகளும் ஆகிய,—அளவிலா நின் வடிவு - அளவுபடாத உமது வடிவம்,—அளவிலா மறைகளாகமமும் நாடரியது - அளவிறந்த வேதாகமங்களாலுந் தெரிதற்கரியது எ-று. (௧௯)

புகலருந் திருமுகப் புண்டரீ கந்தொறுந்
தகைகவம்பே ரண்டமுஞ் சடசடென் றழலினிற்
றுகளெழுப் பல்லின்வீழ் தொனியினு லடியனே
னகமுடைந் துருகியுள் ளஞ்சினே னஞ்சினேன்.

இ-ள். புகலருந் திருமுகப் புண்டரீகந்தொறும் - சொல்லுதற்கரிய திருமுக கமலங்கடோறும்,—பேரண்டமுந் தகைவ - பெரியவண்டங்களையுந் தடுப்பனவாய்,—பல்லின் அழலினிற்றுகள் எழச் சடசடென்று வீழ் தொனியினால் - பற்களினின்று அக்கினிப்பொறிகள் எழச் சடசடென்று தோன்றும் ஓசைகளால்,—அடியனேன் அகமுடைந்து உள்ளுருகி அஞ்சினேன் அஞ்சினேன்-அடியேன் பாவமழிந்து மனமுருகி மிக அஞ்சினேன். எ-று. (௨௰)

கோரமிக் கிளர்தரக் கோலநீ கொண்டதாற்
சீருறப் பார்க்கவுஞ் சிறியனே னஞ்சினே
னாரைநீ சொல்கென வறிகிலே னென்றலும்
வீரவா குணர்தர வேள்மகிழ்ந் துரைசெய்வான்.

இ-ள். நீ கோரம் மிக்கிளர்தரக் கோலங் கொண்டதால் - நீர் அச்சம் மேற்படும்வண்ணம் வடிவத்தைக் கொண்டமையால்,—சிறியனேன் சீருறப் பார்க்கவும் அஞ்சினேன் - சிறியேன் சிறப்போடு பார்க்கவும் பயந்தேன்,—நீ ஆரை சொல்க என அறிகிலேன் - நீர் எவ்வியல்புடையீர் கூறுக என்று கேட்கவும் அறியேன்,—என்றலும் - என்றுசொல்ல,—வேள் மகிழ்ந்து வீரவாகு உணர்தர உரைசெய்வான் - சுவாமியார் மகிழ்ந்து (அவ்) வீரவாகு அறியச் சொல்லுவார். எ-று. (௨௧)

வேறு

இப்பிர பஞ்சமெல்லா மெய்திய தனுவாக் கொண்டேன்
செப்புல கனைத்து நன்மை சேர்வுறப் படைத்தல் காத்த
றப்பிலா தழித்த லென்னச் சாற்றுமுத் தொழிலுஞ் செய்யு
மொப்பிலா முதன்மை யுற்ற வொருவனு னுணர்கு வாயே.

இ-ள். இப்பிரபஞ்சமெல்லாம் எய்திய தனுவாக் கொண்டேன் - இவ்வுலகமனைத்தையும் பொருந்திய வடிவமாகக் கொண்டேன்,—செப்பு உலகனைத்தும் நன்மை சேர்வுற - சொல்லப்படுகின்ற (சேதனப்) பிரபஞ்சங்களெல்லாம் உறுதியைப் பெறும்பொருட்டு,—படைத்தல் காத்தல் தப்பிலா தழித்தல் என்னச் சாற்றும் முத்தொழிலும்-சிருட்டி திதி சங்காரம் என்று சொல்லப்படும் முத்தொழில்களையும்,—செய்யும் ஒப்பிலா முதன்மையுற்ற

ஒருவன் நான் உணர்குவாய் - செய்யும் ஒப்பில்லாத தலைமையைப் பெற்ற ஒருவன் நானே அறிந்துகொள். எ-று. (உஉ)

கூறுதற் கரிய ஞான வுருவனான் குறிக்கொ ளென்றே
யாறுமா முகத்தன் சொன்ன வருண்மொழி கேட்ட லோடும்
வேறெடுத் துரைக்க நெஞ்சம் வெருக்கொடு வீர வாகு
தேறிநாக் குளறி மீண்டுஞ் சேவடி துதித்துச் சொல்வான்.

இ-ள். நான் கூறுதற்கரிய ஞானவுருவன் குறிக்கொள் என்று - நான் (உண்மையானே) சொல்லுதற்கரிய ஞானவடிவுடையவன் அறிந்துகொள்ளுதி என்று,—ஆறுமாமுகத்தன் சொன்ன அருண்மொழி கேட்டலோடும்- ஆறுமுகபெருமான் கூறிய திருவாக்கைக் கேட்டபொழுது,—வீரவாகு வேறு எடுத்துரைக்க நெஞ்சம் வெருக்கொடு - வீரவாகு வேறு மொழிகளை எடுத்துக்கூற மனம் அஞ்சி,—தேறு இல் நாக்குளறி - தேறுதல் இன்றி உரைதடுமாறி,—மீண்டுஞ் சேவடி துதித்துச் சொல்வான் - பின்னருஞ் சிறீபாதங்களைத் துதித்துச் சொல்வார். எ-று. (உங)

கின்னர ரியக்கர் பாட வரம்பையர் கெழுமி யாடத்
துன்னிய முனிவர் சித்தர் தோகையர் தொழுது நிற்பப்
பொன்னகர்க் கிறைவ னுள்ள நடுங்குறக் கண்டேன் போற்றி
யுன்னருங் கோலம் பார்க்க வுள்ளமும் வெருவு மம்மா.

இ-ள். கின்னரர் இயக்கர் பாட - கின்னரர்களும் இயக்கர்களும் பாடவும்,—அரம்பையர் கெழுமி ஆட - அரமகளிர் கூடிவிளையாடவும்,—துன்னிய முனிவர் சித்தர் தோகையர் பொன்னகர்க்கிறைவன் உள்ளம் நடுங்குறத் தொழுதுநிற்பக் கண்டேன் - நெருங்கிய முனிவருஞ் சித்தரும் மகளிரும் இந்திரனும் மனம் நடுங்க வணங்கிநிற்கவுங் கண்டேன்,—உன்னருங் கோலம் பார்க்க உள்ளமும் வெருவும் - உமது திருக்கோலத்தைத் தரிசிக்க மனமும் அஞ்சும்,—போற்றி - காத்துக்கொள்க எ-று. (உச)

துதிக்கவு நாவுள் ளேங்குஞ் சொல்லருந் தியானத் தாலே
மதிக்கவு நெஞ்ச மேங்கும் வாய்மைசஞ் சலமு மாமால்
விதிக்கருங் குணங்க ளாறுன் மெய்க்கலங் கார மாக
வுதித்திருந் தருளும் வேற்கை யொருவநின் சரணம் போற்றி.

இ-ள். சொல் துதிக்கவும் நா உள் ஏங்கும் - சொற்களினாலே புகழவும் நாக்கு உள்ளே கலங்கும்,—அருந்தியானத்தாலே மதிக்கவும் நெஞ்சம் ஏங்கும்-அரியதியானத்தினால் உட்கொள்ளவும் மனங்கலங்கும்,—வாய்மையுஞ் சஞ்சலமாம் - உரையுந் தடுமாறும்,—விதிக்கருங்குணங்கள் ஆறு ஆல் மெய்க்கு அலங்காரமாக உதித்திருந்தருளும் - (ஏனையரால்) அமைத்துக் கொள்ளலாகாத (முற்றறிவு வரம்பிலின்பம் இயற்கையுணர்வு சுதந்திர முடைமை அழிவிலாற்றல் வரம்பிலாற்றல் என்னுங்) குணங்களாகிய அறுதிருமுகங்கள் ஆன்ற திருமேனியோடு சிறப்பாகத் தோற்றியருளிய,—வேற்கையொருவ நின் சரணம் போற்றி - வேலாயுதகரநாயகரே உமது திருவடிகள் காத்தருள்க. எ-று. (உ௫)

சராசர மனைத்து மாகிச் சராசரத் தன்மை நீங்கும்
பராபர வியற்கை யாகிப் பரவுவா ருள்ளந் தோறும்

விராவிய கருணை யாகி விளங்குநின் மெய்யின் றோற்ற
மராமலர்த் தொடையல் சூடு மயூரவா கனத்தாய் போற்றி.

இ-ள். சராசரம் அனைத்துமாகி - பிரபஞ்சம் அனைத்துமாகி,—சராசரத்தன்மை நீங்கும் பராபர இயற்கையாகி - (உண்மையானே) பிரபஞ்சமாந்தன்மையில் நீங்கிய பதியாந்தன்மையுடையீராய்,—பரவுவார் உள்ளந்தோறும் விராவிய கருணையாகி - வழிபடுவார் மனங்கடோறுங் கலந்த அருளுடையீராய்,—விளங்கும் நின் மெய்யின் தோற்றம் போற்றி - விளங்குகின்ற உமது திருவுருவத்தின் தோற்றம் (அடியேனைக்)காத்துக்கொள்க,—மராமலர்த்தொடையல் சூடும் மயூரவாகனத்தாய் - கடப்பமாலையையணிந்த மயில்வாகனக்கடவுளே. எ-று. (உ௬)

வயம்புனை வோர்க டம்மில் வீரரில் வயப்போர் நோக்கி
வியந்துளங் களிப்பு நீங்காப் பொருநரில் வில்லோர் தம்மி
லுயர்ந்துளோர் தம்மில் யானென் றுளத்தகங் காரந் தன்னாற்
புயம்படைத் தேனை யல்லாற் பொருவருங் கொடுஞ்சூர்த் தானை.

இ-ள். வயம் புனைவோர்கடம்மில் வீரரில் - வெற்றிபடைக்கும் வீரருள்ளும்,—வயப்போர் நோக்கி வியந்து உளங்களிப்பு நீங்காப் பொருநரில் வில்லோர் தம்மில் - வலிய போரைக் கண்டு (அஞ்சாதெதிர்நின்று தம்மைப்) புகழ்ந்து மனமகிழ்ச்சி நீங்காது பொரும் வில்வீரருள்ளும்,—உயர்ந்துளோர் தம்மில் யான் என்ற உளத்தகங்காரந்தன்னால் - சிறந்தவர்களினும் யானே (சிறந்தவன்) என்ற மனச்செருக்கால்,—புயம்படைத்தேனை யல்லாற் பொருவருங் கொடுஞ்சூர்த்தானை - புயங்களாற் பேர்படைத்தேனுக்கன்றி ஒப்பில்லாத கொடிய சூரனது சேனைகளை. எ-று. (உ௭)

வெல்லுத லரிது போலு மெனவுள மேம்பா டெண்ணும்
புல்லுணர் வோடும் வாளா பொருந்துமென் னிதய மாய
கல்லகங் குழைய மோதுங் கருணைவா ரிதியே காணு
வெல்லையி லண்ட மெல்லா மெடுத்தபே ருருவ நீத்து.

இ-ள். வெல்லுதல் அரிதுபோலும் என - வென்றது (பிறர்க்கு) அரிய தாம்போலுமென்று,—உளம் மேம்பாடு எண்ணும் புல்லுணர்வோடும் - உள்ளே பெருமையை நினைக்கும் புல்லறிவோடும்,—வாளா பொருந்தும் என் இதயமாய கல்லகங் குழைய - வீணே பொருந்திய என்மனமாகிய கல்லிடம் நெகிழ,—மோதுங் கருணைவாரிதியே - மோதுகின்ற (நீர்த்திரையாகிய)அருளையுடைய கடலே,—காணு எல்லையில் அண்டமெல்லாம் எடுத்த பேருருவம் நீத்து - காணப்படாத அளவிறந்த அண்டங்களையெல்லாம் ஒருங்கு கொண்ட பெரிய ரூபத்தை (இனி) விட்டு. எ-று. (உஅ)

பண்டுள வடிவங் காட்டி யாளெனப் பையு ளோடு
முண்டகத் திருத்தாண் மீது மோலியுங் கரமுஞ் சூட்டித்
தெண்டமிட் டிறைஞ்சும் வீர வாகுவின் செய்கை நோக்கி
விண்டலத் துதித்து வீசும் விரிகதிர்ப் பரிதி போலும்.

இ-ள். பண்டுள வடிவங் காட்டி ஆள் - பழைய திருவுருவத்தைக் காட்டி ஆளுக,—எனப் பையுளோடு முண்டகத் திருத்தாள் மீது மோலியும் கரமுஞ் சூட்டி - என்று துக்கத்தோடு தாமரைமலரடிகளை மேலே

சிரசினுங் கைகளினுஞ் சூட்டி,—தெண்டமிட்டு இறைஞ்சும் வீரவாகுவின் செய்கை நோக்கி-தண்டஞ்செய்து வணங்கிய வீரவாகுவின் செய்கையைப் பார்த்து,—விண்டலத்து உதித்து விரிகதிர் வீசும் பரிதி போலும்-ஆகாயத்திலுதித்து விரிந்த கிரணங்களை வீசுஞ் சூரியன்போன்ற. எ-று. (உக)

ஒளிதிகழ் முகமோ ராறு முயர்புய நிரையீ ராறும்
வளர்நிரை விழியீ ராறு மாமணிக் குழையீ ராறு
முளரியந் தாளு மாக முன்னரின் வடிவங் காட்டிக்
களிமகிழ் சிறந்து வீர வாகுவைக் கைக ணீட்டி.

இ-ள். ஒளிதிகழ் முகமோராறும் - ஒளிவிளங்குகின்ற திருமுகங்களாறும்,—உயர் நிரைப் புயமீராறும் - உயர்ந்த நிரையாகிய திருப்புயங்கள் பன்னிரண்டும்,—வளர் நிரை விழியீராறும் - மாட்சிமையுடைய நிரையாகிய கண்கள் பன்னிரண்டும்,—மாமணிக்குழையீராறும் - பெரிய இரத்தினங்களையணிந்த திருச்செவிகள் பன்னிரண்டும்,—முளரியந்தாளுமாக - தாமரைமலரடிகளுமாக,—முன்னரின் வடிவங்காட்டி - முன்போலுந் திருவுருவத்தைக் காட்டி,—களிமகிழ் சிறந்து - மிகமகிழ்ந்து,—கைகள் நீட்டி வீரவாகுவை - திருக்கரங்களை நீட்டி வீரவாகுதேவரை. எ-று. (கூ0)

எடுத்தன னெடுத்த காலை யெழுந்தருட் கண்ணீர் மாரி
விடுத்தடி வணங்கி நின்ற வீரவா குவைமுன் னோக்கி
முடித்தலை துளக்கி யஞ்சே லொன்றுநா மொழிது மென்னுத்
தொடுத்தபே ரன்பி னோடுஞ் சொல்வதற் குள்ளம் வைத்தான்.

இ-ள். எடுத்தனன் - தூக்கியருளினார்,—எடுத்தகாலை எழுந்து அருட் கண்ணீர்மாரி விடுத்து அடிவணங்கி நின்ற வீரவாகுவை - தூக்கியகாலத்திலே எழுந்து அருளினாலே கண்ணீர்மழையைச் சொரிந்து பாதங்களை வணங்கிநின்ற வீரவாகுதேவரை,—முன் நோக்கி முடித்தலை துளக்கி அஞ்சேல் ஒன்று நாம் மொழிதும் என்னு - சுவாமியார் பார்த்து முடிபொருந்திய சிரசை அசைத்து அஞ்சற்க ஒன்றனை யாங் கூறுவேம் என்று சொல்லி,—தொடுத்த பேரன்பினோடுஞ் சொல்வதற்கு உள்ளம் வைத்தான்-பொருந்திய பெருங் காதலோடு கூறுதற்குத் திருவுளங்கொண்டார். எ-று. (கூக)

எண்ணரும் பிரமா தானு மியற்சன காதி யோரும்
பெண்ணொரு பாகற் போற்று நந்தியும் பிருங்கி யாதி
திண்ணிய கணத்து ளோருஞ் சிந்தைமுற் றொருங்க நோற்றுக்
கண்ணினுக் கடங்கா விந்தக் கோலத்தைக் கருத்துள் வைத்தார்.

இ-ள். எண் அரும் பிரமா தானும்-எண்ணுகின்ற அருமையாகிய பிரமதேவரும்,—இயற் சனகாதியோரும் - முறைமையினையுடைய சனகர்முதலியோரும்,—பெண்ணொருபாகற் போற்று நந்தியும் - சிவபெருமானைத் துதிக்கின்ற நந்திதேவனும்,—பிருங்கியாதி திண்ணிய கணத்துளோரும் - பிருங்கி முதலிய வலியகூட்டத்தவர்களும்,—சிந்தைமுற்று ஒருங்க நோற்று - மனம் முழுதும் ஒருங்கத் தவஞ்செய்து,—கண்ணினுக்கு அடங்கா இந்தக்கோலத்தைக் கருத்துள் வைத்தார் - கண்களுக்கு அடங்காத இந்த விசுவரூப(ந் தரிசிக்கும் விருப்ப)த்தை உள்ளத்தில் வைத்தார்கள். எ-று. (கூஉ)

அன்னவர் தட்மை நோக்கி யருள்சுரந் தினிய தோற்றத்
தின்னல மினிமுன் ஞதி யுகத்தினி லிகல்வெஞ் சூரைக்
கொன்னிலை வேலாற் கீண்டு கந்தமா தனப்பொற் கோயின்
மன்னிவீற் றிருத்த லாக வேண்டினை மகிழ்ச்சி மிக்கால்.

இ-ள். அன்னவர்தம்மை நோக்கி இனிய தோற்றத்தின் நலம் அருள் சுரந்து - (நாம்) அவர்களைப்பார்த்து இனிய விசுவரூபத்தின் இன்பத்தைக் கொடுத்தற்குக் கருணைகூர்ந்து,—இனி முன்னு ஆதி யுகத்தினில் - இனி முற்படும் யுகாதியிலே,—இகல்வெஞ்சூரைக் கொன்னிலைவேலாற் கீண்டு - சூரபன்மனை வேற்படையினுற் சங்கரித்து,—கந்தமாதனப் பொற்கோயில் மன்னி மகிழ்ச்சி மிக்கு வீற்றிருத்தல் ஆக வேண்டினம் - கந்தமாதனத்துத் திருக்கோயிலிற் சேர்ந்து மகிழ்ச்சிமிகுந்து வீற்றிருப்பது உளதாக விரும்பினேம். எ-று. (௯௯)

அவ்வயி னமது சேனைக் காதியாம் வீர வாகு
செவ்வியி னிறைந்த தோற்றத் தெரிசனை விரும்பு மன்ஞற்
கெவ்வமில் வடிவங் காட்டு வோமென விசைத்தே நீருங்
கவ்வையி னீங்கித் தோற்றங் காண்மினென் றுரைத்து ளோமால்.

இ-ள். அவ்வயின் நமது சேனைக்கு ஆதியாம் வீரவாகு - அவ்விடத்து நமது சேனைக்குத் தலைவனுகிய வீரவாகு,—செவ்வியின் நிறைந்த தோற்றத் தெரிசனை விரும்பும் - அழகினுல் நிறைந்த விசுவரூபத்தைத் தரிசித்தலை விரும்பும்,—அன்ஞற்கு எவ்வமில் வடிவங் காட்டுவோம் என இசைத்தே - அவனுக்குக் குற்றமில்லாத அவ்வுருவத்தைக் காட்டுவேம் என்று கூறி,— நீரும் கவ்வையின் நீங்கித் தோற்றங் காண்மின் என்று உரைத்துளோம்- நீங்களுந் துன்பத்தின் நீங்கி அவ்வுருவத்தைக் காணுங்கள் என்று சொன்னேம். எ-று. (௯௭)

செப்பிய மாற்றந் தன்ஞற் சிந்தனை மகிழ்ச்சி யெய்தி
யிப்பெரு வடிவ முன்பா லெடுத்தனந் தொழுது நீயு
மொப்பிலா வுவகை பூத்தா யுள்ளமும் புனிதம் பெற்ருய்
முப்புவ னத்து ளோரின் முதன்மையும் படைத்தி கண்டாய்.

இ-ள். செப்பிய மாற்றந் தன்ஞல் - (அங்ஙனங்) கூறிய வசனத்தோடியைய,—சிந்தனை மகிழ்ச்சியெய்தி இப்பெருவடிவம் உன்பால் எடுத்தனம்- மனமகிழ்ச்சியடைந்து இவ்விச்சுவரூபத்தை நின்முற் கொண்டோம்,— நீயுந் தொழுது ஒப்பிலா உவகை பூத்தாய் - நீயும் வழிபட்டு நிகரில்லா மகிழ்ச்சியையடைந்தாய்,—உள்ளமும் புனிதம் பெற்ருய் - மனமுஞ் சுத்தி பெற்றனை,—முப்புவனத்துளோரின்முதன்மையும் படைத்தி-மூவுலகத்தாரின் முதன்மையையும் பெறுவாய். எ-று. (௯௫)

ஆதலி னெழுத்தோ ராறு மற்புதத் தழுத்தி வேத
நீதியான் மெய்த்தி யான நெஞ்சகத் தடக்கி நம்பே
ரோதுதி நமது பொற்ருளூற்றுளோர் தம்மைக் காத்துக்
காதலா லவர்த முள்ளக் கருத்தவா முடித்தி யப்பால்.

இ-ள். ஆதலின் எழுத்தோராறும் அற்புதத்து அழுத்தி - ஆகையாற் சடக்ஷரங்களையும் அதிசயத்தோடு (மனத்தில்) அழுத்தி,—வேத நீதி ஆல்

மெய் தியானம் நெஞ்சகத்து அடக்கி - மறைமுறையின் அமைந்த திருவுருவத்தின் தியானத்தை மனத்தின் அடக்கி,—நம்பேர் ஓதுதி - நமது நாமத்தைக் கூறுதி,—நமது பொற்றாள் உற்றுளோரர் தம்மைக் காத்து - நமது திருவடிகளை வழிப்பட்டவர்களைப் பரிபாலித்து,—காதலால் அவர்தம் உள்ளக் கருத்து அவா முடித்தி - அன்போடு அவர் உள்ளத்துக் கருதிய இஷ்டசித்திகளை அருளுதி,—அப்பால் - அதன்பின்னர். எ-று. (௩௬)

அளக்கரும் பிரம கற்ப வந்தத்தி னமது பாதத்
தளக்கமலத்து வீடு தந்தன மென்றே றயீசன்
குளக்கணிற் றோன்று ஞானக் குருபர னுரைத்தா னன்ன
வளத்திய றன்னால் வீர வாகுவு மனங்கொண் டேத்தி.

இ-ள். அளக்கரும் பிரமகற்ப அந்தத்தின் - அளவிடுதற்கரிய பிரமகற்பத்தின் முடிவிலே,—நமது பாதத்தளக்கமலத்து வீடு தந்தனம் என்றே - நமது பாதாரவிந்தங்களின் முத்தியைத் தந்தேம் என்று,—ஈசன் குளக்கணிற்றோன்று ஞானக் குருபரன் உரைத்தான் - சிவபெருமானது நெற்றிக் கண்ணிற்றோன்றிய ஞானத்தினையுடைய குமாரசுவாமி திருவாய்மலர்ந்தருளினர்,—அன்ன வளத்து இயல் தன்னால் வீரவாகுவும் மனங்கொண்டு ஏத்தி - அந்த அருட்செல்வ இயல்பினால் வீரவாகு தேவரும் மனங்கொண்டு துதித்து. எ-று. (௩௭)

புகலருங் குமர வேள்வி பூதியுங் கேட்டு மேலாந்
தகையபே ருருவங் கண்டு சதுதளத் திறைக்கு மெட்டாச்
சுகமடைந் தருந்தி யானத் துதியுட னிருந்து யோகத்
தகமகிழ்ந் தின்று காறு மற்புதப் புணரி யாழ்ந்தான்.

இ-ள்.—புகலருங் குமரவேள் விபூதியுங் கேட்டு - சொல்லுதற்கரிய குமாரசுவாமியினுடைய விபூதியையுங் கேட்டு,—மேலாந்தகைய பேருருவங் கண்டு - திவ்வியமான விசுவரூபத்தையுங் கண்டு,—சதுதளத்திறைக்கும் எட்டாச் சுகமடைந்து - பிரமாவுக்கும் எட்டாத சுகத்தையடைந்து,—அருந் தியானத்துதியுடனிருந்து - அரிய தியானஸ்தோத்திரங்களோடிருந்து,—யோகத்து அகமகிழ்ந்து இன்றுகாறும் அற்புதப் புணரி ஆழ்ந்தான் - யோகத்தோடு மனமகிழ்ந்து இன்றுவரையும் அதிசயசாகரத்தில் அமிழ்ந்தினர். எ-று. * (௩௮)

பேருரு வமைந்த தோற்றப் பெற்றியும் விபூதி யாய
சீரருட் சிறப்பு மேத்திச் சிந்திப்போர் தீமைநீங்கிக்
கோரவெம் பவவேர் கீண்டு கூறுதற் கரிதாஞ் செல்வ
வாரியிற் றிளைத்து வேண்டு மைந்தரை யடைவர் மன்னே.

இ-ள். விபூதியாய சீர் அருட் சிறப்பும் - குமரவிபூதியாகிய திவ்விய அருட்டலைமையையும்,—அமைந்த பேருருத் தோற்றப் பெற்றியும் - (அத்திவ்வியத்தலையால்) அமைந்த விசுவரூபமாகிய திருவடிவத்தின் வரலாற்றினையும்,—ஏத்திச் சிந்திப்போர் - துதித்து நினைப்பவர்,—தீமை நீங்கி - துன்பங்கணீங்கி,—கோரவெம் பவவேர் கீண்டு-பயங்கரமான கொடிய பாவவேரை யறுத்து,—கூறுதற்கரிதாஞ் செல்வ வாரியில் திளைத்து - சொல்லுதற்கரிய செல்வக்கடலிற் படிந்து,—வேண்டும் மைந்தரை அடைவர் - விரும்பிய புதல்வரையும் பெறுவர். எ-று. (௩௯)

வஞ்சனை தீநீர் காற்று வருமவ மிருத்து வெந்நோய்
சஞ்சல மவர்பாற் செல்லா தண்ணளி யுடனே கேட்போர்
நெஞ்சகங் குழைய வேண்முன் னித்தமும் படிப்போர் வாங்கி
விஞ்சையி னெழுது வோர்கள் விருப்புட னினைத்த வெல்லாம்.

இ-ள். வஞ்சனை தீ நீர் காற்று வரும் அவமிருத்து-(அன்னியருடைய) வஞ்சனைகளினாலுந் தேயு அப்பு வாயுக்களினாலும் வரும் அவமிருத்துக்களும்,—வெந்நோய் சஞ்சலம் அவர்பாற் செல்லா - கொடிய நோய்களும் (மற்றுந்) துன்பங்களும் அவரிடத்து எய்தா,—தண்ணளியுடனே கேட்போர் - அன்புடனே கேட்பவர்களும்,—நெஞ்சகங் குழைய வேள் முன் னித்தமும் படிப்போர் - மனநெகிழச் சுவாமிசந்நிதானத்தில் நாடோறுங் கற்பவர்களும்,—வாங்கி விஞ்சையின் எழுதுவோர்கள் - (திருமுறையை) வாங்கி அறிவோடு வரைபவர்களும்,—விருப்புடன் நினைத்தவெல்லாம் - ஆசையோடு எண்ணியவைகளையெல்லாம். எ-று (௪0)

முற்றொருங் கெய்து வார்கண் முழுதநம் மாணை யாணை
சொற்றன மிதயத் தன்பு தூண்டுதி யெனவி யாசன்
கற்றுணர் சுகனுங் கேட்கக் கழறினன் முனிவி ருங்கட்
குற்றமா கதையை யின்னு முணர்த்துவ மென்றான் சூதன்.

இ-ள் ஒருங்கு முற்ற எய்துவார்கள் - ஒருங்கே சித்திக்கும்படி பெற்றுக்கொள்ளுவார்கள்,—முழுதும் நம் மாணை ஆணை சொற்றனம் - எல்லாம் நம்மாணை ஆணையே சொன்னேம்,—இதயத்து அன்பு தூண்டுதி என-(உன்) மனத்து அன்பைச் செலுத்துதி என்று,—வியாசன் கற்றுணர் சுகனுங் கேட்கக் கழறினன் - வியாசமுனிவன் கற்றறிந்த சுகமுனிவனுங் கேட்கக் கூறினான்,—முனிவீர் உங்கட்கு உற்ற மாக்கதையை இன்னும் உணர்த்துவம் என்றான் சூதன் - முனிவர்களே! உங்களுக்குப் பொருந்திய பெரிய கதைகளை இன்னும் அறிவிப்பேம் என்று கூறினான் சூதமுனிவன். எ-று. (௪௧)

விசுவரூப அத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௬௬௯

## ௧௪-வது. சுவாமியின் மந்திரமகிமையுரைத்த அத்தியாயம்.

மகமாயை யாதி மலமூட றுத்து வளர்கின்ற ஞான மினிதாய்ப்
புகவேசெ லுத்து மொருகாதை யுண்டு புகல்வா நினைக்க வரிதாங்
குகனை முத்தி வடிவாய தண்ட கூடம்ப ராவ மனுநூற் [தே.
சுகனே யருத்தி யுடன்வீர வாகு தொழுநாள் விணோர்க டொழு

இ-ள். மனு நூற் சுகனே-மன்னிய நூல்களையறிந்த சுகமுனிவனே!,—மகமாயையாதி மலம் ஊடறுத்து - மகாமாயை முதலிய பாசங்களைப் பிரித்து,—வளர்கின்ற ஞானம் இனிதாய்ப் புகவேசெலுத்தும் ஒருகாதை உண்டு - வளரும் அறிவை இனிது பிரவேசிப்பிக்கும் ஒரு சரித்திரம்

ளது,—புகல்வாம் - (அதனைக்) கூறுவாம்,—வினைக்க அரிதாங் குகன் ஆன முத்தி வடிவாயது - வினைத்தற்கரிய குமாரசுவாமி கொண்ட முத்தியைத் தரும் விசுவரூபமானது,—அண்டகூடம் பரவ - (முன்னர்)அண்டகூடங்களின் வியாபிக்க,—அருத்தியுடன் வீரவாகு தொழுநாள் - அன்போடு வீரவாகுதேவர் வணங்கினின்றபொழுதில்,—விணோர்கள் தொழுது - தேவர்களும் (தரிசித்து) வணங்கிக்கொண்டு. எ-று (க)

வேறு

போனா ரிருந்தாப தர்க்காதி யாமென்று புகலுங்கை வீணை
முனிவ, னாறாத பேரன்பு கொண்டுசெவ் வேள்கொண்ட வக்கோல
நின்று தொழுதே, வாறாறெனக்கண்க ணீர்பாய ரோமங்கள் வடி
வத் தரும்ப விதயந், தானான வானந்த ஞானம் பெருக்காழி தாழ்
ந்தா னுயர்ந்த புகழால்.

இ-ள். போனார் - சென்றனர்,—இருந் தாபதர்க்கு ஆதியாமென்று புகலுங் கை வீணை முனிவன் - (அவருடனின்று தரிசித்துத் தொழுத) பெரிய முனிவருட் சிரேட்டனெனப்படும நாரதமுனிவன்,—ஆறாத பேரன்பு கொண்டு - நீங்காத பேரன்பைக் கொண்டு,—செவ்வேள் கொண்ட அக்கோலம் நின்று தொழுது - சுவாமிகொண்ட அவ்வுருவத்தை நின்று வணங்கி,—வாறாறெனக் கண்கள் நீர்பாய - சுரநதிபோலக் கண்களினின்று அருவிசொரிய,—வடிவத்து ரோமங்கள் அரும்ப - உடலின் மயிர்கள் சிலிர்ப்ப,—உயர்ந்த புகழால் இதயமான ஆனந்த ஞானம் பெருங்காழி தாழ்ந்தான் - உயர்ந்த துதிகளோடு மனத்துப் பொருந்திய ஆனந்தமும் அறிவுமாகிய பெருக்கினையுடைய கடலின் முழுகினான். எ-று (உ)

நீடுஞ் சரற்கால மேகத்தின் மின்சார்த னேரக்கை வீணை நில
வப், பீடொன்று முள்ளக்க ளிப்பாந்த ரங்கம் பிடித்துந்த வான
முனிவன், மூடுந் துழாய்த்தொங்கன் மோலிப்பிரான்விண்டு முடி
வற்ற வின்பினமரும், பாடொன்று வைகுண்ட நல்லாலயத்துற்ற
பரிவோடடைந் துளனரோ.

இ-ள். வானமுனிவன் - நாரதமுனிவனானவன்,—நீடுஞ் சரற்கால மேகத்தின் மின்சார்தல் நேரங்கை வீணை நிலவ - நெடிய கூதிர்ப்பருவத்து (வெண்)முகிலின் மின்னல் சேர்தல்போலக் கையில் வீணை விளங்க,—பீடொன்றும் உள்ளக்களிப்பாந் தரங்கம் பிடிந்து உந்த - பெருமைபொருந்திய மனமகிழ்ச்சியாகிய திரை பிடித்துத் தள்ளுதலால்,—மூடுந் துழாய்த் தொங்கல் மோலிப் பிரான் விண்டு - துளசிமாலையையணிந்த முடியினையுடைய தலைவராகிய விட்டுணு,—முடிவற்ற இன்பின் அமருமபாடு ஒன்று வைகுண்ட நல்லாலயத்து - அளவிறந்த இன்பத்தோடிருக்கின்ற பெருமைபொருந்திய வைகுண்டத்துத் திருக்கோயிலின்கண்ணே,—உற்ற பரிவோடு அடைந்துளன் - மிக்க அன்போடு சேர்ந்தான். எ-று. (௩)

பாலாழி நடுவிற்ற வேதந்திர ரூந்தீவு பண்புற்ற தீவினிடையே,
மேலாய வைகுண்ட பட்டணத் தானந்த மயமாய் விளங்கு வதுசீர்,
மூலாக மக்கோயி லவையூறி படிகத்தின் மொய்த்துத் திரண்டு
நெடிதாங், காலாயி ரம்பெற்ற மண்டபந் தோன்றங் கணிந்தான் பய
த்தி னுரைபோல.

இ-ள். பாலாழி நடுவிற் சுவேதச் செழுந்தீவு-பாற்கடலின் நடுவே சுவேத மென்னும் அழகிய தீவு (உள்ளது),—பண்புற்ற தீவினிடையே - அத்தீவினிடத்து,—மேலாய வைகுண்ட பட்டணத்து - மேன்மையாயுள்ள வைகுண்ட பட்டணத்திலே,—சீர்மூல அகமக்கோயிலவையூடு - சிறப்புக்குக் காரணமாகிய மலைபோன்ற கோயில்களினுள்ளே,—படிகத்தின் மொய்த்துத் திரண்டு நெடிதாங் கால் ஆயிரம் பெற்ற ஆனந்தமயமாய் விளங்குவது மண்டபத்து - பளிங்குகளால் (ஆகி) நெருங்கித் திரண்டு நீண்ட ஆயிரங் கால்களைக்கொண்ட ஆனந்தவடிவாய் விளங்குவதாகிய மண்டபத்தின் கண்ணே,—இன்பங் கனிந்த ஆன்பயத்தின் நுரைபோல் - இன்பமுதிர்ந்த பசுப்பாலின் நுரைபோல. எ-று. (சு)

மெலிதாய வெண்மைத்திருச்சேட பரியங்க மிசையான பூவின் மகளு, நிலமாது மிருபாலி னிலவச்சு னந்தனொடு விச்சுவச் சேனனுவணன், றலையான நந்தனுயர் சனகாதி யோர்கங்கை தாறுதி முந்து நதிகள், மலர்வான் றருச்சுரபி விண்ணக மடந்தையர் வசுக்களனு சந்தர் முதலோர்.

இ-ள். மெலிதாய வெண்மைத் திருச்சேட பரியங்க மிசை - மெல்லிய வெள்ளிய ஸ்ரீசேஷசயனத்தின்மேலே,—ஆன பூவின் மகளும் நிலமாதும் இருபாலின் நிலவ - பொருந்திய ஸ்ரீதேவியும் பூதேவியும் இருபாங்கரிலும் விளங்க,—சுனந்தனொடு விச்சுவச்சேனன் உவணன் தலையான நந்தன் - சுனந்தனும் விச்சுவச்சேனனும் உவணனும் முதன்மையாகிய நந்தனும்,—உயர்சனகாதியோர் - உயர்ந்த சனகர்முதலியோரும்,—கங்கையாதி முந்து நதிகள் - கங்கைமுதலிய முற்பட்ட யாறுகளும்,—மலர்வான்றருச் சுரபி - சுரதருக்களும் தேனுவும்,—விண்ணகமடந்தையர் வசுக்கள் அனுசந்தர் முதலோர் - அரமகளிரும் வசுக்களும் அநுசந்தர் முதலியோரும். எ-று. ()

வாயார வாழ்த்தித் துதித்துத் துதித்துள்ள மலினந்துரக்கு மதியோ, ரோயாம லஞ்சலி செலுத்தினர் தொழத்தகைய வும்பர்க்கு ஞானவமுதந், தாயாயளிக்கின்ற நாராயணக்கடவுடன் முன்னர் யாழின் முனிவன், போயாதரத்தோடு பாதார விந்தங்கள் போற்றிப் பணிந்த பொழுதில்.

இ-ள். வாயார வாழ்த்தித் துதித்துத் துதித்து - வாய்களாலமைய இடையறாது போற்றி,—உள்ள மலினந் துரக்கு மதியோர் - மனக்குற்றங்களை நீக்குங் கருத்துடையராய்,—ஓயாமல் அஞ்சலி செலுத்தினர் தொழ - ஒழியாது கைகூப்பி வணங்க,—தகைய உம்பர்க்கு ஞான அமுதந் தாயாய் அளிக்கின்ற நாராயணக்கடவுடன்முன்னர் - தகுதியையுடைய தேவர்களுக்கு அறிவோடு அமிர்தத்தை மாதாப்போலக் கொடுக்கின்ற விஷ்ணுதேவரின் முன்னே,—யாழின் முனிவன் போய் - நாரதர்போய்,—ஆதரத்தோடு பாதாரவிந்தங்கள் போற்றிப் பணிந்தபொழுதில் - விருப்பத்தோடு பாதாரவிந்தங்களைத் துதித்து வணங்கியபொழுது. எ-று. (கூ)

புகலரு மருக்கிய மிருக்கொடு கொடுத்துமுனி புங்கவனை யங்கணகமே, தகையமணி யாசனத் தினிதிருத் திப்பரிய தண்டுளவணிந்த பெருமான், முகமலர நீயிவண் விழைந்தபொருள் சோர்

வற மொழிந்திடுதி யென்ற பொழுதே, யகமகிழ் சிறந்தினிசை நாரதக் கடவுண்முனி யாதரத் தோடு புகல்வான்.

இ-ள். பசிய தண்டுளவணிந்த பெருமான் - விஷ்ணுவானவர்,—முனி புங்கவனை அங்கனக மேதகைய மணியாசனத்து இனிதிருத்தி - நாரத முனிவனைச் சுவர்ணரத்தினபீடத்தில் இருக்கச்செய்து,—முகமலரப் புகலரும் அருக்கியம் இருக்கொடு கொடுத்து-முகமலர்வாகச் சொல்லுதற்கரிய அருக்கியத்தை மறையோடுகொடுத்து.—நீ இவண் விழைந்த பொருள் சோர்வற மொழிந்திடுதி என்றபொழுது - நீ ஈண்டு விரும்பிய பொருளைத் தளராது சொல்லுக என்றபொழுது,—இன் இசை நாரதக் கடவுண்முனி - இனிய இசையையுடைய நாரதனாகிய தேவமுனிவன்,—அகமகிழ் சிறந்து ஆதரத்தோடு புகல்வான் - மனமகிழ்ச்சி மிகுந்து விருப்பத்தோடு சொல்லுவான். எ-று. (எ)

உமைதந்த மைந்தன் கொடுஞ்சூ ரறுத்தரிணை வொண்டொடியை யானைமகளைக், கமைகொண் டணைந்துபா ரதகண்ட வைப்பிற் கனியுமுத் தமிழி னுடனே, யமையின் றுயர்ந்ததண் பொருநைய யின் றென்றிசையி னமரர்முனி வரர்கள் வாழ்த்தச், சிமையங் கருங்கந்த மாதனச் சாரற் செயந்தியம் பதியி லுறையா.

இ-ள். உமைதந்த மைந்தன் கொடுஞ் சூர் அறுத்து அரிணை ஒண்டொடியை யானைமகளைக் கமைகொண்டு அணைந்து - உமாகுமாரர் சூரனைக் கொன்று மான்மகளையும் யானைமகளையும் பொறுமை கொள்வித்துச் சேர்ந்து,—பாரதகண்ட வைப்பிற் கனியுமுத்தமிழினுடனே அமையின்று உயர்ந்த தண் பொருநையின் தென்றிசையின் - பரதகண்ட நிலத்திலே கனிந்த முத்தமிழ்களோடு அமைதலின்றி (மற்றெவ்வளங்களானும்) உயர்ந்த பொருநையாற்றின் தென்னிலத்திலே,—சிமையக் கருங் கந்தமாதனச் சாரற் செயந்தியம்பதியின் - சிகரம்பொருந்திய கந்தமாதனமலையிற் செயந்திநகரத்தின்கண்ணே,—அமரர் முனிவரர்கள் வாழ்த்த உறையா - தேவர் முனிவர்கள் துதிக்க இருந்து. எ-று. (அ)

கொற்றவம் புயவீர வாகுவுக் காகவே கொண்டவா னந்த வடிவமும், செற்றமின் றுயர்முனிவர் கந்தருவர் விண்ணவர்க டிரிசுதந் திரர்க ளுடனே, யுற்றுநின் றெழுவடிவு கண்டுகண் டுள்ளத் துவப்படங் காமை யாலே, மற்றநின் பாதந் துதைப்பான் பொருட்டிவண் வந்தன னெனப்புகலுவான்.

இ-ள். கொற்ற அம்புயவீரவாகுவுக்காகக் கொண்ட வான் அந்த வடிவம் - வீரவாகுவின்பொருட்டுக்கொண்ட பெரிய அளவினையுடைய ரூபத்தின்கண்ணே,—உற்று நின்று எழு வடிவு - பொருந்திநின்று தோன்றுகின்ற (சிதசித்துப்பிரபஞ்சங்களின்) வடிவுகளையெல்லாம்,—செற்றமின்று உயர்முனிவர் கந்தருவர் விண்ணவர்கள் திரிசுதந்திரர்களுடனே கண்டு கண்டு - செற்றமின்றி உயர்ந்த முனிவர் முதலாயினரோடு தரிசித்துத் தரிசித்து,—உள்ளத்துவப்பு அடங்காமையால் நின்பாதத்து உரைப்பான் பொருட்டு இவண் வந்தனன் - மனத்துமகிழ்ச்சி அடங்காமையால் உமதடிக்கீழ் உரைத்தல்காரணமாக ஈண்டு வந்தேன்,—எனப் புகலுவான் - என்று சொல்லிப் பேசுங் கூறுவான். எ-று.

தேற்றப்பொருட்டாகிய மன்ற என்பது வலிந்து மற்ற என நின்றது. (௯)

பாரதப் போரிற் றனஞ்சயற் காகநீ பாலித்த வடிவு கண்டேன், சூருடைத் தண்டகா ரணியத்தின் மாதவன் றொழுதற்கு நன்கு வாய்ந்த, மேருவிற் சங்கரன் காட்டுந்தி ருக்கோல மேவரக் கண்டு தொழுதேன், ஞருமச் சுறவதரி காச்சிரம மதனிலே யரியநர நாரணர்களாம்.

இ-ள். பாரதப்போரில் தனஞ்சயற்காக நீ பாலித்த வடிவு கண்டேன்- பாரதயுத்தத்தில் அருச்சுனனுக்காக நீர் கொண்ட உருவத்தைக் கண்டேன்,—சூருடைத் தண்டகாரணியத்தின் மாதவன்றொழுதற்கு நன்குவாய்ந்த மேருவிற் சங்கரன் காட்டுந் திருக்கோலம் மேவரக் கண்டு தொழுதேன் - அச்சத்தையுடைய தண்டகாரணியத்திலே அருச்சுனனுக்கு நன்மை சிறந்த சிவபெருமான் காட்டிய திருக்கோலத்தை மேம்பாடாகத் தரிசித்துவணங்கினேன்,—ஆரும் அச்சுற வதரிகாச்சிரமமதனிலே அரிய நரநாரணர்களாம் - ஆரும் அஞ்சு வதரிகாச்சிரமத்திலே அரிய நரனும் நாரணனும் என்கிற. எ-று. (௧௦)

இருவோர் தமக்குமொரு காலாக் கினிக்கடவு ளின்பத் தெடுத்த வடிவும், பிரியாது கண்டுகண் டுள்ளங் களித்தனன் பிரமன் றொழிற்கூ டவும், பரமேசு ரக்கடவுண் மேருமால் வரையினிடை பண்டுகொண் டுள்ள வடிவு, மொருவாது நின்றுகண் டுள்ளங் களித்தன னுரைக்கடங் காத குமரன்.

இ-ள். இருவோர்தமக்கும் ஒரு காலாக்கினிக்கடவுள் இன்பத்து எடுத்த வடிவும் - இருவருக்கும் ஒரு காலாக்கினிருத்திரர் இன்பத்தோடு கொண்ட வடிவத்தையும்,—கண்டுகண்டு பிரியாது உள்ளங்களித்தனன்-இனிது நோக்கி விடாது மனமகிழ்ந்தேன்,—பண்டு மேருமால்வரையினிடைப் பரமேசுரக்கடவுள் - முன் மகாமேருமலையிற் சிவபெருமான்,—பிரமன் தொழிற்கூடக் கொண்டுள்ள வடிவம் ஒருவாது நின்று கண்டு உள்ளங்களித்தனன் - பிரமன் சிருட்டிபெறுமாறு கொண்ட வடிவத்தையும் பிரியாது நின்று தரிசித்து மனமகிழ்ந்தேன்,—உரைக்கடங்காத குமரன் - அநிர்வசனீயராகிய குமாரசுவாமி. எ-று. (௧௧)

வேறு.

கொண்டிருந் தவிக் கோலத்தைப் போலயான்
கண்டி லேனிது காரண நின்னடிப்
புண்ட ரீகத்தைப் போற்றிப் புகல்வதற்
கண்டி னேனென் றருண்முனி சாற்றினான்.

இ-ள். கொண்டிருந்த இக்கோலத்தைப்போல யான் கண்டிலேன் - (இந்நாட் செயந்திபுரத்துக்) கொண்டிருந்த இவ்வடிவத்தை(க் கண்டது) போல யான் (முன்னவற்றைக்) கண்டேனல்லேன்,—காரண நின்னடிப் புண்டரீகத்தைப் போற்றி இது புகல்வதற்கு அண்டினேன் - (இதி)காரணரே! நும் பாதாரவிந்தங்களைத் துதித்து இதனைச் சொல்ல வந்தேன்,—என்று அருண்முனி சாற்றினான் - என்று நாரதமுனிவன் கூறினான். எ-று. (௧௨)

நாரதன்சொல நாரணன் கேட்டுப் புன்
மூரல் கொண்டு முழங்கித்தன் வைகுண்டத்
தார டங்கலு மொண்ணில வுக்கருப்
பூர வெள்ளை புதுக்குவித் தானரோ.

இ-ள். நாரதன்சொல நாரணன் கேட்டுப் புன்மூரல்கொண்டு முழங்கி - நாரதன் (அங்ஙனஞ்)சொல்லத் திருமால் கேட்டுப் புன்னகைசெய்து ஒலித்து,—ஒள் நிலவு - (சிரிப்பினது) ஒள்ளிய காந்தியினாலே,—தன் வைகுண்டத்தாரடங்கலும் கருப்பூரவெள்ளை புதுக்குவித்தான - தம் வைகுண்டலோகமுழுதிலும் (உள்ள மாளிகையாதிகளிற்) கருப்பூரம்போலும் வெள்ளைகளைப் புதுக்குவித்தனர். எ-று. (௧௩)

கருணை கொண்ட விழியின்கத் தூரியா
லிருடி மேனிக் கிலேபன மப்பிவான்
பருவ மாமுகில் போலும் வடிவத்தான்
திருவி ருந்தின் பவளச்செவ் வாய்விண்டான்.

இ-ள். வான்பருவமாமுகில்போலும் வடிவத்தான் - கார்காலமுகிலை நிகர்த்த வடிவினையுடைய(அத்திருமாலான)வர்,—கருணைகொண்ட விழியின் கத்தூரியால் இருடி மேனிக்கு இலேபனம் அப்பி - அருள்பொருந்திய கண்மணியாகிய கத்தூரியினாலே முனிவனது (வெள்ளை)மேனிக்கு(க் கரும்பூச்சை)ச் சாத்தி,—திருவிருந்தின் பவளச்செவ்வாய் விண்டான் - இலக்குமிக்கு விருந்தாகிய பவளம்போலும் வாயைத் திறந்தார். எ-று. (௧௪)

தத்து வக்கட னீந்தத் தகைமைசார்
முத்த ருக்கு முதன்மைய தாம்பரி
சுத்த யாழ்முனி சொல்லுவன் கேளென
வித்த கத்துப தேசம் விளம்புவான்.

இ-ள். தத்துவக்கடல் நீந்தத் தகைமைசார் முத்தருக்கு - பிரபஞ்சக் கடலைக் கடத்தற்குச் சன்மார்க்கத்தைச்சாரும் முமுட்சுக்களுக்கு,—முதன்மையதாம் பரிசுத்த யாழ்முனி - முதற்றுணையான சுத்தியையுடைய வீணைமுனிவனே,—சொல்லுவன் கேள் என - சொல்லுவேன் கேள் என்று சொல்லி,—வித்தகத்து உபதேசம் விளம்புவான் - சதுரப்பாட்டினையுடைய உபதேசத்தைக் கூறுவார். எ-று. (௧௫)

கயிலை மால்வரைக் கண்ணுதன் மூர்த்தியுந்
துயிலும் யாமுமொன் றாகிக் குகனுருப்
பயிலு மந்தப் பசுபதி யைம்முகத்
தியலு நம்முக மெய்திய தாறென.

இ-ள். கயிலைமால்வரைக் கண்ணுதன்மூர்த்தியுந் துயிலும் யாமும் ஒன்றாகிக் குகனுருப் பயிலும்-கயிலைமலையிற் சிவபெருமானும் (பாற்கடலில்) உறங்கும் நாமும் ஒன்றுபட்டுக் குமாரசுவாமியின்வடிவமாய்ப் பொருந்தும்,-அந்தப் பசுபதி ஐம்முகத்து இயலும் நம்முகம் ஆறென எய்தியது,—அக்கடவுளின் ஐந்துமுகங்களோடுகூடிய நமதுமுகம் குமாரசுவாமிக்கு ஆறென்று பொருந்தியது. எ-று. (௧௬)

இறைவன் றிண்புய மெட்டுமட் டார்துழாய்
நறைகொ ணம்புய நான்குமுன் னொன்கதாம்
விறல்கொ ளம்புய மேயவெஞ் சூலமும்
பொறைகொ ளாழியும் பொற்பமர் சத்தியாய்.

இ-ள். இறைவன் றிண்புயமெட்டும் மட்டார்துழாய் நறைகொள் நம்புயநான்கும் முன்னொன்கதாம்-சிவபெருமானுடைய புயங்களெட்டுந் துளசிமாலையின் நறுமணத்தைக்கொண்ட நமது நான்குபுயங்களும் (கூடிக் குமாரசுவாமியின் புயங்கள்) பன்னிரண்டாம்,—விறல் கொள் அம்புயமேய வெஞ்சூலமும்-வலிமைகொண்ட (அவரது) புயத்திற்பொருந்திய சூலாயுதமும்,—பொறைகொள் ஆழியும் - பொறுமைபொருந்திய (நமது) சக்கரமும்,—பொற்பமர் சத்தியாய் - பொலிவுபொருந்திய வேலாய். எ-று. (கஎ)

ஏக மாக விருதலைச் சூலமே
யாகு மந்த வரன்கலை யாகிய
மாக வான்சுட ராய்நம் வலக்கணின்
பாக மாகி யெழும்பிர பஞ்சத்தை.

இ-ள். ஏகமாக இருதலைச் சூலமேயாகும் - ஒன்றாக இருதலைச்சூலம் போலாகும்,—அந்த அரன் கலையாகிய மாகவான்சுடராய் நம் வலக்கணின் பாகமாகி - சங்காரகாரணராகிய சிவபெருமானது கலையாயுள்ள விண்ணினிரவியாய் நம்வலக்கண்ணினிடமாகி,—எழும் பிரபஞ்சத்தை - உயருகின்ற (சேதனப்) பிரபஞ்சங்களை. எ-று. (கஅ)

உண்டு பண்ணும்விட் சேபத் துயர்சத்தி
மண்ட லந்தொழு வள்ளியென் றுற்றனள்
விண்டு வின்வடி வாக விளங்கிய
வெண்ட ருஞ்சந் திரகலை யென்பதாய்.

இ-ள். விட்சேபத்து உண்டுபண்ணும் உயர் சத்தி - (பாசங்களை) அகற்றுதலினால் (சன்னிலையை) உண்டாக்கும் உயர்ந்த சத்தியே,—மண்டலந்தொழ வள்ளியென்று உற்றனள் - நிலவுலகு வணங்க வள்ளியம்மையென்று இருந்தவளாம். எ-று.

சேஷம் அடுத்தசெய்யுளிற் கூட்டி உரைக்கப்படும். (ககூ)

இயவு ளாயிடக் கண்ணொ டானந்த
மயம தாகி வரும்பரி பூரண
வுயர்வு நீக்கியுள் ளாவர ணப்பெய
ரயர்வி லாதுயர் வாகிய சத்தியே.

இ-ள். விண்டு இன் வடிவாக விளங்கிய - விண்ணிற் சுத்தமான இனிய வடிவாய் விளங்கிய,—எண் தருஞ் சந்திர இயவுட்கலையென்பதாய்-பெருமைபொருந்திய சந்திரனாகிய சிவகலையாய்,—ஆய் இடக்கண்ணொடும் - ஆராயப்படும் (நமது) இடக்கண்ணினிடமாகிய,—ஆனந்தமயமதாகி வரும் பரிபூரண உயர்வு நீக்கி உள்ளாவரணப்பெயர் - இன்பவடிவாகிவரும் வியாத்தியின்கண்ணே உயர்தலைநீக்கி உள்ளத்தை மறைத்தலால் (உலக வாழ்விற்றங்குமாறு) வேறுபடுத்துகின்ற:—அயர்விலாது உயர்வாகிய சத்தியே - அயர்வின்றி உயர்ந்த (திரோதான) சத்தியே. எ-று. (உ௦)

கூறருந் தெய்வ குஞ்சர மாதென
மாறி லாதுதித் தாளந்த மாதரே
யாறு மாமுகற் காமிரு சத்தியும்
வேறி லாது விளங்கும் பிரமமே.

இ-ள். கூறருந்தெய்வகுஞ்சரமாதென மாறிலாதுதித்தாள் - சொல்லுதற்கரிய தெய்வயானையம்மையென்று ஒப்பிலலாது விளங்கினவராம்,— அந்த மாதரே ஆறுமாமுகற்கு ஆம் இரு சத்தியும் - அந்த அம்மைமாரே ஆறுமாமுகக்கடவுளுக்கு ஆகிய இரண்டுசத்திகளும் (ஆவர்),— வேறிலாது விளங்கும் பிரமமே - (இங்ஙனமாகிய ஆறுமுகப்பிரான் சிவபெருமானின்) வேறுபாடின்றி விளங்குங் கடவுளே. எ-று. (௨௧)

வேறு.

சுப்பிர மணிய னென்று சொலும்பெயர் பதமூன் றாகு
மப்பதத் திடையுண் டான வரும்பதஞ் சிவனு மீற்றின்
மெய்ப்பதஞ் சிவனை யேத்தும் விண்டுவின் வடிவா முன்னஞ்
செப்புறு பதமி ரண்டு பதங்களைச் சேர்ந்து காட்டி.

இ-ள். சுப்பிரமணியன் என்றுசொலும் பெயர் பதமூன்று ஆகும் - சுப்பிரமணியன் என்னும் நாமத்தின் மூன்று சொற்கள் உள,— அப்பதத்து இடையுண்டான அரும்பதஞ் சிவனும் - அச்சொற்களுள் இடையிலுள்ள (பிரமன்என்னும்) அருஞ்சொற் சிவபரியாயமாம்,— ஈற்றின் மெய்ப்பதஞ் சிவனை ஏத்தும் விண்டுவின்வடிவாம் - இறுதி(ச்சொல்லாகியவிகுதி)யோடு புணர்ந்த மெய்யான (பிரமணிய என்னுஞ்)சொல் (நாமமேயாகிய) விட்டுணுவின் பரியாயமாம்,— முன்னஞ் செப்புறு பதம் இரண்டு பதங்களைச் சேர்ந்து காட்டி - முன்னர் (நன்மைப்பொருளை)ச் சொல்லுகின்ற (சு என்னுஞ்)சொல்லு இரண்டுசொற்களையுஞ்சேர்ந்து (பொருளை)விளக்கி. எ-று.

ஆரியத்திலே பிரஹ்மந் என்பது சிவபரியாயம்; அது யவ்விகுதியோடு புணரப்பிறந்த பிரஹ்மண்ய என்பது சிவபெருமானுக்கு அன்பன் என்னும் பொருட்டாய் விட்டுணுபரியாயமாம். (௨௨)

ஒப்பரு மைக்க மாக வுரைத்தலா லுரைக்க வொண்ணா
மைப்படி மிடற்றி னானு மாலெனு நாமு மாக
மூப்புவ னங்க ளேத்த மூலமு முடிவு மில்லாச்
சுப்பிர மணிய னாகச் சொல்லுநால் வேத மாதோ.

இ-ள். ஒப்பரும் ஐக்கமாக உரைத்தலால் - ஒப்பற்ற ஒற்றுமையாகக் கூறுதலால்,— உரைக்கவொண்ணா மைப்படிமிடற்றினானும் மாலெனும் நாமும் மூலமுமுடிவுமில்லாச் சுப்பிரமணியனாக - உரைகடந்த நீலகண்டக் கடவுளும் விட்டுணுவென்னும் நாமுமே ஆதியந்தமில்லாத சுப்பிரமணியக் கடவுள் என்று,— மூப்புவனங்கள் ஆக ஏத்த நால்வேதஞ் சொல்லும் - மூவுலகினர் எல்லாரும் புகழச் சதுர்வேதங்களுங் கூறும். எ-று. (௨௩)

சரவண பவவென் றோதுந் தாவறு பதங்கண் மூன்றிற்
பரவுறு சரமென் றூய பதமது சலமே யாகும்
வருவநம் வாசமிக்க வான்பத மிரண்டும் பார்க்கி
லரிதுமா தலத்து நாரா யணனென்று மருத்த மாமால்.

இ-ள். சரவணபவ என்று ஓதுந் தாவறு பதங்கண்மூன்றில்-சரவண பவ என்று கூறப்படுங் குற்றமற்ற மொழிகண் மூன்றனுள்ளே,—பரவுறு சரமென்றாய பதமது சலமேயாகும் - புகழப்படுஞ் சரம் என்னும் மொழி ஜலம் என்னும் பொருள்படுவதாம்,—வரு வநம் வாசம் - (அதன்பின்) வந்த வநம் என்பது இருப்பிடம் என்னும் பொருள்படுவதாம்,—இந்த வான்பதமிரண்டும் பார்க்கில் - இந்தப்பெரிய மொழிகளிரண்டையும் (சேர்த்து அன்மொழித்தொகையாக்கிப்)பார்த்தால்,—அரிதுமாதவத்து நாராயணன் எனும் அருத்தமாமால் - (சரவணன் என்பதற்கு) அரும்பெருந் தவத்தையுடைய நாராயணன் என்னும் பொருள் ஆகும். எ-று.

சரம் } ஜலம். வநம் } வாசம். ரகரத்தின் தொடர்பால்
நாரம் } அயநம் } நகரம் ணகரமாகும்.

ஆகவே, சரவணன் நாராயணன் என்னுமிரண்டும் ஜலத்தை வாசஸ்தானமாகவுடையவன் என்னும் பொருளினவாய் விட்டுணுவின் பரியாயங்களாம். (உச)

இயலுறு பவனென் றோது மிரும்பதஞ் சிவன்றா னாகு
மயலற விரண்டு மொன்றாய் வழுத்திலா றெழுத்தே யாகும்
பயனொருங் குணரின் ஞானப் பரம்பொருட் சிவனதாய
சுயவடி வாகு மென்றே சொல்லுநான் மறைக ளம்மா.

இ-ள். இயலுறு பவன் என்றோதும் இரும்பதஞ் சிவன்றான் ஆகும் - பொருந்திய பவன் எனப்படும் பெருமொழி சிவபரியாயமாம்,—மயலற இரண்டும் ஒன்றாய் வழுத்தில் ஆறெழுத்தாகும் - மயக்கந்தீர(ச் சரவண பவ என்னும்)இரண்டையும் புணர்த்துத் துதித்தால் ஆறக்கரங்களாம்,—பயன் ஒருங்கு உணரின் - (இச்சரவணபவநாமத்தின்) பொருளை ஒருங்கு தெரியின்,—ஞானப் பரம்பொருட் சிவனதாய சுயவடிவு ஆகும் - (நமக்கு) ஞானத்தையருளும் பரம்பொருளாயுள்ள சிவபெருமானேயாகிய சொந்தவடிவம் என்பதேயாம்,—என்று நான்மறைகள் சொல்லும் - என்று சதுர்வேதங்களும் கூறும். எ-று. (உரு)

மலர்குகன் றான மாவ மயலற வகுக்குங் காலை
நிலமணல் சுக்குப் பாறை நிகழ்தருங் கல்லு நான்காங்
குலமவை நமக்கும் வேற்கைக் குமரற்குந் தான மாகும்
பலனுறு நிலனு மற்றப் பருப்பதஞ் சிவனு காரம்.

இ-ள். குகன் மலர்தானமாவ - முருகபிரான் (கருணை)மலரும் இடங்களாவனவற்றை,—மயலற வகுக்குங்காலை - மயக்கந்தீரச் சொல்லும்பொழுது,—நிலம் மணல் சுக்குப்பாறை நிகழ்தருங் கல்லு ஆம் நான்கு குலமவை - நிலமும் மணலும் பரற்பாறையும் விளங்குகின்ற கல்லும் ஆகிய நான்கு சாதிகளும்,—நமக்கும் வேற்கைக்குமரற்குந் தானமாகும் - நமக்கும் வேற்கரக்கடவுளுக்கும் இடங்களாகும்,—பலனுறு நிலன் நாம் - பயன் பொருந்திய நிலம் நமதுவடிவாம்,—மற்றப் பருப்பதஞ் சிவனுகாரம் - ஏனை மலை சிவ்பெருமானது வடிவமாம். எ-று. (உசு)

தரையிட னுமு மற்றைத் தடவரை சிவனு மாக
மருவுமவ் விடங்க ளெல்லா மயூரவா கனத்தி னற்குப்

பொருவரு மிடன தாகிப் பொருந்துமென் றெடுத்துக் காட்டிச்
சுரர்தமக் கமுத மீந்த துழாய்ப்புயல் பின்னுஞ் சொல்வான்.

இ-ள். நாம தரையிடனும மறறைச சிவன் தடவரையும ஆக மருவும அவ்விடங்கனெல்லாம்,—நாமாகிய நிலவிடங்களும் ஏனைச் சிவபெருமானாகிய மலைகளும் என்று பொருந்திய அவ்விடங்களெல்லாம்,—மயூரவாகனத்திறைற்குப் பொருவு அரும் இடனதாகிப் பொருந்தும் - மயில்வாகனக் கடவுளுக்கு இயைந்த அரிய இடங்களாகி அமையும்,—என்று எடுத்துக் காட்டி - என்று எடுத்து விளக்கி—சுரர்தமக்கு அமுதமீந்த துழாய்ப்புயல் பின்னுஞ் சொல்வான் - தேவருக்கு அமுதுகொடுத்த விட்டுணு மீண்டுங் கூறுவார். எ-று.

மேலைச்செய்யுளிற் சுட்டிய நிலமுதலிய நான்கனுள் முன்னையிரண்டும் நிலமெனவும், பின்னையிரண்டும் பருப்பதமெனவும் அடக்கப்பட்டமையை விளக்குவார் "தரையிட னுமுமற்றைத் தடவரை சிவனுமாக மருவுமவ்விடங்களெல்லாம்" என ஈண்டனுவதித்தார். (௨௭)

வேங்கட வரையு மந்த வேங்கட வெற்பின் மீதி
லாங்குக னேரித் தீர்த்த மானது மசலத் தாடு
பாங்குறு மூர்த்தி தானும் பன்னிரு புயனும் வாசத்
தேங்கமழ் துளபஞ் சூடும் யானுமாய்ச் சிறந்து ளோமால்.

இ-ள். வேங்கடவரையும் - வேங்கடமலையும்,—அந்த வேங்கடவெற்பின்மீதில் ஆங் குகனேரித்தீர்த்தமானதும் - அவ்வேங்கடமலையின்மேலே உள்ள குகனேரித்தீர்த்தமும்,—அசலத்தாடு பாங்குறு மூர்த்திதானும் - அம்மலையில் உரிமையாயுள்ள (தாவரத்) திருமேனியும்,—பன்னிருபுயனும் வாசத்தேங்கமழ் துளபஞ்சூடும் யானுமாய்ச சிறந்துளோம் - குமாரசுவாமியும் நறுந்துழாயணிந்த நாமுமாய்ச் சிறந்துள்ளோம். எ-று. (௨௮)

நெருப்புறு கலைமுன் மூன்று நிலமகள் கமலை நீலி
பொருந்துநான் குடனைந் தாறு வதுமுறை புரையி லாத
வுருத்திர னிகரி லீச னுயர்சிவன் கலையிவ் வாறு
திருத்துகார்த் திகையோ ராறுஞ் சிவனுமால் வடிவு மாமால்.

இ-ள். நெருப்பு உறு முன்மூன்றும் நிலமகள் கமலை நீலி கலை - கார்த்திகையிற் பொருந்திய முதன்மூன்றுபாகங்களும் பூதேவி சீதேவி உமாதேவிகளின் கலைகளாம்,—பொருந்து நான்குடன் ஐந்து ஆறுவது முறை புரையிலாத உருத்திரன் நிகரிலீசன் உயர்சிவன் கலை - பொருந்திய நான்காவதும் ஐந்தாவதும் ஆறாவதும் முறையே ஒப்பற்ற உருத்திர அநந்தேச சதாசிவமூர்த்திகளின் கலைகளாம்,—இவ்வாறு திருத்து கார்த்திகை ஓராறும்- இங்ஙனமே திருத்தமாகிய கார்த்திகை ஆறுபாகங்களையுடையதாம்,—சிவனும் மால்வடிவும் ஆமால் - (இங்ஙனமாகையாற் கார்த்திகை) சிவரூபமும் விட்டுணு(வாகிய என்) ரூபமும் ஆம். எ-று. (௨௯)

ஆயவித் தன்மை யாலே யளப்பரு மார னுனிற்
சேயினுக் குரித்தா மோமஞ் செபமுப வாசம் பூசை
நேயமோ டியற்றி லீச னெடியமால் விரதத் துள்ள
தூயநற் பயன்க ளெல்லாந் துகளறக் கொடுக்கு மாதோ.

இ-ள். ஆய இத்தன்மையால் - ஆகிய இவ்வியல்பினுல்,—அளப்பறும் ஆரனாளில் - அளவற்ற (மகிமையையுடைய) கார்த்திகைநாளிலே,—சேயினுக்கு உரித்தாம் ஓமஞ் செபம் உபவாசம் பூசை நேயமோடு இயற்றில் - குமாரசுவாமிக்கு உரிமையான ஓமத்தைச் செபத்தை உபவாசத்தைப் பூசையை அன்போடு செய்யின்,—ஈசன் நெடியமால் விரதத்து உள்ளாய நற்பயன்களெல்லாம் - சிவபெருமானுக்கும் நமக்கும் உரிய விரதங்களால் உளவாகுஞ் சுத்தமான உறுதிப்பயன்களையெல்லாம்,—துகளறக் கொடுக்கும் - குற்றந்தீர(க்குமாரசுவாமி) அருள்வார். எ-று. (௯0)

அகாமு முகரந் தானு மளப்பரு மகரந் தானு
மெகினவா கனனு நாமு மீசனு மாகு மந்த
வுகரமே குமரனுக் குயர்ந் தெழு மகரந் தானு
மகரமுந் தெய்வ மாதும் வள்ளியு மாகு மம்மா.

உரைதரு மெழுத்து மூன்று முறைக்கடங் காது நின்ற
பிரணவ வடிவ மாகும் பெண்களோ ரிரண்டு பேருஞ்
சரவண பவனு மொன்றாய்த் தனித்தகோங் கார மாகுஞ்
சுருதியாழ் முனிவ வுண்மை சொற்றன மென்றான் மாயோன்.

இ-ள். அளப்பரும் அகரமும் உகரந்தானும் மகரந்தானும் - அளவிடலரிய அகாரமும் உகாரமும் மகாரமும் (முறையே),—எகினவாகனனும் நாமும் ஈசனும் ஆகும் - பிரமனும் நாமும் உருத்திரனும் (என்னும் அருத்தமுடையன) ஆகும்,—உரைதரும் எழுத்துமூன்றும்-சொல்லப்பட்ட எழுத்துக்கண்மூன்றும் (ஒன்றுபட்டு மூவர்க்கு முதல்வன் என்னும் பொருள்பட்டு),—உரைக்கடங்காது நின்ற பிரணவவடிவமாகும்-அவாச்சிய வஸ்துவாகி(ய சிவபெருமான் அதிட்டித்து) நின்ற பிரணவரூபமாகும். [இனி இப்பிரணவத்தைக் குமாரசுவாமி நின்றரூபமாகக் கொள்ளுமாறு:—] அந்த உகரமே குமரனுக்கும்-அழகினையுடைய உகாரமே குமாரசுவாமியின் அதிட்டானமாய்,—உயர்ந்தெழும் அகரந்தானும் மகரமுந் தெய்வமாதும் வள்ளியும் ஆகும் - உயர்ந்த அகாரமும் மகாரமுந் தெய்வயானையாருக்கும் வள்ளியம்மையாருக்கும் அதிட்டானமாகும்,—ஓங்காரம் - (அம்மூன்றும் ஒன்றுபட்ட) ஓங்காரமானது,—பெண்களோரிரண்டு பேருஞ் சரவணபவனும் ஒன்றாய்த் தனித்தது ஆகும்-அம்மைமாரிருவருஞ் சரவணபவபெருமானும் ஒருங்காய்க்கொண்ட) அதிட்டானம் ஆகும்,—சுருதி யாழ்முனிவ உண்மை சொற்றனம் என்றான் மாயோன் - வேதம்வல்ல வீணைமுனிவனே உண்மை கூறினும் என்றார் விட்டுணு எ-று.

தானம் என்னும் பெயரடியாகப் பிறந்த தானி என்னும் வினையின் வந்த தானித்தது என்னும் பெயர் இடமாக்கப்பட்டதுஎனப்பொருள்படும். அது குறுகித் தனித்தது என்றானது. (௯௧-௯௨)

நாரதற் குரைத்துச் செங்க ணாரணன் முனிவ னேடுஞ்
சீரினுக் கழகு செய்யுஞ் செயந்திபம் பதியின் முன்னந்
தாரகற் றடிந்த செவ்வேள் சரித்திர மினிது காண்பான்
காருடப் பிடர்மேற் கொண்டு கந்தமா தனத்திற் போந்தான்.

இ-ள். செங்கணாரணன் நாரதற்கு உரைத்து - விட்டுணு நாரதனுக்கு (இவ்வாறு) கூறி,—முனிவனேடும் - (அந்) நாரதனேடும்,—சீரினுக்கழகு

செய்யுஞ் செயந்தியம்பதியில்-அழகுக்கழகுசெய்யுஞ் செயந்திபுரத்திலே,—முன்னந் தாரகற்றடிந்த செவ்வேள் சரித்திரம் இனிது காண்பான் - முன்பு தாரகனைக்கொன்ற சுவாமியினது நற்செயலை இனிது தரிசிக்க,—காருடப் பிடர் மேற்கொண்டு கந்தமாதனத்திற் போந்தான் - கருடனது பிடரின் இவர்ந்து கந்தமாதனத்துச் சென்றார். எ-று. (௬௬)

கருடவா கனமேற் கொண்டு கண்ணனாங் குற்ற காலை
முருகவேள் கண்டு பூசை முறைபிற ழாது செய்யக்
குருபர னுவப்பப் பூசை கொண்டலின் வண்ண னன்பா
னருமறை முறையிற் செய்தே யளவிலா மகிழ்ச்சி பூத்தான்.

இ-ள். கண்ணன் கருடவாகனமேற்கொண்டு ஆங்குற்றகாலை - விட்டுணு கருடனிலிவர்ந்து ஆண்டுச்சேர்ந்தபோது,—முருகவேள் கண்டு முறை பிறழாது பூசை செய்ய - குமாரசுவாமி கண்டு (அவர் தமக்கடியரேயாகவும் போலியான மாமனென்னும்) முறை பிறழாவண்ணம் (அதற்கேற்ற) உபசாரத்தைச் செயய,—கொண்டலின்வண்ணன் அன்பான் - விட்டுணு (உண்மையானே தமக்குத் தலைவரென்னும்) அன்போடு,—குருபரன் உவப்பப் பூசை அருமறைமுறையிற் செய்து - குமாரசுவாமி மகிழுமாறு அருச்சனையைச் சுருதிவிதிப்படி செய்து,—அளவிலா மகிழ்ச்சி பூத்தான் - அளவற்ற ஆனந்தம் பொலிந்தார். எ-று. (௬௭)

வேதனுட் விமான மாக விளங்கிய சிமயக் கந்த
மாதனத் திருந்தான் கந்த வரைச்சகந் நாத மூர்த்தி
யாதரத் தகில மெல்லா மற்புதத் தளித்தா னேமிச்
சீதரப் புத்தே டானுஞ் செயந்தியம் பதியிற் புக்கான்.

இ-ள். வேதனும் விமானமாக விளங்கிய சிமயக் கந்தமாதனத்து இருந்தான் - பிரமாவும் விமானம்போல விளங்கிய உச்சியையுடைய கந்தமாதனத்தில் (முன்னரே) இருந்தார்,—கந்தவரைச் சகந்நாதமூர்த்தி ஆதரத்து அகிலமெல்லாம் அற்புதத்து அளித்தான் - (அக்) கந்தமாதனத்திலே சகந்நாதராகிய சிவபெருமான் பற்றினையுடைய உலகினரையெல்லாம் அதிசயமாகக் காத்தார்,—நேமிச் சீதரப்புத்தேடானுஞ் செயந்தியம்பதியிற் புக்கான் - (பின்) சக்கிரத்தையுடைய விட்டுணுவுஞ் செயந்தியிற் புகுந்தார். எ-று. (௬௮)

விண்ணளா வாரச் சாரல் விசயமாங் கோயி றன்னிற்
கண்ணக றீர்த்த மான கந்தபுட் கரிணித் தெண்ணீ
ரெண்ணினர்க் கெண்ணி யாங்கே யின்னருள் புரிந்து வானிற்
பண்ணவர் பரவ வேற்கைப் பரமன்வீற் றிருந்தான் மன்றே.

இ-ள். விண்ணளாவார் அச்சாரல் விசயமாங் கோயிறன்னில் - வானளவுயர்ந்த அம்மலையின் வெற்றியாகிய கோயிலிலே,—கண்ணகல் தீர்த்தமான கந்தபுட்கரிணித் தெண்ணீர் - இடமகன்ற தீர்த்தமாகிய கந்தபுட்கரிணி வாவியின் பாங்கரில்,—வேற்கைப் பரமன் எண்ணினர்க்கு எண்ணியாங்கு இன்னருள்புரிந்து - வேலாயுதக்கடவுள் நினைந்தவர்க்கு நினைந்தவாறு திருவருள் செய்துகொண்டு,—வானிற் பண்ணவர் பரவ வீற்றிருந்தான் - தேவரோடு முனிவருந் துதிக்க வீற்றிருந்தனர். எ-று. (௬௯)

முனைச்சுடர் வேற்கை யானை மொழியவந் தனைகள் செய்ப
நினைக்கமெய்த் தியானஞ் செய்ய நிறைந்தபூ சனைக ளாற்ற
நனைத்துழா யலங்க லானு நான்மறை முடிவுங் காணாப்
புனற்சடை யாற்கு முள்ளம் பொருந்திய மகிழ்ச்சி யாமால்.

இ-ள். முனைச்சுடர் வேற்கையானை மொழிய வந்தனைகள் செய்ய - வேலாயுதக் கடவுளை (அற்புதசரிதமெடுத்துக்) கூறலாற்றான் வழிபாடுகள் செய்தலாற்றான்,—நினைக்க மெய்த்தியானஞ்செய்ய நிறைந்த பூசனைகள் ஆற்ற - (சாதாரணமாக) நினைதலாற்றான் உண்மையான தியானஞ் செய்தலாற்றான் (அங்கங்களின்) நிறைந்த அருச்சனை செய்தலாற்றான்,—நனைத்துழாயலங்கலானும் நான்மறைமுடிவுங் காணாப் புனற்சடையாற்கும் - விட்டுணுவாலும் உபநிடதங்களாலும் உணரப்படாத சிவபெருமானுக்கும்,—உள்ளம் பொருந்திய மகிழ்ச்சி ஆம் - திருவுளத்திலே இயைந்த பிரீதி உண்டாகும். எ-று. (கஎ)

இனையமாக் கதைவி யாச னிசைத்ததே னுண்டு தந்தை
நனைமலர்ப் பாதம் போற்றி நாடரு மகிழ்ச்சி பூத்து
மனனிலை யுணர்ந்து கண்ட வான்சுக முனிவ னீண்ட
முனைநெடு வேலோன் பாத முன்னியாங் கிருந்தான் மன்னோ.

இ-ள். மனன்நிலை உணர்ந்து கண்ட வான் சுகமுனிவன் - மனத்தான் (உறுதி) நிலையை ஆய்ந்து அறிந்த பெருமையான சுகமுனிவன்,—தந்தை வியாசன் இசைத்த இனையமாக்கதைத் தேன் உண்டு - பிதாவாகிய வியாச முனிவன் கூறிய இம்மகாசரித்திரமாகிய தேனை உட்கொண்டு,—நனை மலர்ப் பாதம் போற்றி - (அவனது) பாதாரவிந்தங்களைத் துதித்து,—நாடரு மகிழ்ச்சிபூத்து - அளவற்ற ஆனந்தஞ் சிறந்து,—நீண்டமுனைநெடு வேலோன பாதம் முன்னி ஆங்கு இருந்தான் - வேலாயுதக்கடவுளினுடைய திருவடிகளைத் தியானித்து அங்ஙனம் இருந்தான். எ-று. (கஅ)

சுவாமியின் மந்திரமகிமையுரைத்த அத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் கருக.

## கரு-வது. பலகதை உபதேசித்த அத்தியாயம்.

இருக்குமுத லெல்வேத முணர்ந்தசுக முனிகே ளின்னுமொரு காதையுனக் கெடுத்துரைப்ப னென்றே, குருக்குமதிக் கோடாக் கடவுளிரு சரண கோகனதங் கரங்குவித்துக் கொண்டியர்வி யாசன், றருக்குமனக் கொடுஞ்சூரை வேரறுத்த சுடர்வேற் சண் முகன்ற னிணையடிச்செந் தாமரையுள் ளிருத்திப், பெருக்குகழி மகிழ்சிறப்ப வுடல்புளக மரும்பப் பிள்ளைமுகந் தனைப்பார்த்துப் பேசவுளம் பிடித்தான்.

இ-ள். உயர் வியாசன் - உயர்ந்த வியாசமுனிவன்,—குருக்குமதிக் கோடீரக்கடவுள் இருசரண கோகனதங் கரங்குவித்துக் கொண்டு - பால சந்திரசேகரசுவாமியின் உபயபாதாரவிந்தங்களையும் (நினைந்து) கைகூப்பிக்கொண்டு,—தருக்குமனக்கொடுஞ்சூரைவேரறுத்தசுடர்வேற் சண்முகன்றன் இணையடிச்செந்தாமரை உள்ளிருத்தி-சூரசங்காரசத்திகர சண்முகசுவாமியின் உபயபாதாரவிந்தங்களையுந் தியானித்துக்கொண்டு,—பெருக்கு கழிமகிழ் சிறப்ப உடல் புளகம் அரும்பப் பிள்ளைமுகந்தனைப் பார்த்து - பெருகுதலுடைய பேரானந்தஞ் சிறப்ப உடம்பில் உரோமாஞ்சந் தோன்ற மகன்முகந்தைப் பார்த்து,—இருக்குமுதனல்வேதம் உணர்ந்த சுகமுனி கேள் இன்னுமொருகாதை உனக்கு எடுத்துரைப்பன் என்று - இருக்காதி சதுர்வேதங்களையும் அறிந்த சுகமுனியே கேள் மற்றொரு கதையை உனக்கு எடுத்துக் கூறுவேன் எனத்தொடங்கி,—பேச உளம் பிடித்தான் - கூற மனங்கொண்டார். எ-று. (௧)

காலமொரு மூன்றினையுங் கருத்தினிடைக் காண்போன் காமமுடன் வெகுளிமிகு களிமயக்க மொழித்தோன், சூலநெடு வேல்பிடித்த துண்டமதிச் சடையான் றுணைச்சரண மலர்பரவுந் துருவாசமுனிவன், மேலமர ரினிதிருக்கும் விண்ணுலகமாறு விரிஞ்சனுல கடையவுளம் விரைந்துசெலுங் காலைச், சேலனைய கருநெடுங்கட் டெய்வமட மாது சென்னிபணிந் தின்னறவத் தேமாலை கொடுத்தாள்.

இ-ள். காலமொருமூன்றினையுங் கருத்தினிடைக் காண்போன் - முக்காலநிகழ்ச்சிகளையும் மனதில் அறிய வல்லவனும்,—காமமுடன் வெகுளி மிகுகளிமயக்கம் ஒழித்தோன் - காமவெகுளிமயக்கங்களை நீக்கினவனும் ஆகிய,—சூலநெடுவேல்பிடித்த துண்டமதிச்சடையான் துணைச்சரணமலர் பரவுந் துருவாசமுனிவன் - சூலபாணியான சந்திரசேகரருடைய உபய பாதாரவிந்தங்களை வழிபடுந் துருவாசமுனிவன்,—மேலமரர் இனிதிருக்கும் விண்ணுலகம் ஆறு - வானவர் வாழுஞ் சுவர்க்கம் வழியாக,—விரிஞ்சனுலகு அடைய உளம் விரைந்து செலுங்காலை - பிரமலோகத்தைச் சேருமாறு மனத்தின் விரைந்து போம்போது,—சேலனையகருநெடுங்கட்டெய்வ மடமாது சென்னிபணிந்து இன்னறவத்தேமாலை கொடுத்தாள் - அரமகள் (ஒருத்தி அவனைத்) தலையால் வணங்கிப் பாரிசாதமலர்மாலை(யொன்றை உபசாரத்தின்பொருட்டுக்) கொடுத்தாள். எ-று. (௨)

வாங்குமலர்த் தொடைமாலை வனப்பனைத்து நோக்கி வார்சடையின் மலர்முகத்தின் மணிமார்பி னணைத்துத், தாங்கரிய மகிழ்பூத்து முனியகலுங் காலைத் தருநிழலி லரசிருக்குஞ் சதமகத்தன் றேற்கோட், டோங்கலயி ராவதத்தி னெருத்தமிசை வரக்கண் டுளங்களித்து மதுமாலை யும்பர்முனி யெடுத்துப், பாங்கினளித் திடவதனை வானரசன் வாங்கிப் பத்தியிலன் பாலானை மத்தகத்திற் பதித்தான்.

இ-ள். முனி வாங்கு மலர்த்தொடைமாலை வனப்பனைத்தும் நோக்கி - துருவாசன்(அவள்பால்)வாங்கிய பூமாலையின் அழகுமுழுதையும் பார்த்து,—வார்சடையின் மலர்முகத்தின் மணிமார்பில் அணைத்து - உச்சியிலும் முகத்

றிலும் மார்பிலும் அணைந்து,—தாங்கரிய மகிழ்பூத்து அகலுங்காலை - பொறுக்கலாகா மகிழ்ச்சிமிகுந்து செல்லும்போது,—தருநிழலின் அரசிருக்குஞ் சதமகத்தன் நாற்கோட்டு ஓங்கல் அயிராவதத்தின் எருத்தமிசை வரக் கண்டு,—சுரதருநிழலில் அரசாளும் இந்திரன் நான்கு கொம்புகளையுடைய மலைபோலும் வெள்ளையானையினது பிடரின்மேலே வரக் கண்டு,—உம்பர் முனி உளங்களித்து மதுமாலை எடுத்துப் பாங்கின் அளித்திட-(அம்) முனிவன் மனமகிழ்ந்து மாலையை எடுத்து (ஆசிமொழியின்) உரிமையோடு கொடுப்ப,—வானரசன் பத்தியிலன் அதனைவாங்கி - இந்திரன் பத்தியின்றி அதனைவாங்கி,—பாலனை மத்தகத்திற் பதித்தான் - வெள்ளையானையின் மத்தகத்தின்மேல் வைத்தான். எ-று. (௫)

மத்தகத்தின் மணிமாலை வானிறைவ னுகைக்கு மதயானை கடங்கவிழ்க்கும் வான்புழைக்கை நீட்டிக், கொத்தலர நறவொழுகுங் குழங்கனறு மாலைக் கோட்டாலுங் கரத்தாலுங் குறைபடுத்தக் கண்டு, சித்தமழ லதுதூண்டத் துருவாசன் சீறித் திகைத்தமரர் கோமானைச் சினந்திருக நோக்கி, யித்தனையுங் கடவுளருக் கிறைவனெனுஞ் செருக்கால் யானளித்த மாலைதனை யிழிவுபுரிந் தனையால்.

இ-ள். வானிறைவன் உகைக்கும் மதயானை - இந்திரன் ஊரும் மதமுடைய வெள்ளையானையானது,—கடங்கவிழ்க்கும் வான் புழைக்கை நீட்டி - மதம்பொழியும் பெரிய கையை நீட்டி,—மத்தகத்தின் மணிமாலை - மத்தகத்தில் வைக்கப்பட்ட அழகிய மாலையை (எடுத்து),—கொத்தலர நறவொழுகுங் குழங்கல் நறுமாலைக் கோட்டாலுங் கரத்தாலுங் குறைபடுத்த - கொத்தாகிய அலர்களாற் சமைந்த தேனொழுகுகின்ற குழங்கலென்னும் நறுமாலையை அணிந்த கொம்புகளாலுங் கையாலுஞ் சிதைக்க,—துருவாசன் கண்டு சீறி - (அம்) முனிவன் கண்டு சினந்து,—சித்தம் அழலது தூண்டத் திகைத்து - மனத்தை(க்கோப) அக்கினிசெலுத்தத் திகைத்து,—அமரர் கோமானைச் சினந்திருக நோக்கி - இந்திரனைக் கோபக்குறி தோன்றப் பார்த்து,—கடவுளருக்கிறைவன் எனுஞ் செருக்கால் யானளித்த மாலைதனை இத்தனை இழிவுபுரிந்தனை - தேவராசன் என்னும் அகந்தையால் (நீ) நான் றந்த மாலையை இவ்வளவு அவமதித்தாய். எ-று. (௬)

ஆதரத்தின் யானளித்த மலர்மாலை வாங்கி யணிமுடியிற் சூட்டாதுள் ளகந்தைபிடித் தேறும், போதகத்தி னிழிவு புரிந்தெறிந்த பாவம் பொறையாக நின்னிடத்துப் பூண்டுதணை வாதப், பாதகத்தி னுனது பதியவுணர் கவரப் பருவரலுக் கிடனுகிப் பதும்மக ணீங்கக், தீதிழைத்துள் ளலமந்து மும்மலமு நீங்காச் சிறியோரிற் றிரிகவெனத் துருவாசன மொழிந்தான்.

இ-ள். ஆதரத்தின் யானளித்த மலர்மாலை வாங்கி அணிமுடியிற் சூட்டாது-பற்றோடு நான்றந்த பூமாலையை ஏற்று அழகியமுடியிற் சூட்டாமல்,—உள்ளகந்தைபிடித்து ஏறும் போதகத்தினால் இழிவுபுரிந்து எறிந்த பாவம்—மனச்செருக்குற்று ஏறிய யானையால் அவமதித்து எறிந்ததனாலாகிய பாவமானது,—பொறையாக நின்னிடத்துப் பூண்டு தணவாது - பாரமாக நின்கட் பொருந்திப் பிரியாதாகும்,—அப்பாதகத்தினால் உனது பதி அவுணர்

கவரப் பருவரலுக்கிடனாகி - அப்பாதகத்தினாலே உன் நகரத்தை அசுரர் கொள்ளத் துக்கபாத்திரமாய்,—பதுமமகள் நீங்கத் தீதிழைத்து உள்ளலமர்ந்து மும்மலமும் நீங்காச் சிறியோரின் திரிக - ஸ்ரீதேவி அகலத் தீங்குகளைச் செய்து மனநொந்து திரிமலங்களும் ஒழியாத அற்பர்போலத் திரியக்கடவாய்,—எனத் துருவசனம் மொழிந்தான் - என்று சாபத்தைச் சொன்னான். எ-று. (௫)

கொடுஞ்சாபமொழிந்த துருவாசமுனி பின்னுங் குலிசநெடும் படையேந்துங் குரிசின்முக நோக்கிக், கெடுங்கால மதியுளத்துத் தோன்றாது போலாங் கிறிபிறழ்ந்து முதியோரைக் கீழ்மைபுரிந் ததுதீர்ந், திடுங்கால முணர்ந்துனக்குக் கூறநினைந் தனமா லிமையோர்க்கு முனிவரர்க்கும் யாவருக்குந் தீமை, நெடுங்காலம் புரிந்தகொடுஞ் சூர்தொலைத்து நெடுவானிலை நிறுத்து சுடர்வேற்கைப் பெருமான்ற னிடமாய்.

வாய்த்தகந்த மாதனத்து வரையிடத்து நீபோய் மதிமுகங்க ளாறுகொண்ட வானவன்பொற் சரண, மேத்தியவ ணிருந்துநெடுந் தவம்புரிதி யாயி னீராறு தோளுடையப் பெருமான்ற னருளா, னீர்த்தரங்கக் கடலமுத மிமையோர்கண் மதிப்பார் நிறையமுதத் துடன்கமலை முன்னுதிக்கு மவள்கண், பார்த்தவுடன் விண்ணரசுந் திருவுமுள வாய்நான் பகர்சாபந் திருமெனச் சுகவாய்மை பகர்ந் தான்.

இ-ள். கொடுஞ்சாபம் மொழிந்த துருவாசமுனி - கொடுஞ்சாபத்தைச் சொன்ன துருவாசமுனிவன்,—பின்னுங் குலிசநெடும் படையேந்துங் குரிசில் முகம் நோக்கி - (தன்னைப்) பின்சென்ற வச்சிரபாணியின் முகத்தைப் பார்த்து,—கெடுங்காலம் மதி உளத்துத் தோன்றாது - கெடுகாலத்திற் புத்தி மனத்திலே தோன்றமாட்டாது (அதனாலிவ்வாறு செய்தாய்),—கிறி பிறழ்ந்து முதியோரைக் கீழ்மைபுரிந்தது தீர்ந்திடுங் காலம் உணர்ந்து உனக்குக் கூறநினைந்தனம் - நெறிமாறி மூத்தோரை அவமதித்த (பாவமான)து தீருங்காலத்தை அறிந்து உனக்குச் சொல்ல நினைத்தாம்,—இமையோர்க்கும் முனிவரர்க்கும் யாவருக்கும் நெடுங்காலந் தீமை புரிந்த கொடுஞ் சூர் தொலைத்து நெடுவான் நிலை நிறுத்து சுடர்வேற் கைப்பெருமான்றன் இடமாய் வாய்த்த - தேவருக்கும் முனிவருக்கும் எவருக்கும் நெடுநாள் இடரிழைத்த கொடுஞ்சூரனைக் கொன்று விண்ணுலகை நிலைப்படுத்திய சோதிவேலாயுதசுவாமியினது ஸ்தானமாய்ச் சிறந்த,—கந்தமாதனத்துவரையிடத்து நீபோய் - கந்தமாதனகிரியின்கண் நீ சென்று,—மதிமுகங்களாறு கொண்டவானவன் பொற்சரணம் ஏத்தி - ஆறுமுகசுவாமியின் திருவடிகளைத் துதித்து,—அவணிருந்து நெடுந்தவம் புரிதியாயின் - ஆண்டிருந்து மகாதவத்தைச் செய்வாயாயின்,—ஈராறுதோளுடை அப்பெருமான்றன் அருளால் - பன்னிருபுயங்களையுடைய அச்சுவாமியின் அருளினாலே,—நீர்த் தரங்கக்கடல் அமுதம் இமையோர்கள் மதிப்பார் - நீர்த்திரைகளையுடைய கடலை அமுதத்தின்பொருட்டுத் தேவர் கடைவார்,—நிறை அமுதத்துடன் கமலை முன் உதிக்கும் - நிறைந்த அமுதத்தோடு இலக்குமி முன்னர்த் தோன்றும்,—அவள் கண்பார்த்தவுடன் விண்ணரசுந் திருவும் உளவாய்

நான் பகர் சாபந் தீரும் - அவ்விலக்குமி நோக்கும்பொழுதே சுவர்க்கராச்சியமுந் திருவும் உள்ளனவாக நான் கூறிய சாபம் ஒழியும்,—எனச் சுகவாய்மை பகர்ந்தான் - என்று சுகவாக்கைக் கூறினான். எ-று. (சு-எ)

துருவாசன் கொடுஞ்சாப முரைத்திடுதன் மையினாற் சுடர்க்
குலிச நெடும்படைக்கைத் துறக்கநகர்ப் பெருமான், றருவான
வரம்பையர்கள் சுரபிநிதி யொடுசிந் தாமணிபு லோமசைவிண்
டலைமையிவை யனைத்துஞ், செருவால்வெவ் வவுணர்கொள மன
மறுகி மறுகித் திருவிழந்து கவினிழந்து சேணிழந்து சூரைப்,
பொருவாகை யெயிலுடைய குமரேசன் செயந்தி புகுந்துமுகா
ரம்பமுள திருந்துபுனன் மூழ்கி.

இ-ள். துருவாசன் கொடுஞ்சாபமுரைத்திடு தன்மையினால்-அம்முனிவன் கொடுஞ்சாபங் கூறியவாற்றால்,—சுடர்க்குலிசநெடும்படைக்கைத் துறக்க நகர்ப்பெருமான் - வச்சிரபாணியாகிய வானரசன்,—தரு வானவரம்பையர்கள் சுரபி நிதியொடு சிந்தாமணி புலோமசை விண்டலைமை இவை யனைத்தும்-கற்பகதரு அரம்பையர் தேனு இருநிதி சிந்தாமணி இந்திராணி சுவர்க்க அரசு என்பவற்றையெல்லாம்,—செருவால் வெவ்வவுணர் கொள மனமறுகி மறுகி - போரினாற் கொடியவசுரர்கவர மனமிகக்கலங்கி,—திருவிழந்து கவினிழந்து சேணிழந்து - செல்வமிழந்து அழகிழந்து விண்ணிழந்து,—சூரைப்பொருவாகையெயிலுடைய குமரேசன் செயந்தி புகுந்து-சூர பொருத வெற்றிவேலுடைய சுவாமியின் செயந்தியிற் சேர்ந்து,—முகாரம பம் உளதிருந்து புனல் மூழ்கி - வதனாரம்பத்திலும் (மற்றும்) உள்ள தீர்த்தங்களினும் மூழ்கி. எ-று. (அ)

கூடியநற் செபந்தான முதலியன செய்து குகனடிக டொழு
துபல பகலிருந்தா னப்பால், நீடியவிண் ணவர்கூடிப் பாலுததி
மதிப்ப நிறையமுதத் தொடுகமல சேரிழைவந் துதித்தாள், பீடு
பெறு திருமுகத்தின் பேரழகு குலிசப் பெருந்தகைகண் டரும்
பாவ மொழிந்தினிய வடிவுந், தோடலர்கற் பகநிழலும் பொன்ன
கருங் கிடைத்துச் சுரர்மகுட நிரைவணங்க வரசுபுரிந் தனனே.

இ-ள். கூடிய நற் செபந்தான முதலியன செய்து - மிக்க நல்ல செபதானங்களை இயற்றி,—குகனடிகள் தொழுது பலபகல் இருந்தான் - சுவாமி பாதங்களை வழிபட்டுக்கொண்டு பலநாள் இருந்தான்,—அப்பால் நீடியவிண்ணவர் கூடிப் பாலுததி மதிப்ப - பின்பு உயர்ந்த தேவர் கூடிப் பாற்கடலைக் கடைய,—நிறை அமுதத்தொடு கமலசேரிழை வந்துதித்தாள் - நிறைந்த அமுதத்தோடு ஸ்ரீதேவி வந்து தோன்றினாள்,—பீடுபெறு திருமுகத்தின் பேரழகு குலிசப்பெருந்தகை கண்டு-பெருமைபெற்ற ஸ்ரீதேவியின் முகலாவண்ணியத்தை இந்திரன் கண்டு,—அரும்பாவம் ஒழிந்து - அரிய பாவந் தீர்ந்து,—இனியவடிவுந் தோடலர் கற்பகநிழலும் பொன்னகருங் கிடைத்து - சுரூபத்தையும் பூவலருங் கற்பகதருநிழலையும் விண்ணுலகையும்பெற்று,—சுரர்மகுடநிரை வணங்க அரசுபுரிந்தனன் - தேவர்கள் கிரீடங்களால் வணங்க அரசாண்டான். எ-று. (கூ)

அத்தகைமை முனமேவெண் களிற்றரசுள் ளுணர்ந்தே யல மந்து சஞ்சலமுற் றிரவுபக லினைந்து, மத்தகத்தின் மணிமாலை நெடும்பணைக்கை நீட்டி வாரியெடுத் தெறிந்ததனிற் றுருவாசன் சினந்தே, பித்தனென யான்றாங்கும் பெருந்தகை யுள்ளுடையப் பெருஞ்சாப மிடநாகப் பேரரசு மிழந்தா, னத்தனென வாய்வெருவித் தலைவனுக்குப் பாவ மளித்தனனென் றுளந்தேறி யடலானை விளம்பும்.

இ-ள். முனமே வெண்களிற்றரசு அத்தகைமை உள்ளுணர்ந்து - முன்னரே வெள்ளையானையானது (இந்திரன் சாபமேற்றமையாகிய) அவ்வியல்பினைத் தன்னுள்ளறிந்து,—அலமந்து சஞ்சலமுற்று இரவுபகல் நினைந்து - சுழன்று வருந்தி இரவும்பகலும் ஆலோசித்து,—மத்தகத்தின் மணி மாலை நெடும்பணைக்கை நீட்டி வாரியெடுத்தெறிந்ததனில் - மத்தகத்திலிருந்த அழகிய மாலையை(நான் என்)கையைநீட்டி அள்ளியெடுத்தெறிந்ததனால்,—துருவாசன் சினந்து - துருவாசமுனி கோபித்து,—யான் தாங்கும் பெருந்தகை பித்தனென உள்ளுடைய - என்னாற் சுமக்கப்பட்ட பெரியோன் பித்தன்போல மனங்கலங்கும்வண்ணம்,—பெருஞ் சாபம் இட - பெரிய சாபத்தை இடுதலால்,—அத்தன் நாகப்பேரரசும் இழந்தான் - (எனது) தலைவ(னாகிய அவ)ன் சுவர்க்கத்துப்பேரிராச்சியத்தையும் இழந்தானே,—என ஆய் தலைவனுக்குப் பாவமளித்தனன் என்று வெருவி - என்று நினைந்து தலைவனுக்குப் பாவங்கொடுத்தேனே என்று அஞ்சி,—உளந்தேறி அடலானை விளம்பும் - மனந்தேறி வெள்ளையானை கூறும். எ-று. (௧0)

வேறு.

செய்த தீவினை செய்தவர்க் கேயெனு
வையஞ் சொல்லும் வழக்குமற் றுண்மையே
கையெ டுத்த கடும்பவந் தீரவே
லையன் றாளருச் சித்திட லாகுமால்.

இ-ள். செய்ததீவினை செய்தவர்க்கே என - செய்யப்பட்ட பாவப் பயன் செய்தவருக்கேயாம் என்று,—வையஞ் சொல்லும் வழக்கு உண்மையே - உலகங்கூறும் வழக்கம் மெய்யே,—கை எடுத்த கடும்பவந் தீர - கையினால் (நான் மாலையை)எடுத்த கடியபாவந் தீரும்பொருட்டு,—வேலையன் தாள் அருச்சித்திடல் ஆகும்,—வேற்கடவுளின் பாதங்களைப் பூசித்தலே தகும். எ-று. (௧௧)

என்று வேழத் திறையுளத் தெண்ணியே
நன்று ணர்ந்துள நாரதற் போற்றியே
குன்றெ றிந்த குருபரன் பூசனைக்
கொன்று மந்திர மோதென வோதினன்.

இ-ள். என்று வேழத்திறை உளத்தெண்ணி - என்று வெள்ளையானை உள்ளே நினைந்து,—நன்று உணர்ந்துள நாரதற்போற்றி - நன்மையை அறிந்த நாரதமுனிவனைத் துதித்து,—குன்றெறிந்த குருபரன் பூசனைக்கு ஒன்று மந்திரம் ஓது என - குமாரசுவாமியின்பூசைக்கு இயைந்த மந்திரத்தைப்போதிக்க என்று கேட்க,—ஓதினன் - (அம்முனிவன்) போதித்தான். எ-று. (௧௨)

கீழ்த்தி சைக்கட் கிளர்ந்தெழு மாதங்கங்
காழ்த்த நெஞ்சக் கவலொழிந் தன்பினால்
வீழ்த்த கட்புன லோடுசெவ் வேளடி
வாழ்த்திக் கந்த வரைப்புறஞ் சார்ந்ததால்.

இ-ள். கீழ்த்திசைக்கட் கிளர்ந்தெழு மாதங்கம் - கிழக்குத்திக்கின் விளங்கும் யானையானது,—காழ்த்த நெஞ்சக்கவல் ஒழிந்து - வயிரமான மனக்கவலையை நீங்கி,—அன்பினால் வீழ்த்த கட்புனலோடு செவ்வேளடி வாழ்த்தி - அன்பாற் சொரிந்த கண்ணீரோடு குகபாதங்களைத் துதித்துக் கொண்டு,—கந்தவரைப்புறஞ் சார்ந்தது-கந்தமாதனகிரியின்கட் சேர்ந்தது. எ-று. (கந)

செயந்தி யம்பதி சேர்புன லாடியே
நயந்து பஞ்சக் குரோசமு நாடொறும்
வியந்து சூழ்ந்து விரைகொண்மந் தாகினி
பயந்த பங்கயப் போது பறித்திடா.

இ-ள். செயந்தியம்பதி சேர் புனலாடி - செயந்திபுரத்திற் சேர்ந்த தீர்த்தங்களின் மூழ்கி,—நயந்து பஞ்சக்குரோசமும் நாடொறும் வியந்து சூழ்ந்து - விரும்பி ஐங்குரோசவெல்லையையும் நாடோறும் புகழ்ந்து வலஞ் செய்து,—விரைகொள் மந்தாகினி பயந்த பங்கயப்போது பறித்திடா - சுகந்தம்பொருந்திய கங்கை தோற்றுவித்த தாமரைமலர்களைப் பறித்து. எ-று. (கஎ)

அந்தப் போதை யரன்மகன் றாளர
விந்தப் போதில் வியந்தருச் சித்திடா
முந்தப் போதனை மோதுகை யானைநாற்
றந்தப் போதகந் தாழ்ந்தது வாழ்ந்ததே.

இ-ள். அந்தப்போதை அரன்மகன் தாமரவிந்தப்போதில் வியந்து அருச்சித்திடா - அம்மலர்களைச் சிவகுமாரருடைய பாதபங்கயமலர்களிற் புகழ்ந்து பூசித்து,—முந்தப் போதனை மோதுகையானை - முன்பு பிரமாவைக் குட்டிய திருக்கரமுடைய (அ)வரை,—நாற்றந்தப் போதகந் தாழ்ந்தது வாழ்ந்தது - நான்குகொம்புகளையுடைய (அவ்)யானை வணங்கியதாய் வாழ்ந்தது எ-று. (கஅ)

இந்த வாறைந்து வைகலி ராப்பதற்
றந்தி யேத்திவெஞ் சாபந் தணந்துவேற்
கந்த வேணற் கருணைகொண் டிந்திரன்
முந்து பக்கத்து மொய்ம்புடன் சென்றதே.

இ-ள். இந்தவாறு ஐந்துவைகல் இராப்பகல் தந்தி ஏத்தி - இவ்வாறு ஐந்துநாள் இரவும்பகலும் (அவ்)யானை வழிபட்டு,—வேற்கந்தவேண் நற் கருணை கொண்டு - குமாரசுவாமியின் நல்லருளைப்பெற்று,—வெஞ் சாபந் தணந்து - கொடிய சாபத்தை நீங்கி,—முந்து இந்திரன் பக்கத்து மொய்ம்புடன் சென்றது - முற்பட்ட இந்திரனது பாங்கரின் வலிமையோடு சென்றது. எ-று. (கக)

ஆத லாற்கும ரேசன்பொன் னாலய
மாத வத்தின் வடிவம தாகுமாற்
கேத நீங்கச் சுகமுனி கேட்டியா
லீது நிற்க வினியொன் றுணர்த்துவாம்.

இ-ள். ஆதலாற் குமரேசன் பொன்னாலயம் மா தவத்தின்வடிவமதாகும்-ஆதலினாற் குமாரசுவாமியினது திருக்கோயில் பெரிய தவரூபமாம்,—சுகமுனி கேதநீங்கக் கேட்டி - சுகமுனியே துன்பநீங்கக் கேள்,—ஈது நிற்க இனி ஒன்று உணர்த்துவாம் - இதுநிற்க இனி ஒன்றனைக் கூறுவாம். எ-று. (கஎ)

கருத்தி னுக்கடங் காதுயர் கந்தனுக்
கருத்தி முற்றச்சொ லாகமத் தாற்றினாற்
றிருத்து பூசை தினந்தொறு மெட்டதாய்ப்
பொருத்து சாமந் தொறுங்களி பூப்பதே.

இ-ள். கருத்தினுக்கடங்காது உயர் கந்தனுக்கு - உள்ளத்தடங்காது உயர்ந்த குமாரசுவாமிக்கு,—அருத்தி முற்றச் சொல் ஆகமத்தாற்றினால் திருத்து பூசை - ஆசை முதிரச் சொல்லுகின்ற தந்திரவிதியினாலே திருத்தமாகச் செய்யும் பூசை,—தினந்தொறும் எட்டதாய்ப் பொருத்து சாமந் தொறுங் களிபூப்பது-நாடோறும் எட்டாய்ப் பொருந்திய யாமங்கடோறும் (செய்யப்பட்டு) மகிழ்ச்சிபயப்பதாம். எ-று. (கஅ)

கால மெட்டுங் கருதிமெய்ப் பூசனைச்
சீல ராகிய சீரிய நாலிரு
பால ராகிப் பகலிர வும்மறை
நூலி னாற்றினர் நாம நுவலுவாம்.

இ-ள். பகலிரவுங் காலமெட்டும் - பகலிராக்களிலுள்ள சாமங்களெட்டிலும்,—கருதி மெய்ப்பூசனைச் சீலராகிய சீரிய நாலிரு பாலராகி-நினைந்து மெய்ப்பூசை செய்யுமியல்பினரான சிறந்த எண்பகுதியினராகி,—மறைநூலின் ஆற்றினர் நாமம் நுவலுவாம் - சுருதிவிதிப்படி (ஆண்டுப் பூசை)செய்தவருடைய பெயர்களைச் சொல்வாம். எ-று. (கக)

வேறு.

பகற்கால நாற்கால மந்தநாற் காலமுதற் பகருங் கால [பூசை
முளைக்கமலன் பூசையிரண் டாங்காலம் பலமுனிவர் முயலும்
மகத்துவமூன் றாங்காலங் கந்தருவர் சித்தருக்கு வாய்த்த பூசை
பகுத்தநா லாங்காலந் திக்கிறைவ ருடன்மகவான் பரிந்த பூசை.

இ-ள். பகற்காலம் நாற்காலம் - பகற்காலத்தில் நான்கு யாமங்கள் (உளவன்றே),—அந்த நாற்காலம் பகரும் முதற்காலம் முளைக்கமலன் பூசை - அந்த நான்குயாமங்களுட் சொல்லப்பட்ட முதல்யாமத்திலே பிரமாவின் பூசை,—இரண்டாங்காலம் முயலும் பலமுனிவர் பூசை - இரண்டாம் யாமத்திலே முயலுகின்ற பலமுனிவர்களின் பூசை,—மகத்துவமூன்றாங்காலம் வாய்த்த கந்தருவர் சித்தருக்குப் பூசை-பெருமையான மூன்றாம் யாமத்திலே சிறந்த கந்தருவர் சித்தரின் பூசை,—பகுத்த நாலாங்காலம் பரிந்த திக்கிறைவருடன் மகவான்பூசை - பிரிக்கப்பட்ட நான்காம்யாமத்திலே அன்புள்ள திக்குப்பாலகரோடு இந்திரனது பூசை. எ-று. (உ0)

உரிமையினைந் தாங்காலந் திருமுதலாஞ் சத்திகளுக் குவந்த பூசை, தெரிதருமா றாங்கால மவுணருடன் பணிக்கிறையாஞ் சேடன்பூசை, விரிதருமே ழாங்காலம் வள்ளிதெய்வ யானையுளம் விரும்பும் பூசை, கருதுமெட்டாங் காலமுயர் கங்கைமுத னதிக ளுடன் கண்ணன் பூசை.

இ-ள். உரிமையின் ஐந்தாங்காலம் உவந்த திருமுதலாஞ்சத்திகளுக்குப் பூசை - (இரவின் முதல்யாமமாகும்) உரிமையினையுடைய ஐந்தாம்யாமத்திலே மகிழ்ந்த இலக்குமிமுதலான சத்திகளின் பூசை,—தெரிதரும் ஆறுங்காலம் அவுணருடன் பணிக்கிறையாஞ் சேடன் பூசை - அறியும் ஆறும்யாமத்திலே அசுரரோடு நாகபதியாகிய சேடனது பூசை,—விரிதரும் ஏழாங்காலம் உளம் விரும்பும் வள்ளிதெய்வயானை பூசை - விரிந்த ஏழாம் யாமத்திலே உள்விரும்பிய வள்ளியம்மை தெய்வயானை என்பாரது பூசை,—கருதும் எட்டாங்காலம் உயர்கங்கைமுதனதிகளுடன் கண்ணன் பூசை - நினையும் எட்டாம்யாமத்திலே உயர்ந்த கங்காதிநதிகளோடு விட்டுணுவின் பூசை. எ-று. (௨௧)

எட்டான காலமுறை யியற்றுநர்பூ சனைநோக்கி யிருகண் ணீர்கள், விட்டாறு முகக்கடவு ளிணைச்சரண கோகனத வீடு காத்துக், கட்டாரி கரமெடுத்த வீரவா குவுமிதயங் களித்தா னந்த, முட்டாத கடன்மூழ்கி விளையாடுஞ் செய்கை யெம்மான் மொழியப் போமோ.

இ-ள். கட்டாரி கரமெடுத்த வீரவாகுவும்-வாளைக் கைக்கொண்ட வீரவாகுவும்,—எட்டானகாலம் முறையியற்றுநர் பூசனை நோக்கி - எண்யாமங்களினும் (மேற்சுட்டிய)முறைப்படியே செய்கின்ற (அவ்வ)வருடைய பூசைகளை நோக்கி,—இருகண் நீர்கள்விட்டு-இரண்டு கண்களினின்றும் பாஷ்பஞ் சொரிந்து,—ஆறுமுகக்கடவுள் இணைச்சரண கோகனத வீடுகாத்து-ஆறுமுகசுவாமியினுடைய உபயபாதாரவிந்தங்களின் திருக்கோயிலைக் காத்து,—இதயங்களித்து முட்டாத ஆனந்தக் கடன்மூழ்கி - மனமகிழ்ந்து வழுவாத ஆனந்தசாகரத்திற் படிந்து,—விளையாடுஞ்செய்கை எம்மான் மொழியப்போமோ-விளையாடுஞ்செயல் எம்மாற் சொல்லத்தகுமா. எ-று. ()

ஈதுநிற்க வின்னுமொரு காதையுண்டக் காதையுனக் கெடுத் துக் காட்டி, யோதுதும்யா மென்றுசுக முனிவரனை முகநோக்கி யொருநான் காக, வேதமுறை விதித்ததவ வியாசமுனி யகங் குழைந்து விருப்ப மிக்க, மாதவத்திற் புலிக்காலைக் கொண்டகவு தமன்சரிதை வழுத்தல் செய்வான்.

இ-ள். ஈதுநிற்க இன்னுமொரு காதை உண்டு அக்காதை உனக்கு எடுத்துக்காட்டி யாம் ஓதுதும் என்று - இதுநிற்க மேலுமொரு கதையுளது அக்கதையை உனக்கு எடுத்துவிளக்கி யாஞ் சொல்வாம என்று தொடங்கி - வேதம் ஒருநான்காக முறைவிதித்த தவ வியாசமுனி அகங்குழைந்து - வேதங்களை நான்காக முறைவகுத்த தவத்தினையுடைய வியாசமுனிவன் மனநெகிழ்ந்து,—சுகமுனிவரனை முகநோக்கி - சுகமுனிவனை முகம்பார்த்து,—விருப்பமிக்க மாதவத்திற் புலிக்காலைக்கொண்ட கவுதமன் சரிதை வழுத்தல் செய்வான்-விருப்பமிகுந்த பெருந்தவத்தாற் புலிக்காலைப் பொருந்திய கவுதமனது கதையைப் புகழ்ந்துசொல்வான். எ-று. (௨௩)

புண்டரிக புரமான புலியூரிற் கனகமணிப் பொதுவின் ஞானத், தொண்டர்களும் பதஞ்சலியும் விண்ணோரு முனிவரருங் கொழுது போற்றத், தண்டலிலா னந்தநடத் திருக்கூத்துப் பயிலீசன் சரணப் போது, கண்டுகழி மகிழ்தூங்கும் புண்டரிகத் தாண்முனிவன் கவற்சி தீர்ந்தான்.

இ-ள். புண்டரிகபுரமான புலியூரின் மணிக் கனகப்பொதுவில் - புண்டரீகபுரமாகிய சிதம்பரத்திலே அழகிய கனகசபையிலே,—ஞானத்தொண்டர்களும் பதஞ்சலியும் விண்ணோரும் முனிவரரும் தொழுது போற்ற-மெய்யறியடியாரும் பதஞ்சலியுந் தேவரும் முனிவரும் வணங்கித் துதிக்க - தண்டலில் ஆனந்தநடத் திருக்கூத்துப் பயில் ஈசன சரணப்போது கண்டு கழி மகிழ்தூங்கும் புண்டரிகத் தாண்முனிவன் - அழிவற்ற ஆனந்தநடனமாகிய திருக்கூத்தைச் செய்யும் நடேசருடைய பதமலர்களைத் தரிசித்து மிகுமகிழ் சிறந்த புலிக்கான்முனிவன்,—கவற்சி தீர்ந்தான் - கவலைநீங்கினவனாய். எ-று. (உச)

பொதுவினிடைச் சதிநடனம் புரியமல பரன்றுணைத்தாட் போது தாழ்ந்து, மதிவிரை யணிந்தசடை யெம்பெருமா னின் கருணை வாரி யாலே, கதிரவன்சூழ் பேருலகிற் கடவுணதிப் புனலாடிக் கயிலை யாதி, முதியதலம் பலதொழுதற் குளம்வைத்தே னெனப்பாணி முகுழ்த்துப் போற்ற.

இ-ள். பொதுவினிடைச் சதி நடனம்புரி அமலபரன் துணைத்தாட் போது தாழ்ந்து - அம்பலத்திலே சதியோடு நடிக்கின்ற மலரகிதநடேசருடைய உபயபதமலர்களையும் வணங்கி,—மதிவிரையணிந்த சடை எம்பெருமான் - இந்துகலையணிந்த சடையையுடைய சுவாமீ!,—நின்கருணை வாரியாலே கதிரவன் சூழ் பேருலகிற் கடவுணதிப் புனலாடி - நும்மருட்பெருக்கினாலே சூரியன் வலஞ்செய்யும் நிலவுலகிலுள்ள திவ்விய நதிகளின் முழுகி,—கயிலையாதி முதிய தலம் பல தொழுதற்கு உளம் வைத்தேன் - கயிலைமுதலிய தலங்கள் பலவற்றையும் வழிபட எண்ணினேன்,—எனப் பாணி முகுழ்த்துப் போற்ற - என்று கைகளைக் கூப்பித் துதிக்க. எ-று. ()

அன்னபரி சரனளிக்க வியாக்கிரத்தா ளருந்தவனங் ககன்று வேலை, பன்னுலகிற் கடவுணதி பலமூழ்கி மேயதலம் பலவும் போற்றி, முன்னமுகி றளைபடுத்து பாண்டியருக் கருள்புரிந்து முடியா முத்தி, நன்னலந்தந் தருள்பொருநை யிருகரையிற் றீர்த்தமெலா நாடி யாடி.

இ-ள். அன்னபரிசு அரன் அளிக்க - அவ்வாறு நடேசர் (அனுமதி) கொடுக்க,—வியாக்கிரத்தாளருந்தவன் அங்கு அகன்று - வியாக்கிரபாத முனிவன் அவ்விடத்தின் நீங்கி,—உலகிற் பன்னு வேலை கடவுணதி பல மூழ்கி - உலகத்து (விசேடித்துச்) சொல்லப்படுங் கடல்களிலுந் திவ்விய நதிகள் பலவற்றினும் ஆடி,—மேய தலம் பலவும் போற்றி - பொருந்திய தலங்கள் பலவற்றையும் வழிபட்டு,—முன்னம் முகில் தளைபடுத்து பாண்டியருக்கு அருள்புரிந்து முடியா முத்திநன்னலந் தந்தருள்-முன்னே முகில்களைச் சிறைப்படுத்திய தென்னவருக்கு அருள்செய்து அழியாத முத்தியின் பத்தைத் தந்தருளிய,— பொருநை இருகரையில் தீர்த்தமெலாம் நாடி

ஆடி - பொருநையாற்றின் இருகரைகளிலுமுள்ள தீர்த்தங்களிலெல்லாம் விரும்பி முழுகி. எ-று. (உசு)

சந்திரனுக் கிருஞ்சாபம் போக்கியசோ மாரணியந் தன்னிற் போந்து, மந்திரத்தின் வடிவான சோமலிங்கர் பங்கயத்தாள் வந் தித் தேத்திச், சிந்துமணி யெடுத்தெறியுஞ் செயந்திபுரத் திருக் கோயில் சென்று வேற்கைக், கந்தனைவந் தனைபுரிந்தா கமவிதி யிற் பூசனையுங் களித்துச் செய்தான்.

இ-ள். சந்திரனுக்கு இருஞ்சாபம் போக்கிய சோமாரணியந்தன்னிற் போந்து - சந்திரனுக்குப் பெருஞ்சாபத்தை அகற்றிய சோமாரணியஸ்தலத் திற் சென்று,—மந்திரத்தின்வடிவான சோமலிங்கர் பங்கயத்தாள் வந்தித் தேத்தி - மந்திரரூபரான சோமலிங்கபெருமானுடைய பாதாரவிந்தங்களை வழிபட்டுத் துதித்து,—சிந்துமணி எடுத்தெறியுஞ் செயந்திபுரத் திருக்கோ யில் சென்று - கடல் இரத்தினங்களை எடுத்துவீசுகின்ற செயந்திபுரத்துத் திருக்கோயிலிற் போய்,—வேற்கைக் கந்தனை வந்தனைபுரிந்து - வேலாயுத கரராகிய சுவாமியை வழிபட்டு,—ஆகமவிதியிற் பூசனையுங் களித்துச் செய்தான் - ஆகமவிதியாற் பூசையையும் மகிழ்ந்துசெய்தான். எ-று. (உஎ)

ஆனந்த மயமான கூப்பிடோ ரைந்துமுளத் தன்பா னோக்கித்
தானந்த வில்லாத வேள்விபுரிந் தாறுமுகன் றனக்காம் வண்ண
ஞானந்த னுள்ளமிசை மீதூரச் சிந்துபுர நகர்க்கும் வாசப்
பூநந்த வனஞ்செறிசோ மாரணியந் தனக்குநடுப் புடையோர் வைப்பின்.

இ-ள். ஆனந்தமயமான கூப்பிடோரைந்தும் உளத்தன்பால் நோக்கி - இன்பவடிவான பஞ்சக்குரோசவெல்லையை மனக்காதலாற் பார்த்து,—தன் னுள்ளமிசை ஞானம் மீதூர - தன்மனத்து ஞானம் மேற்பட,—ஆறுமுகன் றனக்கு ஆம்வண்ணம் நந்தவில்லாத வேள்வி புரிந்து - அறுமுகருக்கு(ப் பிரீதி)ஆமாறு குறைவில்லாத யாகஞ்செய்தலை விரும்பி,—சிந்துபுரநகர்க் கும் வாசப் பூ நந்தவனஞ்செறி சோமாரணியந்தனக்கும் நடுப்புடை ஓர் வைப்பின் - செயந்திநகர்க்கும் நறும்பூஞ்சோலைசெறிந்த சோமாரணியத் துக்கும் நடுப்பக்கமாகிய ஓரிடத்தில். எ-று. (உஅ)

பலனளிக்கு மறைவேள்விச் சாலைதனை விதிமரபிற் பணித் துட் போந்து, கலைமுதிர்ச்சி யாரிடரு மந்தணரும் பெரியோருங் கவினச் சூழ்ந்து, வலனுயர்த்த தனுவடிவு முக்கோணத் தின் வடிவு மனுமுன் சொற்ற, தலைமைபெறச் சதுரமெனுங் குண்டமு மும் முறையாகத் தானே சேர்த்தி.

இ-ள். பலனளிக்கும் மறைவேள்விச் சாலைதனை விதிமரபிற் பணி த்து - பயன்றரும் வைதிக யாகசாலையை விதிப்படி அமைப்பித்து,— உட்போந்து-உள்ளேசென்று,—கலைமுதிர்ச்சி ஆரிடரும் அந்தணரும் பெரி யோருஞ் சூழ்ந்து கவின - கல்விமுதிர்ச்சியையுடைய முனிவரும் வேதிய ரும் பெரியோருஞ் சூழ்ந்து விளங்க,—வலனுயர்த்த தனுவடிவும் முக்கோ ணத்தின்வடிவுஞ் சதுரம் எனும் மும்முறைக் குண்டமும் ஆக - வலப்பாலி னுயர்த்திய வில்வடிவும் முக்கோணவடிவுஞ் சதுரவடிவும் என்னும் மூன்று படியான குண்டங்களும் உளவாக,—மனு முன்சொற்ற தலைமை பெறத்

தானே சேர்த்தி - மனு முன்சொல்லிய முதன்மையைப் பெறுமாறு தானே அமைத்து. எ-று. (௨௯).

பிராணன்வடி வாங்கோதா வபானனெனு முற்காதாப் பெய ர்வி யானன், பராவடிவாய் வருபிரமா வுதானனெனு மத்வரியு பகர்ச மானன், விராவுயச மானனொடு தங்கடங்க ளிடந்தோறும் வியப்பின் மேவத், தராதலமெல் லாம்பரவ வேள்விமுறை யினி தாற்றுந் தன்மை யோர்ந்து.

இ-ள். பிராணன்வடிவாங் கோதா - பிராணன்வடிவமாகிய ஹோதா வும்,—அபானனெனும் உற்காதா - அபானன்வடிவமாகிய உற்காதாவும்,— பெயர் பரா வியானன்வடிவாய் வரு பிரமா - புகழ்பரந்த வியானன்வடி வமான பிரமாவும்,—உதானனெனும் அத்வரியு - உதானன்வடிவமான அத் வரியுவும்.—பகர் விராவு சமானன் யசமானனொடு - புகழ்பொருந்திய சமா னன் வடிவமான யசமான(னென்னுந்தன்)னோடு,—தங்கடங்களிடந்தோ றும் வியப்பின் மேவ - தத்தமிடந்தோறும் வியப்புடன் பொருந்த,—தரா தலமெல்லாம் பரவ வேள்விமுறை இனிது ஆற்றுந்தன்மை-உலகமெல்லாம் புகழ வேள்வியை முறையே இனிது செய்யுமியல்பை,—ஓர்ந்து - அறிந்து.

ஓர்தலின்வினைமுதல் "மாது" என வருஞ்செய்யுளிற் பெறப்படும். ஒதா=இருக்குவேதஞானி; உற்காதா=சாமவேதஞானி; பிரமா=ஓர் யாக புரோகிதன்; அத்வரியு=யசுர்வேதஞானி; யசமானன்=வேட்பவன். (௩0)

புண்ணியத்தெண் டிரைக்கோதா வரிச்சுருதி மாநதியாம் பொருவின் மாதுள், ளெண்ணியருட் டிருத்தாதை சண்முகனுக் கற்புதமா மினிய யாகந், தண்ணளியிற் புரிவித்தா னவபிருத நான மவன் றனின் றுடக், கண்ணகன்பே ராறுகிப் போதுமென மக சாலை களித்தாங் குற்றாள்.

இ-ள். புண்ணியத் தெண்டிரைக் கோதாவரிமாநதியாம் பொருவில் சுருதி மாது - சுத்தமான தெள்ளிய திரைகளையுடைய கோதாவரியாகிய ஒப்பற்ற வேதமறிந்த பெண்ணானவள்,—அருட்டிருத் தாதை சண்முகனு க்கு அற்புதமாம் இனிய யாகந் தண்ணளியிற் புரிவித்தான் - அருட்செல வத்தையுடைய (என்)பிதா அறுமுகருக்கு வியப்பான இனியவேள்வியைச் செய்வித்தார்,—அவன்றன் இன்று அவபிருதநானம் ஆடக் கண்ணகன் பேராறுகிப் போதும் - அவர் இன்று யாகாந்தஸ்நானம் பண்ணுதற்கு இட மகன்ற பெரிய யாறாய் (நாம்)போவம்,—என உள் எண்ணி - என்று உண் ணினைந்து,—களித்து மகசாலை ஆங்குற்றாள் - மகிழ்ந்து யாகசாலையில் அவ வாறு வந்தாள். எ-று. (௩௧)

ஆங்கெழுகோ தாவரியி னவபிருத நானமர பாடி நீயென் பாங்குறுபெண் ணுகையினுற் றங்கையர்க்குக் கைம்மாறு பரிவிற் செய்தா, யீங்கிவணீ பரிதிமதி நால்வேத முள்ளளவு மெனது சீர்த்தி, யோங்கவென வருள்சுரந்து பின்னருமா தவனவள்பா லுரைப்ப தானுன்.

இ-ள். மாதவன் - புலிக்கால் முனிவன் (அதுகண்டு),—ஆங்கெழு கோதாவரியின் மரபு அவபிருதநானம் ஆடி - அங்கெழுந்த கோதாவரியிலே

முறைப்படி யாகாங்கன்மானஞ் செய்து,—நீ என்பாற்குறு பெண்ணுணைசயி ளுல் தந்தையர்க்குந் கைம்மாறு பரிவிற் செய்தாய் - நீ என்வயிற்பிறந்த பெண்ணுதலால் (மக்கள்) தாதையர்க்குச்செய்யும் பதிலுதவியை அன்பாற் செய்தாய் —ஈங்கிவண் நீ பரிதிமதி நால்வேதம் உள்ளளவும் எனது சீர்த்தி ஓங்க - இங்ஙனம் நீ சூரியசந்திரருஞ் சதுர்வேதங்களும் உள்ளவரை யென் பெயரால் உயர்க,—என அருள்கூர்ந்து பின்னரும் அவள்பால் உரைப்பதா ஞன் -என்று சொல்லியருளிப் பின்னும் அவளிடத்துச் சொல்லலாயினன். எ-று. (கூஉ)

விருத்தகங்கை யாகியகோ தாவரிநீ பொருநையெனும் வேத மாதுக், கருத்திபெறு திருத்துணைவி யாகியிவ ணடைந்தடைவா ர்க் கமுதம் போலத், திருத்தகுநற் சிறப்பாக விருத்தியென்றே யருமகமுஞ் செவ்வேட் கன்பாற், பொருத்தியவ னிருகிரண சர ணதா மரைவிரைத்தண் போது போற்றி.

இ-ள். விருத்தகங்கையாகிய கோதாவரி - விருத்தகங்கை எனப்பெய ரிய கோதாவரியே!,—நீ பொருநையெனும் வேதமாதுக்கு அருத்திபெறு திருத்துணைவியாகி - நீ பொருநையென்னும் வைதிகப்பெண்ணுக்கு ஆசை பெற்ற திருச்சகியாகி,—இவண் அடைந்து - இங்குச் சேர்ந்து,—அடைவா க்கு அமுதம்போலத் திருத்தகுநற்சிறப்பு ஆக இருத்தி என்று - (நின்னைச்) சார்வார்க்கு அமுதுபோலச் செல்வமும் முத்தியும் உளவாக(ச்செய்து) இரு என்று சொல்லி,—அருமகமுஞ் செவ்வேட்கு அன்பாற் பொருத்தி - அரிய (தமது)யாகத்தையும் சுவாமிக்கு அன்பாற்சமர்ப்பித்து,—அவன இருகிரண சரணதாமரை விரைத்தண் போது போற்றி - அவருடைய உபயபாதார விந்தங்களையுந் துதித்து. எ-று. (கூங)

நீங்காத பரிவினொடு விடைபெற்றே யவணகன்று நிமலமாய, வோங்காரத் திருவடிவாஞ் சிவகலைக்கோர் வைப்பாகி யொளிர் பொன் மன்றிற், பூங்காலின் றிருக்கூத்துப் புலிக்காலின் றிரு முனிவன் புகழ்ந்து போற்றப், பாங்காக வவணடைந்தான் கிடை யாத பரபோக பதம்பெற் றுய்ந்தான்.

இ-ள். புலிக்காலின்றிருமுனிவன் நீங்காத பரிவினொடு விடைபெற்று அவண் அகன்று - புலிக்கான்முனிவன் பிரியாத அன்போடு அனுமதி பெ ற்று அவ்விடத்தைவிட்டு,—நிமலமாய ஓங்காரத்திருவடிவாஞ் சிவகலைக்கு ஓர் வைப்பாகி ஒளிர் பொன்மன்றில் - சுத்த பிரணவரூபமான சிவகலைக்கு ஓரிடமாய் விளங்கும் பொன்னம்பலத்தில்,—பூங்காலின் திருக்கூத்துப் புகழ்ந்து போற்ற - திருவடிகளின் திருநடனத்தைப் புகழ்ந்து துதிக்கும் பொருட்டு,—அவண் பாங்காக அடைந்தான் - அவ்விடத்தையே உரிமை யாக அடைந்தான்,—கிடையாத பரபோகபதம் பெற்றுய்ந்தான் - (அதனு லவன் அபக்குவர்க்குக்) கிடையாத பேரின்பவீட்டை அடைந்துய்ந்தான். எ-று. (கூச)

முத்தெறிசங் கமழுழ்கிச் சோமவா வியிற்படிந்து முடிவி லாத, வத்தரெனுஞ் சோமலிங்கர்த் தொழுதுபுலிக் கான்முனிவ னரிது வேள்வி, வித்தகச்சா லையிற்கோதா வரியாடிச் செயந்தி

புர மேவி வேற்கை, நித்தனையன் பினிற்பணிவார் பிறப்பொழித்-
துக் குகன்சரண நீழல் வாழ்வார்.

இ-ள். முத்தெறி சங்கமம்மூழ்கி - முத்துக்களை வீசுகின்ற சங்கமதீர்த்தத்தில் ஆடி,—சோமவாவியிற் படிந்து - சோமதீர்த்தத்திலும் ஆடி,—முடிவிலாத அத்தரெனுஞ் சோமலிங்கரைத் தொழுது - அழிவற்ற பிரானாகிய சோமலிங்கேசரை வணங்கி,—புலிக்கான்முனிவன் அரிது மேன்விளைத்தக சாலையிற் கோதாவரி ஆடி - வியாக்கிரபாதனது அரிய நன்மையான வேள்விச்சாலையிற் கோதாவரியின் முழுகி,—செயந்திபுரம் மேவி வேற்கை நித்தனை அன்பினிற் பணிவார் - செயந்தியிற்சேர்ந்து வேற்கடவுளை அன்பான் வணங்குபவர்,—பிறப்பொழித்துக் குகன்சரணநீழல் வாழ்வார் - பிறப்புநீங்கிக் குகபாதநிழலின் வாழ்வார். எ-று. (௩௫)

இன்னுமொரு காதையுனக் கெடுத்துக்காட் டுதுஞ்சுகநீ
யினிது கேளென், றுன்னரிய வியாசமுனி களிசிறந்தாங் கவ
னுணர வுவப்பு மிக்கே, தன்னகப்பூங் கமலமலர்ந் தாதரத்தின்
யாவருமே தலைமையான, நன்னலமபெற் றிடவேதம் பகுத்த
வாயாற்சிறிது நவில்வ தானான்.

இ-ள். உன்னரிய வியாசமுனி - (இங்ஙனங் கூறிய) நினைத்தற்கரிய வியாசமுனிவன்,—இன்னுமொரு காதை உனக்கு எடுத்துக்காட்டுதுஞ் சுக நீ இனிது கேள் என்று - மற்றுமொரு கதையை உனக்கு எடுத்துக் காட்டுவஞ் சுகனே நீ இனிது கேட்க என்று தொடங்கி,—உவப்புமிக்கு - பிரீதிபெருகி,—தன் அகப்பூங்கமலம் அலர்ந்து - தன் மனத்தாமரை மலர்ந்து,—ஆதரத்தின் யாவருந் தலைமையான நன்னலம் பெற்றிட வேதம் பகுத்த வாயால் - பற்றினையுடைய எவரும் முதன்மையான நல்லின்பத்தைப் பெறுமாறு வேதங்களை வகுத்த திருவாயினால்,—ஆங்கவன் களிசிறந்து உணரச் சிறிது நவில்வதானான் - அவன் மகிழ்சிறந்து அறியச் சிறிதே கூறலாயினான். எ-று. (௩௬)

மாதவத்தி னுயர்வசிட்டன் மகிழ்வாமதேவன்சா பாலி மாயை,
காதன்மிக்காங் காசிபன்மார்க் கண்டனொடு கவுதமன்முற் கலன்
வேதத்திற், கோதில்கவு சிகமுனிவ னெடுங்காலங் காசிநகர் குறு
கிக் கூனற், சீதமதிக் கீறணிந்தான் பதம்பணிந்து தவமியற்றிச்
சிறந்தாங் குற்றார்.

இ-ள். மாதவத்தினுயர்வசிட்ட..................கவுசிகமுனிவன் - பெருந்தவத்துயர்ந்த வசிட்டனும், மகிழும் வாமதேவனுஞ், சாபாலியும், மாயையிற் காமமிக்க காசிபனும், மார்க்கண்டனுங், கவுதமனும், முற்கலனும், வேதத்தையுணர்ந்த குற்றமற்ற கவுசிகமுனிவனும்,—காசிநகர் குறுகி - காசியம்பதியிற்சார்ந்து,—கூனற் சீத மதிக்கீறு அணிந்தான் பதம் பணிந்து - வளைந்த குளிர்ந்த சந்திரகண்டத்தை அணிந்தவரது பாதங்களை வணங்கி,—ஆங்கு நெடுங்காலந் தவமியற்றிச் சிறந்துற்றார் - அங்கே நெடுநாள் நோற்றுக்கொண்டு சிறந்திருந்தனர். எ-று. (௩௭)

நாலிருமா தவமுனிவர் காசியகி லேசரடி நாட்பூச் சூடி, யெலு
மவன் விடைகொடுப்பக் காசியகன் றகலாத வியல்பு நீடுஞ், சில
மறை முறைநிறையுஞ் செயந்திபுரந் தனையடைந்து சிறந்த ஞான,

மூலமெனுஞ் சண்முகனற் கருணைவா ரியின்றலைமை முழுதும் பெற்றார்.

இ-ள். நாவிருமாதவமுனிவர் காசி அகிலேசர் அடி நாட்பூச் சூடி - (சூட்டிய) எண்முனிவருங் காசியின் அகிலேசக்கடவுளின் பாதங்களாகிய புதுமலர்களைச் சிரமேற்கொண்டு,—ஏலும் அவன் விடைகொடுப்பக் காசி அகன்று - பொருந்திய அவர் அனுமதிகொடுக்கக் காசியை நீங்கி,—அகலாத இயல்பு நீடும் மறைமுறைச் சீலம் நிறையுஞ் செயந்திபுரந்தனை அடைந்து - நீங்காப் பரிசான் உயர்ந்த வைதிகாசாரம் நிரம்பிய செயந்தியை அடைந்து,—சிறந்த ஞானமூலமெனுஞ் சண்முகன் நற்கருணை வாரியின் தலைமை முழுதும் பெற்றார் - சிறந்த ஞானகாரணமாகிய அறுமுகபிரானது நல்லருட்கடலின் முதன்மை முழுதையும் அடைந்தார்கள். எ-று. (௬௮)

பெற்றமா தவர்குமரன் கந்தமா தனவடிவும் பெயர்வி லாது
சுற்றுமா மணிதரங்கந் தூற்றுவத னாரம்ப முதலா ஞான
முற்றுநா லாறான புண்ணியதீர்த் தமுநோக்கி முன்னுங்காதற்
பற்றினாற் றனித்தனியே பேருலகெல் லாமுணரப் பகர்வதானார்.

இ-ள். பெற்ற மாதவர் - (அங்ஙனம்) அடைந்த முனிவர்கள்,—குமரன் கந்தமாதன வடிவும் - குமாரசுவாமியினது கந்தமாதனரூபத்தையும்,—பெயர்விலாது சுற்றும் மாமணி தரங்கந் தூற்றுவதனாரம்ப முதலாம் - விலகாது சூழும் பெருமணிகளைத் திரைகள் தூற்றுகின்ற வதனாரம்பம் முதலிய,—ஞானமுற்று நாலாறான புண்ணிய தீர்த்தமும் நோக்கி - ஞானத்தை முதிர்விக்கும் இருபத்துநான்கு புண்ணியதீர்த்தங்களையும் பார்த்து,—முன்னுங் காதற்பற்றினால் - (அவற்றை) நினைக்கும் அன்புத்தொடர்பினாலே,—தனித்தனியே பேர் உலகெல்லாம் உணரப் பகர்வதானார் - ஒவ்வொருவராய் (அவற்றின்) பெருமையை உலகமெல்லாம் அறியச் சொல்லலாயினார். எ-று. (௬௯)

மண்டுதிரைக் கடலுடுத்த புடவிதனிற் போகமொடு வளங்
கண் முத்தி, யுண்டுபடுத் திடுதலங்கள் பலகோடி யுளவவைக
ளுவமை யில்லாக், கொண்டசுடர் வேற்குமரன் செயந்திபுரந்
தனிற்கீழாங் குறிக்கி னென்றே, துண்டமதிக் கோடீரன் றனைப்
பழிச்சும் வசிட்டமுனி சொற்றான் மாதோ.

இ-ள். மண்டுதிரைக்கடலுடுத்த புடவிதனிற் போகமொடு வளங்கள் முத்தி உண்டுபடுத்திடு தலங்கள் பலகோடி உள - கடல்சூழ்ந்தபூமியிலே போகத்தோடு செல்வங்களையும் முத்தியையும் அருளுந் தலங்கள் அநேககோடி உள்ளன,—அவைகள் குறிக்கின் உவமையில்லாச் சுடர்வேல் கொண்ட குமரன் செயந்திபுரந்தனிற் கீழாம் என்று - அவைகள் ஆராயும்வழி ஒப்பற்ற சோதிவேலைத் தாங்கிய குமாரசுவாமியினது செயந்தியிற் கீழ்ப்பட்டனவாம் என்று,—துண்டமதிக்கோடீரன்றனைப்பழிச்சும் வசிட்டமுனி சொற்றான் - சந்திரசேகரரைத் துதிக்கும் வசிட்டமுனிவன் சொன்னான். எ-று. (௭௦)

பிரமகத்தி கள்ளருந்தல் வேதசாத் திரநிந்தை பேசற்
பாவ, மொருதினத்திற் செயந்திபுரத் துபவசிக்கி லன்னபவ மொ
ழித்து மேலாம், பரகதிக்க ணெய்துவரெய் துவர்நின்னாந் தின்

ணமெனப் பயிலும் வேதம், வரையறுக்குந் தவவாம தேவமுனி
வரன்பகுத்து வகுத்தான் மாதோ.

இ-ள். பிரமகத்தி கள்ளருந்தல் வேதசாத்திரநிந்தை பேசற்பாலர் - பிரமக்கொலை மதுபானம் வேதாகமநிந்தைகூறல் என்னும் பாவங்களையுடையவரும்,—ஒருதினத்திற் செயந்திபுரத்து உபவசிக்கில் அன்னபவம் ஒழித்து மேலாம் பரகதிக்கண் எய்துவர் எய்துவர் - ஒருநாட் செயந்திநகரில் உபவாசஞ்செய்யின் அப்பாவங்களினீங்கி மேலான முத்தியிற் சேர்வார் சேர்வார்,—திண்ணந் திண்ணம் என - உறுதி உறுதி என்று,—வேதம் வரையறுக்குந் தவம்பயிலும் வாமதேவமுனிவரன் பகுத்து வகுத்தான் - வேதவிகித தவங்கள்செய்யும் வாமதேவமுனிவன் பகுத்துக் கூறினான். எ-று. (சக)

படப்பாந்தட் டலைசுமக்கும் பாரிடத்திற் கடவுணதி பலவுஞ்
சூழ்ந்த, கடற்பாலி னுளதீர்த்தத் தொகையுமிவை தரும்பலனுங்
கருதித் தூக்கி, யிடைப்பார்க்கி லினியகந்த புட்கரிணிக் கிணையா
கா வெனச்சா பாலி, திடப்பான்மை யென்றாணை யிட்டுரைத்தான்
யாவருக்குந் தெரிய மாதோ.

இ-ள். படப்பாந்தட்டலைசுமக்கும் பாரிடத்திற் கடவுணதி பலவுஞ் சூழ்ந்த கடற்பாலின் உள தீர்த்தத்தொகையும் இவைதரும் பலனும் - சேடன் தாங்கும் பூமியிலுள்ள திவ்விய நதிகள் பலவற்றையுஞ் சூழ்ந்த கடல்களுள் (விசேடித்து)உள்ள தீர்த்தத்தொகைகளையும் இவையருளும் பயன்களையும்,—கருதித் தூக்கி இடைப் பார்க்கில் - நினைந்து (ஒருதராசுத்தட்டிலே) தூக்கி நிறையைப் பார்த்தால்,—இனிய கந்தபுட்கரிணிக்கு இணையாகா - (மற்றைத்தட்டின்கண்ணதாய) இனிய கந்தபுட்கரிணிக்கு ஒப்பாகா,—எனச் சாபாலி திடப்பான்மையென்று ஆணையிட்டு யாவருக்குந் தெரிய உரைத்தான்-என்று சாபாலிமுனிவன் (இஃது)உறுதிப்பாடென்று சபதமிட்டு எவர்க்கும் விளங்கக் கூறினான். எ-று. (சஉ)

பிறந்தநாண் முதலாவி போங்காறும் பிரயாகை பிரிவின்றா
டிச், சிறந்தவான் கதிதனிலுங் கார்த்திகையிற் கார்த்திகைநாட்
செவ்வேண் முன்ன, ருறைந்தவார் கலிமூழ்கி யுமாபதிசே யைப்
பரவி லுயர்ந்த கோடி, நிறைந்தவான் கதிகாட்டு மாணையெனக்
காசிபனு நிகழ்த்தி னானால்.

இ-ள். கார்த்திகையிற் கார்த்திகைநாட் செவ்வேண்முன்னர் உறைந்த ஆர்கலி மூழ்கி உமாபதிசேயைப் பரவில் - கார்த்திகைமாதக் கார்த்திகை நாளிலே சுவாமிசந்நிதானத்துத்தங்கிய கடலில் ஆடி (அச்)சிவகுமாரரை வழிபடின்,—பிறந்தநாண்முதல் ஆவிபோங்காறும் பிரயாகை பிரிவின்று ஆடிச் சிறந்த வான்கதிதனிலும் - பிறந்தநாண்முதற் சாம்வரை பிரயாக தீர்த்தத்து விலகாது முழுகுதலாற் சிறந்த பெரும்பயனினும்,—கோடி உயர்ந்த நிறைந்த வான் கதி காட்டும் - கோடிமடங்குயர்ந்த நிறைந்த பெரும் பயனை உதவும்,—ஆணை - (இது) சத்தியம்,—எனக் காசிபனும் நிகழ்த்தினான் - என்று காசிபமுனிவனுங் கூறினான். எ-று. (சங)

பருவமொரு மூறளவும் பரம்புமணி கன்னிகையிற் படியு
நீர்மை, யொருதரந்திதன் செயந்திபுரஞ் சென்றுகுமர னேசனடி

யுவந்து வாழ்த்தும், பெருமையினர்க் கெளிதாகக் கிடைக்கு மென மூவாறு பெரும்பு ராணம், விரிவுரைக்கு மாணையென மார்க்கண்ட னாத்தழும்ப விளம்பி னானால்.

இ-ள். ஒருதரந் தென்செயந்திபுரஞ்சென்று குமரேசனடி உவந்து வாழ்த்தும் பெருமையினர்க்கு - ஒருகாற் செயந்திநகரிற் போய்ச் சுவாமி பாதங்களை மகிழ்ந்து வழிபடும் பெருமையுடையார்க்கு,—ஒருநூறு பருவமளவும் பரம்பு மணிகன்னிகையிற் படியும் நீர்மை எளிதாகக் கிடைக்கும் என - நூறுவருஷம்வரையும் (புகழ்)பரவிய மணிகன்னிகையில் ஆடும் பயன் எளிதிற் கிடைக்கும் என்று,—மூவாறுபெரும் புராணம் விரிவுரைக்கும் - பதினெண்புராணங்களும் விரித்துக்கூறும்,—ஆணை என மார்க்கண்டன் நாத்தழும்ப விளம்பினான் - (இது) சத்தியம் என்று மார்க்கண்டமுனிவன் நாத்தழும்புபடக் கூறினான். எ-று. (சச)

மழைதிறம்ப வறந்திறம்பிக் கொடுமைபுரி கொடுங்கால வரம்புள் ளாகத், தழையுமுக மாயிரமும் வரையாம லனமளிக்குந் தவத்தின் மேன்மை, யுழைமகள்கா தலனுறைந்த செயந்திபுரத் தொருதிவச முற்றோ ரெய்தும், விழைவுறுநற் பயனிகரா தாணை யெனக் கௌதமனும் விரித்துச் சொன்னான்.

இ-ள். அறந்திறம்பி மழைதிறம்பக் கொடுமைபுரி கொடுங்காலவரம்பு உள்ளாகத் தழையும் ஆயிரம் உகமும் - தருமம் வழுவலான் மழைதவறக் கொடுமைமிகுந்த கொடிய காலவெல்லை தன்னுள்ளாகச் செறிந்த ஆயிரம் யுகங்களிலும்,—வரையாமல் அனமளிக்குந் தவத்தின் மேன்மை - வரைவின்றி அன்னதானஞ்செய்தலாகிய தவத்தான்வரும் நற்பயனானது,—உழைமகள்காதலன் உறைந்த செயந்திபுரத்து ஒருதிவசம் உற்றோர் எய்தும் விழைவுறு நற்பயன் நிகராது - வள்ளிமணவாளர் வாழ்ந்த செயந்தியில் ஒருநாள் இருந்தவர் பெறும் விரும்பத்தக்க நற்பயனை நிகர்க்கமாட்டாது,—ஆணை எனக் கௌதமனும் விரித்துச் சொன்னான் - (இது)சத்தியம் என்று கௌதமமுனிவனும் விரித்துக் கூறினான். எ-று. (சரு)

தருப்பைநுனி கோலியநீர் தனையருந்திக் காமாதி தணந்து மோன, விருப்பினொடு பருவமொன்று நனிபுரியு மத்தவத்தின் மேன்மை யேமப், பொருப்பரசி மகன்செயந்தி புரத்திருப்பார் தங்கள்வயிற் புகலுங் கோடி, திருப்புகழுண் டாகுமென முற் கலமா முனிவரனுஞ் செப்பி னானால்.

இ-ள். தருப்பைநுனி கோலிய நீர்தனை அருந்தி - தருப்பைநுனியாற் கிரகிக்கப்பட்ட நீரையே உட்கொண்டு,—காமாதி தணந்து - காமமுதலியவற்றை ஒழித்து,—மோன விருப்பினொடு பருவமொன்று நனிபுரியும் அத்தவத்தின் - மௌனம்பூண்டு விருப்பத்தோடு வருஷமொன்றில் இனிது செய்யும் அத்தவத்தின்பயனைப்பார்க்கிலும்,—மேன்மை ஏமப் பொருப்பரசி மகன் செயந்திபுரத்து இருப்பார்தங்கள்வயின் - மேலான பார்வதிகுமாரரது செயந்தியில் வசிப்பார்மாட்டு,—புகலுங் கோடி திருப்புகழ் உண்டாகும் - சொல்லப்படுங் கோடிமடங்கான மெய்ப்பயன் உண்டாம்,—என முற்கலமாமுனிவரனுஞ் செப்பினான் - என்று முற்கலமுனிவனுங் கூறினான். எ-று. (சசு)

வயப்புரவி மகநூறு வாசபே யப்பெயரா மகத்தி னூறு.
வியப்புறுத்த சனனமுத லீறுறுங்கா றுந்தினமு மிக்காச் செய்த
நயப்பினிய செயந்திபுரந் தனிலுறைவார் தினமடைவ ரென்ன
நாட்பூ, வயக்கடவுள் சனகாதி யோகியர்முன் யானுணர வறை
ந்தா னென்ன.

இ-ள். வயப்புரவிமகநூறு வாசபேயப்பெயராமகத்தினூறு-அசுவமேத யாகநூற்றையும் வாசபேயயாகநூற்றையும்,—வியப்புறுத்த சனனமுதல் ஈறுறுங்காறுந் தினமும் மிக்காச் செய்த நயப்பு-புகழப்பட்ட பிறப்புமுதல் இறப்புவரை நாடோறும் மிகச்செய்தலாலாகும் நற்பயனை,—இனிய செயந்திபுரந்தனிலுறைவார் தினம் அடைவர் என்ன - திருச்செயந்திபுரத்தின் வாழ்வார் நாடோறும் பெறுவர் என்று,—நாட்பூவயக்கடவுள் சனகாதி யோகியர்முன் யானுணர அறைந்தான் - மலரயனார் சனகாதிமுனிவர்முன் னே யானறியக் கூறினார். எ-று.

என்ன என்பது வருஞ்செய்யுளிற் கூட்டியுரைக்கப்படும்.　　　(௭௭)

கோசிகனீ தாணையெனப் புகன்றனனு லீதுநிற்கக் குனிப்பி
லாத, மாசிறவச் சுகமுனிகே ளரித்துவா ரத்தின்முகில் வனப்பு
வாய்ந்த, கேசவன்முன் னொருமாக மூழ்குபலன் வேறுளைக்கக்
கிளர்ந்து வாசம், வீசுகந்த புட்கரிணி யொருதரமூழ் குநர்க்கா
கும் விளம்பி னம்மா.

இ-ள். என்ன ஈது ஆணை - என்று சொல்லிய இது சத்தியம்,—எனக் கோசிகன் புகன்றனன் - என்று கௌசிகமுனிவன் கூறினன்,—ஈது நிற்க குனிப்பிலாத மாசில் தவச் சுகமுனி கேள்-இதுநிற்க; கோட்டமற்ற சுத்த தவத்தையுடைய சுகமுனியே கேள்,—அரித்துவாரத்தில் முகில்வனப்பு வாய்ந்த கேசவன் முன் ஒரு மாகம் மூழ்கு பலன்-அரித்துவாரத்திலே முகிற்கா ரொளியார்ந்த விட்டுணுவின் முன்னே ஒரு மாசியில் ஆடும் பலனானது,—விளம்பின்-கூறுகில்,—வேல் துளைக்கக் கிளர்ந்து வாசம்வீசு கந்தபுட்கரிணி ஒருதரம் மூழ்குநர்க்கு ஆகும் - சத்திதுளைத்தலால் ஆகி மணங்கமழுங் கந்த புட்கரிணியிலே ஒருகால் ஆடுபவர்க்கு ஆகும். எ-று.　　　(௭௮)

களவினுற் றிரிவோர்கள் பின்னவர்தங் கன்னியர்பாற் காம
வாஞ்சை, யளவளா வுறுமறையோர் மறையோரை நிந்தனைசெய்
யறிவி லாதோர், தெளிவிலாக் கைமையர்பால் வந்துறுபு ணர
கத்தி செய்வார் வானி, னிளநிலாக் கலைதவழுங் கோடீரர்க் குணர்
வுரைத்த வினைய சேயின்.

சேவடியைப் பணிந்தொருநாட் செயந்திபுரத் தினிதிருப்பாற்
றீமை பூண்ட, பாவவினைக் குறும்பறுத்துப் பரகதிவா னகந்திரு
ந்து பரிவின் வாய்ந்த, மூவிரண்டு முகத்தனடி நிழலிருப்ப ரீது
நிற்க முனிவ கேளென், றுவனுடன் வியாசமுனி பின்னுமொரு
காதையெடுத் தறைவ தானுன்.

இ-ள். களவினுற்றிரிவோர்கள் - களவுசெய்து திரிபவர்களும்,—பின்னவர்தங் கன்னியர்பாற் காமவாஞ்சை அளவளாவுறு மறையோர்-சூத்திரக்

கன்னியரிடத்துக் காமவிருப்பத்தாற் கலக்கும்வேதியரும்,—மறையோரை நிந்தனைசெய் அறிவிலாதோர் - வேதியரை நிந்திக்கும் மூடரும்,—தெளிவிலாக் கைமையர்பால் வந்துறுபுருணகத்திசெய்வார் - தெளிவின்றி விதவையரைக்கலந்து கருச்சிதைத்தல் செய்தவர்களும்,—வானினிளநிலாக் கலைதவழுங் கோடீரர்க்கு உணர்வுரைத்த இளையசேயின் சேவடியைப் பணிந்து ஒருநாட் செயந்திபுரத்து இனிதிருப்பால் - பாலசந்திரசேகரருக்கு உபதேசித்த குமாரசுவாமியின் திருவடிகளை வணங்கிக்கொண்டு ஒருநாளிற் செயந்திபுரத்தில் இனிதிருத்தலினாலே,—தீமைபூண்ட பாவவினைக்குறும்பறுத்து - தீமைபொருந்திய பாவவினையாகிய பகையையறுத்து,—பரகதி வானகந்திருந்து பரிவின் வாய்ந்த மூவிரண்டு முகத்தன் அடிநிழல் இருப்பர் - வீட்டுலகம்போலத்திருந்திய அன்புநிறைந்த ஆறுமுகசாமி பாதநிழலில் இருப்பார்,—ஈதுநிற்க முனிவ கேள் என்று - இதுநிற்க முனிவனே கேள் என்று,—ஆவலுடன் வியாசமுனி பின்னுமொருகாதை எடுத்தறைவதானென் - அவாவோடு வியாசமுனிவன் மற்றுமொரு கதையை எடுத்துக் கூறலாயினன். எ-று. (சக-௫0)

அற்பினுடன் கார்த்திகையிற் கார்த்திகைநாட் செயந்திபுரத் தமரர் போற்றப், பொற்புநிறை திருமுகங்க ளோராறுங் களிசிறப்பப் புகழ்ந்து போற்றாக், கற்பினர்க ளெவரேனுஞ் சந்திரசூரியருலவுங் காறு மாறா, மற்புரைவே சரியாவர் நிச்சயமீ தெனநூல்கள் வகுக்கு மாதோ.

இ-ள். கார்த்திகையிற் கார்த்திகைநாட் செயந்திபுரத்து-கார்த்திகைத் திருக்கார்த்திகையிலே செயந்திபுரத்தின்கண்,—அமரர் போற்றப் பொற்புநிறை திருமுகங்களோராறும் - தேவர் துதிப்பப் பொலிவை (அவர்க்கு) நிறைவிக்கின்ற ஆறுதிருமுகங்களையும்,—அற்பினுடன் களிசிறப்பப் புகழ்ந்து போற்றாக் கற்பினர்கள் எவரேனும் - அன்போடு மகிழ்ச்சிபெருகப் புகழ்ந்து துதியாத கல்விமான்கள் யாவராயினும் (அவர்),—சந்திரசூரியர் உலவுங்காறும் மாறா மற்புரை வேசரியாவர் - சந்திரசூரியர் சஞ்சரிக்குந் துணையும் மாறாது வலிமைபொருந்திய கழுதைகளாவார்,—நிச்சயமீது என நூல்கள் வகுக்கும் - துணிவிதே என்று நூல்கள் கூறும். எ-று. (௫௧)

புழுத்தகரு மலம்புசிக்கும் வாலேய மாயிடினும் பொறையாய் மூத்த, வழுக்குடம்பு செயந்திபுரந் தனிலொழிந்தா லதுவுமொழி யாத ஞானம், பழுத்துமறு சனனமின்றிக் கதியடையுமினுங்காதை பகர்வன் வேத, விழுத்தகுமெய்ப் பொருளாகுமெனச்சுகற்கு வியாசமுனி விரித்தான் மன்னோ.

இ-ள். புழுத்தகருமலம் புசிக்கும் வாலேய மாயிடினும் - புழுத்த கருமலந்தின்னுங் கழுதையேயாயினும்,—பொறையாய் மூத்த அழுக்குடம்பு செயந்திபுரந்தனில் ஒழிந்தால் - பாரமாய் முதிர்ந்த அசுத்தசரீரத்தைச் செயந்தியின்விட்டால்,—அதுவும் ஒழியாத ஞானம் பழுத்து மறுசனனமின்றிக் கதியடையும்-அதுவும் அகலாத அறிவுமுதிர்ந்து மறுபிறப்பின்றி முத்திபெறும்,—இனும் வேதவிழுத்தகு மெய்ப்பொருளாகுங் காதை பகர்வன் என - இன்னும் மறைகளின் சிறந்த உண்மைப்பொருளாகிய கதையைச் சொல்வேன் என்று தொடங்கி,—சுகற்கு வியாசமுனி விரித்தான் - சுகனுக்கு வியாசன் விரித்துரைத்தான். எ-று. (௫௨)

சொல்லருமா காதையொன்று சந்தானப் பிரதமெனத் தொடர்ந்து பேரா, மல்லலொழித் தடியவர்பா லன்புவைக்கு முருகனுளத் தருளே போலா, மெல்லைதவி ரருந்தவத்துச் சுகமுனிகேளிம்பரும்பர்க் கிணங்கக் கையி, னெல்லியென லாகவதன் முறை திறம்பா துலகுணர நிகழ்த்து வேனால்.

இ-ள். எல்லைதவிர் அருந்தவத்துச் சுகமுனி கேள் - அளவிறந்த அருந்தவமுடைய சுகமுனியே கேள்,—சொல் அருமாகாதை சந்தானப் பிரதம் எனத் தொடர்ந்த பேராம் ஒன்று - (யான்) சொல்லும் அரும்பெருங்கதை யாவது சந்தானப்பிரதம் என்றபெயருடைய (விரதம்) ஒன்று,—இம்பர் உம்பர்க்கு இணங்க அல்லலொழித்து அடியவர்பால் அன்புவைக்கும் முருகன் உளத்து அருளேபோலாம் - மண்ணோர்க்கும் விண்ணோர்க்கும் ஏற்ற பெற்றி துன்பந்தீர்த்துத் தொண்டர்மாட்டுக் காதல்செய்யுஞ் சுவாமியின் திருவுளத்துக் கருணையேபோலும்(அது),—கையினெல்லியெனலாக அதன் முறை திறம்பாது உலகுணரநிகழ்த்துவேன் - கரதலாமலகம்போல அதன் கிரமத்தை வழுவாது உலகினரறியக் கூறுவேன். எ-று. (ருங)

அரியநோன் பியற்றுகின்ற காசிபன்கா தற்குரிய வதிதியாகுந், தெரியிழைநன் மைந்தரிடத் திச்சைவைத்துத் திசைமுகத்தன் சிறுரிற் றேர்ந்த, சுருதியாழ் முனிசரணம் பணிந்தேத்தி மைந்தரொடு தூய வாழ்வுந், தருவதா மொருவிரத மெனக்கருள வேண்டுமெனச் சாற்றி னளால்.

இ-ள். அரியநோன்பியற்றுகின்ற காசிபன் காதற்குரிய அதிதியாகுந் தெரியிழை - அருந்தவஞ்செய்யுங் காசிபமுனிவனது அன்பிற்குரிய அதிதி யென்னும் பெண்,—நன்மைந்தரிடத்து இச்சைவைத்து - சற்புத்திரரின் விரும்பி,—திசைமுகத்தன்சிறுரில் சுருதி தேர்ந்த யாழ்முனி சரணம் பணிந்தேத்தி - பிரமபுத்திரருள் வேதமறிந்த நாரதனது பாதங்களை வணங்கித் துதித்து,—மைந்தரொடு தூயவாழ்வுந் தருவதாம் ஒருவிரதம் எனக் கருளவேண்டும் எனச் சாற்றினள் - புத்திரரையுஞ் சுத்தவாழ்க்கையையுந் தரும் ஒருவிரதத்தை எனக்குப் போதித்தல்வேண்டும் என்று கூறினள். எ-று. (ருச)

சாற்றியுடன் வணங்கதிதி யுரைகேட்டுத் தந்திரியாழ் தாங்குஞ் செங்கை, மாற்றருஞ்சீர் நாரதனும் வானவர்தஞ் சிறையகற்றும் வைவே லண்ணற், கேற்றதவ விரதமுனக் கறைகுதுமா லுளங்கவற்சி யின்றி யின்று, கோற்றொடிகேட் டுணர்தியெனச் சந்தானப் பிரதமது கூறுகின்றான்.

இ-ள். சாற்றி உடன்வணங்கு அதிதியுரை கேட்டு - (அங்ஙனங்)கூறி உடனே வணங்கிய அதிதியின்வாக்கைக் கேட்டு,—தந்திரியாழ்தாங்குஞ் செங்கை மாற்றருஞ்சீர் நாரதனும்-வீணைகொண்டகையையுடைய நீங்கரிய சீர்த்திபொருந்திய நாரதனும் (அவளைநோக்கி),—வானவர்தஞ் சிறையகற்றும் வைவேலண்ணற்கு ஏற்ற தவவிரதம் உனக்கு அறைகுதும்-சுரர்சிறை மீட்ட வேற்சுவாமிக்கு உரிய தவமாயவிரதத்தை உனக்குச் சொல்வாம்,—உளங் கவற்சியின்றி இன்று கோற்றொடி கேட்டுணர்தியென - மனங்கவல்

வின்றி இன்றைக்குப் பெண்ணே கேட்டறி என்றுதொடங்கி,—சந்தானப்பிரதமது கூறுகின்றான் - சந்தானப்பிரதவிரதத்தைச் சொல்லாநின்றான். எ-று. (ருரு)

பெட்புடன்கார்த் திகைத்திங்கட் பூரணையிற் செயந்திபுரம் பிறக்குங் கந்த, புட்கரிணி முதலான நாலாறு தீர்த்தமுறை புகுந்து மூழ்கி, விட்புலவர்க் கரசளித்த கௌமாரி குமரவுளம் விரும்பு நோன்பு, கட்பொதிதா மரைத்தாளுக் காகவொரு பருவமுற் றக் கருணை வேண்டும்.

இ-ள். கார்த்திகைத்திங்கட் பூரணையிற் செயந்திபுரம் பெட்புடன் புகுந்து-கார்த்திகைமாதப்பூரணையிற் செயந்திநகரில் இச்சையோடு சேர்ந்து,— பிறக்குங் கந்தபுட்கரிணி முதலான நாலாறு தீர்த்தம் முறை மூழ்கி,—ஸ்ரீ கந்தபுட்கரிணி முதலிய இருபத்துநாலு தீர்த்தங்களின் முறையே ஆடி,— விட்புலவர்க்கு அரசளித்த கௌமாரிகுமர - விண்ணோர்க்கு அரசீந்த உமாசுதரே!,—கட்பொதி தாமரைத் தாளுக்காக உளம் விரும்பும் நோன்பு ஒருபருவம் முற்றக் கருணை வேண்டும் - (உமது) பங்கயபாதப்பிரீதிக்காக மனம் விரும்பிய விரதத்தை ஒருவருஷம் அனுட்டித்தற்கு (உமது) திருவருள் வேண்டும். எ-று. (ருசு)

என்னமறை யாலறைகூஉய் மூவெட்டா கியதீர்த்த மினிதின் மூழ்கிப், பன்னிரண்டு தரங்கோயில் வலஞ்சூழ்ந்து பன்னிரண்டு கண்ணோன் பாத, மன்னிநின்று பன்னிரண்டு தரம்பணிந்து பின்னெழுந்து மவுன மாகத், துன்னியசூர் மாப்பாட்டிற் போய்வடக்கு முகமாகிச் சுவாமி செந்தாள்.

இ-ள். என்ன மறையால் அறைகூஉய் மூவெட்டாகிய தீர்த்தம் இனிதின்மூழ்கி,—என்று மந்திரத்தால் வலிந்தழைத்துக்கொண்டே (மேற்சுட்டியபடி) இருபத்துநான்குதீர்த்தங்களிலும் இனிதாடி,—பன்னிரண்டுதரங் கோயில் வலஞ்சூழ்ந்து - பன்னிருகாற் கோயிலை வலஞ்செய்து,—பன்னிரண்டு கண்ணோன்பாதம் மன்னிநின்று பன்னிரண்டுதரம்பணிந்து பின்னெழுந்து - சுவாமிதிருவடிகண்முன்னே சேர்ந்துநின்று பன்னிருகால் நமஸ்கரித்துப் பின்னரெழுந்து,—மவுனமாகத் துன்னிய சூர்மாப்பாட்டிற்போய்-மௌனத்தோடு பொருந்திய சூரனுகிய மாமரத்தை யழித்தவிடத்திற் சென்று,—வடக்குமுகமாகிச் சுவாமி செந்தாள் - வடக்குமுகமாகிச் சுவாமியினுடைய ஸ்ரீ பாதங்களை. எ-று. (ருஎ)

நோக்கியிருந் தனுமினையிற் குடபாலிற் சுதரிசன நுவலுங் கீழ்பாற், றாக்கருமுச் சூலநடுச் சத்தியிவ்வா றொருமுப்பாற் றரையிற் றீட்டி, யாக்கியசோ டசவிதியாற் பூசனைசெய் தாறிரண்டி னளவை யாகத், தேக்கருளின் வந்தனையாற் றிருக்குமர னாலயத்தின் றிசைபார்த் தன்பால்.

இ-ள். நோக்கி இருந்து - பார்த்துக்கொண்டு இருந்து,—அனுமினையின்-ஆழிவிரலினாலே,—குடபாலிற் சுதரிசனம்-மேல்பாலிற் சக்கரமும்,— நுவலுங் கீழ்பால் தாக்கரு முச்சூலம் - சொல்லப்படுங் கீழ்பாலிலே தாக்கற்கரிய திரிசூலமும்,—நடுச் சத்தி - நடுவிலே வேலும்,—இவ்வாறு ஒரு முப்

யாற்றரையில் தீட்டி - ஆகிய இவ்வடிவங்களை (ச்சுட்டிய) முப்புறமிலங்களி லும் எழுதி,—ஆக்கிய சோடசவிதியால் ஆறிரண்டினளவையாகப் பூசனை செய்து - அமைக்கப்பட்ட பதினாறுபசாரங்களோடு பன்னிரண்டுமுறை (அம்மூன்றற்கும்) பூசைசெய்து,—தேசிகருளின் வந்தனையால் திருக்குமர னாலயத்தின்றிசை அன்பாற் பார்த்து - பூரணகருணையை வாழ்த்துதலோடு சுவாமிதிருக்கோயிற்றிசையை அன்போடு பார்த்து. எ-று. (௫௮)

பேரருட்சுப் பிரமணிய வென்றென்றே மூன்றுதரம் பேசிப் பேசி, யாருமிடற் றெழுமோசை யெவ்வளவோ வவ்வளவு மறை கூஉய் வாகைச், சூருயிர்போய்க் கதியடைந்த வவ்வயிற்றெண் கடன்மூழ்கிச் சுடரு லாய, வீரவடி வேற்கரத்த னாலயத்தின் மவு னமொடு மீண்டும் போகி.

இ-ள். பேரருட் சுப்பிரமணிய என்றென்று மூன்றுதரம் பேசிப் பேசி- கருணைமிக்கதே சுப்பிரமணிய என்று மும்முறை சொல்லி,—ஆரும் மிடற் றோசை எவ்வளவு எழுமோ அவ்வளவும் அறைகூஉய் - (அங்ஙனஞ் சொல் லும்வழி) நிறைந்த மிடற்றொலி எவ்வளவு எழுமோ அத்துணை (உயர்த்தி) வலிந்தழைத்து,—வாகைச் சூருயிர் போய்க் கதியடைந்த அவ்வயின் தெண்கடன்மூழ்கி - வெற்றியையுடைய சூரனுயிர் சென்று கதிபெற்ற அவ் விடத்துக் கடலில் ஆடி,—மீண்டும் மவுனமொடு சுடருலாய வீரவடிவேற் கரத்தன் ஆலயத்திற் போகி-பின்னும் மௌனத்தோடு ஒளியார்ந்த வெற்றி வடிவேற்கடவுளினுடைய திருக்கோயிலின்கட் சென்று. எ-று. (௫௯)

சந்நிதியை யடைந்துகுரு முகமாகக் கும்பமொன்று தாபித் தேத்தித், துன்னுபதி னாறுவிதத் தன்பினிற்பூ சனைபுரிந்து தூநீர்க் கும்ப, மன்னுபுன றனின்மூழ்கி யனைத்தினுக்குங் காரணமாய் மருவி நின்ற, பன்னிருகைக் குமரேசன் திருவடித்தா மரைமல ரைப் பணிந்த பின்னர்.

இ-ள். சந்நிதியை அடைந்து - சந்நிதானஞ் சேர்ந்து,—குருமுகமா கக் கும்பமொன்று தாபித்து ஏத்தி - ஆசாரியர்முன்னாக ஒருகும்பத்தைத் தாபித்துத் துதித்து,—துன்னுபதினாறுவிதத்து அன்பினிற் பூசனைபுரிந்து- சோடசோபசாரங்களால் அன்போடு பூசித்து,—தூநீர்க்கும்ப மன்னுபுன றனின் மூழ்கி - சுத்தமான கும்பஜலத்தின் முழுகி,—அனைத்தினுக்குங் கார ணமாய் மருவிநின்ற பன்னிருகைக் குமரேசன திருவடித்தாமரைமலரைப் பணிந்தபின்னர் - விசுவகாரணமாய்ப் பொருந்திநின்ற துவாதசபுஜ குமார பெருமானுடைய ஸ்ரீ பாதாரவிந்தங்களை வணங்கியபின்னர். எ-று. (௬௦)

அந்தணர்பன் னிருவருக்கு மூட்டுவித்தா றெழுத்துமனத் தழுத்தி வேற்கைக், கந்தனைச்சிந் தனைக்கோயி லூடிருத்தி யுபவ சித்துக் கழித்துப் பின்னர், வந்ததினத் தினிமைதரும் பாரணை பூண் விதிமரபின் வாய்ப்பச் செய்தே, முந்தனைறயு மிவ்வாற்றாற் பன்னிரண்டு பூரணையு முற்றறோற்று.

இ-ள். அந்தணர் பன்னிருவருக்கும் ஊட்டுவித்து - பூசுரர் பன்னிரு வரைப் புசிப்பித்து,—ஆறெழுத்தும் மனத்து அழுத்தி - சடக்கரங்களையும் மனத்துப் பதித்து,—சிந்தனைக் கோயிலூடு வேற்கைக் கந்தனை இருத்தி

உபவசித்துக்கழித்து-(அற்றாகிய) மணமென்னுங் கோயிலில் வேற்கர பெருமானைப் பாவித்து உபவசித்து (அந்நாளை)ப் போக்கி,—பின்னர்வந்த தினத்து இனிமைதரும் பாரணையூண் விதிமரபின் வாய்ப்பச் செய்து - பின்னாளில் இனிய பாரணாபோசனத்தை விதிப்படி சிறப்பச் செய்து,—முந்தனையும் இவ்வாற்றாற் பன்னிரண்டு பூரணையும் முற்ற நோற்று - மேற்சொல்லிய இவ்வகையாற் பன்னிரண்டு பூரணைகளிலும் முற்ற அனுட்டித்து. எ-று. (௬௧)

மற்றவிருச் சிகத்திங்கட் கார்த்திகையி னிவ்விரத மரபினாற்றிக், கற்றமறை யோர்க்கரிய கோதான முதலாய களிக்குந் தானம், முற்றுமகிழ் வொடுபுரிக விந்நெறியி னோற்றவர்கண் முருகப் புத்தேள், ஞற்றதிருக் கருணையினால் வரவரவேண் டியவிருப்பி னுவந்து வாழ்வார்.

இ-ள். மற்ற விருச்சிகத்திங்கட் கார்த்திகையின் இவ்விரதம் மரபின் ஆற்றி - அடுத்த கார்த்திகைமாதக் கார்த்திகையினும் இவ்விரதத்தை முறையே அனுட்டித்து,—கற்ற மறையோர்க்கு அரிய கோதான முதலாய களிக்குந் தானமுற்றும் மகிழ்வொடு புரிக - வித்துவவேதியருக்கு அரிய கோதானமுதலிய உவப்பிக்குந் தானங்களையெல்லாம் பிரீதியொடுசெய்க,—இந்நெறியின் நோற்றவர்கள் - இவ்வாற்றான் அனுட்டித்தவர்கள்,—முருகப் புத்தேள் உற்றதிருக்கருணையினால் வேண்டிய விருப்பின் வரவர உவந்து வாழ்வார் - குமாரசுவாமியினுடைய பெருங்கருணையினால் வேண்டியன வேண்டியாங்கே அடுத்தடுத்துவர மகிழ்ந்து வாழ்வார். எ-று. (௬௨)

இவ்வாறு மறையவர்க ளியற்றினர்க ளாமாகி லிருஞ்சிலேடைக், கொவ்வாத கலையனைத்தும் பெற்றதிக சந்தானத் துவந்து வாழ்வார், மைவாரி யிருநிலத்தி லரசரியற் றினராகின் மருவார்ச் செற்றுச், செவ்வாமன் னிலைபுரிந்து சந்தானம் பலவடைந்து சிறப்பின் வாழ்வார்.

இ-ள். இவ்வாறு மறையவர்கள் இயற்றினர்களாமாகில் - இவ்விரதத்தைப் பிராமணர் அனுட்டிப்பின்,—இருஞ் சிலேடைக்கு ஒவ்வாத கலையனைத்தும் பெற்று அதிகசந்தானத்து உவந்து வாழ்வார் - பெரிய சிலேஷார்த்தங்களால் (யார்க்கும் எளிதின்) இசையாத நூல்களையெல்லாம் உணர்ந்து மிக்க சந்ததியோடு மகிழ்ந்து வாழ்வார்,—அரசர் இயற்றினராகில் - அரசர் அனுட்டிப்பின்,—மருவார்ச் செற்று - பகைவரை வென்று,—மைவாரி இருநிலத்திற் செவ்வாம் மன்னிலை புரிந்து - கடல்சூழ்ந்த நிலமுழுவதினுஞ் செவ்வே செல்லும் இராச்சியத்தைச் செய்து,—சந்தானம் பல அடைந்து சிறப்பின் வாழ்வார் - சந்ததி பலவற்றைப் பெற்றுச் சிறப்போடு வாழ்வார். எ-று. (௬௩)

வணிகரிந்நோன் பியற்றிடினற் றனதனைப்போ லாய்மகவின் மகிழ்வார் மற்றைத், தனிவருமபின் னவரியற்றி னளவறுநல் வளத்தொடுசந் தானவாழ்க்கை, யணிபொருந்தி யினிதிருப்பா ரெனமொழிந்தா னாதன்மற் றதிதி கேட்டுப், பணிதல்புரிந் தாசிரிய னாதயா முனியாகப் பாவித் தேத்தி.

இ-ள். வணிகர் இந்நோன்பு இயற்றிடின் - வைசியர் இவ்விரதத்தை அனுட்டிப்பின்,—நற்றனதனைப்போலாய் மகவின் மகிழ்வார் - குபேரன் போன்று சந்ததியாலும் உவப்பர்,—தணிவரும் பின்னவர் இயற்றின் - குறைவற்ற சூத்திரர் அனுட்டிப்பின்,—அளவறு நல்வளத்தொடு சந்தான வாழ்க்கையணிபொருந்தி இனிதிருப்பார் - அளவற்ற செல்வங்களோடு சந்ததிவாழ்க்கைச்சிறப்பையுஞ்சேர்ந்து இன்புற்றிருப்பார்,—என நாரதன் மொழிந்தான்-என்று நாரதன் சொன்னான்,—அதிதி கேட்டு நாரதமாமுனி ஆசிரியனைப் பாவித்துப் பணிதல்புரிந்து ஏத்தி-அதிதி (அவ்வரலாற்றைக்) கேட்டு நாரதமகாமுனிவனைக் குருவாகப்பாவித்து வணங்கித் துதித்து. எ-று. (௬௪)

ஓர்பருவ மதிதியருஞ் சந்தான நோன்பியற்றி யொளிர்வேற் சேயின், சீரருளி னிந்திரனை யுபேந்திரனை மகிழ்சிறப்பத் திருவி னீன்று, சோர்வொழிந்தின் றளவுமுற்றா ளாதலினா லிவ்விரதந் துணிவி னோற்றோர், போரயிலாற் காளாகி யன்னவன்றாள் வீட் டின்பம் புகுவர் மாதோ.

இ-ள். ஓர்பருவமதிதி அருஞ் சந்தானநோன்பு இயற்றி - ஒருவருடம் மேற்சொல்லியபடி அரிய சந்தானப்பிரத விரதத்தை அனுட்டித்து,—ஒளிர்வேற்சேயின் சீரருளின் - வேற்பெருமானது திருவருளால்,—இந்திரனை உபேந்திரனை மகிழ்சிறப்பத் திருவின் ஈன்று-இந்திரனையும் உபேந்திரனையும் பிரீதிபெருகச் செல்வத்தோடு பெற்று,—சோர்வொழிந்து இன்றளவும் உற்றாள் - தளர்வின்றி இன்றுவரை வாழ்ந்தாள்,—ஆதலினால் இவ்விரதந் துணிவின் நோற்றோர் - ஆகையால் இவ்விரதத்தைத் துணிவோடு அனுட்டித்தவர்,—போரயிலாற்கு ஆளாகி அன்னவன் தாள் வீட்டின்பம் புகுவர் - வேற்பெருமானுக்கு அடியவராய் அவர் திருவடிக்கீழ் முத்தியின்பத்தை அடைவர். எ-று. (௬௫)

ஈதுநிற்கச் சுகமுனிகே ளின்னுமொரு காதையுண்டா லியம்பு கேன்யான், மாதவத்தின் முறைதிறம்பா வொருமறையோன் மறைநான்கு மங்க மாறு, மோதியுணர்ந் துண்மையெல்லா மாராய் ந்து தன்னுள்ளத் தொருங்கே யாக்கி, வேதியரெல் லாமுணரத் தானுணர்த்திப் புகழ்நிறுவி வியப்பு மேலாய்.

இ-ள். ஈதுநிற்க சுகமுனிகேள் இன்னுமொரு காதை உண்டு யான் இயம்புகேன் - இதுநிற்க, சுகமுனியே கேள் மேலுமொரு கதை உளது யான் சொல்லுவேன்,—மாதவத்தின் முறைதிறம்பா ஒருமறையோன் - பெருந்தவத்தை (முற்பிறப்பில்)உடைய முறைவழுவாத ஒரு வேதியன்,—மறைநான்கும் அங்கமாறும் ஓதியுணர்ந்து - வேதநான்கும் அங்கமாறுங் கற்றுணர்ந்து,—உண்மையெல்லாம் ஆராய்ந்து தன்னுள்ளத்து ஒருங்கே யாக்கி - மெய்ப்பொருள்களையெல்லாம் ஆராய்ந்து தன்னுள்ளே ஒருங்கமைத்து,—தான் வேதியரெல்லாமுணர உணர்த்தி - தானே (ஏனை) வேதியரெல்லாம் அறிய அறிவித்து,—வியப்பு மேலாய்ப் புகழ்நிறுவி - (பலருந் தன்னை) வியத்தலான் மேம்பட்டுக் கீர்த்தியை நிறுத்தி. எ-று. ()

புகலுறுவை திகஞ்சைவம் வைட்டிணவம் வாமமிசை பொ ருந்து மேலோர், பகர்சவுர முயர்காணா பத்தியமே யாருகப் பகுத்

துக் காட்டுந், தகையமத விகற்பமெலாந் தானுணர்ந்தும் பிறர்க் குரைத்துந் தனக்குத் தானே, நிகரொருவ ரில்லாது புகழ்நிலவாற் புடவிதனி னெடிது வாழ்ந்தான்.

இ-ள். புகலுறுவைதிக ........யாறுக - சொல்லப்படும் வைதிகமுஞ் சைவமும் வைணவமும் வாமமும் புகழ்பொருந்திய ஆன்றோராற் சொல் லப்படுஞ் சவுரமும் உயர்ந்த காணபத்தியமும் என ஆறுகவும்,—பகுத்துக் காட்டுந்தகைய மதவிகற்பமெலாம் - (பிறிதுபடியாகவும்) பகுத்துவிளக்கப் படு மியல்புடைய மதபேதங்களையெல்லாம்,—தானுணர்ந்தும் பிறர்க்குரை த்தும் - தானறிந்தும் பிறர்க்கறிவித்தும்,—தனக்குத்தானே நிகர் - தனக் குத்தானே ஒப்பாகி,—ஒருவர் இல்லாது - (மற்றுமொப்பாவார்) ஒருவரும் இன்றி,—புகழ்நிலவாற் புடவிதனில் நெடிது வாழ்ந்தான் - புகழொளி யோடு நிலவுலகத்தில் நெடுநாள் வாழ்ந்தான். எ-று. (சுஎ)

பையரா முடிதாங்கு நெடும்புடவிக் கண்வதிந்து பவத்தின் மூத்துச், செய்யதாய் தந்தைகுரு சிவனயன்மான் மறையோர்க டெய்வஞ் சார்ந்த, துய்யதா மந்திரமா தீர்த்தமருந் தவந்தருமஞ் சுருதிநன்னூல், பொய்யிலா மறைவேள்வி யருந்ததிக்கற் பினில் வாய்ந்த புரைதீர்மாதர்.

சொற்றிடுமிவ் வாறனைத்து நிந்தனையே யென்றுமனந் துணி ந்து கண்பா, லுற்றனமெய் காணாத வுறுபொருளா னவைபொய்யா முண்மை ஞானம், பெற்றவருஞ் சுவர்க்கமொடு நிரயமுள வென் பரவட் பெயர் விலாது, முற்றவிருந் திவணடைந்தோ மெனவொரு வர் சகந்தெரிய மொழிந்து ளார்யார்.

இ-ள். பையரா முடிதாங்கு நெடும்புடவிக்கண் வதிந்து - சேடன் முடியிற்றாங்கிய நீணிலத்தில் (அவ்வேதியன் அவ்வாறு) வாழ்ந்தும்,— பவத்தின் மூத்து - (முற்றவக்குறையாற் காலக்கிரமத்தின் நன்மதிதேயப்) பாவத்தின் முதிர்ந்து,—செய்யதாய்......புரைதீர்மாதர் இவ்வாறு சொற் றிடும் அனைத்தும் நிந்தனையே என்று - பெற்றதாய் தகப்பன் குரு சிவ பெருமான் பிரமா விட்டுணு வேதியர்கள் கடவுளைச்சார்ந்த சுத்தமான மந்திரங்கள் மகாதீர்த்தங்கள் அரிய தவந் தருமம் வேதநூல் பொய்யில் லாத வைதிகயாகங்கள் அருந்ததிபோலுங் கற்பிற்சிறந்த குற்றமற்ற மகளிர் என்றிவ்வாறு சொல்லப்பட்ட அனைத்தையும் நிந்தித்தலைப் பொருந்தி,— கண்பால் மனந்துணிந்து உற்றன மெய் - கண்களாற் கொள்ளப்பட்டு மனத் திலே துணியப்பட்டுள்ளனவே மெய்,—காணாத உறுபொருளானவை பொய்யாம் - கண்காணாதனவாய் உளவெனப்படும் பொருள்கள் பொய் யாம,—உண்மைஞானம்பெற்ற அருஞ் சுவர்க்கமொடு நிரயம் உளவென்பர்- மெய்யறிவாற் பெறப்படும் அரிய சுவர்க்கமும் (பாவத்தாற் பெறப்படும்) நரக மும் உள்ளனவென்பார்,—அவட்பெயர்விலாது முற்றவிருந்து இவண் அடைந்தோம் எனச் சகந்தெரிய மொழிந்துளார் ஒருவர் யார் - ஆண்டு விலகாது முழுதுமிருந்து ஈண்டுச் சார்ந்தாம் என்று உலகறியச் சொன்ன ஒருவர் யார். எ-று.

[யாருமில்லையேயாகலின் அவை பொய்யே என்பது குறிப் பெச்சம்.] (சுஅ-சுகூ)

எனநினைந்து தன்வேத முறைதிறம்பி யறம்பாவத் தியல்போ
ராது, சனனநெடும் பொறைதாங்கி நெடுங்காலங் கொடுந்தொழி
லிற் றானே மூத்து, மனனுணர்வு தள்ளாட நாக்குழற நரைமுதிர்
ச்சி வந்தூழ் முற்ற, வினையுழன்று சுழன்றகறங் காஞ்சடலச் சுமை
யதனை விட்டான் மாதோ.

இ-ள். என நினைந்து - [illegible] எண்ணி,—தன்வேத முறைதிறம்பி - தனது வைதிகநெறியின் [illegible] றம்பாவத் தியல்பு ஓராது - புண்ணிய பாவவியல்பை நினையாது,—[illegible]டும்பொறை தாங்கி - பிறவியாகிய நெடிய பாரத்தைச் சு[illegible],—நெடுங்காலங் கொடுந்தொழிலிற் றானே மூத்து - நெடுநாட் கொடுந்தொழில்களிற்றானே முதிர்ந்து,—மனனுணர்வு தள்ளாட நாக்குழற நரைமுதிர்ச்சி வந்து - உள்ளறிவு தளர உரைதடுமாற நரையோடு மூப்புவந்து,—ஊழ்முற்ற - விதிமுடிதலால்,—வினை உழன்று சுழன்ற கறங்காஞ் சடலச் சுமையதனை விட்டான் - வினையால் வருந்திச் சுழன்ற காற்றாடிபோலாகிய உடற்சுமையை நீக்கினான். எ-று. (௭௦)

ஆவிபோம் பொழுதியம படர்பாச மெடுத்தழுந்தக் கட்டிக்
கால, னேவலா லங்கங்கு விடவிருபத் தெட்டாக வியம்புங்
கோடி, பாவமா கியநிரயத் தூடழுந்திப் பின்வழுதிப் பாண்டி
நாட்டிற், றாவருக் கொடுங்குரல்வாய் வாலேய மாய்மீண்டு சனித்
தான் மாதோ.

இ-ள். ஆவிபோம்பொழுது இயமபடர் பாசமெடுத்து அழுந்தக்கட்டிக் காலனேவலால் அங்கங்குவிட - (அவன் அங்ஙனம்) இறந்தபோது இயம தூதர்கள் பாசங்கொண்டு இறுகக்கட்டி(க்கொண்டுபோய்) இயமனதாஞ் ஞையால் அங்கங்கேவிட,—இருபத்தெட்டுக்கோடியாக இயம்பும் பாவமாகிய நிரயத்தூடு அழுந்தி - இருபத்தெட்டுக்கோடியென்று சொல்லப்படும் பாவப்பயன்களாகிய நரகங்களில் வருந்தி,—பின் மீண்டு வழுதிப் பாண்டி நாட்டில் தாவருக் கொடுங்குரல்வாய் வாலேயமாய்ச் சனித்தான் - பின்பு திரும்பிவந்து பாண்டியனுடைய தென்னாட்டிலே கேடொழியாத கொடுமையான குரல்பொருந்திய வாயையுடைய கழுதையாய்ப் பிறந்தான்.எ-று.

யாவருக்கு மருவருக்கும் வாலேய வுருத்தாங்கி யிருந்த
காலத், தோவறமுன் குருமுகமாய் வேதமதி கரித்ததவத் துயர்ச்
சியாலே, நாவலந்தீ வுக்கணித்தாஞ் சிந்துபுரந் தனிலடைந்து நவை
யின் மூத்து, மேவருமச் சடச்சும்மைப் பெரும்பாரந் தனைநீத்து
விழுந்த தன்றே.

இ-ள். யாவருக்கும் அருவருக்கும் வாலேயவுருத்தாங்கி இருந்தகாலத்து-எவர்க்கும் வெறுப்பாகிய கழுதையுருவங்கொண்டு இருந்தநாளிலே,—ஓ அற - (அச்சீவன் செய்தபாவங்கள் அனுபவிக்கப்பட்டு) ஒழிதலாற் (சேடம்) இல்லையாக,—முன் குருமுகமாய் வேதம் அதிகரித்த தவத்து உயர்ச்சியால்-முற்பிறவியிலே (ஆதியிற்சிலநாள்) ஆசாரியர்களுக்கு முகம் போன்றவனாய் வைதிகத்தில் அதிகரித்தமையாகிய புண்ணியத்தின் உயர்ச்சியினால்,—நாவலந்தீவுக்கு அணித்தாஞ் சிந்துபுரந்தனில் அடைந்து - சம்புத்தீவுக்கு அணியாந்தன்மையையுடைத்தான செயந்திபுரத்திற் சேர்ந்து,—விழுந்து நவையின்மூத்து மேவரும் அச்சடச்சும்மைப் பெரும்பாரந்

தலை நீத்தது - விழுந்த குற்றத்தின் முதிர்ந்து பொருந்திய அச்சரீரச் சுமையாகிய பெருமபாரத்தை விட்டது. எ-று. (எஉ)

சிந்துபுரந்தனி லாவிவிட்டொழிந்த தன்மையினாற் சிறந்த
ஞானக், கந்தனரு ளான்ஞானக் கருத்தடைந்து வருங்காம தே
னுத் தாரு, முந்துமரம் பையர்சூழத் தேமேறிக் கொண்டுவண்டு
மொய்த்தூ டாடுங், கந்தமல ராசனத்தா னுலகடைந்திந் நாளள
வுங் களிப்பா னுய்ந்தான். —தா
—தனக்

இ-ள். சிந்துபுரந்தனில் ஆவிவிட்டொழி... தன்மையினால் - செயந்தியிலே தன் உயிர் (கழுதையுடலை) விட்டுநீங்கியவாற்றால்,—சிறந்த ஞானக்கந்தனருளால - சிறந்த ஞானநாயகராகிய சுவாமியின் கிருபையால்,—ஞானக்கருத்தடைந்து-ஞானத்தைக் கருத்திற் சேர்ந்து,—வருங்காமதேனுத்தாரு முந்துமரம்பையர் சூழ - (திருவருளால்)வந்த சுரபியுந் தேவதருவும் அரமகளிருஞ் சூழ,—தேமேறிக்கொண்டு-விமானத்திவர்ந்து,—வண்டு மொய்த்து ஊடு ஆடுங் கந்தமலராசனத்தான் உலகடைந்து - வண்டுகண்மொய்த்து உள்ளேவிளையாடுஞ் சுகந்தபுஷ்பாசனத்தையுடைய பிரமனது உலகத்தை அடைந்து,—இந்நாளளவுங் களிப்பானுய்ந்தான்-இன்றுவரை மகிழ்ச்சியோடு உய்ந்தான். எ-று. (எங)

அருந்தவத்துக் கொருநாஞ்சி லாகியதென் செயந்திபுரத்
தமர்ந்து வேதம், பொருந்தவுரைத் தாறுமுகப் பெருமான்ற னிரு
சரணப் போது போற்றி, யிருந்தெவர்க்கும் பசியாம லனங்கொடு
த்துப் பின்னுடலத் திடும்பை நீத்த, பெருந்தவத்தர் பெரும்பேற்
றை யெம்மனோர்க் கெடுத்தெடுத்துப் பேசொ ணாதால்.

இ-ள். அருந்தவத்துக்கு ஒருநாஞ்சிலாகிய தென்செயந்திபுரத்து அமர்ந்து - அரிய தவங்கட்கு ஓரரணமாகிய திருச்செந்தூரிலிருந்து,—வேதம் பொருந்த உரைத்து - சுருதிகளை (ச்சுரம்) அமைய ஓதி,—ஆறுமுகப்பெருமான்றன் இருசரணப் போது போற்றி - சண்முகசுவாமியின் உபயபாதாரவிந்தங்களையுந் துதித்து,—இருந்த எவர்க்கும் பசியாமல் அனங்கொடுத்து-(அங்ஙனம்) இருந்த யாவர்க்கும் பசியாவண்ணம் போசனங்கொடுத்து,—பின் உடலத்து இடும்பை நீத்த - பின்னர் (அங்கே) உடம்போடு (பிறவித்) துன்பத்தையும் நீக்கிய,—பெருந்தவத்தர் பெரும்பேற்றை எம்மனோர்க்கு எடுத்தெடுத்துப் பேசொணாது - மகாதவமுடையாரது பெருமையாகிய சித்தி எம்மனோர்களால் எடுத்தெடுத்துரைக்கலாகாததாம். (எச)

பலகதை உபதேசித்த அத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம். எஉ௫.

---

## கசு-வது. இயமனுக்குச் சிந்துபுரவைபவம் உரைத்த அத்தியாயம்.

அருந்தவ நெடுங்கட லளந்துணர் வியாசன்
றிருந்துசுக மாமுனிவ செப்புவது கேளென்

திருந்துணர்வி னுலகை மேழிலுயர் சிந்து
புரந்தனை யடைந்தவர் புகும்பரி சுரைப்பாம்.

இ-ள். அருந்தவ நெடுங்கட லளந்துணர் வியாசன் - அரிய தவநீடாழியை வரையறுத்தறிந்த வியாசன்,—திருந்துசுக மாமுனிவ செப்புவது கேள் என்று - திருந்திய சுகமுனிவனே சொல்வதைக் கேள் என்று தொடங்கி,—இருந்த உணர்வினுல் உலகமேழில் உயர் சிந்துபுரந்தனை அடைந்தவர் புகும்பரிசு உரைப்பான்-(முன்னை நல்வினைவயத்தானே தம்மொட்டுத்) தங்கிய ஞானத்தினலே ஏழுலகங்களுள்ளும் (ஒப்பின்றி) உயர்ந்த செயந்தியைச் சேர்ந்தவர் எய்தும் (சிறப்புத்) தலைமையைக் கூறுவான். எ-று. (க)

சங்கமெறி வாரிதி தனிற்பொருளை நாடி
வங்கமொடு சென்றுபல வாணிக முயன்றே
கங்குல்பக லுந்துயி லகன்றுகட லூடே
பொங்குபல மீனொடு புலாலினிது தின்பான்.

இ-ள். சங்கமெறி வாரிதிதனிற் பொருளை நாடி வங்கமொடு சென்று - சங்குகளைவீசுங் கடலிலே பொருளை விரும்பித் தோணியோடு போய்,—பல வாணிகம் முயன்று - பலசெட்டுக்களை நடத்தி,—கங்குல் பகலுந்துயிலகன்று - இரவும் பகலும் உறங்கலொழிந்து,—கடலூடே பொங்கு பல மீனொடு புலால் இனிது தின்பான் - கடலிற்பொலிந்த பல மீன்களையும் (ஏனை)மாமிசங்களையும் இனிது புசிப்பவனாகிய. எ-று. (உ)

கற்றுணர்வி லாதுள மிலேச்சனது காலை
யற்றமறு சேனையுட னாழியிடை நாவா
யுற்றபல வாணிகர்க ளுள்ளநிதி யாவுஞ்
செற்றமொ டெடுத்தவர்கள் சென்னிதுணி விப்பான்.

இ-ள். கற்றுணர்விலாதுள மிலேச்சன் - கற்றறிவில்லாத (ஒரு) மிலேச்சன்,—அதுகாலை - (தான் கடலிற்றிரியும்) அக்காலங்களிலே,—அற்றமறு சேனையுடன் - சோர்வற்ற (தன்) சேனைகளோடு,—ஆழியிடை நாவாய் உற்ற பல வாணிகர்கள் உள்ளநிதியாவுஞ் செற்றமொடு எடுத்து - கடலின் மரக்கலங்களிற் சேர்ந்த பலவணிகர்மாட்டும் உள்ள திரவியங்களையெல்லாங் கோபத்தோடு கவர்ந்து,—அவர்கள் சென்னி துணிவிப்பான் - அவர்சிரங்களை அறுப்பிப்பவன். எ-று. (ங)

தீமைபுரி வித்துமறை செல்வழி நடாத்து
மோமமறை வாணர்சினை போடுறு பசுக்க
டாமற வொறுத்துள தசைக்கறி சமைத்தே
காமுற நுகர்ந்துகிளை கட்குநுகர் விப்பான்.

இ-ள். மறைசெல்வழி நடாத்தும் ஓம மறைவாணர் தீமைபுரிவித்து - வைதிகமார்க்கத்தானே நடத்தப்படும் ஓமங்களையுடைய வேதியருக்குத் தீங்குசெய்வித்து,—சினையோடுறு பசுக்கடாம் அறவொறுத்து - கருவோடுற்ற பசுக்களையுங் கொன்று,—உள தசைக்கறி சமைத்தே காமுற நுகர்ந்து - உள்ள மாமிசங்களைக் கறியாக்கி விரும்பி உண்டு,—கிளைகட்கும் நுகர்விப்பான் - சுற்றத்தார்க்கும் உண்பிப்பான். எ-று. (ச)

தன்னுள புலைச்சமய மேசமய மென்றென்
றுன்னிநிக நின்றிவளர் வுற்றசம யத்தோர்
சென்னியற வெட்டிய செருக்கினொடு பாவந்
துன்னுமுட லச்சுமை சுமந்துபல காலம்.

இ-ள். தன்னுள புலைச்சமயமே சமயம் என்றென்றுன்னி - தன் புலைக் கொள்கையே நற்கொள்கை என்று பலகானினைந்து,—நிகரின்றி வளர் வுற்ற சமயத்தோர் சென்னி அறவெட்டிய செருக்கினொடு - ஒப்பின்றி வளர்ந்த (சற்)சமயத்தவர்களுடைய சிரங்களை அறுத்த செருக்கோடு,—பாவந்துன்னும் உடலச்சுமை பலகாலஞ் சுமந்து - பாவஞ்செறிந்த சரீர பாரத்தை நெடுங்காலஞ் சுமந்துகொண்டு. எ-று. (௫)

திரிந்துழியொர் காலமுயர் சிந்துபுர நண்ணி
யருந்தவர் வணங்குறுபொன் னாலயமுன் னாகி
விரைந்திவிட மேதென வினாவியுள் வெருண்டே
புரந்தர னிறைஞ்சுவளர் கோயிலிடை போனான்.

இ-ள். திரிந்துழி ஒர்காலம் உயர் சிந்துபுரம் நண்ணி - திரிந்தகாலங்களில் ஒருநாள் (அதிட்டவயத்தால்) உயர்ந்த செயந்திநகரை அடைந்து,—அருந்தவர் வணங்குறு பொன்னாலய முன்னாகி - முனிவர்வணங்குந் திருக்கோயிலின் முற்பட்டு,—இவ்விடமேது என வினாவி உள்வெருண்டு - இவ்விடம் யாது என்று கேட்டுக்கொண்டு மனஞ் சினந்து,—புரந்தரன் இறைஞ்சுவளர் கோயிலிடை விரைந்து போனான் - இந்திரனால் வணங்கப்பட்ட திருக்கோயிலின் விரைந்து சென்றான். எ-று. (௬)

போனபொழு தாறுமுக புங்கவனை யேத்தி,
மோனமொடு நான்மறைசொன் முப்புவன வைப்புத்
தானமெனு மந்தணர்க டம்மையெதிர் நோக்கி
யானவுரு வேதெனலு மந்தணர்கள் சொல்வார்.

இ-ள். போனபொழுது - (அங்ஙனஞ்) சென்றபோது,—ஆறுமுக புங்கவனை மோனமொடு ஏத்தி நான்மறை சொல் முப்புவனவைப்புத் தானமெனுமந்தணர்கடம்மை எதிர்நோக்கி - சண்முகசுவாமியை மௌனத்தோடு துதித்துச் சதுர்வேதங்களை ஓதுகின்ற திரிசுவதந்திரப்பிராமணரை எதிர்பார்த்து,—ஆனவுரு ஏது எனலும் - இங்குள்ளவுருவம் யாது என்று கேட்க,—அந்தணர்கள் சொல்வார் - பிராமணர் கூறுவார். எ-று. (௭)

சங்கர னுதற்கண்வரு சண்முகவ னாமால்
வெங்கய முகாசுரனை வென்றமர ரெல்லா
மெங்கள்குழு வுக்கரச னென்னவொரு பேருந்
துங்கமொடு பெற்றுள சுவாமியிவ னாமால்.

இ-ள். இவன் சங்கரன் நுதற்கண்வரு சண்முகவனும் - இவர் சிவபெருமானது நெற்றிக்கண்ணின் வந்த ஆறுமுக சுவாமியாம்,—வெங்கய முகாசுரனை வென்று அமரரெல்லாம் எங்கள் குழுவுக்கு அரசன் என்ன - தாரகாசுரனை வெல்லுதலால் விண்ணவரெல்லாம் எங்கள்சேனைக்கு (நீரே) தலைவர் என்று சொல்ல,—ஒருபேருந் துங்கமொடு பெற்றுள சுவாமி ஆம் - (தேவசேனாபதி என்னும்) ஒருநாமத்தையும் உயர்ச்சியோடு பெற்ற சுவாமியும் ஆம். எ-று. (௮)

போற்றுமெளி யோர்களிடர் போக்கியருண் ஞான
மாற்றரிய சீரொடு வழங்கவுள வாஞ்சை
யாற்றலொ டிருந்தபொரு ளாகுமென முன்னஞ்
சாற்றுமறை யோருரை தடுத்துமுரை சாற்றும்.

அரனெவ னவன்பெறுவ தாகவரும் வேற்கை
முருகனெவ னென்றுள முனிந்துநெடு வாளாஞ்
சுரிகையொடு சீறின னடந்துசுடர் வேலோ
னருகுசெல வோடிவிழுந் தாவியு மழிந்தான்.

இ-ள். போற்றும் எளியோர்கள் இடர் போக்கி - வழிபடும் எளியருக்கு இடர்களைத் தொலைத்து,—அருள் ஞானம் மாற்றரிய சீரொடு உள வாஞ்சை வழங்க - கருணையினால் ஞானத்தையும் மாற்றலாகாத (பேரின்பச்) சிறப்பையும் (இம்மையின்) மனவிருப்பங்களையும் உதவும்பொருட்டு,—ஆற்றலொடு இருந்த பொருளாகும் - சத்தியோடு இருந்த பரம்பொருளுமாம்,—என முன்னம் - என்றுசொல்லுமுன்னரே,—சாற்றுமறையோர் உரை தடுத்து - (அங்ஙனஞ்) சொல்லிய வேதியரது வாக்கைத் தடுத்து,—உம் உரை சாற்றும் அரன் எவன் அவன் பெறுவதாக வரும் வேற்கை முருகன் எவன் என்று - உமது வாக்காற் சொல்லிய சிவபெருமான் யார் அவர் பெறவந்த சத்திஹஸ்தராகிய முருகபிரான் யார் என்று,—உளமுனிந்து - மனஞ்சினந்து,—நெடுவாளாஞ் சுரிகையொடு சீறினன் நடந்து - நெடியவாளாகிய சுரிகையோடு சீறிச் சென்று,—சுடர்வேலோன் அருகு செல ஓடி விழுந்து ஆவியுமழிந்தான் - கதிர்வேற்பெருமானின் பக்கத்திற் போமாறு ஓடி விழுந்து உயிர்நீக்கினான். எ-று. (௯-௧0)

ஆவியழி போதுவிழு மவ்வளவி லாதி
மூவிரு முகத்தனடி முன்னமுடி யாத
பாவிதர முன்புவிழு பான்மைபணி வோரின்
மேவரவி ருந்ததெழு மேதினி நடுங்க.

இ-ள். ஆவியழிபோது விழுமவ்வளவில் - உயிர்நீங்கும்போது விழுந்த அப்பொழுதிலே,—ஆதி மூவிருமுகத்தன் அடிமுன்னம் முடியாத பாவி தரம் உனபு எழு மேதினி நடுங்க விழுபான்மை - முதல்வராகிய சண்முகபிரானது திருவடிகளின் சந்நிதியிலே அழியாப்பாவமுடைய (அ)வன் (தன்)வலிமையை நினைந்து ஏழ்புவனமும் நடுங்க விழுந்த தன்மையானது,—பணிவோரின் மேவர இருந்தது - நமஸ்கரிப்பவருடைய வீழ்ச்சி போலப் பொருந்த இருந்தது. எ-று. (௧௧)

பாசமொடு காலபடர் பற்றவரும் வேலை
யீசன்மக னைத்தொழு திருந்தகண நாதர்
மாசறுகு மாரனடி வாழ்வுபெறு வோனை
நீசர்விடு மென்றவரை நீக்கினர்கண் மாதோ.

இ-ள். பாசமொடு காலபடர் பற்றவரு காலை - பாசத்தோடு யமதூதர் (அப்பாவியுயிரைக்)கொள்ள வந்தபோது,—ஈசன்மகனைத் தொழுதிருந்த கணநாதர் - சிவகுமாரரை வழிபட்டிருந்த கணநாதர்கள்,—நீசர் மாசறு குமாரனடிவாழ்வு பெறுவோனை விடும் என்று - நீசரே சுத்தமான சுவாமி

பாதவாழ்க்கையைப் பெறுபவ(னாய இவ)னை விடுங்கள் என்று சொல்லி,—அவனை நீக்கினார்கள் - அவர்களை அகற்றினார்கள். எ-று. (௧௨)

அன்னவர்க டென்றிசையி னாணைகொடு போற்று
மன்னனை வணங்கவர லாறுபுகல் வீரா
லென்னமுறை கூறவலி யேற்றமுகில் போலாய்ச்
சென்னியு நடுங்கவுயர் சிந்துபுர முற்றான்.

இ-ள் அன்னவர்கள் தென்றிசையின் ஆணைகொடு போற்றும் மன்னனை வணங்க - அவர்கள் தெற்குத்திக்கிலே (சிவபிரானது) ஆஞ்ஞையினாற் காக்கின்ற அரசனை வணங்க,—வரலாறு புகல்வீர் என்ன - (அவன்) சம்பவத்தைக் கூறுமின் என்று கேட்ப,—முறை கூற - (அவர்கள்) முறையே சொல்ல,—வலிமையற்ற முகில்போலாய்ச சென்னி நடுங்க உயர் சிந்துபுரம் உற்றான் - (கேட்ட அவ்யமன்) காற்றிற்பட்ட முகில்போல (விரைந்து) சிரநடுங்க உயர்ந்த செயந்தியிற் சேர்ந்தான். எ-று. (௧௩)

உற்றபொழு தாறுமுக முள்ளகும ரேசன்
பற்றினொடு வாழ்திரி சுதந்திரர் பராவ
முற்றவுணர் கும்பமுனி மோனமுனி வோர்கள்
கற்றசன காதியர் களிப்புடன் வணங்க.

இ-ள். உற்றபொழுது - (யமன் அங்குச்) சேர்ந்தபொழுது,—ஆறுமுகமுள்ள குமரேசன்-சண்முககுமாரசுவாமி,—பற்றினொடுவாழ் திரிசுதந்திரர் பராவ - விருப்பத்தோடு வாழ்கின்ற திரிசுவதந்திரர் துதிக்க,—முற்றவுணர் கும்பமுனி கற்ற சனகாதியர் மோன முனிவோர்கள் களிப்புடன் வணங்க - முழுதுமறிந்த அகத்தியனும் படித்த சனகன்முதலிய மௌனத்தையுடைய முனிவர்களும் மகிழ்ச்சியோடு வணங்க. எ-று. (௧௪)

மானருண் மடக்கொடியும் வானரச னீன்ற
வேனகுக ருங்கண்மத வேழமட மாதுந்
தானமொ டிரண்டுபுற முந்தழுவ வேல்வேள்
ஞானமுறு முத்திரையி னன்குற விருந்தான்.

இ-ள். மானருண் மடக்கொடியும் வானரசனீன்ற வேனகுகருங்கண் மத வேழமடமாதுந் தானமொடு இரண்டுபுறமுந் தழுவ - வள்ளியம்மையாரும் இந்திரன்பெற்ற வேற்கருங்கண்களையுடைய தெய்வயானையம்மையாருஞ் சத்தியோடு இருபுடையுந் தழுவ,—வேல்வேள் ஞானமுறு முத்திரையின் நன்குறவிருந்தான் - வேற்சுவாமி ஞானமுத்திரையோடு இனிதிருந்தார். எ-று. (௧௫)

நன்றியுட னாறுமுக நாயகனி ரண்டு
மன்றன்மல ராஞ்சரண வாரிசமு னாகத்
தென்றிசை புரக்குமிறை சென்னிபணிந் தேத்தி
நின்றுகும ரேசனடி நேர்கொடு துதித்தான்.

இ-ள். தென்றிசை புரக்குமிறை - யமனானவன்,—ஆறுமுக நாயகன் இரண்டு மன்றன்மலராஞ்சரணவாரிசம்-சண்முகசுவாமியின் உபயபாதாரவிந்தங்களையும்,—முனாக நன்றியுடன் சென்னி பணிந்து ஏத்தி நின்று -

சந்நிதியிலே (பத்தி)நலத்தோடு தலையால்வணங்கித் துதித்து நின்று,—குமரேசனடி நேர்கொடு துதித்தான - (மீண்டும் அச்) சுவாமிபாதங்களை இலக்காக்கித் துதித்தான். எ-று. (கசு)

தேவரிடர் தீர்த்தவுணர் தேவியர் கழுத்தின்
மேவுகல னீக்குமறை மிக்கவுரை காணு
மூவிருமு கக்கடவுண் முண்டக மலர்த்தாட்
பூவென வியந்துதரு மன்புகல்வ தானுன்.

மூவிரு முகக்கடவுண் முண்டகமலர்த்தாட்பூ - ஆறுமுகசுவாமின் பங்கயபாதங்கள்,—தேவர் இடர்தீர்தது அவுணர்தேவியா கழுத்தின் மேவு கலன் நீக்கும் - தேவரது துயரையொழிதது அசுரபன்னியருடைய கண்டங்களின் மங்கலசூத்திரங்களை நீக்கும்,—மிக்க மறையுரை காணு உயாந்த சுருதிவாக்குக்களானும உணரப்படா,—என - என்று,—தருமன வியந்து புகல்வதானுன் - இயமன் துதிசெய்தான. எ-று. (கஎ)

இழுதையர்க ளாயிடினு மெந்தைசர ணத்தே
தொழுமவரை நான்மறை துதித்தமுதி யோரும்
வழிபடவி யற்றிய மயூரவரை மாதின்
குழவியென வாழ்த்தியுயர் கூற்றிறை துதித்தான்.

இ-ள். இழுதையர்களாயிடினுஞ் சரணத்தே தொழுமவரை - ஏழைகளாயினுந் திருவடிகளின் வணங்குபவரை,—நான்மறை துதித்த முதியோரும் வழிபட - சதுர்வேதங்களாலே தோத்திரஞ்செய்த (செயந்தியை எய்தல் பெறுரான) ஆனரோர்களும் வழிபடுமாறு,—இயற்றிய மயூர எந்தை - (மேன்மை)செய்த மயிலினையுடைய எந்தாய்,—வரைமாதின் குழவி - பார்வதிகுமாரரே,—என-என்று,—உயர்கூற்றிறை வாழ்த்தித் துதிததான்,—உயர்ந்த யமராசன் வழிபட்டுத் துதித்தான். எ-று (கஅ)

நாடரிய தேவபல நாயகனு மாசப்
பீடுபெறு நிற்கொடு பெரும்பகை யொழித்த
நீடமரர் வானிலைமை நிற்கவருள் செய்த
வாடன்முரு காவெனவு மந்தக னறைந்தான்.

இ-ள். நாடரிய தேவபலநாயகனும் ஆக - அறிதலரிய தேவசேனுபதி என்னும் பெயரும் (உமக்கு) ஆமாறு,—பீடுபெறு நிற்கொடு பெரும்பகை அழித்த நீடமரர் - பெருமைபெற்ற உம்மாற் பெரும்பகைவரை நீக்கிய நெடியவிண்ணேர்,—வான நிலைமைநிற்க அருள்செய்த ஆடன்முருகா - விண்ணில் நிலைநிற்க அருளிய திருவிளையாடலையுடைய முருகபிரனே,—எனவும் அந்தகன் அறைந்தான் - என்றும் இயமன் கூறினுன். எ-று. ()

பகவதி தருங்குக பராவருமை ஞான
வகவிரு ளகற்றுமரு ஞேதயசொ லாறு
முகக்குருப ராவுனது முண்டக மலர்த்தாள்
புகலெனவும் யாமிய புலத்திறை பணிந்தான்.

இ-ள். பகவதிதருங் குக பரா - பார்வதிபயந்த குகரே பரமரே,—அருமைஞானம் அகவிருள் அகற்றும் அருஞேதய-அரிய ஞான(க்கிரண)ங்

களால் அகவிருளை நீக்குஞ் செஞ்சூரியரே,—சொல் ஆறுமுக குருபரா - புகழப்படுஞ் சண்முகவீர பரமகுருவே,—உனது முண்டகமலர்த்தாள் புகல் - உம்முடைய பங்கயபாதங்களே சரணம்,—எனவும் யாமியபுலத் துறை பணிந்தான் - என்றுந் தென்றிசைக்கோன் வணங்கினன். எ-று. ()

தண்ணளி யிலாதகொடுந் தானவர்க ளாய
புண்ணொடு மழுந்துபுல வர்க்கரு மருந்தாம்
பண்ணவ கயம்பரம வென்றுரை பராவி
யெண்ணரிய கூற்றுவ னிறைஞ்சியவ னின்றான்.

இ-ள். தண்ணளியிலாத கொடுந் தானவர்களாய புண்ணொடு அழுந்து புலவர்க்கு அருமருந்தாம் பண்ணவ-அருளற்ற கொடிய அசுரராலாய புண்ணின் அழுந்திய தேவர்க்கு அருமருந்தான கடவுளே,—கயம் பரம-தெய்வ யானை காந்தரே,—என்று உரைபராவி எண்ணரிய கூற்றுவன் இறைஞ்சி அவண் நின்றான் - என்று துதித்து நினைத்தற்கரிய இயமன் வணங்கி ஆண்டு நின்றான். எ-று. (உக)

நின்றநம னைக்குமர னீடருளி னோக்கி
யுன்றுதியி னானம துளங்களி சிறந்தா
மின்றுவர லாறுபகர் வாயென வியம்பத்
தென்றிசை புரக்குமிறை செப்புத றுணிந்தான்.

இ-ள். நின்ற நமனைக் குமரன் நீடருளின் நோக்கி - நின்ற இயமனைச் சுவாமி பெருங்கருணையோடு பார்த்து,—உன்றுதியினால் நமதுளங் களிசிறந்தாம் - உன்தோத்திரங்களால் நம்மனமகிழ்பெருகினோம்,—இன்று வரலாறு பகர்வாய் எனவியம்ப - இப்போது வந்தபடியைச் சொல்க என்றுகூற,—தென்றிசைபுரக்குமிறை செப்புதறுணிந்தான் - இயமன் சொல்லத்துணிந்தான். எ-று. (உஉ)

பிறைமவுலி யானது பெருங்கருணை யாலே
யறமொடு கொடும்பவ மடைந்தவர்கள் யாரு
நிறைதரு சுவர்க்கநிர யம்படர வீரே
ழுறுகாிமு றைகவுறு வித்திடல்செய் வேனால்.

இ-ள். பிறைமவுலியானது பெருங்கருணையாலே-சந்திரசேகரருடைய பேரருளினால்,—அறமொடு கொடும்பவம் அடைந்தவர்கள் யாரும் - புண்ணியங்களையும் பாவங்களையும் ஈட்டினவர்களெல்லாரையும்,—நிறைதரு சுவர்க்கம் நிரயம் படர - நிறைந்த சுவர்க்கத்தும் நரகத்தும் (அவர் முறையே)செல்லுமாறு,—ஈரேழ் முன்னூறு கரியாக உறுவித்திடல் செய்வேன் - (மனுக்கள்)பதினால்வரும் முற்பட்ட சான்றாகச் செலுத்திவிடுவேன். எ-று.

இந்தமுறை தானுமியல் வேதியரு முன்னூல்
விந்தையுணர் கின்றமனு வேந்தரு மருங்கே
வந்துட னிருப்பமதி மாலைபுனை வோர்க்கென்
சிந்தனை வெருண்டவர் வினைச்செய லுணர்ந்தே.

இ-ள். இந்தமுறைதானும் - இங்ஙனமாகிய (எனது) நீதியும்,—இயல் வேதியரும் முன்னூல்விந்தை உணர்கின்ற மனுவேந்தரும் மருங்கேவந்து உடனிருப்ப - உண்மையறிவினரும் ஆதிநூற்கல்வியை அறிகின்ற மனு

ராசரும் பக்கத்துவந்து கூடியிருப்ப,—மதிமாலைபுனைவோர்க்கு என்சிந்தனை வெருண்டு - சந்திரசேகரருக்கு என்மனமஞ்சி,—அவர் வினைச்செயல் உணர்ந்தே - அ(வ்வச்சி)வர்களுடைய வினைவகைகளை அறிந்தே (நடத்தப்படுவதாம்.) எ-று. (௨௪)

நீதிபுரி தன்மையுடை யேனெறியி னில்லாப்
பாதக னியற்றியிடு பாதகமு ணர்ந்தே
யேதமொ டிவன்றனை யழைத்திடு மெனமுன்
றூதரை விடுத்தனன் விடுத்தவர் தொடாமுன்.

இ-ள். நீதிபுரி தன்மையுடையேன் - (இங்ஙனமே) நீதியை நடத்துமியல்புடையே(னாகியநா)ன்,—நெறியினில்லாப் பாதகன் இயற்றியிடுபாதகம் உணர்ந்து-நல்வழியில்லாத மிலேச்சன்செய்த பாதகங்களை அறிந்து,—இவன்றனை ஏதமொடு அழைத்திடும் எனமுன் தூதரை விடுத்தனன் - இவனைத் துன்பஞ்செய்தலோடு அழைத்துவாரும் என்று முன்னமே தூதரை அனுப்பினேன்,—விடுத்தவர் தொடாமுன் - அனுப்பப்பட்டவர் தீண்டு முன்பே. எ-று. (௨௫)

நின்னருகு நின்றுள நெருங்குகண நாத
ரென்னுடைய தூதரை யிடித்தொரு மிலேச்சன்
றன்னையுன் னடிக்கமல வீடுதழு விப்ப
தென்னென நமன்புகலு மின்சொலது கேளா.

இ-ள். நின்னருகு நின்றுள நெருங்கு கணநாதர் - நும்பாங்கரில் நின்ற நெருங்கிய கணநாதர்கள்,—என்னுடைய தூதரை இடித்து - என் தூதர்களை அகற்றிவிட்டு,—ஒருமிலேச்சன்றன்னை உன்னடிக்கமல வீடு தழுவிப்பது என் - ஒரு மிலேச்சனை உமது பாதாரவிந்த முத்தியிற் சேர்ப்பது என்னையோ,—என நமன் புகலும் இன்சொலது கேளா - என்று இயமன் சொல்லிய இன்சொல்லை(ச் சுவாமியார்) கேட்டு. எ-று. (௨௬)

ஞானமுள ராயிடினு ஞானமில ரேனு
மானின்விழி யார்மிசை மயங்கினர்க ளேனு
மேனைய வழுக்கின்முறை நாடினர்க ளேனு
மானத மியற்றொழி லடைந்திலர்க ளேனும்.

இ-ள். ஞானமுளராயிடினும் ஞானமிலரேனும் - ஞானமுள்ளாராயினும் ஞானமில்லாராயினும்,—மானின்விழியார்மிசை மயங்கினர்களேனும் - மகளிரின் மயங்கினோராயினும்,—ஏனைய அழுக்கின்முறை நாடினர்களேனும் - மற்றைய அசுத்தநெறிகளை விரும்பினோராயினும்,—தம் இயல் ஆன தொழில் அடைந்திலர்களேனும் - தங்கள் (சாதியாச்சிரம) இயல்புக்கு ஆகிய தொழில்களைச் சாராதாராயினும். எ-று. (௨௭)

முந்துபவ மேழ்முறை முயன்றுளர்க ளேனுஞ்
சுந்தர மறைத்திரி சுதந்திரர்கள் சூழ்ந்து
வந்துதொழு நம்முக மலர்ச்சியது நோக்கிற்
சிந்துபுரம் வந்தினி திருக்குமவர் செய்த.

தீவினை யொழித்தினிய செம்மையின ராகி
யாவலொடு நந்தம தடிக்கமல நீழன்
மேவரி ருப்பரிவன் மேயமுக மாறுந்
தாவற விழித்தவுடன் சாய்ந்துயிர் விடுத்தான்.

இ-ள். ஊழ்முறை முந்துபவம் முயன்றுளர்களேனும் - ஊழ்நெறியான் முற்பட்ட பாவங்களை முயன்றாராயினும்,—சிந்துபுரம் வந்து - (அவர்தாஞ்) செயந்திபுரத்து வந்து,—சுந்தரமறைத்திரிசுதந்திரர்கள் சூழ்ந்துவந்து தொழும் நம் முகமலர்ச்சியது நோக்கின் - அழகிய வைதிகத் திரிசுவதந்திரர்கள் வலஞ்செய்து வணங்கும் நமது முகமலர்ச்சியைத் தரிசிப்பாராயின்,—இனிதிருக்கும் அவர் செய்த தீவினை ஒழித்து - நன்மை இருத்தற்கிடமான அவர்கள் செய்த பாவங்களை அகன்று,—இனிய செம்மையினராகி - இனிய(ஞானச்)செப்பமுடையராய்,—ஆவலொடு நந்தமது அடிக்கமலநீழல் மேவர இருப்பர் - அவாவோடு நமதுபாதாரவிந்த நிழலிலே மேன்மையாக அமர்வர்,—இவன் மேய முகமாறுந் தாவற விழித்தவுடன் சாய்ந்து உயிர் விடுத்தான் - இ(ம்மிலேச்சனான)வன் பொருந்திய (நமது)ஆறுமுகங்களையுங் குற்றமறத் தரிசித்தவுடனே விழுந்து இறந்தான். எ-று. (௨௮-௨௯)

வருதிரிசு தந்திரர்முன் வாயுரைபு கன்றான்
விரைவினுயர் நம்முகம் விருப்பினொடு பார்த்தான்
பரிபவ மொழித்துமறை பண்பினி னிறைஞ்சு
மிருசரண தாமரை யிருங்கதி யடைந்தான்.

இ-ள். வரு திரிசுதந்திரர்முன் வாயுரை புகன்றான் - வந்து திரிசுவதந்திரர்களின்முன்னே வாய்மொழி கூறினான்,—விரைவின் உயர்நம்முகம் விருப்பினொடு பார்த்தான் - விரைவாக உயர்ந்த நம்முகத்தை விருப்பத்தோடு பார்த்தான்,—பரிபவம் ஒழித்து-(ஆதலாலவன்)இழிவுகளை அகன்று,—மறை பண்பினின் இறைஞ்சும் இருசரண தாமரை இருங்கதி அடைந்தான் - வேதங்களாலுங் குணத்தோடு வணங்கப்படுகின்ற உபயபாதாரவிந்தங்களின் வீட்டைப் பெற்றான். எ-று. (௩௦)

ஆணைநம தாணையென வாறுமுக வேலோ
னேனுடைய கூற்றின்முக மின்னருளி னோக்கித்
தாணுவின் மகன்றகைய தண்ணளி சுரப்ப
வாணிநிக ரானமணி நாவினின் மகிழ்ந்தே.

இ-ள். நமது ஆணை ஆணை என - (இது) நம்முடைய ஆஞ்ஞையே ஆஞ்ஞையே என்று சொல்லி,—ஆறுமுகவேலோன் தாணுவின்மகன் - சண்முகவேலாயுதராகிய சிவகுமாரர்,—ஏனுடைய கூற்றின்முகந் தகைய தண்ணளிசுரப்ப இன்னருளின் நோக்கி - வலிமையுடைய யமனது முகத்தை(அதன்கண்ணே) தக்க அன்புபெருக இனிய கருணையோடு பார்த்து,—மணிநிகரான நாவின் வாணியின் மகிழ்ந்து - இரத்தினம்போன்ற(அவனது) நாக்கின் (அங்கீகார)வாக்கான் மகிழ்ந்து. எ-று. (௩௧)

அந்தகனை நோக்கிமுரு கேசனறி விப்பான்
சிந்துபுர மானது சிறப்பினொரு மூவர்
முந்துறுத வத்தரொடு நாமுமுறை யாக
விந்தையுடன் வாய்த்துதி விளம்புபதி யாமால்.

இ-ள். அந்தகனை நோக்கி முருகேசன் அறிவிப்பான்-(மேலும்) இயமனைப் பார்த்துச் சுவாமி அறிவிப்பார்,—சிந்துபுரமானது - செயந்திபுரமானது,—சிறப்பின் ஒருமூவர் மூந்நூறு தவத்தரொடு நாமும் முறையாக விக்தையுடன் வாய்த்துதி விளம்புபதியாம்-சிறந்த திரிமூர்த்திகளும் பழைய முனிவர்களும் நாமும் முறைப்படி அறிவினோடு வாயாற் புகழ்ந்துகூறிய நகரமாம். எ-று. (௩உ)

வேறு.

என்று பன்னிரு தடம்புயக் குமரவே ளெதிராய்
நின்ற கூற்றுவ னுணர்தரக் கூறின னிலையார்
தென்றி சைக்கஞ் னறுமுகன் சேவடித் துணையை
நன்றி பெற்றகை யுச்சிமேற் கூப்பின னடந்தான்.

இ-ள். என்று பன்னிருதடம்புயக்குமரவேள் எதிராய்நின்ற கூற்றுவன் உணர்தரக் கூறினன் - இவ்வாறு குமாரசுவாமி எதிர்நின்ற இயமன் அறியச்சொன்னார்,—நிலையார் தென்றிசைக்கஞன் - நின்ற இயமன் (அது கேட்டு),—அறுமுகன் சேவடித்துணையை நன்றிபெற்றகை உச்சிமேற் கூப்பினன் நடந்தான் - சுவாமியின் ஸ்ரீபாதமிரண்டையும் (இலக்காக்கி) நன்மைபெற்ற கைகளை உச்சிமேற்குவித்து (வணங்கி)ச்சென்றான். எ-று. ()

ஆய தன்மையாற் சுகமுனி யறிதர வியாசன்
பாய தெண்டிரைப் புணரிசூழ் செயந்தியம் பதிதான்
சேயின் மிக்கசா யுச்சியத் திருநெடும் பதியா
மேய சத்தியஞ் சத்திய மெனவுரை விடுத்தான்.

இ-ள். ஆயதன்மையால் - ஆதலினாலே,—பாய தெண்டிரைப்புணரிசூழ் செயந்தியம்பதிதான் - பரந்த கடல்சூழ்ந்த செயந்திநகர்தானே,—மிக்க சேயின்சாயுச்சியத் திருநெடும்பதியாம் - உயர்ந்த சுப்பிரமணிய சாயுச்சியத்தைத்தரும் அதிவிசிட்டஸ்தலமாம்,—மேய சத்தியஞ் சத்தியம்-(இது) இயைந்த உண்மையே உண்மையே,—எனச் சுகமுனி அறிதர வியாசன் உரைவிடுத்தான் - என்று சுகமுனிவன் அறியுமாறு வியாசமுனிவன் கூறினான். எ-று. (௩௪)

**இயமனுக்குச் சிந்துபுரவைபவம் உரைத்த அத்தியாயம் முற்றிற்று.**

ஆ திருவிருத்தம். எ௫௧.

---

## ௧எ-வது. பிரமன் உபதேசித்த அத்தியாயம்.

விரிந்த சீர்மறை நான்கெனத் தொகுத்தசீர் வியாசன்
றெரிந்த மேலவர் புகழ்சுக முனிவனுட் டெளியப்
பரிந்த மாதவச் செயந்தியம் பதியின்மான் மியமே
பொருந்து காதையொன் றுணர்த்துவன் கேளெனப் புகல்வான்.

இ-ள். விரிந்த சீர்மறை நான்கெனத்தொகுத்த சீர்வியாசன்,—பரந்த வேதங்களை நான்காகப்பகுத்த ஸ்ரீவியாசமுனிவன்,—தெரிந்த மேலவர்

புகழ் சுகமுனிவன் உட்டெளிய - அறிந்த ஆன்றோரால் புகழப்படுஞ் சுக முனிவன் மனந்தேற,—பரிந்தமாதவச் செயந்தியம்பதியின் மான்மியம் பொருந்து காதையொன்று உணர்த்துவன் கேள் எனப் புகல்வான் - காதலிக்கப்பட்ட பெருந்தவப்பயனை செயந்திநகரின் மான்மியத்தைத் தெரிக்குங் கதையொன்றைச் சொல்லுவேன் கேள் என்றுதொடங்கிக் கூறுவான். எ-று. (௧)

பாவ காரியாய் வணிகர்தங் குலத்திலுற் பவித்து
மூவர் தம்மையும் பூசுரர் தம்மையு முதுபார்
மேவு மாதிரத் திறையவர் தம்மையு மேலா
மேவர் தம்மையு நிந்தனை புரிந்துமூத் திருந்தான்.

இ-ள். வணிகர்தங்குலத்தில் உற்பவித்து-வைசியகுலத்திலே பிறந்து,—பாவகாரியாய் - பாவங்கள்செய்பவனாய்,—மூவர்தம்மையும் பூசுரர்தம்மையும் - திரிமூர்த்திகளையும் அந்தணரையும்,—முதுபார்மேவு (இறையவர்தம்மையும்) மாதிரத்து இறையவர் தம்மையும் - பழைய பூமியிற்பொருந்திய அரசரையுந் திக்குக்களின் பாலகர்களையும்,—மேலா மேவர்தம்மையும் - மேலோரெவரையும்,—நிந்தனைபுரிந்து மூத்திருந்தான்-நிந்தித்து முதிர்ச்சியுடையவனாயிருந்தவன். எ-று. (௨)

வாணி கத்தினிற் சோரவா ணிகமன மதித்துத்
தூணி விற்பவர் முன்னதிற் பாதியுஞ் சுருக்கிப்
பேணி விற்பவ னாய்தரு மாப்பொனிற் பிரித்துக்
காணி கைக்கொளச் செட்டியா பாரமுங் கற்றான்.

இ-ள். வாணிகத்தினிற் சோரவாணிகம் மனமதித்து - வர்த்தகத்திற் புகுந்து கரவடவர்த்தகத்தையே உள்ளெண்ணி,—தூணிவிற்பவர்முன் அதிற் பாதியுஞ் சுருக்கிப் பேணி விற்பவன் - (குறித்தவிலைக்குத்) தூணியளவு பண்டத்தை விற்பவர் முன்னே (தான்போலியளவினால்) அதின் பாதியையுங் குறைத்து விரும்பி விற்பவன்,—ஆய்தரு மாப்பொனிற் பிரித்துக் காணி கைக்கொளச் செட்டியாபாரமுங் கற்றான் - ஆராயப்படும் ஒருமாப்பொன்னிற் பிரித்துக் காணிபொன்னைக் கவருமாறு செட்டுத்தொழிலும் பயின்றவன். எ-று. (௩)

தானு மீகில னீகுநர் தம்மையுந் தடுக்கு
மீனன் புண்ணிய பாவமா யுள்ளன விரண்டு
மாநி லத்திடைப் பொய்யெனப் புகன்றபேழ் வாயான்
ஞான மானமூ தறிவொரீ யவங்கொடு நடப்பான்.

இ-ள். தானும் ஈகிலன் ஈகுநர்தம்மையுந் தடுக்கும் ஈனன் - தானுங் கொடானாய்க் கொடுப்பவரையுந் தடுக்கும் இழிஞன்,—மாநிலத்திடைப் புண்ணியபாவமாயுள்ளனவிரண்டும் பொய்யெனப் புகன்ற பேழ்வாயான் - பெரியபூமியிலே புண்ணியபாவங்களிரண்டும் பொய்யென்று கூறிய பெருவாயினன்,—ஞானமான மூதறிவு ஒரீஇ அவங்கொடு நடப்பான் - ஞானமாகிய பழையவறிவை நீக்கித் தீமைகொண்டு ஒழுகுபவன். எ-று. (௪)

வருண நான்கையு மொன்றென நின்றவ மதிக்கு
மிருண யந்தமே தாருணர் வினன் வருணநான் கினிலும்

பொருணா யந்தவொன் றின்றுநால் வகைபெனப் பூண்டோர்
தருண மோர்ந்துகூத் தாடுவோர் வேடத்தின் றகைமை.

இ-ள். வருணநான்கினிலும் நயந்தது ஒன்று பொருள் இன்று-நான்கு வருணங்களிலும் (ஒன்றின்மற்றொன்று வேறும்வண்ணம்) விசேடித்த ஒரு பொருள் இல்லை (சராசரஞ்திகள் எவற்றினும் ஒருபடியனமெ),—நால்வகையென வேடத்தின்றகைமை பூண்டோர் தருணமோர்ந்து கூத்தாடுவோர் - நான்குவகையென்று (வெவ்வேறு) வேடவியல்புகளைத் தரித்தவர்கள் சமயம் பார்த்துக் கூத்தாடுபவரே(போல்வார் ஆகையால்),—வருணநான்கும் ஒன்று - நான்குவருணங்களும் (உண்மையால்) ஒன்றே,—என நின்று அவமதிக்கும் இருள் நயந்தது உணர்வினன் - என்று நின்று இகழும் மயக்கஞ் செறிந்த உணர்வினையுடையான். எ-று. (௫)

பெரிய வான்சிலை யுருவமும் பிறங்குதா மிரத்தி
னுரிய சீருரு வத்தையுந் தெய்வமென் றுரைக்கி
னரர்க டம்மொடு நவிற்றுத லில்லையா னரலைப்
பரவை மாநிலத் தியல்புள ரென்பது படிறே.

இ-ள். பெரியவான் சிலையுருவமும் - மிகப்பெரிய சிலாவிக்கிரகங்களையும்,—பிறங்கு தாமிரத்தின் உரிய சீருருவத்தையும் - விளங்குகின்ற செம்பானுய உரிய திருவடிவங்களையும்,—தெய்வமென்று உரைக்கின் - கடவுளென்று கூறுகில்,—நரர்கடம்மொடு நவிற்றுதல் இல்லை - (அவைகள்) மனிதரோடு பேசுவதில்லை (ஆகையால் அது பொருந்தாது),—நரலைப் பரவை மாநிலத்து - கடல்சூழ்ந்த பரந்த பேருலகில்,—இயல்பு உளரென்பது படிறே - (அவர்) உண்மையால் உள்ளவரென்பது பொய்யே. எ-று.

தாய ராவதுந் தந்தைய ராவதுந் தவத்திற்
சேய ராவதுஞ் சுற்றம தாவதுஞ் சிறப்பின்
மேய தேவர்க ளாவதுந் தேவரின் மேலாந்
தூய மாதவ ராவது மாய்விலாச் சொன்னம்.

இ-ள். தாயராவதுந் ... ... ... தூயமாதவராவதும் - அன்னையராவதும் அப்பராவதுந் தவச்செம்மையையுடையராவதும் பந்துக்களாவதுஞ் சிறப்புப்பொருந்திய விண்ணவராவதும் விண்ணவரின்மிக்க சத்தரிஷிகளாவதும்,—மாய்விலாச் சொன்னம் - அழிவற்ற பொன்னேயாம். எ-று. ()

என்ன நெஞ்சினுள் யாரையும் யாவையு மிகழ்ந்து
பன்ன கப்பிட ராற்றிய புடவிக்கோர் பரமாய்
நன்ன லத்துட னிருந்தன னிருந்தநாட் பலபோய்ப்
பொன்னி னிச்சையாற் கப்பலிற் புணரிநீந் தினனால்.

இ-ள். என்ன நெஞ்சினுள் யாரையும் யாவையும் இகழ்ந்து - என்று தன்னுள்ளே எவரையும் எவற்றையும் அவமதித்து,—பன்னகம் பிடர் ஆற்றிய புடவிக்கு ஓர்பரமாய்-சேடன் பிடராற்றுங்கியபூமிக்கு ஒருபாரமாய்,—நன்னலத்துடன் இருந்தனன் - நல்லின்பத்தோடு இருந்தான்,—இருந்தநாட் பலபோய் - இருந்த நாட்கள் பல கழிய,—பொன்னினிச்சையாற் கப்பலிற் புணரி நீந்தினன் - பொன்னாசையாற் கப்பலேறிக் கடல்கடந்தான். எ-று.

புணரி சூழ்ந்ததீ பாந்தரத் திடமெலாம் புகுந்து
வணிகர் தன்மையிற் பலபொருள் யாவையு மாறிக்
கணித மில்பொரு டேடிநீள் கப்பலி லேறித்
தணிவ ருங்களி கொண்டுதண் கடனடுச் சார்ந்தான்.

இ-ள். புணரிசூழ்ந்த தீபாந்தரத்திடமெலாம் புகுந்து - கடல் சூழ்ந்த தீவுகளிலெல்லாம் போய்,—வணிகர்தன்மையிற் பலபொருள்யாவையும் மாறி - வாணிகத்திற் பலபண்டங்களையெல்லாம் மாறி,—கணிதமில் பொருள் தேடி - அளவிறந்த பொருள்களைத் தேடிக்கொண்டு,—தணிவருங் களிகொண்டு நீள் கப்பலில் ஏறித் தண் கடனடுச் சார்ந்தான் - ஆரூமகிழ்ச்சிகொண்டு உயர்ந்தகப்பலில் ஏறிச் சமுத்திர நடுவிற் சார்ந்தான். எ-று.

வங்க நீரிடைச் செல்லுழி மழையுமோ வாது
பொங்க மாருதச் சூறையு மெறிதரப் புணரி
தங்கு தோணியுந் தகர்ந்தது நிதியமுஞ் சலதி
யங்கு வீழ்தர வணிகனும் புணரியு ளாழ்ந்தான்.

இ-ள். வங்கம் நீரிடைச் செல்லுழி - கப்பல் கடலிற்போம்போது,—மழையும் ஓவாது பொங்கச் சூறைமாருதமும் எறிதர - மழையும் ஒழியாது பொழியச் சூறைக்காற்றும் வீச,—புணரிதங்கு தோணியுந் தகர்ந்தது - கடலில் இருந்த கப்பலும் உடைந்தது,—நிதியமுஞ் சலதி வீழ்தர வணிகனும் புணரியுள் ஆழ்ந்தான் - திரவியங்களுங் கடலில் வீழ (அவ்) வணிகனுங் கடலுள் அமிழ்ந்தினன். எ-று. (௬0)

வீழ்ந்த செட்டியு நீந்தினன் மிதந்தனன் விரிநீர்
சூழ்ந்த தெண்டிரைத் தரங்கநீ ரீர்த்திடச் சுரர்தாந்
தாழ்ந்த சீர்வத னாரம்ப சன்னிதி சார
வாழ்ந்த பேருணர் வொழிதரச் சென்றது வாழ்நாள்.

இ-ள். வீழ்ந்த செட்டியும் நீந்தினன் மிதந்தனன் - விழுந்த வணிகனும் நீந்தி மிதந்தவனாய்,—விரிநீர்சூழ்ந்த தெண்டிரைத் தரங்கநீர் ஈர்த்திட - சமுத்திரத்துத் திரைநீர் இழுத்துவர,—சுரர்தாந்தாழ்ந்த சீர் வதனாரம்ப சன்னிதிசார - தேவராலுந்தாழப்பட்ட சீர்த்தியையுடைய முகாரம்பத்துச் (சுவாமி)சன்னிதானத்துச் சார்ந்தபொழுது,—வாழ்ந்த பேருணர்வு ஒழிதர வாழ்நாள் சென்றது - தங்கிய பேரறிவு ஒழிய ஆயுள் முடிந்தது. எ-று. ()

உயிரொ ழிந்திடும் யாக்கையை யவ்விடத் துறைவோ
ரியல்பி னெடுத் தீமத்தி னய்கனுக் கேற்ற
நயனு ணர்ந்தழற் கருமமு மாற்றினர் நன்னூற்
பயனு ணர்ந்துள சுகமுனி கேளெனப் பகர்வான்.

இ-ள். அவ்விடத்துறைவோர் உயிரொழிந்திடும் யாக்கையை இயல்பினெ எடுத்து - ஆண்டுள்ளார் (அப்) பிரேதத்தை முறைமையால் எடுத்து,—நாயகனுக்கேற்ற நயன் உணர்ந்து ஈமத்து அழற்கருமமும் ஆற்றினர் - வணிகனுக்குரிய கிரமத்தை அறிந்து மயானத்துத் தீத்தொழிலையும் (பிற வற்றையுஞ்) செய்வித்தார்,—நன்னூற்பயன் உணர்ந்துள சுகமுனி கேள் - சுருதிப்பொருளை அறிந்த சுகமுனிவனே கேள்,—எனப் பகர்வான் - என்று (மேலும் வியாசன்) கூறுவான். எ-று. (௬உ)

செட்டி செய்தவெம் பவமெலாஞ் சிறுகுழி யிடத்து
மட்டு றும்புன லிரவிசெங் கதிரினல் வறந்து
விட்ட பான்மைபோல் வேளரு ளாலற விண்ணோ
ரிட்ட தேர்மிசைக் களித்துட னேறின னிருந்தான்.

இ-ள். செட்டி - (அவ்)வணிகனானவன்,—செய்த வெம்பவமெலாம் - (தான்) செய்த கொடும்பாவமெல்லாம்,—சிறுகுழியிடத்து மட்டுறும் புனல் இரவிசெங்கதிரினல் வறந்துவிட்டபான்மைபோல் வேளருளால் அற - சிறு குழியின்கண் அளவுபட்டிருந்த ஜலமானது சூரியகிரணத்தால் வற்றியது போலச் சுவாமி கிருபையால் அழிய,—உடன் விண்ணோர் இட்டதேர் மிசைக் களித்து ஏறினன் இருந்தான்-உடனே தேவர் கொணர்ந்த தேரின் மேல் மகிழ்ந்து இவர்ந்து இருந்தான். எ-று. (௧௩)

தேரி னேறினன் பரிதியின் காந்தியிற் சிறந்து
மேரு வில்லுடைப் பரமன்சா ரூபமாய் விளங்கிக்
காரி னேர்தரு கண்டமுஞ் சந்திர கலையு
மேரு டன்றரித் தருங்கணத் தவரொடு மிருந்தான்.

இ-ள். தேரின் ஏறினன் பரிதியின் காந்தியிற் சிறந்து - தேரில் இவர்ந்து சூரியப்பிரபைபோலச் சிறந்து,—மேருவில்லுடைப்பரமன் சாரூபமாய் விளங்கி - மேருவாயவில்லையுடைய சிவபெருமானது சாரூப்பியம் பெற்று விளங்கி,—காரினேர்தருகண்டமுஞ் சந்திரகலையும் ஏருடன் தரித்து - நீல கண்டத்தையும் பாலசந்திரனையும் அழகோடு தரித்து,—அருங் கணத்தவரொடும் இருந்தான் - அரிய கணநாதர்களோடும் இருந்தான். எ-று. (௧௪)

வரையி லாதுசெய் பவத்தினன் மூத்ததோர் வணிக
னுரிய தாயசா ரூப்பிய முற்றன னென்று
லரிய மாதவர் செயந்தியம் பதியிடத் தடைந்து
துரிய மெய்திடிற் கதியெவன் சொல்வது துணிந்தே.

இ-ள். வரையிலாது செய்பவத்தினன் மூத்ததோர் வணிகன் - அள வின்றிச் செய்த பாவத்தான் முதிர்ந்ததொரு செட்டியும்,—உரியதாய சாரூப்பியம் உற்றனன் என்றால் - உரிமையான சாரூப்பியத்தைப் பெற்றான் ஆயின்,—அரியமாதவர் செயந்தியம்பதியிடத்து அடைந்து துரிய மெய்திடின் - அரும்பெருந்தவர்கள் செயந்தியில் அடைந்து இறந்தால்,—துணிந்துசொல்வது கதி எவன் - (அவர்பெறுவதென்று) துணிந்துரைக்கப் படுங் கதி எ(த்துணைச்சிறப்பின)தாமோ. எ-று. (௧௫)

பகர்வ தற்கரி தாகிய செயந்தியம் பதிக்கு
நிகரெ னப்பல தலங்களை யுவமித்து நிகழ்த்துந்
தகவி னோர்களுங் கொடும்பவச் சலதியிற் றாழ்ந்து
மிகைப டைத்தகூற் றுவன்புரந் தன்னின்மே வுவரால்.

இ-ள். பகர்வதற்கரிதாகிய செயந்தியம்பதிக்கு நிகரென - கூறுதற் கரிய செயந்திபுரத்துக்கு ஒப்பாமென்று,—பலதலங்களை உவமித்து நிகழ்த் துந் தகவினோர்களும் - பலதலங்களையும் ஒப்பிட்டுக்கூறும் இயல்பினர் களும்,—கொடும் பவச்சலதியில் தாழ்ந்து - கொடிய பிறவிக்கடலில் ஆழ்

ந்து,—மிகைபடைத்த கூற்றுவன் புரந்தன்னில் மேவுவர் - துன்பம்பொ ருந்திய இயமனது நகரத்திற் சேருவர். எ-று. (கசு)

சடமெ டுத்துளோர் யாரையும் பரகதி தன்னி
லுடனி ருத்திய செயந்தியம் பதிக்குப மானங்
கடனி லத்துவே றெண்ணியோர் காலனீள் கண்ணும்
வடவை பற்றிய புதுவிருந் தென்னவும் வதிவார்.

இ-ள். சடமெடுத்துளோர்யாரையும் பரகதிதன்னில் உடனிருத்திய செயந்தியம்பதிக்கு - (தன்மாட்டுப்) பிறந்தாரெல்லாரையும் முத்தியில் ஒருங்கிருத்திய செயந்திபுரிக்கு,—கடனிலத்து வேறு உபமானம் எண்ணி யோர் - பூமியிற் பிறதலங்களை ஒப்பாக எண்ணியவர்கள்,—காலன் நீள் கண்ணும் வடவைபற்றிய புது விருந்து என்னவதிவார் - இயமனது (கோ பத்தின்) மிக்க நோக்கமாகிய ஊழித்தீப் பற்றுதற்கு விருந்தராம் என்று சொல்ல(த்தக்கவராய்) இருப்பார். எ-று. (கஎ)

புண்ணி யத்தலச் செய்கையை யுந்திபூத் துடையோன்
விண்ண கத்துள விந்திர னுதியாம் வியன்சீர்ப்
பண்ண வர்க்கெலாம் பகர்ந்திடு மளவையிற் பரிவா
யெண்ணு தற்கரி தாஞ்சிந்து புரமென விசைத்தான்.

இ-ள். உந்திபூத்துடையோன் விண்ணகத்துள இந்திரனுதியாம் வியன் சீர்ப் பண்ணவர்க்கெலாம் புண்ணியத்தலச்செய்கையைப் பகர்ந்திடுமளவை யில் - பிரமதேவர் சுவர்க்கத்துள்ள இந்திரன்முதலிய பெரும் புகழை யுடைய தேவர்கட்கெல்லாம் புண்ணியஸ்தலவரலாறுகளைச் சொல்லுமள வில்,—சிந்துபுரம் எண்ணுதற்கரிதாம் எனப் பரிவாய் இசைத்தான் - செயந்திபுரமே நினைத்தற்கரிதாம் என்று அன்பாய்ச் சொன்னார். எ-று. ()

படைத்த நான்முகன் காசியே பகர்பிர மபுர
மடற்பு டார்ச்சுனங் கழைவன மான்றசீர் பலவு
மடுத்த தாயசோ ராடவி மற்றிவை தம்மி
னெடுத்து ரைத்தனன் செயந்தியம் பதிதலை யென்றே.

இ-ள். படைத்த நான்முகன் - பிரமதேவரானவர்,—காசியே......... மற்றிவைதம்மின்-காசி பிரமபுரம் புடார்ச்சுனம் வேணுவனஞ் சோராடவி என்னுமிவற்றுள்ளே,—செயந்தியம்பதி தலை என்று எடுத்துரைத்தனன் - செயந்திபுரமேவிசேடித்ததென்று எடுத்துக்கூறினர். எ-று. (கக)

என்ற டிக்கடி நான்முக னெடுத்தெடுத் திசைத்தான்
றென்றி சைச்செல்வோர் செயந்தியம் பதியெனத் தேறு
ரன்றி வெற்பெறி வேலினன் செயந்திபு மலர்ப்பூங்
கொன்றை சுற்றிய வேணியா னிதயகோ கனதம்.

இ-ள். என்று அடிக்கடி நான்முகன் எடுத்தெடுத்திசைத்தான் - என்று பலமுறை பிரமர் எடுத்தெடுத்துக்கூறினர்,—தென்றிசைச் செல்வோர் செயந்தி அம்பதியெனத் தேறுர் - இயமபுரத்துக்குச் செல்லும் விதியுடை யார் செயந்தி அழகியதலமென்று தெளியார்,—அன்றி வெற்பெறி வேலி னன் செயந்தி - மாறுபட்டுக் கிரௌஞ்சத்தைக் கிழித்த வேலையுடையாரது

செயந்திநகரம்,—மலர்ப்பூங் கொன்றை சுற்றிய வேணியான் இதயகோகனதம் - கொன்றைமலர்மாலையைச்சூடிய சடையையுடையாரது இருதய கமலமாம். எ-று. (உ0)

வேறு.

திங்க டோறுந் திகழ்திருக் கார்த்திகைத்
துங்க வேற்கைச் சுவாமியைப் போற்றுவார்
பங்க மாம்பவ பாச மறுத்துயர்
சங்க ரன்பதத் தாமரை சார்வரால்.

இ-ள். திங்கடோறும் திகழ் திருக்கார்த்திகை - மாசந்தோறும் விளங்குந் திருக்கார்த்திகைகளிலே,—துங்க வேற்கைச் சுவாமியைப் போற்றுவார் - உயர்ந்த வேற்கைப்பெருமானை வழிபடுபவர்,—பங்கமாம் பவ பாசம் அறுத்து - குற்றமாகிய பிறவியையும் பாசத்தையும் ஒழித்து,—உயர் சங்கரன்பதத்தாமரை சார்வர் - உயர்ந்த சிவபாதாரவிந்தங்களை அடைவார். எ-று. (உ௧)

மாத முப்பது மாகங் கருதிவே
லாதி முன்வத னாரம்ப மாடுவா
ரேதி லாப்புன லெத்தல மூழ்கினும்
போது றற்கரி தாம்பவம் போக்குவார்.

இ-ள். மாகமாதம் முப்பதும் வேலாதிமுன் வதனாரம்பங் கருதி ஆடுவார் - மாசிமாதத்து முப்பதுநாளிலும் வேற்சுவாமி சன்னிதியின் முகாரம்பத்திற் சங்கற்பித்து முழுகுபவர்கள்,—எத்தலம் ஏதிலாப்புனல் மூழ்கினும் போதுதற்கரிதாம் பவம் போக்குவார் - எத்தலத்துப் புண்ணியதீர்த்தங்களிலும் ஆடினாலும் நீங்கல்கூடாத பாவங்களை நீக்குவார். எ-று (உஉ)

வேள்வி நூறு விதிமர பாற்றிய
நீள் கதிக்கெதி ராக நிகழ்த்திடின்
மூளு மாக முகாரம்பங் கோடியாச்
சூளு ரைக்கும் பலனைச் சுருதியே.

இ-ள். நூறுவேள்வி விதிமரபு ஆற்றிய நீள்கதிக்கு - நூறுயாகங்களை விதிப்படி செய்தலாலாகும் உயர்பயனுக்கு,—மாகம் முகாரம்பம் மூளும் பலனை எதிராக நிகழ்த்திடின் - மாசியின் முகாரம்பஸ்நானத்தால் ஆகும் பயனை எதிர்கூறப்புகின்,—கோடியாச் சுருதி சூளுரைக்கும - (அதினிது) கோடிமடங்காக நூல்கள் ஆணைகூறும் (ஆகலின எதிர்கூறலமையாது.) எ-று. (உ௩)

சிறந்த கார்த்திகைக் கார்த்திகைத் தீபத்தா
னிறைந்த வாறு நிலாமுக மண்டலம்
பிறந்து சாமுன் னொருதரம் பெட்புற
வுறைந்து போற்றுநர்க் கோர்பிறப் பில்லையே.

இ-ள். பிறந்து சாமுன் - (யாவரேயாயினும்) பிறந்தபின் இறக்குமுன்னரே,—ஒருதரம் பெட்புற உறைந்து - (செயந்திபுரத்தில்) ஒருக்கால் விரும்பி இருந்து,—சிறந்த கார்த்திகைக் கார்த்திகைத் தீபத்தால் நிறைந்த நிலா ஆறு முகமண்டலம் போற்றுநர்க்கு - சிறந்த கார்த்திகைமாதக் கார்த்

இலைகளிலே தீபங்களால் நிறைந்த ஒளியையுடைய ஆறு திருமுகமண்டலங்களைத் துதிப்பவர்க்கு,—ஓர்பிறப்பில்லை-ஒருபிறப்புமில்லை எ-று. (உச)

வேறு.

சிந்துரன் னகர மல்லாற் சிறந்தவூ ரிருந்தா னெய்யாற்
கந்தன்முன் றீப மேற்றக் கற்பிக்கு முதியோர் தாமு
முந்துவான் பரியின் வேள்வி முற்றினோர் கதியை யன்னோர்
விந்தையாற் பெறுவ ரென்றே வேதமோ யாது சாற்றும.

இ-ள். சிந்துரன்னகரஞ் சிறந்தவூர் இருந்து - செயந்திபுரமாகிய புண்ணியஸ்தலத்தில் இருந்து,—அல்லாற் கந்தன்முன் ஆனெய்யால் தீபமேற்றக் கற்பிக்கும் முதியோர் தாமும்- (அக்கார்த்திகையின்) இரவிலே சுவாமி சன்னிதியிலே பசுநெய்யால் விளக்கேற்றுமாறு பிரேரித்துவிடும் ஆன்றோர் தாமும்,—முந்துவான் பரியின்வேள்வி முற்றினோர்கதியை - மிகவுயர்ந்த அசுவமேதயாகங்களை முடித்தவர்க்குரிய பயனை,—அன்னோர் விந்தையாற் பெறுவர் - தம்முபாயத்தால் அடைவர்,—என்று வேதம் ஓயாது சாற்றும்- என்று சுருதி பலகாற் கூறும். எ-று. (உரு)

அற்றைநாட் கந்தன் மேவு மாலய முழுதுஞ் சோதி
பெற்றவான் றீபம் பார்க்கும் பெட்பினோர் தங்கட் கெல்லா
மற்றுமோர் சனன மின்றால் வானுளீர் விரிப்ப தென்னே
கற்றுளோ ரேனுங் கல்லாக் கடைநிலத் துற்றா ரேனும்.

இ-ள். கற்றுளோரேனுங் கல்லாக் கடைநிலத்துற்றாரேனும் - படித்தவராயினும் படியாத கடைத்தரத்தவராயினும்,—அற்றைநாட் கந்தன்மேவு மாலயமுழுதுஞ் சோதிபெற்றவான்றீபம் பார்க்கும் பெட்பினோர் தங்கட்கெல்லாம் - அன்றையதினத்துக் குமாரசுவாமி திருக்கோயின்முழுதிலும் ஒளிபெற்ற மகாதீபங்களைத் தரிசிக்கும் அன்பர்கட்கெல்லாம்,—மற்றுமோர் சனனம் இன்று-மற்றொரு பிறப்பும் இல்லை,—வானுளீர் விரிப்பது என்னே- தேவர்களே விரித்துரைப்பது என்னை? எ-று. (உசு)

சென்னியா றுடைய வையன் செயந்தியம் பதியி னீங்கா
தம்பிலை பொருந்து மேலோ ரடங்கலுங் கயிலை யீசன்
பொன்னடி பெறுவ ரீது புகன்றது வாய்மை யென்னப்
பன்னினன் கடவு ளோர்க்குப் பதுமப்பூந் தவிமக் கோமான்.

இ-ள். சென்னியாறுடையவையன் செயந்தியம்பதியின் நீங்காது அம்பிலைபொருந்து மேலோரடங்கலும் - சண்முகசுவாமியின் செயந்திநகரிற் பிரியாது (பத்திச்) சிறப்பு நிலைப்பட்ட மேலோரெல்லாரும்,—கயிலை ஈசன் பொன்னடி பெறுவர் - கயிலையிற் சிவபதம் பெறுவார்,—புகன்றது ஈது வாய்மை - கூறிய இது உண்மையே,—என்ன - என்று,—பதுமப்பூந்தவிமக்கோமான் கடவுளோர்க்குப் பன்னினன் - கமலாசனர் விண்ணவர்க்குக் கூறினார். எ-று. (உஎ)

ஒன்றிரண் டொருமூன் றான வயர்தினந் தோறு மன்பாய்ச்
சென்றிருந் தாலுந் தீமை செயத்துணிந் தார்க ளேனு
நன்றுணர்ந் திருந்தா ரேனு நான்மறை செயந்தி யுற்றார்
கன்றிய பாவ நீங்கிக் கடவுளர்க் குரிய ராவார்.

இ-ள். ஒன்று இரண்டு ஒருமூன்று-ஒருநாட்டான் இரண்டுநாட்டான் மூன்றுநாட்டான்,—உயர் ஆனை தினந்தோறும் - புண்ணியகாலந்தோறுந் தான்,—செயந்தி உற்றார் - செயந்தியில் அமர்ந்தவர்,—அன்பாய்ச் சென்றிருந்தாலும் - அன்பாய்ப்போயிருந்தவராயினும்,—தீமைசெயத்துணிந்தார்களேனும்-(அங்குந்) தீங்குகளையே ஆற்றத்துணிந்தவராயினும்,—நான்மறை நன்று உணர்ந்து இருந்தாரேனும் - சதுர்வேதவிகித புண்ணியங்களை அறிந்து (அனுட்டித்து) இருந்தவராயினும்,—கன்றிய பாவம் நீங்கிக் கடவுளர்க்கு உரியராவார் - வருத்துகின்ற பாவங்களை ஒழிந்து தேவருக்கு உரியராவர். எ-று. (உ௮)

கருதரு மேலை வீட்டுக் கேறுதற் காக வைத்த
பொருவரு மேணி சிந்து புரமெனப் பிரமன் விண்ணோர்
தெரிதர நுட்ப மாகத் தேற்றின னெனவி யாசன்
பரிவுடன் சுகற்குத் தேறப் பகுத்தனன் றொகுத்து மாதோ.

இ-ள். கருதரு மேலைவீட்டுக்கு ஏறுதற்காக வைத்த பொருவரும் ஏணி சிந்துபுரம் - நினைத்தற்கரிய முத்தியில் ஏறுதற்கு வைத்த ஒப்பற்ற ஏணியாவது செயந்திபுரமே,—எனப் பிரமன் விண்ணோர் தெரிதர நுட்பமாகத் தேற்றினன் - என்று பிரமா தேவர் அறிய நுட்பமாக விளக்கினார்,—என - என்று,—வியாசன் பரிவுடன் சுகற்குத் தேறத் தொகுத்துப் பகுத்தனன் - வியாசமுனிவன் அன்போடு சுகமுனிவனுக்குத் தெளியச் சுருக்கிக் கூறினான். எ-று. (உ௯)

பிரமன் உபதேசித்த அத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௭௮௮.

---

## க௮-வது. சுகப்பிரமரிஷி பூசைசெய்த அத்தியாயம்.

நாடருந் தவத்தின் வைப்பா நைமிசா ரணியத் துற்ற
பீடுறு முனிவர் கேட்பப் பெருமறைச் சூத னென்பா
னீடருள் சுரப்ப நோக்கி நெடுநிலா வேணி பொற்றாள்
சூடிமற் றவர்முன் னாகச் சொல்லுதற் குள்ளம் வைத்தான்.

இ-ள். நாடருந் தவத்தின்வைப்பாம் நைமிசாரணியத்து உற்ற-ஆராய்தற்கரிய தவஸ்தானமான நைமிசாரணியத்தில் இருந்த,—பீடுறுமுனிவர் கேட்ப - மஹாமுனிவர் கேட்க,—பெருமறைச் சூதனென்பான் நீடருள் சுரப்ப நோக்கி - (அங்ஙனம் வியாசசுகசம்வாதத்தை உபதேசித்திருந்த) சுருதிவல்ல சூதமுனிவன் (மேலும்) பேரருள் பெருகப் பார்த்து,—நெடுநிலாவேணி பொற்றாள் சூடி - உயர்ந்த சந்திரசேகரருடைய ஸ்ரீபாதங்களை உச்சிமேற்கொண்டு,—அவர்முன்னாகச் சொல்லுதற்கு உள்ளம்வைத்தான் - அவரெதிரே (மேலும்) உபதேசித்தற்கு மனங்கொண்டான். எ-று. (க)

நவையிலா மறையின் மூத்து நாரண வடிவந் தாங்கு
முவமைதீர் வியாசன் றன்பா லுறுசுக முனிவன் கேட்பச்
சிவனருள் குமர மூர்த்தி செயந்தியம் பதியிற் காதை
யவையுப தேசமாக வறிவொருங் குணர்த்து கின்றான்.

இ-ள். நவையிலா மறையின் மூத்து நாரணவடிவந் தாங்கும் உவமைதீர் வியாசன்-குற்றமற்ற வேதங்களின் முதிர்ந்து விட்டுணுரூபங்கொண்ட ஒப்பற்ற வியாசமுனிவன்,—தன்பாலுறு சுகமுனிவன் கேட்ப - தற்சேர்ந்த சுகமுனி கேட்க,—சிவனருள்குமரமூர்த்தி செயந்தியம்பதியிற் காதையவை - சிவகுமாரசுவாமியின் செயந்திபுர சரித்திரங்களை,—அறிவுபதேசமாக ஒருங்குணர்த்துகின்றான் - ஞானோபதேசமாக முழுதுமுணர்த்தும். எ-று. (௨)

பாரத கண்டத் தூடு பகர்தரு மூவா றான
சீரிடங் குமர மூர்த்தி திருவருட் போலா யுற்ற
பேரினைப் புலரிக் காலைப் பேசினர் யாரு முள்ளத்
தாரரு ளடைந்து பாவத் தருந்தளை யகற்று வாரால்.

இ-ள். பாரதகண்டத்தூடு பகர்தரு மூவாறான சீரிடங் குமரமூர்த்தி திருவருட்போலாய் உற்ற - பாரதகண்டத்திலே கூறப்படும் பதினெட்டுத் திருத்தலங்கள் குமாரசுவாமியின் திருவருள்போலாய் உள்ளன,—பேரினைப் புலரிக்காலைப் பேசினர்யாரும் - (அவற்றின்) நாமங்களை வைகறையிற் பகர்ந்தவரெல்லாம்,—உள்ளத்து ஆரருள் அடைந்து பாவத்தருந்தளை அகற்றுவார் - மனத்துப் பேரருளைப்பெற்றுப் பாவக்கட்டை நீக்குவார். எ-று (௩)

எழுமுகிற் படலை தூங்கு மிமயமால் வரையின் பாங்க
ரழகினுக் கழகு செய்யு மாடியிற் சிறப்பு வாய்த்துச்
செழுமைபெற் றுயர்ந்த ஞானச் செய்யவிந் திரநீ லப்பேர்
தழுவிமுத் தேவர் காக்குந் தகையபட் டணமொன் றுண்டால்.

இ-ள். எழுமுகிற்படலை தூங்கும் இமயமால்வரையின் பாங்கர் - எழுமுகிற் கூட்டந் தாழும் இமயமலையின் பக்கத்திலே,—அழகினுக்கழகுசெய்யும் ஆடியிற் சிறப்புவாய்த்துச் செழுமைபெற்று உயர்ந்த - பேரழகுசெய்யுங் கண்ணாடிபோல (நிருமலமாய்ச்) சிறப்புப் பொருந்தி மாட்சிமைகொண்டு உயர்ந்த,—ஞானச்செய்ய இந்திரநீலப்பேர் தழுவி முத்தேவர் காக்குந் தகைய பட்டணமொன்று உண்டு - அறிவுச்செம்மையையுடைய இந்திரநீலமென்னும் நாமங்கொண்டு மும்மூர்த்திகளாலுங் காக்கப்படுந்தன்மையையுடையதான நகரமொன்று உளது. எ-று. (௪)

அந்தமா நகரிற் றேவர் யாவருந் திரண்டன் பாக
முந்துமோர் தேவ சேனா பதியென முருக வேட்குச்
சிந்தையார் வத்தி னோடுந் திருமணி மவுலி சூட்டிச்
சந்தநான் மறையின் வாழ்த்தித் தண்மலர் மாரி தூற்றி.

அன்றுதொட் டின்று காறு மாரரு ளபிஷே கப்பே
ரொன்றிய குமர னென்ன வும்பர்கள் வணங்கி யேத்த
வென்றிவே லண்ணல் போற்றி வேண்டுநர் வேண்டி யாங்கே
நன்றருள் புரிந்து வேத நவிற்றவிற் றிருந்தான் மாதோ.

இ-ள். அந்தமாநகரில் உம்பர்கள் தேவர்யாவரும் அன்பாகத்திரண்டு - அப்பெரும்பதியிலே மேலுலகினராகிய வானவரெல்லாம் அன்புடையராய்க் கூடி,—தேவசேனாபதி என முந்தும் ஓர் முருகவேட்கு - தேவ சேனாபதி என்று முற்பட்டமர்ந்த ஒப்பற்ற முருகபிரானுக்கு,—சிந்தையார்வத்தினோ

டுந் திருமணிமவுலிசூட்டி - மனவிருப்போடு அழகிய இரத்தினமுடியைச் சூட்டி,—ஆரருள் ஒன்றிய அபிஷேக குமரன் என்னப்பேர் சந்த நான்மறையின் வாழ்த்தி - பெருங்கருணை பொருந்திய அபிஷேககுமாரசுவாமி எனப் பெயரிடுதலோடு இசையையுடைய சதுர்வேதங்களாலே துதித்து,—தண் மலர்மாரி தூற்றி வணங்கி ஏத்த - தண்ணிய பூமாரிகளைச் சொரிந்து நமஸ்கரித்து வழிபட,—வெஃறிவேலண்ணல் அன்றுதொட்டு இன்றுகாறும் - வெற்றிவேற்பெருமான் அன்றுமுதலின்றுவரையும்,—போற்றி வேண்டுநர் வேண்டியாங்கே நன்றருள்புரிந்து - வழிபட்டு விரும்புவார் விரும்பியவாறே இனிதருள்செய்து,—வேதம் நவிற்ற வீற்றிருந்தான் - சுருதிகள் துதிக்க வீற்றிருந்தனர். எ-று. (௫-௬)

கங்கையின் கரையி னோர்சார் கனகல மென்னுந் தீரத்
தங்கினி தமர்ந்து தாதை யளித்துள கலைக ளெல்லா
மங்கல மரபி னோர்ந்து மறைகளுக் கெட்டாச் செவ்வேள்
பங்கமில் சிவமாணுக்க னெனப் பெயர் பரித்தா னம்மா.

இ-ள். கங்கையின்கரையின் ஓர்சார் கனகலமென்னுந்தீரத்து - கங்காதீரத்தின் ஒருபாலுள்ள கனகல தீரத்தின்கண்ணே,—மறைகளுக்கெட்டாச் செவ்வேள் இனிதமர்ந்து - சுருதிகட்கெட்டாத சுவாமி நன்று வீற்றிருந்து,—தாதை அளித்துள கலைகளெல்லாம் மங்கலமரபின் ஓர்ந்து - பிதா போதித்த நூற்பொருள்களையெல்லாம் நன் முறையான் உணர்ந்து,—பங்கமில் சிவமாணுக்கன் எனப் பெயர் பரித்தான் - அழிவற்ற சிவமாணுக்கர் என்னும் பெயரைக் கொண்டார். எ-று. (௭)

மலையத்தின் மேல்பான் முத்தி வழங்குமந் தரங்க மான
நிலையத்திற் குமர தாரை நீணதிக் கரையின் பாங்கர்க்
கலைமுற்று முணர்ந்த வேத வாரிடர் கண்ணே யாகித்
தலைமைத்தாம் வேத பாடந் தணப்பிலா தவர்கள் கூட.

இ-ள். மலையத்தின் மேல்பான் முத்திவிழங்கும் அந்தரங்கமான நிலையத்தில் - பொதியத்தின் மேல்பக்கத்து முத்தியையருளும் அந்தரங்கமான தானத்திலே,—குமரதாரை நீணதிக்கரையின் பாங்கர் - குமரதாரையாற்றங்கரையிலே,—கலைமுற்றும் உணர்ந்த வேதவாரிடர் கண்ணேயாகி-கல்வி முழுதும் அறிந்த வேதமுனிவர்க்குக் கண்ணே போன்று,—தணப்பிலா தவர்கள் தலைமைத்தாம்வேதபாடங் கூட - (அவர்) பிரிவிலராய் ஆதிச் சுருதி படித்தலைப் பொருந்த. எ-று. (௮)

இருந்துருச் சொல்லிக் கொண்டே யாவர்க்கு மிறைவ னாகிக்
கருந்தட நெடுங்கட் செவ்வாய்க் கவுரிவார் முலைப்பான் ஞானத்
தருந்திவெஞ் சமணை மாய்த்த வாறுமா முகங்கொண் டுற்ற
பெருந்தகை யருட்கு மாரப் பிரமசா ரிப்பேர் பெற்றான்.

இ-ள். கருந்தடநெடுங்கட் செவ்வாய்க் கவுரி வார் முலைப்பால் ஞானத்து அருந்தி வெஞ்சமணை மாய்த்த ஆறுமாமுகங்கொண்டுற்ற பெருந்தகை-கரிய பெரிய நெடிய கண்களையுஞ் செய்யவாயையுமுடைய உமையாரது கச்சுப்பொருந்திய திருமுலையின் பாலைச் சிவஞானத்தோடு உட்கொண்டு தீயசமணரை அலைத்த ஆறுமுகபெருமான்,—உருச்சொல்லிக்கொண்டு இருந்து யாவர்க்கும் இறைவனாகி - (அம்முனிவர்க்குப்) பாடஞ்சொல்லிக்கொ

ண்டு இருந்து எவர்க்குந் தலைவராகி,—அருட்குமாரப்பிரமசாரிப்பேர் பெற்றான் - அருளினையுடைய குமாரப்பிரமசாரி என்னும் நாமத்தை அடைந்தார். எ-று. (௯)

பனிமுகிற் படலை நீங்காப் பழனியஞ் சார னாப்பட்
டனிமுத லாகி மூத்த தன்கிழக் கோலங் காட்டி
முனிவரர் நால்வர்க் குண்மை முற்றொருங் குணர்த்தி யாங்குச்
சினகரத் திருந்து ஞான தேசிக னெனும்பேர் பெற்றான்.

இ-ள். பனி முகிற்படலை நீங்காப் பழனியஞ் சாரல் நாப்பண் - குளிர்ந்த மேகக்கூட்டங்கள் அகலாத பழனிமலையின் நடுவே,—சினகரத்துத் தனிமுதலாகி மூத்த தன் கிழக்கோலங் காட்டி இருந்து - திருக்கோயிலிலே ஒருதலைவராய் முதிர்ந்த தமது விருத்தரூபத்தைக் காட்டி இருந்து,—முனிவரர்நால்வர்க்கு உண்மை முற்றொருங்குணர்த்தி-நான்முனிவர்கட்கும் மெய்ப்பொருளை முழுதும் போதித்து,—ஆங்கு ஞானதேசிகன் எனும்பேர் பெற்றான் - அங்ஙனம் ஞானதேசிகர் என்னுநாமத்தை அடைந்தார். எ-று. (௧0)

தொன்மறை முடிவு மூத்த சுவாமிமால் வரையின் ஞானஞ்
சின்மயத் தந்தை யுள்ளந் தெளிதர வோங்கா ரத்தின்
றன்மைமுற் கூறி யீசன் றன்குரு வடிவா யார்க்கு
நன்மைசார்ந் துயர்சு வாமி நாதனென் றொருபேர் பெற்றான்.

இ-ள். தொன் மறைமுடிவு மூத்த சுவாமிமால்வரையின் - பழைய வேதாந்தங்கள் முதிர்ந்த சுவாமிமலையின்கண்ணே,—சின்மயத்தந்தை உள்ளந்தெளிதர-ஞானரூபியாகிய பிதா மனந்தெளிய,—ஓங்காரத்தின்றன்மை ஞானம் முற்கூறி - பிரணவசொரூபமாகிய ஞானத்தை முன்பு சொல்லி,—ஈசன்றன்குருவடிவாய் - சிவகுருவடிவயாய்,—யார்க்கும் நன்மைசார்ந்து உயர் சுவாமிநாதன் என்று ஒருபேர் பெற்றான் - எவர்க்கும் நலத்தை ஆக்கி உயர்ந்த சுவாமிநாதர் என ஒருநாமத்தை அடைந்தார். எ-று. (௧௧)

விந்தையங் கிரியி னோர்சார் விகாரபட் டணத்தில் யானை
தந்துள மாதை வேட்டுத் தண்ணளி சுரந்து வானத்
திந்திரன் முதல தேவ ரிறைஞ்சமுன் வதுவைக் கோலச்
சுந்தர வடிவத் தோடு துலங்கினன் குமர மூர்த்தி.

இ-ள். விந்தையங்கிரியின் ஓர்சார் விகாரபட்டணத்தில் - விந்தைமலையின் ஒருபாலுள்ள விகாரபட்டணத்திலே,—முன் வானத்திந்திரன் முதல தேவர் இறைஞ்ச-முன்னே தேவேந்திரன் முதலிய விண்ணவர் வணங்க,—தண்ணளிசுரந்து யானை தந்துளமாதைவேட்டு - கருணைகூர்ந்து தெய்வயானையாரை வரைந்து,—குமரமூர்த்தி சுந்தர வதுவைக்கோல வடிவத்தோடு துலங்கினன் - குமாரசுவாமி அழகிய மணவாளக்கோல ரூபத்தோடு விளங்கினார். எ-று. (௧உ)

தினகரன் மரபிற் றோன்றுஞ் சித்திர சேன னென்றோர்
முனைநெடுஞ் சுடர்வே லண்ணன் முதியமா தவத்தின் ஞானத்
தனிவரை யதனி னோற்குந் தன்மைகண் டினிய கந்த
னனிமகிழ் சிறந்து வேட்ட தேதென நவில்வ தானான்.

இ-ள். தினகரன்மரபில் தோன்றுஞ் சித்திரசேனனென்று ஓர் முனை நெடுஞ் சுடர்வேல் அண்ணல் - சூரியகுலத்திற்பிறந்த சித்திரசேனனென்னும் ஒரு வேற்படையையுடைய அரசன்,—ஞானத்தனிவரையதனில் முதிய மாதவத்தின் நோற்குந்தன்மை - திருப்பரங்குன்றிலே பழைய பெருந்தவத்தோடு வழிபடுந்தன்மையை,—இனிய கந்தன் கண்டு நனிமகிழ் சிறந்து - இனிய சுவாமியார் கண்டு மிகமகிழ்ந்து,—வேட்டது ஏது என - விரும்பியது யாது என்று கேட்ப,—நவில்வதானன் - (அவன்) கூறலாயினன். எ-று. (கங)

கூடலி னினிதா யுள்ள கோலமோ ரறுபா னன்கா
யாடின நடனம் யாவு மளியனே னினிது காண
நாடகச் சுருதி யாக நடித்திடாக் காட்டல் வேண்டித்
தேடின னென்று கூறத் திருவுளஞ் சிறப்ப நோக்கி.

இ-ள். கூடலின் ஆடின ஒரறுபானன்காய நடனம் இனிதாயுள்ள கோலம்யாவும் - மதுரையிலே (சிவபெருமான்) விளையாடிய அறுபத்துநான்கு திருவிளையாடல்களின் இனிய சிறப்புக்களையெல்லாம்,—அளியனேன் இனிது காண - தொண்டனேன் இனிது தரிசிக்குமாறு,—நாடகச் சுருதியாக நடித்திடாக் காட்டல் வேண்டித் தேடினன் - நாடகநூற்படி (நீர்) ஆடிக்காட்டுதலை விரும்பி நோற்றேன்,—என்று கூறத் திருவுளஞ் சிறப்ப நோக்கி - என்று (அவன்) சொல்ல மனமகிழ (அவனைப்) பார்த்து. எ-று. (கச)

கூறரு மறுபா னன்காங் கோலத்தின் செய்கை யெல்லாம்
வேறுவே றுகக் கந்த வேடிரு நடனங் காட்டி
யூறுதே னருவி கால வுயர்ந்தவான் பரங்குன் றத்தி
னேறுசீர் நடன நாத னெனவொரு பெயர்பெற் றானால்.

இ-ள். கந்தவேள் - குமாரபெருமானனவர்,—ஊறு தேனருவிகால உயர்ந்த வான்பரங்குன்றத்தின் - ஊறுகின்ற தேனருவி சொரிய உயர்ந்த (அத்) திருப்பரங்குன்றின்கண்,—கூறரும் அறுபானன்காங்கோலத்தின் செய்கையெல்லாம் - சொல்லற்கரிய அறுபத்துநான்கு திருவிளையாட்டுச் செய்கைகளையெல்லாம்,—வேறுவேறுகத் திருநடனங் காட்டி - தனித்தனி திருக்கூத்துமுறையாற் காட்டி,—ஏறு சீர் நடனநாதன் என ஒருபெயர் பெற்றான் - உயர்ந்த சீர்த்தியையுடைய நடனநாதர் என ஒருநாமத்தை அடைந்தார். எ-று. (கரு)

தேறலி னருவி தூங்குந் தென்மல யத்துத் தென்பா
லாறுட னைந்த தான வரன்பதி யவையின் கீழ்பால்
வீறுமங் கலப்பொற் சாரல் வீற்றிருந் தகில நல்கு
நாறுபூங் கமல வீட்டு நான்முகன் வணங்கிப் போற்ற.

இ-ள். தேறலினருவி தூங்குந் தென்மலயத்துத் தென்பால் - தேனருவி தூங்குகின்ற தென்பொதியமலையின் தென்பாலிலே,—ஆறுடனைந்த தான அரன்பதியவையின் கீழ்பால் - பதினொரு சிவஸ்தலங்களின் குணபாலிலே,—வீறு மங்கலப்பொற்சாரல் வீற்றிருந்து - பெருமையாகிய மங்கலகிரியின் பொற்சாரலிலே வீற்றிருந்து,—அகிலம் நல்கு நாறுபூங்கமலவீட்டு நான்முகன் வணங்கிப் போற்ற - உலகங்களைச் சிருட்டிக்குந் தாமரையாசனராகிய பிரமதேவர் வணங்கித் துதிக்க. எ-று. (கசா)

வேதனுக் குலகம் யாவும் விதித்திடு செயலு ஞான
போதனைச் செயலு முள்ளம் பொற்புற வுபதே சித்துக்
காதலிற் சிறந்த வேற்கைக் காங்கேயன் கருணை காட்டித்
தீதறும் போக மோக்கத் தியாகியென் றிருந்தான் மன்னோ.

இ-ள். சிறந்த வேற்கைக்காங்கேயன்-சிறந்த வேலாயுதகரக்கடவுள்,—வேதனுக்கு - (அங்ஙனம்வழிபட்ட) பிரமருக்கு,—உலகம்யாவும் விதித்திடு செயலும் ஞானபோதனைச்செயலும் உள்ளம் பொற்புறக் காதலின் உபதேசித்து - உலகமனைத்தையும் படைக்குஞ்செய்கையையும் ஞானப்போதிக்குஞ்செய்கையையும் (அவர்)மனம் பொலிவுபெற அன்பால் உபதேசித்து,—கருணை காட்டி - திருவருளைக் காட்டி,—தீதறும் போகமோக்கத்தியாகி என்று இருந்தான் - தீங்கற்ற போகமோக்கத்தியாகி எனப்பெயர்பெற்று இருந்தனர். எ-று. (கஎ)

பொருநைச்சங் கமத்துத் தென்பாற் பொலன்குவ டுயர்ந்த சந்த
வரையினில் வீர வாகு வழுத்துதற் காக வேண்டிக்
கருணையின் விசுவ ரூபங் காட்டியெஞ் ஞான்று நீங்கா
தருடரும் விசுவ ரூப னென்றரும் பெயர்கொண் டானால்.

இ-ள். பொருநைச்சங்கமத்துத் தென்பாற் பொலன்குவடு உயர்ந்த சந்தவரையினில் - பொருநைப்பொருத்தின் தெற்குப்பக்கத்திலே பொற்சிகரம் உயர்ந்த கந்தமாதனத்திலே,— வீரவாகு வேண்டி வழுத்துதற்காகக் கருணையின் விசுவரூபங் காட்டி - வீரவாகு விரும்பித் துதித்ததற்காகக் கொண்ட அருளினால் விசுவரூபத்தைத் தரிசிப்பித்து,—எஞ்ஞான்றும் நீங்காது அருடரும் விசுவரூபனென்று அரும்பெயர்கொண்டான்-என்றும் பிரியாது அருளைத்தரும் விசுவரூபர் என்று அரியநாமத்தைக் கொண்டார். எ-று. (கஅ)

தெண்டக வனத்துக் கோதா வரிநதித் தென்பாற் சீதை
யொண்டொடி பிரிந்து காமத் தொள்ளழற் பொருத ராமக்
கொண்டனெஞ் சகமுன் றேறக் கோதில்வாக் கியமோர் நான்கு
பண்டுரைத் தருளி ராம னெனப்பெயர் பரித்தாங் குற்றான்.

இ-ள். தெண்டகவனத்துக் கோதாவரிநதித் தென்பால் - தெண்டகாரணியத்துக் கோதாவரியாற்றின் தென்பக்கத்திலே,—சீதையொண்டொடி பிரிந்து காமத்தொள்ளழற்பொருத ராமக்கொண்டல் - சீதாதேவியைப் பிரிந்து காமாக்கினியைப் பொருத முகில்போலுமிராமன்,—நெஞ்சகமுன் தேறக் கோதில் வாக்கியமோர் நான்கு பண்டு உரைத்து-உள்ளக்கருத்துத் தெளியக் குற்றமற்ற நான்குவாக்கியங்களை முன்பு போதித்து,—அருளி ராமன் எனப்பெயர் பரித்து ஆங்குற்றான் - அருளிராமன் என்று நாமங் கொண்டு அங்ஙனமமர்ந்தார். எ-று. (கக)

கொண்டலூழ் மகேந்தி ரத்திற் குருங்கத்திற் றென்கீழ்ப் பாங்க
ரண்டுதற் கரிய கூர்மச் சிலையிடை யணிகொள் சோதி
மண்டபத் திரண்டு மாத ருடியும் புணர்ந்தும் வானோர்
கண்டடி வணங்கக் காமக் கடவுளென் றொருபேர் பெற்றான்.

இ-ள். கொண்டல் தாழ் மகேந்திரத்திற் குருங்கத்தின் தென்கீழ்ப் பாங்கர் - முகில்படியும் மகேந்திரகிரியிலே குருங்கத்தின் தென்கிழக்குப்

பாலிலே,—அண்டுதற்கரிய கூர்மச் சிலையிடை - அடைதற்கரிய கூர்மக்கல்லிலே,—அணிகொள் சோதி மண்டபத்து - அழகிய ஒளிமண்டபத்திலே,—இரண்டுமாதர் ஊடியும் புணர்ந்தும் - இரண்டம்மைமாரையும் பிரிந்தும் கலந்தும்,—வானோர் கண்டு அடிவணங்க - தேவர் தரிசித்துப் பாதங்களை வணங்க,—காமக்கடவுள் என்று ஒருபேர் பெற்றான் - காமக்கடவுள் என்று ஒரு நாமத்தைப் பெற்றார். எ-று. (உ0)

வானுயர் சையச் சித்த மல்குகேத் திரத்துச் சித்த
ரூனமில் சனக ராதி யோகியர்க் குண்மை யான
மேனிமிர் குளிகா சித்தி பாதுகா சித்தி மிக்க
ஞானமாம் பிராணு யாம சித்தியு நன்க தாக.

இ-ள். வானுயர் சையம் மல்கு சித்தக் கேத்திரத்து-விண்ணிலுயர்ந்த சையமலையிற் பொருந்திய சித்தக்ஷேத்திரத்திலே,—சித்தர் ஊனமில் சனகராதியோகியர்க்கு - சித்தருக்குங் குற்றமற்ற சனகாதி முனிவருக்கும்,—உண்மையான மேனிமிர் குளிகாசித்தி பாதுகாசித்தி மிக்க ஞானமாம் பிராணுயாமசித்தியும் நன்கதாக - மெய்ம்மையான மேற்செல்லுங் குளிகா சித்தியையும் பாதுகாசித்தியையும் மிக்க அறிவாகிய பிராணுயாமசித்தியையும் நன்மையாக. எ-று. (உக)

முந்துற வுபதேசித்து முடிவிலா யோகி யோக
சுந்தரர் யோக நாதர் ஆயயோ கீசர் வேத
மந்திர வடிவாம் யோக வல்லரென் றறைந்த னந்த
நந்தலி லுமந் தாங்கிக் குமரவே ளண்ணி னுன்.

இ-ள். முந்துற உபதேசித்து - முன்னமே போதித்து,—முடிவிலா யோகி யோகசுந்தரர் யோகநாதர் ஆய யோகீசர் யோகவல்லர் என்றறைந்த-அநந்தயோகி யோகசுந்தரர் யோகநாதர் சுத்தயோகீசர் யோகசத்தர் என்று சொல்லப்பட்ட,—ஆனந்தம் நந்தலில் நாமந்தாங்கி - இன்பங்கெடுதலில்லாத பெயர்களைத்தாங்கி,—வேதமந்திர வடிவாங் குமரவேள் நண்ணினுன் - வைதிகமந்திரரூபியாகிய குமாரசுவாமி இருந்தார். எ-று. (உஉ)

திரிகூடா சலத்தி சான திக்கினி லிலஞ்சி யான
புரியினிற் கபில ராதி யோகியர் புகழ்ந்து கேட்ப
வரியமுத் தேவர்மூவ ராவது நாமே யென்று
சுருதியின் வரத ராசத் தொல்பெயர் சூட்டிக் கொண்டான்.

இ-ள். திரிகூடாசலத்து ஈசானதிக்கினில் - திரிகூடமலையின் ஈசான திக்கிலே,—இலஞ்சியான புரியினில்-இலஞ்சிப்புரத்தில்,—கபிலராதி யோகியர் புகழ்ந்து கேட்ப-கபிலர் முதலிய முனிவர் துதித்துக் கேட்க,—அரிய முத்தேவர் மூவராவதும் நாமே என்று - அரிய(பிரமாதி)மூன்றுதேவர்களிலும் முத்தொழிலுடையாராய் நிற்பதும் நாமே என்றுணர்த்தி,—சுருதியின்-வேதங்களைப் போதித்தலான்,—வரதராசத் தொல்பெயர் சூட்டிக்கொண்டான்-வரதராசனென்னும் பழையபெயரைத் தரித்துக்கொண்டார். எ-று.

விந்தைமால் வரைக்கு மேல்சார் வெய்யவ னெடுந்தேர் தட்டக்
கொந்துலாங் கவடு போக்குங் குமாரமா வனத்தி னுப்ப
ணைந்தகோ பாலர் தமமி னுகிலங் கதிர்போ லுற்ற
முந்துசீ கரப்பேர் கொண்ட மூதூல கேத்துங் கோமான்.

இ-ள். விந்தைமால்வரைக்குமேல்சார் - விந்தைமலையின் மேற்கே,—வெய்யவனெடுந்தேர் தட்டக் கொந்துலாங் கவடுபோக்குங் குமாரமாவனத்தின் நாப்பண் - சூரியரதத்தையுந் தட்டக் கொத்துப்பொருந்திய கொம்பர்களைச் செலுத்துங் குமாரவனத்தின் நடுவே,—நந்தகோபாலர்தம்மில் - இடையர்களுள்ளே,—நாஇளங்கதிர்போல் உற்ற - பாலசூரியன்போல இருந்த,—மூந்து சீகரப்பேர் கொண்ட மூதுலகேத்துங் கோமான் - முன்னை சீகரன் எனப்பெயரிய உலகுபுகழுந் தலைவன். எ-று. (௨௪)

கண்ணனுற் பத்தியான காரண முதலா யன்னா
னெண்ணுதற் கரியதாய வைகுண்ட மெய்தல் காறு
நண்ணிய தினமோர் பத்தி னுடகத் தியற்கை யாகத்
தண்ணளி சிறப்ப வாடிக் காட்டெனா வணங்கித் தாழ்ந்தான்.

இ-ள். கண்ணன் உற்பத்தியான காரணமுதலாய் - கிருஷ்ணர் அவதரித்த காரணமுதலாக,—அன்னான் எண்ணுதற்கரியதாய வைகுண்டம் எய்தல்காறும் - அவர் நினைத்தற்கரிய வைகுண்டத்தை அடைந்தமைவரையும் (உள்ளசம்பவங்களை),—நண்ணிய தினமோர்பத்தில்-பொருந்திய பத்து நாட்களில்,—நாடகத்தியற்கையாகத் தண்ணளிசிறப்ப ஆடிக்காட்டு-நாடகமுறையாக அன்புசிறக்க நடித்துக்காட்டும் - என வணங்கித் தாழ்ந்தான் - என்று நமஸ்கரித்து வேண்டினான். எ-று. (௨௫)

கோகுலத் தாயன் வேட்ட குறிப்பெலா நடித்துப் பின்ன
ரோகையிற் கண்ணனாய வுயர்திருக் கோலங் காட்டி
வாகுறு கண்ணன் சாயுச் சியத்தையும் வழங்கிச் செவ்வேள்
சீகரக் கடவுளென்றோர் திருப்பெயர் சூட்டிக் கொண்டான்.

இ-ள். செவ்வேள் - (அங்ஙனம் வேண்டிக்கொள்ளப்பட்ட) முருகபிரான்,—கோகுலத்தாயன் வேட்ட குறிப்பெலாம் நடித்து - சேரியிலிடையன் விரும்பிய குறிப்புக்களையெல்லாம் ஆடிக்காட்டி,—பின்னர் ஓகையிற் கண்ணன் ஆய உயர்திருக்கோலங் காட்டி - பின்பு கிருஷ்ணருக்காகிய உயர்ந்த திருக்கோலத்தைக் காட்டி,—வாகுறு கண்ணன்சாயுச்சியத்தையும் வழங்கி - ஸ்ரீகிருஷ்ணசாயுச்சியத்தையுங் கொடுத்து,—சீகரக் கடவுள் என்று ஓர் திருப்பெயர் சூட்டிக்கொண்டான் - சீகரக்கடவுள் என ஒரு திருநாமத்தைத் தரித்துக்கொண்டார். எ-று. (௨௬)

கங்கையின் வடபாற் சிங்கி பேரிபட் டணத்திற் காமர்
தங்கெழிற் சிலையி ராமன் றனைத்தியா னித்து வாழுந்
துங்கமாங் குகற்கு ராமன் றொல்கதை யனைத்துஞ் சோரா
தங்குநா டகக்கூத் தாக வருளொடு நடித்துக் காட்டி.

இ-ள். கங்கையின்வடபாற் சிங்கிபேரிபட்டணத்தில்-கங்கையாற்றின் வடக்கே சிங்கிபேரிநகரத்திலே,—காமர்தங்கு எழிற் சிலையிராமன்றனைத் தியானித்து வாழுந் துங்கமாங் குகற்கு - அழகுதங்கிய ஸ்ரீ கோதண்டராமரைத் தியானித்து வாழ்ந்த உயர்ந்த குகனென்பானுக்கு,—ராமன் தொல்கதையனைத்தும் - இராமரது பழங்கதைகளையெல்லாம்,—சோராது நாடகக்கூத்தாக அருளொடு நடித்துக் காட்டி,—தளராது சிறந்த நாடகமாகக் கருணையோடு ஆடிக்காட்டி. எ-று. (௨௭)

சுந்தரச் சிலையி ராமன் றோற்றமுங் காட்டி ஞான
முந்திய பிரமா னந்த முத்தியுங் கொடுத்து வேத
மந்திரக் குகச்சு வாமி யென்னவும் வாய்ந்து பேரா
னந்தநா யகனென் றோது நாமமுங் குமரன் பெற்றான்.

இ-ள். சுந்தரச்சிலையிராமன் றோற்றமுங் காட்டி - ஸ்ரீ கோதண்டராமரது கோலத்தையுங் காட்டி,—ஞானம் முந்திய பிரமானந்த முத்தியுங் கொடுத்து - ஞானத்தோடு முற்பட்ட பிரமசுகத்தைத்தரும் வீட்டையுங் கொடுத்து,—குமரன் - குமாரசுவாமியார்,—வேதமந்திரக்குகச்சுவாமி என்னவும் வாய்ந்து-வேதமந்திரரூபமான குகச்சுவாமி எனவும் பெயர் சிறந்து,—பேரானந்தநாயகன் என்றோது நாமமும் பெற்றான் - பேரானந்தநாயகன் என்னும் பெயரையும் பெற்றார். எ-று. (உ௮)

திருமுது கிரியி லீசன் றிருமுன்பு பொன்ன னீன்ற
கருதரும் புதல்வ னான கசன்றனைக் ககார மூன்று
மருவிய வகார மூன்று வகைபட வுபதே சித்துக்
குருபர னுயர்ந்த மாயா மயகுமா ரப்பேர் கொண்டான்.

இ-ள். திருமுதுகிரியில் ஈசன்றிருமுன்பு - விருத்தாசலத்திற் சிவசந்னிதானத்திலே,—பொன்னனீன்ற கருதரும்புதல்வனான கசன்றனக்கு - பொன்னன்பெற்ற எண்ணருமகனாகிய கசனுக்கு,—அகாரம் மூன்று - அவருண (முதலெழுத்தாகிய ஆகருடணம் அதிருச்சியம் அஞ்சனம் என்னும் மந்திரவித்தைகள்) மூன்றையும்,—மருவிய வகாரம் மூன்று - பொருந்திய வவருண (முதலெழுத்தாகவுடைய வசியம் வாதம் வயத்தம்பம் என்னும் மந்திரவித்தைகள்) மூன்றையும்,—வகைபட உபதேசித்து - முறைப்படப் போதித்து,—குருபரன் உயர்ந்த மாயாமய குமாரப்பேர் கொண்டான் - குமாரசுவாமி உயர்ந்த மாயாமயகுமாரர் என்னும் நாமத்தைப் பெற்றார். எ-று. (உ௯)

புகலுதற் கரிய மூகாம் புரியினிற் கபில யோகிக்
ககமகிழ் சிறந்து கால னாணையைக் கடக்க வேண்டித்
தகையமந் திரஞ்சொல் வாய்ந்த தந்திரம் பசும்பூ டாதித்
தொகை சொலிச் சகலலோக குருப்பெயர் சூட்டிக் கொண்டான்.

இ-ள். புகலுதற்கரிய மூகாம்புரியினில் - சொல்லற்கரிய மூகாம்புரியின்கண்ணே,—காலனாணையைக் கடக்கவேண்டித் தகைய கபிலயோகிக்கு - இயமனதாஞ்ஞையைக் கடக்கவிரும்பி (வழிபாட்டுத்) தகுதியையுடையனாய கபிலமுனிக்கு,—அகமகிழ்சிறந்து - மனப்பிரீதிமிக்கு,—மந்திரஞ் சொல்வாய்ந்த தந்திரம் பசும்பூடு ஆதித் தொகை சொலி - மந்திரம் பதஞ்சிறந்த நூல் பசியபூடு முதலியவற்றைத் தொகையாகக் கூறி,—சகலலோக குருப்பெயர் சூட்டிக்கொண்டான் - சகலலோககுரு என்னும் பெயரைப் பெற்றுக்கொண்டார். எ-று (௩0)

பரம்பிய தரங்கத் துங்க பத்திரை வடபா லாக
வருந்தவத் துயர்ந்த கோசி கப்பெய ரந்த ணாளன்
றிருந்துற ஞான மெல்லாந் தெளிதர வுணர்த்தி ஞானம்
பொருந்துதேசிகப்பேர் சூட்டிக் கொண்டனன் போர்வே லண்ணல்.

இ-ள். பரம்பிய தரங்கத் துங்கபத்திரை வடபாலாக - பரந்த திரைகளையுடைய துங்கபத்திரையாற்றின் வடபக்கத்திலே,—அருந்தவத்துயர்ந்த கோசிகப்பெயர் அந்தணாளன் - அரியதவத்திற்சிறந்த கோசிகனென்னும் பெயருடைய அந்தணனுக்கு,—திருந்துற ஞானமெல்லாந் தெளிதர உணர்த்தி - திருந்துமாறு ஞானங்களையெல்லாந் தெளியப் போதித்து,—போர்வேலண்ணல் ஞானம்பொருந்துதேசிகப்பேர் சூட்டிக்கொண்டனன் - வேலாயுதபிரான் ஞானதேசிகநாமத்தைத் தரித்துக்கொண்டார். எ-று. (ருக)

ஆரிடர் கேண்மோ மூவா றுனநன் னகரந் தோறுஞ்
சீருட னிருக்குந் தோற்றஞ் செயந்தியம் பதியிற் சந்தச்
சாரலின் வீர வாகின் றகையபே ரன்புக் காகக்
கூரிலை வேலோன் காட்ட லுளங்கொடு குறிப்பிற் சொற்றான்.

இ-ள். ஆரிடர் கேண்மோ - முனிவர்களே கேளுங்கள்,—கூரிலை வேலோன் - வேலாயுதபெருமான்,—மூவாறுன நன்னகரந்தோறுஞ் சீருடன் இருக்குந் தோற்றம் - (மேற்சுட்டிய) பதினெட்டாயநற்பதிகடோறுஞ் சிறப்போடு (தாம்) அமர்ந்த கோலத்தை,—செயந்தியம்பதியிற் சந்தச் சாரலின் வீரவாகின் றகையபேரன்புக்காகக் காட்டல் - செயந்திபுரத்துக் கந்தமாதனமலையிலே வீரவாகுவின் தக்க பெருங்காதலுக்காக(ப்பின்னுட்)காட்டுதலை,—உளங்குறிப்புக்கொடு சொற்றான் - (வியாசமுனிவன் சுகமுனிவனுக்குத்தன்) மனக்குறிப்பாற் கூறினான். எ-று

எவ்வாறு கூறினனெனின் அது வருஞ்செய்யுளிற் பெறப்படும் என்க. ()

சொற்றிடுஞ் செய்கை யெல்லாஞ் சூருரம் பிளந்த வேற்கைக்
கொற்றவ னினிமுன் னாகுங் கோகன தத்துள் ளானுக்
குற்றநற் கற்பத் தெல்லை யும்பர்வான் முனிவர் போற்ற
வற்புட னடிக்கு மென்ன வறிவொருங் குணர்த்தி னானால்.

இ-ள். சூருரம்பிளந்தவேற்கைக் கொற்றவன் - சூரசங்கார வேலாயுத பெருமான்,—இனிமுன்னாகுங் கோகனதத்துள்ளானுக்குற்ற நற்கற்பத் தெல்லை-மேல்வரும் பிரமகற்பாந்தத்திலே,—உம்பர் வான்முனிவர் போற்ற-தேவரும் மகாமுனிவருந் துதிக்க,—சொற்றிடுஞ் செய்கையெல்லாம் அற்புடன் நடிக்கும்-(மேலே பதினெண்டலங்களினு முளவென்று) சொல்லிய வரலாறுகளையெல்லாம் அன்போடு ஆடிக்காட்டுவார்,—என்ன அறிவு ஒருங்குணர்த்தினான் - என்று (வியாசமுனிவன் சுகமுனிவனுக்குச் செயந்தி விஷயமாகிய) ஞானத்தை முழுதும் போதித்தான். எ-று

இரண்டாமத்தியாயத்தின் முதலிற்றொட்டு வியாசன் சுகனுக்குப் போதித்தன இவ்வளவின் முடிந்தமையும் இனி இறுதிபோங்காறும் அச்சுகனது சரிதங் கூறப்படுதலுங் காண்க.

இனி இவ்வத்தியாயத்து முதறொட்டு இதுகாறுங்குறித்தபொருள்கள் ஆரியசெயந்திமான்மியத்தில்லாதன என்பதூஉமுணர்க. (ருரு)

ஒருங்குற வுணர்த்திப் பின்ன ருலகெலாந் தானே யாக
வருங்குகன் சரணச் செந்தா மரைமல ருள்ளத் தேத்தி
யருங்குளி ரிமயச் சார லரித்துவா ரத்தை நீங்கித்
தருங்கதி மூல மான வதரிகாச் சிரமஞ் சார்ந்தான்.

இ-ள். ஒருங்குற உணர்த்திப் பின்னர் - (வியாசமுனிவன் அங்ஙனம்) முற்றுகப் போதித்து முடித்து அதன்பின்பு,—உலகெலாந்தானேயாகவருங் குகன் சரணச்செந்தாமரைமலர் உள்ளத்து ஏத்தி - விச்சுவரூபியாகிய குக பிரானது பாதாரவிந்தங்களைத் தியானித்தலோடு துதித்து,—அருங்குளிர் இமயச்சாரல் அரித்துவாரத்தை நீங்கி - பொறுத்தலரியகுளிரையுடைய இமகிரிச்சாரலின் அரித்துவாரத்தை அகன்று,—சருங்கதிமூலமான வதரி காச்சிரமஞ் சார்ந்தான் - (கடவுளால்) உதவப்படும் நற்கதிக்குக் காரண மான வதரிகாச்சிரமத்தை அடைந்தான். எ-று (௯௪)

அழிவிலாச் சீவன் முத்த ஞஞ்சுக முனிவ னென்பான்
கழிபெருங் காதல் கூர்ந்து கடவுளர்க் குரிய ஞானம்
பொழிதருங் கருணைச் சிந்து புரத்திய றந்தை செவ்வாய்
வழிமதுச் செவிச்செவ் வாயான் மாந்தினன் மகிழ்வு பூத்தான்.

இ-ள். அழிவிலாச் சீவன்முத்தனுஞ் சுகமுனிவனென்பான் - அழி வற்றசீவன்முத்தனுகிய சுகமுனியானவன்,—கடவுளர்க்கு உரியஞானம் பொழிதருங் கருணைத்தந்தை - தேவர்கட்கும் உரிமையான ஞானத்தைப் போதிக்கும் அருட்குணமுடைய (வியாசமுனியென்னும்) பிதாவினது,— செவ்வாய் வழி சிந்துபுரத்தியன் மது - செய்யவா(யாகியகுகை)யினின்று வழிகின்ற செயந்திநகரின் சிறப்பாகிய தேனை,—செவிச்செவ்வாயாற் கழி பெருங் காதல்கூர்ந்து மாந்தினன் மகிழ்வுபூத்தான் - (தன்) காதாகிய செய்ய வாயினுற் கழிபேரன்புமிகுந்து உட்கொண்டவனுய்ப் பிரீதிபொலிந்தான். எ-று. (௯௫)

உயிரினுக் குயிராங் கந்த னுபயதா மரைப்பொற் பாதம்
பயிலுநெஞ் சகத்த னுகிப் பனிவரைச் சாரற் றூங்கும்
வியனுடை யரித்து வாரந் தன்னில்வீற் றிருந்து வேதத்
தியலுணர் கருத்து மீதூர்ந் தெண்ணின னெண்ணி யாங்கே.

விழிதுயில் வாரே போல மிக்குயர் பிராணு யாமத்
தழிவிலா யோக முற்றி யைந்தெனும் பிராண மாயைக்
குழுவினை யொன்ற தாகக் கூட்டமிட் டவையை மேலைச்
சுழுமுனை யதனிற் கூட்டித் தொடர்வினை யகற்றுந் தூயோன்.

இ-ள். தொடர்வினை அகற்றுந்தூயோன் - (இயமநியமங்களுடைமையி னுலே தன்னைத்) தொடரும்வினையை அகற்றுஞ் சுத்த(னுகிய அம்முனி வ)ன்,—பனிவரைச் சாரல் தூங்கும் வியனுடை அரித்துவாரந்தன்னில் வீற்றிருந்து - இமகிரிச்சாரலிலே (கங்கை) சொரியும் பெருமையையுடைய அரித்துவாரத்தில் வீற்றிருந்து,—மிக்குயர் பிராணுயாமத்து-மிகுந்துயர்ந்த பிராணுயாமஞ்செய்தலோடு,—மாயை ஐந்தெனும் பிராணக் குழுவினை ஒன்றதாகக் கூட்டமிட்டு அவையைச் சுழுமுனையதனின்மேலைக்கூட்டி - வஞ்சம்பொருந்திய ஐந்தாகிய இந்திரியங்களின் கூட்டத்தை ஒருவழிப்படக் கூட்டி அவற்றைச் சுழுமுனைவழியான் மேலே சேர்த்(தலாகிய பிரத்தியா காரஞ்செய்)து,—உயிரினுக்குயிராங் கந்தன் உபயதாமரைப் பொற்பாதம் பயிலும் நெஞ்சகத்தனுகி - ஆன்மாந்தரான்மாவாய சுவாமியின் உபயபாதார விந்தங்களுந் தங்கிய நெஞ்சினையுடையனுய்(த்தியானஞ்செய்து),—வேதத் தியல் உணர் கருத்து மீதூர்ந்து - சுருதிநெறியை உணர்ந்த மனத்தைத் தன்மேல் சிறுத்(தலாகிய தாரணையைச்செய்)து,—விழிதுயில்வார் போல

எண்ணிய ஆங்கே எண்ணினன் - சித்திரைசெய்வார்போலத் தியானிக்கப் பட்ட (பதியாகிய) அதனையே (உறைப்பத்) தியானித்த(லாகியசமாதி செய்த)வனாய்,—அழிவிலா யோகம் முற்றி - (இங்ஙனமே இயமம் நியமம் ஆசனம் பிராணாயாமம் பிரத்தியாகாரந் தியானந் தாரணை சமாதி என்னும் எட்டு அங்கங்களையுடைய) அழிவற்ற யோகத்தைச் செய்துமுடித்து. எ-று. (௩௬-௩௭)

அந்தரத் திடையா றுக வாறுமா முகத்துப் புத்தேள்
செந்திநன் னகரம் போற்றச் செல்வழித் திரும்பி நின்று
முந்துமா லரித்து வார முதுபனி யிமயச் சாரல்
புந்தியால் வணங்கி மீண்டும் போயினன் போகு மாற்றின்.

இ-ள். ஆறுமாமுகத்துப்புத்தேள் செந்திநன்னகரம்போற்ற அந்தரத்திடையாறுகச் செல்வழி - அறுமுகபெருமானது செந்தியம்பதியைத் தரிசிக்க ஆகாயமார்க்கமாகச் செல்லும்பொழுது,—முதுபனி இமயச்சாரல் முந்துமால் அரித்துவாரம் புந்தியால் வணங்கி மீண்டும் போயினன் - பழைய பனியையுடைய இமகிரிச்சாரலின் முற்பட்ட பெருமையையுடைய அரித்துவாரத்தைப் புத்தியினால் வணங்கி மீண்டுஞ் சென்றான்,—போகுமாற்றின்- அங்ஙனஞ்செல்லும்வழியிலே. எ-று. (௩௮)

வேறு.

பனிதாழ்வரைக் கேதாரமும் பழநான்மறை முழுதுந்
தனிபாடிய சோமீசுரன் றனையும்வலஞ் சூழ்ந்தான்
வினைதீர்தர வருள்காசி விசாலாட்சியெ னும்பூங்
கனிதோய்தரு பெருமானையுங் கண்டான்வினை காணான்.

இ-ள். வினை காணான் - கருமமலமொழிந்த(அச்சுதமுனி)வன்,— பனிதாழ்வரைக் கேதாரமும் - பனிதங்கிய மலையைச்சார்ந்த திருக்கேதார மூர்த்தியையும்,—பழநான்மறை முழுதுந் தனிபாடிய சோமீசுரன்றனையும்- பழைய சதுர்வேதமுழுதையுந் தனியேபாடிய சோமேசபெருமானையும்,— வலஞ்சூழ்ந்தான் - பிரதக்ஷிணஞ் செய்தவனாய் (வணங்கி),—வினைதீர்தர அருள் காசிவிசாலாட்சியெனும் பூங்கனி தோய்தரு பெருமானையுங் கண் டான்-வினைகளொழியுமாறு அருளுங் காசியின்கண் விசாலாட்சியென்னும் பூங்கனிபோல்வாரோடு சேர்ந்த (விச்சுவநாதக்)கடவுளையுந் தரிசித்தான். எ-று. (௩௯)

பெரிதாங்கதி வடிவாம்பிர யாகத்திரு நதியுந்
தரைமீதுய ரடலட்சய வடமுந்தழை தென்பாற்
குரியார்க்கருங் கதிகாட்டிய கெயையும்மவ னுறுசீ
ரரிபாதமுந் தொழுதானகத் தரன்றாளிணை தொழுதான்.

இ-ள். பெரிதாங்கதிவடிவாம் பிரயாகத்திருநதியும் - பெருங்கதிரூப மாகிய ஸ்ரீபிரயாகமகாநதியையும்,—தரைமீது உயர் அடல் அக்ஷயவடமும்- பூமியில் உயர்ந்த வெற்றியையுடைய அக்ஷயவடத்தையும்,—தென்பாற்குரி யார்க்குத் தழை அருங்கதி காட்டிய கெயையும் - பிதிரருக்கு உய்தற்கான அரியவழியைக் காட்டிய கயாதீர்த்தத்தையும்,—தொழுதான்-வணங்கினவ னாய்,—அவனுறு சீரரிபாதமும் அகத்து அரன்றாள் இணை தொழுதான் - ஆண்டுள்ள திருமாலின் பாதங்களையும் மனத்துச் சிவபாதங்களைப் பாவித்த தோடு வணங்கினான். எ-று. (௪0)

சகநாதமெ னும்புண்ணிய தலஞ்சூழ்ந் தொருமுனிவன்
மகளாகிய கோதாவரி வாறுறு படிந்து
துகடீர்தரு கோகன்னமுந் தொழுதேதிருப் பதியுங்
குகனேரியின் சீருங்கரங் குவித்தானைந்து மவித்தான்.

இ-ள். ஐந்துமவித்தான் - ஐந்தவாக்களையுமழித்த(அம்முனி)வன்,—சகநாதமெனும் புண்ணியதலஞ்சூழ்ந்து - சகந்நாதமென்னும் புண்ணிய ஸ்தலத்தையும் வலஞ்செய்து (வணங்கி),—ஒரு முனிவன் மகளாகிய கோதாவரிவாறுறு படிந்து - ஒப்பற்ற (கௌதம)முனிவனது மகளாகிய கோதாவரி மகாநதியின் மூழ்கி,—துகள் தீர்தரு கோகன்னமுந் தொழுதே - குற்றத்தைத் தீர்க்கும் கோகன்னத்தையும் வணக்கி,—திருப்பதியுங் குகனேரியின் சீருங் கரங் குவித்தான் - திருப்பதியையுங் குகனேரியின் சிறப்பையும் வணங்கினன். எ-று. (சக)

கச்சிப்பெரு மானைப்புடை களிக்குஞ்சிறு மானை
யச்சத்தொரு மானைத்தொட ரம்மானென னுறு மறைவாய்ப்
பச்சைப்பெரு மானைப்புணர் பதுமத்திரு மானை
யிச்சைப்படி தொழுதான்புக ழிறவான்வயின் பிறவான்.

இ-ள். புகழிறவான்வயின்பிறவான் - புகழழியாதவனும்(மீண்டு) கருவிற்பிறவாதவனும் ஆகிய (அம்முனி)வன்,—கச்சிப்பெருமானை-காஞ்சிபுரத்துச் சிவபெருமானையும்,—புடைகளிக்குஞ் சிறுமானை - (அவர்)பக்கத்தில் இன்புறுகின்ற (காமாட்சியாகிய) சிறியமானையும்,—அச்சத்து ஒருமானைத் தொடர் அம்மானெனனும் மறைவாய்ப் பச்சைப்பெருமானை - அச்சத்தைத் தந்த (மாரீசனென்னும்) ஒருமானைத் தொடர்ந்த அழகியபெரியோன் எனப்படும் வேதங்களை வாயிற்கொண்ட பச்சைநிறமுடைய விட்டுணுவையும்,—புணர் பதுமத்திருமானை - (அவரோடு) புணருந் தாமரையாசனமுடைய திருமகளையும்,—இச்சைப்படி தொழுதான் - விருப்பப்படி வணங்கினன். எ-று. (சஉ)

சொலகோபல நரசிங்கமத் தூமங்கல கிரிவாழ்
வலநீணர சிங்கம்புகழ் வலநாடு சுவாலைப்
பெலமார்நர சிங்கந்தனைப் பிரமாம்பிகை பெட்பார்
பலமாதல மொருமாதவப் படிவத்தினன் பணிந்தான்.

இ-ள். ஒருமாதவப் படிவத்தினன் - ஒப்பற்ற பெருந் தவவேடத்தையுடைய (அ)வன்,—சொல் அகோபல நரசிங்கம்-சொல்லப்படுகின்ற அகோபலத்தில் உள்ள நரசிங்கமூர்த்தியையும்,—மங்கலகிரி அத்து வாழ் வல நீள் நரசிங்கம் - மங்கலகிரியைச்சார்ந்து வாழ்கின்ற வலிமையினுயர்ந்த நரசிங்க மூர்த்தியையும்,—புகழ்வலநாடு சுவாலைப் பெலமார் நரசிங்கந்தனை - புகழினும் வெற்றியினும் (எவராலும்) விரும்பப்படுகின்ற சுவாலையில் வாழ்கின்ற வலிமையார்ந்த நரசிங்கத்தையும்,—பிரம அம்பிகை பெட்பு ஆர் பல மாதலம் - கடவுளும் அம்மையாரும் (அடியாரில்வைத்த) விருப்பத்தோடு ஆர்ந்த பல பெருந்தலங்களையும்,—பணிந்தான் - வணங்கினன். எ-று. (சங)

திருமுட்டவ ராகத்திரு மாலைத்திக ழிலந்தைத்
தருவைத்தண வாதேயவண் டாழ்வார்க்குயர் வாக்கி

வருமச்சுத னரநாரணன் மலர்த்தாளிணை வணங்கித்
திரைமுத்திள நிலவார்நரு மதையாருடன் சிறந்த;

தரங்கத்திரை பணிலத்திரை தருதுங்கபத் திரைநீர்
பரம்பத்திரை விரிசோணபத் திரைகண்டகி பவமா
மிரும்புக்கரம் போலாங்கவு சிகையாறிவை யைந்துங்
கரம்பற்றுற வெடுத்தாகமுங் கவினத்தெளித் தனனால்.

இ-ள். திருமுட்ட வராகத் திருமாலை - ஸ்ரீமுஷ்டத்திலுள்ள பன்றி வடிவாகிய விட்டுணுவையும்,—திகழ் இலந்தைத்தருவைத்தணவாதே அவண் தாழ்வார்க்கு உயர்வு ஆக்கிவரும் அச்சுதன் நர நாரணன் - விளங்குகின்ற இலந்தைமரத்தைப் பிரியாது (வதரியாச்சிரமமென்னும்) அவ்விடத்திலே வணங்குவார்க்கு உயர்ச்சியை ஆக்கிவரும் விட்டுணுவாகிய நரநாரணரையும,—மலர்த்தாளிணை வணங்கி - பாதாரவிந்தங்களிரண்டையும் நமஸ்கரித்து,—திரை முத்து இள் நிலவு ஆர் நருமதையாருடன் - திரைகளாலெறியப்படும் முத்துக்களின் இளநிலவு நிறைந்த நருமதையாற்றினுடனே,—சிறந்த தரங்கத்து இரை பணிலத்து இரை தரு துங்கபத்திரை - சிறந்த திரைகளின் ஒலியையுஞ் சங்குகளின் ஒலியையுந் தருகின்ற துங்கபத்திரையும்,—நீர் பரம்பத் திரை விரி சோணபத்திரை - ஜலம்பரவத் திரைகளை விரிக்கின்ற சோணபத்திரையும்,—கண்டகி - கண்டகியும்,—பவமாம் இரும்புக்கு அரம்போலாங் கவுசிகையாறு - பிறவியாய இரும்புக்கு அரம்போலாகிய கவுசிகையாறும் என்கிற,—இவையைந்தும் - இவ்வைந்து (யாறு)களிலும்,—கரம் பற்றுற எடுத்து ஆகமுங் கவினத்தெளித்தனன் - (தீர்த்தபிந்துக்களைக்) கையினால் ஆதரம்பொருந்த எடுத்து (ஆசமித்து) உடம்பிலுஞ் சிறக்கப் புரோக்ஷித்தனன். எ-று. (௪௪-௪௫)

நீடுந்தவ நேமிப்பெயர் நெடுமாவன மிருப்பார்
பீடொன்றிய விருதாண்மலர் பிடித்தான்சிர முடித்தான்
கோடும்பிறை முடித்தேமுது குன்றந்தனிற் குன்றா
தாடுங்குழ கன்றாளிணை யடைந்தான்றுய ரடையான்.

இ-ள். நீடுந்தவ் நேமிப்பெயர் நெடுமாவனம் இருப்பார் - உயர்ந்ததவத்தினையுடைய நைமிசாரணியம் என்னும் பெரிய வனததில் இருப்பவரது,—பீடொன்றிய இருதாண்மலர் பிடித்தான் சிரமுடித்தான் - பெருமையான உபயபாதாரவிந்தங்களையும் பற்றி உச்சிமேற்கொண்டான்,—முதுகுன்றந்தனில் - விருத்தாசலத்திலே,—கோடும்பிறை முடித்துக் குன்றாது ஆடுங் குழகன் - சந்திரகலையை அணிந்து குறையாது நடிக்குங் கடவுளினது,—தாளிணை அடைந்தான்-பாதங்களிரண்டையுஞ் சேர்ந்தான்,—துயர் அடையான் - (அதனால்) துன்பத்தை அடையானாயினன். எ-று. (௪௬)

சுருதித்தலை யண்ணாமலை தொழுதான்சுரர் போற்று
மருமைத்திருக் காளத்திசென் றடைந்தானன வரதம்
பரத்துட னடுஞ்சபை பணிந்தான்பணி மீதே
மருவித்துயில் கோவிந்தனை மதித்தன்பொடு துதித்தான்.

இ-ள். அண்ணாமலை சுருதித்தலை தொழுதான் - அண்ணாமலையில் வேதநாதரை வணங்கினான்,—காளத்திசென்று சுரர்போற்றும் அருமைத்திரு

அடைந்தான்-காளத்தியிற்போய்த் தேவர்துதிக்கும் (பெருமானுகிய) அருந்திருவைச் சேர்ந்தான்,—அனவரதம் பரதத்து உடன் ஆடுஞ் சபை பணிந்தான் - நித்தியமும் பரமாகிய பிரமம் அம்மையாரோடு நடிக்கும் (கனக) சபையை வணங்கினுன்,—பணிமீது மருவித் துயில் கோவிந்தனை அன்பொடு மதித்துத் துதித்தான் - சேடன்மேற் பொருந்தி உறங்குகின்ற விட்டுணுவை அன்போடு வினைந்து துதித்தான். எ-று (௬௭)

முத்தாங்கனி நாவற்கிடை முளைத்தானைக்கை முகிழ்த்தான்
சித்தாமல கத்தாடவித் தெத்தாத்திரெ யன்றாண்
மெய்த்தாமரை விரைப்போதினை மேவிப்பணிந் தேதன்
கைத்தாமரை குவித்தான்றிரைக் காவேரியி னிறங்கி.

இ-ள். முத்தாங்கனி நாவற்கிடை முளைத்தானைக் கைமுகிழ்த்தான் - முத்துப்போலுங்கனிகளையுடைய நாவலடியிற் சுயம்புவை வணங்கினுன்,—சித்தாமலகத்து ஆடவித் தெத்தாத்திரெயன் தாண்மெய்த்தாமரைவிரைப் போதினை மேவிப் பணிந்து - சித்தாமலகத்துக் காட்டிலுள்ள தெத்தாத்திரேயருடைய பாதாரவிந்தங்களைச் சேர்ந்து வணங்கி,—திரைக் காவேரியின் இறங்கித் தன் கைத்தாமரை குவித்தான்-திரைகளையுடைய காவேரியில் இறங்கித் தன் கைகளாகியதாமரைகளைக் கூப்பி(ஆசமனப்புரோக்ஷணங்களுஞ் செய்த)னன். ஏ-று.

இங்கே நாவற்கிடைமுளைத்தானை என்றார். கயாரணியத்துங் கடவுளை என்றார் இதன் முதனூலார். ஆண்டேநாவன்மரமும் உளதுபோலும்.

சித்தாமலகமும் ஒருதலமாயின் சித்தாமலகன் தான் தவித்தெத்தாத்திரெயன் தாள் என வகுத்துப் பொருள்கொள்ளப்படும். தவி-தவத்தி. (௬௮)

அரங்கத்தர வணைமேற்றுயி லாழிப்புய லிருதாட்
டரங்கைக்கொடு தாழ்ந்தானெறி தரங்கத்திரை பொன்னி
வரம்பெற்றதண் ணதிப்பாலிரு கரைவாழ்பதி யனைத்தும்
விரும்பித்துதித் திடபக்கிரி மீதாயனை வியந்தான்.

இ-ள். அரங்கத்து அரவணைமேற்றுயில் ஆழிப்புயல் இருதாள் தரங்கைக்கொடு தாழ்ந்தான் - திருவரங்கத்திலே சர்ப்பசயனத்துறங்குகின்ற விட்டுணுவின் உபயபாதங்களையும் அச்சத்தோடு கைக்கொண்டு வணங்கினுன்,—எறி தரங்கத்து இரை பொன்னி வரம்பெற்ற தண்ணதி - வீசுந் திரைகளால் இரைகின்ற காவேரியாகிய மேன்மைபெற்ற தண்ணியநதியினது,—இருபாற்கரை வாழ் பதியனைத்தும் விரும்பித்துதித்து - இருபுறக் கரைகளிலும் உள்ள தலங்களையெல்லாம் விரும்பித்துதித்து,—இடபக்கிரி மீது ஆயனை வியந்தான் - இடபமலையில் விட்டுணுவைத் துதித்தான். எ-று. (௬௯)

எட்டாகிய வெட்டாடவி னியைந்தேவிளை யாடு
மட்டார்புனற் பிறைதாங்கிய மதுராபுரிக் கரசாங்
கட்டாகிய கடம்பாடவிக் காமாரிநற் சரணந்
தொட்டாடிக்கொண் டாடிக்களி துளங்கத்துதித் தார்த்தான்.

இ-ள். கட்டாகிய கடம்பாடவி - உறுதியாகிய கடம்பவனத்தின் 'கண்ணே,—எட்டாகியவெட்டு ஆடலின் இயைந்து விளையாடு - அறுபத்து நான்கு திருவிளையாட்டுக்களோடு கூடி விளையாடிய,—மட்டார்புனற் பிறை தாங்கிய மதுராபுரிக்கரசாங் காமாரிநற் சரணம் - அளவார்ந்த கங்கையையும் பிறையையுந் தாங்கிய மதுரைநாயகராகிய சிவபிரானுடைய பாதங்களை,—தொட்டு ஆடிக் கொண்டாடிக் களிதுளங்கத் துதித்து ஆர்த்தான் - பரிசித்து ஆனந்தக்கூத்தாடிப் புகழ்ந்து களிப்புமிகத் துதித்து(த்தன்றுள்ளே) பந்தித்துக்கொண்டான். எ-று. (ருo)

பொதியாசலத் துயர்மாதவன் பூந்தாமரைச் சரணம்
விதியாலுடன் றுதித்தான்விதி வேதாகமப் பொருநை
நதியாடின னதியின்கரை யிருபாலுள நவைதீர்
பதியாமிரு வோர்வாழ்பதி பலவுந்தொழு தனறல்.

இ-ள். பொதியாசலத்து உயர்மாதவன் பூந்தாமரைச்சரணம் விதி ஆலுடன் துதித்தான் - பொதியமலையில் அகத்தியமாமுனிவரது பாதாரவிந்தங்களை'ப்பூசை)ச்செய்கை அமைதயோடு 'துதித்தான்,—வேதாகமவிதிப் பொருநைநதி ஆடினன் - வேதாகமவிதியாற் பொருநையாற்றின் மூழ்கினன்,—நதியின் இருபாற் கரை உள நவைதீர் பதியாம் - (அவ்)யாற்றின் இருபுறக் கரைகளிலும் உள்ள குற்றமற்ற தலங்களாகிய,—இருவோர் வாழ்பதி பலவுந் தொழுதனன் - இருவரும் வசிக்குந் தலங்கள் யாவற்றையும வணங்கினன். எ-று. (ருக)

பொருநைத்திரு நதிசங்கமப் புணரிப்புனன் மூழ்கி
யருமைக்கள கண்டத்தின ராற்றாரரை வணங்கி
மருமைக்குழற் கோதாவரி மகிழ்பூப்பச்சென் றாடித்
திருவுக்கணி மலர்போல்வளர் செயந்திப்பதி புகுந்தான்.

இ-ள். பொருநைத்திருநதி சங்கமப் புணரிப்புனன் மூழ்கி - பொருநையாறு பொருந்துமிடத்துச் சமுத்திரதீர்த்தத்தின் முழுகி,—அருமைக்கள கண்டத்தினர் ஆற்றூரரை வணங்கி - அரிய நீலகண்டராகிய ஆற்றூர்ப் பெருமானை வணங்கி,—மருமைக்குழற் கோதாவரி மகிழ்பூப்பச் சென்றாடி - நறுங்கருங்கூந்தலையுடைய கோதாவரியின் மகிழ்பெருகப் போய்முழுகி,—திருவுக்கு அணி மலர்போல் வளர் செயந்திப்பதி புகுந்தான் - இலக்குமிக்கு (வாசமாகிய) அழகிய பூப்போல வளருகின்ற செயந்திநகரிற் பிரவேசித்தான். எ-று. (ருஉ)

மீதாறின னிருந்தேகந்த வெற்புஞ்சிந்து புரமு
மோதாதுணர் வான்றாளிணை யுளங்கொண்டுடன் றாழ்ந்தான்
றாதான்மயங் காப்பூசுரர் தமையஞ்சலி செலுத்திக்
கோதாமத நீத்தைந்து குரோசத்தெல்லை சூழ்ந்து.

இ-ள். மீதாறினன் இருந்து - ஆகாயநெறியினையுடைய(அச்சுகமுனி)வன் (அச்செயந்தியெல்லையிலே) தங்கி,—ஓதாதுணர்வான் தாளிணை உளங்கொண்டு உடன் கந்தவெற்புஞ் சிந்துபுரமுந் தாழ்ந்தான் - (குருவாகிய) வியாசமுனிவனுடைய உபயபாதங்களையுந் தியானித்துக்கொண்டு உடனே கந்தமாதனமலையையுஞ் செயந்திபுரத்தையும் நோக்கி நமஸ்கரித்தவனாய்,—தாதான் மயங்காப் பூசுரர்தமை அஞ்சலிசெலுத்தி - பொன்னினான் மயங்

காத (திரிசுவதந்திரப்) பிராமணரை (நோக்கி) அஞ்சலிசெய்து,—கோதாம். மதம் நீத்து ஐந்துகுரோசத்து எல்லை சூழ்ந்து-குற்றமாகிய மதத்தை ஒழித்து ஐந்துகுரோசத்ததாகிய (அச்செயந்தியின்) எல்லையை வலஞ்செய்து. எ-று. (௫௩)

இரவித்தடந் தேர்தோய்ந்தெழு மிரவிப்பெயர்ச் சந்த
வரையிற்கடி திழிந்தவ்வழி வளர்பூசுரர் வழங்கு
மருமைச்சுரு தியின்வாய்ந்தன வாறுவருக் கியமும்
பருவத்துடன் வாங்கித்திரை வதனாரம்பம் படிந்தான்.

இ-ள். இரவித்தடந்தேர் தோய்ந்தெழுஞ் சந்த இரவிப்பெயர் வரையிற் கடிதிழிந்து - சூரியனது மகாரதத்தை அளாந்துயர்ந்த கந்தமாதன மலை என்னும் மலையில் விரைந்திறங்கி,—அவ்வழி வளர் பூசுரர் பருவத்துடன் வழங்கும் - ஆண்டு (ஞானம்)வளர்ந்த பிராமணர் கொண்டாட்டத்தோடு கொடுத்த,—அருமைச் சுருதியின் வாய்ந்தன ஆறு அருக்கியமும் வாங்கி - அரிய வேத(மந்திராபிமந்திரண)த்திற் சிறந்த (மேன்மை)நீங்காத அருக்கியத்தையும் ஏற்று,—திரைவதனாரம்பம் படிந்தான் - முகாரம்பதீர்த்தத்து முழுகினான். எ-று. (௫௪)

கங்கைக்கெழு மடங்காங்கடற் கரைக்கந்தபுட் கரிணி
சங்கற்பவி கற்பத்தொடு தாழ்ந்தான்றவத் துயர்ந்தா
னங்கற்புத நிறைதீர்த்தமொ ரறுநான்கினும் படிந்தான்
றிங்கட்பிள வளவுஞ்சடைச் சிவன்றாள்சிரம் புனைந்தான்.

இ-ள். தவத்துயர்ந்தான் - தவத்தானுயர்ந்த(அம்முனி)வன்,—கங்கைக்கெழு மடங்காங் கடற்கரைக் கந்தபுட்கரிணி சங்கற்பவிகற்பத்தொடு தாழ்ந்தான - கங்கையினெழு மடங்காகிய சமுத்திரதீரத்துள்ள கந்தபுட்கரிணியிலே சங்கற்பவகைகளோடு முழுகினான்,—அங்கு அற்புதநிறை தீர்த்தமொரறுநான்கினும் படிந்தான் - அநேக அதிசயநிரம்பிய இருபத்துநான்குதீர்த்தங்களினும முழுகினான்,—திங்கட்பிளவளவுஞ்சடைச் சிவனாருள் சிரம்புனைந்தான் - சந்திரகண்டமணிந்த சடையினையுடைய சிவபெருமானது திருவடியை உச்சிமேற்கொண்டான். எ-று. (௫௫)

போரானைமு கத்தானடிப் போதாகமவி தியிற்
பேராதரத் தாராதனை பிறழாநெறி புரிந்தா
னாராவமு தடித்தாமரை யணிநூபுர மணியிற்
சீராலுறு நவவீரர்க டிருத்தாண்மலர் துதித்தான்.

இ - ள். போரானைமுகத்தான் அடிப்போது - யானைமுகக்கடவுளினுடைய திருவடிமலர்களுக்கு,—ஆகமவிதியிற் பிறழாநெறி பேராதரத்து ஆராதனை புரிந்தான் - சிவாகமவிதியின் மாறுவண்ணம் பெருங்காதலோடு பூசைசெய்தான்,—ஆராவமுது அடித்தாமரை அணிநூபுரமணியிற் சீராலுறு நவவீரர்கள் திருத்தாண்மலர் துதித்தான்-உமையம்மையாருடைய பாதபங்கயங்களின் அழகிய சிலம்புகளிற் பரந்த இரத்தினசத்திகளினின்று சிறப்போடு தோன்றிய நவவீரர்களுடைய ஸ்ரீபாதபங்கயங்களைத் துதித்தான். எ-று. (௫௬)

அயிராவதக் தருமாதினை யடித்தாமரைப் போதுங்
குயில்வாய்மொழிக் குறக்கோமளக் கொடித்தாமரை யடியுங்

துயின் மாலையு முவணத்தையுஞ் சூழ்தேவர்க டமையுஞ்
செயிர்தீர்மனு விதியான்மல ரிறைத்தேசிரங் குவித்தான்.

இ-ள். அயிராவதந்தருமாது இணையடித்தாமரைப்போதும் - தெய்வயானையம்மையாருடைய உபயபாதாரவிந்தங்களையும்,—குயில்வாய்மொழிக் கோமளக் குறக்கொடித் தாமரையடியும் - குயிலிசைபோலு மொழியையுடைய அழகாகிய வள்ளியம்மையாரது பாதாரவிந்தங்களையும்,—துயின் மாலையும் உவணத்தையுஞ் சூழ்தேவர்கடமையுஞ் செயிர்தீர்மனு -(தம்மைச் செபித்துத்) துயிலுகின்ற மாலையுங் கருடனையுஞ் சூழ்ந்த தேவர்களையுந் துன்பத்தினீக்கிய மந்திரங்களால்,—விதியான் மலரிறைத்துச் சிரங்குவித்தான்-விதிப்படி அருச்சித்து(க் கைகளை) உச்சிமேற் கூப்பினான். எ-று. ()

பொன்னீடுவி மானத்துருப் போலாந்திசை முகனின்
னன்னேயமுச் சூலச்சகந் நாதச்சிவக் கொழுந்தைத்
தன்னேரிலம் முனிபுங்கவன் றகுசோடச விதியா
லின்னேயருள் வீரென்றல ரிறைத்தான் வினைகுறைத்தான்.

இ-ள். நீடு பொன்விமானத்து உரு ஆந் திசைமுகன் - உயர்ந்த பொன் விமானவடிவாகிய பிரமதேவரது —இன் நன்னேய முச்சூலச் சகந்நாதச் சிவக்கொழுந்தை - இனிய நல்லன்புக்கு இலக்காகிய சூலப்படையையுடைய சகந்நாதரென்னுஞ் சிவபெருமானை,—தன்னேரில் அம்முனிபுங்கவன் - தன்னிகரில்லாத அம்முனிச்சிரேட்டன்,—தகுசோடசவிதியால் இன்னே அருள்வீரென்று அலரிறைத்தான் - தக்க பதினாறுபசாரங்களோடு இப்போதே அருள்செய்கவென்று அருச்சித்தான்,—வினைகுறைத்தான் - (அதனால் தன்) கருமத்தைத் தேய்த்தான். எ-று. (ருஅ)

சுரர்மாதவர் முறைசூழ்தரத் துளவோனருண் மடவா
ரிருபாலுற நெடுவேலொடு மிகற்சூர்ப்பகை தணிப்பான்
வருகாரண மாய்முக்குணங் கடந்தானந்த மயமா
முருகேசனை யிமையாதுள மோனத்தொடு பார்த்தான்.

இ-ள். சுரர்மாதவர் முறை சூழ்தர - தேவரும் முனிவரும் முறையாற் சூழ,—துளவோனருள் மடவார் இருபாலுற - திருமால்பயந்த அம்மைமார் இருபுறத்தும் இருப்ப,—நெடுவேலொடும் - உயர்ந்த வேலாயுதத்தோடும்,—இகற் சூர்ப்பகை தணிப்பான் வரு காரணமாய் முக்குணங்கடந்து ஆனந்த மயமாம் முருகேசனை - வலிமையையுடைய சூரனாகியசத்துருவைச் சங்கரிக்க வந்த காரணமாய் முக்குணங்களையுங் கடந்து ஆனந்தரூபியான முருகக்கடவுளை,—இமையாது உளம் மோனத்தொடு பார்த்தான் - கண் ணிமையாமல் மனம்பொருந்த மௌனத்தோடு பார்த்தான். எ-று. (ருக)

பார்த்தான் பதினாறும்விதிப் படிபூசனை பரிவிற்
கூர்த்தாறு முகேசன்பதக் கொழுங்கோகனை தப்பூத்
தூர்த்தான்விழிப் புனன்மாமழை சொரிந்தான்மயிர்க் கூச்சுப்
போர்த்தான்கரங் குவித்தஞ்சலி புரிந்தாவலிற் புகழ்வான்.

இ-ள். பார்த்தான் - (அங்ஙனம்) பார்த்த முனிவன்,—விதிப்படி பதினாறும் பூசனை பரிவிற் கூர்த்து-விதியின்படி பதினாறுபசாரங்களோடாகிய பூசையை அன்பான் மிகச்செய்து,—ஆறுமுகேசன் தொழும் பதக் கோகன

தம் பூத் தூர்த்தான் - ஆறுமுகபெருமானது ஸ்ரீ பாதாரவிந்தங்களிற் பூக்களைத் தூவினவனுய்,—விழிப்புனன்மாமழை சொரிந்தான் - கண்ணீர்ப் பெருமழை சொரிந்து,—மயிர்க்கூச்சப் போர்த்தான் - மயிர்ச்சிலிர்ப்பான் மூடப்பட்டவனுய்,—கரங்குவித்து அஞ்சலிபுரிந்து ஆவலிற் புகழ்வான் - கைகளைக்கூப்பி அஞ்சலியாக்கி விருப்பத்தோடு துதிப்பான். எ-று. (சுo)

வேறு.

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன்மா மயிலாய் போற்றி
முன்னிய கருணை யாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னிய ரிருவர் நீங்காக் கருணைவா ரிதியே போற்றி
யென்னிரு கண்ணே கண்ணு ளிருக்குமா மணியே போற்றி.

இ-ள். பன்னிருகரத்தாய் போற்றி - பன்னிரண்டு திருக்கரங்களை யுடையீர் காக்க,—பசும்பொன்மாமயிலாய் போற்றி - பசுமையாகிய அழகிய பெரிய மயிலையுடையீர் காக்க,—முன்னியகருணை ஆறுமுகப்பரம்பொருளே போற்றி - முற்பட்ட கிருபையையுடைய சண்முகபதியே காக்க,—கன்னியரிருவர் நீங்காக் கருணைவாரிதியே போற்றி - அம்மைமாரிருவரும் அகலாத கிருபாசமுத்திரமே காக்க,—என்னிருகண்ணே கண்ணுளிருக்கும் மாமணியே போற்றி - என்னிரண்டுகண்களுமானீர் கண்களினுள்ளிருக்கும் பெருமையானமணிகளுமானீர் காக்க எ-று. (சுக)

கருணைமா றாதுள் ளூறுங் கண்கள்பன் னிரண்டி னுலே
யிருவினை களைந்த மேலோர்க் கினியவா னந்த மெல்லாம்
வரன்முறை பெருக்கி யன்னோர் மனமெனுங் கோயிற் றாண்டாத்
திருவிளக் கொளியாம் வைவேற் செயந்தியம் பதியாய் போற்றி.

இ-ள். கருணை மாறாது உள்ளூறுங் கண்கள்பன்னிரண்டினுல்-அருள் ஒழியாது உள்ளே ஊறுகின்ற பன்னிரண்டு திருக்கண்களாலும்,—இருவினை களைந்த மேலோர்க்கு இனியவானந்தமெல்லாம் வரன்முறை பெருக்கி - இருவினைகளை ஒழித்த சத்துக்களுக்கு இனிய சுகங்களையெல்லாம் வரலாற்றுவழியே பெருகச்செய்து,—அன்னோர் மனமெனுங் கோயில் தாண்டாத் திருவிளக்கொளியாம் - அவரது உள்ளங்களாகிய கோயில்களிலே தாண்டவேண்டாத திவ்விய தீபகாந்தியாயிருக்கும்,—வைவேற் செயந்தியம்பதியாய் போற்றி - கூரிய வேலையுடைய செயந்திபுரேசரே காக்க. எ-று. (சுஉ)

அருஞ்சகந் நாதா செம்பொன் னுழியங் கடவுள் வேதன்
பொருஞ்சமர் வீர வாகு பொருதலைத் தெறியுந் தெண்ணீர்க்
கருங்கடல் வணங்கு நோன்றுட் கலவமா மயிலாய் தேவி
தருஞ்சிறு குருந்தே வானோர் தமக்கெலாங் குருவே போற்றி.

இ-ள். அருஞ்சகந்நாதா - அரிய உலக நாயகரே,—செம்பொன் ஆழி அங்கடவுள்-இலக்குமியையுஞ் சக்கிரத்தையும் உடைய விட்டுணுவாலும்,—வேதன் - பிரமாவாலும்,—பொருஞ்சமர் வீரவாகு பொருகின்றபோரினை யுடைய வீரவாகுவாலும்,—பொருது அலைத்து எறியுந் தெண்ணீர்க் கருங் கடல் - பொருது திரைத்து எறியுந் தெள்ளிய நீரையுடைய கரியகடலாலும்,—வணங்கு நோன்றுட் கலவமாமயிலாய் - வணங்கப்படும் வலிய பாத

ங்களையுடைய மயில்வாகனக் கடவுளே,—தேவி தருஞ் சிறுகுருந்தே - அம்மையார் பயந்த சிறுகுழந்தையே,—வானோர்தமக்கெலாங் குருவே போற்றி-தேவர்க்கெல்லாங் குருவே காக்க. எ-று. (௬௩)

வேறு.

ஓர்வடிவ மரமிரண்டு வினைக்கவடு மலமூன் றுயர் வேர்வைத்
தறமாதி நான்குபழம் பழுத்தே, யார்பூத மஞ்சுசிறு கப்பாகி
யாறு மருங்காம முதற்றழைவைத் தெழுதாது தோலா, யேர்புரி
யட் டகமாய வெண்பூக்கொண் டொன்பா னெனும்வாயிற் கணு
வைத்துத் திசைபத்து நிழலாஞ், சீர்பெருகு பலமரங்க ளினவா
க்கி வளர்க்குஞ் சிந்துபுரக் குமராவுன் செஞ்சரணம் போற்றி.

இ-ள். ஓர்வடிவ மரம் - ஒருடம்பாகிய மரம்,—இரண்டுவினைக் கவடு மலமூன்று உயர்வேர் வைத்து - இருவினைகளாகிய கவடுகளோடு மும்மலங்களாகிய உயர்ந்த வேர்களை வைத்து,—அறமாதி நான்குபழம் பழுத்து-தருமமுதலிய நான்குபழங்கள் பழுத்து,—ஆர் பூத மஞ்சு சிறு கப்பாகி - ஆர்ந்த பஞ்சபூதங்களாகிய சிறு கொப்புகளுடையதாய்,—அருங்காமமுதல் ஆறுந் தழைவைத்து - அரிய காமாதியாறுகிய தழைகளை வைத்து,—எழுதாது தோலாய்-சத்ததாதுக்களாகிய தோலுள்ளதாய்,—ஏர்புரியட்டகமாய எண் பூக்கொண்டு - அழகிய புரியட்டகங்களாகிய எண்மலர்களைக்கொண்டு,—ஒன்பானெனும் வாயிற் கணுவைத்து - நவத்துவாரங்களாகிய கணுக்களைத் தாங்கி,—திசைபத்தும் நிழலாம் - பத்துத்திசைகளிலும் நிழலைச்செய்வதாம்,—இன சீர் பெருகு பலமரங்கள் ஆக்கி வளர்க்குஞ் சிந்துபுரக் குமரா உன் செஞ்சரணம் போற்றி - இவ்வியல்புடைய சிறப்புமிக்கு பலமரங்களை ஆக்கிவளர்க்கின்ற செயந்திபுரத்துக் குமாரசுவாமீ உம்முடைய ஸ்ரீபாதங்கள் காக்க. எ-று. (௬௪)

சாற்றியகம் மொளியாகிக் கம்மெனுமிந் திரியந் தமைக்கடந்து
ககமென்னுஞ் சுரர்கணத்தின் பதியாய்ப், போற்றுகக மயிலுகை
த்துக் கம்மெனுமின் புருவாய்ப் புகல்கமெனிந் திரியவணி பூண்ப
வனுமாகி, யாற்றலுறு கம்மான வாகாயந் தனக்கு மாதிநடு முடி
வாகி யடியேனுக் கிருதா, ளேற்றமுள்ள கதிகாட்டி யெனையா
ண்ட சுடர்வே லேந்துகரச் சிந்துபுரத் திறைபோற்றி போற்றி.

இ-ள். சாற்றிய கம் ஒளியாகி - சொல்லப்பட்ட கம்மென்னுஞ் சூரியனாகி,—கம் எனும் இந்திரியந்தமைக் கடந்து - கம் என்னும் இந்திரியங்களைக் கடந்து,—ககர் என்னுஞ் சுரர்கணத்தின் பதியாய் - ககர் என்னுந் தேவர்களுடைய கூட்டத்தின் தலைவராய்,—போற்று கக மயில் உகைத்து-துதிக்கின்ற பறவையாகிய மயிலைச் செலுத்தி,—கம் எனும் இன்புருவாய்-கம் என்னும் இன்பமே வடிவமாய்,—புகல் கம் என் இந்திரியவணி பூண்பவனுமாகி - (கற்பித்துச்)சொல்லப்படுகின்ற கம் என்னும் இந்திரியங்களாகிய அணிகளைத் தாங்குபவருமாய்,—ஆற்றலுறு கம் ஆன ஆகாயந் தனக்கும் ஆதி நடு முடிவாகி - தாங்குகின்ற கம் என்னும் ஆகாயத்துக்கும் முதலிடைகடைகளாய்,—அடியேனுக்கு இருதாள் ஏற்றமுள கதிகாட்டி எனையாண்ட சுடர்வேல் ஏந்துகரச் சிந்துபுரத்திறை போற்றி போற்றி - தமியேனுக்கு உபயபாதங்களாகிய உயர்ந்தகதியைக்காட்டித் தமியேனையாண்ட சோதிவேற்கரத்துச் செயந்திபுரேசரே காக்க காக்க. எ-று

கம்=சூரியன், இந்திரியம், இன்பம், ஆகாயம். ககர்=தேவர். ககம்= பட்சி. ஈண்டுக் ககரம் ஆரியத்தின் இரண்டாங் ககரமாம். “கம்ஸா தீதம் கலைகச் சேவ்யம் சதாரூடம் சபூஷணம், காந்தம் காதிம் கமத்யம்ச காகிர் நிம் ப்ரணமாம் யகம்” என்னும் முதனூற் சுலோகப்பற்றி இங்ஙனம் மொழிபெயர்க்கப்பட்டது. மேலும் இவ்வாறுவருதல் காண்க. (௬௫)

வேறு.

கருதரு ஞான மாய கருத்தெனும் விளக்கும் வானப்
பரிதியங் கதிரின் மூத்துப் படிவம்போ மளவை யாமூ
விருசுட ரனைத்து மொன்றா யியற்றியே யோர் பரம மாக
குருவடி வாகி வந்த குமரனே போற்றி போற்றி.

இ-ள். கருதரும் ஞானமாய - நினைத்தல் கூடாத ஞானமே வடிவமான,—கருத்து எனும் விளக்கும் வானப்பரிதி - (அடியார்க்கு அகவிருளை நீக்கி அவர்) கருத்துக்கள் எலற்றையும் விளக்கும் ஞான) ஆகாயத்துச் சூரியனாகிய சிவபெருமான்,—அங்கதிரின் மூத்து - அருட்பிரகாசத்தின் முதிர்ந்து,—படிவம் அளவையாய்ப் போம் மூவிருசுடரையும் ஒன்று யியற்றி - (அளவிடப்படாததாமது) திருமேனியினின்று அளவுடையதாகப் போகச்செய்த ஆறுபொறிகளையும் ஒன்றுயமைத்த,—ஓர் பரமமாக குருவடிவாகி வந்தகுமரனே போற்றி போற்றி - ஒப்பில்லாத பரம மகா ஆனந்த குருரூபமாய்வந்த குமாரரே காக்க காக்க. எ-று. (௬௬)

இருமையி னுண்மை மூவா விளமைசேர் ஞானி யோர்தம்
விரிதரு தியான மேவி மேயவிந் திரியத் தாலுந்
தெரிதர லரிதா யார்க்குந் தேற்றரு நுட்ப மாகுஞ்
சரவணத் தளிமஞ் சாருஞ் சண்முகத் திறையே போற்றி.

இ-ள். இருமையில் நுண்மை மூவா இளமைசேர் ஞானியோர்தம் விரிதரு தியானம் மேவி - இருவினையுமில்லாத மதிநுட்பமழியாத இளமையைச்சேர்ந்த ஞானிகளினுடைய விரிந்ததியானத்தைப்பொருந்தி,—மேய இந்திரியத்தால் தெரிதரல் அரிதாய் - (ஏனையோர்க்குப்) பொருந்திய இந்திரியங்களால் அறிதல்கூடாமையாய்,—யார்க்குந் தேற்றரு நுட்பமாகும் - எவராலுந் தெளிதல்கூடாத நுண்பொருளாகிய,—சரவணத் தளிமஞ் சாருஞ் சண்முகத்திறையே போற்றி - சரவணவாவியிற் (புஷ்ப) சயனத்தைச்சார்ந்த அறுமுகக்கடவுளே காக்க. எ-று. (௬எ)

வேறு.

கோவான வினனுகிக் கோவான புவனிக் குழுவினையு நடத்தி யந்தக் கோவான் றுறக்கக், கோவாகிக் கோவான பசுபதியு மாகிக் குகையான் விதயமெனுங் கூடாகி வாக்கான், கோவாலும் விழி யான கோவாலும் புவன கோடியிலுண் டானசரா சரமனைத்தி னையுங், கோவாகிப் புரந்தளிய னுளக்கமலத் துள்ளே குடியிருக்கு மருட்கடம்பக் குமரனடி போற்றி.

இ-ள். கோவான இனனுகி - கோவென்னுஞ் சூரியனுகி,—கோவான புவனிக் குழுவினையும் நடத்தி - கோவென்னும் புவனங்களின் கூட்டத்தையும் பிரேரித்து,—அந்தக் கோவான துறக்கக் கோவாகி - அழகினையுடைய கோவென்னுஞ் சுவர்க்கத்துக்குத் தலைவனுகி,—கோவான பசுபதியு

மாகி - கோவென்னும் பசுக்களுக்குப் பதியுமாகி,—குகையான இதயமெ னும் கூடாகி - குகையென்னும் (அன்பரது) மனமாகிய வாசஸ்தானத்தை யுடையவராகி,—வாக்காங் கோவாலும் விழியான கோவாலும் புவன கோடியிலுண்டான சர மசரயனைத்தினையுங் கோவாகிப் புரந்து - திருவாக் காகிய கோவினாலுந் திருக்கண்ணாகிய கோவினாலும் அனேக புவனங்களி லுள்ள சங்கமஸ்தாவரங்களையெல்லாம் நாயகராய்க் காத்து,—அளியன் உளக்கமலத்துள்ளே குடியிருக்கும் அருட்கடம்பக் குமரனடி போற்றி - அடியேனது இதயதாமரையினுள்ளே வசிக்கின்ற அருளினையுடைய கடப்ப மாலையையணிந்த குமாரபெருமானது திருவடிகள் காக்க. எ-று

கோ என்னும் பலபொருளொருசொல்லின் ககரம் ஆரியத்தின் மூன்றாங் ககரமாம். (௬௮)

ஞானவடி வாகிமுது ஞானவிதை யாகு நன்னுதலின் முலையமு துக் கின்குழவி யாகி, ஞானமெனும் பாற்கடலி னடுச்சுழிய தாகி ஞானநிழ லாம்பெரியர் நல்லிடமு மாகி, ஞானநிறை கதிராகி ஞானியர்க்கு மெட்டா ஞானவிரு சத்தியுட னிருந்தெவையுங் காத்து, ஞானமொடு வடநிழலி னிருப்பார்க்கும் விருப்பா ஞான வுரை விரித்தகுரு நாதனடி போற்றி.

இ-ள். ஞானவடிவாகி - ஞானரூபமாகி,—முதுஞான விதையாகும் நன்னுதலின் முலையமுதுக்கு இன்குழவியாகி - பழைய ஞானகாரணமா கும் உமையம்மையாருடைய திருமுலைப்பாலுக்கு இனியகுழந்தையாய்,— ஞானமெனும் பாற்கடலின் நடுச்சுழியதாகி - சிவஞானநூலென்னும் பாற் கடலின் நடுவிற் சுழியாகி,—பெரியர் ஞானநிழலாம் நல்லிடமுமாகி - பெரி யோர்களுக்கு ஞானமென்னும் நிழலைக் கொடுக்கின்ற நல்லவிடமுமாகி,— ஞானநிறை கதிராகி - ஞானநிறைந்த சூரியனாகி,—ஞானியர்க்கும் எட்டா ஞானவிருசத்தியுடன் இருந்து எவையுங் காத்து - ஞானிகளுக்கும் எட் டாத ஞானத்தையுடைய இரண்டுசத்திகளோடும் இருந்து எவற்றையுங் காத்து,—ஞானமொடு வடநிழலின் இருப்பார்க்கும் விருப்பா ஞானவுரை விரித்த குருநாதனடி போற்றி - ஞானம்போதித்தலோடு கல்லாலநிழலி லிருந்தவருக்கும் விருப்பாகிய ஞானமொழியைப்போதித்த குருமூர்த்தியின் பாதங்கள் காக்க. எ-று. (௬௯)

விரிக்குமிளங் கதிராகி மேவியந்தச் சுடரை விளக்குவிக்கு மவனாகி விளங்குமிளங் கதிராற், பெருக்குமயன் மாலீசன் போற் படைத்துங் காத்தும் பின்றுடைத்துஞ் சிவனிதயப் பேரிடத்து நிறைவாய், நெருக்கியவுற் பவமுதல வாறுகும் பருவ நிறையுமந்த வடிவகன்று நினைவார்க ளுளத்தே, யிருக்குமிருக் கறியாத பரம் பொருளு மாகி யென்னுவிற் குடியிருக்குங் குமரனடி போற்றி.

இ-ள். விரிக்கும் இளங்கதிராகி-(ஒளியை) விரிக்கும் பாலசூரியன் போன்று,—அந்தச்சுடரைமேவி விளக்குவிக்குமவனாகி - அச்சூரியனைக் கலந்து விளக்குபவராகி,—விளங்கும் இளங்கதிரால் - பிரகாசிக்கின்ற பால சோதியோடு,—பெருக்கும் அயன் மாலீசன்போற் படைத்துங் காத்தும் பின் துடைத்தும் - பெரிய பிரமவிட்டுணுருத்திரர்போலச் சிருட்டித்துந் திதித்துஞ் சங்கரித்தும்,—சிவன் இதயப்பேரிடத்து நிறைவாய் - சிவபெரு

மானுடைய இருதயமாகியபேரிடத்தில் விறைந்து,—நெருங்கிய உற்பவம் முதல ஆறுரும் பருவம் நிறையும் அந்தவடிவு அகன்று - நெருங்கிய உற்பவ தசைமுதலிய ஆறுதசைகளும் நிறைந்த அவ்வுருவத்தை நீங்கி,—வினைவளர்கள் உளத்தே இருக்கும் இருக்கறியாத பரம்பொருளுமாகி - தியாதாக்களின் சித்தத்தே வசிக்கும் வேதமறியாத பரமவஸ்துவுமாகி,—என்னுவிற் குடியிருக்குங் குமரனடி போற்றி - அடியேனது நாக்கின்கண்ணே தங்குகின்ற குமாரபெருமானது திருவடிகள் காக்க. எ-று.

தசைகள் ஆறுவன: உற்பத்திதசை, பாலியதசை, யௌவனதசை, வயோதிகதசை, விருத்ததசை, மரணதசை என்பனவாம். (௭௰)

வேறு.

காமமே முதல வாறுங் களிதரும் பருவ மாறு
மோமெனும் பொருண்முன் றுன வுயர்தரு கோசமாறுந்
தோமறு சுவைக ளாறுஞ் சூத்திர மாறு மாகத்
தாமொரு வடிவ மான சண்முக சரணம் போற்றி.

இ-ள். காமமே முதல ஆறும் - காமம் முதலிய ஆறும்,—களிதரும் பருவம் ஆறும் - களிப்பைத்தருகின்ற பருவங்கள் ஆறும்,—ஓமெனும் பொருண்முன்றுன உயர்தரு கோசமாறும் - பிரணவகோசம் முதலிய உயர்ந்த கோசங்கள் ஆறும்,—தோமறு சுவைகள் ஆறும்-குற்றமற்ற சுவைகளாறும்,—சூத்திரம் ஆறும் - சூத்திரங்கள் ஆறும்,—ஆக - (ஆற்றியும் மாற்றியும் பிரேரிக்கப்படுவன) ஆகும்பொருட்டு(ப் போலும்),— ஒரு வடிவமான சண்முக சரணம் போற்றி - ஏகரூபமான ஆறுமுகக்கடவுளை சரணம்; காக்க.

கோசங்கள் பிரணவகோசம், அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் என்பனவாம். இவற்றுண் முன்னதின் உண்மை இந்நாலிற்றனே காணப்படுகின்றது. மற்றைய ஐந்தும் ஆன்மாவோடு தொடர்புடையனபோலக் காணப்படினும் உண்மையால் அவ்வாறுகாதனவாகிய சரீரம் பிராணன் மனம்விஞ்ஞானம் ஆனந்தம் என்னும் இவையே என்று வேதாந்தத்துக் கூறப்பட்டன. (௭௧)

வேறு.

பக்கமென வாங்கருமை வெண்மையின வாங்கார்ப் பாச
விரு நூல்கொண்டு பாயசர டாக்கி, மிக்கவதி லேமூன்று நூற்
றறுபத் தைந்தா மேவு தின மணிக்குவைகள் கோவைநனி செய்த,
தக்கவட மொன்றலபல் கோடியுகந் தோறுஞ் சாத்தியிரு சத்தி
யிரு சாருமுற வைத்தோன், சொக்குவரை யோடுதுணை குருகு
வரை பெயரக் கூர்வேற்கை யேந்திய குமாரனடி போற்றி.

இ-ள். பக்கம் எனவாங் கருமை வெண்மையினவாம் இரு கார்ப்பாச நூல்கொண்டு பாய சரடாக்கி - (கிருஷ்ண சுக்கில) பக்கங்கள் எனப்படுங் கறுப்பும் வெள்ளையுமான இரண்டு பருத்திநூல்களாற் பரந்த சரட்டையாக்கி,—அதிலே மிக்க மூன்றுநூற்றறுபத்தைந்தா மேவு தின மணிக்குவைகள் நனி கோவைசெய்த - அச்சரட்டிலே மிகுந்த மூந்நூற்றறுபத்தைந்தாகப் பொருந்திய நாட்களாகிய மணிக்கூட்டங்களை நன்றாகக் கோத்த,—தக்கவடமொன்றல பல்கோடி யுகந்தோறுஞ் சாத்தி - தகுந்த மாலையொன்றையேயன்றி (அப்படிப்பட்ட அளவிறந்த மாலைகள்) பலகோடிகளை (ஒரு

யுகத்திலன்றி) யுகங்கடோறும் அணிந்து,—இருசத்தி இருசாரும் உறவைத்தோன் - இரண்டு சத்திகளையும் இருபக்கங்களிலும் பொருந்த வைத்தவராகிய,—கொக்குவரையோடு துணை குருகுவரை பெயரக் கூர்வேல் கையேந்திய குமாரன் அடி போற்றி - (சூரனுருவாகிய) மலைபோலும் மாமரத்தோடு (தாரகனென்னும்) துணைவனுங் கிரௌஞ்சமலையும் அழியக் கூரிய வேலைக் கைக்கொண்ட குமாரசுவாமியின் பாதங்கள் காக்க. எ-று.

முருகபிரான் காலத்தால் வரையறுக்கப்படாதவரென்பது இதனாற் குறிப்பிக்கப்பட்டது. (எஉ)

திங்களிரண் டறுபதிதழ்ச் செங்கமல முகையாந் திகழ்பருவ மாறுசெறி வருடமொரு கொத்தாந், தங்குவரு டக்குலைக ளறுப தெனநீள்செந் தாமரைத்தண் மலர்மாலை தம்பிலள வில்லாக், கொங்குயிர்த்த பலகோடி புனைந்துபொரு சூரன் குடர்மாலை யுடன்வாகை மணமாலை புனையுந், துங்கநெடுஞ் சுடர்விரித்த விரண்டுமுனைக் கதிர்வேற் சூலமெடுத் தோன்கிரணத் துணைச்சரணம் போற்றி.

இ-ள் திங்களிரண்டு அறுபதிதழ்ச் செங்கமல முகையாம் - இரண்டு மாசம் (ஆகிய ஒருபருவம்) அறுபது(நாள்களென்னும்) இதழ்களையுடைய செந்தாமரைமுகையாம்,—திகழ் பருவமாறு செறி வருடம் ஒருகொத்தாம்- (அங்ஙனம்)விளங்குகின்ற ஆறுபருவங்கள் செறிந்த வருடம் ஒரு பூங்கொத்தாம்,—தங்கு வருடக்குலைகள் அறுபது என - (அங்ஙனந்) தங்கிய வருடக்கொத்துக்கள் அறுபது (ஒருமாலையிலுள்ளன) என்று சொல்லுமாறு,—நீள் செந்தாமரைத்தண்மலர்மாலைதம்மில் அளவில்லாக் கொங்குயிர்த்த பல கோடி புனைந்து-நீண்ட செந்தாமரைப்பூமாலைகளில் அளவிறந்த சுகந்தமான பலகோடிகளை அணிந்து,—பொரு சூரன் குடர்மாலையுடன் வாகைமணமாலை புனையும் - பொருதசூரனது குடர்மாலையோடு வெற்றிமாலையைப் புனைந்த,—துங்கநெடுஞ் சுடர்விரித்த இரண்டுமுனைக் கதிர்வேற் சூலம் எடுத்தோன் கிரணத் துணைச்சரணம் போற்றி - மிகவுயர்ந்த சோதியை விரித்த இரு முனைகளையுடைய கதிர்வேற்படையை எடுத்தவரது ஸ்ரீபாதாரவிந்தங்கள் காக்க. எ-று.

இதனால் மேலைத்திருவிருத்தத்திற் குறிப்பித்த பொருளே பிறிதொருபடியான் வருணித்து விளக்கபபட்டது. (எஙு)

வேறு.

விள்ளுதற் கரிய வாறு விதத்தொடு பகவ னாகித்
தெள்ளுமுக் குணங்க டந்து வேதியர் சிறப்பி னோக்கக்
கொள்ளுமுத் தேவர் தம்மாற் குவலயம் புரப்பச் செய்து
வள்ளியோர் பங்கில் வைத்த வானவ சரணம் போற்றி.

இ-ள். விள்ளுதற்கரிய ஆறுவிதத்தொடு பகவனாகி-சொல்லற்கரிய (முற்றறிவு வரம்பிலின்பம் இயற்கையுணர்வு சுவதந்திரமுடைமை அழிவிலாற்றல் வரம்பிலாற்றல் என்னும்)ஆறுகுணங்களோடு (ஐசுவரியம் வீரியந் திருஞானம் புகழ் வைராக்கியம் என்னுமாறுமாகிய) பகத்தையுடையராகி,—தெள்ளுமுக்குணங்கடந்து - தெளிவாய முக்குணங்களையுங் கடந்து,—கொள்ளு முத்தேவர் தம்மாற் குவலயம் புரப்பச் செய்து-(சமதானையைக்) கொண்ட முத்தேவர்களாற் பூமியை ஆளுவித்து,—வேதியர் சிறப்பின்

ஏத்த வள்ளி ஓர்பங்கில் வைத்த வானவ - (அற்றாயினும் அடியாராகிய) வைதிகர்கள் சிறப்புப்பெறுதல் காரணமாக வழிபடும்பொருட்டு(க் கற்பித ரூபங்கொண்டு) வள்ளியம்மையை ஒருபாலில்வைத்த கடவுளே,—சரணம் போற்றி - சரணங் காக்க. எ-று (௭௪)

மறையவர் மகத்தி னீட்டு மாகுதி வழங்கக் கூவு
நிறையுமந் திரமுள் ளோர்ந்து நீடிருங் கதியன் னார்க்கு
முறைபுரிந் தருளு மாறு முகமுரு கேச பூந்தா
ணறைமலர் கமலப் போது நம்பினேன் போற்றி போற்றி.

இ-ள். மறையவர் மகத்தின் ஈட்டும் ஆகுதி வழங்கக் கூவும் நிறையு மந்திரம் உள்ளோர்ந்து - வேதியர்கள் யாகங்களிலே ஈட்டிக்கொண்ட ஆகுதிகளை உதவ அழைக்கும் நிறைந்த மந்திரங்களை உணர்ந்து,—அன்னார்க்கு நீடிருங்கதி முறைபுரிந்தருளும் ஆறுமுக - அவர்க்கு உயர்கதியை முறையே செய்தருளும் ஆறுமுகரே,—முருகேச - முருகக்கடவுளே,—பூந்தாள் நறைமலர் கமலப்போது நம்பினேன் - ஸ்ரீபாதங்களாகிய சுகந்தம் பரந்த தாமரைமலர்களை நம்பினேன்,—போற்றி போற்றி - காக்க காக்க. எ-று. (௭௫)

குகமெனு நுட்ப மாகிக் குகையெனு மிதய வீட்டிற்
குகைவரை யிருப்பார் தங்கள் குகையெனு மிதயப் போதி
லகமகிழ்ந் தன்னம் போல வருளுட னிருக்கு மாறு
முககுக வெனையாட் கொண்ட முளரிப்பூஞ் சரணம் போற்றி.

இ-ள். குகை எனும் இதய வீட்டிற் குகம் எனும் நுட்பமாகி - குகை என்னும் (பிரமாண்ட சரீரத்தின்) இருதயஸ்தானத்திற் குகம் என்னும் இரகசியமாகி,—வரைக்குகை இருப்பார் தங்கள் குகையெனும் இதயப் போதில் - மலைமுழைகளில் உறைவா(ராகிய யோகிய)ரது குகையென்னும் இருதயமலரில்,—அன்னம்போல அகமகிழ்ந்து அருளுடனிருக்கும் ஆறுமுக குக - அன்னம்போல மனமகிழ்ந்து கருணையோடமருஞ் சண்முகரே குகரே,—எனையாட்கொண்ட முளரிப்பூஞ் சரணம் போற்றி - அடியேனை ஆட்கொண்ட பாதாரவிந்தங்கள் காக்க. எ-று

குகம்=இரகசியம்; இது குஹியம் என்பதன் சிதைவு. குகை=இருதயம், மலைமுழை. ஈண்டு முதலாங் ககரங்கள் ஆரியத்து மூன்றாங்ககரங்களெனவும், இரண்டாங் ககரங்கள் ஹகாரங்களெனவும் உணர்க. (௭௬)

பரன்சிகை தருமன் சென்னி பதுமத்தன் மேல்வாய் வேள்வி
யுரந்தரு கீழ்வாய் கண்ண னுளமுயர் வருடங் கோச
நிரந்தவச் சுவினிப் புத்தே ணீண்முன்கா லுதர நாப்பண்
புரிந்தவத் திரியோ டாமித் திரன்பின்கால் புனலின் வேந்தே.

வாற்கணு வனலி ரண்டாம் வான்கணு மகவான் மூன்றாம்
பாற்கணுப் பிரமர் பத்துப் பகர்தரு நான்காய் நீண்ட
மேற்கணு வபயத் தெய்வ மேயதோர் சிஞ்சு மாரத்
தேற்புறப் புடவி காக்கு மின்னருட் கடப்பா போற்றி.

இ-ள். பரன் சிகை - பரமபதியே சிகையும்,—தருமன் சென்னி - இயமன் சிரமும்,—பதுமத்தன் மேல்வாய் - பிரமா மேல்வாயும்,—வேள்வி

உரந்தரு கீழ்வாய் - யாகபுருஷன் வலிமையைத்தருங் கீழ்வாயும்,—கண்ணன் உளம் - விட்டுணு மனமும்,—உயர் வருடங் கோசம் - உயர்ந்த வருடங் கோசமும்,—விரைந்த அச்சுவினிப் புத்தேள் நீண் முன்கால் - கலந்த தேவவைத்தியர் நீண்ட முன்காலும்,—புரிந்த அத்திரியோடு ஆம் மித்திரன் உதரம் நாப்பண் - விரும்பிய அத்திரியும் ஆகிய மித்திரனும் (முறையே) வயிறும் நடுவும்,—புனலின்வேந்து பின்கால்-வருணன் பின்காலும்,—அனல் வாற்கணு - அக்கினி வாலிலுள்ள (முதலாங்)கணுவும்,—மகவான் இரண்டாம் வான்கணு - இந்திரன் இரண்டாம் பெரியகணுவும்,—பத்துப்பிரமர் மூன்றும் பாற்கணு - தசப்பிரமர் மூன்றும் உரிமையான கணுவும்,—அபயத் தெய்வம் பகர்தரு நான்காய் நீண்ட மேற்கணு - அபயதேவதை கூறப்படும் நாலாவதாய் நீண்ட மேலானகணுவும்,—மேயதோர் சிஞ்சுமாரத்து ஏற்புறப் புடவி காக்கும் இன்னருட் கடம்பா போற்றி - ஆக அமைந்த முதலைவடிவத்தோடு ஏற்குமாறு பூமியைக் காக்கும் இனிய கருணையையுடைய கடம்பரே காக்க. எ-று.

இவ்விரண்டு பாட்டுக்களினுங் கூறியபொருள் முதனூலில் இல்லை. ()

வேறு.

தாரவிரு சத்திகரஞ் சாருமொரு சத்தி தரித்தருமந் திரசத்தி யுற்சாக சத்தி, சீரியநற் பிரபுசத்தி யிம்மூன்றிற் சிறந்து செய்யுமறம் பொருள்காமஞ் செவ்விதுற வுதவு, மாரருளின் வாய்ந்துபதந் தம்புயம்ப ராவு மன்னோர்க்கன் னையர்தந்தை குரவரினன் புற்றே, பேரருளின் சீர்காட்டுந் துணைக்கடம்ப மாலைப் பெருமான்ற னிருசரணப் பிரசமலர் போற்றி.

இ-ள். தார இரு சத்தி கரஞ்சாரும் ஒருசக்தி தரித்து - மனைவியராய இரண்டுசத்திகளோடு கையிற்சார்ந்த ஒருசத்தியையுந் தரித்து,—அருமந்திரசத்தி உற்சாகசத்தி சீரியநற் பிரபுசத்தி இம்மூன்றிற் சிறந்து - அரிய மந்திரசத்தி உற்சாகசத்தி சிறந்த நல்ல பிரபுசத்தி என்னும் மூன்றினுஞ் சிறந்து,—[விளையாட்டாகக் கொள்ளப்பட்ட அரசர்நெறியை யுடையராய் என்றபடி] செய்யும் அறம் பொருள் காமஞ் செவ்விதுற உதவும் ஆர் அருளின் வாய்ந்து-(சீவர்கட்கு இன்பத்தைச்)செய்கின்ற தருமார்த்தகாமங்களைச் செவ்வே உதவும் அரிய கருணையிற் சிறந்து,—பதத்தம்புயம் பராவும் அன்னோர்க்கு அன்னையர் தந்தை குரவரின் அன்புற்றுப் பேரருளின்சீர் காட்டுந் துணை - பாதாரவிந்தங்களை வழிபடும் (விசிட்ட பத்தராகிய) அவருக்கு மாதாவும் பிதாவுங் குரவரும்போல அன்புசெய்து பேரின்பவீட்டைக் காட்டுந் துணைவராகிய,—கடம்பமாலைப் பெருமான்றன் இருசரணப் பிரசமலர் போற்றி - கடம்பமாலையையணிந்த சுவாமியினுடைய உபயபாதாரவிந்தங்கள் காக்க. எ-று. (௭௧)

ஆகமனம் வாக்கென்னு மனைமூன்றின் கருமமாறுங் வினையகற்றி யரியபத்தி யோடுஞ், சேகறுமுக் கரணமுற வந்தனை செய் வோரைத் திருக்கருணை காட்டிமலா தித்திரய நீக்கிக், கோகனதத் தாளான கோயிலர சளிப்போன் கும்போத யற்குமுறை கூறியெனை யாளுங், தேகயப்புள் ளரசேறு சோதிவடி வேலோன் கிளாருணா கிரணமுறு சரணமலர் போற்றி.

இ-ள். ஆகம் மனம் வாக்கு என்னுமவை மூன்றின் கருமம் மாறுகும் வினை அகற்றி - சரீரம் மனம் வாக்கு என்னுமிம்மூன்றின் செயல்கள் (ஒருநெறிப்படாது) மாறுபடுந் தீவினையை நீக்கி,—அரியபக்தியோடுந் தேகமும் முக்கரணம் உற வந்தனைசெய்வோரை - அரும்பக்தியுடனே வயிரமற்ற (அத்) திரிகரணங்களும் ஒருநெறிப்பட வழிபடுபவரை,—திருக்கருணை காட்டி மலாதித்திரயம் நீக்கிக் கோகனதத் தாளான கோயிலரசு அளிப்போன் - திருவருள்காட்டி மலமாயாகன்மங்களின் நீக்கி ஸ்ரீபாதாரவிந்தங்களாகிய கோயிலினரசை அருள்பவரும்,—கும்போதயற்கு உரைகூறி - அகத்தியருக்கு ஞானமுபதேசித்தவரும் (ஆகிய),—எனையாளுங் கேகயப் புள்ளரசேறு சோதிவடிவேலோன் - என்னையாளும் மயில்வாகனத்தேறிய கதிர்வடிவேலருடைய,—கிளர் அருணகிரணமுறு சரணமலர் போற்றி - விளங்குகின்ற செஞ்சோதிபொருந்திய பாதபங்கயங்கள் காக்க. எ-று. (அ0)

வேறு.

வருணமாச் சிரம நான்காய் வாழ்பவர் பரவ வன்னோர்
விரியுநாற் றிசையிற் கீர்த்தி விளங்குவித் தறமுன் னாகும்
பொருளொரு நான்குஞ் சேரப் புரந்தருள் குமர மூர்த்தி
திருவடித் துணைய தாகுஞ் செழுமலர்க் கமலம் போற்றி.

இ-ள். வருணம் ஆச்சிரமம் நான்காய் வாழ்பவர் பரவ - சாதியும் நிலையும் நந்நான்கிலொவ்வொன்றாய் வாழ்பவர்கள் வழிபட,—அன்னோர் விரியுங் கீர்த்தி நாற்றிசையில் விளங்குவித்து - அவரது பரவும் புகழை நாற்றிசைகளினும் விளக்கி,—அறமுன்னாகும் பொருளொருநான்குஞ் சேரப் புரந்தருள் - தருமாதிநாற்பயனையுஞ்சேருமாறு (அவரைக்)காத்தருள்கின்ற,—குமரமூர்த்தி திருவடித் துணையதாகுஞ் செழுமலர்க் கமலம் போற்றி - குமாரசுவாமியினுடைய ஸ்ரீ உபயபாதாரவிந்தங்களுங் காக்க. எ-று. (அக)

பன்னொறிந் திரியற் கெட்டாப் பராநந்த வடிவ மாகி
மன்னுமிந் தியக்கோ வாகி வான்செப வடத்தி னாலே
துன்னருஞ் சிறப்பு வாய்த்துச் சூழ்ந்தவிந் திரிய நீக்கு
முன்னவ ரருச்சித் தேத்து மூவிரு முகத்தாய் போற்றி.

இ-ள். பன்னொறிந்திரியற்கு எட்டாப் பராநந்தவடிவமாகி - மனமும் ஞானேந்திரியமைந்துங் கன்மேந்திரியமைந்துமாகிய பதினொறிந்திரியங்களையுடைய (பசுவாகிய சீவ)னுக்கு எட்டாத பேரின்பவடிவமாகி,—மன்னும் இந்தியக்கோவாகி - நிலைபெற்ற இந்திரியங்கட்கு(ப்பிரேரிக்குந்)தலைவனுகி,—வான்செபவடத்தினாலே துன்னருஞ் சிறப்பு வாய்த்து - பெரிய செபமாலையினாலே அடைதற்கரிய சிறப்புமிகுந்து,—சூழ்ந்த இந்திரியம் நீக்கும் முன்னவர் அருச்சித்தேத்தும் மூவிருமுகத்தாய் போற்றி - (தத்தம் விடயங்களிற்) சூழ்ந்த இந்திரியங்களை (அவற்றின்)நீக்குகின்ற மேலோர்கள் பூசித்து வழிபடும் ஆறுமுகக்கடவுளே காக்க. எ-று. (அஉ)

சீவனுக் கான்மா வாகிச் சிறந்தபூ ரணமென் றுன்னுந்
தாவறு முதியோர் தங்க டியானத்தாற் றன்னைக் காட்டி
மேவரு வுலகுக் கெல்லாம் வியன்குரு வாகி யாண்ட
மூவிரு முகத்துப் புத்தேண் முண்டகத் துணைத்தாள் போற்றி.

இ-ள். சிவனுக்கான்மாவாகிச் சிறந்த பூரணம் என்று உன்னும் - உயிர்க்குயிராய்ச்சிறந்த வியாபகவஸ்து என்று நினைக்கின்ற,—தாவறுமுநியோர்தங்கள் தியானத்தால் தன்னைக் காட்டி - குற்றமற்ற ஆன்றோரது தியானத்தினால் (அவர்க்குத்) தம்மைக் காட்டி,—மேவரவு உலகுக்கெல்லாம் வியன்குருவாகி ஆண்ட - (தம்மில்) அன்புசெய்தலையுடைய உலகத்தவர்க்கெல்லாம பரமகுருவாகி ஆண்ட,—மூவிருமுகத்துப்புத்தேள் முண்டகமலர்த்தாள் போற்றி - ஆறுமுகசுவாமியினுடைய உபயபாதாரவிந்தங்களும் காக்க. எ-று. (அரு)

மகத்தினி லிரண்டு நான்கு மற்றவோ ரிரண்டும் பின்னர்த்
தொகுத்தவோ ரைந்தி ரண்டுஞ் சூழ்ந்திடு மெழுத்தா யோம
வகத்துமந் திரமு மாகி யாகுதி யனைத்தும் போற்றிப்
புகத்தவாக் கதிமுன் காட்டும் பூங்கடம் பத்தாய் போற்றி.

இ-ள். மகத்தினில் இரண்டுநான்கு மற்றவோரிரண்டும் பின்னர்த் தொகுத்தவோரைந்திரண்டுஞ் சூழ்ந்திடும் எழுத்தாய் - யாகங்களிலே (பிரயோகிக்கப்படுகிற) இரண்டுமுதலியவற்றின் சங்கலிதமாய பதினைந்து எழுத்துக்கள் (என்னும் பஞ்சதசாக்ஷரிமந்திரமும்)ஆகி,—ஓமவகத்து மந்திரமுமாகி - ஓமங்களினிடத்து (ஏனை)மந்திரங்களுமாகி,—ஆகுதி அனைத்தும் போற்றிப் புகத் தவாக்கதி முன் காட்டும் பூங்கடம்பத்தாய் போற்றி - (அவ்யாககர்த்தாக்கள்) ஆகுதிகளையும் (ஏனைக்கிரியைகள்) அனைத்தையும் ஓம்பியபின் சேருமாறு அழியாக்கதியை நேரேகாட்டும் கடம்பணிபெருமானே காக்க. எ-று. (அசு)

பொன்னலர் கமலத் தண்ணல் புவனமே யாதி யாக
மன்னுமெப் புவன வாழ்வும் வறிதெனக் குமர மூர்த்தி
தன்னருட் சலதி மூழ்கத் தாழ்விலாக் கருணை காட்டி
யென்னிடத் தன்பு பூத்த விணையடிக் கமலம் போற்றி.

இ-ள். பொன்னலர்கமலத்தண்ணல் புவனமேயாதியாக மன்னும் எப்புவனவாழ்வும் வறிதெனத் தன்னருட்சலதி மூழ்க-(ஆன்றோர்கள்) மலரயனது உலகமுதலாகப் பொருந்திய எவ்வுலகவாழ்க்கையும் அசாரமேயென்று (அவற்றின் வெறுக்குத்) தம்மருட்கடலின் மூழ்க,—என்னிடத்துத் தாழ்விலாக் கருணை காட்டி அன்புபூத்த - அவ்வியல்பற்ற பாவியாகிய என்மாட்டுத் தாமே தாழ்வில்லாத அருளைக்காட்டி (என்னுள்ளத்து) அன்புபூப்பச்செய்த,—குமரமூர்த்தி இணையடிக் கமலம் போற்றி - குமாரசுவாமியின் உபயபாதாரவிந்தங்களும் காக்க. எ-று. (அஎ)

கதியெனு முறிய வீட்டின் கண்ணினே தென்றுள் ளெண்ணித்
துதிதரு முனது கீர்த்தி தோத்திரம் புராண மான
மதுரவா ரிதியி னீந்த மகிழ்ந்தருள் சுரந்தன் னோர்க
ளிதயதா மரைப்பூங் கோயி லிலங்குநல் விளக்கே போற்றி.

இ-ள். முறிய கதியெனும் வீட்டின் கண் இன் ஏதென்று உள்ளெண்ணி - (ஆன்றோர்கள்) தலைமையான கதியென்னும் முத்திக்கு (இவைகளே) காரணப்படும் இனிய ஏதுவாமென்று உட்கொண்டு,—துதிதரும் உனது கீர்த்தி தோத்திரம் புராணம் ஆன மதுரவாரிதியின் நீந்த -

துதிக்கப்படும் உமது கீர்த்தனம் ஸ்தோத்திரம் புராணபடனம் என்னும், இனிய கடலிலே நீந்த,—மகிழ்ந்து அருள்சுரந்து அன்னோர்கள் இதயதாமரைப் பூங்கோயில் இலங்கு நல்விளக்கே போற்றி - உவந்து கருணைகூர்ந்து அவர்களுடைய இருதயகமலங்களாகிய திருக்கோயில்களில் விளங்குகின்ற நல்லதீபமே காக்க. எ-று. (௮௬)

உடைந்தவான் கும்பம் போல வுள்ளொடு புறமு மொன்றா
யடைந்தவா ரிதியின் மூழ்குங் குடம்புற மகமு மொன்றாய்
மிடைந்தவா ரியினுள் ளாகி வெளியுமாய் விளங்கிச் சூர்மாக்
குடைந்தநெட் டிலைவேல் கொண்ட குமரனே போற்றி போற்றி.

இ-ள். உடைந்த கும்பம் வான்போல உள்ளொடு புறமும் ஒன்றாய் - உடைந்த குடத்தின் ஆகாயம்போல (உடம்பழியும்வழியும்) அகமும் புறமும் ஒன்றுபட்டு,—அடைந்த வாரிதியின் மூழ்குங் குடம் புறமகமும் ஒன்றாய் மிடைந்த வாரியின் உள்ளாகி வெளியுமாய் விளங்கி - பொருந்திய கடலின் அமிழ்ந்திய குடத்திற் புறத்துமகத்தும் ஒன்றுபட்ட ஜலம்போல (உடம்புள்ளவழியும்) அகத்துமாய்ப் புறத்துமாய் (உயிரோடுகலந்து) விளங்கி,—சூர்மாக் குடைந்த நெட்டிலைவேல் கொண்ட குமரனே போற்றி போற்றி - சூரனாகியமாவைப் பிளந்த உயர்ந்த வேலைத்தாங்கிய குமாரரே காக்க காக்க. எ-று. (௮௭)

தத்துவ மிருபத் தைந்தாச் சாற்றுநர் தமக்கு மந்தத்
தத்துவ மிருபத் தாறாய் நினைந்துளோர் தமக்கு மீளத்
தத்துவ மிருபத் தேழு தானென்பார் தமக்கு மந்தத்
தத்துவத் தியல்பாய் நின்ற சண்முகத் திறையே போற்றி.

இ-ள். தத்துவம் இருபத்தைந்தாச் சாற்றுநர்தமக்கும் - தத்துவங்கள் இருபத்தைந்தென்று சொல்வார்க்கும்,—அந்தத்தத்துவம் இருபத்தாறாய் நினைந்துளோர்தமக்கும் - அத்தத்துவங்கள் இருபத்தாறென்று எண்ணுவார்க்கும்,—மீளத் தத்துவம் இருபத்தேழுதான் என்பார்தமக்கும் - மீண்டு தத்துவங்கள் இருபத்தேழே என்பார்க்கும்,—அந்தத்தத்துவத்தியல்பாய் நின்ற சண்முகத்திறையே போற்றி - அவ்வத்தத்துவச்சுவரூபமாய் நின்ற அறுமுகக்கடவுளே காக்க. எ-று. (௮௮)

செய்யதொம் பதம தான சீடற்குத் திருந்து மேன்மைத்
துய்யதற் பதம தான பிரமத்தைத் தொடர்பாற் காட்டிப்
பையவே யசிய தென்னும் பதத்தினு லொன்ற தாக்கு
மெய்யுணர் குருவாஞ் சோதி வேற்படைக் குமரா போற்றி.

இ-ள். செய்ய தொம்பதமதான சீடற்கு - செம்மையான துவம் என்னுஞ் சொற்குவாச்சியமான சீடனுக்கு,—திருந்து மேன்மைத் துய்ய தற்பதமதான பிரமத்தைத் தொடர்பாற் காட்டி - திருந்திய பரத்துவமுடைய சுத்தமான தத்தென்னுஞ்சொற்கு வாச்சியமான கடவுளைத் தொடர்பினோடு உணர்த்தி,—பைய அசி என்னும் பதத்தினுல் ஒன்றதாக்கும் - பின்பு அசி என்னுஞ் சொல்லால் ஒன்றாக்குகிற,—மெய்யுணர்குருவாஞ் சோதிவேற்படைக்குமரா போற்றி - சத்தியஞானகுருவாகிய கதிர்வேற் குமாரரே காக்க. எ-று.

துவம்=நீ: இது சிதைந்துதொம் என்றாயது. தத்=பிரமம். அசி=ஆயி ருய். தத்துவமசி என்பது குரு சீடனுக்குப் போதிக்கும் வேதாந்த மகா வாக்கியம். (அக)

அயனெனப் ரயாக மூழ்கு மையனே யிலங்கைக் கானி
னயனுறு செபத்தின் வாய்ந்த நாரண வடிவே ஞாலத்
துயர்சகந் நாதந் தன்னி லூணருந் தரியே வானப்
புயனிறக் கண்ண னாகித் துவாரகை புரப்பாய் போற்றி.

இ-ள். அயனென ப்ரயாகம் மூழ்கும் ஐயனே - பிரமாபோலப் பிரயாகத்தின் முழுகிய கடவுளே,—இலங்கைக் கானில் நயனுறு செபத்தின் வாய்ந்த நாரணவடிவே - இலங்கைக்கானிலே நன்மைபொருந்திய செபத்திற் சிறந்த நாராயணரூபியே,—ஞாலத்து உயர்சகந்நாதந்தன்னில் ஊணருந்து அரியே - பூமியில் உயர்ந்த சகந்நாதத்திலே உணவையயின்ற விட்டுணுரூபியே,—வானப் புயனிறக் கண்ணனாகித் துவாரகை புரப்பாய் போற்றி - பெரிய முகினிறமுடைய கிருஷ்ணராகித் துவாரகையைக் காத்தலுடையீர் காக்க. எ-று. (கO)

தாண்டவக் கூத்துத் தில்லை தனிற்பரா சத்தி யோடு
மூண்டிருந் தகில வாழ்க்கை முற்றுறக் கலையி னீதி
யாண்டிருந் தளப்போய் கூட லணிநகர்ச் சித்த ராகி
வேண்டிய விநோத மாற்றும் வேனெடும் படையாய் போற்றி.

இ-ள். அகிலவாழ்க்கை கலையின் நீதி மூண்டு இருந்து முற்றுற - உலகவாழ்க்கையானது நூல்களின் முறைகளிலே முயன்று இருந்து சித்திப்படும்வண்ணம்,—தில்லைதனிற் பராசத்தியோடு தாண்டவக்கூத்து ஆண்டிருந்து - தில்லையின்கண் உமையாரோடு தாண்டவமென்னுங் கூத்தை ஆளுதல்செய்திருந்து,—அளப்போய் - (சீவர்களின் வினைப்பயன்களை) அளத்தலுடையீர்,—கூடலணிநகர்ச் சித்தராகி வேண்டிய விநோதமாற்றும் வேனெடும்படையாய் போற்றி - மதுரைத்திருநகரிற் சித்தரூபியாய் விரும்பிய விநோதங்களைச்செய்த வேலாயுதரே காக்க. எ-று. (கக)

வாரண வாசி யான மன்றத்துக் கன்ன தான
காரண வுமைபோற் காக்குங் கடவுளே காஞ்சி தன்னிற்
பூரண கம்பை நோற்கும் பூவையா யரங்கந் தன்னி
னாரண வடிவாய்த் துஞ்சு நான்மறைக் கடம்பா போற்றி.

இ-ள். வாரணவாசியான மன்றத்துக்கு அன்னதான காரண உமைபோற் காக்குங் கடவுளே-காசியிலுள்ள மன்றத்தில் அன்னதானத்துக்குக் காரணமான உமைபோலக் காக்குந் தலைவரே,—காஞ்சிதன்னிற் பூரண கம்பை நோற்கும் பூவையாய் - காஞ்சியிலே நிறைவான கம்பைக்கரையில் நோற்ற அம்மையாராய்,—அரங்கந்தன்னில் நாரணவடிவாய்த் துஞ்சு நான்மறைக் கடம்பா போற்றி - அரங்கத்திலே விட்டுணுரூபமாய் உறங்கிய சதுர்வேதங்களையுடைய கடம்பரே காக்க. எ-று. (கஉ)

விளம்பிய விவையல் லாது விராட்பெரு வடிவ மாகி
யுளங்களி சிறப்ப யாவு மொன்றென நிறைந்தாய் மாயக்
களங்கறுத் திடுவோ ருள்ளக் கமலமார் சுரும்பே வேத
மளந்தறி யாத செவ்வே லையனே போற்றி போற்றி.

இ-ள். விளம்பிய இவையல்லாது - (மேன்மூன்றுசெய்யுட்களினுங்) கூறிய(ஆண்டாண்டு அவரவராய்நிற்கும் வகைகளாகிய)இவையேயன்றி,—விராட்பெருவடிவமாகி உளங்களிசிறப்ப யாவும் ஒன்றென நிறைந்தாய் - பரமேசுரரூபியாகி மனமகிழ்பெருக அனைத்துமாகிய ஏகமெனும்படி நிறைந்தீர்,—மாயக்களங்கு அறுத்திடுவோர் உள்ளக்கமலமார் சுரும்பே - மாயமலத்தை அறுத்தவரது மனத்தாமரையிலமரும் வண்டே,—வேதம் அளந்தறியாத செவ்வேலையனே போற்றி போற்றி - வேதங்களாலளவிடப் படாத வேலாயுதக்கடவுளே காக்க காக்க. எ-று. (௧௩)

சொல்லரு ஞான வீட்டுச் சுடர்விளக் குலக மான
செல்விவான் றிலக மேலாய்ச் சிறந்தவா நந்த சார
மல்லறீர்த் தெனையாட் கொண்ட வற்புத வடிவே யின்றுன்
மெல்லடிப் போது சூட்ட விருப்பமுற் றடைந்தே னென்றான்.

இ-ள். சொல்லரு ஞானவீட்டுச் சுடர்விளக்கு - உரைத்தற்கரிய ஞானமுத்தியின் சோதிவிளக்கே,—உலகமான செல்வி வான்றிலகம் - நிலமாகிய தேவிக்கு மகாதிலகமே,—மேலாய்ச் சிறந்த ஆநந்த சாரம் - மேம்பட்டு வாய்ந்த இன்பத்தெளிவே,—அல்லறீர்த்து எனையாட்கொண்ட அற்புத வடிவே - துன்பநீக்கி என்னையடிமைக்கொண்ட விசித்திரரூபமே,—இன்று உன் மெல் அடிப்போது சூட்ட விருப்பமுற்று அடைந்தேன் என்றான் - இன்று உமது மிருதுவான பாதபுஷ்பங்களை உச்சிமேற்கொள்ள விரும்பி வந்தேன் என்று (சுகமுனிவன் துதிகள்)கூறினான். எ-று. (௧௪)

அஞ்சலி செலுத்தி வேற்கை யாறுமா முகத்துப் புத்தேள்
செஞ்சிலம் பலம்புந் தண்டைச் சீரடிக் கமல மீது
நெஞ்சகங் குழையச் சென்னி நிலமிசைத் தாழா நின்ற
வெஞ்சலில் சுகனைக் கையா லெடுத்தனன் குமரமூர்த்தி.

இ-ள். வேற்கை ஆறுமாமுகத்துப் புத்தேள் - வேலாயுதகர சண்முக சுவாமியினது,—செஞ்சிலம்பு தண்டை அலம்புஞ் சீரடிக்கமலமீது - செய்ய சிலம்புந் தண்டையும் ஒலிக்கும் ஸ்ரீ பாதபங்கயத்தின்கண்ணே,—அஞ்சலி செலுத்தி - புட்பாஞ்சலியைச் சமர்ப்பித்து,—நெஞ்சகங் குழைய - மனம் நெகிழ,—சென்னி நிலமிசைத் தாழாநின்ற - சிரசினாலே நிலத்திலே வணங்கிக்கிடந்த,—எஞ்சலில் சுகனை - குறைவற்ற சுகமுனிவனை,—குமரமூர்த்தி கையால் எடுத்தனன் - குமாரசுவாமி திருக்கரத்தால் எடுத்தருளினர். எ-று.

கையினா லெடுத்துக் கந்தன் கடம்பமார் பிறுகப் புல்லித்
துய்யமா தவத்தின் மேலாஞ் சுகமுனி வேத சார
மெய்யினாற் றுதித்த வெல்லாம் விருப்பமிக் கடைந்தோ மென்று
வையமீன் றளித்தா ளீன்ற மைந்தனன் குரைப்ப தானான்.

இ-ள். கந்தன் கையினால் எடுத்துக் கடம்ப மார்பு இறுகப் புல்லி - முருகபிரான் (அங்ஙனஞ் சுகமுனிவனைத்) திருக்கரத்தினால் எடுத்துக் கடம்பமாலையணிந்த திருமார்பில இறுகத் தழுவி,—துய்ய மாதவத்தின் மேலாஞ் சுகமுனி - சுத்தமான பெருந்தவத்தின் மேற்பட்ட சுகமுனிவனே,—மெய்யினால் துதித்த வேதசாரமெல்லாம் விருப்பமிக்கடைந்தோம் என்று - (நீ அன்பு) மெய்ம்மையினாலே துதித்த வேதசாரத்துதிகளையெல்லாம் ஆதரமிகுந்து அங்கீகரித்தோம் என்றுசொல்லி,—வையமீன்றளித்தா

வீன்ற மைந்தன் நன்கு உரைப்பதானுன் - (அப்)பார்வதிகுமாரர் (மேலும்) நன்முகக் கூறலுற்றூர். எ-று. (கசு)

சொற்றருந் தவத்தின் மேலாஞ் சுகமுனி சொற்ற வெல்லாங்
கற்றுவந் துரைப்போர் யார்க்குங் கருத்தினி லெண்ணி யாங்கு
வெற்றியம் புயத்து வீர வாகுவே யருள்வா னென்று
முற்றொருங் குணர்வோர்க் கெட்டா மூவிரு முகத்தன் சொனன்.

இ-ள். சொல் தருந் தவத்தின் மேலாஞ் சுகமுனி - நூல்களாற் கூறப்படுந் தவத்தின் மேற்பட்ட சுகமுனிவனே,—சொற்றவெல்லாங் கற்று உவந்து உரைப்போர்யார்க்கும் - (நீ இங்கே துதியாகச்) சொன்னவற்றை யெல்லாம் பயின்று மகிழ்ந்து துதிப்பவர்யாவர்க்கும்,—வெற்றியம் புயத்து வீரவாகுவே கருத்தினில் எண்ணிய ஆங்கு அருள்வான் என்று - விசயபுயமுடைய வீரவாகுவே (அவர்கள்) உள்ளத்துக்கருதியவற்றை அவ்வாறே கொடுத்தருளுவான் என்று,—முற்றொருங்குணர்வோர்க்கெட்டா மூவிரு முகத்தன் சொன்னுன் - பூரணஞானிகட்கும் எட்டாத அறுமுகபிரான கூறினார். எ-று. (கஎ)

வேறு.

வந்தனையாய் நமைத்துதிக்குஞ் சுகனே கேண்மோ வையகத் துக் குனதுதரி சனத்தால் வாக்காற், சிந்தனையாற் பரிசத்தா லற முன் னன்குஞ் சிறந்துதவி யுயர்சீவன் முத்த னுகி, முந்துநிலத் திருத்தியெனக் குமரப் புத்தேண் முகமனெடுத் துரைத்துவிடை கொடுப்பப் போற்றிச், சந்தமறைச் சுகமுனிதன் கரங்கள் கூப் பித் தணவாத விடையென்றே தணந்தான் மாதோ.

இ-ள். வந்தனையாய் நமைத்துதிக்குஞ் சுகனே கேண்மோ - வந்து நம்மைத்துதித்த சுகமுனிவனே கேள்,—வையகத்துக்கு உனது தரிசனத்தால் வாக்காற் சிந்தனையாற் பரிசத்தால் அறமுன்னன்குஞ் சிறந்துதவி- உலகத்தார்க்கு உனது காட்சியாலும் பேச்சினுலும் நினைப்பினுலுந் தீண்டலினுந் தருமமுதலியநாற்பயனையுஞ் சிறப்பவருளி,—உயர் சீவன்முத்த னுகி முந்துநிலத்து இருத்தி - உயர்ந்த சீவன்முத்தனுய் முற்பட்டநிலத்தில் இருக்கக்கடவாய்,—எனக் குமரப்புத்தேள் முகமன் எடுத்துரைத்து விடை கொடுப்ப - என்று குமாரசுவாமி முகமன்களை எடுத்துக்கூறி அனுமதிகொடுக்க,—சந்தமறைச் சுகமுனி தன்கரங்கள் கூப்பிப் போற்றித் தணவாத விடை என்றே தணந்தான் - இசைபொருந்திய வேதத்தையுடைய சுகமுனிவன் தன்கைகளைக் குவித்துத்துதித்து(சுவாமிதனக்கு அருளியவிடை)பிரியாத விடைஎன்று நினைந்தே பிரிந்தான். எ-று. (கஅ)

குற்றமொரு மூன்றகற்று முனிவீர் கேண்மின் குறைவிறவச் சுகற்குவிடை கொடுத்துச் செவ்வேள், பற்றொருடுதன் செயந்தி புரத் தின்று காறும் பணிந்தவர்க்கெல் லாங்கருணை பாலித் துற் ருன், பெற்றமுகைத் தான்மகனைப் பணியும் பூசை பெரிதியற்று மங் கீர்த்தனங்கள் பேசு நம்பா, லுற்றுரைத்த சரித்திரமே கதியுண் டாக்கு முண்மையுண்மை யென்றவர்பா லுரைத்துப் பின்னும்.

இ-ள். குற்றமொருமூன்று அகற்றுமுனிவீர் கேண்மின் - மூக்குற்றங்களையும் ஒழித்த (நைமிசாரணியத்து) முனிவர்களே கேளுங்கள்,—குறை

விறவச் சுதற்கு விடைகொடுத்துச் செல்வேள் பற்றொடு தன்செயந்தி புரத்து இன்றுகாறும் பணிந்தவர்க்கெல்லாங் கருணைபாலித்து உற்றான் - பூரணதவமுடைய சுகமுனிவனுக்கு அனுமதிகொடுத்து முருகபிரான் ஆதரத்தோடு தமது செயந்திபுரத்திலே இன்றுவரையும் வழிபட்டவர்க்கெல்லாம் அருள்செய்து அமர்ந்தார்,—பெற்றமுனைத்தான் மகனைப் பணியும் பூசை பெரிதியற்றுங் கீர்த்தனங்கள் பேசும் நும்பால் - சிவகுமாரரை வணங்குகிற பூசையை மிகச்செய்கிற கீர்த்திகளைப்பேசுகிற நும்மிடத்து,—உற்றுரைத்த சரித்திரமே கதி உண்டாக்கும் - (நான்) வந்து கூறிய சரித்திரமே நற்கதியை உண்டாக்கும்,—உண்மை உண்மை என்று அவர்பால் உரைத்துப் பின்னும் - சத்தியமே சத்தியமே என்று (சூதமுனிவன்) அவர்களிடத்துக்கூறி மேலும் (அவரைநோக்கி). எ-று. (கூகூ)

உரைத்தகதை வியாதமுனி சுகற்குச் சொன்ன துங்களிடத் துரைத்தனன்யா னுமைசேய் காதற், சரித்திரத்தைக் கருத்தினுடன் கேட்கின் றோர்க்குத் தருமமுத லொருநான்கு மரபிற் சாரும், விரித்தபுரா ணத்தியலை யெழுதித் தான விதிமரபிற் கொடுப்பவர் தாம் வேலை ஞால, மருத்தியுடன் கொடுத்தபல னடைவார் வாங்கு மன்னவரு மன்னகதி யடைவர் மாதோ.

இ-ள். வியாதமுனி சுகற்கு உரைத்த கதை சொன்னது யான் உங்களிடத்து உரைத்தனன் - வியாதமுனி சுகமுனிக்குச் சொன்னகதையைச் சொன்னபடியே யான் உங்களிடத்துக் கூறினேன்,—உமைசேய்காதற் சரித்திரத்தைக் கருத்தினுடன் கேட்கின்றோர்க்கு-உமாகுமாரரது அன்பான கதையைக் கருத்தோடு கேட்கிறவர்கட்கு,—தருமமுதல் ஒருநான்கும் மரபிற் சாரும் - அறமுதலிய நான்கும் முறையாற் சேரும்,—விரித்த புராணத்து இயலை எழுதித் தானவிதிமரபிற் கொடுப்பவர்தாம் - விரிவாகிய புராணத்து அத்தியாயங்களை எழுதித் தானவிதியின்முறைப்படி கொடுப்பவர்கள்,—வேலைஞாலம் அருத்தியுடன் கொடுத்தபலன் அடைவார் - கடல்சூழ்ந்த பூமியை விருப்பத்தோடு கொடுத்த பயனை அடைவார்,—வாங்கும் அன்னவரும் அன்னகதி அடைவர்-வாங்கிய அவரும் அக்கதியை அடைவர். எ-று. (௧00)

புத்தகத்தைக் குமரன்வடி வாகப் பூசை புரிந்தியற்றும் பெரியோர்க்கும் போர்வேற் செங்கை, யத்தனரு ளருமுகமா யிருந்தன் னொருக் கறமுதலன் கையுமளிப்ப னவன்பு ராண, வித்தகப் புத் தகமிருக்கு மில்லந் தோறும் விரைக்கமலத் திருமடந்தை கமலப் போதுங், கைத்தலத்தில் வளையாழி தாங்குங் கண்ணன் கதிர்மணிமார் பும்போலக் களிக்கு மாதோ.

இ-ள். புத்தகத்தைக் குமரன்வடிவாகப் புரிந்து பூசையியற்றும் பெரியோர்க்கும் - (இப்புராணமெழுதிய) திருவேட்டைக் குமாரசுவாமியின் திருவுருவமாகப்பாவித்துப் பூசிக்கும் பெரியோர்கட்கும்,—போர்வேற்செங்கையத்தன் அருளருமுகமாய் இருந்து - (அவ்) வேலாயுதபெருமான் அருள் செய்யு முகமுடையவராயிருந்து,—அன்னொருக்கு அறமுதனன்கையும் அளிப்பன் - அவர்க்குவேண்டிய தருமாதிநாற்பயனையும் உதவுவார்,—அவன் புராணவித்தகப்புத்தகம் இருக்கும் இல்லந் தோறும் - அவருடைய

புராணமாகிய பொன்போலுந் திருமேனி இருக்கிற வீடுகடோறும்,—விரைக் கமலத்திரு மடந்தை - ஸ்ரீதேவியானவள்,—கமலப்போதுங் கைத்தலத்தில் வளையாழி தாங்குங் கண்ணன் கதிர்மணி மார்பும்போலக் களிக்கும் - தாமரைமலரிலுங் கையிற் சங்குசக்கிரங்களைத் தரித்த விட்டுணுவினது கௌத்துபமணியையணிந்த மார்பிலும்போல மகிழ்ந்துவாழ்வாள். எ-று. (கoக)

சிந்துபுர மான்மியத்தைத் தினஞ்சொல் வோர்கள் சிறந்தநிதி மக்களுட னெடிது வாழ்வார், முந்துகதை சன்னிதியிற் குருமுன்னாக முற்றவத்தி யாயமொன்று கேட்போ ரெல்லாஞ், சுந்தரவாம் புரவிமகக் கதியிற் சார்வார் தூயகதை சன்னிதியின் முக்காற் கேட்போர், எந்தமல டாயினு மகப்பெற் றுய்ந்தே யிருநிலத்தி லளகையர்கோ னென்ன வாழ்வார்.

இ-ள். சிந்துபுரமான்மியத்தைத் தினஞ்சொல்வோர்கள் - செயந்திபுர மான்மியத்தை நாடோறும் ஓதுபவர்கள்,—சிறந்தநிதி மக்களுடன் நெடிது வாழ்வார் - சிறந்த செல்வத்தோடும் புத்திரரோடும் நெடுநாள் வாழ்வர்,—சன்னிதியிற் குரு முன்னாக முந்துகதை அத்தியாயம் ஒன்று முற்றக் கேட்போரெல்லாம் - (சுவாமி) சன்னிதானத்திலே குருமுகமாக மேற்சுட்டிய புராணத்தின் அத்தியாயங்களுள் ஒன்றை முடியக் கேட்பவரெல்லாம்,—சுந்தர வாம்புரவிமகக் கதியிற் சார்வார் - அழகிய அசுவமேதத்தாலாகும் கதியிற் சேர்வார்,—தூயகதை சன்னிதியின் முக்காற் கேட்போர் - சுத்தமாய (அப்) புராணத்தைச் சன்னிதானத்து மும்முறை கேட்பவர்,—எந்த மலடாயினும் மகப்பெற்று உய்ந்து இருநிலத்தில் அளகையர்கோனென்ன வாழ்வார் - எப்படிப்பட்ட மலடராயினும் புத்திரரைப் பெற்று உய்ந்து பெரியபூமியிற் குபேரன்போல வாழ்வார். எ-று. (கoஉ)

நாலாறு குகதீர்த்தந் தம்மை வேத நாடுசகந் நாதர்தமைத் திருமாறனை, மேலான குருபரனை வீரர் தம்மை மின்னாரைத் தோகைதனைச் செவ்வே றனைப், பாலான நெடுஞ்சிகரந் தன்னைச் சந்தப் பருப்பதத்தைத் திரிசுவதந் திரத்தர் தம்மை, நூலாரு முனிவீர்கா ளாண்டு தோறுஞ் சென்றேத்து மெனச்சூத னுவன் றான் மாதோ.

இ-ள். நாலாறு குகதீர்த்தந்தம்மை - இருபத்துநான்கு சுப்பிரமணிய தீர்த்தங்களையும்,—வேதநாடு சகந்நாதர்தமை - வேதங்கள் ஆராய்கின்ற சகந்நாதரையும்,—திருமாறனை - விட்டுணுவையும்,—மேலானகுருபரனை - மேன்மையான குமாரசுவாமியையும்,—வீரர்தம்மை - வீரர்களையும்,—மின்னாரை - அம்மைமாரையும்,—தோகைதனை - மயிலையும்,—செவ்வேறனை - வேலாயுதத்தையும்,—பாலான நெடுஞ்சிகரந்தன்னை - உரிமையான திருக்கோயிலையும்,—சந்தப்பருப்பதத்தை - கந்தமாதனகிரியையும்,—திரிசுவதந்திரத்தர்தம்மை - திரிசுவதந்திரரையும்,—நூலாரும் முனிவீர்காள் ஆண்டு தோறுஞ் சென்றேத்தும் - நூலையார்ந்த முனிவர்களே வருஷந்தோறும் போய் வழிபடுங்கள்,—எனச் சூதன் நுவன்றான் - என்று சூதமுனிவன் (நைமிசாரணியத்து முனிவர்கட்குக்) கூறிமுடித்தான். எ-று. (கoஙு)

மயில்வாழி தகர்வாழி சேவல் வாழி மனுவனைய திரிசுவதந் திரத்தர் வாழி, குயில்வாழு மொழித்தெய்வ யானை வாழி குறவர்

குலக் கொடிவாழி கொடுஞ்சூர் மாய்த்த, வயில்வாழி செந்திபுரத்
துற்றோர் வாழி யாறுமுகப் பெருமான்றன் கருணை வாழி, பயில்
வான்மை முகில்வாழி புராணங் கேட்போர் படிப்போர்கள் கிளைக
ளெல்லாம் வாழி மாதோ.

இ-ள். மயில் வாழி - (தம்மை அன்பின்றி வன்பான் மாறுகொண்டு சார்ந்தாரையும் முன்னை நல்வினைச்சித்தியுள்ளவழி எம்பிரான் அடக்கி ஆட்கொண்டருளுவர் என்னுமுண்மைக்கு இலச்சினையாய், எம்பெருமானால் ஆளப்பட்டு, அடியார் வேண்டும்பொழுதெல்லாம் அவர்பால் எம்பெருமானை விரைந்துகொண்டுய்க்கும் ஊர்தியாகிய) மயில் வாழ்க,—தகர் வாழி- (அங்ஙனமேஆளப்பட்டுத் தானும் ஊர்தியாகிய) ஆடு வாழ்க,—சேவல் வாழி- (அங்ஙனமே ஆளப்பட்டு எம்பெருமானது விசயசின்னமாய், அவர்திருவருட்குறிப்பின்வழியே அல்லாரை நல்லாராக்கும்பொருட்டு அவர் தொல்லறிவழியக்கூவுந்திறத்ததாய) கோழி வாழ்க,—மனு அனைய திரிசுவதந்திரத்தர் வாழி - (எம்பெருமானுக்கு அடியார்செய்யும் வழிபாடுகட்குத் தாம் இன்றியமையாதசாதனமாய் நின்று தம்மையன்போடு தியானிப்பவரைக் காக்கு மியல்புடைமையால்) மந்திரங்களை நிகர்த்த திரிசுவதந்திரர்கள் வாழ்க,—குயில் வாழும் மொழித் தெய்வயானைவாழி - (தம்மையன்போடு சேர்ந்தாரை எம்பிரான் நன்னிலைக்கண் உய்த்தருள்வரென்னுமுண்மைக்கு இலச்சினையாய், எம்பெருமானாலே தமதபின்னமாகிய சத்தியின் அதிட்டானமாகக்கொள்ளப்பட்ட) குயிலிசைபோலும்மொழியையுடைய தெய்வயானையம்மையார் வாழ்க,—குறவர்குலக் கொடி வாழி - (தம்மை அன்போடுசார்ந்தவர் குறைந்தகுலத்தவராயினும், "காதலித்தேத்திய மெல்லிணத்தார் பக்கன்மேவினர்" என ஆளுடையபிள்ளையார் சொல்லியருளியவாறே எம்பெருமான் அவரை நன்னிலைக்கண் உய்த்தருள்வர் என்னும் உண்மைக்கு இலச்சினையாய்த் தாமும் அங்ஙனங்கொள்ளப்பட்ட) குறவர்குலத்து வள்ளியம்மையார் வாழ்க,—கொடுஞ்சூர் மாய்த்த அயில் வாழி - (சூரபன்மனுக்கு வரங்கொடுத்தபொழுது, "தாவிலாதநஞ்சத்தியொன்றேயலாலவர் வெல்வர்" என்றுகூறிய சிவபெருமானுலே தமது சத்தியென்று சுட்டப்பட்ட தானே சுப்பிரமணியபெருமானது திருக்கரத்துச் சத்தியுமாதலின், அவரிருவரும் குறியாலன்றிப் பொருண்மையால் வேறாகாமையை இனிது விளக்கிநிற்பதாய) கொடிய சூரனைச் சங்கரித்த வேலாயுதம் வாழ்க,—செந்திபுரத்து உற்றோர் வாழி - செயந்திநகரின்கண்ணே (உம்மை நல்வினைவயத்தால் அவதாரஞ்செய்யும் பேறுபெற்றுதல், இம்மை நல்வினைமுயற்சியாற் சென்று வாழும் பேறுபெற்றுதல்) இருப்பவர்கள் வாழ்க,—ஆறுமுகப்பெருமான்றன் கருணை வாழி - (சிவகோடிகளையெல்லாம் ஆளும்பொருட்டு உருவுங் குறியுமுடையர்போன்று மேலே சுட்டிய சுவங்கட்கெல்லாஞ் சுவாமியாய்ச் செயந்தியிற் கோயில்கொண்டமர்கின்ற) சண்முகபெருமானுடைய (கைம்மாறு கருதாத அளவுகடந்த) திருவருள் வாழ்க,—வான பயில் மைமுகில் வாழி - (அப்பெருமானது திருவருளினாலே உலகம் நிற்றற்கு இன்றியமையாத அமுதமான) மழையைப் பொழியுங் கரியமுகில்கள் வாழ்க,—புராணங் கேட்போர் படிப்போர்கள் கிளைகளெல்லாம் வாழி- (தன்னை அன்போடு ஓதல்கேட்டல்செய்வார்க்குச் சித்தசுத்தியையுஞ் சுத்தபத்தியையும் இட்டசித்திமுத்திகளையும் உதவுவதாகிய செயந்தி) புராணத்தைக் கேட்பவரும் படிப்பவரும் (அவரைச்சார்ந்த) முழுக்கிளைகளும் வாழ்க. எ-று.

அற்றேல், தெய்வத்தன்மையினாலே எஞ்ஞான்றும் எஞ்சலின்றி நின்று வாழ்தன்மாலையனவாய மயின்முதலியவற்றுக்கும் அம்மட்டோ முழுமுதற் கடவுளுக்கும் ஆசிகூற இந்நூலாசிரியர் பிரவேசித்தது குற்றமாகாதா எனின், இயல்பானமைந்தசுத்தியும் பேரின்பமுமுடைய கடவுளுக்கு அடியார்செய்யும் அபிடேகம் நைவேத்தியம் முதலியனபோல இவ்வாழ்த்து ஆதரமிகுதிபற்றிச்செய்யும் வழிபாடேயாதலிற் குற்றமாகாதென்க: இக் கருத்துப்பற்றியன்றே ஏனை நூலாசிரியருந் தத்தம் நூன்முடிவுகளில் இவ்வாறு வாழ்த்துக்கூறியதும்.

இனி வாழி என வந்தனவற்றையெல்லாம் அந்தர்ப்பாவிதணிச்சாக்கி நம்மை வாழ்விக்க எனப்பொருள்கூறலுமாம். அன்றியும் மயில்முதலியவற்றுக்கு மூன்றனுருபு விரித்து, வருவிக்கப்பட்டநாம் என்னும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மைப்பெயரையே வாழியென்பதற்கு எழுவாயாகக் கோடலுமாம். (௧௦௪)

## சுகப்பிரமரிஷி பூசைசெய்த அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் ௧௮-க்குத் திருவிருத்தம் ௮௲௨.

## திருச்செந்தூர்ப்புராணம்

## உரையோடு

## முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௨௧ | ௧௯ | (வியாசமுனிவன்) | வியாசமுனிவனை |
| ௨௫ | ௨௩ | துணிநீ | துணி—நீ |
| ௨௮ | ௨௮ | பெருள் | பொருள் |
| ௪௧ | ௨௭ | மவன் | மவண் |
| ௪௩ | ௩௩ | தாமதி | தாமசி |
| ௪௫ | ௩0 | லங் மூன் | லங்கண்மூன் |
| ௪௬ | ௩௩ | எல்லாவ | எல்லாவ |
| ௫0 | ௪௧ | போழுதே | பொழுதே |
| ௫௧ | ௨௮ | மூர்த்தி | மூர்த்தி |
| ௫௩ | ௬ | பெருளை | பொருளை |
| ௫௫ | ௨௫ | (எம்மனேர் | (எம்மனோர்) |
| ௫௬ | ௨௭ | பரணககூட்டங்களைய | பரணக்கூட்டங்களையும் |
| ௬௧ | ௨௯ | சுவாமிபோல | சுவாமி(யாகியநீர்)போல |
| ௬௪ | ௩௮ | ளம் பெரிது களி | ளங்களி |
| ௬௫ | ௨௭ | உழவ | உழவர் பல |
| ௭௨ | ௨௧ | ஓலியும் | ஒலியும் |
| ௭௭ | ௮ | பக்நத்து | பக்கத்து |
| ௮௭ | ௨௭ | வயாவு | வயர்வு |
| ௮௮ | ௨0 | டுபாருள் | பொருள் |
| ௮௯ | ௨௧ | அவ்வம்மையார்மீது | (அவ்வம்மையார்மீது) |
| ௯௭ | ௧௨ | சூட்டுவன் | சூடுவன் |
| ,, | ௩௬ | மேயன்தாழ்பதி | மேயன்பதி |
| ,, | ௩௭ | வாள்வரை | தாள்வரை |
| ௧00 | ௧௧ | வர்க்குச் | வற்குச் |
| ௧0௩ | ௩0 | அங்கே | ஆங்கே |
| ௧0௫ | ௧௧ | றன்னவன் | றன்னவண் |
| ௧0௬ | ௧0 | னுள்ளடங்கா | னுக்கடங்கா |
| ௧௧௨ | ௧௩ | முதன்மயான | முதன்மையான |
| ௧௩௩ | ௧ | குரமாவுக்கு | பிரமாவுக்கு |
| ௧௩௮ | ௨௧ | சிறக்கவோ | சிறப்பவோ |
| ௧௩௯ | ௧௮ | ,—ஞானநிலைமை | ,—களிக்குஞானநிலைமை |
| ,, | ௧௯ | சிவஞான | மகிழுஞ் சிவஞான |
| ௧௪0 | ௧௨ | பெருமனுக்கு | பெருமானுக்கு |
| ௧௪௬ | ௩௪ | யுண்றலைப் | யுன்றலைப் \| பெண்ணே |
| ௧௪௮ | ௪௩ | அவண் நீபோய் | மொய்குழல்அவண்நீபோய்- |
| ௧௪௯ | ௨௬ | ஆடுக என - | ஆடுக என்று- |
| ,, | ௩௯ | சேனைகளேடுரம் | சேனைகளோடும் |
| ,, | ௪0 | வானெறியாஞ் | வானதியாஞ் |
| ௧௫0 | ௭ | இன்பமுறுந் | இன்பமுறு |
| ௧௫௨ | ௨௬ | நண்ணினேர் | நண்ணினோர் |
| ௧௫௩ | ௧0 | அவிகளை | (அவிகளை) |
| ௧௫௬ | ௧௯ | மின்பமெய்து | மின்பத்தெய்து |

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| | | சனஞ் சார்ந்த | சனத் தனிமச் |
| துற்றேல், ே | ௧௨ | வேண்முருகற் | வேண்முருகற் |
| | | ரோவிலா வெச்ச | ரோவிலா தெசச |
| ,, | ௩௩ | மாதபூசாபலமுறைத் | மாதபூசைவிதியுறைத் |
| ,, | ௨௭ | கண்டமூறா | கண்டமூறா |
| ௧௭௩ | ௧௮ | டறிதலகூதாத | டறிதல்கூடாத |
| ௧௭௮ | ௪௧ | கனத்தலைமை | கனைததலைமை |
| ௧௮௫ | ௭ | தேறிநாக | தேறிஞக் |
| ௧௮௭ | ௩௧ | பெண்ணெரு | பெண்ணெரு |
| ௧௮௯ | ௧ | விபூதிஅத | விசுவரூப அத் |
| ,, | ௩௮ | தலையால | தலைமையால் |
| ௨0௪ | ௩ | ஜ்ழலின | ஜ்ழலில் |
| ௨0௬ | ௨0 | து—கூர | து—கூரனைப் |
| ௨0௮ | ௨௬ | தாழர | தாளர |
| ,, | ௩௨ | ராப்பதற் | ராப்பகற் |
| ௨௨௧ | ௩ | டாந்து பே | டாந்த பே |
| ௨௨௨ | ௨௬ | பன்னிண்ரடு | பன்னிரண்டு |
| ௨௨௪ | ௩௯ | தனிவரும் | தனிவரும் |
| ௨௨௯ | ௩ | சுனைப்பாம் | சுரைப்பான் |
| ௨௩௧ | ௩௯ | வருகாலே | வருமவேலே |
| ௨௩௩ | ௯ | மூவிரு | இ-ள் மூவிரு |
| ,, | ,, | சுவாமின் | சுவாமியை |
| ,, | ௧௨ | காணு உய | காணு - உய |
| ,, | ௩௨ | அழிதத நீட | ஒழிதத நீட |
| ,, | ௩௪ | முருகபிரனே | முருகபிரானே |
| ௨௩௮ | ௧ | செந்நூராப் | செந்தூர்ப் |
| ௨௩௯ | ௩0 | சுதரிஷி | சுத்தரிஷி |
| ௨௫௬ | ௧௪ | ,—முதுபனி | ,—இரும்பினின்று முதுபனி |
| ,, | ௧௫ | -பழைய | -இரும்பினின்று பழைய |
| ௨௫௯ | ௪ | (கனை) | (கனக) |
| ,, | ௪௨ | தொழுமபதக் | கொழுமபதக் |
| ௨௬௩ | ௩௯ | வாகு பொருகி | வாகு - பொருகி |
| ௨௬௪ | ௨௩ | மிக்கு பல | மிக்க பல |
| ,, | ௪௧ | ஏற்றமுள | ஏற்றமுள்ள |
| ௨௬௭ | ௪௩ | அளவிறந்த மாலே | மாலே |
| ௨௭௨ | ௩௧ | அவ்வியல்பற்ற பாவியாகிய | (அவ்வியல்பற்றபாவியாகிய) |
| ௨௭௨ | ௩௨ | மாட்டுத்தாமே | மாட்டுத்(தாமே) |

| பக்கம். | வரி | |
|---|---|---|
| ௧௮ | ௧௬ | வேறு. |
| ௧௯ | ௧௫ | |
| ௨௩ | ௨ | வேறு. |
| ௧௩௧ | | வேறு. |

MAHAMAHOPADHYAYA ...NATHA IYER LIBRARY ...DRAS 41